# ஞானபாநு.

VOL- 2. | நிதி - 2. — April 1914. ஆனந்தஹு சித்திரைமீ — No. - 1. | பகுதி - 1.


## நமது புதிய வருஷம்.

புதிய வருஷம்—ஜாக்கிர, ஸ்வப்பன, சுஷுப்தி முதலிய அவஸ்தாத்திரயங்கட்கும் அநுபவாதீதமாய் உள்ள சத்திய ஸ்வரூபத்தின் சாட்சாத்கார ஞானத்தை இன்னும் புதிதாகவும் மேன்மேலும் விளக்கமாகவும் அளிக்கக்கடவது! ஆத்ம பலமில்லாதவர்களுக்கு ஆத்ம பலத்தை யடைவதற்கு ஓர் ஆரம்பமாகவும் ஆத்மபலமுள்ளவர்களுக்கு அதன் அநுபவத்தொடர்ச்சியாகவும் ஆகக்கடவது! முமுட்சுக்களுடைய இடைவிடாத முயற்சியில் நேரிடுகின்ற இடையூறுகளை யெல்லாம் எதிர்க்கும் சக்தியை அளிக்கக் கடவது! ஏக்கமுறுபவர்களுக்கு தைரியத்தையும் துன்புறுபவர்களுக்கு இன்பத்தையும் கொடுக்கக்கடவது! அந்தகாரத்தில் அகப்பட்டுத் தவிப்பவர்கட்கு அருணோதயமாயிருக்கக் கடவது! சமஸ்தகோடி ஜீவராசிகளுக்கும் சாந்தியளிக்கக் கடவது.

*　　*　　*

புதிய வருஷம்—புதிய தர்ஸனத்தை, ஆத்ம சக்தியில் புதிய நம்பிக்கையை, என்றும் புதிய லட்சியத்தை, சச்சிதானந்த ஸ்வரூப சந்நிதான மஹிமையை, எல்லோருடைய எதிரிலும் நிறுத்தக் கடவது! இறைவன் இருக்கின்றானென்னும் அறிவின் அமைதியை மனத்தில் நிறுத்தி, துக்கங்களனைத்தையும் துகளாக்கக் கடவது! இறைவனை எதிரிற்கண்ட ஒருவனுக்கு துக்கமேது? பயமேது? மரணமேது? அவனது அருள் அனந்த கோடி ஜீவராசிகளிடத்தும் அமர்ந்திருக்கும்படி செய்யக்கடவது! சமஸ்தகோடி ஜீவராசிகளுக்கும் சாந்தியளிக்கக் கடவது!

*　　*　　*

புதிய வருஷம்—சிருஷ்டி கோடிகளை நிராசையில் நிறுத்தக் கடவது! வெவ்வேறாயுள்ள வியஷ்டியை சமஸ்தமாயுள்ள சமஷ்டி ஸ்வரூபமாக்கக் கடவது! சமஸ்தகோடிஜீவராசிகளுக்கும் சாந்தியளிக்கக் கடவது!

162440



வேதாந்தாநுபூதி[illegible]து வீண் வாசா ஞானமல்ல, ஆ[illegible] [illegible]அநுபவமாம், சத்தா மாத்திரமாயுள்ள சைதன்னிய ஸ்வரூபத்தின் [illegible] ஆநுபூதியுமாம். இன்மையென்னும் தன்மைக்கும் இந்திரியக்கிட்டாததாயுள்ள உண்மையை உள்ளபடி ஒன்[illegible] ன்று அநுபவத்தில் அறிந்துகொள்ளுதலே வேதாந்தியின் [illegible]சணம். 'ஏகமேவாத்விதீயம்' என்று உபநிஷத்துக்கள் [illegible]ஷிக்கின்ற, இன்பமேஸ்வரூபமாயுள்ள பிரஹ்ம வஸ்துவின் [illegible]நுபூதியே வேதாந்தமெனப்படும். வேதாந்தமென்பது விஞ்ஞானமன்று; ஆனால் மகாத்மாக்களுடைய ஜீவித கால[illegible]ளாம், மகரிஷிகளுடைய, ஞானதீரர்களுடைய ஸ்வாநுபூதியாம்.

* * *

நாமரூபங்கட்கதீதமாய் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாததாய் உள்ள பிரஹ்ம வஸ்துவின் ஞானமே வேதாந்தத்தின் உபதேசமாகும். பிரம்ஹ வஸ்துவே அண்டபிண்ட சராசரப் பொருள்கள் அனைத்திற்கும் ஆதிகாரணம். அதுவே வடிவங்கட்கெல்லாம் முடிவிடமாயுள்ள வட்டவடிவ சமுத்திரம். அதுவே உண்மை.

* * *

வேதாந்த மதத்தில் பயம் என்பதில்லை. யாரைப்பார்த்துப் பயப்படுவது? உள்ளது ஒன்றேயன்றோ? காளகூட விஷத்தைக் கக்குகின்ற சர்ப்பமும் கானகத்தில் திரியும் கடிவாயும் பிரம்ஹ வஸ்துவே. அனைத்தும் அதுவே. இது வேதாந்தோபதேசத்தின் அநுபவம்.

* * *

இக்காலம் விரிந்த மனதைப் பொருந்தியுள்ள காலம்; எல்லோரும் சமரஸ நோக்கத்தை அடைய ஆரம்பித்திருக்கிறகாலம். எல்லா மதங்களும் இறைவனிடத்திற்கு இட்டுச் செல்வதற்கு அநுகுணமான வெவ்வேறு வழிகள்; அஞ்ஞானத்தை அகற்றுகின்ற முயற்சியில் மனிதர்கள் அனைவரும் சகோதரர்களே. குருட்டுப்பிடிவாதத்தின் வலிமை இனிமேல் செல்லாது; மதவைராக்கியமும் இனிமேல் மாண்டுவிடும்.

* * *

புதிய வருஷம் இக்கொள்கையைப் பிரபஞ்சத்தில் பிரபலமாக்கக் கடவது! மகரிஷிகளுடைய மகத்தான வேதவசனங்கள்

Rm211;N13G8 N13·2



MAY 1914

[illegible]ர்க்கத்தை மோட்சமார்க்கத்தில் நடத்தக் கடவது! [illegible] வருஷம் இப்புதிய காட்சியை அளிக்கக் கடவது!

* * *

காலசக்தியின் அம்சமாகிய இப்புதிய வருஷத்தில் மாதுர்பூமி எல்லா விதத்திலும் செழித்துச் சிறப்புற்று ஓங்குக! அதன் எல்லைகட்குட்பட்ட எல்லா வீடுகளிலும் ஆனந்தமும் அன்பும் பெருகுக!

* * *

புதிய வருஷத்தில் இப்பூவுலகிலுள்ள மனுஷியவர்க்கத்தின் எல்லா வகுப்பினர்க்குள்ளும், எல்லா ஜன சமுகங்கட்குள்ளும், தெளிந்த ஆகாயத்தில் சூரியன் பிரகாசிப்பதுபோல, சமாதானம் பிரகாசிப்பதாக!

## நடராஜரே நமது குரு.

நடராஜர் என்றால் நடனசாலையின் நாயகன் என்று பொருள்படும். இந்த அடங்கியிருக்கும் கருத்தென்னவென்றால்:—இவ்வுலகம் ஒரு நாடகசாலை, இந்நாடகசாலைக்குத்தலைவன் அல்லது எஜமானன் சர்வவியாபக ஆத்ம வஸ்து. இந்த ஆத்மவஸ்துவின் அகண்ட சக்தியின் அளவற்றமஹிமையினால் இப்பிரபஞ்சம் உண்மைபோலவும்உயிருள்ளது போலவும் தோன்றுகிறது. எல்லாவற்றிலும் அந்தர்ப் பூதமாய் உள்ள ஆத்ம வஸ்து இல்லாவிடில், இவ்வுலகெல்லாம் வீண் ஜடம் மாத்திரமாயிருக்கும்.

மனிதனது மனத்திற்கு ஆத்ம வஸ்துவே குருவாகையால் நடராஜர் குருவையே குறிக்கிறார். குருக்கள் இரண்டுவிதப் படுவர். பிரத்தியட்சகுரு, அப்பிரத்தியட்சகுரு. பிரத்தியட்சகுருதான் சிஷ்யனுக்கு உபதேசம் செய்து ஸன்மார்க்கத்தில் இட்டுச் செல்லுபவர்; சாதாரணமாக நாம் இப்பேர்ப்பட்டவரையே குருவென்கிறோம். ஆனால் உண்மையாக உபதேசமெல்லாம் உள்ளிருந்தே உண்டாகவேண்டும், பிரபஞ்சத்தில் நமக்குக் குருவாக வருவோர் ஈஸ்வரனால் அல்லது ஆத்மவஸ்துவால் உபயோகப்படுகின்ற ஆயுதங்களே யாவர். வளர்ச்சியும் உள்ளிருந்து தான் உண்டாக வேண்டும். திருஷ்டாந்தமாக, செடியானது உள்ளிருந்தே வளர்கின்றது. எருதண்ணீர் முத

லியவை வளர்ச்சிக்கு அநுகூலமான உபகரணங்களே. மாதிரி, மனதும் வெளியுபதேசங்களை யெல்லாம் அநுகூலமான உபகரணங்களா யுபயோகித்துக் கொண்டு, உள்ளிருந்தே வளர வேண்டி யிருக்கிறது. ஆதலால் நடராஜ மூர்த்தியே வெளிப்படையாகப் பூஜிக்கப் பட்ட உண்மையான குரு. குருவின் லட்சணங்கள் எல்லாவற்றிலும் முக்கியமானது யாதெனில், உபதேசத்தைத் தனது அநுபவமாக்கித் தனது ஜீவிதகாலத்தின் மூலமாகச் சிஷ்யனைத் தெளியச் செய்வதே.

நடராஜ மூர்த்தியினுடைய வலது கையொன்றில் இருக்கும் உடுக்கையானது, பிரபஞ்ச காரணமாயுள்ள சமஷ்டி சப்தஸ்வரூபத்தைக் குறிக்கின்றது; தெளிவாகச் சொல்லுமிடத்து உலகமெல்லாம் சற்குரு மூர்த்தியினுடைய கையில் அவருடைய இச்சாமாத்திரத்தால் ஒடுங்கவும் விரியவும் வாய்ந்து அடங்கி நிற்கின்றது. பிரஹ்ம ஞானிக்குப் பிரபஞ்சமானது அவன் வேண்டுமென்றால் உண்டு; வேண்டாவிட்டால், இல்லை. நடராஜ மூர்த்தியின் சமீபத்தில் ஒரு பக்கத்தில் உள்ளது மான். இது மனதைக் குறிப்பிடும்; மான் அங்கும் இங்கும் துள்ளிக் கொண்டிருப்பது போல, மனமும் நிலையற்று ஆடி ஓடிக் கொண்டிருப்பதால். ஆத்மவஸ்துவானது மானை யொத்தமனத்தின் திருஷ்டிக்கு எட்டாதது; ஆதலால் தான் நடராஜ மூர்த்தியின் படத்தில் மான் கால்களுக்குச் சமீபத்தில் ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறது. நடராஜர் தாமே சம்ஹாரம் செய்த ஒரு புலியின் தோலைத் தரித்துக் கொண்டிருக்கிறார். அகங்காரமே புலி யெனப்படுவது. அகங்காரத்தை அழித்து, அதற்கு அடையாளமாய் அதன் தோலைப் போர்த்திக் கொண்டிருக்கிறார். அகங்காரமாகிய இப்புலியைக் கொல்வதற்கு சற்குருவாகிய நடராஜராலேயே முடியும்.

ஜடாமகுடத்தில் கங்கையைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். பேரின்பத்தைப் பெருக்குவதாயும் பிர்மாநுபூதியையளிப்பதாயும் உள்ள சித் சக்தியே கங்கையைக் குறிப்பிடும். சிரசில் சந்திரனைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். சந்திரன் தேஜோமயத்தைத் தெரிவிக்கின்றது. ஒரு பாதம் முயலகன் என்னும் அசுரனின் மீது அழுத்தப் பட்டிருக்கிறது. முயலகன் என்



ான் ஜனன மரணச் சுழற்சிக்குக் காரணமாகிய மகா யையைக் குறிப்பிடுகின்றான். ஒரு பாதம் உயரத்தூக்கப் பட்டிருக்கின்றது. இது மனம், மாயை, பிரபஞ்சம் இவற்றை யெல்லாம் கடந்த தன்மையைக் குறிப்பிடுகின்றது; ஜாக்கிரஸ்வப்பன சுஷுப்தியாகிய மூன்று அவஸ்தைகட்கும் மேற்பட்ட துரியாவஸ்தையைக் குறிப்பிடுகின்றது. இன்னொரு வலதுகை உண்மையநுபூதியினின்றும் உண்டாகும் உபசாந்தத்தைக்குறிக்கின்றது. இடது கைகளுக்குள் ஒன்றில் அக்கினி வைக்கப்பட்டிருக்கிறது, அதாவது, சற்குருதமது உபதேசத்தை உண்மைப் படுத்த ஆத்மாநுபூதியாகிய ஜோதியைக்கையிற் கொண்டு விளங்குகிறார். இதன் தாத்பர்யம் யாதெனில், குருவினுடைய உபதேசத்தின் உண்மை ஸ்வானுபூதியினாலேயே அறியப்படும் என்பதே. நாடக சாலையோ தில்லை வனமாகிய பிரபஞ்சம். பிரபஞ்சம் பற்பல விதப் பாகுபாடுகளடங்கியுள்ளதால் வனமெனப் பட்டது. நாடகசாலையில் நடனம் செய்யும்இடமோ ஸ்மசானம். ஆசைகள், பற்றுதல்கள், நாமரூபவியவகாரங்கள் முதலிய விகற்ப விஷயங்கள் தகனம் செய்யப் படும் இடமே ஸ்மசானம்.

மேற்சொன்னவை யெல்லாம் நடராஜமூர்த்தியினுடைய சில லட்சணங்கள். வீண்தோற்ற மாத்திரமாகிய மாயையானது நசிப்பிக்கப்படவேண்டுமென்றும் பிரபஞ்சம் நமக்கு அடங்கி நிற்க வேண்டுமென்றும் நாம் பிரபஞ்சத்திற்கு அடங்கியிருத்தல் கூடாதென்றும் மான்போன்ற மனத்தைக் கீழே தள்ளிவிட வேண்டுமென்றும், அகங்காரத்தை அழித்துவிடவேண்டுமென்றும் மயக்கத்தினின்றும் விடுபட்டு, ஆசைகளையெல்லாம் அகற்றிவிட்டு மிகவும் பரிசுத்த ஸ்திதியுடன் சச்சிதாநந்த ஸ்வரூபமாகிய ஆத்மவஸ்துவை ஸ்வாநுபூதியில் தானாகவே அறிந்து ஒப்புயர்வற்ற உபசாந்த நிலையையடைவதே மனுஷ்ய ஜன்மப் பிரயோஜனமென்றும் சற்குரு சதா உபதேசம் செய்கிறார். இம்மாதிரியாக நாம் கூர்ந்து பார்க்குமிடத்து, நடராஜவிக்கிரகமானது சாதாரணமான, யாதொரு அர்த்தத்தையும் தெரிவிக்காத கல் அல்லது தாம்பிரத்துண்டல்ல என்று நன்கு விளங்குகின்றது. பாமர்களுக்கு ஆழ்ந்து ஆலோசிக்கும் அறிவும் சக்தியும் இல்லாதவர்களுக்கு உண்மை வெளிப்படுதல் துர்லபமல்லவா?

சிவம்.

# பகவத் கீதை 5-ம் அத்தியாயம்.

ஸரஸ்வதி என்னும் நமது நேயர் எழுதியது.

அர்ச்சுனன் சொல்லுகிறான்:

(1) கிருஷ்ணா! செய்கைகளின் துறவைப் புகழ்கிறாய், பின்பு யோகத்தைப் புகழ்கிறாய்; இவை யிரண்டுள்ளே எது சிறந்தது? அதனை எனக் குறுதியாகச் சொல்.

பகவான் சொல்லுகிறார்.

(2) துறவு; கர்மயோகம் இவ்விரண்டும் உயர்ந்த நலத்தைச் செய்வனவேயாம். இவற்றுள்ளே செய்கைத் துறவைக் காட்டிலும் கர்மயோகம் சிறந்தது.

(3) பகைத்தலும், விரும்புதலும், இல்லாதவனை நித்ய ஸன்யாஸி என்றறிக. பெருந் தோளுடையாய்! இரட்டைகளற்றவன் பந்தத்தி லிருந்து (உலகக் கட்டிலிருந்து) எளிதாக விடுபடுகிறான்.

(4) ஸாங்க்யத்தையும் யோகத்தையும் வெவ்வேறென்று குழந்தைகள் சொல்லுகிறார்கள். பண்டிதர் சொல்வதில்லை. இவற்றுள் ஏதேனும் ஒன்றிலே நிலைத்தவன் இரண்டின் பயனையும் அடைகிறான்.

(5) ஸாங்க்யர்களால் எந்த நிலை பெறப்படுகின்றதோ அஃதே யோகிகளாலும் பெறப்படும். ஸாங்க்யத்தையும், யோகத்தையும் ஒன்றாகக் காண்பவனே, காண்பவன்.

(6) பெரிய தோளினாய்! யோகமில்லாவிடில் துறவு பெறுதல் மிகவும் அரிது. யோகத்திலே கலந்த முனிவன் விரைவிலே பிரஹ்மத்தை அடைகின்றான்.

(7) யோகத்திலே பொருந்தியவன், தன்னைத் தூய்மை செய்தவன், தன்னை வென்றவன், புலன்களை வென்றவன், எல்லா வஸ்துக்களிலுமுள்ள "தான்" (எனும் பொருள்) தானேயாகியவன். அவன் தொழில்கள் செய்யினும் பற்றுண்பதில்லை.

(8) உண்மை யறிந்த யோகி "யான் ஒன்றுமே செய்வதில்லை" என்று கருதுவன். ஒன்றைக் காண்கிறான், கேட்கிறான், தொடுகிறான், முகர்கிறான், உண்கிறான், போகிறான், மூச்சு விடுகிறான், உறங்குகிறான்.



(9) பேசுகிறான், கொடுக்கிறான், கொள்ளுகிறான், இமையைத் திறக்கிறான், மூடுகிறான், இவ் வனைத்திலேயும் "இந்திரியங்கள் பொருள்களினிடையே சலிக்கின்றன" என்று மாத்திரமே யோகி தன்னறிவில் கொண்டிருப்பான்.

(10) செய்கைகளை யெல்லாம் பிர்மத்திலே நிறுத்தி தொடர்பு நீங்கித் தொழில் செய்பவன் பாவத்தினால் பற்றுண்ணுவதில்லை—தாமரை யிலையில் நீர் போல.

(11) உடலாலும், மனதாலும், புத்தியாலும், அல்லது வெறுமே இந்திரியங்களாலும், யோகிகள் தொழில் செய்கின்றனர்;—தொடர்பு நீங்கி,—ஆத்ம சுத்தியின் பொருட்டாக.

(12) செய்கையின் பயனைத் துறந்து விட்டு யோகி நிஷ்டையின் தெளிவை அடைகிறான். யோக மில்லாதவன் விருப்பத்தின் தூண்டுதலால் பயனிலே பற்றுண்டு கட்டப்படுகிறான்.

(13) ஒன்பது வாயிலுள்ள நகரத்திலே, அனைத்துந் தன் வசமாய், ஆத்மா, எல்லாச் செய்கைகளையுந் துறந்து விட்டு எதனையும் செய்யாமலும், செய்விக்காமலும் இன்பத்தோடிருக்கிறான்.

(14) தொழிலாண்மை, தொழில்கள், தொழிலுக்கும் பயனுக்குமுள்ள சேர்க்கை, இவை யெல்லாம் உலகத்திற்கு ஈசனால் படைக்கப் பட்டனவல்ல, இயற்கை நடை பெறுகின்றது.

(15) பரமாத்மா யாவனுடைய பாவத்தையேனும், நற்செயலையேனும் கொள்வதில்லை. அறிவு, அறியாமையால் மூடப்பட்டுள்ளது. அதனால் ஜந்துக்கள் மயங்குகிறார்கள்.

(16) எவர்களிடத்தில் அறிவினால் அறியாமை அழிவு பெறுகின்றதோ அவர்களின் அறிவு சூரியனைப்போல் பரம் பொருளை விளங்கச் செய்கிறது.

(17) அறிவினால் மாசுகளெல்லாம் கழுவுண்டவர்கள் அதனிடத்தே புத்தி கொண்டவர்களாய் அதுவே தாமாகியவர்களாய் அதிலேயே நிலை பெற்றவர்களாய் அதனையே சூழ்பவராய் மீளுதலில்லாத முக்தி நிலையை அடைகின்றனர்.

(18) கல்வி, ஒழுக்கம், இவை யணிந்த அந்தணனையும், பசுவையும், யானையையும், நாயையும், நாயுண்பவனையும் பண்டிதர்கள் ஒன்று போலவே பார்க்கின்றனர்.

(19) மனம் ஸமநிலை யடையப் பெற்றவர்கள் இவ்வுலகத்திலேயே அனைத்தையும் வென்றோராவர். பிரஹ்மம் மாசற்றது, ஸமநிலை யுடையது. ஆதலால் அவர்கள் பிரஹ்மத்திலே நிலைத்தோர்.

(20) இன்பமுடையதைப் பெறும் பொழுது களிப்பதில்லை; துன்பமுடையதைப் பெறும் போது வருந்துவதில்லை. ஸ்திர புத்தி யுடையவனாய், மயக்க மில்லாதவனாய்ப் பிரமஞானி பிரமத்திலே நிலைத்தவன்.

(21) வெளி அனுபவங்களிலே பற்றில்லாதவனாய்த் தன்னிலேயே இன்பமடைந்து கொண்டு பிர்மயோகத்திலேயே கலந்தவன் அழியாத இன்பம் துய்க்கிறான்.

(22) வெளி யனுபவங்களிலே பிறந்த இன்பங்கள் கருவிலே துன்பமுடையன. அவை தொடக்கமும் முடிவும் உடையன. அவற்றிலே அறிஞன் இன்பப் படுவதில்லை.

(23) உடலை விட்டு நீங்கு முன்பாக இவ்வுலகத்திலேயே காமக்குரோதத்தில் விளையும் வேகத்தைப் பொறுக்க வலிமை யுடையவனே யோகி; அவனே சுகமுள்ள மனிதன்.

(24) உள்ளே இன்பமுடையவன், உள்ளே களிப்பவன், உள்ளே ஒளியுடையோன்—அந்த யோகி பிர்மமாகி பிர்ம நிர்வாணத்தை அடைகிறான்.

(25) ரிஷிகள் குற்றம் தீர்ந்து இருமை யற்றவர்களாய், தம்மை அடக்கி, எல்லா உயிர்களின் நன்மையை விரும்புவோராய் பிரம நிர்வாணத்தை அடைகின்றனர்.

(26) விருப்பு, வெறுப்புக்களினின்றும் விடுபட்டு சித்தத்தை அடக்கி தம்மை அறிந்தவர்களான யதிகளுக்கு பிர்ம நிர்வாணம் ஸமீபத்திலே இருக்கிறது.

(27) வெளி யனுபவங்களைப் புறமாக்கி, புருவங்களினிடையே பார்வையை நிறுத்தி, நாசியிலே சலிப்பனவாகிய ப்ராணாபான வாயுக்களை ஸமப்படுத்தி,



(28) இந்திரியங்கள், மனம், புத்தி இவற்றை அடக்கி இச்சை, பயம், கோபம் இவை நீக்கி மோக்ஷத்தை நாடுகின்ற முனிவன் முக்தனே யாவான்.

(29) வேள்வி, தவம் இவற்றின் போக்தா (உண்போன்), எல்லா வுலகத்திற்கும் மஹேசுவரன், எல்லா உயிர்களுக்கும் அன்பன், நானென்றறிந்தவன் தெளிவு பெறுகின்றான்.

## சத்திய மார்க்கம்.

(முன் தொடர்ச்சி)

ஸ்ரீமான் சிவசுப்பிரமணியம் அவர்கள் மொழிபெயர்த்தது.

இந்தியாவில் ஓரரசனுடைய ஜீவித காலத்தின் மூலமாய் ஓர் உதாரணம் உளது. அவ்வரசன் சத்திய மார்க்கத்தில் நடக்கப் பட்டவன். ஏதோ ஒரு முக்கிய காரியார்த்தம் அவ்வரசன் தன் பெற்றோர், மனைவி, மைத்துனர்கள், நான்கு சகோதரர்கள் முதலியவர்களுடன் ஹிமோத்கிரி பர்வதத்தின் கொடுமுடிகளில் நியாயமார்க்கத்தில் சத்தியத்தை நாடிச் சென்றுகொண்டிருந்தான். நேர்மார்க்கத்தில் நடந்துகொண்டு அனைவருக்கும் முந்திச் சென்றான். அவனுக்குப் பின் இளைஞர்கள் வரிசைக் கிரமத்தில் நடக்க, இவர்களுக்குப் பின்னால் இவ்வரசனது மனைவியும் நடந்துகொண்டிருந்தாள். சத்திய திருஷ்டியுடன் லட்சியத்தையே நாடி முன்பு சென்றுகொண்டிருந்த அவ்வரசன், தன் மனைவி தன்னைப் பின்தொடர முடியாமல் தள்ளாடிக் களைத்து விழுந்து மரிக்குந் தறுவாயிலிருந்துகொண்டு கதறியழுது பின்னின்று துக்கப்படுவதை அறிந்தும், தனது முகத்தை திருப்பிப் பின்னால் பார்க்கவேயில்லை. ஆனால் தனது மனைவியைச் சிறிது தூரம் ஓடி வரும்படியும் அப்படி வரும் பட்சத்தில் தன்னுடன் இட்டுச் செல்வதாயும் சொன்னான். அரசனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள மூன்று அடி தூரமும் அவளால் தொடர்ந்துவர முடியவில்லை. அவள் பின்னுக்கு நின்று விட்டாள். அவனும் திரும்பிப் பார்க்கவேயில்லை. மனைவி தளர்ந்து கீழே விழுந்து விடுகிறாள். ஆயினும் மனைவியின் நிமித்தம் அரசன் சத்தியத்தினின்றும் திரும்புகிறதில்லை. நினது முன் ஜெனனங்களில் நினக்கு

ஆயிரக் கணக்கான மனைவியர் இருந்தனர். இன்னும் இனிமேலும் ஜெனனங்களுளதேல் அவைகளில் இன்னும் எத்தனை தடவை உனக்கு விவாகம் நடத்தப்படும் என்பதை நீ அறியாய். உனக்கு எத்தனை பந்துக்கள் இருந்திருக்கிறார்களென்பதைப்பற்றியும் நீ அறியாய். இந்த பந்தபாசக் கட்டுகளின் நிமித்தம் நீ சத்தியத்தினின்றும் திரும்பிப் பார்க்கக்கூடாது. முன்னேபோ, முன்னேபோ. ஒன்றும் நின்னை பின்னுக்கு இழுக்கக்கூடாது. உனது மனைவியினிடத்தில் பார்க்கிலும் சத்தியத்தினிடத்தில் அதிக மதிப்பு பாராட்டு. தெய்வீகத்துவத்தினிடத்தில், ஈஸ்வரத் தன்மையினிடத்தில் அதிக மரியாதை செலுத்து. சத்திய வஸ்துவினிடத்தில் மானிடவர்க்கம் முழுமையும் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஈஸ்வரத்தன்மை அல்லது சத்தியம் எக்காலத்தும் நித்தியமாய் ஒன்றேயாயிருக்கிறது. நினது உலக பாசங்கள் அங்ஙனமல்ல. அவைகள் நிமிஷ நேரமேயுள்ளன. உண்மையாக உனக்கு எது நன்மையாயிருக்கிறதோ அது உண்மையாய் உனது மனைவிக்கும் உனது சிநேகிதர்களுக்கும் நன்மையாகவேயிருக்கவேண்டும் என்ற நீதியை மனதில் தரித்துக் கொள். உன்மனைவியினிடத்தினின்றும் பிரிந்து வசிப்பது உனக்கு நன்மையென்று தோன்றினால், அவளுக்கும் உன்னிடத்தினின்றும் பிரிந்து வசிப்பது உண்மையாக நன்மையேயென்று ஞாபகப்படுத்திக்கொள். இதுதான் நீதி. நினது ரூபத்தில் உள்ளடங்கியிருக்கப்பட்ட சத்தியம் அல்லது ஈஸ்வரத்தன்மை உனது மனைவியின் ரூபத்திலும் உள்ளடங்கியிருக்கிறது. அரசன் யுதிஷ்டிரனுடைய மனைவி கீழே விழுந்து விட்டாள். ஆனால் அரசன் சற்றும் பின் திரும்பிப் பார்க்காமல் நேரே சென்றுகொண்டே தனது சகோதரர்களைப்பின்தொடர்ந்து வரும்படியாக அழைத்தனன். அவர்கள் கொஞ்சநேரம் ஓடினர். ஆனால் எல்லோருக்கும் இளையவன் அவர்களுடன் நடக்க முடியவில்லை. அவன் தள்ளாடிக் களைத்து கீழே விழப்போகுந் தருணத்தில், "அண்ணா, அண்ணா, நான் மரிக்கிறேன்; இரட்சியும், இரட்சியும்." என்று கூவினன். அரசனாகிய யுதிஷ்டிரர் சத்தியமாகிற லட்சியத்தினின்றும் தனது கண்களைத் திருப்பவில்லை. நேரே முன்னுக்கே போகிறார். மேன்மேலும் போய்க்கொண்டேயிருக்கிறார், அவர் இளைஞனை இரண்டு மூன்று அடி ஓடி தன்னை நெருங்கிவந்தால தான் கூட்டிப் போவதாகக் கூறுகிறாரே யொழிய ஓர் அடியேனும் அவர் பின்



வைப்பதில்லை: சிறிது நேரத்திற்கெல்லாம் இளைஞன் மரிக்கிறான். இங்ஙனமே ஒவ்வொருவராய் அனைவரும் மரிக்கின்றனர். ஆனால் யுதிஷ்டிரராஜன் சற்றும் தனது சத்தியமார்க்கத்தினின்றும் பின் வாங்கவில்லை; நழுவவேயில்லை. யுதிஷ்டிரராஜன் தான்போய்ச் சேருவதற்குக் குறிப்பிட்டிருந்த சத்தியஸ்தானமாகிய லட்சியத்தை அடைந்த காலத்தில், கிறிஸ்தவ வேதபுஸ்தகத்தில் கடவுள் ஒரு புறாரூபமாக வந்து தர்சனம் கொடுத்ததாகக் கூறப்பட்டிருப்பதுபோல, சத்தியமே ஈஸ்வர சொரூபமாகவந்து அவருக்கு தர்சனம் கொடுத்து அவரை ஸ்தூல சரீரத்துடன் ஸ்வர்க்கலோகம் செல்லும்படி ஆக்ஞை செய்ததாகப் புராணம் கூறுகின்றது. யுதிஷ்டிரர் தன்னுடன் தனது வலதுபக்கத்தில் நிற்கிற ஓர் நாயைக் கண்ணுற்று, பகவானை நோக்கி, "பகவானே! சத்திய சொரூபமே! யான் ஸ்வர்க்கலோகம் செல்லுவேனாயின், என்னுடன் இந்நாயையும் கூட்டிச் செல்லவிரும்புகிறேன். கிருபை புரியவேண்டும்" என்றனர். ஆனால் சத்தியதேவதை கூறியதாவது, 'யுதிஷ்டிரனே! அது முடியாத காரியம். நாய் ஸ்வர்க்கப் பிராப்திக்கு யோக்கியமானதல்ல. அநேக ஜென்மங்களெடுத்து பிறகு மானுட சரீரத்தைப் பெற்று மிகவும் பரிசுத்தமும் புண்ணியமும் தர்மமும் நிறைந்த ஜீவித காலத்தை அடைந்து பிற்பாடு ஸ்வர்க்கப் பிராப்திக்கு யோக்கியதை யுடையதாகும். இப்பொழுது ஸ்தூல சரீரத்துடன் ஸ்வர்க்கம் செல்வதற்கு நீயே தகுந்தவன்; நாய் அல்ல." அப்பொழுது தர்மராஜன் சொல்லுகின்றார்: ஏ, சத்திய சொரூபமே, நான் இப்பொழுது ஸ்வர்க்கத்தின் பொருட்டல்ல, மோட்சத்தின் பொருட்டல்ல, உன் பொருட்டு வருகின்றேன். உனக்கு என்னை ஸ்வர்க்கலோகாதிபதியாக்கிவைக்க வேண்டுமென்று விருப்பமுளதேல், என்னுடன் இந்நாயையும் இட்டுச் செல்ல அனுமதியளிக்க வேண்டும், என் மனைவி என்னுடன் வரமுடியாமல் சத்தியமார்க்கத்தினின்றும் தவறி விட்டாள். என் சகோதரர்களும் மன உறுதியின்றி பின் விழுந்து விட்டார்கள். ஆனால் இதோ இந்நாய் எனது துன்பங்களில், எனது துக்கங்களில், எனது கலக்கங்களில், எனது ஆபத்துக்களில், எனது கடோரமான கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் என்னுடன் கூடவே பகிர்ந்து அனுபவித்திருக்க, ஸ்வர்க்கபோகத்தை மாத்திரம் ஏன் அனுபவிக்கக்கூடாது? என்னுடன் இந்நாயையும் ஸ்வர்க்கபோகங்களை அனுபவிப்பதற்கு சம்மதிக்காவிடில், நினது

ஸ்வர்க்கலோகம் எனக்கு அவசியம் இல்லை.'' மறுபடியும் சத்திய தேவதை யுதிஷ்டிரரை நோக்கி, ''நீ இந்தவரம் மாத்திரம் கேட்க வேண்டாம்'' என்று கூறவும் உடனே தர்மர் ''நீ பிர்மா அல்ல நீ சத்திய சொரூபி யல்ல. நீ ஏதோ பேய்போல் தோன்றுகின்றது. நீசத்திய சொரூபியாயின், நீயே நியாயவிரோதம் செய்வாயா? என்னுடைய சகல துன்பதுக்கங்களை யெல்லாம் பகிர்ந்து அனுபவித்துக்கொண்டு வந்த இந்நாய்க்கு எனது ஸ்வர்க்கபோக பாகத்தை மாத்திரம் மறுத்தல் சத்திய சொரூபியாகிய உனக்கு நீதியாமோ?'' என்று உரைத்தனர். உடனே அவர் அருகில் இருந்த நாயானது சர்வ சாமர்த்தியாதிசயங்களையுடைய ஈஸ்வரனாக மாறி அவருக்கு தர்சனம் அளித்ததாக புராணம் கூறுகின்றது. இவ்விடத்தில் யுதிஷ்டிரர் அநேக பரிசோதனைகட் குட்படுத்தப் பட்டும் ஈற்றில் அப்பரீட்சைகளி லெல்லாம் ஜெயம்பெற்றனர்.

இம்மாதிரியே நீயும் சத்தியமார்க்கத்தில் நடக்கவேண்டும். உன்னிடத்தில் அதிக அருமையும் நெருக்கமும் மிருந்த நினது சிநேகிதர்களும் பந்துக்களும் உன்னுடன் சத்திய மார்க்கத்தில் தொடர்ந்துவராவிடில், அவர்களை நீ உனக்கு உற்றோராக நினையாதே. ஓர்நாய் உன்னுடன் சத்திய மார்க்கத்தில் பின் தொடர்ந்து வருமாயின், அந்த நாயே உனக்கு மிகுந்த அருமையும் நெருக்கமும் பொருந்திய பிராணியாகும். நினது சத்திய தர்மத்தில் அநுகூலமாயுள்ளவர்களை உனக்கு சிநேகிதர்களாக்கிக் கொள். தீய சுபாவத்திற்கு அநுசரணையா யுள்ளவர்களை உனக்கு சிநேகிதர்களாகப் பொறுக்கி யெடுக்காதே. உனது தீயகுணங்கட் கேற்றவர்களை உனக்கு சிநேகிதர்களாக நீ பொறுக்கியெடுத்தால், துன்பம், மனோவியாதி, உபத்திரவம் இவைகளே நினக்கு பலன்களாக முடியும்.

ஓர் ஹிந்து சந்நியாசி மிகவும் பசியுடன் தெருக்களில் போய்க் கொண்டிருந்தார். இந்தியாவில் மகான்கள் அவர்களுக்குபசிக்கும் பொழுது மலைகளிலிருந்து இறங்கிவந்து க்ஷுத்பாதையின் நிவர்த்தியின் நிமித்தம் தெருக்களில் செல்வார்கள். இங்ஙனம் வருதலும் மிக அபூர்வமாயிருக்கும். அவர்கள் பிர்மானுபூதியில் தங்கள் காலம் முழுமையும் கழித்துக் கொண்டு நகரங்களுக்கு வெளியிலுள்ள காடுகளில் சாதாரணமாய் வசிப்பார்கள். பசியுடன் சென்ற இச்சந்நியாசிக்கு பிக்ஷை கிடைத்தது. ஓர் அழு



கிய யுவதி அவருக்கு உண்பதற்கு ருசிகரமான போஜனம் கொண்டு வந்து கொடுத்தாள். அவர் தமது அங்கவஸ்திரத்தில் அந்த ரொட்டியை வாங்கிக் கொண்டு அவ்வீட்டை நீங்கிக் காட்டிற்கேகி அந்தரொட்டியை ஜலத்தில் ஊறவைத்துச் சாப்பிட்டார். மறுநாள் வழக்கமான நேரத்தில் அவர் மறுபடியும் தெருக்களுக்கு வந்தபொழுது அன்றும் அந்த யுவதி அவருக்கு மிகவும் சம்பிரமமான போஜனம் அளித்தாள். அவரும் வாங்கிக் கொண்டு காட்டிற்குச்சென்றார். மூன்றாவது நாள் அவள் அவருக்கு மிகவும் ருசிகரமான ஆகாரம் கொண்டுவந்து அவரிடத்தில் கொடுக்கும் பொழுது ''நான் வாசலில் தங்களுக்காகக் காத்திருந்து தங்களுடைய வரவை எதிர்பார்த்து எனது கண்கள் பூத்துப் புண்ணாய்விட்டன. தங்களது கண்கள் என்னை மயக்கி விட்டன.'' என்று உரைத்தனள். மகான் மறுமொழிபேசாமல் மௌனமாய்ப் போய்விட்டார். அவர் மற்றொருவீட்டிற்கு சென்றுசிறிது ஆகாரம் சம்பாதித்துக்கொண்டு காட்டிற்கேகி, தன்னிடத்தில் லௌகீக அன்னைச்செலுத்தின மங்கையால்கொடுக்கப்பட்ட ஆகாரத்தை நதியில் எறிந்து விட்டு மற்றொரு வீட்டில் கிடைத்த ஆகாரத்தை உண்டார். மறுநாள் அவர் மிகவும் பழுக்கக் காய்ச்சின இரும்புகளால் தன் கண்களில் குத்திக் கண்மணிகளைப் பிடுங்கித் தனது அங்கவஸ்திரத்தில் முடிந்துகொண்டு ஓர் கோலின் உதவியால் தனக்காக மிகவும் ஆத்திரத்துடன் தன்மேல் மோகித்து அப்பொழுது காத்துக்கொண்டிருக்கிற அம்மோகனாங்கியின் வீட்டு வாசலுக்கு மிகவும் கஷ்டப்பட்டுத் தட்டித் தடுமாறிக்கொண்டு வந்து சேர்ந்தார். அவரது கண்கள் பூமியை நோக்கிக்கொண்டிருந்தன வாதலால் அவருடைய கண்மணிகள் பிடுங்கப்பட்டனவென்று அம்மாது அறியவில்லை. அந்த ஸ்திரீ அவருக்கு மிகச் சம்பிரமமான ஆகாரம் கொண்டுவந்தபொழுது அவர் தனது கண்மணிகளை அவளிடத்தில் கொடுத்து, ''அம்மா! தாயே, இக்கண்கள் உன்னை மயக்கி உனக்குத் துன்பத்தைகொடுத்தன, ஆதலால் இக்கண்கள் உனக்கே உரியன. ஆகையால் இதோ இவைகளை யெடுத்துக்கொள், தாயே! நீ இக்கண்களை இச்சித்ததால் இவைகளை எடுத்து வைத்துக்கொள். நினது விருப்பம் எங்ஙனமோ அங்ஙனமெல்லாம் நீ இவைகளை நேசித்து அனுபவித்துக்கொள். ஆனால் தயவுசெய்து எனது அபிவிருத்தியை தடுக்காதே. சத்திய மார்க்கத்தினின்றும் நழுவும்படி செய்யாதே.'' என்றார்.

(தொடரும்)

# ஜோடி மோதிரம்.

## II.

பிரஹ்மஸ்ரீ ராமசாமி யய்யங்கார் அவர்கள் எழுதியது.

"நான் புரந்தரனுக்கு ஹிரண்மயியைக் கொடுக்கமாட்டேன்" என்று தனதாசர் எதற்காகச் சொன்னார் என்பது யாருக்குந் தெரியாது: அவர் அதை ஒருவருக்காவது வெளிப்படுத்தவில்லை. கேட்டால் "அதற்கு விசேஷகாரணமுண்டு" என்று சொல்லுவார். ஹிரண்மயியை அநேக இடங்களிலிருந்து வந்து கேட்டார்கள். ஆனால் தனதாஸர் அது ஒன்றுக்கும் முகம் கொடுத்துப் பேசவில்லை, கலியாணப் பிரஸ்தாபத்தைக் கூடக்காதில் போட்டுக் கொள்ளவில்லை. "பெண் பெரிசாய் விட்டது" என்று அவர் மனைவி திட்டத்தொடங்கினாள். அதுவும் அவர் காதிலேறவில்லை. இது மாத்திரம் சொன்னார். "குருவரட்டும், இதைப் பற்றி அவர் வந்தவுடன் பேசுவோம்"

புரந்தரன் சிங்களத்துக்குப் போய்விட்டான். அவன் சிங்களத்துக்குப் போனபிறகு இரண்டு வருஷங்கள் இப்படியே கழிந்தன. புரந்தரன் திரும்பி வரவில்லை. ஹிரண்மயிக்கு எங்கேயும் வரன் நிச்சயமாகவில்லை. ஹிரண்மயி இப்பொழுது பதினெட்டாம் பிராயத்திலே, தோட்டத்தில் புதிதாகப் பூத்த மாமரத்தைப் போல தனதாஸர் வீட்டை அலங்கரித்து வந்தாள்.

இதினாலெல்லாம் ஹிரண்மயிக்குக் கொஞ்சங்கூட, துக்கமேற்படவில்லை. விவாகப் பிரஸ்தாபம் வந்த பொழுதெல்லாம். புரந்தரன் ஞாபகந்தான் அவளுக்கு. மலர்ந்த புஷ்ப மாலையைப்போலப் பரவிய சுருட்டையான கருத்த மயிரால் சூழப்பட்ட அவன் முகம் அவளுக்கு ஞாபகம் வந்தது, யானைக் கொம்பை யொத்த வெளுத்த தோளின் மேலிருந்த, பொன் மலரெழுதிய அவன் நீல உத்தரீயத்தை நினைத்துக் கொண்டாள். அவன் தாமரைக் கைகளிலணிந்த வைரமோதிரங்கள் அவள் ஞாபகத்துக்கு வந்தன. இதை யெல்லாம் நினைத்து ஹிரண்மயி அழுதாள். தகப்பனார் யாரைச் சொல்லுகிறாரோ அவர்களைக் கலியாணம் செய்து கொள்ளவேணும்! அது கேவலம் உயிர்க் கொலைதான்! கலியாண காரியங்களில் தகப்பனார், அசட்டையா யிருப்பதைப் பார்த்து (சந்தோஷப் பட்டாளோ என்னவோ) அவளுக்குக் கொஞ்சம்



ஆச்சரியம் உண்டாயிற்று. லோகத்தில் இவ்வளவு வயதான பெண்ணைக் கலியாணம் செய்யாமல் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பதால் வரன்தேடிக் கொண்டிருப்பார்கள். இந்த வார்த்தையைக் காதிலேயே போட்டுக் கொள்ளமாட்டேன் என்கிறாரே! ஏனோ! ஒருநாள் அவளுக்கு அகஸ்மாத்தாக இந்த விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் புலனாகப்பட்டது.

தனதாஸர் வியாபாரியானதால், சீனதேசத்தில் செய்யப்பட்ட ஒரு அழகான "செல்லப்" பெட்டி அவருக்குக் கிடைத்தது. "செல்லப்"பெட்டி கொஞ்சம் பெரிது. தனதாஸர் மனைவி அதில் தான் நகைகள் வைப்பது வழக்கம். தனதாஸர் புதிதாக சில நகைகள் செய்து, மனைவிக்குக் கொடுத்தார். செட்டியின் மனைவி பழைய நகை யுட்படச் "செல்லப்" பெட்டியை, தன் பெண்ணுக்குக் கொடுத்தாள். நகைகளை உள்ளேவைத்து பெட்டியை மூடுகிற பொழுது அதில் ஒரு கிழிந்த காகிதத்தின் பாதித் துண்டு இருப்பதை ஹிரண்மயி பார்த்தாள்.

ஹிரண்மயிக்கு வாசிக்கத் தெரியும். அதில் முதலிலேயே தன் பெயர் இருப்பதைப் பார்க்க அவளுக்குக் கொஞ்சம் ஆச்சரியமுண்டாயிற்று. ஆனால் பாதித் துண்டிலிருந்து ஒன்றும் புரியவில்லை. யார் யாருக்கு எழுதியது என்ற விஷயம் கொஞ்சங்கூடப் புலப்படவில்லை. இருந்தாலும் அதை வாசிக்க அவளுக்கு மிகுந்த பயம் உண்டாயிற்று, துண்டுகடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது.

ஜோஸியம் பார்த்ததில் தெரிகிறது நீ உத்தேசி ... ...
தங்கப் பதுமைக்கு மேலான ஹிரண்மயி ... ...
பெரிய விபத்து சம்பவிக்கும் அவ ... ... ...
என்பது கணித மூலமாக எனக்கு ... ... ...
ஐந்து வருஷம் ஒருவரை யொருவர் ... ... ...
விக்க நான் வழிதேட முடியும். ... ... ...

ஹிரண்மயி தனக்குத் தெரியாத ஏதோ ஒரு விபத்து நேரப்போகிறது, என்று மிகவும் அஞ்சினாள். யாரிடத்திலும் ஒன்றும் சொல்லாமல் காகிதத்துண்டை எடுத்து வைத்துக் கொண்டாள்.

## ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

பிரஹ்மஸ்ரீ ராமச் சந்திர சாஸ்திரிகள் மொழிபெயர்த்தது.

19—11—1894.

*எனது தைரியமுள்ள பையன்காள்:—*

ஏற்பாட்டை முன்னுக்குக் கொண்டுவாருங்கள் ... ... அன்பு, உண்மை, பொறுமை—இவற்றைத் தவிர வேறொன்றும் அவசியம் இல்லை. வளர்ச்சி, அதாவது, விரிவு, அதாவது அன்பு இதைத்தவிர ஜீவிதம் என்றால் வேறு என்ன? ஆதலால் அன்பே ஜீவன், அதுவே ஜீவிய காலநியதி, ஸ்வய நன்மையெல்லாம் மரணமே, இது இங்கும் இனிமேலும் எப்பொழுதும் உண்மையே. நன்மை செய்தலே ஜீவிதம், பிறர்க்கு நன்மை செய்யாமல் இருப்பதே மரணமெனப் படும். நீங்கள் பார்க்கின்ற மானுட மிருகங்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் மரித்தவர்களே, பிரேதங்களே.—ஏனென்றால், எனது புத்திரர்களே, அன்பு செலுத்துகிறவனைத் தவிர, வேறு எவனும் ஜீவிக்கிறதில்லை. உணருங்கள், எனது குழந்தைகளே, உணருங்கள்; எளியவர்கள், அறிவீனர்கள், தாழ்த்தப் பட்டிருப்போர்கள், இவர்களுக்காக இரங்குங்கள்; ஹிருதயம் நின்றுபோய், மூளை மயங்கி உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விடும் என்று நீங்கள் நினைக்கிற வரையில் இரங்குங்கள்,—பின்னர் சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தங்களில் ஆத்மாவை ஐக்கியப் படுத்துங்கள். அப்பொழுது வல்லமை, உதவி, அடக்க வொண்ணாத சக்தி, இவையெல்லாம் உண்டாகும். யாது நேரிடினும் பின் வாங்காதிருத்தலே சென்ற பத்து வருஷங்களாக எனது கொள்கை. யாது நேரிடினும் பின் வாங்காதே, என்று இன்னும் நான் சொல்லுகிறேன். எங்கும் இருண்டிருக்கும் பொழுது, யாது நேரிடினும் பின் வாங்காதே, என்று நான் சொல்லுவது வழக்கம். பிரகாசம் உண்டாகின்ற பொழுதும் யாது நேரிடினும் பின் வாங்காதே என்று நான் இன்னும் சொல்லுகிறேன். எனது குழந்தைகளே, பயப் படாதீர்கள். ... ... ... பொறுங்கள், பணம் பெரிதல்ல, பெயர் பெரிதல்ல; கீர்த்தி பெரிதல்ல; கல்வியும் பெரிதல்ல. அன்பே பெரிது. கஷ்ட நிஷ்டூரங்களினிடையே பின்வாங்காது பெருமுயற்சி செய்து நிற்கின்ற குணமே பெரிது.



இப்பொழுது நம்முன் இருக்கிற கேள்வி இது. ஸ்வதந்திரம் இன்றி வளர்ச்சியே யில்லை. நமது முன்னோர்கள் மதக் கொள்கைகளை ஸ்வதந்திரப் படுத்தினார்கள். நாம் ஒரு அற்புதமான மதத்தை யுடையவர்களா யிருக்கிறோம். ஆனால் அவர்கள் ஜனசமூகத்தின் கால்களில் பெரியவிலங்கை யிட்டார்கள், நமது ஜனசமூகம், சுருக்கத்தில், பயங்கரமாயும் ஆபாசமாயும் இருக்கின்றது. மேல் நாடுகளில் எப்பொழுதும் ஜனசமூகத்திற்கு ஸ்வதந்திரம் உண்டு; அவர்களைப் பாருங்கள். ஆனால், அவர்களுடைய மதத்தையும் பாருங்கள்.

வளர்ச்சிக்கு முதலாவதாக வேண்டியது ஸ்வதந்திரம். மனிதனுக்கு நினைப்பதற்கும் பேசுவதற்கும் ஸ்வதந்திரம் வேண்டியது போலவே, அவன் பிறரை இம்சிக்காதவரையில் அவனுக்கு ஆகாரம், உடை, விவாகம் முதலிய எல்லா விஷயங்களிலும் ஸ்வதந்திரம் வேண்டும்.

ஜடசம்பந்தமான நாகரீகம் கூடாது என்று நாம் மூடத்தனமாகப் பேசுகிறோம். திராட்சப் பழங்கள் புளிக்கும். அந்த மூடத்தனத்தை யெல்லாம் நாம் ஒப்புக் கொண்டாலும், இந்தியா முழுதிலும் ஒரு லட்சம் பேர் உண்மையான ஆத்ம ஞானிகள் இருப்பதாகவைத்துக் கொள்ளுவோம். இப்பொழுது இவர்களுடைய ஆத்மஞானத்தின் பொருட்டு முப்பது கோடி ஜனங்கள் பாமரத் தனத்திலும் பட்டினியிலும் முழுகிக் கிடக்கவேண்டுமா? ஏன் ஒருவன் பட்டினிகிடந்து பாதவிக்கவேண்டும்?. ... ... ...

ஜடசம்பந்தமான நாகரிகம், அல்ல, ஆடம்பரம் கூட, எளியவர்களுக்குத் தொழில் கொடுக்கும் பொருட்டு, அவசியம் தான். ஆகாரம்! ஆகாரம்! இங்கு எனக்கு ஆகாரம் கொடுக்க முடியாத கடவுளுக்கு மோட்சலோகத்தில் எனக்கு நித்தியாநந்தத்தைக் கொடுக்க முடியுமென்று நான் நம்ப மாட்டேன்! ...இந்தியா தேசம் முன்னேற்றத்தில் வரவேண்டும். எளியவர்கள்போஷிக்கப் படவேண்டும், கல்வி பரப்பப் படவேண்டும், வைதீகக் கொடுமை நீக்கப்படவேண்டும். வைதீகக் கொடுமை கூடாது, ஜனசமூகத்தில் கொடுமை உதவாது. ஒவ்வொருவருக்கும் அதிக ஆகாரம், அநேக சந்தர்ப்பங்கள். நமது பால்ய மூடர்கள் ஆங்கிலேயரிடத்தினின்றும் அதிக அதிகாரத்தைப் பெறுதற்குச் சபைகள் கூட்டுகின்றனர். அவர்கள் சிரிக்கின்றனர். ஸ்வதந்திரத்தைக் கொடுப்

பதற்குத் தயாராயில்லாத எவனும் ஸ்வதந்திரத்திற்கு அர்கனல்ல. ஆங்கிலேயர்கள் அதிகாரத்தையெல்லாம் உங்களிடத்தில் கொடுத்து விடுகிறார்களென்று வைத்துக் கொள்வோம்! ஏன்? அப்பொழுது அதிகாரம் வகிப்பவர்கள் பொது ஜனங்களை அடக்கி வைத்துக் கொண்டு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கமாட்டார்கள். அடிமைகள் அடிமைகளையுண்டாக்குவதற்கு அதிகாரத்தை விரும்புகின்றனர்.

இப்பொழுது நமது மதத்தை ஸ்தாபகம் செய்தலினாலும், ஜனசமுகத்திற்கு ஸ்வதந்திரம் கொடுத்தலினாலும், மெல்ல மெல்ல மாறுதல்கள் உண்டாக வேண்டியிருக்கின்றன. பழைய மதத்திலிருந்து வைதீகக் கொடுமையை யெடுத்து விட்டால் உலகில் உயர்ந்த மதம் உங்களுடையதே. நான் சொல்லுகிறது தெரிகிறதா? ... ... ... ... ...

ஸ்ரீ சங்கரர், ராமானுஜர், சைதந்யர் முதலான பூர்வீகமகான்களால் விதிக்கப்பட்டுள்ளபடி, சர்வஜனமுக்தி, சமபாவனை முதலிய பழைய நியாயங்களின் படி, ஜனசமுகத்தைச் சீர்திருத்த முயற்சி செய்யுங்கள்.

ஆத்திரங் கொள்ளுங்கள், ஆத்திரத்தைப் பரப்புங்கள். வேலை செய்யுங்கள். தலைமை வகிக்கும் பொழுதே, வேலையாளனாயிரு. ஸ்வயநன்மைபற்று இரு: தனிமையாய் ஒரு ஸ்நேகிதன் இன்னொரு ஸ்நேகிதன் மீது குற்றங் கூற, ஒரு போழுதும் கேட்காதே. அளவற்ற பொறுமையை வகித்துக் கொள்; ஜயம் நின்னுடையதே ... ... நான் என்கடிதங்களை எப்பொழுதும் உனக்கே எழுதுகிறதினால், என்னுடைய மற்றஸ்நேகிதர்களைப் பார்க்கினும் நீ எனக்கு மிகவும் வேண்டியவன் என்று காட்டிக்கொள்ள முயற்சி செய்யாதே. நீ ஒரு பொழுதும் அத்தகைய முட்டாளாயிருக்க மாட்டாயென்று எனக்குத் தெரியும், ஆனாலும் உன்னை எச்சரிக்கவேண்டியது என்னுடைய கடமையாக நான் நினைக்கிறேன். இதுதான் எல்லா ஏற்பாடுகளையும் அழிப்பது. வேலை செய், வேலைசெய், ஏனென்றால் பிறருடையநன்மையின் பொருட்டு வேலைசெய்தலே ஜீவிதம்.

முகஸ்துதி, வெளிவேஷம், போக்கிறித்தனம் இவையெல்லாம் இருக்கக் கூடாதென்று நான் விரும்புகிறேன். எப்பொழுதும் ஈஸ்வரனிடத்தில், எப்பொழுதும் பகல் வெளிச்சம் போல்



பரந்த சத்தியத்தினிடத்தில் நான் சார்ந்திருக்கிறேன். பெயரையாவது கீர்த்தியையாவது அடைவதற்கு அல்லது நன்மை செய்வதற்குக் கூட வெளிவேஷம் போட்டு அழுக்குப் படிந்த மனச்சாட்சியுடன் நான் மரிக்காமலிருப்பேனாக. அயோக்கியத்தனம் அணுவளவேனும், தீய எண்ணம் சிறிதேனும் இருத்தல் கூடாது.

ஆஷாடபூதி வேஷம் கூடாது; அந்தரங்கப் பித்தலாட்டம் கூடாது. இரகஸ்யப் புரட்டு உதவாது; ஒன்றையும் ஒரு மூலையில் செய்யக் கூடாது. மகாத்மாவினுடைய பிரத்தியேகப் பிரீதி அல்ல; மகாத்துமாவும் அல்ல; எனது தீரபுத்திரர்களே! மேலே செல்லுங்கள்—பணம் இருந்தாலும் சரியே. இல்லாவிட்டாலும் சரியே,—மனுஷியசகாயம் இருந்தாலும் சரியே, இல்லாவிட்டாலும் சரியே, உங்களிடத்தில் அன்பு இருக்கிறதா? உங்களிடத்தில் கடவுள் இருக்கிறாரா? மேலே செல்லுங்கள், முன் செல்லுங்கள், உங்களை எதிர்க்கமுடியாது.

என்ன அசம்பாவிதம்! எனது ஜயத்திற்கு தியாஸாபிக்கல் பத்திரிகைகள் உதவி செய்தன என்று சொல்லுகின்றன. ஆ! உண்மை! சுத்த முட்டாள்தனம்! ... ... ...
ஜாக்கிரதை! உண்மையல்லாத ஒவ்வொன்றையும் பற்றி ஜாக்கிரதை; உண்மையைப் பிடித்துக் கொள், நாம் ஜயிப்போம், ஜயம் கிடைக்கச் சிறிது தாமதிக்கும்; ஆனால் நிச்சயம் தான். நீங்கள் ஒவ்வொருவரும் முழுவேலையும் செய்யவேண்டியவர்களைப் போலவே, வேலைசெய்யுங்கள். நான் ஒரு பொழுதும் இருந்ததேயில்லை யென்று நினைத்துக் கொண்டு வேலைசெய்யுங்கள். ஐயாயிர வருஷங்கள் உங்களையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் பிற்காலம் உங்களைப் பொறுத்ததாயிருக்கிறது. மேன்மேலும் வேலைசெய்யுங்கள். எனக்கு எப்பொழுது வரமுடியுமென்று தெரியாது. வேலை செய்வதற்கு இது ஒரு பெரிய பூமி. இந்தியாவில் அவர்கள், அதிகமானால், புகழ்வார்கள். ஆனால் அவர்கள் ஒன்றுக்கும் ஒரு பைசாவேனும் கொடார்கள். அவர்களே யாசகர்களாயிருக்கும் பொழுது, அவர்களுக்கு எங்கிருந்து (பணம்) கிடைக்கும்; இன்னும், சென்ற இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேலாக பொது நன்மை செய்யும் படியான தன்மையை அவர்கள் மறந்து விட்டார்கள். அவர்கள் இப்பொழுது தான்,

ஜனசமுகம், பொது ஜனங்கள் என்றால் இன்னவை யென்று அறிந்து கொண்டு வருகிறார்கள். ஆகையால் நான் அவர்களைக் குற்றம் கூறவில்லை. பின்னர் மற்றவை. உங்களையாசிர்வதிக்கின்ற

விவேகாநந்தர்.

## நிகழ்காலக் குறிப்புகள்.

நாம் நமது சந்தா தாரர்கட்கும் மற்றச் சகோதரர்கட்கும் வந்தனங்கள் புரிந்து எல்லா வுலகங்களையும் ஈன்று அளித்து அழிக்கும் ஈஸ்வரியின் சந்நிதானத்தில் மிகப் பயப் பக்தியுடன் கைகூப்பிக் கொண்டு நமது இரண்டாவது வயதில் பிரவேசிக்கின்றோம்

* * *

சுமார் இரண்டு மூன்று மாதங்கட்கு முன் நமது ராஜப்பிரதிநிதியவர்கள் சென்னைமாநகருக்கு விஜயம் செய்திருந்த காலத்தில் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் படும் கஷ்டங்களைப்பற்றி அவர் பேசிய தீரவசனங்கள் வீண் போகவில்லை. உடனே அவ்வரசாங்கத்தாரால் ஒரு விசாரணைக் கம்மிஷன் நியமிக்கப் பட்டது. இப்பொழுது அந்தக்கம்மிஷன் விசாரணை முடிந்து, அவர்கள் அரசாங்கத்தாருக்குச் சிபார்சை செய்திருக்கிற விஷயங்கள் இப்பொழுது பிரசுரிக்கப் பட்டு, ராஜப்பிரதிநிதியவர்களாலும் அவரது சபையில் வெளியிடப் பட்டன. லார்ட் ஹார்டிஞ்ஜ் அவர்கள் இந்தியர்கட்கு அநுகூலமாக அளவற்ற நன்மைகளைச் செய்திருக்கிறாரென் பதில் சந்தேகமில்லை. அந்த நன்மைகளெல்லாவற்றிலும், தென்னாப் பிரிக்காவில் படாத கஷ்டங்களெல்லாம் பட்டு வருந்துகின்ற தனது இந்தியப் பிரஜைகட்காக அவர் பரிந்து பேசிய அபய வசனங்களே முதன்மை பெற்றவையாம். அச்சமயத்தில் அவர் அவ்வளவு தைரியமாய்ப் பேசியிராவிடில், தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் அனைவரும் கூடிய விரைவில் அங்கிருந்து அகற்றப் பட்டிருப்பார்கள். உலகுள்ளளவும், இந்திய ஜனசமுகம் உள்ளளவும், லார்ட் ஹார்டிஞ்ஜ் என்ற பெயரானது ஒவ்வொரு இந்தியனது ஹிருதயத்திலும் வேரூன்றிப் பதிந்து, அவர் அபயாஸ்தம் கொடுத்து ஆபத்துக்களினின்றும் இரட்சித்த அரசன் எனக் கொண்டாடப் படுவார்.



விசாரணைக் கம்மிஷன் சிபார்சை செய்துள்ள விஷயங்கள் எம்மட்டில் தென்னாப் பிரிக்காக் கவர்ன் மெண்டாரால் ஆமோதிக்கப் பட்டு அநுகூலமான உத்தரவுகள் பிறப்பிக்கப் படுமோ, நாம் அறியோம். ஆதலால் அந்த கவர்ன் மெண்டாருடைய தீர்மானம் வெளியாகும் வரையில் நாம் நமது அபிப்பிராயத்தை நிறுத்தி வைக்கின்றோம்.

* * *

பகவத்கீதையானது நமது ஹிந்து மதத்திற்கு ஆதாரமாயுள்ளபிரஸ்தானத்திரயங் களில் ஒன்று. த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்ற எல்லாக் கட்சியாராலும் கையாளப் பெற்றது. இப்பொழுது ஐரோப்பியர்களாலும் அமெரிக்கர்களாலும் கூட வேதமாகக் கொண்டாடப் பட்டது. இதுவரை பகவத் கீதோப தேசத்தில் குற்றம் குறைகள் கண்டோர் அரிது. கல்கத்தா நகரில் பி. ஏ. பரீட்சையில் தேறிச் சென்ற பதினாறு வருஷகாலமாகச் சந்நியாசாஸ்ரமம் பூண்டு சச்சிதானந்த ஸ்வாமி என்ற பெயருடன் அமெரிக்காவுக்குச் சென்று ஒரு சந்நியாசி இப்பொழுது நம்நாட்டிற்குத் திரும்பி வந்திருக்கிறார். இவர் பகவத் கீதையில் பிரதானமாகக் கூறப் பட்டுள்ள நிஷ்காமிய கர்ம யோகத்தை முடியாத காரியமென்றும் அவ்விஷயத்தில் முயற்சி பலனற்றதென்றும் கூறுகின்றாராம். இன்னும், நிவிர்த்தி மார்க்கம் பயனற்றதென்றும் பிரவிருத்தி மார்க்கமே சிரேஷ்டமானதென்றும் உபதேசிக்கின்றனராம். இவர் பிரவிருத்தி மார்க்கத்தை அநுசரித்துப் பெண்டு பிள்ளைகளுடன் வாழாது, நிவிருத்தி மார்க்கத்தில் நிற்பதென்னையோ ? நிஷ்காம்ய கர்மயோகம் இயலாது என்று கூறும் இவர் எந்த காரம்யத்தை முன்னிட்டுச் சந்நியாசியாகினாரோ ? தெரியவில்லை. இவரது சந்நியாசம் அர்ச்சுன சந்நியாச நியாயத்தை அநுசரித்ததோ?.

பிரவிருத்தி மார்க்கமே சுறு சுறுப்பான ஜீவித காலத்தை உண்டாக்குகிறது என்று இவர் கூறுகின்றார். ஆனால் நிவிருத்தி மார்க்கம் சோம்பேரித் தனத்தை உண்டாக்குவதோ ? தான் மேலேறிவருவதற்கு உபகரணமாயிருந்த ஏணியைக் காலாலுதைத்துத் தள்ளுபவனைப்போல இவருக்குப் பெருமையையும்பூஜ்யதையையும் ஸ்வாமி என்ற பட்டத்தையும் சரீரப் பிரயாசை யில்லாமல் கிடைக்கக்கூடிய ஆகாரத்தையும் அளிப்பதற்கு அநுகூலமாக

இருக்கின்ற சந்நியாஸாஸ்ரமத்தை இவர் இகழ்ந்து கூறுவது மிக ஆச்சரியம்.

* * *

பங்காள ராஜ்யத்தில் வரதட்சிணையென்ற ம்ருத்யு தேவதையின் முன்பு தனது குடும்பத்தை வறுமையினின்றும் இரட்சிக்கும் பொருட்டு, தனது எண்ணற்ற சகோதரிகளின் க்ஷேமத்தை நாடி, பிராணத்தியாகம் செய்துகொண்ட ஸ்நேஹலதா என்னும் பெண்மணியின் பெயர் நமது நாட்டுப் பதிவிரதா சிரோண்மணிகளால் என்றென்றும் புகழ் நிலைத்திருக்கின்ற சீதை சாவித்திரி முதலிய ஸ்திரீ ரத்தினங்களின் ஜாப்தாவில் சேர்க்கப்பட்டுவிட்டது. வரதட்சிணையாகிய எமன் ஜனசமூக அறிவாகிய பரமசிவனால் உதைக்கப்பட்டு மரணமடைந்தாலொழிய நமது ஜனசமூகம் முன்னேற்றத்தில் வருவது மிகவும் சிரமம்.

* * *

தென்னிந்தியாவில் வரதட்சிணைவாங்கும் இழிந்த வழக்கம் பி. ஏ. எம் ஏ. பட்டம் பெற்று பிரபலமாய் வக்கீல்களாகவோ வேறெவ் விதத்திலோ பட்டணங்களில் படாடோபமாய்க் காலங் கழிக்கும் பிரமுகர்களிடத்திலும் கூடமிருந்து வருகின்றது என்பது மிகவும் விசனிக்கத்தக்கதன்றோ? ஆ! பிள்ளைகளையும் பெண்டுகளையும் அக்கினி சாட்சியாக விவாகம் செய்யும் சமயத்தில் பணப்பேயைப் பிடித்துப் பாரத பூமிக்கு அழிவைத் தேடுகின்ற பெற்றோர்களே! விவாகம்என்பது ஏதோ சிலகாலத்திற்கு மாமிச இச்சையினால் தூண்டப்பட்டு மிருக சமானர்களாய்க் காமபோகத்தை அநுபவிப்பதற்குச் செய்துகொள்ளும் ஒப்பந்தமா ? உங்களுடைய பணப்பேயின் முன் சரீரத்தியாகம் செய்து தற்பலி அளித்த ஸ்நேஹலதாதேவியின் பிம்பம் உங்கள் எதிரில் நிற்கவில்லையா? பெண்களின் பெற்றோர்களிடத்தில் வரதட்சிணை வாங்கிப் பிள்ளைகளை விலைக்கு விற்கின்ற மூடர்களே ஸ்நேஹலதா தேவியின் ஸ்திரீஹத்தி தோஷமானது பிடித்துக்கொள்ளப் போகிறது. ஜாக்கிரதை! ஜாக்கிரதை! கல்வி கேள்விகளில் தேர்ந்த பெற்றோர்களே! மணப்பிள்ளைகளே! விவாகப் பெண்களிடத்தில் பணம் வாங்குவதற்கு உங்களுக்கு வெட்கமாயில்லையா?.

* * *

இப்புண்ணியவதியின் தற்கொலைக்கு வேறு காரணங்களும் இருக்கலாமோ ? என்று சிலர் சந்தேகிக்கின்றனர். இப்படிச்



சந்தேகிப்பதற்குக் காரணம் ஸ்நேஹலதை அவளுடைய பெற்றோருக்குக் கடைசியில் எழுதிய கடிதமாகச் சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த கடிதம் அப்பெண் எழுதியதல்லவென்றும் எவரோ கட்டிவிட்டதென்றும் மாடர்ன் ரிவ்யூ என்னும் பத்திரிகை கூறுகின்றது. எது எப்படியாயினும், பிள்ளைகளை விலைக்கு விற்கின்ற இந்த மதிகெட்ட வழக்கம் நின்றாலொழிய, நமது ஜனசமூகத்தில் பலகுடும்பங்களும் பாழடைந்து விடும்.

* * *

இங்கிலாந்து தேசத்தில் டெயிலிமெயில் என்ற பத்திரிகை தினம் ஒன்றுக்கு பத்து லட்சம் பிரதிகட்கு மேல் செலவாகின்றதாம். டெயிலி ஸ்கெட்ச் என்ற பத்திரிகைக்கு தினம்ஒன்றுக்கு ஏழுலட்சம் பிரதிகள் செலவாகின்றன. டெயிலி மிரர் என்ற பத்திரிகைக்கு எட்டுலட்சம் பிரதிகள் செலவாகின்றன. இவையெல்லாம் தினசரிப்பத்திரிகைகள்.

* * *

டிட்பிட்ஸ் என்ற வாராந்தப் பத்திரிகைக்கு சுமார் எட்டுலட்சம் பிரதிகள் வாரமொன்றுக்குச் செலவழிகின்றதாம், லண்டன் ஒப்பினியன் என்ற வாராந்தப் பத்திரிகைக்கு இரண்டரைலட்சம் பிரதிகள் வாரம் ஒன்றுக்குச் செலவாகின்றதாம்.

* * *

இந்தியாவில் ஸ்டேட்ஸ்மான் என்ற பத்திரிகைக்கு தினம் ஒன்றுக்கு 18000 பிரதிகள் செலவாகின்றன. பாம்பே க்ரானிகல், ஹிந்து இவ்விருபத்திரிகைகட்கும் தினம் ஒன்றுக்கு 5000 பிரதிகள் செலவாகின்றனவாம். சுதேசபாஷா பத்திரிகைகட்கு எத்தனை சந்தாதாரர்கள் இருக்கின்றனரென்பதும் அதிலும் தமிழ்ப் பாஷாபத்திரிகைகள் எவ்வளவு செல்வாக்குள்ளவையாயிருக்கின்றனவென்பதும் மிகவும் வியக்கத்தக்கது.

* * *

மிஸ் டெனன்ட் என்னும் ஒரு யூரோப்பிய மாது இந்தியர்களுடைய ஆசார நடையுடை பாவனைகளைச் சீர்திருத்திக் கொடுப்பதற்கு இந்தியாவிற்கு வந்திருக்கிறார். இவர்பால்ய விவாகத்தினால் உண்டாகும் தீங்குகளைப்பற்றியும் விதவா விவாகத்தினால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும் ஆங்காங்குஉபதேசம்செய்து,

ராஜ்ய சஞ்சாரம் செய்து வருகிறார். நல்லது,—ஆனால் வயது முதிர்ந்த பின் விவாகம் செய்வதினால் உண்டாகும் தீங்குகளைப் பற்றியும் விதவாவாகம்செய்யாததினால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும், யூரோப்பிய நாடுகட்குச் சென்று அங்கு போதிப்பதற்கு இங்கிருந்து எவரேனும் செல்லவேண்டுமென்று நாம் நினைக்கிறோம். பால்ய விவாகம், விதவா விவாகமின்மை முதலிய வழக்கங்கள் அந்நாடுகளில் வேரூன்றியிருந்தால் ஐரோப்பிய ஜனசமூகத்தை இப்பொது அல்லோலகல்லோலப்படுத்த ஆரம்பித்திருக்கிற ஸ்திரீ ஸ்வதந்திரவாதிகளில் சிறப்புற்று விளங்கும் மிஸ்பான்க் ஹர்ஸ்ட் என்னும் மாதும் இந்தியாவிலுள்ள ஸ்திரீகளையும் தனது சிஷ்யவர்க்கத்தில் சேர்த்துக் கொள்ள வெண்ணி எங்கே இங்கும் உபதேசம் செய்ய வந்து விடுவாளோ? என்று நாம் நினைக்கின்றோம்.



OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
13 MAY 1914
MADRAS

ஞானபாநு.

VOL - 2. தொகுதி - 2. | May 1914. ஆனந்த௵ வைகாசி மீ | No - 2. பகுதி - 2.

## வித்தியாநுபவ விசேஷம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக"

ஆ! ஆ! எத்தகைய அற்புதமான வாக்கியம்! தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் இயற்றியுள்ள திருக்குறளில் எது தான் அற்புதமாயில்லாத வாக்கியம்! எத்தனையோ யோகீஸ்வரர்கள், எத்தனையோ ரிஷீஸ்வரர்கள், எத்தனையோ மகான்கள் எண்ணற்ற சாஸ்திரங்களைப் பரோபகாரார்த்தம் எழுதியிருக்கின்றனர்; எல்லாப் பாஷைகளிலும் எல்லாத் தேசங்களிலும் எத்தனையோ சாஸ்திரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும் தேன்மொழிபோன்றநமது தென்மொழியில் திருவள்ளுவதேவர் இயற்றியருளிய திருக்குறளைப் போன்றதோர் நூல் எத்தேசத்திலும எப்பாஷையிலும் எவராலும் இயற்றப்படவில்லையென்று நாம் கூறத்துணிகின்றோம். அரிய பெரிய சாஸ்திரங்களின் ஆராய்ச்சியையெல்லாம் ஐந்து, ஆறுவார்த்தைகளில் அடக்கி ஆச்சர்யமாக அநுபவத்தை விளக்கியுள்ள நூல் இத்திருக்குறளைத் தவிர, வேறு யாது உள்ளது? எவரேனும் எடுத்துக்காட்ட முன்வரட்டும். நாம் அறிந்தமட்டில், பிரஸ்தானத்திரயங்களில் ஒன்றாகிய பிரஹ்ம ஸூத்திரத்தில் தான் ஒவ்வொரு ஸ்லோகமும் அத்தியாச்சர்யமாக ஆழ்ந்த அர்த்தத்தை அடக்கிக்கொண்டிருந்த போதிலும் இரண்டொரு வார்த்தைகளால் இணைக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் திருக்குறளுக்கும் பிரஹ்ம சூத்திரங்கட்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால்:— திருக்குறளில் தர்மம், அர்த்தம், காமம் மோட்சம் என்னும் சதுர்வித புருஷார்த்தங்களில் மோட்சம் என்னும் முடிவான நிலைமையை அடைவதற்கு மார்க்கங்களாயுள்ள தர்மம், அர்த்தம், காமம் என்னும்மூன்று விஷயங்களைக்குறித்தும் முழுதும் கூறப்பட்டிருக்கிறது; மோட்சம்என்பதுதானே தானாகித தன்னைத் தவிர வேறு வஸ்துக்களைப் பார்க்காதநிலையாம். வாக்குக்

குமனத்திற்கும் எட்டாதவஸ்துவின் ஸ்வானுபவமாம்; ஆதலால்
மோட்சத்தப்பால் உரைத்தற்கரிது. பிரஹ்மசூத்திரம் பிரஹ்ம
வஸ்துவைக் குறித்துப் பிரதிபாதிப்பதாம்; குறள் எல்லோருக்கும்
அவரவர்களுடைய தற்கால நிலைமையிலிருந்து அதனினும் உயர்
நிலைமையை அடைய உதவிசெய்வது; பிரஹ்ம ஸூத்திரம் பிரபஞ்
சபற்றுக்களை யெல்லாம் துறந்துவிட்டு பிரஹ்மஞானநுபூதியே
லட்சியமாய் காடு, மலை, குகைகளில் தனிவாசம் செய்தோ அல்
லது ஈஸ்வர சிருஷ்டியின் இயற்கையழகு மிகுந்துள்ள ஆரண்
ணியங்களிலேனும் அல்லது அதிபரிசுத்தமான க்ஷேத்திரங்களி
லேனும் புண்ணிய தீர்த்த ஸ்தலங்களிலேனும் சங்கங்கள் சேர்ந்
துவாசஞ்செய்தோ ஜீவித காலத்தைக் கழிக்கின்ற சர்வ சங்கபரித்
தியாகிகளே பாராயணம் பண்ணி ஆராயத்தக்கது; ஆதலால்பிரஹ்ம
ஸூத்திரம் பிரபஞ்சத்தில் பெரும்பான்மையோருக்கும் பிரயோ
ஜன முள்ளதன்று. ஆனால் திருக்குறளோ முழுமூடன் முதல்முழு
தும் உணர்ந்த முக்தர்வரையில் சகலருக்கும் இன்றியமையாத,
இனிமை மிக்க விஷயங்கள் நிறைந்துள்ளது. ஆகையால்திருக்குற
ளைப்போன்றதோர் நூல் இப்பூவுலகெங்கும் தேடித்திரிந்து பார்த்
தாலும் கிடையாது என்று நாம் மறுபடியும் துணிந்து கூறுகின்
றோம். இத்தகைய மகிமை வாய்ந்த குறளில் உள்ள எந்த வாக்
கியத்தைத் தான் அநாவசியம் என்றும் நாம் தள்ளக்கூடும்? பக
வானனவர் லோகோத்தாரணத்தின் பொருட்டுத் தமதுஇச்சாமா
த்திரத்தால் எடுத்துக்கொண்ட அநேக அவதாரங்களில் வாமனாவ
தாரத்தில் சிருஷ்டியை இரண்டு அடியால் அளந்தாரென்று நமது
புராணங்கள் கூறுகின்றன. திருவள்ளுவரும் சிருஷ்டியையும் சிரு
ஷ்டிபாலனரீதிகளையும் இரண்டு அடியால் அளந்திருக்கிறார்.

* * *

அறியவேண்டுவனவற்றை நன்றாய் ஐயந்திரிபற ஆராய்ந்து
அறிக; அங்ஙனம் அறிந்தபின், அவ்வறிவை அநுபவத்தில் நிலை
நிறுத்துக. தாமஸகுணம் மிகுந்து சோம்பர்மயக்கம் தலைக்கேறி
பூமிக்குப் பாரமாய் வீண்காலம் கழிப்பதைப் பார்க்கிலும், பிச்சை
யெடுத்தாவது, பொய்சொல்லியாவது, திருடியாவது, பிறரைஏமாற்றி
யாவது வயிறு வளர்த்துக்கொண்டு இரவும் பகலும் க்ஷணபங்குர
மான விளையாட்டு விநோதங்களில் கவனத்தைச் செலுத்திப் பொ
ழுதைப் போக்குவதைப்பார்க்கிலும் கல்விகற்றல் மிகமேன்மை



யாம்; அதனினும் கசடறக் கற்றல், அதாவது தன் மனத்தில் யா
தொரு சந்தேக விபரீதங்கட்கு மிடமில்லாமல் கற்றுக்கொள்ளு
தல் மேன்மையாம்; அங்ஙனம் கசடறக் கற்றும், எத்தனைபேர்
வாதம் செய்யவரினும் அத்தனை பேருடைய மனமும் பேதப்படும்
படியாக புரட்டுகள் செய்வதில் சாமர்த்தியம் வகித்தும், அவ்வறி
வை அநுபவத்தில் நிலைநிறுத்தாத விஷயத்தில், அவ்வறிவு பிர
யோசன மற்றதாம். மழை காலத்தில் கிணற்றுத் தவளைகள் கத்து
வதைப்போல, இடைவிடாமல் சண்டப் பிரசண்டமாய்ப் பேசி வாதி
த்தோருடைய வாயை அடக்குவதினால் உண்டாகும் பயன்
என்னே? வெவ்வேறாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று பொருத்தம்
இல்லாமல் இருக்கிற மனோவாக்குக் காயங்களாகிய திரிகரணங்
களையும் ஒன்றுபடுத்தி ஒரேமுகமாக்கி வைப்பதே கல்வியினு
டைய பிரயோசனம். திரிகரணங்களும் ஒன்றுக்கொன்று முரண்ப
ட்டு நிற்கும் வரையில் எண்ணற்ற புஸ்தகங்களை எடுத்தெடுத்து
விழுங்கிய புஸ்தகப் பூச்சிகளாயிருந்த போதிலும், யாதுபயன்?

* * *

பாரத பூமியானது முன்னேற்றத்தில் வரவேண்டுமாயின்;
நமது மாதுர்ப்பூமி மேன்மையான ஸ்திதியை அடையவேண்டு
மாயின், நாம் வீண்வாசா ஞானத்தைப் பார்க்கிலும் அநுபவ ஞான
த்தை யடையவேண்டும். "கல்வி, ஒழுக்கம் இவைப் பணிந்த அந்த
ணனையும், பசுவையும் பண்டிதர்கள் ஒன்றுபோலவே பார்க்கின்ற
னர்" என்று பகவான் பார்த்தனுக்கு உபதேசம் செய்தார். நாமும்
மேற்படி பகவத் வாக்கியத்தை அறிந்துள்ளோம்; அநேகர் அத
தினமும் பாராயணம் பண்ணுகின்றனர். ஜனசமூக சரீரத்தில்,
ஒரு அவயவத்தை மற்றொரு அவயத்தினின்றும், ஒரு பாகத்தை
மற்றொரு பாகத்தினின்றும், துண்டித்து வைத்திருக்கின்றவித்தி
யாசங்கள் உள்ளவரையில், மேற்சொல்லிய பகவத் கீதா வாக்கியத்
தை நாம் பாராயணம் பண்ணுவதால் தான் யாது பிரயோஜனம்?
எல்லாவற்றையும் உயர்வு, தாழ்வு என்ற இருவித பாவனைகளால்
அநுபவத்தில் வேறுபடுத்தி வைத்துக்கொண்டு எல்லாம் ஒன்றே
யென்று சொல் மாத்திரத்தில்இயம்புவதால் என்ன பிரயோஜனம்?
ஒற்றுமையிலேயே பலமுள்ளது; வேற்றுமையிலேயே பலவீனம்.

* * *

இப்பொழுது இந்தியா தேசத்திற்கு'புஸ்தகப்பூச்சிகள்'கல்வி கேள்விகளில் கரைகண்டோராயினும் அவசியமில்லை. விசாலமான புத்தியை விட விரிந்து எங்கும் பரந்தஹிருதயமே சிரேஷ்டம். அறிவானது ஜனசமூகத்தைநல் வழியில் இட்டுச் செல்லாத விஷயத்தில், அந்த அறிவு இல்லாமல் போய்விடுவது நல்லது. சாஸ்திர ஞானத்தை அநுபவத்தில் அடையமுடியாவிட்டால் நாம் தகுதியில்லாதவர்களாக வேண்டும், அல்லாவிடில் சாஸ்திரஞானம் பிரயோசன மற்றதாகவேண்டும். சாஸ்திர ஞானம் பிரயோசனமற்றதென்று கூறும் விஷயத்தில் நமது இதிகாச புராணாதிகளையெல்லாம் தூர எறிந்துவிட்டு, நமது பூமியின்மகிமைகளையும்மேன்மைகளையும் நமது ஜீவித காலலட்சியத்தின் உண்மையையும் மனுஷ்ய ஜன்மத்தின் பிரயோசனத்தையும் நமக்கும் நமது ஜனசமூகத்திற்கும் அநுபவ பூர்வமாக அளிக்கவல்ல புஸ்தகங்களை நாம் படிக்கவேண்டும். ஆனால் ஒரு ஜனசமூகத்தை ஸ்திரமான அஸ்திவாரத்தின் மேல் என்றென்றும் நிலைநிறுத்தி வைத்திருப்பது அந்த ஜனசமூகத்தின் பூர்வீக இதிகாசங்களும் புராணங்களுமாம்.

* * *

"மனிதனுள் அடங்கியிருக்கும் அறிவின் விளக்கமே கல்வியெனப்படும்" என்று ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் கூறியுள்ளார். அறிவின் விளக்கத்தால் மனிதன் அடையும் பிரயோசனமாவது ஆனந்தமாகும். ஆனந்தத்தை அடைவதற்குக் கசடறக் கற்றலும் கற்றபடி நிற்றலும் அவசியம்; ஆனந்தத்தை அடைவதற்குத் தானே அகண்டவஸ்துவாயமாவேண்டும். அகண்டமாய் ஏகவஸ்துவாய்த் தனிக்காவிடில், ஆனந்தாநுபவம் முடியாதகாரியம். கண்டமாய் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வஸ்துக்கள் உண்டானால்; ஒன்றினால் ஒன்றுக்கு துக்கமும் ஒன்றினால் ஒன்றுக்குத் துன்பமுமுண்டாகலாம். ஆதலால் எங்கும் எக்காலத்தும் ஏகவஸ்துவேயுள்ளது என்ற திடஞானாநுபவமே ஆனந்தாநுபூதியையளிக்கவல்லது.

சமஸ்தகோடி ஜீவராசிகளும் சமஷ்டி ஸ்வரூபமாகிய ஈஸ்வரனே எனக்கருதி ஜீவராசிகளுக்குச் சதாகாலமும் ஸேவைபுரிவதே ஆனந்தத்தை அடைவதற்கு அநுகுணமான வழி.

* * *



பட்டினிகிடந்து பரதவிக்கும் ஏழைகள் ஆயிரக் கணக்காக நம்மைச்சுற்றி நிறைந்திருக்க, நாம் அவர்களை ஏறிட்டும் பாராது ஸ்வய நன்மைப் பேயினால் பிடிக்கப்பட்டுச் சொந்த விஷயங்களைச் சொற்பவஸ்துக்களின் மேல் கவனத்தைச் செலுத்தலாமா? நமது ஜனசமூகத்தில் மலேரியா, பிளேக் முதலிய வியாதிகள் மலிந்து நமது சகோதரர்கள் ஆயிரக் கணக்காக அற்பாயுசாக எமனுலகுக் கேகிக்கொண்டிருக்க, நாம் மாத்திரம் என்றும் உள்ளவர்கள் என்ற எண்ணத்துடன் இறுமாந்திருக்கலாமா? அநாதிகாலம் முதல் அழியாத்தன்மை வகித்து அமர்ந்திருக்கும் ஆரியஜனசமூகம் இப்பொழுது அழிந்துவிடுமோ என்று பலரும் ஏங்கும்படியான அவ்வளவு பரிதாப நிலையிலிருக்கிறது. ஆத்மஞான நிதிக்கு அர்கர்களாயுள்ள நாம் ஆத்மஞானத்தைக் கைவிட்டு மேற்சொல்லிய துன்பங்கட்கும் துக்கங்கட்கும் இடம் கொடுப்பது அழகா? உபநிஷத்துக்களை உலகினர்க்கு தயாபூர்வமாக ஈன்றருளிய உத்தம புருஷர்களின் சந்ததியை ரட்சியுங்கள். ஜகன்மாதாவாகிய மகாசக்தியினுடைய திருவருள் உண்டாமாயின் இனிமேல் புல்பூண்டு விருட்சாதிகளினின்றும் கூட மகரிஷிகள் கிளம்புவார்கள். ஆதலால் நாம் ஸ்வய நன்மையாகிய பேயைத் தூரத்திவிட்டு எல்லோரும் ஒற்றுமையாகிய முக்தியின் பொருட்டு முயல்வோமாக. கும்பத்தினின்றும் கும்பமுனி முன்காலத்தில் கிளம்பியது போல இக்காலத்திலும் நாம் ஞான பூமிகளில் ஏறி நடந்தால், புல்பூண்டு விருட்சாதிகளினின்றும் கூட முனிவர்கள் முளைத்தெழும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் நமது இந்திய ஜனசமூக அபிவிருத்தியின் நிமித்தம், நமது ஜன்மதேசத்தில் உண்டாயிருக்கும் துன்பங்களும் துக்கங்களும் ஒழியும்நிமித்தம் 'பிரபஞ்சஸ்வரூபம் பிரஹ்மம்' என்னும் உபநிஷத்து வாக்குஉண்மையாய் அநுபவத்தில் விளங்கும்நிமித்தம், சமஸ்தகோடி ஜீவராசிகளும் சுகஸ்வரூபமாய், ஜோதிஸ்வரூபமாய் விளங்கும் நிமித்தம் திருவள்ளுவர் என்னும் திவ்வியஞானி "கற்க கசடறக் கற்பவைகற்றபினிற்கவதற்குத்தக" என்று திருவாய் மலர்ந்தார். ஸ்ரீ தாயுமானவ சுவாமிகளும் அதே கருத்தைத் தான் "கற்றுமென்பலன் கற்றிடு நான்முறை சொற்றசொற்கள் சுகாரம்பமோநெறி நிற்றல் வேண்டும்" என வெளியிட்டுள்ளார்.

# இதுவே எனது தேசம்

நமது ஜன்ம பூமியாகிய பாரத வர்ஷத்தைப் பார்த்து "இதுவே எனது தேசம்" என்று பெருமை பாராட்டாதவர் எவர்? ஏ! பிரபஞ்சத்தின் தற்கால மயக்கத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களே! உங்களுடைய கைத்தொழில், வியாபாரம், ஜனசமூகத்தின் அமைப்பு, உங்களுடைய ஸ்வதந்திரம், உங்களுடைய சமபாவனை, உங்களுடைய பள்ளிக்கூடங்கள், புத்தக சாலைகள், சமாச்சாரப் பத்திரிகைகள், நீராவி யந்திரங்கள், மின்சார வேலைகள், இவற்றையெல்லாம் பற்றி வெகு பிரமாதமாக நீங்கள் கொண்டாடுகிறீர்களே! இவையெல்லாம் தானே உங்களுடைய நாகரீகம் எனப்படுவது! இந்த நாகரீகமானது நம்முள் அமர்ந்திருக்கும் அந்தராத்மாவுக்கு ஆனந்தத்தை அளிக்கின்றதா? நமது ஹிருதயங்களில் பூரிப்பை உண்டாக்குகின்றதா? நம்மைப் பரவசப் படுத்துகின்றதா? என்று நீங்கள் சற்று நேரம் ஒரு நிமிஷமேனும் நின்று யோசித்ததுண்டா? ஒரு விநாடி நேரமேனும் நீங்கள் மெய்மறந்து ஈஸ்வர சிருஷ்டியின் இயற்கை விநோதங்களில் இன்புறக்கலந்து நின்றதுண்டா? ஹிருதயத்தினின்று எழும்பித் ததும்பிப் பிரபஞ்சம் முழுதும் பூரணமாய் ஏகவெளியாகின்ற இன்பப் பெருக்கை எப்பொழுதேனும் அநுபவித்ததுண்டா?

நமது மாதாப் பூமியாகிய இந்தியா தேசமே இத்தகைய மகிழ்ச்சியை அளிக்க வல்லது. இந்தியா தேசம் ஒன்று தான் ஈஸ்வர சிருஷ்டியின் இயற்கை விநோதங்களை மனிதனுக்கு எடுத்துக் காட்ட வல்லது. இந்தியா தேசத்தின் பெருமையை நாம் அநுபவத்தில் அறிந்து கொள்ள முடியுமே யொழிய, எவ்வளவுதான் நாம் வாக்கினால் உரைத்தாலும் அநுபவத்தைப் போதுமான வளவு நம்மால் வர்ணிக்க முடியாது. மின்சாரக் கம்பிகள் நீராவியந்திரங்கள், தற்கால வித்தியாபிவிருத்தியினால் உண்டாயிருக்கும் எண்ணற்ற ஆச்சர்யமான விஷயங்கள், இவையெல்லாம் மனிதனை உண்மையான மனிதனாக்க வில்லை. இவையெல்லாம் ஆத்மதிருப்தியை அளிக்கவில்லை; மனிதன், ஆச்சர்யங்களெனப் படுகின்ற தற்கால வித்தியாபிவிருத்தியின் தற்பெருமையினிடையே யிருந்தும் சுகமடைகின்றான் இல்லை. இவற்றினிடையே, பிரபஞ்சத்தின் பூர்வ புருஷனாகிய மனிதன் மனம் ரமித்து மகிழ்ச்சி யடைவதற்கு ஏற்ற வஸ்துக்கள் ஒன்றும் இல்லை. இவையெல்லாம் என்றென்றும் சுகத்தை அளிக்கப்பட்ட வஸ்துக்கள் ஆகமாட்டா. ஹிருதயம் கரைந்து உண்டாகின்ற இன்பவூற்று இவற்றினின்றும் உண்டாவதில்லை. இவையெல்லாம் உத்கிருஷ்டமானவை யல்ல. இவற்றினிடத்தில் ரம்மியம் இல்லை; இவற்றினிடத்தில் இயற்கை யழகு இல்லை; இவற்றினிடத்தில் கம்பீரத் தன்மை இல்லை. இவற்றினிடத்தில் இன்னதென்று கூற முடியாத ஏதோ ஒன்று குறைவாயிருக்கின்றது; இவற்றினிடத்தில் ஆகருஷண சக்தி இல்லை; ஆத்மாநந்தத்தை அளிப்பதற்கு வேண்டிய அநேக லட்சணங்கள் இவற்றினிடத்தில் குறையாயிருக்கின்றன. மாயா திரையினால் மறைக்கப் பட்டிருக்கின்ற சிருஷ்டி விசித்திரத்தினின்றுமே ஆநந்தம் உற்பத்தியாகின்றது.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAY 1914

மனிதன் இன்னதென்று கூற முடியாத ஏதோ ஒரு வஸ்துவினிடத்தில், இன்னதென்று தீர்மானம் தெரியாது சந்தேகங்களைக் கிளப்புகின்ற ஒரு வஸ்துவினிடத்தில், அறிய முடியாமலிருந்தாலும் ஆச்சரியகரமான ஒரு வஸ்துவினிடத்தில் ஆசை கொள்கிறான்; பரிபூரணத்துவத்தை அடைவதிலேயே மனிதனுக்கு விருப்பம்; சின்னா பின்னப் படுத்தப் பட்ட வஸ்துக்களிடத்தில் மனிதன் பிரியப் படுவதில்லை. மனிதன் விரும்புவது பெருமையே, சிறுமையன்று. அநுபவசாத்தியம் ஆகாதது, எனக் கருதப்படுவது எதுவோ அதையே மனிதன் அநுபவிக்க விரும்புகிறான். மகத்துக்கு மகத்தாயிருக்கப்பட்ட வஸ்துவையே தியானம் செய்தலிலும் அவ்வஸ்துவை அடைவதற்கு முயற்சிப்பதிலுமே மனிதன் இச்சை கொள்கிறான். ஆதலால் பெருத்த காட்சிகளை யெல்லாம் கண்டுகளிப்பதில் மனிதன் இன்புறுகிறான். ஸ்தூலசுகத்தை அடைவதற்கு மனிதனுக்கு ஒரு சிறிய குடிசையே போதும்; ஆனால் ஆத்ம சுகத்தை அடைவதற்கு மனிதனுக்கு இப்பெரிய பிரபஞ்சமும் போதாது. உத்தம ஜீவிதகாலத்தின் அருமை பெருமை யெல்லாம் மனிதனுக்கு இன்றியமையாத, என்றும் சாஸ்வதமாயுள்ள இன்பத்தை அடைய முயற்சிப்பதிலேயே யுள்ளது.

ஆனால் மனிதனுக்குத் தன்னைப் பற்றிய அறிவே மிகவும் முக்கியம், மிகவும் அற்புதமானது. "தான்யார்?" என்றகேள்

வியினின்றும் உண்டாகும் ஆத்ம ஞானத்தைத் தவிர, அவ்வளவு ரகஸ்யமாயும் அற்புதமாயுமுள்ள தென்று யாதுள்ளது? சாஸ்திரத்தினால் சமுத்திரத்தின் ஆழத்தைக் கண்டு பிடிக்கமுடியும்; சாஸ்திரத்தினால் ஹிமோத்கிரி பர்வதத்தில் ஏறிப் பார்க்கமுடியும்; சாஸ்திரத்தினால் ஸூர்ய சந்திர நட்சத்திராதிகளை யெல்லாம் ஊடுருவிச் சென்று பரிசோதிக்க முடியும். சாஸ்திரத்தினால் சிருஷ்டி ரகஸ்யங்களைச் சிருஷ்டியிலிருந்து பறித்துக் கொள்ள முடியும்; ஆனால் சாஸ்திரத்தினால் மனிதனை அறியமுடியாது. மனிதன் தான் இன்னா னென்று ஒருவராலும் கண்டுபிடிக்கப் படாதவன்; மனுஷிய ரகஸ்யத்தை எவருமே அறியார். மனிதனே மனிதனுக்கு ஆச்சர்யமான வஸ்து.

ஆனால் இந்தியாதேசத்து மனிதனோ ஆச்சர்ய சொரூபமே; இந்தியா தேசத்துப் புராதன நாகரீகத்தினின்றும் ஆக்கப் பட்டுள்ள மனிதனுடைய பெருமையை என்னென்று சொல்வது? இப்பொழுது நாம் பார்க்கிற ஜாதி கெட்ட இந்தியனைப் பற்றி நாம் பேசவில்லை. இருபதாவது நூற்றாண்டின் நாகரீகத்தில் பிடிபடாமல் நாட்டுப்புறத்துக் குடிசையில் வசிக்கும் மனிதனுடைய திடசித்தமும் தீவிரதா வைராக்யமும் அளவிடற் கரிதன்றோ? திட விஸ்வாசத்தினால் ஒரு கார்யத்தைச் செய்து ஆத்ம திருப்தி யடையும் பொருட்டு, தனது மதக்கொள்கைகளை அநுபவத்தில் கொண்டு வரும் பொருட்டு, தான் அறியாததும் தன்னால் அறியமுடியாததுமான வஸ்துவைச் சந்தோஷிப்பிக்கும் பொருட்டு, உத்தமமான தர்ம ஸேவையின் முன் இந்த ஜீவித காலம் திரணம் என்றுரூபிக்கும் பொருட்டு, சர்வசங்க பரித்தியாகஞ் செய்வதற்கு தான் தயாராயிருப்பதை நிரூபிக்கும்பொருட்டு, தான் முமுட்சுவென்று உறுதிப் படுத்தும் பொருட்டு, பட்டினிகிடந்தும், பற்பல துன்பங்கட்குட் பட்டும், மழையில் நனைந்தும் வெயிலில் உலர்ந்தும், பஞ்ச பூதங்களின் செயல்களையும் எதிர்த்து நிற்பது போலச் சற்றும் லட்சியம் செய்யாமலும் வனாந்திரங்களூடே சென்றும் ரயில் வண்டியில் ஆடுமாடுகளைப் போல அடைக்கப்படுவதற்குச் சம்மதித்தும், கூட்டங்களில் அங்கும் இங்கும் இடிக்கப் பட்டும் தள்ளப் பட்டும் தற்கால நாகரிகப் பித்தர்களால் மூடர்களென்றும் காட்டு மிராண்டிகளென்றும் பரிகசிக்கப்பட்டும் நிந்தி



க்கப் பட்டும் மிருகப் பிராயத்திலுள்ளவர்களென்று அந்நிய தேசத்தினரால் இகழப் பட்டும் வஞ்சிக்கப் பட்டும், ஏமாற்றப் பட்டும், கையிலுள்ளதைப் பறி கொடுத்தும் கருத்திலுள்ளதை விடாது ஆத்மார்த்தமான செயல்களைச் செய்யப் பர்வதக்குகைகளிலும் ஆரண்ணியங்களிலும் உள்ள மகாத்துமாக்களையும் புண்ணிய தீர்த்த க்ஷேத்திராதிகளையும் தர்சிக்கத் துணிந்து செல்லும் இந்தியனை, நமது சகோதரனைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். தனக்கு அருமையும் அன்பும் மிகுந்த பெண்டு பிள்ளைகளையும் விட்டுப்பிரிந்து செல்கிறான்; அவனது ஆன்றோரது அமிர்த வசனங்களை அநுபவத்தில் கொண்டுவரும் பொருட்டு இவ்வண்டபிண்ட சராசரங்களை யெல்லாம் விழுங்கிக்கொண்டு வருகிற எமனையும் எதிர்த்து நிற்கத் தயாராயிருக்கிறான்; இத்தகைய மனிதன் இப்பூவுலகில் ஓர் ஆச்சர்ய வஸ்து வல்லவா? இம்மனிதனைப் பற்றி அறியும் அறிவையே அறிவென்னலாம். இம்மனிதனைப் பற்றிச் சிறிது நாம் சிந்திக்கப் புகுங்கால், ஆ! ஆ! நமது மனமானது நெகிழ்ந்து கரைகின்றது. அநேகயுகங்கட்கு ஆலோசித்தறியும் படியான அறிவை இம்மனிதனிடத் திலிருந்து அறியலாம். இம்மனிதனை நமது சகோதரன் என்று சொல்ல நாம் ஏன் பின்வாங்கவேண்டும்? இவனைப்போல் வேறொரு தேயத்தினன் எப்பொழுதாவது எங்காவது இருந்ததாக சரித்திர கர்த்தாக்கள் சொல்ல வில்லை. இவன் இருக்கு மிடமாகிய இந்தியாவை "இது எனது தேசம்" என்று சொல்லி மகிழ்ச்சி யடையா திருக்கும் இந்தியன் எவன்?

சிவம்.

## சத்தியமார்க்கம்.

(முன் தொடர்ச்சி)

ஸ்ரீமான் சிவசுப்ரமணியம் அவர்கள் மொழிபெயர்த்தது.

நினது கண்கள் நினது மார்க்கத்தில் இடையூறா யிருந்தால் அவைகளைப் பிடுங்கி யெறிந்து விடு; நினது ஜீவன் அஞ்ஞானாந்தகாரத்தில் அமிழ்ந்து அழிந்து போவதைவிட நினது சரீரம் அழகின்றி யிருத்தல் நலம். இது தான் மார்க்கம்.

நினது கண்கள் சத்தியானுபவ மார்க்கத்தில் இடையூறாயிருக்குமாயின் அவைகளைப் பிடுங்கி எறிந்து விடு. நினது செவிகள் நினக்குத் துர்ப்போதனை செய்து நின்னைப் பின்னிழுக்குமாயின் அவைகளை வெட்டியெறிந்து விடு. நினது மனைவியோ, தனமோ, யாதாயினும் சரி, நினது வழியில் நிற்குமாயின், அவற்றைக் களைந்து விடு. நீ நினது மனைவி முதலிய பந்துக்களிடத்தில் செலுத்துகிற அன்பைச் சத்தியத்தினிடத்தில் செலுத்தினால், நீ நினது மனைவியை நேசிக்கிற அவ்வளவு ஆத்திரத்துடன் தெய்வீகத்துவம் பொருந்திய ஆத்ம வஸ்துவை நேசித்தால் இந்த நிமிஷத்தில் நீ சத்தியானுபூதியை அடைவாய். நீ தர்ம மார்க்கத்தில் நடந்து, எல்லவருக்கும் அப்பியாசகாலத்தில் சாதாரணமாக உற்பவிக்கின்ற துர் எண்ணங்களை யெல்லாம் வென்று தெய்வானுபவத்தை அடைந்து விட்டால், இம்மார்க்கம் கரடுமுரடானதென்றும் அழகின்றியதென்றும் நீ பார்க்கமாட்டாய். சத்தியமார்க்கம் ஓர் ஊசி முனையைப் பார்க்கினும் ஒடுங்கியதென்று சான்றோர் உரைப்பர். சத்தியமார்க்கமானது ஓர் கத்தி முனையைப் போல் கூர்மையானதும் ஒடுக்கமானதுமென்று வேதங்கள் கூறுகின்றன. ஆனால் எப்பொழுதும் இது உண்மையல்ல. ஆரம்பத்தில் இம்மார்க்கம் மிகவும் ஒடுக்கமாயும் கூர்மை பொருந்தியதாயும் தோன்றுகிறது. ஆனால் சாதாரணமான துர் எண்ணங்களை நீ ஜெயித்து விடும் விஷயத்தில் இம்மார்க்கமானது மிகவும் அற்புதமான அழகு பொருந்தியதென்றும் மிகவும் சுலபமானதென்றும் நீ அறிவாய். சிருஷ்டி முழுமையும் உனக்கு சகாயமாக உன்பக்கத்தில் நிற்பதைப் பார்ப்பாய். இந்தக் கஷ்டங்கள், இந்தத் துர் எண்ணங்கள், இந்த இடையூறுகள், இந்தத் துன்பங்கள் இவைகளெல்லாம் உன்னை மயக்குகின்றன. இவைகள் உன்னைப் பயப்படுத்துகின்றன. ஆனால் அவைகள் உண்மையாகத் தொந்தரவு செய்யா. நீ அவைகளை எதிர்த்துப் பயப் படுத்திவிட்டால், அந்தக் கஷ்டங்களும் துர் எண்ணங்களும் தோற்றல் மாத்திரத்திலேயே கஷ்டங்களும் துர் எண்ணங்களுமாய் இருந்தனவென்பதை நீ அறிவாய். சிருஷ்டி முழுதும் உனக்குப் பணிவிடைசெய்யத் தயாராயிருப்பதை நீ பார்க்கலாம்.

ஹிந்து இதிகாசங்களில் ஒன்றாகிய இராமாயணத்தில், இராமர் சத்தியத்தைத் தேடி அதைத் திரும்பவும் அடைவதற்குப்



புறப் பட்ட பொழுது, சிருஷ்டி முழுதும் அவருக்கு வேண்டிய சகாயம் செய்ததாகக் கூறப் பட்டிருக்கின்றது. குரங்குகள் அவருடைய சைனியங்களாயின வென்றும் கடலில் அணைகட்டுவதற்கு அணில்கள் அவருக்கு உதவி செய்தன வென்றும் கூறப்பட்டுளது; கற்களும் நீரில் போட்ட வுடன் அமிழ்ந்து போகும் தங்களுடைய இயற்கையை மறந்து, சத்தியாபிவிருத்தியின் பொருட்டு மேலே மிதந்து கொடுத்து அவருக்கு உதவி செய்தனவாம். வாயு, அக்கினி, புயற்காற்று இவைகளெல்லாம் அவருக்கு அனுகூலமாகவே யிருந்தனவாம். காற்றும் அலையும் யாண்டும் தைரியஸ்தர்கள் பக்கமே என்று ஆங்கில பாஷையில் ஓர் வசனமுளது. துவக்கத்தில் தோற்றுகின்ற கஷ்டங்களை ஜெயித்து நீ ஒரே உறுதியாயிருப்பாயாயின் சிருஷ்டி முழுதும் நினது பக்கத்தில் கைகட்டி நிற்கும். துவக்கத்தில் தோன்றுகின்ற துர் எண்ணங்களையும் கஷடங்களையும் நீ ஜெயித்து விட்டால் சிருஷ்டி முழுதும் உனக்குப் பணிவிடை செய்யத்தான் வேண்டும். சத்தியத்தின் பக்கத்தில் நீ உறுதியாயிருந்தால் சாதாரணமாகக்காணப்படுகிற இவ்வுலகத்தில் நீ வசிக்கவில்லையென்று கண்டு கொள்வாய். இவ்வுலகம் வெகு அற்புதங்கள் நிறைந்த ஓர் உலகமாக உனக்குக் காணப்படும். உன்னைச் சுற்றிலும் சித்திகள் உலாவும். தேவதைகள் கூட உனது அபிவிருத்தியில் ஏவல் செய்வார்கள். நீ சத்தியத்தில் உறுதியா யிருப்பாயாயின் நீயே பிரபஞ்சத்திற்குப் பிரபு, நீயே இவ்வுலகு முழுதினுக்கும் புருஷன்.

சத்தியானுபூதியை அடையவேண்டின், தர்மமார்க்கத்தில் செல்ல வேண்டின் பற்றுக்களினின்றும் மேலே கிளம்பு. உலகப்பற்றுக்களினின்றும், ஸ்வய நலப் பேராசைகளினின்றும் உன்னை நீ விடுவித்துக்கொண்டால் நீ இந்நிமிஷத்திலேயே சத்தியவஸ்துவாய் விடுவாய். மூடர்கள் "எனக்கு அதிக அறிவு வேண்டும், அதிக ஞானம் வேண்டும்" எனப் பிரார்த்திக்கின்றனர். நீ அங்ஙனம் பிரார்த்திக்கவேண்டியதில்லை. நீ அறிவை யடைவதற்குப் பிரார்த்தனையைச்செலவழிக்க வேண்டாம். பரிபூர்ண மனிதனை நாம் பார்ப்பது மிகவும் அரிது. பரிபூர்ணமனிதன் திருவருள்பெற்றவன்; பரி பூர்ணமனிதன் சத்தியவஸ்துவே யாவான். ஒவ்வொரு ஆசையும் ஒவ்வொரு பற்றுதலும் உன்னைச் சிறு சிறுபங்குகளாகப் பிரித்து விடுகின்றன.

மகத்துக்கு மகத்தாயிருக்கின்ற உனது நிஜசொரூபத்தினின்றும் வேறுபட்டு நீ அணுமாத்திரமாய் விடுகிறாய். இந்த ஆசைகள், பற்றுதல்கள், நேசம், பகை, பிடிப்புக்கள் இவைகளையும் ஞான சம்பாதன இச்சையையும் கூட உதறி எறிந்து விட்டு அந்த சரீரம், அந்த வஸ்து என்ற யாதொரு விதமான அபிமானமும் இன்றிவிரோதம்சிநேகம் இவைகளினின்றும் உன்னை விடுவித்துக் கொண்டு ஓர் விநாடி நேரமேனும் ஓம் என்ற பிராண வாட்சரத்தைத் தியானம் செய்து உனக்குள் இருப்பது யார் என்பதை ஆராய்ந்து பார். ரோமங்களை வளர்க்கின்றதும் ரத்தத்தை நரம்புகளில் ஓடச் செய்வதும் நீயே யல்லவா? இவ்வற்புதமான உலகமும் நினது சிருஷ்டியேயாகும். இது நிச்சயமாக நினது ஸ்வய சிருஷ்டியே. கவனிப்பாய். உன் மூலமாய்க்கேட்பது யார்? நீயே யல்லவா? உன் மூலமாய் பார்ப்பது யார்? நீயே யல்லவா? நினது நரம்புகளில் ரத்தம் ஓடும்படி செய்வது எவர்? நீயேயல்லவா? உனது ஆத்மா இத்தகைய அற்புதமும் ஆச்சரியமும் வாய்ந்த செய்கைகளைச் செய்ய முடியுமாயின், இவ்வுலதும் நினது சிருஷ்டியேயாம். அதை உணர்ந்து நீநினது தெய்வீகத்துவத்தில் ஆனந்திப்பாய். உன்னிலிருந்தே சுகத்தை அடைந்து நினது ஆத்மாநந்தத்தை அனுபவிப்பாய். தகுதியற்ற ஆசைகளையும் நினக்கு இணக்கமற்ற இச்சைகளையும் தூர எறிந்து விடு. ஓங்காரமாகிற பிரணவாட்சரத்தையே எப்பொழுதும் தியானம் செய். சில நிமிஷங்களுக்கு நீ அப்படியே செய்வாயானால் நினது சரீரம் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் ஞான சொரூபமேயாய் விடும். ஞான சொரூபமே நீயாயிருக்கும் பொழுது, ஏன் ஞானத்திற்காகப்பிரார்த்திக்கிறாய்? ஆசைகளையும் பற்றுதல்களையும் தள்ளி விருப்பும் வெறுப்புமின்றி, உன்னைப் பரி பூர்ணமாக்கிக்கொள். பிரித்து விடுதல் சேர்க்கையே யாகும். பெயர், கீர்த்தி, வெகுஜனஸ்தோத்திரம் இவைகளிடத்தில் உனக்குப் பற்றுதல் உளதேல், இவைகளினின்றும் நீ உடனே பிரிந்து கொள். லோகோபகாரம் செய்யவேண்டுமென்ற இச்சையையும் விட்டு விடு. உலகம் நினது உதவியை இரந்து பெற்றுக்கொள்வதற்கு அவ்வளவு ஏழ்மையையுடையதாய் ஏன் இருக்கவேண்டும்?

உன்னிடத்தில் யாதொரு இச்சையுமில்லாமல் கவனமும் இல்லாமல் உனது கடமையை அல்லது வேலையைச் செய். நினது



கர்மத்தைச் செய். கர்மத்தில் ஆநந்தத்தை அனுபவி. ஏனெனில் நினது செய்கையே ஆனந்தமாகும்; ஏனெனில் கர்மமே பிர்மானுபூதியின் மறுபெயராகும். கருமத்தைச் செய். ஏனெனில் நீ செய்ய வேண்டியிருக்கிறது. கர்மம் உன்னைப் பிர்மானுபூதிக்கு இட்டுச் செல்லும். ஓரரசன் சந்தோஷத்தின் பொருட்டு பந்து விளையாடுவது போல—கர்ம ரூபமாக ஆனந்தம் உன்தாகையால்—கர்மத்தை செய்.

(தொடரும்)

## ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

பிரஹ்ம ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள்-மொழி பெயர்த்தது.

தென்றல் வெளி மெட்காப், மாஸ்

20—8—1893,

தங்களுடைய கடிதம் நேற்றுக் கிடைத்தது. நான் ஜப்பானிலிருந்து எழுதிய கடிதம் இதற்குள் தங்களுக்கு ஒருவேளைகிடைத்திருக்கலாம். ஜப்பானிலிருந்து வான்கோவர் சென்றேன், உத்தர பஸிபிக்சமுத்திர வழியாய். குளிர் மிகுந்திருந்தது; என்னிடத்தில் உஷ்ண உடைகள் இல்லாமையால், நான் மிகவும் கஷ்டப்பட்டேன்; என்றாலும், எப்படியாவது வான்கோவருக்குச்சென்று அங்கிருந்து கானடா தேசத்தின் மார்க்கமாய் சிக்காகோ நகரம் போனேன். சிக்காகோ நகரத்தில் பன்னிரண்டு நாட்கள் தாமதித்தேன். அநேகமாய் ஒவ்வொருநாளும் நான் சந்தைக்குச் செல்வதுண்டு. அது ஒரு பிரமாண்டமான விஷயம். ஒருவர் அந்தச் சந்தையைச் சுற்றிப்பார்க்கச் சென்றால், குறைந்தது பத்து நாட்களாவது செல்லும். ஸ்ரீமான்-எனக்குப் பழக்கப்படுத்தி வைத்த ஸ்திரீயும் அவளது கணவனும் சிக்காகோ நகரத்தின் ஜனசமூகத்தில் உயர்ந்த வகுப்பைச்சேர்ந்தவர்கள்; அவர்கள் மிகவும் பிரியமாயிருந்தார்கள். நான் சிக்காகோவினின்றும் நீங்கி போஸ்டன் வந்து சேர்ந்தேன். ஸ்ரீமான்-என்னுடன் கூட போஸ்டன் வரையில் வந்தார்; அவருக்கு என்னிடத்தில் அதிக பிரியம்.

நான் இங்கு கட்டாயமாகச் செலவழிக்கவேண்டி நேரிடுகிற செலவோ பயங்கரமாயிருக்கின்றது. எனக்குத் தினந்தோறும் சராசரி ஒரு பவுன் செலவாகிறது; ஒரு சுருட்டு நமது பணத்தில் எட்டு அணா விலையாயிருக்கிறது. அமெரிக்கர்கள் மிகுந்த தனவந்தர்கள்; அவர்கள் பணத்தைத் தண்ணீரைப்போலச் செலவழிக்கின்றார்கள்; உலகத்திலுள்ள வேறு எந்த ஜனசமூகத்தினரும் கிட்ட நெருங்காதபடி, அவர்கள் (அமெரிக்கர்கள்) ஒவ்வொன்றினுடைய விலையையும் சட்ட நிபந்தனையினால் உயர்த்திவைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு சாதாரண கூலிவேலைக்காரனும் தினம் ஒன்றுக்கு ஒன்பது அல்லது பத்து ரூபாய் சம்பாதித்து அதனைச் செலவழிக்கிறான். புறப்படுவதற்கு முன் நாம் நினைத்திருந்த அழகிய எண்ணங்களெல்லாம் உருகிவிட்டன; இப்பொழுது அசாத்தியங்களுடன் யான் போராட வேண்டியிருக்கிறது. இந்தத் தேசத்தை விட்டுவிட்டு இந்தியாவுக்குத் திரும்பிப் போய்விடலாமென்று யான் சுமார் நூறுதரம் நினைத்தேன்; ஆனால் நான் தீர்மானித்து விட்டேன்; இறைவனிடத்திலிருந்து எனக்கு உத்தரவு ஆய்விட்டது. எனக்கு வழிதெரியவில்லை. ஆனால் அவனுடைய கண்களுக்குத் தெரிகிறது. ஜீவித்தாலும், மரித்தாலும் நான் எனது பீரங்கிகளிடத்தில் ஒட்டிக்கொள்வேன்.

இப்பொழுது போஸ்டன் நகரத்தின் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் வயது முதிர்ந்த ஒரு ஸ்திரீயினுடைய விருந்தாளியாயிருக்கிறேன். ரெயில்வே வண்டியில் அவள் தற்செயலாய் எனக்குப் பழக்கமாகி, என்னை அவளுடன் வந்து வசிக்கும்படி அழைத்தாள். நான் அவளுடன் வசிப்பதால் தினந்தோறும் நான் செலவழிக்க வேண்டியிருக்கிறபவுன் ஒன்று எனக்கு மீதியாய்விடுகின்றது; இது எனக்கு நன்மை. அவள் அவளுடைய ஸ்நேகிதர்களை இங்கு வரவழைத்து, என்னை இந்தியாவிலிருந்து வந்துள்ள ஒரு விநோத வஸ்துவாகக் காண்பிக்கிறாள்; இப்படிச் செய்தல் அவளுக்குச் சந்தோஷம். இவற்றையெல்லாம் நான் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது; பட்டினிகிடத்தல், குளிர், யான் தரித்திருக்கும் விநோதமான உடையின் நிமித்தம் தெருக்களில் பரிகாசமாக நிந்திக்கப்படுதல், இவற்றையெல்லாம் நான் எதிர்த்துப்போராடவேண்டியிருக்கிறது. ஆனால், எனது அரியபுத்திரனே பெருங் காரியங்கள் மகத்தான சிரமமில்லாமல் ஒரு பொழுதும் செய்யப்பட்டதேயில்லை. ......................



இது கிறிஸ்தவர்களுடைய பூமி என்றுஅறிந்துகொள். அவர்களைத் தவிர வேறு எவர்க்கும் செல்வாக்கு இல்லை. உலகிலுள்ள எந்த மதத்தினருடைய விரோதத்தைப்பற்றியும்நான்ஒருஅணுவளவுகூடக் கவனிக்கிறவனன்று. நான் மேரியின் புத்திரனுடைய குழந்தைகளிடையே இங்கு இருக்கிறேன். இயேசு நாதர் எனக்கு உதவி புரிவார். அவர்கள் ஹிந்து மதத்தினுடைய விரிந்து விசாலமான கொள்கைகளைப் பற்றியும் நாசரேத் நகரத்து மகானிடத்தில் எனக்கு உள்ள அன்பைப்பற்றியும் மிகவும் சந்தோஷிக்கின்றனர். கலிலி நகரத்து மகாத்துமாவுக்கு விரோதமாக நான் ஒன்றும் போதிக்கிறதில்லையென்று நான் அவர்களிடம் சொல்லுகிறேன்; இயேசு நாதருடன் இந்திய தேசத்து மகான்களையும் ஒன்று சேர்த்துக்கொள்ளும்படி கிறிஸ்தவர்களிடத்தில் சொல்கிறேன்; அவர்களும் சந்தோஷிக்கின்றனர்.

மாரிகாலம் சமீபிக்கின்றது; நான் அநேகவித உஷ்ண உடைகளையும் சம்பாதித்துக்கொள்ள வேண்டும்; நமக்குத் தேசவாசிகளைப் பார்க்கிலும் அதிக உஷ்ணமான உடைகள் வேண்டியிருக்கின்றன. ஜாக்கிரதை! எனது புதல்வனே! தைரியத்தைவிடாதே. நாம் இந்தியாவில் பெருங் காரியங்களைச் செய்வதற்கு ஈஸ்வரனால் விதிக்கப்பட்டிருக்கிறோம். நம்பு. நாம் செய்வோம். உண்மையாக உணருகின்ற எளியவர்களும் இகழப்பட்டவர்களுமாகிய நாம்.... ......................அவர்ளல்ல.

நேற்றையதினம் இங்கு ஸ்திரீ ஜெயிலின் அதிகாரியாகிய எஜமானி வந்திருந்தாள். இங்கு அவர்கள் அதைஜெயில் என்று சொல்லமாட்டார்கள்; ஆனால் சீர்திருத்த சாலை யென்பர். நான் அமெரிக்காவில் பார்த்ததில் இது மிகப் பெரிய விஷயம். அதனுள் வசிப்பவர்கள் எவ்வளவு தயையுடன் நடத்தப்படுகிறார்கள்! எப்படி அவர்கள் சீர்திருத்தப்பட்டு, ஜனசமூகத்தின் உபயோகமான அங்கங்களாகத் திரும்பவும் அனுப்பப்படுகிறார்கள்! ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! என்ன அழகு! நீ பார்த்தாலே நம்புவாய் ஆ! இந்தியா தேசத்தில் எளியவர்கள், தாழ்ந்தவர்களைப்பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்பதைப்பற்றி நினைக்க எனதுஹிருதயம் எத்தகைய வருத்த முற்றது? அவர்கள் (இந்தியா தேசத்து ஏழைகள்) மேலேறுவதற்கு வழியில்லை, சந்தர்ப்பமில்லை. இந்தியா

வில் எளியவர்கள், தாழ்ந்தவர்கள், பாபி, இவர்களுக்கு ஸ்நேகிதர்களில்லை, சகாயம் இல்லை—அவர்கள் எவ்வளவு முயற்சி செய்த போதிலும் மேலெழும்ப முடியாது நாளுக்கு நாள் கீழே கீழே தாழ்ந்து போகின்றனர்; குரூரஸ்வபாவத்தையுடைய ஒரு ஜனசமூகம் அவர்களின்மேல் அடிமேல் அடியாக அடிப்பதை உணர்கிறார்கள்; ஆனால் அடி எங்கிருந்து வருகிறதென்று அவர்கள் அறியார்கள். தாங்களும் மனிதர்கள் என்பதை அவர்கள் மறந்தேவிட்டார்கள். பயன், அடிமைத்தனம். சென்ற சில வருஷங்களுக்குள் ஆலோசனா சக்திவாய்ந்த சிலஜனங்கள் இதை அறிந்தனர். ஆனால் அவர்கள் இதற்கு ஹிந்துமதத்தைக் காரணமாக்கினார்கள். சீர்படுத்துவதற்கு அவர்களுக்குத் தெரிந்தவழி உலகில் உயர்ந்தமதமாகிய இந்த ஆரிய மதத்திற்கு அழிவு செய்து விடுதலே. எனது மித்திரா! நான்சொல்வதைக் கேட்பாய். ஈஸ்வர கிருபையால்நான் மர்மத்தை யறிந்துகொண்டேன். மதத்தினிடத்தில்குற்றம்இல்லை, உன்னுடைய மதமானது ஒவ்வொரு ஜீவராசியும் உனது ஆத்மாவின் பெருக்கமேயென்று உனக்கு உபதேசிக்கின்றது. ஆனால் ஹிருதயக் குறைவே, இரக்கமின்மையே, அநுபவஞானம் இன்மையே காரணமாகும். ஈஸ்வரன் உங்களிடத்திற்கு மறுபடியும் புத்தராகவந்து எளியவர்கள், துன்புறுபவர்கள், பாபி இவர்களுக்கு இரங்கும்படி உங்களுக்கு உபதேசித்தார்; ஆனால் நீங்கள் அவருடைய வார்த்தைகட்குச் செவிசாய்க்கவில்லை. உங்களுடைய வைதிகர்கள் பொய்க்கொள்கைகளினால் அசுரர்களை மயங்கச் செய்வதற்கு ஈஸ்வரன் இங்கு வந்திருந்தார் என்ற பயங்கரமான கதையைக் கட்டிவிட்டனர். உண்மைதான்; நாமே அசுரர்கள்; நம்பினவர்களல்ல. யூதர்கள் இயேசு நாதரை மறுத்துவிட்டு அன்று முதல் எல்லோராலும் கொடுமையாக நடத்தப்பட்டு உலகில் இருப்பதற்கு இடம் இல்லாமல் இரந்து திரிவதைப் போல, நீங்களும் உங்களை ஆட்சி செய்யலாமென்று நினைக்கிற எந்த ஜனசமூகத்தாருக்கும் அடிமைகளாயிருக்கின்றீர்கள்; ஆ! கொடுமையாளர்களே! ஒரு புறம் கொடுமை, மறுபுறம் அடிமைத் தனம் என்பதை நீங்கள் அறியீர்கள்; அடிமையும் கொடுமையாளனும் ஒரே அர்த்தத்தைக் குறிப்பிடுபவர்களே.

(தொடரும்.)

## ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளது வேத வசனங்கள்.

மனிதன் மிருகத்துவம், மனுஷியத்துவம், தெய்வத்துவம் ஆகிய இம்மூன்றின் சேர்க்கையேயாவன்.

*　　*　　*

"உஷ்ணமான பனிக்கட்டி" "இருட்டான பிரகாசம்" என்னும் வார்த்தைகளில் எவ்வளவு அர்த்தமிருக்கிறதோ, அவ்வளவு அர்த்தமே "ஜனசமூகாபிவிருத்தி" என்னும் வார்த்தையிலும் இருக்கிறது. முடிவில் "ஜனசமூகாபி விருத்தி" என்ற ஒன்று கிடையாது!

*　　*　　*

வஸ்துக்களில் மாறுதல்களை உண்டாக்குவதினால், வஸ்துக்கள் நல்லஸ்திதியை அடைகின்றதில்லை, ஆனால்நாம் மேன்மேலும் நல்லஸ்திதியை யடைகிறோம்.

*　　*　　*

எனது சகோதரர்களுக்கு நான் சகாயம் செய்வேனாக! இதுவே எனது இச்சை.

*　　*　　*

ஒரு வஸ்து உண்மையல்லாவிடில், அது இல்லவேயில்லை உண்மையல்லாத வஸ்துவிற்கு இருப்பு இல்லை. ஆச்சரியமான சம்பவங்களும் ஸ்வாபாவிகக் காட்சிகளே. அவைகளெல்லாம் சாஸ்திரீயமானவை தாமென்று நான் அறிகிறேன். அவைகளெல்லாம் எனக்கு ரகஸ்யமானவையல்ல. இரகஸ்ய சபைகளில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அவைகள் நன்மை செய்கின்றனவல்ல. அவைகளால் ஒரு பொழுதும் நன்மையைச் செய்ய முடியாது.

*　　*　　*

நான் சத்தியத்தின் பக்கம் நிற்கிறேன். சத்தியமானது பொய்யுடன் ஒரு பொழுதும் உறவாடாது உலகனைத்தும் எனக்கு விரோதமாயினுங்கூட, முடிவில் சத்தியமே ஜயம் பெறும்.

*　　*　　*

சுகமானது தனது சிரத்தில் துக்கமென்னும் முடியைத் தரித்துக்கொண்டு மனிதனுக்கு முன் நிற்கிறது. சுகத்தை விரும்புகிறவன் துக்கத்தையும் விரும்ப வேண்டும்.

*　　*　　*

சர்வசங்க பரித்தியாகம் செய்தவன் எவனோ, உலகை லட்சியம் செய்யாதவன் எவனோ, காமக்குரோதாதிகளை அடக்கியவன் எவனோ, உபசாந்தத்தை அடைய வேண்டுமென்ற ஆத்திரமிருந்தவன் எவனோ, அவனே ஸ்வதந்திரன், அவனே மகான். ஒருவன் ராஜரீக ஸ்வதந்திரத்தையும் ஜனசமூக ஸ்வதந்திரத்தையும் அடையலாம்; ஆனால் அவன் ஆசைகட்கும் அவாக்கட்கும் அடிமையாயிருப்பானாயின், உண்மையான ஸ்வதந்திரத்தினின்று உண்டாகும் பரிசுத்த சுகத்தை அநுபவிக்க முடியாது.

* * *

பிறர்க்குதவி புரிதலே புண்ணியம். பிறரை இம்சித்தலே பாபம்.

* * *

பலமும் பௌருஷமும் புண்ணியம், பலயீனமும் பயங்காளித்தனமும் பாபம்.

* * *

ஸ்வதந்திரமே புண்ணியம்; பரதந்திரமே பாபம்.

* * *

பிறரை நேசித்தலே புண்ணியம்; பிறரை வெறுத்தலே பாபம்.

* * *

ஈஸ்வரனிடத்திலும் தன்னிடத்திலும் நம்பிக்கையே புண்ணியம்; சந்தேகமே பாபம்.

* * *

ஒன்றென்ற அறிவே புண்ணியம்; பலவற்றைப் பார்த்தலே பாபம்.

* * *

பல்வித சாஸ்திரங்களும் புண்ணியத்தை யடைவதற்குள்ள வழிகளையே காண்பிக்கின்றன.

## புத்தக பரிசோதனை.

ஆத்மஞான தீபிகை:—அநேக வேதாந்த சாஸ்திரங்களின் சாரத்தை யெல்லாம் திரட்டி, இந்நூலின் ஆசிரியராகிய திரு. குருசரணாலயன் என்பவர் ஒருங்கே சேர்த்து இப்புத்தகத்தில்



அநேக அரிய விஷயங்கள் ஆன்றோரது வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு இப்புத்தகத்தில் வெளியாயிருக்கின்றன. ஆனால் சம்வாதமானது திடீரென்று ஒரு விஷயத்திலிருந்து ஒரு விஷயத்திற்குத் தாவிவிடுகிறது என்ற ஒரு குற்றம் மாத்திரம் இப்புத்தகத்தில் நமக்குப் புலப்படுகிறது. ஆனால் ஆசிரியரே, தமது சொந்த சித்தசுத்தியின் நிமித்தம் மனனம் செய்துள்ள விஷயங்களைத் தாம் சிறு துண்டு கடிதங்களிலும் புத்தகத்திலும் எழுதி வைத்திருந்ததாகவும், சில நண்பர்களுடைய வற்புறுத்துகையின் மேல், அதுவும் திருவள்ளுவதேவரது கைங்கர்யத்தின் பொருட்டு, தாம் அச்சிட்டதாவும் கூறி நாம் மேற்கூறிய குறையை நிவிருத்தி செய்கிறார். இப்புத்தகம் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரது கோயிற்றிருப்பணியை முன்னிட்டு அச்சிடப்பட்டிருப்பதாக அறிகிறோம். தமிழ் வேதத்தைத் தரணியோர்க்குத் தந்தருளிய தயாள மூர்த்தியாகிய திருவள்ளுவருடைய க்ஷேத்திரம் மைலாப்பூரில் உள்ளது. ஒரு ஜனசமூகத்திற்கு உயிர் பாஷையாகும். அந்த பாஷை நிலைநிற்கும் வரையில், அந்த ஜன சமூகமும் நிலைநிற்கும். ஆகவே பாஷா ஞானிகளுடைய பெயர்கள் உலகிலுள்ளளவும் அந்த பாஷையும் சிறப்புற்று விளங்கும். தமிழ்ப் பாஷைக்கு என்றும் அழியாத் தன்மையை ஏற்படுத்தியவர் திருவள்ளுவர் என்று மேல்நாட்டாரும் ஒப்புக்கொள்கின்றனர். இவர் வீண் பாஷாஞானி மாத்திரம் அன்று, ஆத்மஞானதீரர். இவருடைய கோயில் மைலாப்பூரில் கவனிப்போர் இன்றிக் கிடக்கின்றது; இவருடைய திருப்பணிகள் சீராய் நடக்குமாறு சில தர்மசித்தமுள்ள பிரபுக்கள் வேண்டிய தொகையளித்திருந்த போதிலும், அப் பணம் முழுதும் செலவாயவழி தெரியவில்லை என்று நாம் அறிகிறோம். அதைப்பற்றிக் கேட்போரையும் காணோம். சுமார் ஒருகோடியே அறுபது லட்சம் ஜனங்கள் தமிழ்ப்பாஷை பேசுவோர் இருந்தும் தமிழ்ப்பாஷைக்குத் தலைவராய திருவள்ளுவருடைய கோயில் கேட்போர், கவனிப்போர் இன்றிக் கிடக்கின்றது என்பது மிகவும் விசனிக்கத் தக்கது. குருசரணாலயன் என்பவர் இப்புத்தகத்தை அச்சிட்டு, அதின் விற்பனைத் தொகையை மேற்படி திருப்பணி விஷயமாகச் செலவிட நிச்சயித்திருப்பது எல்லோராலும் கொண்டாடத்தக்

கது. நம் நேயர்கள் இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பதால் இருவகைப் பிரயோஜனத்தை அடைவார்கள்:—ஒன்று, வேதாந்த விஷயங்கள் மனத்தில் வேரூன்றும்; இரண்டு, திருவள்ளுவருடைய வரப்பிரசாதத்தை அடைவார்கள். இப்புத்தகத்தின் விலை அணா எட்டு. வி. பி. செலவு வேறு. வேண்டுவோர், சென்னை தம்புசெட்டி வீதியில் ரிப்பன் அச்சுயந்திர சாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாம் ஒன்றே:—இப்பெயர் வாய்ந்த புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இது தஞ்சாவூர்த் தமிழ்ப் பண்டிதர் வையை-ஆர். சுப்பிரமணியய்யரால் எழுதப்பட்டுள்ளது. மிகவும் உயர்ந்த விஷயங்கள் அடங்கிய புஸ்தகம் இது என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை. மிகவும் இனிய, எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இதைப்போன்ற புத்தகங்கள் ஏராளமாக வெளிவந்து அவற்றை நம் ஜனசமூகத்தினர் படிப்பாராயின், அப்புத்தகங்கள் நமது பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடப்புத்தகங்களாக வைக்கப்படுமாயின் நமது தேசம் முன்னேற்றத்தில் வருதற்கு வெகு நாட்கள் செல்லா. ஆனால் இப்புத்தகம் ஆங்கில பாஷையிலுள்ள ஏதோ ஒரு புத்தகத்தின் மொழி பெயர்ப்பு என்று நமக்குத் தோன்றுகிறது. அங்ஙனம் மொழிபெயர்ப்பா யிருக்குமாயின், ஆசிரியர் தமது முகவுரையில் அதைத் தெரிவித்தல் உசிதமென்று நாம் நினைக்கிறோம். ஆயினும் நாம உண்மையை அறியோம். எங்ஙனமாயினும், இந்நூல் அதிக சுலப நடையில் அநுபவ ஞானத்தைப் புகட்டுகின்றது. இதன் விலை அணா இரண்டு. வேண்டுவோர், ஸ்ரீபாலசுப்பிரமணியன் கம்பெனி, 32 ஹைரோட் திருவல்லிக்கேணி, சென்னை, என்ற விலாசத்திற்கு எழுதிக் கொள்க.

கோஹ சாஸ்திரம்:—இந்நூல் கொழும்புமா நகரத்தில் உள்ள எம். கங்காப் பிரசாத் பண்டிதர் என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. புருஷர்களும் ஸ்திரீகளும் அவர்களது இல்வாழ்க்கையில் அவசியமாய் அறிந்துகொள்ள வேண்டிய அநேக விஷயங்கள் இப்புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன. சிற்றின்பாநுபவமே ஜன்மப் பிரயோசனம் என்னும் கொள்கையை உடைய ஜனங்கள் இப்புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் இக்கொள்கை



யினால் பல துன்பங்கள் விளைகின்றனவென்றும் அத்துன்பங்களை விலக்கி இல்வாழ்க்கையைச் சுகமே நடாத்தும் விதம் இன்னதென்றும் தெரிந்து கொள்வார்கள். இது எல்லோரும் அவசியம் படிக்கவேண்டிய புஸ்தகம் தான். விலை ரூபா மூன்று. வேண்டுவோர் எம். கங்காப்பிரசாத் பண்டிதர் 98 முதலாவது டிவிஷன், மருதானை, கொழும்பு, என்று விலாசத்திற்கு எழுதிக் கொள்ளவும்.

ருஷிய ஜப்பானிய யுத்தம்:—சில வருஷங்களுக்கு முன் ருஷியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் நடந்த யுத்தத்தின் விவரங்களை ஆதியோடந்தமாக உரைக்கின்றது இந்நூல். இதை எழுதியவர் மேற்சொன்ன கோஹ சாஸ்திரத்தின் ஆசிரியரே யாவர். இரண்டு பாகம்; பாகம் ஒன்றுக்கு விலை அணா 8. வேண்டுவோர் கோஹசாஸ்திரத்தின் ஆசிரியருக்கு எழுதிக் கொள்ளவும்.

கைத்தொழில் போதினி:—இப்புத்தகத்தில் பற்பலவிதக் கைத்தொழில்களைச் செய்யும் வழிகள் அடங்கியிருக்கின்றன. இதை ஆக்கியவரும் மேற்சொன்ன கோஹ சாஸ்திரத்தின் ஆசிரியரே. இப்புத்தகத்தில் எடுத்தவுடனே முதல் பக்கத்தில் "தெய்வத்தானாகாதெனினு முயற்சி மெய்வருத்தக்கூலிதரும்" என்ற திருவள்ளுவருடைய திருக்குறள் தெரிந்தோ, தெரியாமலோ "தெய்வத்தாலாவதெனினு முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்று திருத்தப்பட்டிருக்கிறது. இப்படித் திருத்தியதற்குக் காரணம் விளங்கவில்லை. விலை ரூபா 1-8-0. வேண்டுவோர், மேற்சொன்ன கோஹசாஸ்திரத்தின் ஆசிரியர்க்கே எழுதிக் கொள்ளவும்.

சுந்தரவல்லி:—இப்புத்தகம் வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியாரால் எழுதப்பட்டுள்ளது. இக்காலத்தில் பெரும்பான்மையாக எழுதப்படும் 'நாவல்'களைப்போல, இந்'நாவல்' அந்நிய பாஷைகளிலுள்ள கதைப்புஸ்தகங்களி லிருந்து திருடப்பட்டதன்று; பிச்சை யெடுக்கப்பட்டதன்று. இக்கதையை ஆசிரியர் ஸ்வயமே எழுதியுள்ளார் என்றே நாம் நிச்சயிக்கின்றோம். ஒருவரை யொருவர் காதலித்திருந்த பாலசுந்தரமும் சுந்தரவல்லியும் விதிவசத்தால் பிரிந்து வருந்தும்படி நேர்வதும் பின்னர் பாலசுந்தரம் அவளையே மணப்பதும் அவனுடைய மித்திரனாகிய குப்புசாமி செய்யும் மித்திரத் துரோகமும் தாசிப் பெண் மதனசேனை

கற்பழியாது காத்துக்கொண்டு உத்தம ஸ்திரீயாக மாறிவிடுவதும் கடைசியில் குப்புசாமிக்கே நேரிட்ட கதியும் வெகு நன்றாயிருக்கிறது. கதையும் சாதாரணப் போக்காக எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய இனிய நடையில் வரையப்பட்டிருக்கிறது. விலை அணா எட்டு. வேண்டுவோர் ஸ்ரீபாலசுப்பிரமணியன் கம்பெனி 32, ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

வீணா:—இது ஸ்ரீமான் தி. சா, வேணுநாதம் என்பவர் இயற்றிய ஒரு சிறு 'நாவல்'. உயர்ந்த காகிதத்தில் பி. ஆர். ராமய்யர் அண்ட் கம்பனியாரால் வெகு அழகாக அச்சிடப்பட்டு நேர்த்தியாகக் கட்டப்பட்டுள்ளது. விலை அணா நான்கு. வேண்டுவோர் T. S. வேணுநாதம், "ஆர்ட்னன்ஸ்வ்யூ" 22, சட்டன் பஜார், பார்க்டவுன், சென்னை, என்ற விலாசத்திற்கு எழுதவும்.

அகமே புறம்:—இப்பெயர் கொண்ட புத்தகம் ஒன்று ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களால் இயற்றப் பட்டுள்ளது. இவர் ராஜ நிந்தனைக் குற்றம் சாட்டப்பட்டுச் சில காலம் சிறைவாசம் செய்தவர் என்றும் உத்தம தேசாபிமானி யென்றும் இந்தியர்களில் அறியாதார் எவரும் இரார். இவர் தமிழ்ப் பாஷையில் அதிக பாண்டித்திய முள்ளவர் என்பதையும் எவரும் அறிவார். இவர் சிறைவாச காலத்தில் ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கிலேய மனோதத்துவ சாஸ்திரியி னுடைய நூல் ஒன்றை மொழிபெயர்த்து மனம் போல வாழ்வு என்ற பெயருடன் வெளிப்படுத்தினார். இப்பொழுது வெளி வந்திருக்கும் அகமே புறம் என்னும் இப்புத்தகமும் மேற் சொன்ன ஜேம்ஸ் ஆலன் என்பவருடைய ஒரு புத்தகத்தின் மொழி பெயர்ப்பு என்றும் இஃதும் சிறைவாச காலத்தில் எழுதப்பட்டதே யென்றும் அறிகிறோம். ஜேம்ஸ் ஆலன் என்னும் மனோ தத்துவ சாஸ்திரி உள்ளி னின்றுமே உலகம் விரிகின்றது என்னும் உண்மையை எவ்வளவு சுலபமாயும் சாதாரணமாயும் போதிக்க முடியுமோ அவ்வளவு சுலபமாயும் சாதாரணமாயும் போதித்துள்ளார். ஆதலால் இப்பொழுது நம் பார்வைக்கு வந்திருக்கும் நூலினது சிறப்பு எவரும் எடுத்துக் கூறாமலே விளங்கும். இப்புத்தகத்தில் அடங்கிய சில விஷயங்கள் நமது பத்திரிகையில் சென்ற வருஷத்தில் வெளி வந்துள்ளனவாம். சுலபமான செந்தமிழில் எழுதப் பெற்று, ஜீவிதகால மர்மத்தை வெளி



ப்படுத்துகின்றது இந்நூல். துக்கமற்று வாழவிரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம் இது. மனிதன் சுகத்தையடைய விரும்பினால் தன்னகத்தைத் தானே சீர் தூக்கிப் பார்த்துச் சீர்திருத்திச் சுகமடைய வேண்டுமே யொழிய, தன்னகத்தைத் தவிரப் பிறவற்றைச் சீர்திருத்துவதினால் ஒரு பொழுதும் சுகம் அடையவே முடியாது என்று வெகு தெளிவாகக் கூறுகின்ற இந்நூலை வாசிப்பவர்கள் தாம் அநுபவிக்கும் சுகதுக்கங்கட்குத் தாமே காரணம் என்று அறிந்து கொள்வார்கள். உயர்ந்த காகிதத்தில் அழகாய் அச்சிடப் பெற்று டபிள் க்ரௌன் ஸைஸ் அளவில் 66 பக்கங்களுடன், காகிதம் கட்டடம் முதலியன வெல்லாம் சுதேசியமாகவே கொண்டு வெளிவந்திருக்கும் இந்நூலின் விலை அணா எட்டு. தபாற் கூலி வேறு. வேண்டுவோர், நமது ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## நிகழ் காலக் குறிப்புகள்.

நமது ராஜதானியின் பிரதான நகரமாகிய இச்சென்னையில் நடந்த நியாய விரோதமான செய்கை மிகவும் ஆச்சரியமாயும் பயங்கரமாயும் இருக்கிறது. ஒரு பெருந்த குடும்பத்தைச் சேர்ந்தவரும் பல வருஷங்களாக ராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகத்தை வெகு கௌரவமாய் வகித்து வந்த ஒருவருடைய புத்திருமான டி. ஜெயராம் என்பவர் ஒரு சிறிய போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டருடைய விரோதத்தினால் பைத்தியக்காரனென மாஜிஸ்டிரேட்டால் தீர்மானிக்கப்பட்டுப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் ஒரு மாத காலம் அடைக்கப்பட் டிருந்தாராம். கவர்ன்மெண்டார் இதைப் பற்றிக் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

* * *

திருப்பத்தூர் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் ஸைக்ஸ் துரையை இன்னும் அந்த டிவிஷன் பொது ஜனங்கள் விட்டபாடில்லை; கவர்ன்மெண்டாரும் உறுதியா யிருக்கின்றனர். பார்லிமெண்டிலும் பிரஸ்தாபம் நடந்து விட்டது; சட்ட சபை அங்கத்தினர்களும் சும்மா யிருக்கின்றார்க ளில்லை. ஆகவே எல்லோரும் சுறுசுறுப்பாக விருக்கின்றனர். இவற்றிற் கெல்லாம் காரணம் ஸைக்ஸ் துரையினுடைய மிதமிஞ்சிய சுறு சுறுப்பு ஸ்வபாவமே என்று நினைக்கிறோம்.

# "பெண்கள் படிப்பது சம்பிரதாயமே"

பெண்கள் படிப்பது சம்பிரதாய மல்ல வென்றும், அவர்கள் சமையல் வேலை ஒன்றைத் தவிர மற்ற வேலைகள் செய்யத் தகுதியற்றவர்கள் என்றும் அவர்கள் போக வஸ்துவே எனக் கருதியுள்ளார் சிலரே யாயினும், காலம் போகப் போக புருஷர்களைப் போல் பெண்களும் கல்விபெற ஏற்றவர்களே யென்று ஒப்புக்கொள்வார்க ளென்பதிற் றடையில்லை.

பெண்கள் படித்தலினால் நல்லறிவுள்ளவர்களாயும், சன்மார்க்க கிருத்தியங்களில் செல்லத் துணிந்தவர்களாயு மிருப்பார்கள். சிறு குழந்தைகளின் போஷணையில் தாய் மிக்க அறிவுள்ளவளாக விளங்க வேண்டியது மன்றி, தகப்பனிடம் அதிகமாக நெருங்காத குழந்தைகளைத் தாய் எவ்வாறு நடத்துகிறாளோ, அவ்வாறே அதன் நடையுடை பாவனையும் பின்பற்றுமாதலாலும் "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டில்" என்ற விதிப்படி இளமைப் பருவத்தில் குழந்தைகளைக் காப்பாற்றி அறிவு தருதற்குத் தாய்மார்களே ஏற்றவர்கள்.

ஆகையால் விவேகமானது தாயினிடத்தி லிருந்தால் சிசுகட்கிருக்குமே யொழிய தகப்பன் அறிவைப் பிள்ளைக்கு ஏற்ற இடமில்லை. இத்தகைய குணங்களை யுடைத்தா யிருக்க பெண்கள் கல்விப் பொருளை யடைய வேண்டுவதோர் முக்கியமான விஷயம். பெண்கள் படிப்பது புராதன வழக்கமல்ல வென்று நன்குணரார் விளம்புவரே யொழிய, முற்காலத்துப் பதிவிரதைகளின் சரித்திமுணர்ந்த அறிவின் மிக்கோர் புகலத் துணியார்; பெண்கள் வாசித்து எவ்வளவோ பெருமையாயும் அறிவீனர்கட்கோர் வழி காட்டியாயு மிருக்கிறார்கள். அநேக ராஜராஜாக்களும் தங்கள் தங்கள் பெண்களுக்கு ஏராளமான கல்விப் பயிற்சி செய்வித்து பெற்ற நற்புகழை சரிதைகளில் வாசித்தறியார் யார்? பெண்கள் கல்வி கற்பதினால் தங்கள் கற்புக்கோர் துணைவியாகவும் அவர்கள் தீய வழியினின்று மீளவும் மக்களை நன்னெறியில் நடத்தவும் கொழுநனுக்கு ஆபத்து வந்தகாலத்தில் அறிவு சொல்லும் மந்திரியாயு மிருப்பார்கள். பெண்கள் வாசித்து உத்தியோகம் செய்யாவிட்டாலும் சன்மார்க்க வழிகளில் செல்ல விரும்புவர். கல்விக்காசிரிய வாணியும் இன்னம் வாசித்துக் கொண்டிருப்பதாக சொல்லி யிருக்கிறது. சகல கலைக்கும் காரணமா யிருக்கின்ற சாஸ்வதியே பெண்ணானால் ஏன் பெண் பாலர்க்குக்கல்வி யாகாதெனப் புகன்றனரோ எனக்கே மிக்க ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

திரு. க. ம. துரைசாமி.

ஞானபாநு.

VOL - 2. | JUNE 1914. | No - 3.
தொகுதி - 2. | ஆனந்த௵ ஆனி௴ | பகுதி - 3.

## விக்கிரகாராதனை வேண்டியதே.

தற்காலத்தில் மேல் நாட்டுப் பிரபாவத்தில் வீழ்ந்து மயங்கிக் கிடக்கும் சில ஜனங்கள் தமது தேசத்தின் மீதும் மதத்தின் மீதும் உண்மையான அன்பு செலுத்தியோ அல்லது அன்பு செலுத்து பவர்களாகப் பாவித்துக்கொண்டோ, மேல் நாடுகளைப் போல நமது பக்த ஜனபூமியாகிய பாரதவர்ஷமும் வெளிப் பகட்டில் முதன்மை பெறவேண்டு மென்ற எண்ணத்துடன் நமது ஆசார நடையுடை பாவனைகளையும் ஸ்ருதி ஸ்மிருதி தத்துவங்களையும் கூடச் சீர்திருத்திப் பேருபகாரம் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். மனுஷ்யனுக்கும் ஈஸ்வரனுக்கு முள்ள சம்பந்த வியவகாரங்களைப் பற்றி விவரிப்பது ஸ்ருதி யெனப்படும். மனிதர்களுக்குள்ளேயே அந்நியோந்நியம் உள்ள சம்பந்த வியவகாரங்களைப் பற்றி விவரிப்பது ஸ்மிருதி யெனப் படும். சீர்திருத்தக்காரர்களின் பிரேரேபணைகளாகிய ஆக்ஞைகளுள் விக்கிரகாராதனை கூடாது என்பதும் ஒன்று. இச்சீர்திருத்தக் காரர்கள் ஜன சமுகத்தின் அஸ்திவாரத்தையே, மனிதனுடைய பிராணாதாரத்தையே இடித்துத் தூளாக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

* • *

மனுஷ்யனது வல்லமைக்குட்பட்டு ஜடம் மாத்திரமாய் இருக்கின்ற பஞ்ச பூதங்களில் ஏதேனும் ஒன்றினால் ஆக்கப்பெற்று மனிதனால் கையாளப் பட்டு வருகின்ற சிலைகள், பிரதிமைகள், பிம்பங்களாதிய இவை யெல்லாம் எங்ஙனம் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத பரவஸ்து வாகிய ஈஸ்வரனெனப் படலாம்? சர்வ வியாபகமாய் இருக்கின்ற சாட்சாத் பரமேஸ்வரனை எங்ஙனம் ஒரு சிலைக்குள்ளோ, ஒரு பிரதிமைக் குள்ளோ, ஒரு பிம்பத்திற்குள்ளோ கட்டுப் படுத்திவைக்க முடியும்? அங்ஙனம் கட்டுப் படுத்தி விட்டால் சர்வவியாபக மென்ற லட்சணத்திற்குக் குறைவு நேரிட்டு விடுமன்றோ? நாமரூபாதீதமாகிய

ஈஸ்வரனை நாமரூபத்திற் கட்டுப் படுத்தியா பூஜிப்பது? ஆதலால் விக்கிரகாராதனை மிருகப் பிராயத்திலுள்ள காட்டுமிராண்டிகளின் மூடக் கொள்கைகளில் ஒன்று, என்று தற்கால மேதாவிகளிற் பலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

* * *

இந்த விக்கிரகம் செய்யப் பட்டிருக்கிற கல்லானது இந்தப் பாறையிலிருந்து வெட்டப் பட்டது தானே, இன்ன பெயருடைய கல்தச்சனால் செதுக்கப் பட்டது தானே, என்று விக்கிரகமாகிய காரியத்திற்கு நிமித்த உபாதான காரணங்களைக் கண்டு பிடித்து விக்கிரகாராதனையை இகழ்ந்து கூறும் சகோதரர்கள் சிறிது யோசனை செய்வார்களாக. காரிய மகிமையைக் காரணத்தினின்றும் ஊகித்துணர்வோர் காரணத்திற்கும் காரணமாய் உள்ள மூல காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டாமோ? விக்கிரகம் கல்லிலிருந்து உண்டாயிற்று, கல் மண்ணிலிருந்து உண்டாயிற்று, மண் ஜலத்திலிருந்து உண்டாயிற்று, ஜலம் அக்கினியிலிருந்தும், அக்கினி வாயுவிலிருந்தும், வாயு ஆகாசத்திலிருந்தும் இங்ஙனமே நாம் அடி வரையில் ஆராய்ந்து பார்த்தால் எல்லாம் ஏகவஸ்துவாயுள்ள ஈஸ்வர சைதந்நியத்திலிருந்தே உற்பத்தியாயுள்ளன என்று ஏற்படும். ஆகையால் காரணத்தினால் காரியம் பெருமையடைவதாயின், விக்கிரகத்திற்கும் ஈஸ்வரனே காரணமாதலால், விக்கிரகாராதனை செய்யத் தக்கதே.

* * *

இன்னும் மனிதன் அநாதி யவித்தியாவாசனையால் ஸ்வஸ்ரூபப்பிரக்ஞையை இழந்து நாநாவிதநாமரூபப்பிரபஞ்சத்தில் நாமரூப வஸ்துக் களினிடத்திலேயே பழகியிருத்தலால், அவனது மனமானது நாமத்தையும் ரூபத்தையுமேநாடும். நாமரூப மிழந்து நிற்கும் தருணம் எதுவோ அதுவே முக்தி நிலையெனப் படும். நாமரூப விசித்திர விநோதப் பிரபஞ்சமானது, உலையில் வைத்து உருக்கிய பொன்னாபரணத்தைப் போல, சின் மாத்திரமாகக்கரைந்து பிரம்மவஸ்துவாக மாறிவிடும்; இதுவே முக்தி நிலை. ஆதலால் மனிதனுடைய மனமானது முக்தி நிலையை அடைந்தாலொழிய, விவித நாமரூப விநோதமான பிரபஞ்சத்தை மறந்து நின்றால் ஒழிய, எப்பொழுதும் அநந்தம் கோடி ஜன்மங்களாகப் பழகி வந்த வாசனா பலத்தால் நாமத்திலும் ரூபத்திலுமே செல்லும்;



நாமரூப மின்றேல், மனமென்பதேது? ஆதலால் விக்கிரகாராதனை அவசியமாம்.

* * *

தவிர, நாம் குழந்தைகளா யிருந்த பொழுது ஒவ்வொரு அட்சரத்தையும் பன்முறையும் வரைந்து கற்றுக் கொண்டோம். பின்னர் இரண்டு மூன்று எழுத்துக் களாகச் சேர்த்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொண்டோம். பின் பெரிய வாக்கியங்களைப் படிக்கக் கற்றுக் கொண்டோம். ஆதியில் அர்த்தமே யறியாத அட்சரங்களை ஒவ்வொன்றாகப் படிக்கக் கற்றுக் கொண்டோம். கல்வி முதிர்ந்த பின்னர், வாக்கியங்களை அவசரம் அவசரமாகப் படித்துக் கொண்டு போகுங் காலத்தில் அர்த்தமே யில்லாத அட்சரங்களெல்லாம் சேர்ந்து அர்த்த புஷ்டி மிகுந்து விளங்குகின்றன. உதாரணமாக, 'நாய்' என்ற பதத்தை நாம் படிக்கும் காலத்தில் 'நா' என்ற அர்த்தம் விளங்காத அட்சரத்தின் சொரூபமும் அர்த்தம் விளங்காத அட்சரமாகிற யகார ஒற்றின் சொரூபமும் நமது மனத்தில் பதிகின்றதில்லை. ஆனால் 'நாய்' என்ற பதத்தை நாம் படிக்கும் பொழுது, நான்கு கால்களுடனும் ஒரு வாலுடனும் விஸ்வாச குணம் மிகுந்து விளங்கும் நாயாகிற மிருகத்தினுடைய சொரூபமே மனத்தில் பதிகின்றது. அதுபோலவே, ஜடம்மாத்திரமாயுள்ள கல்லிலிருந்து விக்கிரகங்கள் ஆக்கப் பட்டபோதிலும், விக்கிரகத்தை ஆராதனை செய்யுங் கால், நமக்கு அந்த விக்கிரகம் கல் என்ற நினைப்பே உண்டாவதில்லை. ஆனால் அகண்ட சச்சிதானந்த சொரூப சாட்சாத் கார கல்யாணகுணங்கள் மிகுந்த ஈஸ்வரனையே நாம் நினைக்கிறோம். ஆதலில் விக்கிரகாராதனை அவசியமாம்.

* * *

இப்பொழுது விக்கிரகாராதனை செய்யத் தக்கது என்று ஒப்புக் கொண்ட போதிலும், க்ஷேத்திரங்களில் உள்ள விக்கிரகங்களைத் தான் பூஜிக்கவேண்டுமென்பது என்ன? ரஸ்தாக்களில் ஒவ்வொருமைல் தூரத்திற் கோரிடத்தில் மைல் கற்கள் நாட்டப் பட்டிருக்கின்றனவே, அவைகளும் ஏகதேசம் சிவலிங்கங்களைப் போலவே யிருக்கின்றன. ஏன் அவற்றைப் பூஜிக்கக்கூடாது? என்று ஒரு கேள்வி உண்டாகிறது. அப்படியன்று, க்ஷேத்திரங்கள் அவசியமே, அங்குதான் நாம் பூஜிக்கவேண்டும். க்ஷேத்திரங்களிலுள்ள விக்கிரகங்கள் ஞானபக்த சிரோன்மணிகளால்தபோ

மந்திரதியான பூர்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. வெகு ஜனங்கள் பரிசுத்த ஹிருதயத்துடனும் ஈஸ்வரதியான சிந்தையுடனும் அங்கு கூடுவதாலும் ஒரு விநாடி நேரமேனும் உலகத்தை மறந்து ஈஸ்வர ஞாபகமாயிருப்பதாலும் அவர்களுடைய ஒருங்கு சேர்ந்த தியானமானது அங்குள்ள விக்கிரகத்தினிடத்தில் சைதன்னிய சொரூபமாய்ப் பிரகாசிக்கிறது. இதனாலேயே வரப்பிரசாத சக்திகளும் விளங்குகின்றன. ஆகலால் க்ஷேத்திரயாத்திரை அவசியமாம்.

• • •

நமது வீடுகளிலேயே விக்கிரகங்களை வைத்துப் பூஜைசெய்தல் கூடாதோ? க்ஷேத்திரங்கட்குச் செல்லுதல் அவசியமோ? என்றால், க்ஷேத்திரங்கள் அவசியம் என்றே ஏற்படுகின்றது.

* • *

ஈஸ்வரன் நம்மிடத்தினின்றும் வேறுபட்டு இருக்கிறார் என்ற எண்ணம் நமது மனத்தில் பதிந்துள்ள வரையில், ஈஸ்வரன் நம்முள்ளேயே இருக்கிறார், நாமே சிவம், சிவமே நாம் என்ற திடஞானானுபவம் நமக்குண்டாகும் வரையில் நாம் க்ஷேத்திரங்கட்குச் செல்லுதல் அவசியமாம். நாம் நமது ஊரில் ஒவ்வொரு தெருவாய்ச் சுற்றிப் பார்த்துக் கொண்டு "இது யார் வீடு" "இது யார்வீடு" என்று ஒவ்வொரு வீடாய்க் கேட்டுவந்தால் இது என் வீடு, இது அவர் வீடு என்று ஒவ்வொருவரும் அவரவர்களுடைய அகங்காரம் நிறைந்த அற்ப ஸ்வதந்திரத்தை ஸ்தாபிப்பார்களே யொழிய ஒருவராவது இது ஈஸ்வரனுடைய கிரகம் என்று சொல்லார்கள். ஆகையால் அகங்காரக் கிரந்தியானது மனிதனுடைய மனத்தினின்றும் நீங்கும் வரையில், க்ஷேத்திரயாத்திரை அவசியமாம்.

## சத்தியமார்க்கம்.

(முன்தொடர்ச்சி.)

ஸ்ரீயான் சிவசுப்பிரமணியம் அவர்கள் மொழி பெயர்த்தது.

உலகினர் 'கடமை, கடமை' என்று கதறுகின்றனர். கடமை ஏன் உனக்கு எஜமானனாயிருத்தல் வேண்டும்? எவருக்கும் பாத்தியதைப் பட்டிராதே. உனக்கு நீயே எஜமானன். பயப்படாதே.



பரிசுத்தம் மிகுந்த ஆத்மார்த்தமான கர்மங்களைச்செய்து கொண்டிரு. நினது அவயவங்களுக்கு யாதொரு தொழிலுமின்றி நினது அறையில் நீ சாவகாசமாய் வீற்றிருக்கும் பொழுது, நினது தெய்வீகத்துவத்தில் சுகத்தை அடைந்துகொள். அப்பொழுது எல்லாப் பற்றுதல்களையும் அகற்றிவிடு. பற்றுதல் அவசியமென்று உலகினர் கூறுகின்றனர். நாம் உலகில் வேலைசெய்வதற்கு பலனைப்பற்றியுள்ள கவனம் அவசியம் என்று கூறுகின்றனர். இது தப்பிதமான கொள்கை. பற்றுதல்களினின்றும், ஆசைகளினின்றும் பிரிந்து நில்; அதே நிமிஷத்தில் நீ ஸ்வதந்திரனென்றும் எவர்க்கும் பாத்தியதைப் பட்டவனல்லவென்றும் நீ உணர்ந்து கொள்வாய். நினது புஜபாரமாகிய சுமைகளெல்லாம் நின்னாலேயே வைத்துக் கொள்ளப்பட்டன. உனது புஜங்களினின்றும் ஆசைகளாகிற சுமைகளை எறிந்துவிடு. இச்சுமைகளினின்றும் உன்னை விடுவிப்பதற்கு வேறொருவரும் அவசியம் இல்லை. நினது புஜங்களின் மேல் சுமையில்லையென்றும் நினது அன்பிற்குரிய வஸ்துக்கள் உன்னுடனேயே இருக்கிறதாகவும் உள்ள இவ்வேதாந்தம் நினது அனுபத்தில் கொண்டுவரப் படுமாயின், நினது சரீரம் ஞானசொரூபமே யாய்விடும். அறிவுக்கெல்லாம் ஆதியறிவா யிருக்கப்பட்ட நீ அறிவின் பொருட்டு எவரைப் பிரார்த்தித்தல் வேண்டும்? இதுதான் ரகஸ்யம். நீ ஸ்வதந்திரன். உன்னை பந்தத்திற்குள்ளாக்குபவர் எவர்? உன்னை அடிமைப் படுத்துபவர் எவர்? உனது ஆசைகளைத் தவிற வேறொன்றுமில்லை. உலக வஸ்யமெல்லாம், உலக சக்திகளெல்லாம் உன்னிடத்தினின்றும் பரிணமிக்கின்றன. உலக சித்திகளெல்லாம் உனது அடிமைகளாகும். இவ்வாசைகளை அகற்றி விட்டால், இந்நிமிஷமே நீ ஸ்வதந்திரனாய்விட்டால், ஆ! உனக்குண்டாகும் அபரிமிதமான ஆனந்தத்தை இவ்வளவென்று உரைக்கவல்லவர் எவர்? பாத்தியதையில்லை, பயமில்லை, ஏன் நீ பயப்படவேண்டும்? அடைய விரும்புகிற வஸ்து இழக்கப்படுமென்று பயப்படுகிறாய். அடைய விரும்புகிற நற்பெயரின் மேலுள்ள பற்றுதலினால் மனிதர்களுக்கும் அவர்களது பரிகாசத்திற்கும் பயப்படுகிறாய். ஆசைகளின் பலனே பயம்; ஆசைகளின் பலனே கவலை. தலைநோவும் மார்பு நோவும் ஆசைகளின் பலனே. அரசன் அல்லது ஜனபிரதிநிதியின் முன்பாகச்சென்று கெஞ்சிப்பல்லை யிளிக்கின்றாய், ஏனெனில், அவர்களுடைய தயவை விரும்புகிறாய். இவ்வாசைகளினின்றும்

நீ உன்னை விடுவித்துக்கொண்டு விட்டால், நீயே ராஜாதி ராஜன், சர்வேஸ்வரன். ஆ! அந்த நிமிஷத்தில் எத்தகைய ஸ்வதந்திரத்தையும் ஆனந்தத்தையும் நீ அடைவாய். சத்தியமார்க்க மானது செய்து முடிக்கப்பட்டதல்ல; இனிமேல் செய்யப் படவேண்டியதுமல்ல. உனது ஆசைகளினால் நீயே செய்து கொண்டிருக்கிற பந்தத்தையும் அடிமைத் தனத்தையும் இல்லாமல் செய்துகொள்ள நீயே சிரத்தையுடன் பிரயத்தனம் செய்யவேண்டு மென்பதே இப்பொழுது இராமன் கூறுவது.

ஓம் தத் ஸத்

## அகஸ்தீன் என்னும் மகாத்மாவின் விண்ணப்பம்.

பிரம்ஹஸ்ரீ வ. வே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

மொழிபெயர்த்தது.

நின்னை அறியாதிருக்க அறிவதை விட அறிய அறியாதிருப்பது மேல் என்றிருப்பானாக.

* * *

என் ஈச, என் பிரபு, என் சைசவத்தில் எனக்கு ஜீவனை அருளினாய், நீயே அருளிய உடலில் இந்திரியங்களை நாட்டினாய். உடலின் உறுப்புகளை உறுதி செய்தாய். அங்கங்களுக்கு அழகு கொடுத்தாய். பிராண வியாபாரங்களையும் அவ்வுடலில் நிலை நிறுத்தினாய். இந்த உபகாரங்களுக்காக நின்னை பஜிக்கவும் "கரவாமல் மனதை உள்ளபடியே நின்னிடம் காட்டவும், ஸர்வோந்நதமான நின் நாமத்தைப் பாடி ஏத்தவும்" கட்டளையிடுகிறாய். ஏனெனில் நீ ஈசனன்றோ? இதைத் தவிர வேறொன்றும் செய்யாவிடினும் கூட நீ சர்வசக்தன், நன்மையன், வேறுயார் இது செய்ய சக்தர்? நின் ஏகத்தன்மை தான் சகலத்துக்கும் ஆதாரம். நின் சௌந்தரியம் தான் உலகத்தின் அழகுக்குக் காரணம். நின் ஆக்கினை தான் சகலத்தையும் நியமிக்கிறது.

இந்த சைசவத்தைப் பற்றி எனக்கு யாதொன்றும் ஞாபகத்துக்கு வரவில்லை. மற்றையவர்கள் சொல்வதினின்றும் நான் பார்க்கும் குழந்தைகளின் நடத்தைகளினின்றும் நான் அதை



உத்தேசமாகத் தான் கொள்ளவேண்டியதாக இருக்கிறது. அந்த உத்தேசம் சரியாகவே இருக்கலாம். ஆனால் அந்த பருவத்தை என் வாழ்நாளின் ஒரு பாகமாகக் கணக்கிட எனக்கு மனம்வரவில்லை. ஏனெனின் அன்னையின் கருப்பத்தில் கழித்த நாள்கள் போலவே அதுவும் மறப்பு எனும் இருளால் எனக்குத் தோற்றாமல் மூடியிருக்கிறது. நான் உண்டாயதும் தீவினையில், அன்னைவயிற்றில் தரித்ததுவும் பாவத்திலே, என்னும் வாக்கியம் சத்தியமானால், என் ஈச, நின்னை வணங்கிக் கேட்பேன், நான் பாவரகிதனாவது எங்கே? எந்த நேரத்திலே? ஆனால் அந்தக் காலத்தை இதோ தள்ளிவிடுகிறேன். எப்பொழுது அதன் சின்னம் கூட எனக்கு ஞாபகத்தில் வரவில்லையோ, அதற்கும் எனக்கும் இப்பொழுது என்ன சம்பந்தம்?

சைசவத்தைத் தாண்டிப் பிள்ளைப் பருவத்துக்கு வந்தேன். இல்லை, அதுதான் சைசவத்தைத் தள்ளிவிட்டு என்னை அடைந்தது. சைசவமும் போய்விடவில்லை. எங்கு போயிற்று, போனால்?- அதைக் காணோம். வாயில்லாத சிசுவாக இருந்தது போய் வாயுள்ள பையனாகி விட்டேன். இது எனக்கு ஞாபகமிருக்கிறது. எப்படிப் பேசக்கற்றேன் என்று மற்றோரிடம் பார்த்தும்தெரிந்து கொண்டிருக்கிறேன். என் மூத்தவர்கள் எனக்கு வார்த்தைகளை கொஞ்ச நாளைக் கெல்லாம் வேறு கல்விகளைக் கற்பித்தது போல ஒரு ஒழுங்கு ஏற்படுத்திக் கொண்டு அதின்படி கற்பிக்க வில்லை, நானே என் இஷ்டத்தை அடையும் பொருட்டு கூச்சல் போட்டும், தித்துச் சொற்கள் பேசியும் அவயவங்களை அசக்கியும், என் எண்ணங்களை வெளியிட முயலுவேன். ஆனால்என் மனதிலுள்ளது அனைத்தையும் இஷ்டமானவர்களிடம் சொல்ல முடியாமையால் என் ஈசனாகிற நீ எனக்கு அருளியிருக்கும் அறிவினால் மனதுக்குள்ளேயே சப்தங்களைச் சொல்லிச் சொல்லிப்பார்ப்பேன். ஒரு பதார்த்தத்தின் பேரைச் சொல்லிச்சொன்னவர்கள் அதன் பக்கம் பார்த்தால், அந்தப் பதார்த்தத்திற்கு அதுதான் பெயர் என்று தெரிந்து ஞாபகத்தில் வைத்துக் கொள்வேன். அவர்கள் இதைத் தான் குறித்தார்கள், வேறொன்றையல்ல என்பது அவர்களுடைய சரீரத்தின் அசைவினின்றே தெரியும். முகத்தின் வேறுபாடுகளும், கண்ணின் நோக்கமும், அவயவங்களின் ஆட்டமும் மனம் விரும்பித் தொடருவதையும் பெறுவதையும் தள்ளுவதையும் நீங்குவதையும் அவ்வப்படியே காட்டும் குரல் பேத

மும் ஆகிய இவை யெல்லாம் சேர்ந்து சகலஜாதிகளுக்கும் பொதுவான சுபாவிகபாஷை என்று சொல்லுவது பொருந்துமல்லவா? இவ்விதம் பல பல வாக்கியங்களில் வரும் மொழிகள் என்காதில் அடிக்கடி படப்பட, கொஞ்சம் கொஞ்சமாய் அவற்றின் பொருள்களைத் தெரிந்து கொண்டேன். இந்தக் குறிப்புத் தொனிகள் என் நாவில் பழக்கமாகவே அவைகளைக் கொண்டு என் இஷ்டங்களை வெளியிடுவேன். இவ்விதம் நமது எண்ணங்களுக்கு அறிகுறியான இந்த ஒலிகளை மற்றவர்களிடம் செய்தும் அவர்கள் செப்பக் கேட்டும் மனித ஜாதியின் வியவகாரங்களாகிற சண்டமாருதத்தில் அலைக்கப்படும் கடலுக்குள் ஆழமாகப் பிரவேசித்து விட்டேன். ஆனால் இன்னும் தாய்தந்தையர் மூத்தோர் வார்த்தைகளுக்குக் கட்டுப் பட்டே தானிருந்தேன்.

மனிதர்களின் புகழ்ச்சியையும் நிலையில்லாத செல்வத்தையும் பெற்று இந்த உலகத்தில் நான் மேன்மை யடைவதற்கு வாக்குசாதுர்யம் எனக்கு உண்டாக்கிவைக்க வேண்டுமென்ற கருத்துடன், என்னைப் பள்ளிக்கூடத்தில் வைத்தார்கள். அந்தக்காலத்தில் உபாத்தியாயர்களுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்று எனக்கு அவர்கள் சொன்னபோது, ஏ, ஈச, என் ஈசனே, எத்தனை கஷ்டங்கள் எத்தனை நிஷ்டூரங்கள் பட்டேன்? கல்வியில் என்ன பலனுண்டு என்று எனக்குத் தெரியாது. ஆனால் படிப்பில் சோம்பினாலோ, ஐயோ பாவம், என்னைப் பிடித்துக் கொன்று விடுவார்கள்! எங்கள் முன்னோர்கள் இந்த வழக்கத்தையே நியாயம் தான் என்று நிர்ணயித் திருக்கிறார்கள். தாங்களும் இந்தக் கஷ்டமான மார்க்கத்தில் சென்று பின் வருபவர்களுக்கும் அதே மார்க்கத்தை ஏற்படுத்தி ஆதமின் புத்திரர்கள் * தலையில் இயல்பாகவே உள்ள கஷ்டங்கள் போதாவென்று இன்னும் அதிகமான கஷ்டங்களையும் துக்கங்களையும் சுமத்தியிருக்கிறார்கள். ஆனால், பிரபு, நின்னை மனிதர்கள் பிரார்த்தித்துக் கொள்வதைக் கண்டு நாங்களும் (சக்தியானுசாரம்) நின்னை இந்திரியாதீதனானு

* யஹூதபுராணங்களில் ஆதம் என்பவன் தான் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் என்றும் மனித ஜாதி முழுவதும் அவனுடைய புத்திரர்கள் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த கர்த்தாவான அகஸ்தீன் கிறிஸ்தவரான படியால் அந்தப் புராணங்களை ஒப்புக் கொண்டவர்.



லும் எங்கள் பிரார்த்தனைகளைக் கேட்டுக் கிருபைசெய்யக் கூடிய ஒரு மஹத் என்று நினைக்கக்கற்றுக் கொண்டோம். அப்படியே பையற் பருவத்தில் உன் துணையும் கதியுமான நின்னைப் பஜிக்க ஆரம்பித்தேன். என் நாவின் தளைகளை அறுத்து, சிறியவனானாலும் பெரியதோர் சிரத்தை விசுவாசத்துடன் என்னைப் பள்ளிக்கூடத்தில் அடிக்காதிருக்க வேண்டும் என்று நின்னைப்பிரார்த்தித்தேன். நான் பேதமைக்கு இலக்காகாதிருக்கவேண்டுமென்று நீ என் பிரார்த்தனைகளுக்குக் காது கொடாமற் போகவே, பெரியவர்களெல்லாம், ஏன், என் தாய் தந்தையர் கூட அந்தக்காலத்தில் எனக்குப் பெரிய தீங்காகக் காணப் பட்ட என்மேலுள்ள தடிப்புகளைப் பார்த்து நகைப்புக் காட்டுவார்கள். ஆனால் அவர்கள் எனக்குத் தீங்கு நினைத்தவர்கள் அல்ல.

ஆனால் விதித்த பாடங்களைப் படிக்காததும் எழுதாததும் கற்காததும் எங்கள் பேரில் குற்றமே! ஏனெனில், ஏ பிரபு, எங்களுக்கு ஞாபக சக்தியாவது புத்தியாவது குறைந்தில்லை. எங்கள் வயதிற்குத் தக்க படியாக நீ எங்களுக்கு அருளியிருந்தாய். ஆனால் எங்கள் ருசிமுழுவதும் விளையாட்டில் தான். இதற்காக எங்களைத் தண்டிப்பார்கள்; ஆனால் தண்டிப்பவர்களோ அவர்களும் எங்களைப்போல வீண்காரியத்தில்கருத்துள்ளவர்கள் தான். ஆனால் மூத்தவர்களுடைய வீண் காரியத்துக்கு "அலுவல்" என்று பெயர். பையன்கள் காரியமும் அதுவாகவே தானிருக்க அவர்களை மாத்திரம் பெரியவர்கள் தண்டிக்கிறார்கள். அவர்கள் இருதிறத்தார்பேரிலும் இரங்குவோர் யாருமில்லை. நான் மனிதனாகும் காலத்தில் அதையும் விடக் கேவலமான விளையாட்டுகள் விளையாடுவதற்காகத்தான் கற்கும் கல்வியைக் கல்லாது பந்து விளையாடினேன் என்று என்னை அடிப்பது நியாயம்என்று அறிவறிந்தவர்கள் சொல்லுவார்களா? என்னை அடிப்பவன் தான் எப்படியோ? தன் போன்ற உபாத்தியாயனிடம் ஏதாவது ஒரு சில்லறைவியவகாரத்தில் தோற்று விட்டால் பந்தாட்டத்தில் ஒரு தோழனிடம் தோற்றுவிட்டபோது எனக்கு இருக்கும் அருசையையும் எரிச்சலையும்விட அதிகமான அருசையையும் எரிச்சலும் அவனுக்குப் பிறந்து விடும்.

(இன்னும் வரும்).

## ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகளின் கடிதம்.

### பிரம்ஹஸ்ரீ. ராமச் சந்திர சாஸ்திரிகள் மொழிபெயர்த்தது.

முன் தொடர்ச்சி.

ஒரு நாள் சாயந்திரம் புதுச்சேரியில் நாம் ஒரு பண்டிதருடன் கடல்யாத்திரை விஷயத்தைப் பற்றித் தர்க்கம் செய்து கொண்டிருந்ததை "பி"யும் "ஜி"யும் ஞாபகப் படுத்திக் கொள்ளலாம். அவருடைய (பண்டிதருடைய) மிருகத்தனமான சைகைகளையும் "ஒருகாலும் கூடாது" என்றவார்த்தைகளையும் நான் எப்பொழுதும் ஞாபகப் படுத்திக் கொள்வேன்! இந்தியாவானது உலகத்தின் மிகவும் சிறியதோர் பாகமே யென்பதையும் இந்தியாதேசமாகிய அழகிய பூமியில் வளர்ந்து கொண்டு ஒரு வரையொருவர் இம்சை செய்வதற்கே முயற்சி செய்து கொண்டிருக்கிற முப்பது கோடிகிலப் புழுக்களையும் உலகம் முழுவதும் நிந்தனையுடன் பார்க்கிறதென்பதையும் அவர்கள் அறியார்கள். இந்த நிலைமை அகற்றப் படவேண்டும்; எப்படியென்றால், மதத்தை அழித்து விடுவதனாலன்று, ஆனால் ஹிந்து மதத்தின் உயர்ந்த உபதேசங்களைப்பின் பற்றுவதாலும் ஹிந்து மதத்தின் நியாயப் பெருக்கமாகிய புத்த மதத்தின் அற்புதமான ஜீவகாருண்ணியக் கொள்கையை ஹிந்து மதத்துடன் சேர்த்துக் கொள்வதாலுமே முடியும்.

ஒரு லட்சம் புருஷர்களும் ஸ்திரீகளும், பரிசுத்தமாகிய ஆத்திரத்தினால், தகிக்கப் பட்டு, ஈஸ்வரனிடத்தில் என்றும் அழியா நம்பிக்கையினால் சட்டப்பெற்று, எளியோர், வீழ்ந்தோர் துன்புறுவோர் ஆகிய இவர்கள் மீது ஏற்படும் இரக்கத்தினால் சிம்ஹத்தினது போன்ற தைரியத்தை அடையப் பெற்று மோட்சோபதேசத்தை, உதவியென்ற உபதேசத்தை, ஜனசமுகம் மேன்மையடைய வேண்டு மென்ற உபதேசத்தை, சமத்துவமாகிற உபதேசத்தை, போதனை செய்து தேசம் முழுதும் செல்லல் வேண்டும்.

உலகில் ஒரு மதமும் மானிடவர்க்கத்தின் பெருமையை ஹிந்து மதத்தைப் போல் அவ்வளவு உயர்ந்த ஸ்தாயியில் போதிப்பதில்லை; உலகில் ஒரு மதமும் தாழ்ந்தார், எளியோர் இவர்களுடைய கழுத்தில் ஹிந்து மதத்தைப் போல ஏறிமிதிப்பதில்லை.



மதத்தினிடத்தில் குற்றம் இல்லையென்று ஈஸ்வரன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆனால் ஹிந்து மதத்திலுள்ள பாரிசிகளும் ஸாட்யூசிகளுமாகிய வீண் வெளி வேஷக்காரர்களே பாரமார்த்திகம்,வியாவகாரிகம் என்ற கொள்கைகளின் வடிவமாய்க் கொடுமை செய்வதற்கு எல்லா வித யந்திரங்களையும் சிருஷ்டித்தனர்.

ஏக்கமுற வேண்டாம்; "வேலை செய்வதற்கே உனக்குப் பாத்தியதை யுண்டு, பலனுக்கல்ல" என்று பகவான் கீதையில் மொழிந்துள்ளதை ஞாபகப் படுத்திக் கொள். எனது பையனே, உனது கச்சைகளை இருக்கிக்கட்டு. இதற்காக ஈஸ்வரனால் நான் அழைக்கப் பட்டிருக்கிறேன். துன்பங்களும் ஆபத்துக்களும் நிறைந்த ஒரு ஜீவிதகாலம் முழுவதும் இழுக்கப் பட்டிருக்கிறேன். மிகநெருங்கியவர்களும் அரியவர்களும் அநேகமாய்ப் பட்டினியால் மரணமடையப் பார்த்திருக்கிறேன். எவர்கள் ஏளனம் செய்து நிந்திக்கின்றனரோ, அந்த மனிதர்கள் மீது யான் இரக்கம் செலுத்துவதற்காகப் பரிகாசப் படுத்தப் பட்டிருக்கின்றேன். அவநம்பிக்கைக்குட்பட் டிருக்கின்றேன், கஷ்டப் பட்டிருக்கிறேன். நல்லது, எனது பையனே! இது துன்பப் பள்ளிக்கூடம், இன்னும் இது மகாத்மாக்களும் தீர்க்கதரிசிகளும் கருணையை, பொறுமையை பிரபஞ்சமே நமது கால்களின் அடியில் துகள் துகளாகப் போயினும் சிறிதும் சலிக்காத, இரும்பினால் ஆக்கப் பட்டது போன்ற திடசித்தத்தை விருத்தி பண்ணிக் கொள் வதற்கு ஒரு பள்ளிக்கூடம். நான் அவர்களுக்கு இரங்குகிறேன். அது அவர்களுடைய குற்றம் அன்று. அவர்கள் ஜனசமுகத்தில் உயர்ந்தவர்களாயும் பெரியவர்களாயும் இருந்த போதிலும், குழந்தைகளே, உண்மையிற் குழந்தைகளே. அவர்களுடைய கண்கள் சில கஜம் தூரம் சுற்றளவுக்கு மேலே ஒன்றையும் பார்க்கின்றன வல்ல. தினசரி வேலை உண்ணுதல், குடித்தல், சம்பாதித்தல், சந்ததியை விருத்தி செய்தல் ஆகிய இவைகளே. சுகமாயிருக்கின்ற சிறு ஜீவராசிகள். அவர்கள் அப்புறம் ஒன்றையும் அறியார்கள். அவர்களுடைய நித்திரைக்கு ஒரு பொழுதும் பங்கம் நேரிடுவதில்லை. நூற்றுக்கணக்கான வருஷங்களாய் ஏற்பட்டுள்ள இம்சையின் பயனாய் இந்திய ஆகாயத்தை நிரப்பியிருக்கின்ற தாழ்மை, தரித்திரம் துன்பம், துக்கம் இவற்றால் அவர்களுடைய நேர்த்தியான அழகிய ஜீவிதகாலங்கள் இடையொன்று அசைக்கப்பட்டதில்லை. ஈஸ்வ

பிம்பத்தைச் சுமை சுமக்கும் ஒரு மிருகமாகச்செய்திருக்கிற தெய்வீகமாதாவின் சொரூபத்தைக் குழந்தைகளைப் பெறுவதற்குஒரு அடிமையாக்கி யிருக்கிற ஜீவித காலத்தையேஒருசாபமாக்கியிருக்கிற மானஸீகக் கொடுமை, ஒழுக்கத்திற் கொடுமை, பஹிரங்கக் கொடுமை ஆதியகாலங்களை அவர்கள் கனவு கூடக்காண்பதில்லை. ஆனால் கண்டு, உணர்ந்து தங்களுடைய ஹிருதயங்களில் இரத்த நீரைச் சொரிந்து பரிதபிப்பவர்கள், இதற்கு ஓர் மாற்று இருக்கிறதென்று நினைப்பவர்கள், பிரயாணத்தியாகம், செய்தாயினும் எவ்விதத்திலும் இந்த மாற்றையுபயோகப்படுத்த தயாராயிருப்பவர்கள் வேறு சிலர் இருக்கின்றனர், ''அவர்களாலேயே மோட்ச உலகம் ஆக்கப் பட்டுள்ளது. எனது நண்பர்காள்! ஒவ்வொரு நிமிஷமும் தங்களுடைய சிறு விஷயத்தைக் கக்கத்தயாராயிருக்கிற இந்தநிந்தனைக் கிடமாய அற்பப்புழுக்களுடைய வீண்பேச்சுகட்கு அவர்கள் தங்களுடைய உயரத்திலிருந்து கீழே கவனம்செலுத்துவதற்கு அவர்கட்கு நேரம் இல்லாமற் போவது ஸ்வபாவமல்லவா?

தனவந்தர்கள் என்று சொல்லப் படுபவர்களை நம்ப வேண்டாம். அவர்கள் ஜீவித்தலிலும் மரித்தவர்களாயிருக் கின்றனர். வணக்கமுள்ளவர்கள், தாழ்மையுள்ளவர்கள், ஆனால் விசுவாசமுள்ளவர்களுமான உங்களிடத்தில் நம்பிக்கை யிருக்கிறது. ஈஸ்வரனிடத்தில் நம்பிக்கை வையுங்கள். தந்திரம் உதவாது. அதற்கு மதிப்பேயில்லை. துன்புறுவார்களிடத்தில் இரக்கமுற்று ஈஸ்வரனிடத்தில் உதவியை நாடுங்கள். அது வரத்தான் வேண்டும். எனது ஹிருதயத்தில் இச்சுமை யுடனும் எனது மூளையில் இவ்வெண்ணத்துடனும் பன்னிரண்டுவருஷங்களாக யாத்திரை செய்திருக்கிறேன். தனவந்தர்கள், உயர்ந்தோர் என்று சொல்லப் படுபவருடைய வீடுகட்கு வாசலுக்குவாசலாகச் சென்றிருக் கின்றேன். இரத்தம் பொழிகின்ற ஹிருதயத்துடன் உதவியை நாடி இந்த அற்புதமான பூமிக்கு உலகிற் பாதியைக் கடந்து வந்திருக்கின்றேன். ஈஸ்வரன் எல்லாம் வல்லவன். அவர் எனக்கு உதவி செய்வாரென்று எனக்குத் தெரியும் நான் இப்பூமியில் குளிரினாலாவது பசியினாலாவது மரிக்கலாம்.



## ஸகோதர பாவம்

[பிரஹ்மஸ்ரீ கே. ரேங்கசாமி அய்யங்காரவர்கள் எழுதியது.]

ஸர்வ ப்ராணிகளுக்கும் பரமபிதா ஒருவரே யென்றும் ஆதலால் ஸர்வ ஜந்துக்களும் ஸகோதரர்கள் என்றும் தம் தம் மதங்கள் கூறுவதாக எல்லா மதஸ்தர்களும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் மனித வர்க்கத்தின் சரித்திரத்தை ஆராயப்புகின் மேற்சொன்னதின் உண்மையானது பூரணமாய் எக்காலத்திலாவது அனுஷ்டிக்கப்பட்டு வந்ததாகத் தெரியவில்லை. அதைப் பூரணமாய் அனுஷ்டித்த மகான்கள் அபூர்வமாய் இங்குமங்கும் காணப்பட்டார்கள் என்று மாத்திரமே சொல்லலாம். ''அறஞ் செய விரும்பு'' ''ஆறுவது சினம்'' என்பவைகளை எத்தனை தூரம் நாம் அனுஷ்டிக்கிறோமோ அத்தனை தான் ஈஸ்வரன் ஸர்வபிதா என்பதிலும். அவருடைய குழந்தைகளாகிய மன்னுயிரெல்லாம் நமது ஸகோதரர்கள் என்பதில் நமக்குள்ள நம்பிக்கையும். மனப்பூர்த்தியாய் ஈஸ்வரன் நமது பிதா என்பதில் நமக்கு முழு நம்பிக்கையுண்டா? நாமெல்லோரும் ஒருவர்க்கொருவர் ஸகோதரர் என்பதில் தான் நமக்கு விசுவாஸம் உண்டோ? இல்லை. நாமெல்லோரும் அநாகரீகமானவர்கள். கொலைக் களத்துக்க்கு கொண்டு போகப்படும் ஒருவனை நம் ஸகோதரன் என்று நாம் தழுவுவோமா? முன்பின்னறியாத ஒருவனை நம் ஸகோதரன் என்று விளிப்போமா? எந்த வஸ்துவானது நம்முடைய ஆத்மாவோ அதே தான் பாபியினுடைய ஆத்மா, அதே தான் பரமஹம்ஸனுடைய ஆத்மா என்று நாம் என்றைக்கு உணர்கிறோமோ அன்றைக்கல்லவா ஸகோதரபாவம் நமக்கு ஏற்படும். அச்சகோதர பாவம் நமக்கு ஏற்பட்டாலல்லது கடவுள் ஸர்வ பிதா என்று நாம் சொல்லிக் கொள்வதெல்லாம் பெரும்பொய் தானே? அதாவது நாமெல்லோரும் பெரும் நாஸ்திகர்கள் என்றுசொல்லிக் கொள்வதில் தப்புண்டோ? கடவுளிடத்தில் பித்ருபாவம் ஏற்பட்டவனுக்கு மன்னுயிர்களிடத்தில் ப்ராத்ருபாவம் ஏற்படாமலிருக்க முடியாது. பின்னது ஏற்படாத வரையில் நிர்ப்பயமாய் முன்னது இல்லவே இல்லை யென்று சொல்ல என்னதடை? ஒரே சூரியன் புண்ணியாத்மா பாபி இருவருக்கும் ஸமமாய் ஒளிகொடுப்பது போலவே ஒரே நிரந்தர வஸ்துவானது கொலைபாதகனிடத்தும், பாபியி

னிடத்தும், புண்ணியாத்மா விடத்தும் அவதார புருஷர்களிடத்திலும் துலங்கிக்கொண்டே யிருக்கிறது. அந்த வஸ்துவைத்தான் 'ஆத்மன்' என்கிறோம். ஆத்மா ஸர்வவ்யாபி யென்றும் எல்லா வஸ்துக்களிடத்திலும் துலங்குவது ஒரே ஆத்மா தான் என்னும் நம்பிக்கையும் அதற்கனு குணமான அனுஷ்டானமும் நமக்கென்று ஏற்படுமோ அன்றுதான் நாம் ஆஸ்திகர்ளாவோம், நாகரீகமுள்ளவர்கள் என்றழைக்கப்படப் பாத்ரர்கள் ஆவோம். அதுவரையில் நாம் நிரீச்வர வாதிகளும் பொய்யர்களுமே. இது ஸத்தியம்,

## "மறை"

(ஸ்ரீ ஆர். எஸ். கங்கா ஜடேச சர்மா அவர்களெழுதியது.)

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப் பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." (திருக்குறள்.)

இப்பறந்த உலகிலுள்ள எல்லாக் கொள்கையினர்க்கும் "மறை"களே உறுதியான பற்று. கற்பனைகளும், அன்பும், மறைகளினின்றே கிடைப்பவை. ஒவ்வொரு கொள்கையினரும் தத்தம் நூற்களைக்கடவுள் மொழிந்ததாய்க் கருதுகின்றனர். இவற்றினுண்மையை யறிய விரும்பி ஆராயுங்கால், கடவுளே நேரில் வந்து மனிதர்களைக் கண்டு கூறியதல்லவென்றும், (கொள்கைகள்) மனிதரிடத்திலிருந்தே தோன்றியுள்ளவை யென்றும், தெளிவாய் அறியலாம். ஒவ்வொரு கொள்கையும், அருட்கண்ணுடையோரும், கடவுளடியார்களுமான பெரியோர்களாலும், கடவுளின் பிறப்பாகக் கருதப்பட்டுள்ள அறிஞர்களாலும் உண்டாக்கப்பட்டதாகத் தெளிவாய்த் தெரிகின்றது.

அவர்களது மொழியைக் கொண்டுதான் கடவுளிடத்து நமக்கு அன்பு பிறக்கின்றது. அவர்களது மேலான செய்கையினால் தான் பிறர் இவர்களது மொழியை விலக்க வியலாது போயிருக்கின்றது. மனிதரின் உள்ளத்தில் சிறுவயதில் தென்பில்லாமையினால் தாயின் காத்தைப்பற்றி நிற்றலொப்பத் தன்னையறிதற்கு உதவியாக ஓர் மனிதனையாவது ஓர் நூலையாவது விரும்பவேண்டியிருக்கின்றது. தென்புண்டாகும் வரை இவையின்றி யமையாதது.



ஆனால் எப்பொழுதும் சிறுவராகவே யிருக்க யாரேனும் விரும்புவார்களோ? எவரும் விரும்பார்! அன்பே கொள்கையின் முதற்படியாகும், அறிதல் அதன் முடிவும் வெறுப்புமாம். நமது அன்பிற்கு வழிகாட்டியாயுள்ளோர் அறிஞர்; அவர்கள் நாம் அறிந்திராத பல பெரும்பொருட் கருத்துக்களை நேரில் கண்டறிந்தவர்களென்று நாம் நம்புகிறோம். நாமும் முயற்சியினால் அவ்வாறே யடையலாமென்றும் கருதலாம். ஒரு கொள்கையின் உண்மையான இருப்பிடம் ஒரு மனிதனோ ஒரு நூலோ அல்லவென்றும், "உற்று நோக்கி நேரில் காண்பதே" என்றும் உணரவேண்டிய தின்றியமையாதது.

"முறை முறையாய்ந்து முயன்றிலவாகில்
இறை யிறையார்க்கு மிருக்கவரிது
மறையது காரண மற்றொன்றுமில்லை
பறை யறையாது பணிந்து முடியே." (திருமந்திரம்)

வடமொழியில் "வேதம்" என்றும், தென் மொழியில் "மறை" யென்றும் கூறும் இம்மொழியிலேயே அதன் பொருள் வெளியாகும். "பைபிள்" என்றும், "கொரான்" என்றும் சொல்வதெல்லாம் "நூல்" என்றுதான் பொருள்படும். ஆனால் (வேதம் அல்லது.) "மறை' யென்பது நூலல்ல, அறிவு" என்று பொருள் படுகின்றது.

மறை எழுதப்படாததும், முதலற்றதும், அறிவே யுருவாக வுடையதுமாகும். (ஹிந்து மதம்.) இந்தியர்கொள்கை யாதொரு நூலையும் துணையாக வுடையதில்லை என்றும் உலகபற்றுக்களனைத்தையுந் துறந்து மறுமையில் (மோக்ஷ) வீடடைவதற்கான வழியையே நோக்கமாக வுடையதென்றும், அறியவேண்டியது. பெரியோர்கள் அவர்களதறிவுருவான உள்ளத்திலிருந்து தான் மறைகளைக் கண்டுபிடித்தனர், மறைகளினிருப்பிடம் கடவுள். (கடவுளிருப்பிடம் அறிஞர் (அன்பர் பெரியோர்) உள்ளம்.) பெரியோர்கள் அனைத்தையும் கரைகண்டவர்கள். அனைத்தையுங் கடந்தவர்கள். ஆதலின் அவர்கள் காதில் கடவுளின் மொழி ஒலிக்கின்றது.

இதுபற்றித்தான் "வேதங்களைச் சுருதி' யென்று கூறுகின்றனர். ஆன்றோர் காதினில் ஒலிப்பதே மறை. அவர்கள் உள்ளத்தில்

தோன்றுவதே மறை, அதுவே கடவுள். அறிஞர் வாய்மொழி ஒற்றுமையையே குறிக்கின்றது. கடவுளும், மறையும், ஒன்றென்பது போலவே (அநாதியும்,) முதலில்லாததுமாய் இருக்கின்றனர். மறையையும் அதன் பொருளையும் அறிய விரும்பினால் கடவுளெதிரிற் சென்று அவரது திருவுருவைக் கண்டு மொழிகளைக்கேட்டுக் கொள்ள வேண்டும்.

"முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே ! முடிவிலா முதலே!"
"குறைவிலா நிறைவே ! கோதிலாவமுதே!
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே!"

(மாணிக்கவாசகர்.)

என்றபடி ஸர்வவல்லமை வாய்ந்த கடவுளைக் காண்டற்கு நம்மாலியலுமோ வெனின், முயற்சித்தால் கடவுளின் மொழி அறிஞர்கள் செவியினிற் கேட்ப தொப்ப நமது செவியிலும் ஒலிக்கும். அவர்கள் முயற்சி நிறை வெய்திக் கடவுளைக்காணவும் அவர் மொழியைக் கேட்கவு மியலுமெனில் நமது முயற்சி மட்டும் என் கை கூடாது ? பொறுமையுடன் முயலவேண்டும். இது முடியாதெனில்(மோக்ஷம்) வீடு கிட்டாதென்பது "மறை"களின் துணிவு. ஆனால் இம்முயற்சி "யோகம்" ஒன்றினால் மட்டுமே ஈடேறக் கூடியது. யோகம் என்றால் மனதைக் கடவுளின் கண் ஒன்று சேர்த்து நிறுத்தல் என்பதாம்.

ஒழுங்குப் படி மனதைக் கடவுளிடத்து நிறுத்தும் பொழுது (வேதார்த்தம்) மறைகளின் பொருள் நமக்குத் தெற்றெனவிளங்கிவிடும். மறைகளின் உண்மைப் பொருளையுற்றுணர இஃதொன்றன்றி வேறு வழியில்லை.

"ஞானமார்க்கம்" - அறிவையடையும் வழி-செல்லற்கரியதாயும், பல துன்பங்களுடைய தாயும் மிகவும் வருந்திச் சென்றடையத் தக்கதாயுமுள்ளது. இக்காலத்து மனிதரிற் பெரும்பாலார் இந்த நிலையில்லா உலகஸுகபோகங்களையே துணையாகக் கொண்டு துன்புற்று உழல விரும்புகின்றவர்களேயன்றி உண்மையான தெளிந்த அறிவை யடைந்து இன்புற விரும்புகிறவர்கள் மிகவும் அரிதாயிருக்கின்றனர்.



விட்டிற் பூச்சியானது விளக்கில் வீழ்ந்து மடிதலொப்ப மனிதர்களும் இகலோக ஸுகத்தையே நிலை (சாஸ்வதம்) என்றெண்ணி அலக்கணுற்று மாள்வதழகோ! அறிவையடையவேண்டியவர்கள் முதலிற் செய்யவேண்டிய வேலை இவ்வுலக இன்பங்களை நாடிச் செல்லும் மனதைத் திருப்புவதே.

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்!
அகத்திற் கண் கொண்டு காண்பதே யானந்தம்"
"சாத்திர மோதுஞ் சதிர்களை விட்டு நீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவிப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி யகல விட்டோட்டுமே"

(திருமந்திரம்)

அவாவை யகற்றினால் நெய்விட்ட செந்தீப் போல அறிவு ஒளி வீசும். ஆனால் அறிவு வழி செல்லக் கடவுள் அருள் வேண்டும். நிலையில்லாமற் றத்தளித்துத்தடுமாறும் மனதை ஒரு நிலைப் படுத்தி அடக்கி நிறுத்தி (மனதிற்றோன்றும் தீமைகளையகற்றி நிர்மலமான மனதுடன்.)

"உயர்வற வுயர் நல முடையவன் எவனவன்
மயர்வற மதி நல மருளினன் எவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" (நம்மாழ்வார்)

என்றபடி என்றும் புதியவனான (ப்ரணவஸ்வரூப) எல்லாம் வல்ல இறைவனிடம் மனதைச் செலுத்திப் போற்றவேண்டும். வாயாற் கூறுவதிலும் மனத்தால் நினைத்தல் தியானித்தல் எவ்வளவோ மேலானது. இதன் அனுபவம் அனைத்திலும் மேலானதும் (மோக்ஷ) வீடளிப் பதுமாகும். பிறவிப் பயனுமிதுவே.

மறையினுட் பொருளையோர்ந்து மயக்கமற்றோங்கி வாழ்க.

சுபம்.

## ஜோடிமோதிரம்.

### III

பிரஹ்மஸ்ரீ ராமசாமி அய்யங்காரவர்கள் எழுதியது.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு பின்னும் ஒருவருஷம் சென்று விட்டது. இன்னும் புரந்தரன் சிங்களத்திலிருந்து வருகிற சேதி கிடைக்கவேயில்லை. ஆனால் ஹிரண்மயி ஹிருதயத்தில் அவனுடைய மூர்த்தியைப்பற்றித் தான் தியானம். புரந்தரன் தன்னை மறக்கமுடியவில்லை என்று அவளுக்கு நன்றாகப்புலப்பட்டது; இல்லாவிட்டால் ஏற்கெனவே திரும்பி வந்திருப்பானே. இப்படி இரண்டுவருஷம் சென்றது. திடீரென்று ஒருநாள் தனதாஸர் சொன்னார் "எல்லாரும் புறப்படுங்கள், காசிக்குப் போகவேணும். குருவினிடமிருந்து அவர்சிஷ்யன் வந்திருக்கிறான். நாம் அங்கே வருவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார். அங்கே ஹிரண்மயிக்குக் கலியாணம் நடக்கும். அங்கே அவர் ஒருவரன் திட்டம் பண்ணியிருக்கிறார்".

தனதாஸர் மனைவியையும் பெண்ணையும் அழைத்துக் கொண்டு காசிக்குப் புறப்பட்டார். யதா காலத்தில் காசிவந்து சேர்ந்த பிறகு, அவர் குரு ஆனந்த ஸ்வாமி அவரைவந்து பார்த்தார். கலியாண நாள் நிச்சயம் பண்ணி சாஸ்திரோக்தமான காரியங்களைச் செய்யச் சொல்லிவிட்டு அவர்போய் விட்டார்.

சாஸ்திரப்படி கலியாணகாரியங்கள் நடந்து வந்தனவே தவிர வேறொரு விமரிசையுமில்லை. தனதாஸரோடு கூடவந்தவர்களைத் தவிர வேறே யாருக்கும் இந்தக் கலியாணம் நடப்பதாகவே தெரியாது. கேவலம் சாஸ்திரானுஷ்டானத்துக்கு வேண்டியவளவு தான் பிரயத்தனங்கள் நடந்தன.

கலியாண நாள் அன்றைக்கு சூரியாஸ்தமனமாய் விட்டது. ராத்திரி பத்தரை நாழிகைக்கு லக்கினம். அப்படியிருந்தும் வீட்டில் ஏற்கெனவே யார் இருந்தார்களோ அவர்களைத்தவிர வேற்று மனிதரே கிடையாது. அக்கம் பக்கத்து வீட்டுக்காரர் யாரும் வரவில்லை. இதுவரையிலும் "யார்மாப்பிள்ளை? எங்கே யிருந்து வருகிறான்" என்ற விஷயம் தனதாஸரைத் தவிர வேறே யாருக்



குந் தெரியாது. ஆனால் இது மாத்திரம் எல்லாருக்குந் தெரியும். "எங்கே ஆனந்த ஸ்வாமி வரன் நிச்சயம் பண்ணுகிறாரோ அது கெட்டவனாய் இருக்காது" என்று. அவர் ஏன் மாப்பிள்ளையின் வரலாறு வெளிப்படுத்தவில்லை என்பது அவருக்குத் தான் தெரியும். அவர் மனதை யார் அறிகிறது? வீட்டுக்கு ஒரு "வாத்தியார்" வர ஏற்பாடு செய்து விட்டு ஆனந்தஸ்வாமி தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தார். "ஸ்திரீகள் கட்டிலே" ஹிரண்மயி மாத்திரம் சிங்காரம் செய்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். வேறெங்கேயும் யாரு மில்லை. ஹிரண்மயி மனதிற்குள்ளேயே நினைத்துக் கொண்டாள். இது "என்னடியம்மா ரஹஸியம்! ஆனால் புரந்தரனோடு கலியாணம் நடக்காமற் போனால் அப்புறம் யாரோடுதான் கலியாணம் நடக்கட்டுமே-அவன் என்புருஷன் இல்லை".

இந்த ஸமயத்தில் தனதாஸர் தன் பெண்ணைக் கூப்பிட அங்கே வந்தார். ஆனால் அவளைக் கலியாண மேடைக்கு அழைத்துப் போவதற்கு முன் வஸ்திரத்தினால் இரு கண்களையும் இறுகக்கட்டிவிட்டார். ஹிரண்மயிசொன்னாள் "இது என்ன, அப்பா" தனதாஸர் "குருவினுடைய உத்திரவு. நான் சொல்லுகிற படி செய். மந்திரங்களை யெல்லாம் மனதிற்குள்ளேயே சொல்லிக்கொள்." என்றார். இதைக்கேட்டு ஹிரண்மயி ஒருவார்த்தையும் சொல்லவில்லை. தனதாஸர் பெண்ணைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு பாணிக்கிரஹணம் பண்ணுகிற இடத்துக்குச் சென்றார்.

ஹிரண்மயி அங்கே வந்து சேர்ந்தாள். அவளுக்கெல்லாம் "குருட்டு" இருளாக இருந்தது. ஒன்றும் தெரியவில்லை. இருந்தாலும் தன்னைப்போல வரனுடைய கண்களும் கட்டப் பட்டன என்று தெரிந்து கொண்டாள். இந்த மாதிரி கலியாணம் நடந்தது. அந்த இடத்தில் குரு வாத்தியார் தனதாஸரைத்தவிர வேறு யாருமில்லை. தம்பதிகள் இருவரும் யாரையும் பார்க்க முடியவில்லை. கலியாணத்தில் சுபதிருஷ்டி கூட இல்லை!

பாணிக்கிரஹணமானதும் ஆனந்த ஸ்வாமி தம்பதிகளுக்குப் பின்வருமாறு சொன்னார். "உங்களுக்குக்கலியாணமாய் விட்டது. ஆனால் நீங்கள் ஒருவரையொருவர் பார்க்கவில்லை. இந்தக்கலியாணத்தின் முக்கிய கருத்து "கன்யாப்பெண்" என்ற சொல்லைப் போக்குவதுதான். இந்த ஜன்மத்தில் எப்பொழுதாவது நீங்கள்

ஒருவரையொருவர் சந்திப்பீர்களா என்ன என்று என்றால் சொல்ல முடியாது. சந்தித்தால் அப்பொழுது ஒருவரை யொருவர் அடையாளம் கண்டு பிடிக்க முடியாது. அடையாளத்துக்கு நான் ஒரு உபாயம் செய்திருக்கிறேன். இதோ என்கையில் இரண்டு மோதிரங்கள் இருக்கின்றன. இரண்டும் ஒரே "தினுசு". மோதிரம் எந்தக் கல்லால் செய்யப் பட்டதோ அது கிடைப்பது அபூர்வம். மேலும் மோதிரங்களுக்குள்ளே ஒரு மயில் செதுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று பிள்ளைக்கும் ஒன்று பெண்ணுக்கும் கொடுக்கிறேன். இந்தமாதிரி மோதிரம் அன்னியர்கள் யாருக்கும் கிடையாது. முக்கியமாக இந்த மயிலுக்குப் போலி செய்யமுடியாது. இது என் கைவேலை. பெண் எப்பொழுதாவது இந்த மாதிரி மோதிரம் எந்தப் புருஷன் கையிலாவது கண்டால் அவன் தன் புருஷன் என்று தெரிந்து கொள்ளவும். அல்லது பிள்ளை எப்பொழுதாவது இந்த மாதிமோதிரம் எந்த ஸ்திரீயின் கையிலாவது பார்த்தால் உடனே அவள் தன் பத்தினி என்று தெரிந்து கொள்ளவும். உங்களில் யாரும் இந்த மோதிரத்தைப்போக்கடிக்கக்கூடாது. சாப்பாட்டுக் கஷ்டம் வந்தாலும் விற்கக்கூடாது. இன்று முதல் ஐந்து வருஷகாலம் இந்த மோதிரங்கள் போட்டுக் கொள்ளக் கூடாது. இன்றைக்கு ஆனி மாசம் சுக்லபக்ஷம் பஞசமி ராத்திரி பத்தரை நாழிகை. இதற்குப்பிறகு ஐந்தாவது ஆனி மாசம் சுக்கில பக்ஷம் பஞ்சமி ராத்திரி பத்தரை நாழிகை வரையிலும் இவைகளைப் போட்டுக் கொள்ளக் கூடாது என்பது என் கட்டளை. என் கட்டளையை மீறி நடந்தால் ஒரு பெரிய விபத்து ஸம்பவிக்கும்.

இப்படிச் சொல்லி முடித்து விட்டு ஆனந்தஸ்வாமி விடை பெற்றுச் சென்றார். தனதாஸர் பெண்ணின் கண் கட்டை அவிழ்த்தார். ஹிரண்மயி கண்ணைத்திறந்து பார்த்தாள். வீட்டிலே தகப்பனார் வாத்தியார் இரண்டு பேர்கள் தான் இருந்தார்கள். அவள் புருஷன் எங்கேயு மில்லை. அவள் கலியாண ராத்திரி முழுவதும் தனியாகக் கழித்தாள்.

## நிகழ்காலக்குறிப்புகள்.

பங்களூரில் ஆரணி ஜாகீர்தார் தமது மோட்டார் வண்டியை அதிக வேகமாகச் செலுத்தி எதிரில்வந்ததோர் மாட்டு வண்டியை த்வம்சம்செய்து, வண்டிக்காரனையும் அதிவேகமாக அந்தக லோகத்திற்கு அனுப்பினார். இதுபற்றி அவர்பேரில் கேஸ் நடந்தது. கோர்ட்டார் அவருக்கு ரூபா 750 அபராதம் விதித்திருக்கின்றனர். ஐயோ! பாவம்! அந்த ஏழைவண்டிக்காரனுடைய ஜீவன் 750 ரூபா மதிப்புத்தான் பெறுமோ? சிலமாதங்கட்கு முன் இந்த ஆரணி ஜாகீர்தாரை கிப்ஸன் என்னும் ஓர் ஐரோப்பியன் ஸெண்ட்ரல்ஸ்டேஷன் ப்ளாட்பாரத்தில் நூற்றுக்கணக்கான ஜனங்கட்கு மத்தியில் அவயவங்கள் வீங்க அறைந்துவிட்டான். காரணம், இவர் தமது மோட்டார்வண்டியை வாயுவேகம் மனோவேகமாகச் செலுத்திவந்தார் என்பதே. இவர் அந்த ஐரோப்பியன்மீது மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பிரயாது செய்தார். அந்த ஐரோப்பியனுக்கு ஒரு சிறு தொகை அபராதம் விதிக்கப்பட்டது. கோர்ட்டில் நியாயங் கிடைக்கவில்லையென்று எல்லோரும் கூக்குரலிட்டனர். இன்னும் இந்த ஜாகிர்தார் அந்த ஐரோப்பியன்மீது நஷ்ட வழக்கும் தொடுத்திருக்கிறார். வண்டிக்காரன் இறந்ததற்குக் காரணம் ஜாகீர்தாராயில்லாமல், வேறொரு சாதாரண வண்டிக்காரனாயிருந்தால், அவன் ஆயுசுபரியந்தம் அந்தமான்தீவில் வசிக்க நேரிட்டிருக்குமல்லவா? இப்பொழுது ஜாகிர்தாரரை உதைத்த கிப்ஸன் 'நான் பொதுஜன நன்மையை உத்தேசித்து அவரை உதைத்தேன்' என்று சொன்ன வாக்கியத்தின் அர்த்தம் நன்கு விளங்குகிறது. எளிய ஜனங்களை லட்சியம் செய்யாத அகந்தை மிகுந்த ஜாகிர்தார்கள் உள்ளவரையில் பொது ஜன நன்மையை உத்தேசித்து உதையும் அடியும் கொடுக்கத் தயாராயிருக்கும் அநாகரிக கிப்ஸன் களும் உலகில் இருக்கத்தான் இருப்பார்கள்.

* * *

அயர்லாந்து ஸ்வராஜிய மசோதா பார்லிமெண்டில் காமன் சபையில் மூன்றுதரம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. பிரபுக்களுடைய சபையிலும் ஒருதரம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. கூடிய சீக்கிரத்தில் அயர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் அளிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அல்ஸ்டர் பிரதேசத்து ஜனங்களோ ஒரேபிடிவாதமாய் அயர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கலாகாதென்று அவர்களாலான மட்டும் ஒருகை பார்ப்பதாகத் தீர்மானித்திருக்கின்றனர். அல்ஸ்டர் தேசத்து ஜனத்தலைவராகிய ஸர் எட்வர்ட் கார்ஸன் என்பவர் பிரசங்கங்கள்புரிவதுபோல, அவ்வளவு கடுமையாகப் பேசுவதற்கு நமது இந்திய ஜனங்கள் ஸ்வப்பனத்திலும் கருதார்கள். அப்படியிருந்தும் இந்தியர்கள் இராஜத் துரோகிகள்!

* * *

டில்லியில் நமது சுதேச அரசர்களுடைய புத்திரர்களுக்குத் தனிமையாக ஒருவித்தியாசாலையை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கின்றனர். ராஜபுத்திரர்களுக்காக வென்று தனியாக ஒரு வித்தியாசாலையை ஸ்தாபிப்பது அவ்வளவு மெச்சத்தக்க காரியமென்றும் உசிதமென்றும் நமக்குப் புலப்படவில்லை. நமது பிரிட்டிஷ் ராஜ்யங்கட்கெல்லாம் இனிமேல் ஏகச்சக்ராதிபத்தியத்தை வகிக்கவிருக்கின்ற வேல்ஸ் இளவரசர் அதாவது ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் ஜேஷ்ட புத்திரர் ஆக்ஸ்போர்ட் நகரத்தில் ஏழைகள் மிகுந்து படிக்கின்ற மாக்டலீன் காலேஜ் என்ற கல்லூரியில் படித்தவராம். ஆதலால் நம் தேசத்து இளவரசர்கட்கு மாத்திரம் ஏன் தனிமையாக ஒரு வித்தியாசாலை வேண்டுமோ தெரியவில்லை. நம் சிற்றரசர்கள் சிறுவயது முதலேபொது ஜனங்களுடன் நெருங்கிப் பழகிவந்தால், அந்த ஜனங்களுடைய குற்றம் குறைகளைக் கண்டு ஆராய்தற்கும் அவற்றை நிவர்த்தி செய்தற்கும் முடியும். தவிர, அந்நியோந்நியம் அன்பும் அதிகரிக்கும். இன்னும் நமது ஜமீந்தார்களின் புத்திரர்களும் சிற்றரசர்களின் புத்திரர்களும் படிப்பதற்கு இப்பொழுது இந்தியாவில் ஏற்பட்டுள்ள இரண்டொரு வித்தியாசாலைகளினின்றும் நாம் என்ன அறிகிறோம் என்றால், வேட்டையாடுவதும் குதிரைப் பந்தயம் விடுவதுமே பெருத்துவிட்டன.

* * *

அன்னிபெஸண்டு அம்மையார் பிரிவிகௌன்ஸிலில் அப்பீல் செய்திருந்தனர் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இப்பொழுது அவருடைய பக்கம் அங்கு அநுகூலமாகிவிட்டது. அந்தோ! பரிதாபம்! புண்ணிய பூமியாகிய நமது நாட்டில் பிறந்த புத்திரர்கள் இருவர் நமது ஆர்யாசாராநுஷ்டானங்களை அறவே விட்டுவிட்டு அந்நியதேசங்கட்டு அனுப்பப் பட்டு இந்திய ஜனசமூக அபிப்பிராயத்திற்கு விரோதமாய், பெற்ற தகப்பனுக்குப் பிள்ளை இல்லையென்று பிரிவிக் கௌன்ஸிலிலும் தீர்மானிக்கப்பட்டதைப் பற்றி நமது ஜனசமூகம் விசனத்தோடு கலங்கி நிற்கிறது.



ஓர் கிறிஸ்தவ மிஷனரி ஸ்திரீ இங்ஙனமே எப்படியாவது பெற்றோர் மெய்மறந்து பிரமித்திருக்கும் வேளையில் பிள்ளைகளைக் கைப்பற்றிக் கொண்டு அந்நியதேசங்கட்கு அகன்று விட்டால், நாம் பேய்விழி விழித்துக் கொண்டிருக்கவேண்டியது தான். அன்னிபெஸண்டு ஆநந்த பரவசம் எய்தி "விசேஷ வெற்றி", "முழுவதும் வெற்றி" என்று ஆர்ப்பரிக்கின்றனர்.

* * *

இந்தியர்கள் எங்கு சென்றாலும் இகழ்ச்சிக் குரியவர்களே! இந்தியாதேசத்திற்குள் மாத்திரம் அந்நிய தேசத்தவன், அதிலும், வெள்ளை நிறமுடையோன், எவனாயினும்சரியே, ஏனென்று கேட்பாரின்றி இறங்கி வந்து வேண்டியதைச் சுருட்டிக்கொண்டு செல்லலாம். இந்தியர்கள் கால கதியால் பஞ்சத்தினாலும் வியாதியினாலும் பீடிக்கப் பட்டுச் சொந்தத் தேசத்தில் பிழைப்புக்கு வழியின்றி நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடு படத்தயாராகி வேறு தேசங்கட்குச் சென்றால் வெளியே தள்ளப்படுகிறார்கள். என்ன ஆச்சரியம்! தென்னாப் பிரிக்காவில் நம்மவர்களுடைய ஸ்திதி தான் நமக்குத் தெரியுமே. இப்பொழுது அமெரிக்காவில் சில காடுகளுக்குள் இந்தியர்கள் நுழையக் கூடாதாம். பிரிட்டிஷ் கோலம்பியாவிற்குள் இந்தியர்கள் பிரவேசிக்கக் கூடாதென்று இந்தியர்கள் ஏறிவந்த கப்பல் ஒன்று சமுத்திரத்தில் நிறுத்தப் பட்டு விட்டது. இதுவும் இந்தியர்களுடைய திதீட்சா சக்தியாகிய தபோசக்திக்கு மற்றோர் உரைகல்.

## பலவிஷயக் குறிப்புகள்.

1911 - 12 இந்த வருஷத்தில் லண்டன்மாநகரிலுள்ள தர்ம ஸ்தாபனங்களின் வரும்படிமாத்திரம் 82,19,011 பவுன் என்று அறிகிறோம். அப்படியானால் அந்த நகரத்தின் சொத்துக்கு அளவு கூறல் அரிது.

* • *

ப்ரேக் நகரத்தில் மிகுந்த வயோதிகராகிய, ஜோஹான் கோர்னேளஸ்கி என்னும் பெயருடைய ஒருவரிடத்தில் ஒரு ரத்தின கம்பளம் இருக்கிறதாம். அந்த ரத்தினக் கம்பளம் தீர்க்கதர்சியாகிய மகமத் என்பவரால் பிரார்த்தனைக் காலத்தில் உபயோகிக்கப் பட்டுவந்தது என்று அவர் ருசுப்படுத்துவதாகக் கூறுகிறார்.

அந்த ரத்தினக்கம்பளத்திற்கு 24,000 பவுன் விலையளிக்கப்பட்டும், அவர் ரத்தினக்கம்பளத்தைக் கொடுக்கமாட்டேனென்கிறாராம்.

• • •

சென்ற ஐம்பது வருஷங்களுக்குள் தற்கால வித்தியா விநோத நாகரீகாபி விருத்தியில் யுத்தங்களில் கொலையுண்டவர்களின் தொகை பின்வருமாறு:—கிரிமியா யுத்தம் 7,50,000; 1859-60 இத்தாலிய யுத்தம் 45,000. 1861-65 அமெரிக்காதேசத்தில் உள்நாட்டு யுத்தம் 8,00,000; 1864 டென்மார்க்யுத்தம் 8,000; 1866 ஆஸ்திரியா ப்ரஷ்யா யுத்தம் 45,000; ப்ரான்ஸ் ஜெர்மனி யுத்தம் 2,15,000; ரஷ்யா-துருக்கி யுத்தம் 2,50,000; ரஷ்யா-ஜப்பான் யுத்தம் 2,00,000; இவற்றைத் தவிர மிகப்பயங்கரமாய் நடந்த போயர்யுத்தம், இததாலியர் துருக்கருடன் அக்கிரமமாய்ச்செய்த யுத்தம், பேராசைப் பேயினால் கிளப்பப்பட்ட பால்கன்யுத்தம் ஆதிய யுத்தங்களிலும் ஆயிரக்கணக்கான ஆரோக்கியதிடகாத்திர யௌவன வீரர்கள் அந்தகன் உலகு ஏகியிருக்கின்றனர். வலது கன்னத்திலடித்தால் இடதுகன்னத்தைக் காட்டவேண்டுமென்று போதனை செய்த மகான் இயேசுகிறிஸ்துவின் சிஷ்யர்களேயாவார் இத்தனை யுத்தங்களுக்கும் காரணமும் காரியமுமானவர்கள்.

* * *

பெல்ஜியம் தேசத்தில் லீஜ் என்னும் பட்டணத்தில் மிஸஸ் ஆர்ட்டினன்ஸ்என்னும் ஓர் அதிவிருத்தாப்பிய விதவை இப்பொழுது, அதாவது அவளுடைய எழுபத்தோராவது வயதில்பள்ளிக்கூடத்திற்குச் செல்ல ஆரம்பித்திருக்கிறாள்.

* * *

பிரிட்டிஷ்ராஜாங்க சரித்திரத்தில் ஆகஸ்டுமாசம் மிகவும்விசேஷமான மாசம். ஆகஸ்டுமாசத்தில்தான் பங்காளம், பேஹார், ஒரிஸ்ஸா இந்த மூன்று ராஜ்ஜியங்களும் க்ளைவுக்குக்கொடுக்கப்பட்டன. ஆகஸ்டு மாசத்தில்தான் ஈஸ்ட் இந்தியன் ரெயில்வே திறக்கப்பட்டது. ஆகஸ்டுமாசத்தில்தான் வில்லியம்என்ற பெயருடைய கோட்டைக்குக் கல்கத்தாவில் அஸ்திவாரம் போடப்பட்டது. ஆகஸ்டுமாசத்தில்தான் டில்லி சக்கரவர்த்தியின் பெயரால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் முதன் முதல் நாணயத்தை வெளிப்படுத்தினார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 6 OCT 1914 MADRAS

"ஞானபாநு"

VOL - 2; தொகுதி -2. | JULY 1914. ஆனந்த௵ ஆடி௴ | No - 4. பகுதி - 4.

## ஆ! ஆ! ஆச்சர்யம்!

ஆ! ஆ! ஆச்சர்யம்! மண், பெண், பொன் முதலிய வஸ்துக்கள் அழிவுறுவனவே என்று அறிந்திருந்தும் மனிதன் அவற்றினிடத்திலேயே மேன்மேலும் விருப்பம் கொள்கிறான். இவை சாஸ்வதமாய் உள்ளனவல்லவென்று நன்றாய் உணர்ந்திருந்தும் மனிதன் சதா சர்வதாகாலம் மனோவாக்குக் காயங்களாகிய திரிகரணங்களையும் இவற்றை அடைய முயற்சிப்பதிலும் அடைந்தபின் இவற்றைக் காப்பாற்றுவதிலும் அனுபவிப்பதிலுமே உபயோகப் படுத்துகிறான். மனமானது பற்றி நின்று லயிக்கும் ஸ்தானத்திலேயே ஆநந்தம் உள்ளது. ஆநந்தமே ஆத்ம சொரூப மாதலாலும், ஒவ்வொரு மனிதனும் ஆநந்தத்தை அடைந்து அனுபவிப்பதற்கே எப்பொழுதும் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறானாதலாலும், அவன் எப்பொழுதும் தன் மனத்தை ஆநந்தத்தை யடைவதிலேயே செலுத்துகிறான். ஆநந்தத்தின் உண்மையான இருப்பிடம் இன்னதென்று அறியாது அல்லது அறிந்தும் மயக்கத்திலாழ்ந்து அநித்தியமான, க்ஷணபங்குரமான உலக வஸ்துக்களிடத்தில் ஆசை கொள்கிறான். ஆநந்தத்திற்கு அஸ்திவாரமான அன்பு என்னும் குணத்தை மனிதன் கையாளுவதாக நடித்துக் கொண்டு அநியாயமாக, வீணாக, அந்த அன்பை இன்றோ, நாளையோ, இப்பொழுதோ, பின்னரோ அழிவை எதிர் பார்த்து நிற்கும் அநித்தியப் பொருள்களிடத்துச் செலுத்துகிறான்.

* * *

அன்பே ஆநந்தத்திற்குக் காரணம்; அன்பு இலதேல், ஆநந்தத்திற்கு இருப்பே யில்லை. அன்பே, பக்தி, பிரியம், கருணை, தயை, இரக்கம், பச்சாத்தாபம், காதல், இச்சை, ஆசை, எனப்பல பெயர்கள் கொண்டு இவ்வுலகில் உலாவி, ஈண்டு நடக்கும் சகலவித நன்மை தீமைகட்கும் காரணமா யிருப்பது. அன்பே அறிவுருவாய் அஞ்ஞானத்தை அகற்றுவது. "அன்பும் சிவமும் இரண்

டென்ப ரறிவிலார், அன்பே சிவமா யமர்ந்த தறிகிலார்" என்னும் பெரியோர் வாக்குக் கிணங்க, அன்பே சிவமா யமர்ந்துள்ளது. அன்பின் மகிமையை எவரால் தான் விரித்துரைக்க முடியும்? அன்பு என்னும் ஒன்று இலதேல் இப்பிரபஞ்சம் இருந்த இடம் தெரியாது தூள் தூளாய்ப் போயிருக்குமன்றோ? இத்தகைய சர்வ சக்தி வாய்ந்த அன்பை மனிதன் மதி மயங்கி, பரதந்திரனாகி, இன்மையினின்றும் உண்டாகி இன்மையே சொரூபமாய் இருக்கின்ற மண், பெண், பொன் முதலியவற்றினிடத்தில் வீணே செலுத்தி விடுகின்றான்.

* * *

அநித்திய வஸ்துக்களிடத்தில் செலுத்தப்படும் அன்பு அவ்வஸ்துக்கள் அழியும் பொழுது, தானும் அழிந்து சிதைந்து விடுகின்றது. அன்பு உண்டாகிப் பெருகப் பெருக ஆநந்தமும், அன்பு குறைந்து அழிந்த பொழுது துக்கமும் ஏற்படுவது சகலருக்கும் சகஜமானது. ஆதலால் அன்பு அழிந்து சிதைந்த பொழுது மனிதன் தீராத் துக்கத்தை யடைகின்றான்.

* * *

மண், பெண், பொன் முதலியவற்றை மனத்திற் குகந்தபடி அநுபவித்த மன்னாதி மன்னர்கள் இப்பொழுது எங்கே? அவர்களுடைய வம்ச பரம்பரை தான் இப்பொழுது எங்கே? அவர்கள் போன இடம் புல் முளைத்து விட்டதே! அவர்கள் இருந்த இடங்களிலெல்லாம் எருக்கஞ் செடி பெருத்து விட்டதே! மண்ணாசை பிடித்து மாற்றாரை வருத்தி மண்டலமெல்லாம் தன்னரசு புரிந்து வந்த வணங்காமுடி மன்னர்களாகிய துரியோதனாதியர்கள் இப்பொழுது எங்கே? ஆ! ஆ! ஆச்சர்யம்! மனிதனுக்கு இருக்கும் பொழுதும் இறக்கும் பொழுதும் அவனது சரீரத்தைக் கிடத்துவதற்கு வேண்டியது அதிகமாய்ப் போனால் ஆறு அடி பூமி தானே? ஆகாயமளாவக் கட்டப் பெற்ற மாட மாளிகை கூட கோபுரங்களில் வாழ்ந்தோர் இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகேகும் பொழுது அவற்றைக் கூடக்கொண்டு போகக் கண்டிலமே! உலகம் முழுதும் ஓர் குடைக் கீழ் ஆளவெண்ணி இடைவிடா முயற்சியுடனும் ஊக்கத்துடனும் மேன் மேலும் தேசங்களை ஜயித்து வந்ததாகச் சரித்திரக்காரர்கள் கூறுகின்ற மகா அலெக்ஸாண்டர் என்பவனும் மண்ணோடு மண்ணாய் மாண்டு ஒழிந்தனனே! இராஜாதி



ராஜர்களுடைய கதியே இவ்வாறு யிருக்க, சாதாரண ஜனங்களுடைய ஸ்திதியைப் பற்றிக் கேட்பானேன்?

* * *

என் பூமி, உன் பூமி என்று எண்ணற்ற வியாஜ்ஜியங்கள் தினந்தோறும் நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படுவதை நாம் அறிவோம். மனஸ்சந்துஷ்டி யில்லாமல் இரவும் பகலும் இதே வேலையாகி காலா காலத்தில் ஆகாரநித்திரை யின்றி, வப்பு, வழக்குகட் கெல்லாம் வக்காலத்து வாங்குகின்ற வக்கீல்களின் வாசலடியில் வாய்திறந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் கட்சிக்காரர்களை நீங்கள் கவனித்த துண்டா? வயற்காடுகளில், வாய்க்கால் வரப்புகளில் நேரிட்டிருக்கும் பயங்கரமான கொலைகளைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்ட துண்டா? தாயாதி வகையாரைப் போஜனத்தில் மருந்திட்டுக் கொல்லும் மாயத்தை நீங்கள் அறிந்ததுண்டா? ஆ! ஆ! ஆச்சர்யம்! இத்தகைய அக்கிரமங்களெல்லாம் இந்த மண்ணாசையால் தானே நடக்கின்றன? இத்தனை தீமைகள் புரிந்து ஜயித்தும், ஈற்றில் இம்மண் அழிந்து விடுகின்றது. தவிர, இதற்கு முன் எத்தனை பேருடைய இச்சைக்குப் பாத்திரமாகி, எத்தனை பேரால் அநுபவிக்கப்பட்ட மண் இது? இதன் மேல் ஏன் மனிதர்கட்கு இவ்வளவு இச்சை? என்றும் அழியாத ஏகப் பொருளாய் இலங்கும் ஈஸ்வரனிடத்தில், அந்தோ! மனிதர்கட்கு இவ்வளவு ஆசையில்லையே! ஆ! ஆ! ஆச்சர்யம்!

* * *

பெண் பித்துப்பிடித்துப் பைசாசத்தன்மைவாய்ந்து பிதற்றித் திரியும் பேயர்களே! அறுபதினாயிரம் ஸ்திரீகளை மணந்து ராஜ்ய பாரம் செய்த தசரதனுடைய சாம்பராவது இப்பொழுது கிடைக்குமா? நூற்றுக்கணக்கான பட்ட மகிஷிகளைக் கட்டிவாழ்ந்த நவாபு பரம்பரைகளெங்கே? எலும்பு, நரம்பு, ரத்தப், மஜ்ஜை, மாம்சம், தோல் முதலியவற்றால் ஆக்கப்பெற்று எங்குப் பார்த்தாலும் ஓட்டைகள் உள்ளதாய் அறிவுள்ளோருடைய அருவருப்புக்கிடமானதாய், அவலட்சணமாய் அமைந்துள்ள சரீரத்தினிடத்தில் ஆசைவிழக்காரணம் என்ன? காமப்பித்துப்பிடித்துக்கலக்குற்றிருக்கும் மனிதன் பெண்கட்கு அடிமையாகி விடுகின்றான். முகத்தில் மீசை முளையாத மென்மையான மனோவாக்குக் காயத்தைப்படைத்தவர்களாய், சிருஷ்டி நீதியில் மனிதனுடைய புத்திசாதுர்ய புஜ

பல பராக்கிரமத்தில் சார்ந்திருக்கவேண்டியவர்களாயுள்ள பெண்டிர்களின் பாதாரவிந்தங்களில் பௌருஷத்தன்மைவாய்ந்த மனிதன், ஆண்மை நிறைந்தவன், பணிந்து நிற்பது ஆச்சர்யமன்றோ? வீட்டை விட்டு வெளியில் புறப்பட்டவுடன் அட்டகாசம் செய்து அனைவரும் தன் அடிபணிந்து நிற்கவேண்டுமென்று ஆசைப்படுவோன், தனக்கு நிகரில்லையென்று புஜம்தட்டி ஆர்ப்பரிபோன், ஜெயவீரசிங்கம் எனப்பட்டப்பெயர்பூண்டுபல்லோரையும்பயமுறுத்துவோன், ஒரு பெண்ணின் சரணாரவிந்தங்களில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அடிமைக்கும் அடிமையாய்க் கைகட்டிவாய் பொத்திக் காத்திருப்பதை எல்லோரும் அறிவர்.

ஆ! ஆ! ஆச்சர்யம்! இச்சரீரம் வேறு வேறாகக் கூறுபடுத்தப்பட்டு ஐந்து நிமிஷம் வைக்கப்படுமாயின் எவராலும் சகிக்கவொண்ணாத துர்நாற்றம் எடுத்து விடுமே! சரீரம் மலச்சுமைதானே! சரீரத்தினுடைய பெருந் துவாரங்களாகிய நவத்துவாரங்களினின்றும் சதா மலஜலம்கசிந்துகொண்டிருக்கின்றமைஎல்லோருக்கும் பிரத்தியட்சமன்றோ? எண்ணற்ற சிறு துவாரங்களினின்றும் சதா சர்வதாகாலமும் துர்நாற்றம் நிறைந்த அணுக்கள் ஆவிரூபமாகவெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. சரீரத்தின்உண்மையான லட்சணம் இன்னதென்று ஆராய்ந்து அறிந்த மனிதன் அணுவளவாவது புத்தியிருந்தால், எள்ளளவாவது அறிவு உண்டாயின், சரீரத்தினிடத்தில் அபிமானம் வையான். சொந்த சரீரமே அவ லட்சணமென்றும் மலமூட்டையென்றும் மனிதன்கருதவேண்டியபொழுது, இன்னொரு சரீரத்தைக் கட்டியணைய இச்சிப்பது-அதுவும் காமப்பித்துப் பிடித்து-ஆச்சர்யம்! ஆச்சர்யம்! மலத்தைக் காலில் தீண்டிக்கொண்ட மனிதன் மலம் நிறைந்த குளத்தில் தனது காலைக்கழுவ இறங்கியது போலாம்! என்னே! ஆச்சர்யம்!

பொன்னாசை பிடித்துப்புலம்பித்திரியும் பித்தர்களே, பொன்னும் மண்ணும் ஒன்றேயென்று நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். மண்ணின் ரூபமே பொன் என்பது பொய்யோ? வாழ்நாட்களையெல்லாம் வீண் நாட்களாகக் கழிக்கும் வம்பர்கள் பொன்னைக் குவித்துக் குவித்துப்பார்த்து மகிழ்கின்றனர். சோமநாதக்ஷேத்திரத்தை துவம்சம் பண்ணி "விக்கிரகவிக்கிரகன்" என்று விருது கட்டிக்கொண்டு கோயிற் சொத்தையும் கொள்ளையடித்துக் குவி-



யல்குவியலாகப் பொன்னைக்குவித்து வைத்த மகம்மத்கஸனிஎன்பவனும் தனது மரணத்தறுவாயில் அக்குவியல்களைப் பார்த்து ஏங்கிமாண்டனனே! ஆ! ஆ! ஆச்சர்யம்! இப்பொழுது பொன் அன்றோ இப்பூவுலகில் தன்னரசு செலுத்துவது? "ஈட்டி எட்டினமட்டும் பாயும், பணம் பாதாளம்மட்டும் பாயும்" என்னும் பழமொழி பொய்யன்றே! பிதாவும் புத்திரனும் பிரிந்துவிடுவதும் பணத்தாலேயே! மகனிடத்தில் மாதா அன்பு செலுத்துவதும் பணத்திற்காகவே! புருஷன் பணத்தைக் கொண்டு வேண்டியன வாங்கியளிக்காவிடில், மனைவியும் அவன் தலையில் இரண்டுகுட்டுக் குட்டுவாள். ஆ! பணமே! நினது சாமர்த்தியந்தான் என்னே! ஆனால் உனது வாஸ்தவ சொரூபம் உண்மையன்றே.

* * *

சிவஸ்தோத்திரத்தின் பொருட்டுச் சிருஷ்டிக்கப்பட்டுள்ள நாவால், துச்சமாய், ஜனன மரண நியதிக்குட்பட்டவனாய் நாற்றச் சரீரத்தைச் சுமந்துகொண்டு "நான்" என்ற அகங்காரத்தை வகித்த மூடனாய்த் தனக்குச் சரிசமானமாய் சகல அவயவங்களும் வாய்க்கப்பெற்றுள்ள மனிதனை இந்திரன் என்றும் சந்திரன் என்றும், எச்சிற்கையினாலும் காக்கையோட்டாத இழிந்த மனுஷனை அன்னதானப் பிரபுவென்றும் பற்பல விதமாகப் புகழ்வதுபொன்னின் பொருட்டேயன்றோ? தேசாபிமான மிகுதியினாலும் ஜீவகாருண்ணிய சித்தத்தினாலும் பற்பல விதத்துன்பங்களை யநுபவித்தவர்கள் என்று பலராலும் சொல்லப்படுவோரும் அவர்களுடைய தீரவீர திடசித்தத்தையெல்லாம் கைவிட்டு துன்மார்க்கமும் வெளிவேஷமும் தற்புகழ்ச்சியும் சொரூபமாயுள்ள மூடர்களைப் பல்லையிளித்துப் பாக்கள்பாடிப்புகழ்ந்துநிற்பது பணத்திற்காகவன்றோ? சாண் கும்பிக்கு ஊண்தேட வகையறியாது, பணம் பணம் என்று பல்லோரும் பாதவிக்கின்றனர்.

* * *

"பொன்னைப் பூவைப் பூவையரைப், பொருளென்றெண்ணு மொருபாவி" என்று தாயுமானவர் தன்னை நிந்தித்துக்கொண்டார். ஆதலால் பொன்னையும், மண்ணையும், பெண்ணையும் முக்கியமாகக் கொண்டாடுபவர்கள் பாவிகள் எனப்பட்டார். அழிவுறும் வஸ்துக்களிடத்து மனத்தைச் செலுத்தி அவற்றையேஜீவிதகால லட்சியங்களாகக்கொண்டுபிரமித்திருக்கும்மனிதர்கள்பாவிகளே. பிரமையே, மயக்கமே பாவத்திற்குக் காரணம். உள்ளதை உள்ள

படி யறியாது, பிறழ அறிதலே பாவம் எனப்படும். உள்ளதை உள்ளபடி அறிதலே புண்ணியம் எனப்படும். ஆதலால் இவ்வுலகில் பெரும்பான்மையோரும் பாவிகள் என்பதில் தடையென்ன? க்ஷணபங்குரமான அற்பசுகங்களை முக்கியமெனக்கொண்டு ஆயுட்காலத்தை வியர்த்தமாக்கும் அறிவீனர்கள் அங்கும் இங்கும் எங்குமாகிய அநந்தங் கோடி ஜீவராசிகளையும் ஆட்டுவித்துத் தானும் ஆடுகின்ற ஆநந்த மூர்த்தியின் அருளைப் பெறுவது எந்நாளோ ?

## * இந்தியாவின் தற்காலமும் முற்காலமும்.

[ஸ்ரீமான் சஞ்சீவிராவ் அவர்கள் மொழிபெயர்த்தது]

அரசர்களை ஆக்கியும் அழித்தும் வந்தவரும் சந்திரகுப்த ராஜனுடைய பிரதம மந்திரியுமாகிய சாணக்கியர் தனக்கு விருத்தாப்பியகாலம் வருகிறதென்று அறிந்தவுடன, தனது மிகுதி ஆயுட்காலத்தை ஈஸ்வரசிந்தனையிற்கழிக்கும் பொருட்டுஜனசமுகத்தை விட்டுநீங்கிக்காட்டுக்குச்சென்றார். மறுஉலகத்தின் நிமித்தம் இவ்வுலகம் மறக்கப்படுவது இந்தியா தேசத்தில் மாத்திரமே. ஆனால் மற்றத் தேசங்களிலோ, இவ்வுலகத்தின் நிமித்தம் மறு உலகம் மறக்கப்பட்டது. ஒருவருக்கு வயது ஐம்பது ஆனவுடன் ஜனசமுகத்தினின்றும் பிரிந்துவிடுவது இந்தியாவில் தான் சாதாரண வழக்கம்.

இந்தியாவாகிய இந்த ஞான பூமியானது, காட்டுமிராண்டிக் கூட்டங்களால், ஒரு துளியளவுகூட அன்பு இல்லாத, ஈவிரக்கமற்ற அநாகரீகர்களால் படையெடுக்கப்பட்டபொழுது, இந்தியர்கள் கைகளில் கத்திகள் தாங்கி எதிரிகளின் இடையில் கொல்லப்படுவதற்குத் தயாராகி வீழ்ந்தார்கள். அவர்களுடைய ஸ்திரீகளோ அவர்களுடைய (அநாகரிகர்களுடைய) அசுத்தமான கைகளால் தங்களைத் தொடாதிருக்கும் பொருட்டு அக்கினி குண்டங்களில் வீழ்ந்தார்கள். அலெக்ஸாண்டர் தன் முன் கைதியாகக் கொண்டுவரப்பட்ட போரஸ் ராஜாவை நீ எவ்விதம் நடத்தப்பட விரும்புகிறாய் என்றுகேட்டபொழுது போரஸ் ஆச்சர்யப்பட்டான்.

* இஃது கல்கத்தாவில் பிரசுரமாகும் அமிருத பஸார் பத்திரிகையினின்றும் மொழி பெயர்க்கப்பட்டது.



“உன்தேசத்தில் அரசர் சாதாரணமான கொள்ளைக்காரர்களைப் போலப் பொருள் லாபத்தின் நிமித்தம் யுத்தம் செய்வார்களோ? நீயும் நானும் யுத்தம் செய்தோம்; நீ ஜெயித்திருக்கிறாய், ஆனால் அதனால்நீ கொள்ளைக்காரனாக மாறிவிடவேண்டிய அவசியம் இல்லை ” என்று போரஸ் சொன்னான். இந்தியா அக்காலங்களில் எவ்விதம் இருந்ததென்பதை இதுவே ரூபிக்கிறது.

இங்கிலாந்து தேசத்தில் காண்டர்புரி நகரத்தின் முக்கிய பாதிரியார் அரசனுக்கு முன்பு முழந்தாளிடுகிறார் ; இந்தியாவிலோ அரசர்கள் எப்பொழுதும் பிராம்மணர்கட்குப் பணிந்தனர். உலக அதிகாரங்களை வகித்த லௌகீகர்களிலும் ஆத்மஞானத்தையுடைய சாது உயர்ந்தவனென்று விவாதம் இல்லாமல் ஒப்புக்கொள்ளப்பட்டது இந்தியாவில்தான். இந்த ஆத்மஞான புருஷர்கள் பொருளையும் அரசாங்க அதிகாரத்தையும் வெறுத்தனர். பிரதம மந்திரி ஸ்தானங்கள் அவர்கட்கு அளிக்கப்பட்டபொழுது அவர்கள் அவற்றையும் இகழ்ந்தனர். ராமாயணத்தில் விவரிக்கப்பட்டுள்ள சில விஷயங்களைக் கவனிப்போமாயின் அந்தப்பூர்வீககாலங்களில் இந்தியர்கள் எத்தன்மைய உயர்ந்த கொள்கைகளை உடைத்தாயிருந்தார்கள் என்பது தெரியவரும்.

சக்ரவர்த்தியாகிய தசரதர் தனது மூன்றுபட்ட மகிஷிகளில் ஒருத்திக்குங் கேட்டதைக்கொடுப்பதாக வாக்குக்கொடுத்திருந்தார். தசரதர் யௌவன பர்வமடைந்த தனது மூத்த குமாரனாகிய ராமருக்கு சிம்மாஸன பட்டாபிஷேகம் செய்வித்துத் தனது இறுதி நாட்களை ஈஸ்வரதியானம் செய்வதில் செலவழிக்கும் பொருட்டு அரசபதவியினின்றும் நீங்கக்கருதினார். பட்டாபிஷேக தினத்திற்கு முந்திய நாள் தசரதர் எவளுக்கு வாக்குத் தத்தம் செய்திருந்தனரோ அந்த மனைவி ராமரைக் காட்டுக்கு அனுப்பிவிட வேண்டுமென்றும் ராமர் அங்கு பதினான்கு வருஷகாலம் சந்நியாசியாய்க் காலம் கழிக்க வேண்டுமென்றும் தனது சொந்தப் புத்திரனாகிய பரதனுக்குச் சிம்மாசன பட்டாபிஷேகம் செய்விக்கும் படிக்கும் கேட்டுக் கொண்டாள். ராமர் ராஜாவாகிய தனது பிதாவினுடைய வாக்குத் தத்தத்திற்குப் பங்கம் நேரிடாதபடி, தனது பாத்தியதையைத் தானே தவிர்ந்து பதினான்கு வருஷ காலம் காட்டில் அலைந்து திரிவதாகச் சம்மதித்தார். அவருடைய பிதாவாகிய தசரதர் ஹிருதயம்உடை

ந்து தனது மனைவியைச் சபித்துக்கொண்டும் ராமரை ஆசீர்வதித்துக்கொண்டும் இறந்தார். அதுதான் அக்காலத்து இந்தியா !

ராமருடைய மனைவியாகிய சீதை தனது புருஷனிடத்தினின்றும் பிரிந்திருக்க மறுத்து விட்டாள். ராமர் சுத்த பிரமச்சாரியாயிருக்கவேண்டுமென்பது நிபந்தனை. ஒரு ராஜாவினுடைய புத்திரியும் இனி மேல் சக்கரவர்த்தியாகப் போகிறவருடைய மனைவியுமாகிய சீதை தனது ராஜரீக உடையைத் தள்ளிவிட்டு, மரவுரியுடுத்துக் காட்டினுள் தனது புருஷனைப் பின்தொடர்ந்தாள். ராமரும் சீதையும் பதினான்கு வருஷகாலம் சேர்ந்து வசித்தனர். ஆனால் அவர்கள் சுத்தப்பிரம்மசாரித்துவ நிபந்தனையின்படி கண்டிப்பாகக் காலங்கழித்தனர். அது தான் அக்காலத்து இந்தியா !

நியாயமாய் ராமருக்குச் சொந்தமான சிம்மாசனத்தில் ஏறுவதற்கு ஒருமாதிரியாகப் பலவந்தப் படுத்தப்பட்ட பரதன் ராஜ்யத்தை விட்டுத் தனது சகோதரனைத் தேடிச் சென்று தேசத்திற்குத் திரும்பிவரும்படி தன்னாலானமட்டும் சொல்லிப்பார்த்தான். ஆனால் ராமர் மறுத்து விட்டார். பின்னர் பரதன் ராமரை அவரது பாதங்களினால் பொன்னினாலாக்கப் பெற்ற ஒரு ஜோடி பாதுகைகளை ஸ்பர்சிக்கும்படி கேட்டுக் கொண்டான். ராமர் அங்ஙனமே செய்ய, பரதன் அப்பாதுகைகளை ராஜதானிக்குத் தன் தலையின் மேல் சுமந்து சென்று, அவற்றை ஊரில்லாத சக்கரவர்த்தியின் பிரதிநிதிகளாக பகிரங்கப்படுத்தி, அவற்றைச் சிம்மாசனத்தின் மீது ஏற்றுவித்து தான் ஒரு வேலைக்காரனைப் போலவும் அவற்றிற்குத் தானே ராஜாங்கக் குடை பிடித்து, நியாயமாய் உரியவர் எவரோ அவருடைய பெயரால் ராஜ்யத்தை ஆண்டு வந்தான். தனது மூத்தசகோதரன் பிரமச்சாரியைப் போலவும் சந்நியாசியைப் போலவும் காலம் கழிப்பதாக நிபந்தனைக்குட்பட்டிருப்பதினால், பரதனும் அம்மாதிரி ஜீவிதத்தையே பின் பற்றி பதினான்கு வருஷகாலம் தன் மனைவியின் சங்கத்தையும் உலகின் எல்லாவித நல்ல வஸ்துக்களின் சங்கத்தையும் நீக்கி, ஒரு தபசியைப் போல வசித்தான். அது தான் அக்காலத்து இந்தியா !

ராமருடைய இளைய சகோதரனாகிய லட்சுமணன் ராமரைப் பின் தொடர்வதற்காகத் தன்னைத் தானே தேசப்பிரஷ்டம் செய்துகொண்டான் அவனும் சந்நியாச ஜீவிதத்தைப் பின் பற்றிப்



பதினான்கு வருஷ காலம் பரிசுத்தமான சகோதர வாத்ஸல்யத்தினாலேயே தன் சகோதரனைப் பின் தொடர்ந்தான். அது தான் அக்காலத்து இந்தியா !

இப்பொழுது இந்தியா எப்படி இருக்கிறது? உலகில் மற்றத் தேசங்களினின்றும் (அக்காலத்தில்) இந்தியாவைப் பிரத்தியேகமாக எடுத்துக் காட்டியன தன்னலமறுப்பும் தர்மத்தினிடத்தில் சிரத்தையுமே. இப்பொழுது ஸ்வய நன்மை, பொறாமை, அசூயை, நீயசிந்தை இவைகட்கு இருப்பிடமா யிருக்கிறது. இப்பொழுது இந்தியர்கள் வீழ்ந்து தினந்தோறும் கீழே கீழே அமிழ்ந்திப் போவது ஆச்சர்யமா?

## கிழக்கும் மேற்கும்

[ஸ்ரீவிவேகாநந்த ஸ்வாமி யவர்கள எழுதியது.]

கொந்தளித்துக் கரை புரண்டோடுகின்ற ஆழ்ந்த பெரியஆறுகள், தெய்வலோக நந்தவனமும் வெட்கும்படி செய்யும் அவ்வளவு ஆநந்தகரமாய் நதிதீரங்களில் அமைக்கப் பெற்ற உத்தியான வனங்கள், இந்த உத்தியான வனங்களினிடையே அத்தியற்புதமான சித்திர வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப் பட்டு ஆகாயத்தை யளாவி நிற்கும் அழகிய பளிங்கு மாளிகைகள், பக்கங்களிலும் முன்னும் பின்னும் கூரையின் மூங்கில்கள் நன்றாய் வெளியில் தெரியும்படியாகச் சரிந்துபோன கூரையுடனும் இடிந்துபோய்க் கொண்டிருக்கின்ற மண் சுவர்களுடனும் கூடிய குடிசைக் கூட்டங்கள், நூற்றுக் கணக்கான வருஷங்களாக, ஏக்கம், வறுமையாதிய இவற்றின் அடையாளங்கள் ஆழ்ந்து வரையப் பெற்ற முகங்களுடன் கிழிந்த கந்தைகளைத் தரித்துக்கொண்டு அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருக்கும் உலர்ந்து போன வாலிப, விருத்தாப்பிய உருவங்கள், எங்கும் சாதாரணமாகிய பசுக்கள் எருதுகள், எருமைகள்- ஆ! அவற்றின் கண்களிலும் அதேமாதிரி விகாரமான பார்வை, அதேமாதிரி பலமற்ற சரீரக்கட்டு; -வழியில் குப்பையும் அழுக்கும்; இது தான் நமது தற்காலத்திய இந்தியா !

அரண்மனைகளின் அருகிலேயே அழிந்து கிடக்கும் குடிசைகள், க்ஷேத்திரங்களின் பக்கத்திலேயே குப்பைக்குவியல்கள், ஆடம்பரமாக உடைதரிப்பவர்களின் அருகிலேயே ஒரு சிறிய

கௌபீனம் மாத்திரம் தரித்துச்செல்லும்சந்நியாசி,நன்றாய்உண்டு வேண்டியன அநுபவிப்போரைப் பார்க்கின்ற பசிநோயால் பிடிக்கப்பட்டவர்களுடைய பிரகாசமற்ற கண்களின் பரிதாபகரமான பார்வை;—இது தான் நமது சுதேசம்.

கொடூரமான பிளேக்கினாலும் பேதியினாலும்அழிவு;ஜனசமூகத்தின் உயிர் நாடிகளையே தின்கின்ற மலேரியா ஜ்வரம்; இரண்டாவது இயற்கையாக முழுப்பட்டினி, அரைப்பட்டினிகிடத்தல்; அடிக்கடி பயங்கரநிர்த்தனம் செய்யும் எமனைப் போன்றபஞ்சம்; வியாதிக்கும் துன்பத்திற்கும் குருக்ஷேத்திர பூமி; தான் இழந்து போன நம்பிக்கையுள்ளவர்கள், தீரர்கள் இவர்களுடைய உயிரற்ற எலும்புகளால் நிறையப்பெற்ற பெரிய ஸ்மசான பூமி; இதன் நடுவில், ஜீவிதகாலத்தில் மோட்சத்தை தவிரவேறோர் லட்சியத்தை நாடாதவனாய் ஆத்மாநு சந்தானத்தில் ஆழ்ந்து உபசாந்தத்தில் ஒடுங்கி வீற்றிருக்கும் யோகி;—இது தான் இந்தியாவிற்குவருகிற ஐரோப்பிய யாத்திரிகளின் கண்ணில் தென்படுவது.

பார்வைக்கு மாத்திரம் மனிதர்களைப் போன்றிருக்கின்ற முப்பதுகோடி ஜீவர்களின் ஒரு கூட்டம்—தங்களுடைய சொந்த ஜனங்களாலும் அந்நிய ஜனசமூகத்தினராலும், தங்களுடைய சொந்த மதத்தினராலும் அந்நிய மதத்தைச் சேர்ந்தவர்களாலும் கீழே போட்டு மிதிக்கப்பட்டதால் ஜீவித பலமற்றுப் போனவர்கள்—தொழிலிலும் துன்பத்திலும் பொறுமை வாய்ந்தவர்கள், ஒருகாரியத்தை ஆரம்பிப்பதற்கு அடிமையைப்போல ஸ்வயபுத்தியில்லாதவர்கள்;—நம்பிக்கையற்றவர்கள், முன்னற்றவர்கள், பின்னற்றவர்கள்;—எவ்வளவு நிர்ப்பந்தமாயிருந்தபோதிலும் இப்போதைய ஜீவிதகாலத்தை ரட்சித்துக்கொள்வதிலேயே இச்சையுள்ளவர்கள்;—தமது சகோதரர்கள் சௌக்கிய ஸ்திதியிலிருப்பதைப் பார்த்துச் சகிக்காத ஒரு அடிமைக்குரிய நிக்ருணம் வாய்ந்தவர்கள்.—விஸ்வாசமற்று நம்பிக்கையற்றவனைப்போல, தன்னை இரட்சித்துக்கொள்வதற்கு ஆயுதமாக இழிந்த தந்திரம், வஞ்சகம், கபடம் இவற்றைக் கைபற்றுபவனைப் போலச் சிரத்தையேயற்றவர்கள்.—ஸ்வயநல சொரூபம்;—பலசாலிகளின் பாததூளிகளை நக்குபவர்கள், ஆயினும் தங்களினும் பலஹீனர்களை மரிக்கும்படி தாக்குபவர்கள்;—பலஹீனர்களுக்கும் வருங்காலத்தில் நம்பிக்கையற்றவர்களுக்கும் ஸ்வபாவமாக உண்டாகின்ற அவலட்-



சணமான, பேய்த்தனமான மூடக்கொள்கைகள்நிறைந்தவர்கள்,-தங்கட்கு அஸ்திவாரமாக யாதொருவித சன்மார்க்க நிலையும்அற்றவர்கள்,—அழிந்து ஜீர்ணித்துப் போகின்றஒரு பிணத்தின்மேல் பல புழுக்கள் இருப்பதுபோல, இத்தகைய முப்பதுகோடி ஜீவர்கள் இந்தியாவாகிய சரீரத்தில் மொய்த்துக்கொண்டிகிருக்கின்றனர்—இது தான் ஆங்கிலேய உத்தியோகஸ்தனுக்கு நம்மைப் பற்றிச் சாதாரணமாகத் தோற்றுகின்ற ரூபம்.

(இன்னும்வரும்)

குழந்தைவேல்.

## ஸ்ரீமத்-விவேகாநந்த சுவாமிகளின் கடிதம்.

(முன்தொடர்ச்சி.)

(பிரம்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் மொழிபெயர்த்தது.)

ஆனால் நான் வாலிபர்களாகிய உங்களுக்கு இந்த இரக்ககுணத்தை, எளியோர், அறிவீனர், கஷ்டப்படுவோர் இவர்களுக்காகப்பாடுபடுகின்ற இப்பெருமுயற்சியை அளிக்கின்றேன். இப்பொழுது, இந்த நிமிஷமே பார்த்தசாரதி கோவிலுக்குச்சென்று,எளியவர்கட்கும் கோகுலத்துக் கோபாலர்கட்கும் இஷ்டன், குகன் என்ற பறையனை அணைத்துக்கட்டிக்கொள்ளப் பின் வாங்காதவன், பிரபுக்களுடைய வேண்டுகோளை அலட்சியம் செய்து ஒரு வியபசாரியினுடைய வேண்டுகோளை ஒப்புக்கொண்டு தனது பௌத்தாவதாரத்தில்—அவளை ரட்சித்தவன், இப்பேர்ப்பட்டவனுக்கு முன்பு நமஸ்கரித்துப் பெரியதோர் தியாகம் செய்யுங்கள்; எவர்கட்காக அவர் அடிக்கடி அவதரிக்கிறாரோ, எவர்களை எல்லாவற்றிலும் மேலாக நேசிக்கிறாரோ, தாழ்ந்தோர், கஷ்டப்படுத்தப்படுபவர்கள் ஆகிய இவர்கட்காக ஜீவிதகாலம் முழுவதும் தியாகம் செய்யுங்கள்.

தினேதினே கீழே கீழே போய்க்கொண்டிருக்கிற இந்தமுப்பதுகோடி ஜனங்களின் முக்தியின் நிமித்தம் உங்களுடைய ஜீவிதகாலங்கள் முழுதையும் தியாகம் செய்வதாகத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

அது ஒரு நாள் வேலையன்று, பாதையும் மிகவிஷமுட்களால் நிறைந்துள்ளது. ஆனால் பார்த்தசாரதி நமக்கும் சாரதியாயிருக்கத் தயாராயிருக்கிறாரென்று நாம் அறிவோம். அவருடைய பெயரால், அவரிடத்து வைத்துள்ள நித்திய நம்பிக்கையுடன், எண்ணற்ற வருஷங்களாக இந்தியாதேசத்தில் குவிந்திருக்கிற துன்ப மலைக்கு நெருப்புவையுங்கள். அது எரிக்கப்படத்தான் வேண்டும். அப்படியானால் வாருங்கள், நேருக்கு நேரே பாருங்கள். சகோதரர்களே, அது பெரியவேலை, நாமோ மிகத்தாழ்ந்தவர்கள். ஆனால் நாம் சைதந்நிய சுதர்களும் ஈஸ்வர புத்திரர்களுமாயிருக்கிறோம். ஈஸ்வரனுடைய மேன்மை பெருகுவதாக! ஜயம் நமதே. நூற்றுக்கணக்கான ஜனங்கள் இம்முயற்சியில் தவறிவிடுவார்கள்—நூற்றுக்கணக்கான ஜனங்கள் இம்முயற்சியை முன்கொண்டு செல்வதற்குத் தயாராய் வருவார்கள்; நான் ஜயமடையாது இங்கு மரிக்கலாம், இன்னொருவர் அந்த வேலையை எடுத்துக்கொள்வார். உங்களுக்கு வியாதியின்னதென்று தெரியும், உங்களுக்கு நிவிருத்தியின்னதென்று தெரியும். நம்பிக்கைமாத்திரம் வேண்டியது. தனவந்தர்கள், உயர்ந்தோர் என்று சொல்லப்படுகிறவர்களிடத்தில் உதவியை எதிர்பாராதே. ஹிருதயமற்ற வீண் யுக்திமாத்திரமாயுள்ள ஆசிரியர்களையும் அவர்களுடைய ஆத்திரமற்ற பத்திரிகா விஷயங்களையும் கவனியாதே; விஸ்வாசம்—இரக்கம். ஆத்திரம் மிகுந்த விஸ்வாசம். ஆத்திரம், மிகுந்த இரக்கம்! ஜீவிதம் பெரிதன்று. மரணம் பெரிதன்று.—பசி பெரிதன்று! குளிர் பெரிதன்று. ஈஸ்வரனுக்கு மேன்மையுண்டாவதாக! மேலே செல்லுங்கள், ஈஸ்வரனே நமது அதிபதி. யார்விழுகிறார்களென்று பார்ப்பதற்குப் பின்புறம் நோக்காதே—முன்னே செல்லுங்கள்—மேலே செல்லுங்கள். இவ்விதமாக, இப்படியே சகோதரர்களே! நாம் மேலே செல்வோம். ஒருவன் விழுகிறான், இன்னொருவன் வேலையை எடுத்துக்கொள்கிறான்.

இந்தக் கிராமத்திலிருந்து நான் நாளைக்குப் போஸ்டனுக்குச் செல்கிறேன். ராமாபாயிக்கு உதவிசெய்து கொண்டிருக்கிற ஒரு பெரிய ஸ்திரீ சபையில் நான் பேசப்போகிறேன். நான் முதலாவது போஸ்டனுக்குச் சென்று சில உடைகள் வாங்கவேண்டும். இங்கு நெடுநாள் வசிக்கவேண்டுமானால் எனது விநோதமான ஆடை உதவாது. ஜனங்கள் தெருக்களில் நூற்றுக்கணக்காக என்னைப் பார்ப்பதற்குக்கூடுகின்றனர்..........



ஜனசமுகத்திற்குள் நுழைந்து உன்னைக் கேட்கும்படி செய்வது மிகவும் கடினமான வேலை. இப்பொழுது பட்டணங்களில் ஒருவரும் இல்லை; கோடைகால மாகையால் எல்லாரும் வெளியே போயிருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் மாரிகாலத்தில் திரும்பி வருவார்கள், ஆகையால் நான் காத்திருக்கவேண்டும். இவ்வளவு பாடுபட்டதின் பின் நான் லகுவாய் விடப்போவதில்லை. ரோமாபுரி ஒரு நாளில் கட்டப்படவில்லை. என்னை இங்கே குறைந்தது ஆறுமாதமாயினும்உங்களால்வைத்திருக்க முடியுமானால் எல்லாம் சரியாய்விடும் என்று நம்புகிறேன். இதன் மத்தியில் யான் மிதப்பதற்கு ஏதாவது பலகை கிடைக்குமோ என்று கண்டுபிடிப்பதற்கு என்னாலானமட்டும் முயற்சி செய்துகொண் டிருக்கிறேன்.

இப்பொழுது கூடப் புதிய இங்கிலாந்தில் குளிர் மிகுதியாயிருக்கிறது; தினந்தோறும் இரவிலும் காலையிலும் பக்கத்தில் அடுப்புக்களை எரியவிட்டுக்கொண் டிருக்கிறோம். கானடா தேசத்தில் குளிர் இன்னும் அதிகம். அங்குப்போல அவ்வளவுதாழ்ந்தகுன்றுகளில் நான் பனியை ஓர்நாளும் பார்த்ததில்லை.

மெல்ல மெல்ல எனக்கு வழியுண்டாக்கிக் கொள்வேன். ஆனால் அது எப்படி முடியுமென்றால், பயங்கரமாகச் செலவு மிகுந்த இந்தத் தேசத்தில் நான் வெகு நாட்கள் வசிக்கவேண்டும். இப்பொழுது இந்தியாவில் ரூபாயை உயர்த்தியிருப்பது இந்ததேசத்தில் திகிலை உண்டாக்கி யிருக்கிறது. அநேக யந்திரங்களில் வேலைநின்றுவிட்டன..............நான் காக்கத்தான் வேண்டும். நான் கடைசிவரையில் முயற்சி செய்யவேண்டும். நான் இங்கு குளிரினாலோ, வியாதியினாலோ பசியினாலோ மரித்தபோதிலும் கூடக் காரியத்தை நீங்கள் நடத்துங்கள். பரிசுத்தம், உண்மை, விஸ்வாசம். முதலாவது நான் அமெரிக்காவில் முயற்சி செய்வேன், நான் தவறுவேனாயின், இங்கிலாந்து தேசத்தில் முயற்சிசெய்வேன். அங்கும் நான் நான் தவறுவேனாயின், இந்தியாவுக்குச் திரும்பச் சென்று, உயர விருந்து உத்தரவு வரும்வரையில் காத்திருக்கலாம்.

உங்களுடைய

விவேகாநந்தர்.]

# ஜோடி மோதிரம்.

## IV

பிரஹ்மஸ்ரீ ராமசாமியய்யங்காரவர்கள் எழுதியது.

கலியாணத்தின் பிறகு தனதாஸர் ஸம்ஸாரத்தையும் பெண்ணையும் அழைத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி வந்தார். இன்னும் நாலு வருஷங்கள் சென்றன. புரந்தரன் திரும்பி வரவில்லை. ஹிரண்மயி இருக்கிற இடத்துக்கு அவன் திரும்பி வந்தால் என்ன? வாராவிட்டால் என்ன?

புரந்தரன் இந்த ஆறுவருஷ காலமாகத் திரும்பிவரவில்லையே என்று நினைத்து நினைத்து ஹிரண்மயி துக்கப்பட்டாள். அவள் எண்ணினாள், "இன்றைய வரையில் என்னை மறக்கமுடியாததினால் அவன் இங்கு வரவில்லையென்பது நிரம்ப அஸம்பாவிதம். அவன் உயிரோடிருக்கிறானோ இல்லையோ என்பது சந்தேகம். அவனைப் பார்ப்பதற்கு ஆசைப்படவில்லை. இப்பொழுது நான் பிறனுடைய ஸ்திரீ. ஆனால் பால்யகாலத்து ஸ்நேஹிதன் உயிரோடிருக்கட்டும் என்ற ஆசை மனதிலிருக்கக் கூடாதா? என்ன?"

ஏதாவது காரணம் உண்டோ இல்லையோ, தனதாஸருடைய முகத்தில் கவலை தெரிய ஆரம்பித்து விட்டது. வரவரக் கவலையதிகரித்து கடைசியில் வியாதியாகப் பாய்ந்தது. அதுவே அவருக்கு யமனாக முடிந்தது. அவர் மனைவிக்குப் புருஷன் இறந்த பிறகு இந்த உலகத்தில் இருக்க விருப்பமில்லை. ஹிரண்மயிக்கு வேறொருவருமில்லை. இதற்காக ஹிரண்மயி தாயாரின் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "அம்மா, நீ செத்துப்போகாதே" என்று ரொம்ப அழுது கொண்டு சொன்னாள். ஆனால் செட்டியின் மனைவியின் காதில் அது படவேயில்லை. அப்பொழுது ஹிரண்மயி இந்த லோகத்தில் "பரதேசி" யாய் விட்டாள்.

சாகும் ஸமயத்தில் ஹிரண்மயி தாயார் அவளுக்குத் தெரிவித்தாள். "குழந்தை உனக்கு என்ன கவலை? உனக்கு ஒரு புருஷன் கட்டாயமாயிருக்கிறான். குறிப்பிட்ட காலம் வந்த பிறகு அவனைச் சந்திக்க முடிந்தாலும் முடியும். இல்லை என்றால் நீ "வினை" த்தெரியாத குழந்தையில்லை. லோகத்தில் பெருந்துணையாகிய அது—பணம்—உனக்கு யதேஷ்டமாகவிருக்கிறது."



ஆனால் தாய் இறந்தபின் அந்த ஆசையும் விட்டுப்போய்விட்டது. தனதாஸர் செத்தபிறகு அவர் ஒன்றும் வைத்துவிட்டுப் போகவில்லையென்று பின்னே தெரிய வந்தது. நகை, வீடு, வீட்டு சாமான்கள் தவிர வேறொன்றுமில்லை. கொஞ்ச வருஷமாகத் தனதாஸர் வியாபாரத்தில் நஷ்டம் அடைந்து கொண்டு வந்ததாக ஹிரண்மயிக்கு விசாரித்ததில் தெரிந்தது. அவர் இதை யாருக்கும் சொல்லாமல் நஷ்டத்தை யெப்படியாவது ஈடுபண்ணப் பிரயத்தனம் செய்தார். இது தான் அவர் கவலைக்குக் காரணம். கடைசியில் பிரயத்தனம் அஸாத்தியமாய்ப் போய்விட்டது. தனதாஸர் மனதில் ரொம்ப வியாகூலமடைந்து அதனால் தான் இறந்துபோனார்.

இந்தமாதிரி "சேதி" கேட்டவுடன் 'இங்கே அங்கே' இருந்த செட்டிகளெல்லாம் ஹிரண்மயி கிட்டவந்து "உன் தகப்பனார் எங்களிடம் கடன்பட்டு விட்டு இறந்தார். எங்கள் கடனைத் தீர்த்துவிடு" என்று சொன்னார்கள். அவர்கள் வார்த்தை மெய்தான் என்று ஹிரண்மயிக்கு விசாரித்ததில் தெரியவந்தது. அப்பொழுது அவள் எல்லாவற்றையும் விற்று அவர்கள் கடனை யடைத்தாள். குடியிருந்த வீடு முதல் விற்று விட்டாள்.

இப்பொழுது அன்ன வஸ்திரத்துக்கு மிகவும் கஷ்டமுண்டாக ஹிரண்மயி பட்டணத்துக் கோடியிலே ஒரு குடிசையில் ஏகாங்கியாய் வாஸம் செய்துகொண்டு வந்தாள். ஒருவரே ஒருவர் தான் அவளுக்குப் பரம உபகாரி. அவர் ஆனந்தஸ்வாமி. ஆனால் அவர் அப்போது தூரதேசத்திலிருந்தார். ஆனந்தஸ்வாமியிடம் போய்ச்சொல்லும்படியான மனிதர் ஒருவரும் அவளுக்குக்கிடையாது.

## V

ஹிரண்மயி பால்யம், பரமசுந்தரி. தனியாக ஒரு வீட்டில் படுத்துக்கொண்டிருப்பது நன்றாயிராது. ஆபத்துகிடமுண்டு, பேரும் கெட்டுப்போய்விடும். அமலா என்ற ஒருஇடைச்சி அவள் பக்கத்து வீட்டுக்காரி. அவள் விதவை. அவளுக்கு ஒரு பிள்ளைக்குழந்தை, இரண்டு மூன்று பெண்கள். அவளுக்கு பால்யம் தாண்டிப்போய் விட்டது. நடத்தை ரொம்பநல்லது என்றுஊரில் அவளுக்குப்பெயர் கிளம்பியிருந்தது. ஹிரண்மயி ராத்திரி ராத்திரி அவள் வீட்டுக்குப்போய்ப் படுத்துக்கொண்டுவந்தாள்.

ஒரு நாள் ஹிரண்மயி அமலா வீட்டுக்குப்படுக்க வந்த பிறகு அமலா அவளிடம் சொன்னாள். "புரந்தரசெட்டி இருக்கிறானே

அவனெட்டுவருஷத்துக்கப்புறம்ஊருக்குத்திரும்பிவந்துவிட்டான் என்று கேள்விப்பட்டேன்." இதுகேட்டு ஹிரண்மயி முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவள் கண்ணிலிருந்து நீர்வருவதை அமலா பார்க்கவில்லை. லோகத்திலே அவளுடைய கடைசி பந்தம் அறுந்துபோய்விட்டது. புறந்தான் அவளை மறந்துவிட்டான். இல்லாவிடில் திரும்பிவந்திருக்கமாட்டான். புரந்தரனுக்கு இப்பொழுது ஞாபகம் இருக்கட்டும் இல்லாதிருக்கட்டும், அதனால் அவளுக்கு லாபம் என்ன நஷ்டம் என்ன! இருந்தாலும் எந்த ஸ்நேஹிதன் வார்த்தையை நினைத்து நினைத்து எல்லாப் பிராணனும் உருகுகிறதோ அவன் மறந்துவிட்டான் என்பதை நினைக்கமனது கொஞ்சம் கஷ்டப்படுகிறது.

ஹிரண்மயி ஒரு தடவைநினைத்தாள் "மறந்துபோகவில்லை — எத்தனை நாள் எனக்காக அன்னிய தேசத்திலிருப்பான் — அவன் தகப்பனார் சாவு அவனுக்கு முக்கியம் — இனிமேல் ஊருக்குவராமல் ஏன் இருக்கவேண்டும்?" இன்னொரு தடவை நினைத்தாள்- "நான்பதி விரதையல்ல — அதற்குச் சந்தேகமில்லை. இல்லாவிடில் புரந்தரனைப்பற்றி நான் ஏன் நினைக்கவேண்டும்."

அமலாசொன்னாள் "புரந்தரனை உனக்கு ஞாபகமில்லையா, என்ன,சசிகுமாரசெட்டி பிள்ளை." ஹிரண்மயி தெரியும்அமலா — அவன்தான் திரும்பிவந்துவிட்டான். எத்தனை கப்பலில் அவன் பணம்வந்தது! அம்மாடி, அதை எண்ணமுடியுமா என்ன? இவ்வளவு பணம் "நம்ம"தாம்ரலிப்தத்தில் இதுவரையிலும் யாரும் பார்த்ததில்லை."

ஹிரண்மயி மார்பில்கொஞ்சம்சுருக்கென்று தைத்தது. தன்னுடைய தரித்திரநிலைமையைப்பற்றி நினைத்தாள். பால்ய ஸ்நேகிதம் ஞாபகத்துக்கு வந்தது. தரித்திரத்தின் கொடுமை பெருங்கொடுமை. தன் கண்முன்னாலிருக்கிற அவ்வளவு சொத்துக்கும்ஹிரண்மயி எஜமானியாக இருந்திருக்கலாம். இந்தநினைவினால்யாருடைய ரத்தந்தான் கொதிக்காது? அப்படிக் கொதிக்காத ஸ்திரீகளின் எண்ணிக்கை மிகவும் குறை. ஹிரண்மயி மனது கொஞ்சநாழிகை வேறெதிலேயோ இருந்தது. பிறகு வேறு பிரஸ்தாபம் எடுத்தாள். கடைசியில்படுத்துக்கொள்ளப்போகிறஸமயத்தில் "அமலா, அந்தச் செட்டிப்பிள்ளைக்குக் கலியாணம் ஆகிவிட்டதோ" என்று கேட்டாள். "கலியாணமாகவில்லை" என்றாள் அமலா.



ஹிரண்மயி உடம்பு கொஞ்சம் 'தூக்கிப்போட்டது.' அன்றையதினம் ராத்திரிவேறு சம்பாஷணை கிடையாது.

## கடவுள் வழிபாடு.

(ஸ்ரீ. ஆர். எஸ். கங்கா ஜடேச சர்மா அவர்களெழுதியது.)

" அறவாழி யந்தணன் றாள் சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது"

(திருக்குறள்.)

கடவுளைவழிபடுதல் என்பது கடவுளிடத்து நமக்குள்ளதூய நட்பை அல்லது அன்பைக்குறிக்கும் ஓர் தூய செய்கையாகும். பிறவிக்கடலைக் கடந்து அழிவற்ற இன்பத்தையும், நிலையான வாழ்வையும், அடையவிரும்புகிற எல்லா வுயிர்களும் இத்தூய செய்கையைத் தவராது கைக்கொள்ள வேண்டும். ஜீவாத்மா பரமாத்மாக்களுடைய ஒற்றுமையை நேரேகண்டறிவதற்கு இது மிகவும் பெரிய உதவியாகும். இது வழிபடுபவரது நிலைமையைப் பொருத்துப் பலவிதங்களாகக் கைக்கொள்ளத் தக்கதாகும். கடவுளது தூய, தெளிந்த, இனிய, குறைவற்று நிறைந்த வடிவத்தைபற்றித் துதிகளும், பாடல்களுஞ் சொல்லிப் போற்றியும், தனது துன்பங்களையும், பிழைகளையும் கூட நீக்கிக்கொண்டு, கடவுளது தூய வடிவத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டியும், அவரது தூய வடிவம்போல் ஏதேனுமொரு விசேஷமான உருவத்தில் உள்ளன்போடு நினைத்தும், வழிபட வேண்டியது. அனைத்திலும் இலகுவானது கடவுளை வழிபடுதல். இது சாதாரணமாய் நம்மவரால் பூஜித்தல், ஆராதித்தல், உபாஸித்தல் அல்லது வணங்குதல், வழிபடுதல் என்று கூறப்படுகின்றது. எல்லா மனிதர்க்கும் (இறைவனைப் பணியவேண்டுமென்ற) இந்த எண்ணம் உடன் பிறந்ததே. எங்கு செல்வம், அழகு, அறிவு முதலியன மிகுந்து தோன்றுகின்றதோ, அங்கெல்லாம், மனிதரது மனம் பலமாய்க் கவரப்படுச் செல்கின்றது. இங்ஙனம் மனதைக்கவரும் பொருள்களெல்லாம், மனிதர்களால் உள்ளன்போடு போற்றவேண்டியும், வருகின்றது. இவ்வித மனித வியற்கையானது சிறிது சிறிதாக வெளிப்பட்டு ஒவ்வொரு செயல்களையும், நல்லொழுக்கங்களையும்,

உண்டுபண்ணிவிட்டது. இம்மாதிரியே எல்லாம் வல்ல இறைவனை

"ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா யயனாய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யனந்தமூர்த் தியுமாய் நிற்கும்
மூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனாய் நாளுந்
தோன்றிய விமல போத ஸ்வ ரூபத்தைப் பணிக்கின்றேனே"

(கைவல்ய நவநீதம்.)

என்று கூறியுள்ளபடி ஆராய்ந்த பொழுது கடவுள் எங்கும் உள்ளும், புறமும், நிறைந்தவர் என்றும், அவரை யெங்கு வணங்கினாலும், அதனை யவர் அறிந்து கொள்வதுமன்றி வழிபடுபவரது விருப்பத்தை யறிந்து அருள்புரிபவரென்ற நிச்சயமான நம்பிக்கையால், அன்பர்கள் கடவுளைப் பல அழகிய வடிவங்களில் நிறுத்திப் போற்றிவரலாயினர். இவ்வாறு போற்றத் தொடங்கியபலஅன்பர்கட்குத் தமது விருப்பங்கள் முற்றிலும் ஈடேறவும் தொடங்கியன. இதனைக் கண்ணுற்றபலரும், சிறிது சிறிதாகக் கடவுளை வழிபடுவதை விடாது கைகொள்ளலாயினர். இவ்வாறே நமக்குச் சில வணக்கமும் (விக்ரஹாராதனையும்) வழிபடுநெறி (பூஜாவிதி)களும் உண்டாயின.

"ஆடுவதும் பாடுவதும் ஆநந்தமாக நின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே."

(ஸ்ரீ தாயுமானவர்.)

இவ்வணக்கங்களெல்லாம் அன்புள்ள பெரியோர்கட்குக் கடவுளது அருளை அளித்துள்ளன. இப்பொழுதும் அருள் பொழிந்து வருகின்றன. அன்றியும் நம் கண்ணன் கூறுவதைக்கேண்மின்!

"யேயதா மாம் ப்ரபத்யந்தே
தாம்ஸ்தைதைவ பஜாம்யஹம்."

எவ்வாறு அவர் (மனிதர்)கள் என்னை வணங்குகின்றார்களோ, அவ்வாறே யான் அவர்களுக்குத் தோன்றியருள்கின்றேன், என்று கூறுகின்றார். கடவுளுக்கு ஓர் உருவமுமில்லை. எனினும் அருவமுமில்லை. எல்லாவுருவமும் உண்டு. அன்றியும் கடவுள் எங்கும், எல்லாவற்றினும், உள்ளும், புறமும், நிறைந்திருக்கின்றார். ஸுலபத்தில் (இவ்வூனக் கண்களைக்கொண்டு) எவராலும்



அறியமுடியாதவர். ஆனதுபற்றி அருட்கண் படைத்துள்ள அன்பர்களன்றி மற்றையோர் காண்டலரிது.

"அகத்தூ டணுவணுவாய் அண்டமெலாந் தானாய்
மகத்தாகி நின்றநின்னை வாழி பராபரமே.

(ஸ்ரீ தாயுமானவர்.)

தீயானது கல்லிலும், மரத்திலும், மனிதரது உடலிலும், என்று மட்டுமில்லை; இன்னும் பல பொருள்களிலுமிருக்கிறது. அவைகள் ஒன்றையொன்று தாக்குவதாலோ, உராய்ந்து கொள்வதாலோ, சூடுண்டாய்த் தீக் கிளம்புகிறது.

சிலபொழுது (மூங்கில் போன்ற) மரங்கள் உராய்வதனால் நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிந்து போவதையும் நாம் காண்கின்றோம். நெருப்புக் குச்சியில் மருந்துள்ள பக்கத்தைக் கிழிக்கும்பொழுது அதிலிருந்து தீக் கிளம்புவதை நாம் நேரில் காண்கின்றோம். இவ்விதமே கடவுள் எங்கும் நிறைந்துள்ள பொருள். அவரில்லாத இடமில்லையென்றாலும், கடவுளை நேரில் எங்குங் காணவில்லை. கடவுளை நேரில் காணவும் அவரதருளைப்பெறவும் சில தனிமையான இடமும், செய்கைகளும் இன்றியமையாதனவாய் உள்ளன. கடவுளை வழிபடுதல் என்பது மேற்கண்டவைகளுள் முதன்மையானது. இந்துக்களாகிய நாம் கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பதை அறியாமலாவது ஒப்புக்கொள்ளாமலாவது இல்லை. நமது எந்த நூலிலும், எங்குநோக்கினும், இவ்வொரு உண்மை எங்கும் விளங்குவதைக் காணலாம். என்றாலும் கடவுளை வழிபடுவதற்கென்று ஒரு தனிமையான இடத்தைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். இறைவனது அருள் எங்குமுண்டெனினும், அது ஸாதாரணமானதும், புலப்படாததுமாகும். நான், நீ, நாம்வேறு கடவுள் வேறு என்ற (இருமை) எண்ணம் நீங்கி நானே யவன் அவனே நான் என்ற (ஒருமை) எண்ணம் உண்டாகிற வரையில் என்வீடு உன்வீடென்பதுபோல் கடவுளுக்கும் ஒரு வீடு தனியாயிருப்பதும் நாம் ஆடை யணி உணவு முதலியவற்றை விரும்புகிறபடி கடவுளுக்கும் உயர்ந்த உணவும், ஆடையும் அணிகளும் அளித்துக்களித்தலும் இன்றியமையாதனவே. தனிமையான பெரும் நல்லெண்ணங்கள் நிறைந்த கோயிற்களிலோ அது மேலானதும் கடவுள் அருளை நேரிற்றோன்றச்செய்கின்றது. என்னிடத்தும் மரத்திலும் நெருப்புள்ள அடுப்பிலும்

எரிகின்ற விளக்கிலும் நீ (சூடு)ஒரேவிதம் தான் என்றுயாரேனும் கூறுவார்களா ? கூறத்துணியார்களன்றோ ! ஆதலாற் பெரிய க்ஷேத்ரங்களிலும் மூர்த்திகளிலும், பல அன்பர்களான பெரியோர்களின் உறுதியான எண்ணங்களால் நிலைநிறுத்தப்பட்டுள்ள சில (விக்ரஹங்)களில் அவர்களது மேலானவேண்டுகோளுக்கிறங்கிய கடவுளது உருவம் தோன்றுவதால் அருள்சுரந்து மேலாகவிளங்குகின்றது. இவற்றினுண்மையை அன்பின் மிகுதியால் மட்டும் அறியலாம். உள்ளன்புடையோர் கடவுளை நேருக்குநேராய்க் காண்பார்கள், மற்றையோர் காண்பதரிது. அன்பில்லாதவர்கட்குக் கடவுளை காணுங்கண் திறக்கப்படாமல் மூடப்பட்டிருக்கும்.

" விரும்பி லவனடி வீர சுவர்க்கம்
பொருந்தி லவனடி புண்ணிய லோகம்
இருந்தி லவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி யவனடி வாழ்த்தவல் லோர்க்கே "

(திருமந்திரம்.)

செவிடன்முன் இன்னிசையுடன் பாடுவதும், உணர்ச்சியில்லாதவனுக்குச் செய்யும் பணிவிடையும், குருடனுக் கெதிரே அழகிய பொருளைக் காண்பித்தலும், நா' டித்துச் சுவை யறியும் வல்லமையற்றவனுக்கு இன்சுவை ' அருந்திய நல்லுணவும் சிற்றுண்டியுமளித்தலும்-சளிப்பிடி ு மூக்கடைபட்டுள்ள வொருவனுக்கு நறுமணங்கமழும் மலர்களையும் மற்றும் பலமணமுடைய பொருள்களையளித்தலும் எப்படி அவர்களால் அப்பொருள்களின் அருமை பெருமைகள் அறியப்படாம லிகழப்பட்டுப் போய்விடுகின்றனவோ, அவ்வாறே க்ஷேத்ரங்களிலும், அருள் நிறைந்தமூர்த்திகளிடத்தும், உள்ளன்பில்லாதவர் ஒன்றையுங்காணார். அதனால் ஒன்று மில்லையென்று கூறிவிடலாமோ வெனின் அவ்வாறு கூறுதல் அறிவிலார் செய்கை. ஆதலின் அவர்கள் நமக்குக் கடவுளைக்கண்டு மகிழ்வதற்கு இன்னும் தகுதியுண்டாகவில்லையென்று அறிந்து அத்தகுதியை எவ்வாறடையலா மென்றாராய வேண்டும். முயற்சித்தால் பயன் கிட்டாமற்போகாது.

" முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார் "

என்பது ஆன்றோர் மொழியன்றோ ! ஆதலின் முயல்வார்களாக., ஒரு அன்பர்



" என்புநைந் துருகி நெக்கு நெக்கேங்கி
அன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
யுரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கண்களி கூற நுண்டுளி யரும்பச்
சாயா வன்பினை நாடொறுந் தழைப்பவர் "

(திருவாசகம்.)

எனக்கடவுளை வழிபடுவதைக்காண நம்மனதிற்கு எவ்வளவு இன்பமாயிருக்கின்றது. அது கண்டோர் மனதைக் கவருகின்ற தன்றோ ! ஓர் கோயிலுக்குச் சென்றால் அங்குள்ள அன்பர்கள், மந்த்ரத்தினாற்றூயதாக்கப்பட்ட நீரில் மூழ்கி உடலை உள்ளும் புறமும், தூயதாக்கிக்கொண்டு தூயவுடை முதலியன வணிந்து ஒரு நிலைப்பட்ட மனதுடன் கடவுளை வணங்கி, அவ்வக்காலக்கடன் களை முடித்து, கடவுளை வழிபடு நெறிவழுவாது, முறையே, மஞ்சன நீராட்டி, சாந்துகளைத்தீட்டி, நறுமலர் மாலைசூட்டி, தூபப் புகையூட்டி, தீபவொளி காட்டி, இன்னமுதூட்டி, பெரிதும் பாராட்டி, அறிவிலாருய்யும் வழிகாட்டி, அவனது புகழ் நாட்டி, மெய்மறந்து களிப்பது முதலியவைகளாற் கடவுளை வழிபடுவதைக் காண்கின்றோம்.

அன்பின் அறிகுறியான (மனதாகிய) மலர்களைக் கடவுளினது பொற்றாமரைக் கழலிணைகளில் அன்புடன் தூவுகின்றார்கள். ஒரு செய்கையை யெண்ணி வேண்டுகோளுடன் கடவுளது உருவத்தினிடத்து அவரது மூலமந்திரங்களை ஓதுகின்றார்கள். அப்பொழுது அவ்வடிவத்தின் வல்லமையைப் பெறும் ஓர் உணர்ச்சியானது வழிபடுவோன் உள்ளத்திலும், சுற்றிலும் உள்ள இடங்களிலும், பரவுகின்றது. பிறகு அன்பர் கடவுளிடத்து அளவிடவொண்ணா அன்பைச் செலுத்தி மனதை நிறுத்தி மெய் மறந்து,

" பிணியெலாம் வரினு மஞ்சேன்
பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
றுணிநிலா வணியினான்றன்
றொழும்பரோ டழுந்தியம்மா

றிணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலாதவரைக் கண்டால்
அம்மநா மஞ்சுமாறே."

(திருவாசகம்)

என்றபடி போற்றி வணங்கிப் புகழ்ந்தாடத் தொடங்குகின்றார்கள். அப்பொழுது அவர்களது மனம் மனிதர்கள் வல்லமையைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த வல்லமையைப் பெறுகின்றது. இவ்வாறு எதிரிலுள்ள உருவத்தில் நிலைநிறுத்தப்பட்டவல்லமையில் அன்பர்களது மனம்கட்டுப்படுகின்றது. முடிவில் அன்பரது மனம் கடவுளின் கண் பொருந்திப் பதிந்தும் விடுகின்றது. இந்நிலையில் அன்பர்கள் அனைத்தையும் மறந்து கடவுளுந்தாமும் ஒன்றாய் விடுகின்றார்கள். அதனால் மிகுந்த அடக்கத்தையும், அளவற்ற இன்பத்தையும் அடைந்து ஜீவன் முக்தராகின்றார்கள்.

" முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே "

இவ்வளவு அரிய பெருமைவாய்ந்த கடவுள் வழிபாடானது கடலலைப்பட்டதுரும் பென்றலையும், மனத்தை நிலைநிறுத்தி இன்பமளிக்கின்றது. மனத்தைத் தூயதாக்குகின்றது. நிலைமையையுயர்த்துகின்றது. ஆன்மாவின் முன்னேற்றத்தை யளிக்கின்றது.

" பச்சிலையைப்பறித்துப் பாதத்திற் சாத்தினு
லிச்சையானதீயு மென்தெய்வம்—என்றார் "

(நந்தனார்)

விரும்பியவற்றை யுடனே யடையச்செய்கின்றது. பொதுவில் அமைதி (சாந்தி) யளிக்கின்றது. இது நமது இந்துமதம் என்னும் அன்னை தனது சிறுமைந்தர்களான நமக்கூட்டும் முலைப்பாலாகும். கடவுளை வழிபட்டோங்கிக் கவலையற்றுலகோர் வாழ்க! சுபம். ஓம்.

கங்கா ஜடேச சர்மா.



## நிகழ்காலக் குறிப்புகள்.

தேசாபிமான சிம்ஹமாகிய ஸ்ரீபாலகங்காதர திலகர் சென்ற மாதம் 16 - ம் தேதியன்று இரவு ஒருமணிக்கு புனாவில் விடுதலை செய்யப்பெற்றார். இவர் ராஜநிந்தனைக் குற்றம் சாட்டப்பட்டு பம்பாய் ஹைக்கோர்ட் ஜட்ஜி தேவார் என்பவரால் ஆறுவருஷம் தீபாந்திர சிட்சை விதிக்கப் பெற்றார். ஆனால் கவர்ன் மெண்டார் இந்த சிட்சையை வெறுங்காவலாக மாற்றி இவரை பர்மாதேசத்திலுள்ள மாண்டலே நகரத்து ஜெயிலில் கொண்டுபோய் வைத்திருந்தனர். இவர் தண்டிக்கப் பட்ட காலத்தில், ஆயுசு பரியந்தம் தீவாந்தர சிட்சைவிதிக்கப் பட்டவர்களையே அந்தமான் தீவிற்கு அனுப்ப வேண்டுமென்றும் சில வருஷங்கட்குத் தீவாந்தர சிட்சை என்று விதிக்கப் பட்டவர்களை யெல்லாம் இத்தேசத்தில் கடுங்காவற் கைதிகளைப்போல நடத்த வேண்டுமென்றும் கவர்ன்மெண்டாருடைய உத்தரவு ஒன்று ஊர்ஜிதத்திலிருந்தது. பம்பாய் கவர்ன் மெண்டார் ஸ்ரீ திலகருடைய கடுங்காவற்றண்டனையை வெறுங்காவற்றண்டனையாக மாற்றி விட்டனர். ஆகவே, கடுங்காவல் தண்டனையை அநுபவிக்கும் கைதிகளுக்கு நன்னடத்தைக் கென்றும் செய்யும் வேலைக்கென்றும் ராஜரின் பட்டாபிஷேகத்திற் கென்றும் இன்னும் பலவகையிலும் தள்ளிக்கொடுக்கப் படுகின்ற வஜா நாட்கள் இவருக்குத் தள்ளிக்கொடுக்கப் படாததினாலே-ஏனென்றால், வெறுங் காவற் கைதிகளுக்கு அவ்வுரிமைகள் இல்லை - தண்டனைக் காலம் முழுவதும் சிறையில் கழிக்க வேண்டி வந்தது. அவர் தமது கடுங்காவற் றண்டனையை வெறுங் காவலாக மாற்றித்தர வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ள வில்லை. என்ன உத்தேசத்துடன் கவர்ன்மெண்டார் அவருடைய தண்டனையை வெறுங்காவலாக மாற்றினரோ? நமக்கு ஊகிக்கமுடியவில்லை. எப்படியாயினும், ஸ்ரீதிலகர் சிறையினின்றும் விடுபட்டு க்ஷேமமாய் ஊர்வந்து சேர்ந்தாரென்று அறிய நாம் அடங்கா மகிழ்ச்சி யடைகின்றோம். முன்போலவே இவர் ஊக்கமும் உற்சாகமும் பெருகித்தேச நன்மையின் பொருட்டுத் தர்மசேவை செய்யுமாறும் அதற்கு அவருடைய மனோவாக்குக்காயங்களாகிய திரிகரணங்கட்கும் வல்லமையை அளித்து தேசத்தை நந்நிலைக்குக் கொண்டு வருமாறு நாம் எல்லாம் வல்ல எம் இறைவியை இறைஞ்சுகின்றோம்.

நமது ராஜப்பிரதிநிதியவர்களுடைய ஆருயிர்த்துணைவியான லேடி ஹார்டிஞ்சு திடீரென்று பரமபத மடைந்தனரென்று கேள்விப்பட்டு மிகவும் துக்கிக்கிறோம். நம் இந்தியா தேசத்திற்கு இதுவரையில் ராஜப்பிரதிநிதிகளாய் வந்தவர்களுள் லார்ட் ரிப்பனும் அவருக்குப் பிறகு லார்ட் ஹார்டிஞ்சுமே இந்திய ஜனங்கள் தம்மை என்றென்றும் மறக்கமுடியாதவாறு அவ்வளவு நன்மை செய்திருக்கின்றனர். லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் சென்னையில் தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்காகப் பரிந்து பேசிய பேச்சின் உண்மையும் தீரமும் இந்திய சரித்திரத்தில் என்றும் நிலையாக விளங்கும். இவர் ஸ்வேச்சையாக ராஜ்யபாரம் செய்யும்படி விடப்பட்டிருப்பாராயின், இந்திய ஜனங்கள் அதிஷ்ட சாலிகளாயிருந்திருப்பார்கள். இவ்வளவு நல்ல குணங்கள் வாய்ந்த லார்ட் ஹார்டிஞ்சு அவர்களின் உத்தமமனோ நிலைமைக்கு ஒரு சிறிதாவது லேடி ஹார்டிஞ்சு அவர்கள் காரணமாயிருந்தனரென்பதற்குச் சந்தேகம் இல்லை. டில்லி வெடிகுண்டு விபத்தில் இவர் காட்டியமனோதைரியமும் தமது புருஷனுடைய ஜன்மதினக்கொண்டாட்டத்தைக் குழந்தைகளின் உபசாரணைக் கொண்டாட்டமாகக் கொண்டாடியதும் எல்லாருடைய ஹிருதயங்களிலும் நன்றாய்ப் பதிந்திருக்கின்றன. லேடி ஹார்டிஞ்சு அவர்களுடைய மரணத்தினால் இந்திய ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் விசனம்இவ்வளவென்று கூறமுடியாது. இவரது மரணத்தினால் லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் தமது அருந்துணைவியை இழந்தார்; குழந்தைகள் தாயை இழந்தனர்; உலகம் ஓர் ஸ்திரீ ரத்தினத்தை இழந்தது. நாம் இச்செய்தியைக் கேள்விப்பட்டவுடன் திடுக்கிட்டு விட்டோம். நல்லவர்கட்கு நேரிடும் ஆபத்துக்களைப்பற்றிக் கேட்க எவரால்தான் சகிக்க முடியும்? நாம் நமது மனப்பூர்வமான அநுதாபத்தை லார்ட் ஹார்டிஞ்சு அவர்களிடத்தில் செலுத்துகின்றோம்.


# ஞானபாநு.

VOL - 2. தொகுதி - 2. | August 1914. ஆனந்தஹூ ஆவணிமீ | No - 5. பகுதி - 5.


6 - OCT 191[illegible]

## பிரம்ஹாநந்தத்தின் பெருமை

'அடிமுடியு நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டா
லத்துவித வாநந்த சித்தமுண்டா நமது
குடிமுழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்த
கோலமெலா நன்றாகும் குறைவுநிறை வறவே
விடியுமுத யம்போல வருளுதயம் பெற்ற
வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலுங் களியாப்
பாலருட னுன்மத்தர் பசாசர் குணம் வருமே.''

என்று ஸ்ரீ தாயுமானவர் கூறியுள்ளார். ஆதிமத்தியாந்தரகிதமாய் சமஸ்தமுமாயிருக்கப்பட்ட பிரம்ஹ வஸ்துவாயமர்ந்துவிட்டால், நமது ஹிருதயமானது நிகரற்ற ஆநந்தத்தினால் குதூகலிக்கும்; நமது குடும்பமாகிய சிருஷ்டிமுழுதும் கடைத்தேறிவிடும்;குறையென்பதேயில்லை;எடுத்த வேஷமெல்லாம் இன்புறவே முடியும்; அவ்வஸ்துவினிடத்தில் குறைவுமில்லை நிறைவும் இல்லை; இருளை நீக்கிப்பிரகாசத்தை யளிக்கமுற்படும் உதயகாலம் போல, அஞ்ஞானத்தை யகற்றி ஞானத்தையளிக்க முற்படும்திருவருள் உண்டாகும் காலத்தையடைந்த உத்தம புருஷர்களோடும் சேர்ந்து களிக்கலாம். "தரணியொடு வானளா"த் தந்தாலும் திருப்தியடையாத குழந்தைகள், பித்தர்கள், பேயர்கள் இவர்களுடையதைப்போன்ற நிலைமை உண்டாகும்.

* * *

"பரவெளி" என்பது எங்கும் வியாபகமாயிருக்கின்ற ஆகாசத்தையும் அடக்கி அதற்கு மேல் ஏகமாய் வியாபித்திருக்கின்ற பரமாகாச பிரம்ஹ வஸ்துவின் லட்சணம். அடியும் முடியும் உள்ள வஸ்துவிற்கு அகண்ட வஸ்து என்ற பேர்தகாது. ஆனால் பிரம்ஹ வஸ்துவிற்கு அகண்டத் தன்மையுளதன்றோ? அடியென்றும் முடியென்றும் தன்மைகள் உண்டாமாயின், அவ்வடிக்கு முன்னும்

முடிக்குப் பின்னும் அவ்வஸ்து இல்லையென்று சொல்ல வேண்டியதுதானே. அப்படியாயின் உற்பத்தி நாசங்கட்கு உட்பட்டதுதானே. உற்பத்திநாசங்கட்கு உட்படவே, அந்த வஸ்து துக்காஸ்பதமாம். உற்பத்தி நாசரஹிதமாய், என்றும் உள்ளதாய், ஏகமாயுள்ள பரம்பொருளே ஆநந்த சொரூபமாம். ஆதலால் பிரம்ஹவஸ்து உற்பத்தி நாசவிதிகட்குட்பட்டது என்று கூறுதல் பொருந்ாது. ஏனெனில், நித்யா நித்தியவஸ்துவிவேக ஆராய்ச்சியினால், இதையும் அநித்திய மென்று தள்ளி நித்தியவஸ்துவை நாடி, நித்தியானந்தத்தையடைய முயற்சிப்பர் மனிதர். எது நித்திய வஸ்துவோ, அது தான் பிரம்ஹம் எனப்படும். இரண்டற்று ஏகமாயுள்ள வஸ்துவிற்கு அடியேது, முடியேது? ஏகம் என்றால் ஒன்று என்று சாதாரணமாகப் பொருள் படுமாயினும் இங்கு பிரம்ஹவஸ்துவின் லட்சணமாகக்குறிக்கப்படும்பொழுது இரண்டற்ற தன்மை அதாவது நிகரற்ற தன்மையைக் குறிக்கின்றது. ஏகம் என்றால், ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேத ரஹிதமாயுமாயுள்ளது.

* * *

ஸஜாதீயம் என்றால் ஒரே ஜாதி. ஒரு மனிதனுக்கு மற்றோர் மனிதன் ஸஜாதீயம். பிரம்ஹ வஸ்துவைப்போல் மற்றோர் பிரம்ஹ வஸ்துவில்லாததால், பிரம்ஹ வஸ்து ஸஜாதீய ரஹிதமாயுள்ளது எனப்பட்டது. விஜாதீயம் என்றால் வேறு ஜாதி. ஒரு மனிதனுக்கு ஒரு மிருகம் விஜாதீயம். பிரம்ஹ வஸ்துவைத் தவிர வேறு வஸ்துவில்லாததால், பிரம்ஹவஸ்து விஜாதீய ரஹிதமாயுள்ளது எனப்பட்டது. ஸ்வகதம் என்றால் ஒரே ஜாதியின் பிரிவுகள். ஒரு மனிதனுக்குக் கை, கால் முதலிய அவயவங்கள் ஸ்வகதம். இதை போன்று பிரம்ஹவஸ்துவிற்குப் பிரிவுகள் இல்லாததால் பிரம்மஹவஸ்து ஸ்வகத ரஹிதமாயுள்ளது எனப்பட்டது, ஆகவே பிரம்ஹவஸ்து இரண்டற்றதாம். பிரஹ்மவஸ்துவைப்போல இன்னொரு வஸ்து நித்தியத்தன்மை வாய்ந்திருக்க நியாயம் இல்லை. அடி, நடு, முடி யற்று அகண்டமாய் விளங்கும் வஸ்து ஒன்றாகத்தான் இருக்கவேண்டும்.

* * *

பிரம்ஹவஸ்து அடியும் முடியும் உள்ளதாமாயின், அடிக்கு முன்னும் முடிக்குப் பின்னும் அவ்வஸ்து காலத்தினாலும் தேசத்தினாலும் கட்டப்பட்டதாய்விடும். ஆகவே, காலதேசங்கட்குட்பட்ட வஸ்துக்கள் பல ஏற்படுமேன்பதில் சந்தேகம் இல்லை. பல



வஸ்துக்கள் உண்டாம் பொழுது, துக்கமே பயனாய் முடியும். ஆதலால் காலதேசங்கட்கும் காரண வஸ்துவாய் நின்று இலங்கும்பிரஹ்ம வஸ்து ஒன்று என்பதில் சந்தேகம் என்ன ?

* * *

இத்தகைய, இரண்டற்ற வஸ்துவினிடத்தினின்றும் உண்டாகும் ஆநந்தம் நிகரற்றது என்பதில் சந்தேகம் என்ன ? ஆதலால் ஆதிமத்தியாந்த ரஹிதமாய் உள்ள நித்தியவஸ்துவினிடத்தில் நாம் நமது மனத்தை ஒரு நிலைப்படுத்திச் செலுத்துவோமாயின், நமது மனம் நிகரற்ற ஆநந்தத்தினால் நிறைந்து குதூகலிக்கும். ஆ! அவ்வாநந்தத்தின் பெருமையை என்னென்றுரைப்பது? இப்பூவுலகுக்கெல்லாம் ஏகச்சக்ராதிபத்தியம் செலுத்தும் சக்ரவர்த்திக்கும்இத்தகைய ஆநந்தம் சொப்பனத்திலேனும் உண்டாகுமா ? இவ்வாநந்தத்தின் பெருமையினாலன்றோ "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து, தரணியொடு வானாளத் தருவரேனு, மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லேம்" என்று சங்கநிதி பதுமநிதி முதலான நிதிகளையும்அவற்றைத்தரவல்ல ஈஸ்வரர்களையும் அலட்சியம் செய்துகூறினர்பெரியோர்? "அறிவார்அறிவார் யாரறிவார் அறிவுள்ளவர் அறிவார்" என்று ஒரு மகாத்மா கூறியதுபோல, இப்பிரஹ்மாநந்தத்தின் பெருமையை அறிவுள்ளோரே அறிவர். இன்னும் அநுபவிகளே நன்றாய் அறிவர். இந்த பிரம்ஹா நந்தாநு பவிகளுக்கு "வடகோடுயர்ந்தென்ன, தென்கோடு சாய்ந் தென்ன"? இவர்கள் பிரம்ஹாநந்த மாகிற சமுத்திரத்தில் மூழ்கிக் குளித்து, நீந்திக்களித்து, சதா சர்வதாகாலமும் ஓய்வு ஒழிவில்லாமல் அடங்கா மகிழ்ச்சியினராய் ஆடி யோடி விளையாடிக் கொண்டிருப்பார்கள். ஆ! ஆ! இந்நிலைமையை யடையப் பாடுபவர் எவருளர்? புன்மையிலும் புன்மையாய், அற்ப சுகத்தைத் தந்து நீடித்த துக்கத்தை அளிக்கா நின்ற மண், பெண், பொன் முதலிய அழியும் பொருள்களிடத்தே சுகத்தை யடையக் கருதி மனிதன் இரவும் பகலும் பாடு படுகின்றான். பிரத்தியட்சத்தில் ஜனன மரண சக்கரம் சுழன்று கொண்டிருப்பதை, தனக்கு நிகரில்லையென்று கர்வித்து தனது புஜபல பராக்கிரமத்தாலோ அல்லது புத்திசக்தியினாலோ அல்லது சாமர்த்தியமான தந்திரங்களாலோகோடானு கோடி ஜனங்களை அடக்கியாண்டு வருபவனும் ஈற்றில் மாண்டு ஒழிவதை, மனிதன் நேருக்கு நேரே தினந்தோறும் கண்டு கொண்டிருந்தும் அற்பப் பொருள்களிடத்து ஆசையைச் செலுத்துவது ஆச்சர்யமன்றோ ?

இங்ஙனம் மனிதன் அழியும் பொருள்களிடத்து ஆசையைச் செலுத்துவது அறிவீனத்தால் என்று சிலர் கூறுவர். அறிவீனத்தால் அன்று. சிருஷ்டிப் பொருள்களெல்லாம் அழிந்து விடுகின்றனவென்று, ஜீவராசிகளெல்லாம் மரிக்கின்றனவென்று, தானும் ஒரு காலத்தில் இறக்கவேண்டியவனே யென்று அறியாத மனிதன் எவன்? ஆதலால் ஏதோ ஓர் ஆச்சரியமான சக்தி, இன்னதென்று மனிதனுடைய அறிவுக்குப் புலப்படாத சக்தி ஒன்று மனிதனுடைய ஞானக் கண்ணை மறைத்து விடுகின்றது. இந்த இரண்டு ஊனக்கண்களினால் ஒன்றுக்கும் உதவாத உபயோகமற்ற, இந்த உலகப் பொருள்களைக் கண்டு களிக்கலாம். மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண், சூரியமண்டலம் சந்திரமண்டலங்களாகிய இரண்டு ஊனக்கண்களுக்கும் பிரகாசத்தையளித்துத் தான் மறைபட்டு நிற்கும் அக்கினி மண்டலமாகிய ஞானக் கண், யோகிகள் இடைவிடா அப்பியாசத்தினாலும் அளவற்ற வைராக்கியத்தினாலும் பாடுபட்டுத் திறந்து கொள்கின்றதும் இரண்டு புருவங்கட்கும் நடுவே உள்ளதுமான சைதந்நிய ஸூக்ஷ்ம திறந்தாலன்றோ அநிருத ஜடதுக்கரூபமாயிருக்கிற இந்தப் பிரபஞ்சம் பஸ்மீகரமாய்ப்போகும்? இந்த சைதந்நிய ஸூக்ஷ்ம திறந்தாலன்றோ ஆசா ஸ்வரூபமாயுள்ள மன்மதன் அடியோடு மாண்டொழிவான்?

* * *

இந்த ஞானக்கண்ணை மறைத்திருக்கும் சக்தியின் வல்லமைதான் என்னே? ஆச்சர்யம்! ஆச்சர்யம்; அழிந்துபோகும் பொருள்களையெல்லாம் ஒன்றுடனொன்று பிணைத்துக்கட்டி, அப்பொருள்கட்கு ஆசை யென்னும் கள்ளை யூட்டி. அலங்கோலம் செய்து அட்டகாசம் செய்கின்றது இந்த சக்தி. இந்த சக்தியின் மேலேறினோமாயின், நடராஜர் ஏறி நிர்த்தனம் செய்வதுபோல; நாமும் ஹிருதயம் உடைந்து ஆநந்த பரவசந்தராய் அடங்கா மகிழ்ச்சி கொண்டு ஆடிப்பாடி வீடேறலாம்.

* * *

இப்படி வீடேறிக் களிக்கடலில் ஆழ்ந்துவிட்டால், நாம் மாத்திரம் அல்ல, சிருஷ்டிராசிகளும் கடைத்தேறும். ஒரு குலத்தில் அகண்ட சச்சிதாநந்த சொரூப, சாட்சாத்கார ஞானத்தை அநுபவத்தில் அடைந்துள்ள ஒரு ஞானநிரன் உற்பவிப்பானாயின் அவனுடைய பூர்வே முதலே முறை முன்னோர்களெல்லோரும்—வங்,

S.L.
Rm 2U, N12
N12.2
162440



அவனுடைய முன்னோர்களெல்லோரும் முக்தியடைவார்கள் என்று வேதங்கள் கோஷிக்கின்றன. ஒரு பிரம்ஹநிஷ்டன் வசிக்கும் இடத்தைச் சுற்றி ஒரு யோசனை தூரம் குடியிருக்கும் சகல ஜனங்களும் கிருதார்த்தர்களாய் விடுவார்கள் என்று உபநிஷத்து பறை யடிக்கின்றது. இன்னும் பிரம்ஹ ஞானியின் தர்சன மாத்திரத்தாலும் ஸ்பர்சன மாத்திரத்தினாலும் நினைப்பு மாத்திரத்தாலும் பிரம்ஹ ஞானியின் சரித்திர வைபவங்களைக் கேட்பதினாலுமே ஜீவராசிகள் கரையேறி விடுவார்கள் என்று சாஸ்திரங்களெல்லாம் சாற்றுகின்றன. சமஸ்த உலகங்களையும் தானாகவே கண்டுகளித்துப் பிரசன்னமாய் விளங்கும் ஞானியால் உலகம் உய்ந்துவிடும் என்பதில் சந்தேகமும் உண்டோ?

* * *

பரிபூர்ண வஸ்துவாய் அமர்ந்து ஆநந்தம்பொங்கித் ததும்பி வழிந்து வேதாந்தமாய் வீற்றிருக்கும் ஞானிக்குக் குறையேது உளது? குறைந்த மனத்தின் குறையேயொழிய வேறு குறையேது? அண்டபிண்ட சராசரகோடிகளி லெல்லாம் வியாபித்து அகண்டமாய் மனமானது விரிந்து அகன்று பிரம்ஹவஸ்துவுடன் ஒன்றுபட்டு, பிரம்ஹவஸ்துவேயாகி விளங்கும் மனத்தினிடத்தில் குறையுண்டாகக் காரணம் இல்லை. எல்லாமாய் நிறைந்து எங்கும் விளங்கும் மனத்தில் குறை எப்படி ஏற்படும்?

* * *

நாடகத்தில் அவலட்சணமான சில வேஷங்களைப் போட்டு நடிப்பதற்குத்தான் அழகில்லாதோனுக்கு யோக்கியதையுண்டு. அழகுவாய்ந்த வேஷங்களை அவன் பூண்டால், ஆடையாபரணாதிகளால் அவன் எவ்வளவுதான் அலங்கரிக்கப்படினும், வேஷம் விகாரமாகவே யிருக்கும். ஆனால் இயற்கையிலேயே அழகுவாய்ந்தோனுக்கு லட்சணமான வேஷமும் அவலட்சணமான வேஷமும் எவ்வித வேஷமும் போடமுடியும். அதுபோல பிரம்ஹ ஞானமில்லாத சாதாரண ஜனங்கள் அவரவர்களுக்கேற்ற சிற்சில தொழில்களைத் தான் செய்யவல்லவர்கள். பிரம்ஹஞானியோ எத்தொழில் புரியினும் அத்தொழில் சிறந்து விளங்கும். அவன் தானும் பிறரும் இன்புறவே முடிப்பான். அவன் குற்றம் பொருந்திய தொழில் புரியினும் அத்தொழிலினால் ஒருவருக்கும் துன்பமுண்டாகாது. ஆனால் எல்லோருக்கும் இன்பமாகவேமுடியும். திருஷ்டாந்தமாக, நாரதர் திரிகாலஞானியாகித் திரிலோக சஞ்

சாரியாயிருந்தபோதிலும், கோள்மூட்டி விடுவதே அவரது தொழில். உலகினரால் எவ்வளவு இகழப்பட்டதொழில்! ஆயினும் அவரது கோட்சொற்களினால் எல்லோருக்கும் சுகமே உண்டாகும்.

* * *

தேவதேவனாகிய ஜகத்பதியின் திவ்விய திருவருள் பெற்ற பக்தகோடிகளுடன் சேர்ந்து ஆடலாம், பாடலாம், ஆநந்த கீர்த்தனம் செய்யலாம். பக்தி பழுத்து, அப்பழத்தினின்றும் பரமாநந்தாமிர்தம் பெருகிக்கசிந்து வழிந்து வெள்ளமாகிப் புரண்டு எல்லையற்று எதிர்ப்பாரின்றி ஏகமாய்ப் பெருக, அப்பெருக்கத்தை வாரிவாரிக்குடித்து இடைவிடா இன்பத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் பக்தசிரேஷ்டர்களுடன் சேர்ந்து கும்மாளம் போட்டுக் கொண்டாடி நடித்துக் கைகோர்த்து விளையாடும் விளையாட்டினின்றும் உண்டாகும் சந்தோஷத்திற்கு அளவுஉண்டோ?

* * *

ஞானிகள் பேயர், பித்தர், பாலர்களைப்போன்று இருப்பார்கள் என்று பெரியோர் கூறுகின்றனர். குழந்தைகளினுடைய முகத்தில் பிரகாசிக்கும் நிஷ்கபடமான அவர்களுடைய ஹிருதயமும் அழகிய அமிர்தம்போன்ற சொற்களும் இளநகையும் எவர்தான் விரும்பார்? இன்னும் தான் எந்த வஸ்துவினிடத்தில் விருப்புற்று விட்டதோ, அந்த பிறருக்கு மிகவும் அற்பமாய்த்தோற்றினும், அந்த வஸ்துவைத்தவிர வேறு பொருள்களைக்குழந்தை இச்சியாது. அதுபோலவே திரிலோகாதிபத்தியத்தையும் திரணீகரித்துப்பெரும்பான்மையான ஜனங்களாலும் எந்த வஸ்துவிரும்பப்படுகிறதில்லையோ, 'பெரும்பான்மையான ஜனங்களாலும் எந்த வஸ்து மறக்கப்பட்டிருக்கிறதோ, அந்த பிரம்ஹவஸ்துவினிடத்திலேயே மனத்தை லயித்து ஆநந்திக்கிறான்.' பித்தர்களைச் சிறையிலிட்டாலும் அல்லது சிம்மாசனத்திலேற்றி வைத்தாலும், அவர்கட்கு இரண்டும் சமமே. அது போலவே ஞானியைச் சிறையிலிட்டுச் சித்திரவதைசெய்து இம்சித்தாலும் அல்லது அவர்களைப் பல்லக்கிலேற்றி வைத்து புஷ்ப மாலைகளிட்டு "ஹே! திக்கு விஜய வீரப்பிரதாபா! ஞானசிம்மாஸன தீரா! சகல வேதசாஸ்திர சம்பன்ன!" என்று அவர்கட்கு முன் கட்டியம்கூறி, ராஜராஜாக்களெல்லோரும் அவர்களது பல்லக்கைச் சுமந்து ஹோ! ஹோ! என்று ஊர்வலம் வரினும், அவர்க



ளுடைய மனோநிலை மாறாது. சுகத்தையும் துக்கத்தையும் ஒன்றாகவே பாவித்து "கலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்"களாய் அவர்கள் இருக்கின்றனர். ஆ! ஆ! அவர்களுடைய ஸ்வதந்திரமே ஸ்வதந்திரம்! "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னும் பழமொழியை நாம் கேள்விப்படுவதில்லையா? பட்டினத்தடிகளும் வேந்தனிடத்தில் "நீர்நிற்க; நாம் இருக்க" என்று சொன்ன தைரியத்திற்குக் காரணம் இந்த ஆநந்த ஸ்வதந்திரமன்றோ? ஆ! ஸ்வதந்திரம் அடைந்திருப்பதாகத் தற்புகழ்ச்சி செய்து கொள்ளும் ஜனங்களே! உங்களுக்குள் எவரேனும் ஒருவர் இத்தகைய ஸ்வதந்திரத்தை அநுபவித்ததுண்டா? ஸ்வதந்திரத்திற்குப் பாடுபடும் ஜனங்களே! ஸ்வதந்திரமானது கத்திகேடயங்களாலும், துப்பாக்கிகளாலும் வெடிக் குண்டுகளாலும் கிடைக்கப்படுவதன்று. இவையெல்லாம் வீண்பிரமை. உங்களுடைய உண்மையான சொரூபம் யாது என்று கொஞ்சம் கூர்ந்து பாருங்கள். நீங்கள் எல்லோரும் ஒப்புயர்வற்று இரண்டற்று விளங்கும் பிரம்ஹவஸ்து வல்லவா? உங்களுக்குப் பந்தம் எங்கிருந்து வந்தது? பந்தமென்பது ஏது? பாரதந்திரம்மென்பது ஏது? ஸ்வபாவத்திலேயே, இயற்கையிலேயே, நீங்கள் ஸ்வதந்திர ஸ்வரூபம். மயக்கத்தினால் பிரமையினால், நீங்கள் உங்களுடைய ஸ்வஸ்வரூபத்தை அறியாது அஞ்ஞானாந்தகாரத்தில் பட்டு உழலுகிறீர்கள். விழித்துக்கொள்ளுங்கள். கனவைக்கலைத்து விடுங்கள். கனவுபொய்யே. நீங்கள் தாம் இருப்பது மெய். என்றும் இருப்பது மெய். திரிபுடியும் சின்மாத்திரமாகக் கரைந்து சைதன்னிய வஸ்துவே உள்ளது.

## ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

(பிரம்ஹஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் மொழிபெயர்த்தது).

சிக்காகோ

23-6-1894.

ஸ்ரீ நாராயணன் தங்களையும் தங்களுடைய பந்துக்களையும் ஆசீர்வதிப்பாராக! தங்கள் அன்பு நிறைந்த உதவியினால் எனக்கு இந்தத் தேசத்திற்கு வருவது சாத்தியமாயிற்று. அது முதல் நான் இங்கு (எல்லோராலும்) நன்றாய் அறியப்பட்டு விட்டேன்; இத்தேசத்துப் பெருந்தன்மைவாய்ந்த ஜனங்கள் எனக்கு

வேண்டியவற்றையெல்லாம் அளித்திருக்கின்றனர். இது (அமெரிக்கா) ஒரு ஆச்சர்யமான தேசம்; அநேக விதங்களில் இது (அமெரிக்கர்கள்) ஒரு ஆச்சர்யமான ஜனசமுகம் இந்தத்தேசத்து ஜனங்களைப்போல வேறு எந்த ஜனசமூகமும் தங்களுடைய நித்திய வேலையில் அவ்வளவு யந்திரங்களை உபயோகிப்பதில்லை. ஒவ்வொன்றும் யந்திரமே. இன்னும், அவர்கள் உலகின் மொத்த ஜனத்தொகையில் இருபதில் ஒருபங்கே ஆயினும், அவர்களிடம் உலகின் மொத்தப் பணத்தில் ஆறில் ஒருபங்கு நிறைந்திருக்கிறது. அவர்களுடையசெல்வத்திற்கும் ஆடம்பரங்கட்கும் அளவேயில்லை. ஆயினும், இங்கு ஒவ்வொன்றும் மிகவும் கிராக்கியே. வேலையின் கூலி உலகில் உயர்ந்தது; ஆயினும், முதலுக்கும் தொழிலுக்கும் உள்ள யுத்தம் இடைவிடாதது.

அமெரிக்காவிற்போல, உலகில் வேறெங்கும் ஸ்திரீகட்கு அவ்வளவு பாத்தியதைகள் இல்லை. அவர்கள் ஒவ்வொன்றையும் மெல்லத் தங்கள் கைவசப்படுத்திக்கொள்கின்றனர். அறிவுவிருத்தியான மனிதர்களின் தொகையைப் பார்க்கிலும் அறிவுவிர்த்தியான ஸ்திரீகளின் தொகை அதிகம் என்று சொல்வது ஆச்சர்யம். என்றாலும் அறிவில் மிகவும் சிறந்தோர் அநேகமாய்ப் புருஷர்களே. மேல் நாட்டினர் நமது ஜாதிக்கோட்பாட்டைப்பற்றி எவ்வளவு குற்றங்கூறினும், அவர்களும் நம்மினும் மிகவும் தாழ்ந்த ஜாதிக்கோட்பாட்டை அநுசரிக்கின்றனர். அதாவது, பணத்தினால் ஏற்பட்டஜாதி. அமெரிக்கர்கள் சொல்கிறபடி, சர்வ சக்திவாய்ந்த பணம் இங்கு எதையும் செய்யும்.

உலகில் எந்தத்தேசத்திலும் அத்தனை சட்டங்கள் இல்லை; எந்தத் தேசத்திலும் அவை அலட்சியப்படுத்தப்படவும் இல்லை. மொத்தத்தில் நமது எளிய ஹிந்து ஜனங்கள் மேல்நாட்டினரைப் பார்க்கிலும் எவ்வளவோ சன்மார்க்கமுள்ளவர்கள். மதவிஷயத்தில் அவர்கள் (அமெரிக்கர்கள்) வெளிவேஷத்தையேனும் மூடவைராக்கியத்தையேனும் அப்பியசிக்கின்றனர். தெளிவுற்ற மனத்தையுடைய மனிதர்கள் அவர்களுடைய மூடக்கொள்கைகள் நிறைந்த மதங்களில் களைப்புற்று, புதிய பிரகாசத்தின் பொருட்டு இந்தியாவை எதிர்நோக்கியிருக்கின்றனர். தற்கால சாஸ்திரத்தின் பயங்கரமான எதிர்ப்பினால் நீங்கடையாது எதிர்க்கும் பரிசுத்தமான வேதங்களில் அடங்கியுள்ள பெருமைபெற்ற கொள்

கைகளில் ஒரு சிறிதாவது அவர்கள் அறிந்துகொள்ள எவ்வளவு ஆத்திரப்படுகிறார்கள் என்பதைத் தாங்கள் பார்க்காமல் அறிய முடியாது ஒன்றுமேயில்லாமல் இருந்து சிருஷ்டி உண்டாயிற்று என்றும், ஜீவன் சிருஷ்டிக்கப்பட்டதென்றும் தேவலோகமென்ற ஒரு இடத்தில் பெரிய கொடுங் கோன்மையாளனாகிய ஒரு கடவுள் உட்கார்ந்திருக்கிறார் என்றும் உள்ள கொள்கைகள் கற்றோருக்கெல்லாம் வெறுப்பையளித்து விட்டன. சிருஷ்டியின் நித்தியத்துவத்தைப்பற்றியும் ஜீவனின் நித்தியத்துவத்தைப்பற்றியும் நமது ஆத்மாவில் இருக்கும் ஈஸ்வரனைப்பற்றியும் வேதங்களிலுள்ள கம்பீரமான கொள்கைகளை, ஒரு விதத்தில் இல்லாவிடில் இன்னொருவிதத்தில், அவர்கள் சீக்கிரமாக அநுசரிக்கின்றனர். ஐம்பது வருஷங்கட்குள், நமது பரிசுத்தமான வேதங்களில் போதிக்கப்பட்டுள்ளபடி ஜீவன், சிருஷ்டி இவ்விரண்டின் நித்தியத்துவத்திலும் நமது உயர்ந்த பரிபூர்ண ஸ்வபாவமாகிய ஈஸ்வரத்துவத்திலும் உலகிலுள்ள கற்றோர் நம்பிக்கை வைப்பார்கள். இப்பொழுதுகூட அவர்களுடைய குருக்கள் பைபிளை அவ்விதமே அர்த்தப்படுத்துகின்றனர். எனது தீர்மானம் யாதெனில், அவர்கட்கு இன்னும் அதிகமான ஆத்மீக நாகரீகம் தேவை, நமக்கு இன்னும் அதிகமான ஜடநாகரீகம் தேவை, என்பதே.

இந்தியாவில் எல்லாத் தீங்குகட்கும் அடிவேராயிருக்கும் விஷயம் ஏழைகளின் ஸ்திதியே. மேல்நாடுகளிலுள்ள ஏழைகள் பிசாசங்களே; அவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் நம்மவர்கள் தேவதைகளே. ஆகையால் தான் நமது ஏழைகளை நல்லஸ்திதியில் கொண்டுவருவது மிகவும் சுலபம். நமது தாழ்ந்த வகுப்பினருக்குச் செய்யத்தக்க ஒரே ஊழியம் யாதெனில், அவர்கட்குக் கல்வியை அளிப்பதே, அவர்கள் இழந்துபோன தற்பெருமையை விருத்திபண்ணுவதே. நமது ஜனங்கட்கும் சிற்றரசர்கட்கும் இடையில் உள்ள பெரும்வேலை அதுதான். இதுவரையில் அந்த வழியில் ஒன்றும் செய்யப்படவில்லை. வைதீக அதிகாரமும் அந்நிய ஜயமும் அவர்களை நூற்றுக்கணக்கான வருஷங்களாகக் கீழேபோட்டு மிதித்து விட்டன; கடைசியில் இந்தியாவின் ஏழைகள் அவர்களும் மானிட ராசிகள் தாம் என்பதை மறந்துவிட்டனர். அவர்கட்கு எண்ணங்கள் கொடுக்கப்படவேண்டும், அவர்களைச் சுற்றி உலகில் என்ன நடந்துகொண்டிருக்கின்றனவென்

பதைப் பார்ப்பதற்கு அவர்களுடைய கண்கள் திறக்கப்படவேண்டும்; பின்னர் அவர்கள் தங்களுடைய சொந்த மோட்சத்திற்கு வேலைசெய்வார்கள். ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு ஸ்திரீயும் தங்களுடைய சொந்த மோட்சத்திற்கு வேலைசெய்து கொள்ள வேண்டும். அவர்கட்கு எண்ணங்களைக் கொடுங்கள், அவர்கட்கு வேண்டிய உதவி அதுதான். பின்னர் கார்யமாக மற்றவை பின் தொடரும். ரசாயனங்களை ஒன்றுசேர்த்து வைப்பதே நமது வேலை; கிருஷ்டிநியாயத்தை அநுசரித்துக் கெட்டித்தன்மை உண்டாகும். அவர்களுடைய மூளைகட்குள் எண்ணங்களை உண்டு பண்ணுவது நமது கடமை. அவர்கள் மிகுதியைச்செய்துகொள்வார்கள். இந்தியாவில் செய்யப்படவேண்டியது இதுதான். நெடுநாட்களாக எனது மனத்திலிருந்தது இந்த எண்ணம் தான். நான் அதை இந்தியாவில் கார்யத்திற்குக் கொண்டுவர முடியவில்லை. இந்ததேசத்திற்கு நான் வருவதற்கே அதுதான் காரணம். எளியவர்கட்குக் கல்வி கற்பிப்பதில் பெருங்கஷ்டம் இது. தாங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் தர்மப்பள்ளிக்கூடம் வைப்பதாயிருந்தாலும், அதனால் யாதொரு பிரயோஜனமு முண்டாகாது; பள்ளிக்கூடத்திற்குப் போவதைப் பார்க்கினும் எளியபையன்கள் வயல்களில் தங்களுடைய பெற்றோருக்கு உதவி செய்யச் செல்லவோ அல்லது வேறு விதத்தில் ஜீவனோபாயத்திற்கு முயற்சிக்கவோ செய்ய வேண்டியபடி இந்தியாவில் வறுமை அவ்வளவு கடோரமாயிருக்கிறது. இப்பொழுது மகம்மதி னிடத்திற்கு மலைவராமற்போனால், மகம்மது மலையினிடத்திற்குச் செல்லவேண்டும். எளியபையன் கல்வியினிடத்திற்கு வரமுடியாமற் போனால், கல்விஅவனிடத்திற்குச் செல்லவேண்டும். மதத்தைப் போதித்துக்கொண்டு கிராமத்திற்குக் கிராமம் செல்லுகின்ற ஆயிரக்கணக்கான, ஒரேமனத்தையுடைய, ஸ்வயநலமற்ற ஸந்நியாசிகள் நமதுதேசத்தில் இருக்கின்றனர். அவர்களில் ஒரு பாகத்தை உலக விஷயங்கட்கும் உபாத்தியாயர்களாக அமைக்க முடியுமானால், அவர்கள் இடத்திற்கு இடம், வாசலுக்கு வாசல், பிரசங்கித்துக்கொண்டு மாத்திரம் அல்ல, போதித்துக்கொண்டும் செல்வார்கள். இவர்களில் இரண்டு பேர் சாயுங்கால சமயத்தில் ஒரு கிராமத்திற்குப் படமெடுக்கும் கண்ணாடி யொன்று, உலக உண்டை யொன்று, சில தேசபடங்கள் இவற்றுடன் செல்வதாக வைத்துக்கொள்வோம்; அறிவீனர்கட்கு வான சாஸ்திரத்திலும் பூமி சாஸ்திரத்திலும் அவர்கள் எவ்



வளவோ போதிக்கலாம். வெவ்வேறு ஜனசமூகத்தினரைப்பற்றிக் கதைகள் சொல்வதால், எளியவர்கள் ஒரு ஜீவிதகாலத்தில் புஸ்தகங்களால் அடையக் கூடியதைப் பார்க்கினும், அவர்கட்கு (எளியவர்கட்கு) நூறுமடங்கு அதிக சமாச்சாரத்தை அவர்கள் கொடுக்கலாம். இதற்கு ஒரு ஏற்பாடு வேண்டும்; ஏற்பாடு என்றால் மறுபடியும் பணமே. இந்த உத்தேசத்தை நிறைவேற்றுவதற்கு இந்தியாவில் போதுமான ஜனங்கள் இருக்கின்றனர்; ஆனால், அந்தோ! அவர்களிடத்தில் பணம் இல்லை. ஒரு சக்கரத்தைச் சலனத்திற் குட்படுத்துவது மிகவும் கஷ்டம்; ஆனால் ஒரு தரம் உட்பட்டு விட்டால், மேன்மேலும் வேகம்மிகுந்தே அது செல்கிறது. என் ஸ்வதேசத்தில் சகாயத்தைத் தேடிப் பணக்காரர்களிடத்தி லிருந்து சிறிதேனும் அநுதாபத்தை யடையத் தவறியபின்னரே, நான் தங்களுடைய உதவியால் இந்ததேசத்திற்கு வந்தேன். இந்தியாவின் ஏழைகள் மரிக்கினும் ஜீவிக்கினும் அமெரிக்கர்கள் ஒரு சிறிதும் கவலைப்படுவதில்லை, நம்முடைய ஸ்வஜனங்கள் தங்களுடைய ஸ்வயநன்மைக்கேற்ற கார்யங்களைத் தவிர, வேறொன்றையும் நினைக்காமல் இருக்கும் பொழுது, அவர்கள் (அமெரிக்கர்கள்) ஏன் கவலைப்படவேண்டும்?

எனது பெருந்தன்மை வாய்ந்த அரசனே! இந்த ஜீவித காலம் சிறிது, உலக வீணத்தனங்கள் அழிவுறுவன; ஆனால் எவர்கள் மற்றவர்கட்காக ஜீவிக்கின்றனரோ, அவர்களே ஜீவிக்கின்றனர்; மற்றவர்கள் ஜீவித்தலினும் மரித்தவர்களா யிருக்கின்றனர்! தங்களைப்போன்ற இந்தியாவின் உயர்ந்த, பெருந்தன்மைவாய்ந்த ராஜகுமாரர் ஒருவர் இந்தியா மறுபடியும் தனது பாதங்களில் நிற்கும்படி கைதூக்கி விடுதற்கு எவ்வளவோ செய்து, பின் சந்ததியோர் பூஜிக்கும்படியான ஒருபெயரை நிறுத்திவிட்டுப்போக முடியும். அறிவின்மையில் அமிழ்ந்து துன்பப்படுகின்ற இந்தியா தேசத்து லட்சக் கணக்கான ஜனங்கட்காகத் தங்களுடைய சிறந்த ஹிருதயம் உருக்கமாக உருகும்படி ஈஸ்வரன் செய்வாராக என்பதே விவேகானந்தரின் பிரார்த்தனை.

———————— மகாராஜா அவர்கட்கு.

குறிப்பு:—இங்கு நாம் கவனிக்கவேண்டிய தொன்று உண்டு. ஒரு ஜனசமூகத்திற்குக் கல்வியே உயிர். எந்த ஜனசமூகத்தில் கல்வி பரவவில்லையோ, எந்த ஜனசமூகத்தில் அறிவு பிரகாசிக்க

வில்லையோ, அந்த ஜனசமூகம் நாசமடைவதற்கு வழிதேடிக் கொண்டிருக்கின்றது என்பது நிச்சயம். கல்வி யென்பது சிலஎழுத்துக்களைக் கூட்டிப் படித்தல் அன்று. அறிவின் விளக்கமே கல்வி யெனப்படும். மேல் நாட்டினராகிய தற்கால நாகரீகத்தினர் ஜன சமூகத்திலுள்ள எல்லோரும் எழுதப்படிக்க அறிந்திருக்கவேண்டுமென்று கருதி, ஆண்பிள்ளைகள் அனைவரும் கட்டாயமாய்ப் பள்ளிக்கூடங்களில் படித்தே தீரவேண்டுமென்ற நியாயத்தை ஸ்திரப் படுத்திவருகின்றனர். இந்த நியாயத்தை முன்னிட்டு நம்நாட்டுச் சிற்றரசர்கள் சிலரும் அங்ஙனமே சட்ட நிபந்தனைகளும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். சிறந்த தேசாபிமானி யெனப்படும் கோகலே அவர்களும் ராஜப்பிரதிநிதியின் சட்டசபையில், இந்த நியாயத்தை இந்தியாவெங்கும் ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவர வெண்ணி, ஆண்பிள்ளைகள் அனைவருக்கும் அஸ்திவாரப்படிப்பைக்கட்டாயப்படிப்பாக்க வேண்டுமென்று சட்டமேற்படுத்தப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். தற்காலமேதாவிகள் பலரும் இதே அபிப்பிராயத்தைக் கைக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்தியாவின் ஏழ்மையையும் தாழ்மையையும் எண்ணி எண்ணி ஏக்கமுற்று இரத்தக்கண்ணீர் சொரிந்த தேசாபிமான தவசிரேஷ்டராகிய ஸ்ரீமத் விவேகாநந்தஸ்வாமிகள் மேல்நாட்டினரது அபிப்பிராயத்தைப்பற்றித் தீர்க்கமாய் ஆலோசித்துத்தான் மேற்படி மகாராஜாவுக்கு "தாங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் தர்மப்பள்ளிக்கூடம் வைப்பதாயிருந்தாலும் அதனால் யாதொரு பிரயோசனமு முண்டாகாது; பள்ளிக்கூடத்திற்குப் போவதைப் பார்க்கிலும் எளியபையன்கள் வயல்களில் தங்களுடைய பெற்றோருக்கு உதவி செய்யச் செல்லவோ அல்லதுவேறு விதத்தில் ஜீவனோபாயத்திற்குமுயற்சிக்கவோ செய்யவேண்டியபடி இந்தியாவில் வறுமை அவ்வளவு கடூரமா யிருக்கிறது" என்று எழுதினார். ஆ! ஆ! என்ன ஆழ்ந்த ஆராய்ச்சி! மேல் நாட்டினரது கொள்கைகளைச் சிறிதும் ஸ்வயஆராய்ச்சியில்லாமல் நம்நாட்டில்நிலையுறுத்த நினைக்கும் அறிவாளிகள் மேல் நாட்டினருக்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தைச் சிறிதும் கவனிக்கின்றனர் இல்லையே! பஞ்சம் ஸ்திரமாகக் குடிகொண்டுவிட்ட இந்நாட்டில், மலேரியா, பிளேக் முதலிய தொத்து வியாதிகள் மலிந்து பெருகி வருஷந்தோறும் ஆயிரக் கணக்கான ஆருயிர்களைக் கொள்ளை கொள்ளும் இந்நாட்டில், ஒரு குடும்பத்தில் மூன்று வயதுக் குழந்தை முதல் தன்னால்



இயன்ற வேலையைச் செய்து கூலி சம்பாதித்தும் குடும்பம் முழுதும் ஒரு வேளைக் கஞ்சியோ, கூழோ குடித்து அரைப் பட்டினி கிடக்கும் இந்நாட்டில் கட்டாயப் படிப்பு வேண்டுமென்று சட்ட நிபந்தனை யேற்படுத்துவது ஜீவகாருண்ணியமற்ற செயலாகும். இதனால் நாம் ஜனசமூகத்திற்குக் கல்வி அவசியமன்றென்று கூற வந்தோமல்லோம். அன்ன தானத்தைப் பார்க்கிலும் வித்தியா தானம் பெரிது. வித்தியாதானத்தைப் பார்க்கிலும் ஜீவ தானம் மிகப்பெரிது. ஆதலால் கட்டாயப் படிப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து ஏழைப் பெற்றோர்களிடத்தினின்றும் பிள்ளைகளைப் பிரித்துப்பள்ளிக்கு அனுப்பி, ஏற்கனவே ஜீவனோபாயம் இன்றி இறந்து ஒழிபவர்களுடைய தொகையை அதிகரிப்பது நன்றோ? இதை வாசிப்பவர்களிற் பெரும்பான்மையோரும் நம்மை இருபதாவது நூற்றாண்டினரன்றென்றும் மிருகப்பிராயத்தையுடைய காட்டுமிராண்டிகளின் காலத்தின ரென்றும் நினைக்கலாம். ஆனால் வாஸ்தவமாகவே நாம் நமது நாட்டுப்பூர்வீகக் கொள்கைகளே நமக்கு ஏற்றவையென்று நன்றாய் அறிந்திருப்பதினாலே தான் இங்ஙனமெல்லாம் எழுதவேண்டி வருகிறது. பூர்வீக காலங்களில் ராஜாங்கத்தினருடைய சட்ட நிபந்தனைகளின் உதவியில்லாமலே, தேசத்தினர் அனைவரும் கல்வி கேள்விகளில் வல்லுனரா யிருந்தனர். குருசிஷ்ய பரம்பரையின் மூலமாகவேயன்றோ இப்பூவுலகை யெல்லாம் ஆச்சரியப்படுத்துகின்ற வேதங்கள் நிலைநின்றன? தம் கையெழுத்தும் நன்றாய் எழுத்தெரியாத மகான்களன்றோ வேதங்களை வெளியிட்டனர்? இக்காலத்தும் அத்தகைய மகான்கள் நமது நாட்டில் ஏராளமாய் இருக்கின்றனர். ஆதலால் நாம் ஸ்வாமி விவேகாநந்தர் கூறியுள்ள வழியே நமது ஏழை ஜன சமூகத்தில் அறிவைப் பரப்புவதற்கு உள்ள வழியென்றும் கட்டாயப் படிப்பன்றென்றும் நம்புகின்றோம். வருஷம் முழுவதும் புஸ்தகங்களைப் படித்து அறிகின்ற அறிவை, கேள்வியினால் சிறிது காலத்திற்குள் அறிந்து விடலாம். தவிர, கல்வியைப் பார்க்கிலும் கேள்வியே சுலபமானவழி.

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றிற்கு மீயப் படும்."

என்றார் திருவள்ளுவர். ஆகையால் விவேகாநந்தர் கூறிய மாதிரி, சில ஜனங்கள் உலக உத்தாரணத்தின் பொருட்டு, தேச

க்ஷேமத்தின் பொருட்டு சர்வசங்கபரித்தியாகம் செய்து சந்நியாசிகளைப் போன்று பலன் கருதாது தர்மஸேவை செய்வார்களானால், நமது நாடு வெகு சீக்கிரத்தில் முன்னேற்றத்தில் வந்துவிடும் அன்றோ?

பத்திராதிபர்.

## கிழக்கும் மேற்கும்.

(ஸ்ரீமத். விவேகாநந்த சுவாமிகள் எழுதியது.)

(முன்தொடர்ச்சி.)

இரு பக்கங்களிலும் ஆய்ந்து பார்ப்பவர்களுடைய அபிப்பிராயங்கள் இவை தாம்-அந்நியோந்நியம் பகுத்தறிவின்மை, மேல்மட்டமான அறிவு அல்லது அறிவின்மை இவற்றினின்றும் உண்டாய அபிப்பிராயங்கள். அந்நியர்களாகிய ஐரோப்பியர்கள் இந்தியாவுக்குவந்து நமதுபட்டணங்களின் முற்றிலும்சுத்தமான, ஆரோக்கியமான பாகங்களில் அரண்மனை போன்ற கட்டடங்களில் வசித்கொண்டு, நமது "ஸ்வதேசி"கள் வசிக்கும் பாகத்தை அவர்களுடைய ஸ்வதேசத்தில் சுத்தமாய், அழகாயமைக்கப் பட்டுள்ள நகரங்களுடன் ஒப்பிடுகின்றனர். அவர்களுடன் பழகுகிற இந்தியர்கள் ஒரே வகுப்பினர்-அவர்களின் கீழ் ஏதாவது உத்தியோகம் வகிப்பவர்கள். உண்மையாகவே, துன்பமும் வறுமையும் இந்தியாவிற் போல வேறெங்கும் காணப்படுகிறதில்லை. தவிர அழுக்கும் குப்பையும் எங்கும் நிறைந்திருக்கின்றன. அத்தகைய அழுக்கு, அடிமைத்தனம், தாழ்மையாதிய இவற்றினிடையில் நன்மையாய் ஏதேனும் இருக்கலாம் என்பது ஐரோப்பிய மனத்திற்கு அறிய முடியாத காரியம்.

ஆனால், ஐரோப்பியர்கள் பகுத்தறிவின்றி யாது கிடைப்பினும் உண்ணுகின்றனர்; நாம் சுத்தத் தன்மையை அறிந்திருப்பது போல அவர்கள் அறியாதவர்கள், ஜாதி வித்தியாசங்களைப் பாராட்டுகிற தில்லை, தாராளமாய் ஸ்திரீகளுடன் கலக்கின்றனர், சாராயங் குடித்து வெட்கம் இன்றி ஸ்திரீ புருஷர்கள் ஒருவரோடொருவர் கைகோர்த்து ஆடுகின்றனர். இவற்றை யெல்லாம் நாம் பார்த்து ஆச்சர்யத்துடன் நம்மைத்தானே நாம் கேட்டுக்கொள்வதாவது-இத்தகைய ஜனசமுகத்தில் என்ன நன்மை இருக்கக் கூடும்.?



இந்த இரண்டு அபிப்பிராயங்களும் வெளியிலிருந்தே உண்டாயிருக்கின்றன; தரை மட்டத்தின் கீழ், உள்ளே பார்க்கவில்லை. நாம் நமது ஜன சமுதாயத்தில் அந்நியர்களைச் சேரவிடுவதில்லை, அவர்களை நாம் "மிலேச்சர்கள்" என்று அழைக்கிறோம். அவர்களுடைய முறையில் அவர்களும் நம்மை அடிமைகளைப்போல வெறுத்து, நம்மை "கூலி" என்று அழைக்கிறார்கள்.

ஒவ்வொன்றிற்கும் பின்னுள்ள உண்மையான பொருளை ஒரு கட்சியாரும் பார்க்க வில்லையாயினும், இந்த இரண்டு அபிப்பிராயங்களிலும் சிறிதேனும் உண்மை யிருக்கவேண்டும்.

ஒவ்வொருமனிதனுள்ளும் ஒரு எண்ணம் உள்ளது, வெளிமனிதன் வெளித் தோற்றமே, உள்ளேயுள்ள இந்த எண்ணத்தை எடுத்துரைக்கும் பாஷையாம். அதுபோலவே ஒவ்வொரு ஜன சமுகத்திற்கும் பிரத்தியேகமான ஜன சமுக எண்ணம் உண்டு. இந்த எண்ணமானது உலகின் பொருட்டு வேலை செய்து கொண்டிருக்கிறது, அதன் ரட்சைக்கு அவசியமாயும் இருக்கிறது. உலக ரட்சைக்கு ஓர் தனிப் பொருளாய் எண்ணம் என்றைக்கு அவசியமில்லாமற் போகுமோ, அதே தினத்தில் அந்த எண்ணத்தை உடைத்தாயிருந்த வஸ்து, ஒரு தனி மனிதனாயினும் சரியே அல்லது ஒரு ஜனசமுகமாயினும் சரியே, அழிவையடைந்துவிடும். உள்ளிருந்தும் புறம்பிலிருந்தும் இவ்வளவு துக்கம், துன்பம், வறுமை, கொடுமை இவை யெல்லாம் உண்டாய போதிலும் இந்தியர்களாகிய நாம் இன்னும் உயிர் வாழ்தற்குக் காரணம், உலகின் ரட்சைக்கு இன்னும் அவயவ மாயிருக்கிற ஒரு ஜனசமுக எண்ணத்தை உடைத்தாயிருக்கிறோம் என்பதே. ஐரோப்பியர்களும் உலகிற்கின்றி யமையாததும் அவர்கட்குச் சொந்த மானது மான ஒரு ஜன சமுக எண்ணத்தை உடைத்தாயிருக்கிறார்கள்; ஆகையால் தான் அவர்கள் பல சாலிகளாயிருக் கின்றனர். ஒரு மனிதன் தன்னுடைய பலத்தை யெல்லாம் இழந்து விடுவானாயின், அவன் ஒரு நிமிஷமேனும் ஜீவிக்கிறானா? ஒரு ஜன சமுகம் என்பது அநேக தனி மனிதர்களின் மொத்தத் தொகையே யாகும்; ஒரு ஜனசமுகம் தனது பலம் முழுதையும், சுறுசுறுப்பு முழுதையும் இழந்து விட்டால் அது ஜீவிக்குமா? ஓர் ஆயிரம் வருஷங்களாக நேரிடும் அத்தனை தொந்தரவு கட்கும் குழப்பங்கட்கும் எதிரே இந்த ஹிந்து சமுகம் ஏன் மரணமடைய

வில்லை ? நமது வழக்கங்களும் மாதிரிகளும் அவ்வளவு கெட்டவையாயிருந்தால், இக்காலத்திற்குள் நாம் பூவுலகினின்றும் அழிக்கப்படாமல் இருப்பது என் ? பல அந்நிய ஜப சாலிகளும் நம்மை அழிப்பதற்கு வேண்டியன செய்ய வில்லையா ? அப்படியாயின் நாகரீக மற்ற மற்ற தேசங்களின் ஜனங்கட்கு நேரிட்டது போல, என் ஹிந்துக்கள் அழிக்கப்பட வில்லை? என் இந்தியா நிர்ஜனமான காடாக்கப்பட வில்லை? என்? அப்படி யாயின், அந்நியர்கள் இந்தியாவிற்கு வந்து ஸ்திரமாய் வாசம் செய்து கொண்டு அமெரிக்கா, ஆஸ்டிரேலியா, ஆப்பிரிக்கா முதலான தேசங்களில் அவர்கள் செய்தது போலும் இன்னும் செய்து வருகிறதுபோலும் அதன் (இந்தியாவின்)செழிப்பான பூமிகளைப் பயிர் செய்யப் பின் வாங்கி யிருக்க மாட்டார்கள். நல்லது, எனது அந்நியனே ! நீ நீயாக நினைத்துக் கொள்ளுகிற அவ்வளவு பலம் பொருந்தியவனன்று. அது ஒரு வீண்மனோ ராஜ்யம். முதலாவது இந்தியாவிற்கும் பலம் இருக்கிறதென்றும் அதற்குச் சொந்தமாக உண்மையான அஸ்திவாரம் இருக்கிறதென்றும் அறிந்து கொள். நீங்களும் அதாவது, வெளி நடைகளிலும் அபிப்பிராயங்களிலும் நினைப்பின் போக்குகளிலும் முழுதும் ஐரோப்பியர்களாகி, இடைவிடாது கண்களினின்றும் கண்ணீர் ஒழுக விட்டுக் கொண்டு "நாங்கள் தாழ்மை யடைந்திருக்கின்றோம், நாங்கள் மிருக சமான நிலைமைக்கு வந்திருக்கின்றோம், ஓ, ஐரோப்பிய ஜனங்களே ! நீங்களே எங்களுடைய ரட்ச கர்த்தாக்கள்; எங்கள் மீது இரக்கம் பூண்டு இந்தத் தாழ்ந்த நிலைமை யினின்றும் எங்களை உயர்த்தி விடுங்கள்" என்று ஐரோப்பியர்களை நோக்கித் தங்களை ரட்சிக்கும்படி பிரார்த்திக்கின்ற எனது ஸ்வதேச ஜனங்களும் நன்றாய் அறிந்து கொள்ளுங்கள். இயேசு இந்தியாவுக்கு வந்திருக்கிறாரென்றும் கால பக்குவத்தில் தெய்வீக விதியின்நிறை வேற்றத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாரென்றும் கோஷம் இட்டு ஆநந்தப்பாட்டுக்கள் பாடும் நீங்களும் இதை அறிந்து கொள்ளுங்கள். ஆ! இல்லை. இயேசுவும் வரவில்லை, ஏகோவாவும் வரவில்லை; அவர்கள் வரவும் மாட்டார்கள். தங்களுடைய சொந்த வீடுகளைக் காப்பாற்றுவதில் அவர்கள் இப்பொழுது சுறுசுறுப்பாயிருக்கின்றனர். நமது தேசத்திற்கு வருதற்கு அவர்கட்கு நேரம் இல்லை. இங்கு முன்போலவே உட்கார்ந்திருக்கும் பழைய சிவனும் வழக்கம் போலவே ஆடம்பரத்துடன் பூஜிக்கப்படும்மாதா



காளியும் தனது புள்ளாங்குழலை ஊதிக்கொண்டு அன்பு மிகுந்து ஆடுமாடு மேய்க்கும் இடையனாகிய ஸ்ரீகிருஷ்ணனுமே இருக்கின்றனர். ஒரு காலத்தில் இந்தப் பழைய சிவன் தனது எருதின் மீது சவாரி செய்துகொண்டும் தமருகத்தை யடித்துக்கொண்டும் இந்தியாவிலிருந்து ஒரு பக்கத்தில் சுமத்ரா, போர்னியோ, ஸெலிபிஸ் ஆஸ்டிரேலியா முதலான தேசங்கட்கு அமெரிக்காக் கரைவரையிலும் யாத்திரை செய்தார்; மறுபக்கத்தில் பழைய சிவன் திபேத், சீனா, ஜப்பான் தேசங்கட்கு ஸைபீரியா வரையிலும் தனது காளையை அடித்துச் சவாரி செய்தார், இன்னும் அப்படியே செய்து கொண்டிருக்கிறார். மாதாவாகிய காளி சீனாவிலும் ஜப்பானிலும் கூடத் தனது பூஜையை இன்னும் ஏற்றுக் கொண்டு வருகிறாள்; கிறிஸ்தவர்கள் கன்னிகை மேரியென்று மாற்றிக்கொண்டு இயேசு கிறிஸ்துவின் தாயாராகப் பூஜித்து வருவதும் இவளையே. ஹிமோத்கிரியைப் பாருங்கள், அதன் வடக்கே பழைய சிவனுடைய முக்கிய வாசஸ்தானமாகிய கைலாசம் இருக்கின்றது; அந்தச் சிம்மாசனத்தைப் பத்துச் சிரங்களும் இருபது கைகளும் பொருந்திய அதிபராக்கிரமசாலியான ராவணனால் அசைக்க முடியவில்லை,—இப்பொழுது அக்காரியத்தைச் செய்யப் பாதிரிகள் முயற்சிக்கவா ? ஆ! ஆ ! இங்கு இந்தியாவில் எப்பொழுதும் தமருகத்தை அடித்துக் கொண்டிருக்கும் பழைய சிவனும் மிருகபலியுடன் பூஜிக்கப்படும் மாதாவாகிய காளியும் தனது புள்ளாங்குழலை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு மிகுந்த ஸ்ரீகிருஷ்ணனுமே இருப்பார்கள். ஹிமோத்கிரியைப் போன்று அவர்கள் உறுதியாயிருக்கின்றனர்; கிறிஸ்தவர்கள், வேறுபாதிரிகள் எவர்களுடைய முயற்சியாலும் அவர்களை அகற்ற முடியாது. அவர்களைப் பார்க்க உங்களால் சகிக்க முடியாமற் போனால், தூரப் போங்கள் ! ஒரு கைப்பிடிக்குள் அடங்கக்கூடிய உங்களுக்காக, ஒரு ஜன சமூகம் முழுதும் பொறுமையினால் களைத்து மரிக்கவேண்டுமா? தாராளமாய் மேய்வதற்கு வயல்கள் கிடைக்கக் கூடிய வேறு எங்காவது நீங்கள் ஏன் போகக்கூடாது?—பரந்த உலகம் உங்களுக்குத் திறந்திருக்கிறது. ஆனால்-இல்லை, அப்படி அவர்கள் செய்ய மாட்டார்கள். அப்படிச் செய்வதற்கு பலம் எங்கே யிருக்கிறது? அவர்கள் அந்தப் பழைய சிவனுடைய உப்பைத்தின்று, அவரிடத்திலேயே பொய் புகன்று, அவரைத் திட்டி, ஒரு அந்நிய ரட்ச

கர்த்தாவின் பெருமையைப் பாடுவார்கள்! ஆ! "நாங்கள் மிகத் தாழ்ந்து கிடக்கின்றோம், நாங்கள் அற்பர்கள், நாங்கள் தாழ்மைப் படுத்தப்பட்டிருக்கிறோம், எங்களிடத்திருக்கின்றவையெல்லாம் கெட்டவை" என்று அந்நியர்களிடத்திற்கு விம்மியழுது கொண்டு செல்லும் நமது ஸ்வதேச ஜனங்களுக்கு நாம் சொல்வதாவது, "ஆம், அது உண்மையாயிருக்கலாம், நீங்கள் உண்மையுள்ளவர்களாகத் தோன்றுகிறீர்கள், உங்களை நம்பாமலிருப்பதற்கு எங்கட்குங் காரணமுமில்லை; ஆனால் அந்த "நாம்" என்பதில் ஜனசமூகம் முழுமையும் சேர்த்துக் கொள்கிறீர்கள். ஐயா! அது எத்தகைய நன்மாதிரி!"

(வரும்.)

## ஸ்ரீகிருஷ்ண ஜனனம்.

சென்ற மாதத்தில் தான் ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்தார். இவ்வவதார புருஷன் இவ்வுலகை அலங்கரித்து நெடுநாட்களாய் விட்டன. நமது பாரதபூமி ஸ்ரீகிருஷ்ணனது லீலைகளுக்கு இடமாகி எத்தனையோ நூற்றாண்டுகளாய் விட்டன. மகாபாரதமும் புராணங்களும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக இம்மகா புருஷனையும் இவருடைய மகிமாதிசயங்களையும் விவரிப்பதைத்தவிர, வேறு ஒன்றும் செய்யவில்லை. பாரதபூமி புண்ணிய பூமியெனப் பெயரடைந்தது ஸ்ரீ கிருஷ்ணனது ஜனனத்திற்குப் பாத்திரமாயதனால் தான். நமது ஜனசமூகத்தின் உயிர்நாடி ஸ்ரீ கிருஷ்ணனில் இருக்கிறது. இல்லையேல், அவருடைய உபதேசங்களை நாம் ஏன் அதிக ஆசையுடன், மிகுந்த ஆவலுடன் இன்றும் அநுஷ்டித்து வருகிறோம்? நாம் த்வைதிகளாயிருந்தாலும் சரியே, அத்வைதிகளாயிருந்தாலும் சரியே இன்றும் பகவத்கீதையைப் பக்தி மிகுந்து பாராயணம் பண்ணுவதற்குக் காரணம் என்ன? அவருடைய உபதேசங்களன்றோ அக்காலத்து இந்தியாவுக்குப் பெயரும் பெருமையும் அளித்தன? அவருடைய நிஷ்காம்யகர்ம நிர்மலத்துவமன்றோ அக்காலத்து இந்தியாவைப் பரிசுத்தம் செய்தது? அவருடைய லீலா விநோதங்களன்றோ அக்காலத்து இந்தியாவை அன்பு பெருக்கி அழகுறச் செய்தன? எக்காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் இந்தியர்களால் மறக்கப்படுகின்றாரோ, அக்காலத்தில் இந்தியா அழிந்துவிடுவது நிச்சயம்.



ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த தினத்தன்று ஹிந்துக்கள் அனைவரும் பக்தி பெருகிப் பரவசம் எய்தி ஜீவத்துவம் மறந்து சிவத்துடன் ஒன்றாய்க்கலந்து ஸ்ரீகிருஷ்ணர்களாய்விளங்கவேண்டும். ஆனால் அறியாமை மிகுந்து வீண்கர்வம் நிறைந்து மயக்கம் தலைக்கேறி மதிபுரண்டு மத்தோன் மத்தர்களாய் ஜனங்கள் விளங்கும் இக்காலத்தில், வருஷத்தில் ஓர் தினமாகிய ஸ்ரீ கிருஷ்ண ஜனன தினத்தன்று பெரும் பாலாரும் செய்வது யாதெனில், வீட்டில் பெண்டுகள் பக்தியுடன் நைவேத்தியத்திற்குச் செய்யும் பட்சண பலகாரவர்க்கங்களை வயிறுதள்ளத் தின்று இரவு முழுதும் "கண் விழிக்கவேண்டும்" என்ற கொள்கையை அநுசரித்துத் திண்ணைகள்தோறும் சிறு சிறு கூட்டங்கள் சேர்ந்து சீட்டுவிளையாடவோ, வம்புவழக்குகள் பேசிப்பொழுது போக்கவோ, அல்லது இப்பெருநாடகசாலையாகிய உலகத்தில் தாங்கள் முன்னரே நடிகர்களாயிருக்கின்றனர் என்பதை மறந்து நாடகங்கள் நடித்துக் களிக்கவோ செல்கின்றனர். பெண்டுகளுக்குள் மாத்திரம் சிறிது பக்தி இருக்கின்றது. இங்ஙனம் கண்டபடியெல்லாம் காலங்கழிக்கும் மூடர்கள் தங்களுடைய சம்சார சக்கரத்தைக்கையில் தாங்கிக் கர்மநியதி தவறாமல் ஏற்ற பலன்களை அளித்துவரும் ஈசனை இப்புண்ணிய தினத்தன்றாவது நினைக்கலாகாதா? பார்த்தனுக்குச் சாரதியாகி நின்று இப்பாரத பூமியின் பெருமையை நிலை நிறுத்திய கிருஷ்ண பரமாத்துமாவின் பொருட்டு, பிரபஞ்சப்பித்துப் பிடித்த பேயர்கள் இப்புண்ணிய தினமாகிய ஒரு நாளாவது அவர்களுடைய பேயாட்டத்தைவிட்டு நீங்கியிருக்கலாகாதா?

ஸ்ரீ கிருஷ்ண ஜனன தினத்தன்று உண்மையான ஹிந்து விரதமநுஷ்டிப்பான், மகா பரிசுத்தமாயிருப்பான், திவ்விய க்ஷேத்திரங்கட்குச் செல்வான், புராணிகர்களைக் கொண்டு புண்ணிய புராணங்களை வாசிக்கச் சொல்லிக் கேட்பான், கிருஷ்ண ஸ்மரணையாகவேயிருப்பான், எளியவர்கட்கு வேண்டியன கொடுப்பான், ஜபதபநிஷ்டைகளில் சிந்தையைச் செலுத்தியிருப்பான். நமது ஜனசமுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் இருக்கின்றாரென்ற உணர்ச்சி அன்று மிகுதியும் உண்டாகின்றது.

நமது ஜனசமுகத்தினின்று ஸ்ரீகிருஷ்ணனைப் பிரித்து வேறாக நீக்கிவிட்டால், நமது ஜனசமுகத்தில் ஒற்றுமையுணர்ச்சியையுண்டாக்குவதற்கு ஹிருதயத்துடன் ஹிருதயத்தை இணைத்

துக் கட்டுவதற்கு, நாம் சகல கலாவல்லவர்கள் என்று நாம் மனம் மகிழ்ந்து பூரிப்பதற்கு, யாது உள்ளது? அந்நிய ஜனசமூகத்தினர்கள் நம்மை ஜாதிமத பேதங்களால் பற்பல பிரிவுகளாகப் பிரிந்து நிற்கும் ஒரு பெருங்கூட்டம் என்று சொல்கின்றனர். ஸ்ரீ கிருஷ்ண ஜனனதினத்தன்று இவ்விந்தியாவில் எத்தனைபேர் கிருஷ்ணாஷ்டமியைக் கொண்டாடுகின்றனரென்றும் எத்தனைபேர் கிருஷ்ணநாமத்தை ஜபிக்கின்றனரென்றும் எத்தனைபேருடைய கிருஷ்ண ஸ்தோத்திரங்களால் இப்பூமி ஒலியினாலும் எதிரொலியினாலும் நிறைந்து சமஷ்டிசப்த ரூபமாகவிளங்குகின்றது என்றும் அறிந்தவர்கள் இந்தியர்களுக்குள் ஒற்றுமையில்லையென்று உரையார்கள். ஸ்ரீகிருஷ்ணன் எல்லாஹிந்துக்களுடைய ஹிருதயங்களிலும் எபபொழுதும் இருக்கிறார், ஹிந்துக்களுடைய நாகரிகத்திற்கு அவரே மூலஊற்று; மகா பாரதமும் பாகவதமும் அநேக புராணங்களும் அவருடைய மகிமையையே கோஷிக்கின்றன. அவரே ஈஸ்வரன்; அவர் க்ஷத்திரியன்; அவர் ராஜதந்திரநிபுணர்; அவர் நீதிகர்த்தா; அவர் ஞான புருஷர்; அவர் எல்லாம்வல்லவர்; அவர் கவிராஜர்; அவர் சாஸ்திரக்ஞர்; அவர் ராஜ தூதர்; அவரே சாரதி; அவர் சமானத்திற்குப் பாடுபட்டார்; பாபிகளை சம்ஹரித்துப் புண்ணிய புருஷர்களை ரட்சித்தார். ஆதலினாலன்றோ அவரே பூர்ணாவதார புருஷனென்று வேதசாஸ்திர இதிகாச புராணாதிகளெல்லாம் கோஷிக்கின்றன ?

"பலனைக் கருதாது தொழிலைச் செய்". ஆ! ஆ! அற்புதமான உபதேசம்! ஸ்ரீ கிருஷ்ணனைத் தவிர, வேறு எவர் இவ்வாறு உபதேசித்தனர்? அவருக்கு முற்காலத்தி லாகட்டும், பிற்காலத்திலாகட்டும், எந்த மகாத்துமா வாயினும் சரியே இம்மாதிரி உபதேசித்ததுண்டா? பாரத பூமியின் நன்மைக்காகவே பாரதப் போர் நடந்தது. பாரதபூமியின் நன்மைக்காகவே பயமென்பதையே அறியாத பார்த்தனும் ரதத்தில் சோகமுற்றுச்சாய்ந்தான். பாரத பூமியின் நனமைக்காகவே பகவானும் பகவத்கீதையை உபதேசம் செய்தருளினார்.

பரிபூர்ணாவதார புருஷனாகிய பகவானுடைய சந்நிதியில் அவருடைய கிருபைக்குப் பாத்திரமாகும் பொருட்டு நாமும் வணங்கி நிற்போமாக.

சிவம்.



## ஜோடிமோதிரம்.

### VI

**பிரம்ஹஸ்ரீ ராமசாமி யய்யங்கா ரவர்கள் எழுதியது.**

பிறகு ஒருநாள், அமலா, சிரித்தமுகத்தோடு பிரியமாய் வைதுகொண்டு, சொன்னாள். "ஹா, அம்மா, நல்ல காரியம் செய்தாய்" ஹிரண்மயி—"நான்என்ன செய்தேன்". அமலா—"என்னிடம் இவ்வளவு நாளாகச் சொல்லவில்லையே". ஹிரண்மயி "நான் என்ன சொல்லவில்லை" ? அமலா - "புரந்தர செட்டியாரோடு இவ்வளவுதோழி" யென்று. ஹிரண்மயிக்குக் கொஞ்சம் லச்சையுண்டாயிற்று. "அவன் பால்யத்தில் என் பக்கத்து வீட்டுக்காரன். அதைச்சொல்லணுமா, என்ன" என்றாள். அமலா—"பக்கத்து வீட்டுக்காரன் மாத்திரம் தானா?பாரடியம்மா நான் என்ன கொண்டுவந்திருக்கிறேன்" என்று உடனே அமலா ஒரு செல்லப் பெட்டியை வெளியில் எடுத்தாள். பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்து வைரமாலை யொன்றை எடுத்தாள். அப்படிப்பட்ட மாலை கிடைப்பது அருமை; ரொம்ப "டால்" வீசிற்று; விலை மதிக்கக்கூடவில்லை. மாலையை எடுத்து ஹிரண்மயிகிட்டக் காண்பித்தாள். செட்டிப் பெண்ணுக்கு கொஞ்சம் வைரப் பழக்கமுண்டு. ஆச்சரியமடைந்தாள் "இப்படிப்பட்ட விலை மதிக்கக் கூடாத இது எங்கேயிருந்து கிடைத்தது" என்றுகேட்டாள். அமலா-"இதையுனக்குப் புரந்தரன் அனுப்பியிருக்கிறான். நீ என் வீட்டிலிருக்கிறாய் என்று கேள்விப்பட்டு, என்னைக் கூப்பிட்டனுப்பி, இதை உனக்குக் கொடுக்கச் சொன்னான்.

இந்த மாலையைவாங்கிக் கொண்டால், ஆயுள் முழுதும் தரித்திர விமோசனமாகி விடும் என்று ஹிரண்மயி நினைத்துப் பார்த்தாள். தனதாஸர் செல்லப்பெண்ணாய் வளர்ந்ததனால், அன்ன வஸ்திரக்கஷ்டம் ஸஹிக்கமுடியவேயில்லை. ஆகையினால் ஹிரண்மயி கொஞ்சநேரம் துக்கப்பட்டாள். பிறகு பெருமூச்சுவிட்டுக் கொண்டு, சொன்னாள்" "நான் இதைப்பெற்றுக் கொள்ளமாட்டேன் என்று செட்டியிடம் சொல்லிவிடு" அமலாவுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. சொன்னாள் "அது என்னது? உனக்கு என்ன பைத்தியமா? அல்லது, என்வார்த்தையில் நம்பிக்கை இல்லையோ? ஹிரண்மயி "உன்வார்த்தையை நம்பிவிட்டேன்" என்றாள்.

அமலா மிகவும் மன்றாடிப் பார்த்தாள். ஒன்றையும் ஹிரண்மயி காதில்வாங்கிக் கொள்ளவில்லை. அப்பொழுது மாலையைக் கையில் எடுத்துக்கொண்டு அவ்வூர் அரசனாகிய மதனதேவரிடம் சென்றாள். அரசனை நமஸ்கரித்து, மாலையை அவருக்கு மரியாதை செய்தாள். இந்தமாலையைத் தாங்கள் பெற்றுக்கொள்ள வேணும், இந்த மாலை தங்களுக்குத்தான் யோக்கியம்'' என்று சொன்னாள். ராஜா மாலையைக் கையிலெடுத்துக்கொண்டு, அமலாவுக்கு யதேஷ்டமாய் பணம் கொடுத்தனுப்பினார். இது வொன்றும் ஹிரண்மயிக்குத் தெரியாது.

இதற்குச் சிலதினங்கள் கழித்துப் புரந்தரன் வேலைக்காரி ஒருத்தி ஹிரண்மயி கிட்டவந்தாள். அவள் சொன்னாள்--"நீங்கள் இந்தக்குடிசையில் இருப்பது எங்கள் எஜமானனுக்கு ஸகிக்கமுடியவில்லை யென்றும் நீங்கள் அவருக்கு பால்யத்துத் தோழி யென்றும், உங்கள் வீடு, அவர் வீடு எல்லாம் ஒன்றுதான் என்றும் சொல்லியனுப்பினர். ஆனால் நீங்கள் அவர் வீட்டுக்கு வந்து அங்கே வாஸம் செய்ய வேண்டிய தில்லையாம். உங்கள் வீட்டைத் தனதாஸருடைய கடன் காரர்களிடமிருந்து வாங்கி விட்டாராம். நீங்கள் போய் அங்கே வஸித்து வாருங்கள்''—இது தான் அவர் வேண்டுகோள்.

ஹிரண்மயிதரித்திரத்தினால் எவ்வளவோ துக்க மனுபவித்திருக்கிறாள். அவைகளெல்லாவற்றிலும், தகப்பன் வீட்டைவிட்டு வெளியே குடிருக்கும் படி நேர்ந்ததே அது தான் அவள் மனதில் ரொம்ப உறுத்திக் கொண்டிருந்தது. எங்கே பால்யத்தில் விளையாடினாளோ, எங்கே தாய் தகப்பன்மார் வசித்திருந்தார்களோ, எங்கே அவர்கள் சாவதைப் பார்த்திருந்தாளோ, அங்கே இனிமேல் வாஸம் செய்ய முடிய வில்லையே—அதுதான் பெரிய கஷ்டம் என்று அவளுக்குத் தோன்றிற்று. அந்த வீட்டைப் பற்றி வார்த்தை வந்த வுடன் அவள் கண்ணில் ஜலம் வந்து விட்டது அவள் வேலைக்காரியை ஆசீர்வதித்து விட்டு "இந்த தானம் நான் ஏற்றுக்கொள்ளுவது உசிதமில்லை. ஆனால் இந்த ஆசையை அடக்க என்னால் முடியவில்லை. உங்கள் எஜமானனுக்கு ஸர்வமங்களம் உண்டாகட்டும்'' என்று சொன்னாள்.

வேலைக்காரி நமஸ்காரம் பண்ணி விட்டு, விடைபெற்றுச் சென்றாள். அமலா உட்கார்ந்து கொண்டிருந்தாள். "அமலா,



நான் அங்கே போய் 'ஒண்டி' யாய்க்குடியிருக்க முடியாது. நீயும் அங்கேயே இருக்கலாம், போவோம் வா''என்று ஹிரண்மயி அமலாவிடத்தில் சொன்னாள். அமலா ஸம்மதித்தாள். இருவரும் தனதாஸர் விட்டுக்குச் சென்று அங்கே வாஸம் வாசம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இருந்தாலும், எப்போதும் அமலா புரந்தரன் வீட்டுக்குப் போவதை ஹிரண்மயி ஒரு நாள் கண்டித்தாள். அமலா அப்புறம் போகவில்லை.

தகப்பனார் வீட்டுக்கு வந்தது முதல் ஹிரண்மயிக்கு ஒரு விஷயத்தில் பெருத்த ஆச்சரியம் உண்டாயிற்று. ஒருநாள் அமலா சொன்னாள் "நீ குடும்பத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் அதற்காக உன் உடம்பை "ஒடித்துக்'' கொள்ள வேண்டியதில்லை. ராஜா அரமனையில் எனக்கு வேலை இனிமேல் எனக்குப் பணத்துக்கொன்றும் குறைச்சலில்லை. நான் குடும்பத்தைப் பார்த்துக்கொண்டு வருகிறேன். நீ வீட்டுக்கு எஜமானியாக இரு''. அமலாவிடம் ரொம்பப் பணமிருக்கிற தென்று ஹிரண்மயி தெரிந்து கொண்டாள். மனதில் அநேக விதமாக ஸந்தேகித்தாள்.

## VII

கலியாணத்திற்குப் பிறகு ஐந்தாம் ஆனி மாசம் சுக்லபக்ஷம் பஞ்சமி வந்து சேர்ந்தது. ஹிரண்மயி இந்த ஸமாசாரத்தை நினைத்து, ஸந்தியாகாலத்தில் துக்கித்துக் கொண்டிருந்தாள். நினைத்தாள்-"குருவின் உத்திரவுப்படி நான் நாளைமுதல் மோதிரத்தைப் போட்டுக்கொள்ளலாம். ஆனால் போட்டுக்கொள்ள வேணுமா, என்ன? போட்டுக் கொண்டதனால் எனக்கு லாபம் என்ன? ஆமாம் புருஷனை அடையலாம். ஆனால் எனக்குப் புருஷனைகப்பட வேண்டுமென்ற ஆசை இல்லவே யில்லை. இருந்தாலும் ஆயுள் முழுதும் ஏன் பிறனுடைய மூர்த்தி என்மனதில் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறது. இந்த துஷ்ட ஹிருதயத்தை அடக்க வேணும். இல்லாவிடில் தருமத்திலிருந்து நழுவி விடுவேன்''.

இந்த ஸமயத்தில் அமலா ஆச்சரியத்தில் அமிழ்ந்து போனவளாய் ஹிரண்மயி கிட்ட வந்து "அடியோடு எல்லாம் போய் விட்டது. எனக்கு ஒன்றும் தெரியவில்லை. இல்லை, தெரிந்து நான் என்ன பண்ணுகிறது'' என்று சொன்னாள். ஹிரண்மயி—

"என்ன வந்து விட்டது"?' அமலா—அரசன் அரண்மனையிலிருந்து உனக்காகப் பல்லக்கு எடுத்துக் கொண்டு ஆணும் பெண்ணும் அடங்கலும் வந்திருக்கிறார்கள். உன்னை அழைத்துக் கொண்டு போகவேணுமாம்". ஹிரண்மயி--"உனக்குப் பைத்தியம்பிடித்து விட்டது. அரண்மனையிலிருந்து என்னை அழைத்துக் கொண்டு போக ஏன் வரவேணும்"?

இந்த ஸமயத்தில் அரண்மனை வேலைக்காரி ஒருத்தி ஹிரண்மயிக்கு நமஸ்காரம் செய்தாள். பிறகு சொன்னாள் "ஹிரண்மயி அம்மாள் இந்த நிமிஷத்தில் பல்லக்கில் ஏறிக்கொண்டு அரண்மனைக்கு வரவேண்டுமென்று ராஜாதிராஜன் ராஜமார்த்தாண்டன் ஸ்ரீமதன தேவருடைய ஆக்ஞை". ஹிரண்மயி மிகவும் ஆச்சரியமடைந்தாள். ஆனால் அவள் மாட்டேன் என்று சொல்ல முடியாது. அரசன் கட்டளையோ ஸுக்ரீவாக்ஞை. மேலும் ராஜா மதன தேவர் அரண்மனைக்குப் போக யாதொரு பயமும் கிடையாது. ராஜா பரம தர்மிஷ்டன் (தர்மம்-கடமை). மேலும் ஜிதேந்திரியன் என்று அவருக்குக் கீர்த்தி. அவருடைய கீர்த்தியினால் எந்த ராஜகுமாரனும் எந்த ஸ்திரீயிடத்தும் அக்கிரமம் செய்ய முடியாமலிருந்தது. ஹிரண்மயி அமலாவிடம் சொன்னாள் "அரசனைப் பார்க்க எனக்கு ஸம்மதம், நீயும் கூடவா". அமலா ஸம்மதித்தாள்.

அவளோடு கூடப் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஹிரண்மயி அரண்மனை வாசற்படி நுழைந்தாள். செட்டிப் பெண் வந்து விட்டாள் என்று வாசற் காப்போன் அரசனிடம் போய்த் தெரிவித்தான். ராஜன் கட்டளைப் படி வாசற் காப்போன் ஹிரண்மயியை அவருக்கெதிரில் கொண்டு போய் விட்டான். அமலா வெளியில் இருந்தாள்.

(வரும்).


# ஞானபாநு

VOL - 2. தொகுதி - 2. | September 1914. ஆனந்தவருஷ புரட்டாசிமீ | No - 6. பகுதி - 6.


## யுத்தம்.

தற்காலத்தில் நாகரிகத்திற்கும் அதிகாரத்திற்கும் உற்பத்திஸ்தானமென விருக்கின்ற ஐரோப்பாக் கண்டம் முழுதும் ஒரு பெரிய அமர்க்களமா யிருக்கின்றது. நாம் இறகேந்தி எழுத உட்காரும் இந்த நிமிஷம்வரையில், இங்கிலாந்து, பிரான்சு, பெல்ஜியம், ருஷியா, ஸெர்வியா, மாண்டிநீக்ரோ, ஜப்பான் முதலிய இத்தனை தேசங்களும் சேர்ந்து ஒரு கட்சியும் ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும் மறுகட்சியும் ஆக, பயங்கரமான யுத்தம் பெல்ஜியத்திலும் பிரான்சிலும் நடந்து வருகின்றது. இத்தாலிய தேசமும் யுத்த சன்னத்தமாய்க்கொண் டிருக்கிறது; அது இங்கிலாந்துடன் சேருமென நம்பப்படுகிறது. துருக்கி தேசமும் சைந்நியங்களைச் சேர்த்துக்கொண்டு தயாராயிருக்கிறது. ஆகவே ஜெர்மனிக்கும் ஆஸ்டிரியாவுக்கும் விரோதமாய் உலகமே கிளம்பி யிருக்கிறது போல் தோன்றுகிறது.

* * * *

இந்த யுத்தத்திற்குக் காரணம் ஸெர்வியா என்ற சிறு தேசமும் ஆஸ்டிரியா என்ற அகந்தை மிகுந்த தேசமுமாம். சில வருஷங்களுக்கு முன் ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் நடந்த ஒரு யுத்தத்தின் முடிவாக, ஸெர்வியாவி னிடத்தினின்றும் இரண்டு பிரதேசங்களை ஆஸ்டிரியா பிடுங்கிக் கொண்டது. அதுமுதல் ஸெர்வியா பழிக்குப்பழி வாங்க எண்ணி, ரகஸ்யமாகப் பற்பல ஏற்பாடுகள் பண்ணிக்கொண்டிருந்தது; நூற்றுக் கணக்கான ரகஸ்ய சபைகளை ஏற்படுத்திவிட்டது. ஆஸ்டிரியாவும் சும்மா விருக்கவில்லை; ஸெர்வியா மாதிரியே ஆஸ்டிரியாவும் தயார்பண்ணிக்கொண்டிருந்தது; நாளுக்குநாள் இவ்விரு தேசங்களுக்கும் குரோதம் மிகுந்து வந்தது. கடைசியில், இப்பொழுது சுமார் இரண்டுமூன்று மாதங்களுக்கு முன், ஸெர்வியா தேசத்தினின்றும் ஆஸ்டிரியாவினால் பிடுங்கிக்கொள்ளப்பட்ட போஸ்னியா என்ற பிரதேசத்தில்

ஆஸ்டிரியாவின் இளவரசர் தமது மனைவிசகிதம் யாத்திரைசெய்து கொண்டிருக்கையில் யாரோ ஒரு கொலைபாதகன் அவரையும் அவரது மனைவியையும் சுட்டுக்கொன்று விட்டான். ஆ! அநியாயம்! அந்த மாபாவியின் துப்பாக்கியினின்றும் கிளம்பிய நெருப்பானது ஐரோப்பாமுழுதும் பற்றிக்கொண்டு ஆசியாவுக்கும் பரவிவிட்டதே!

*   *   *   *

ஸெர்வியா தேசத்து ராஜாங்கத்தாரின் அநுமதியின்பேரிலேயே மேற்படி குற்றம் நடந்ததென்று ஆஸ்டிரியா தேசத்திற்கு வேண்டிய சாட்சியங்கள் கிடைத்தனவாம். ஆதலால்தான் ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. ருஷியா தேசமானது ஜாதியபிமானத்தால் தூண்டப்பட்டு ஸெர்வியாவுக்கு இந்த யுத்தத்தில் உதவி செய்வதற்கு முற்பட்டது. ருஷியா எழுந்திருக்கவே ஆஸ்டிரியாவின் பக்கத்தில் பதுங்கிப் பாய்வதற்குத் தயாராகக் காத்துக்கொண்டிருந்த ஜர்மனி திடீரென்று ருஷியாவின்மேல் பாயத்தொடங்கியது. ருஷியாவுக்கும் பிரான்சுக்கும் அந்நியோந்நிய அன்புமிகுந்து ஒருடன்படிக்கையினால் ஒன்றுடனொன்று பிணைக்கப்பட்டிருந்தன. ஆதலால் பிரான்சு தன்னாலியன்ற உதவியை ருஷியாவுக்குச் செய்யவேண்டியதாயிற்று. பிரான்சு யுத்தத்தில் சம்பந்தப்படும்படி நேரிட்டதாலும் மத்யஸ்த தேசமான பெல்ஜியத்தை ஜெர்மனியர் திடீரென்று தாக்கியதால் அதனைக் காக்கும் பொருட்டும் இங்கிலாந்து தேசமும் யுத்தத்திற்குக் கிளம்ப வேண்டியதாயிற்று. இங்கிலாந்து இந்த யுத்தத்தில் சம்பந்தப்படாமல் இருந்து, ஜர்மனியானது பிரான்சையும் ருஷியாவையும் ஜயித்து அடக்கி விடுமாயின் எப்பொழுதாவது ஜர்மனி இங்கிலாந்தை எதிர்க்கவே எதிர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால் சென்ற முப்பது வருஷங்களாக ஜர்மனிக்கு இங்கிலாந்தின் பெருமையிற் பொறாமை யுண்டாகி தனது தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை முதலியவற்றை நாளுக்குநாள் விருத்தி செய்துகொண்டே வந்தது.

*   *   *   *

இங்கிலாந்து தேசமானது இந்த யுத்தத்தில் திடீரென்று கண்முடித்தனமாய்ப் பிரவேசிக்க வில்லை. ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநிறுத்த, ஆங்கிலநாட்டு ராஜதந்திர நிபுணராகிய ஸர் எட்வர்ட் கிரே என்பவர் பட்டபாடு மிகவும் வியக்கத்தக்கது.



இரவுபகலாகப் பாடுபட்டு தனது கார்யம் ஜயிக்காமற்போகவே, கடைசியில் ஸர்எட்வர்ட் கிரே யுத்தம் செய்வதைத்தவிர வேறு வழியில்லையென்றும், வேறொருவருக்கும் உதவி செய்ய இங்கிலாந்து கடமைப்படும்படியாக உடன்படிக்கை யொன்றுமில்லாமற் போனாலும், தனது ஸ்வயரக்ஷையின் நிமித்தம் இங்கிலாந்து யுத்தத்திற்குப் புறப்படத்தான் வேண்டியிருக்கிறது என்றும் சொல்லிவிட்டார். ஆங்கில ஜன சமூகம் அவரது வார்த்தைகளை ஆமோதித்தது; உடனே ஜர்மனியுடன் யுத்தம் தொடர்ந்தது இங்கிலாந்து தேசம்.

*   *   *   *

பெல்ஜியம் என்பது பிரான்சுக்கு வடக்கு, ஜர்மனிக்குத் மேற்கு, இங்கிலாந்துக்குத் தென்கிழக்கு இவ்வித எல்லைகட்குட்பட்ட தொருசிறியதேசம். இத்தேயத்தினர், பெரும்பாலும் வியவசாயிகள். ஜர்மனி தேசமானது ருஷியாவுடன் போர்புரிவதாகக் கூறிவிட்டுத் தனது சைந்நியங்களைப் பெல்ஜியம் தேசத்துக்குள் அனுப்பிவிட்டது. தனக்குக் கிழக்கேயுள்ள ருஷியாதேசத்துடன் போர்புரிவதற்குத் தனக்கு மேற்கேயுள்ள பெல்ஜியத்திற்கு ஜர்மனி தனது சேனைகளை அனுப்பிற்று! ருஷியாவுக் உதவிசெய்ய ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் கட்டாயம் முற்படுவாரென்று அது நன்றாய் அறிந்திருந்தது போலும்! பிரான்சின்கிழக்கு எல்லை முழுதும் நன்றாய்க் கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டு வருவதினால், ஜர்மனிக்குப் பிரான்சுக்குள் செல்ல வேறு வழியில்லாது பெல்ஜியத்திற்குள் பிரவேசித்தது. யாதொரு விதத்திலும் சம்பந்தப்படாத பெல்ஜியம் இவர்களுடைய மத்தியில் இருப்பதினால் இப்பொழுது அது இப்பாரதப்போருக்கு குருக்ஷேத்திர பூமியாய் விளங்குகிறது!

*   *   *   *

பெல்ஜியத்தில் இந்த யுத்தத்தினால் கஷ்டப்பட்டுத் திண்டாடித் தவிக்கும் ஏழை, எளியவர்களைப்பற்றி, கூன் குருடு நொண்டிகளைப்பற்றி, ஸ்திரீகளைப்பற்றி, யுத்தம்செய்யக் கச்சைக்கட்டி ரணகளத்தில் தயாராகவந்து நிற்கும் அரசர்களும் போர்வீரர்களும் சிறிதேனும் யோசனை செய்வார்களா? அந்தோ! பரிதாபம்! ஜனங்கள் ஊர்விட்டு ஓடுகின்றனராம்! எத்தகைய கஷ்டமுறுகின்றனரோ? பெல்ஜியம் தேசத்தில் இப்பொழுது ரத்தப்ரவாஹம் ஓடுகின்றது; சம்ஹார மூர்த்தியாகிய ருத்திரன் தனது பேய்க்

கணங்களுடன் கூடிக் குதூகலத்துடன் ஆடுகிறார்; மகா சக்தியாகிய காளிகாதேவி பயங்கர ரூபத்துடன் வெளிப்பட்டிருக்கின்றாள். யதேச்சையாய் நேரிட்டிருக்கும் இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு எவரால் முடியும்? பழையகாலத்துப் பாரதப்போரை மூட்டிவிட்ட ஸ்ரீ கிருஷ்ணது திருவிளையாடல்களன்றோ?

*  *  *  *

ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்கட்கெல்லாம் ஜகத் குருவாகிய போப் என்பவர் இந்த பயங்கரயுத்தத்தில் ஜீவராசிகள்படும் பாட்டைச் சகிக்கமுடியாது மரித்துவிட்டனர். "பூர்வ காலங்களில் போப் என்பவர்கள் இந்தக் கொலையை நிறுத்தியிருப்பார்கள். இப்பொழுதுஎன்னால்முடியவில்லையே" என்று அவர்ஏங்கிப் பாதவித்து உயிர் துறந்தார். இவர் ஐரோப்பாவில் இந்தயுத்தம்நேரிடாதிருக்கும் பொருட்டுத் தம்மாலானவளவும் பாடுபட்டார்;இவர் வார்த்தையைச் கோபமிகுந்து குரோதம் பொங்கி ஒருவரையொருவர் கொல்லத் துணிந்து தயாராக வாளை உருவிக் கண்கள் சிவந்து சமயம் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் ஐரோப்பிய அரசர்கள் கவனிப்பார்களா? அவர்கட்கு இவர் ஒருலட்சியமா? தேகமே ஆத்மா, போகமே மோட்சம் என்ற கொள்கை விருத்தியாகி வருகின்ற இக்காலத்தில், சொற்ப நேரத்துக்குள் எத்தனை உயிர்களை ஒரே யடியாய்க் கொன்றுவிடலாம் என்று மேன்மேலும் யோசனைசெய்து அதற்குத்தக்க சூட்சுமங்கள் கண்டுபிடிக்கும் இக்காலத்தில், ஸ்வயநலப்பேய் கேட்பாரின்றிக் கேளிக்கையாகக் கூத்தாடுகின்ற இக்காலத்தில், ஜனங்கள் சாட்சாத் ஈஸ்வரனே வந்து சமாதானம் கூறினும் கேட்கமாட்டார்கள்.

*  *  *  *

மானிடவர்க்கத்தில் சமாதானத்தை நிலைநிறுத்தப் பாடுபட்டார்கள் ஆங்கிலேயர்கள் என்றும் அவர்களுடைய முயற்சி பலிக்காமற் போகவே நமது ஸ்வயரட்சையின் பொருட்டு யுத்தத்திற்கு இழுக்கப்பட்டார்களென்றும் இப்பொழுது உலகம் அறியும். ஆதலால் நமது ஆங்கிலேய அரசாங்கத்தார் வெற்றியடைந்து உலகில் தமது கீர்த்திப்பிரதாபத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டுமாறு நாம் ஈஸ்வரனை இறைஞ்சுகின்றோம்.



## யுத்த தர்மம்.

இப்பொழுது ஐரோப்பாவில் மும்முரமாக யுத்தம் நடந்து வருகின்றபடியால் இந்த சமயத்தில் யுத்தம் செய்யும் முறைமை இப்படியென்று அறிவாளிகள் கூறியிருப்பதை நாம் கவனிப்போம். தீவர்த்திக் கொள்ளைக்காரனும் தான் திருடப்போகும் பொழுது தனது குல தேவதையாகிய கருப்பண்ணசாமியையோ, மதுரைவீரனையோ கும்பிட்டுக்கொண்டு தான் திருடப்போகின்றான். தீயசெயல்களைச் செய்வதையே தொழிலாகக் கொண்டுள்ள மகாபாபியும் ஈஸ்வரனை எந்த ரூபத்திலாவது பஜித்துக்கொண்டேதான் தனது பாபகிருத்தியங்களைச் செய்கிறான். ஆதலால் இப்பொழுது தங்களுடைய ஆயிரக்கணக்கான குடி ஜனங்களை யுத்தகளத்தில் செலுத்தி மடியச்செய்விக்கத் துணிந்துள்ள பல தேசத்து அரசர்களும் ஈஸ்வரனைத் தொழுதுகொண்டு யுத்தத்திற்குப்புறப்படுவது ஆச்சர்யமன்று. ஆஸ்டிரியா ஸெர்வியாவுடன் யுத்தத்திற்கு ஆயத்தமாய காலத்தில், ஆஸ்டிரியா சக்கிரவர்த்தி, 'கடவுள் நம்மை ரட்சிப்பாராக' என்றார். ஜெர்மனி சக்கிரவர்த்தியும் அங்ஙனமே கூறினார்; ருஷியா சக்ரவர்த்தியோ மாஸ்கோ நகரத்திலுள்ள பெரிய கோவிலுக்குச் சென்று மகா பயபக்தியுடன் இறைவனைத் தமக்கு ஜயமுண்டாகும்பொருட்டு வேண்டிக்கொண்டார். நமது ஆங்கில அரசாங்கத்தார் நியாய ஸ்வரூபியாகிய ஈஸ்வரனே தங்களை நடத்திச் செல்கின்றனர் என்று நம்பி யுத்தத்திற்கு ஆரம்பித்தனர். ஆகவே இந்த பயங்கரமான யுத்தம் ஈஸ்வரனுடைய சந்நிதியிலேயே அவரது ஆக்ஞையின்படியே நடக்கின்றது. தீயோர் அழிந்து சிதைந்து விடுவரென்பதும் நல்லோர் வெற்றி பெறுவர்என்பதும் திண்ணம்.

இங்ஙனம் ஈஸ்வரனை வேண்டிக்கொண்டு ஆரம்பித்திருக்கிற யுத்தமானது எங்ஙனம் நடத்தப்படுகிறதென்பதை நாம் பத்திரிகைகளின் மூலமாக அறிகிறோம்.

யுத்தம்செய்யும் முறைமையைப்பற்றி நாம் பாரதம், இராமாயணம் முதலான இதிகாசங்களை நன்றாய் ஆராய்ந்து பார்ப்போமானால், தர்மயுத்தம், அதர்மயுத்தம், தர்மாதர்ம யுத்தம் என்னும் மூவகை யுத்தங்களைப் பற்றியும விபரமாக அறியலாம். தர்ம

யுத்தம் என்பது தானும் தனது எதிரியும் ஆகிய இருவரும் யுத்த சந்நத்தர்களாகி, சரி சமமான சைந்நிய பலத்துடன் இருவருடைய குடி ஜனங்களுக்கும் யாதொருவித துன்பமும் நேரிடாமல் பொதுவான பிரதேசத்தில் ஒருவரை யொருவர் எதிர்த்து எதிரி எந்த ஆயுதத்தை உபயோகிக்கின்றானோ, அந்த ஆயுதத்தையே தானும் உபயோகித்து கொலையாகிய கொடுந் தொழிலையே தொழிலாகக் கொள்ளாமல் எவரேனும் ஒருவர் தோல்வியை உணர்கிற வரையில் யுத்தம் செய்வதாம். தர்மாதர்மயுத்தம் என்பது, தனது எதிரி யுத்த சந்நத்தனாவதற்கு முன்பு தான் யுத்த சந்நத்தனாகி தனது முழுச்சைந்ய பலத்துடன் குடி ஜனங்கட்குத் துன்பம் உண்டாகாமல் இருக்கும்படி பொதுவான பிரதேசத்தை நாடாமல், எதிரியின் நகரத்திற்குள்ளேயே சென்று யுத்தத்திற்குத் தயாராயில்லாமல் இருக்கும் எதிரியுடன் திடீரென்று பாய்ந்து யுத்தம் செய்வதே. அதர்மயுத்தம் என்பது எவனுடன் தான் யுத்தம்செய்ய நோக்கம் கொண்டிருக்கிறானோ அவனிடத்தில் அத்தியந்த சிநேகம் பாராட்டி அவனைத்தன்னிடத்தில் நம்பவைத்து முழுமோசமாகத் திடீரென்று அவன்மீது பாய்ந்து அவனை அடித்துக்கொல்வதாம்.

ஆதலால், இந்த மூன்றுவித யுத்தமுறைகளில் தர்மயுத்தமானது மிகவும் சிரேஷ்டமானதாம். தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகச் செய்யப்படும் யுத்தமே மேற்கூறியபடி தர்மயுத்த முறையில்செய்யப்படும். நாளுக்குநாள் படைகளை அதிகப்படுத்தி அந்நிய தேசாபிவிருத்தியின் மேல் பொறாமைகொண்டு வெகுநாட்களாக யுத்தத்திற்குத் தயார்செய்து கொண்டு திடீரென்று எதிரியின்மீது பாய்தல் நியாயமன்று.

இன்னும் யுத்தம் என்பது எவராலும் வெறுக்கத்தக்கது. துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனார்த்தம் சாமதான பேததண்டம் எனப்பட்ட சதுர்விதோபாயங்களில் சாமம், தானம், பேதம் என்னும் மூவகை உபாயங்களையும் பிரயோகித்துப் பிரயோசனப்படாமற்போனால், பின்னர்தான் தண்டம் என்னும் உபாயத்தை அரசன் கைக்கொள்ள வேண்டுமென்று தர்மசாஸ்திரம் முறையிடுகின்றது. பொன்னாசையாலோ, மண்ணாசையாலோ, பெண்ணாசையாலோ தூண்டப்பெற்று யுத்தம்செய்தல் அரச தர்மத்துக்கு



அழகன்று. பொன், மண், பெண் என்னும் மூவாசைகளும் அரசன் ஒருவனிடத்தோ அல்லது அவனது பிரதானிகள் சிலரிடத்தோ அடங்கியுள்ளனவாதலாலும் அவ்வரசனுடைய ஏழைக்குடிகளாகிய பெரும்பான்மையோருடைய ஹிதத்திற்கு ஏற்றனவன்றாதலாலும் ஒருவர் அல்லது ஒரு சிலருடைய ஆசை காரணமாக ஆயிரக்கணக்கான ஜீவராசிகள் மடியவேண்டியிருக்கின்றதாதலாலும், ஆசையினால் தூண்டப்பட்டுச் செய்யும் யுத்தம் அநியாயமானது என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. “புண்ணியம் க்ஷீணித்துப் பாபம் ஓங்கும்பொழுது, துஷ்டர்களை ஸம்ஹாரம் செய்து சாதுக்களை ரட்சிக்கும் நிமித்தம் நான் யுகத்திற்கு யுகம் அவதரிக்கிறேன்” என்று பகவான் பார்த்தனிடத்தில் பகர்ந்தருளினார். ஆதலால் சாதுக்களை ரட்சிக்கும்பொருட்டு துஷ்டர்களுடன் செய்யும் யுத்தமே நியாயமானது.

நித்திரை செய்பவன், ஆயுதமின்றியவன், புறங்காட்டி நிற்போன், யுத்தத்திற்குத் தயாராயில்லாதவன், யுத்தப்பயிற்சி யில்லாதவன் பயந்து ஒளித்திருப்பவன், உண்டு கொண்டிருப்பவன், விருத்தாப்பியன், சிசு, ஸ்திரீ, அலி அல்லது பேடி ஆகிய இவர்களுடன் எக்காலத்தும் எக்காரணத்தினாலேனும் யுத்தம் செய்யலாகாதென்று தர்ம சாஸ்திரம் கூறுகின்றது. யுத்தத்திற்காகவென்று இருகட்சியாராலும் குறிக்கப்பட்டுள்ள, பொதுவான, வெட்ட வெளியான, குடி ஜனமில்லாத, பிரதேசத்தில் தவிர, நகரங்களிலும் ஊர்களிலும், கிராமங்களிலும் அங்குவசிக்கும் குடிகளுக்கு துன்பமும் துக்கமும் நேரிடும்படி, யுத்தம் செய்யலாகாது. இருகட்சியாரும் சம்மதித்து ஒருவரை பொருவர் எதிர்ப்பதற்குத் தயாராயுள்ள காலத்தில் தவிர, மற்றக்காலங்களில் யுத்தம் செய்யலாகாது. ஓரரசன் எதிரியுடன் யுத்தம் செய்து, அவனை வெல்வது பெரிதன்று; ஆனால் அந்த எதிரியுடன் யுத்தம் செய்வதால், யுத்தம் செய்யும்பொழுது தனது குடி ஜனங்கட்கு யாதொருவித துன்பமும் துக்கமும் நேரிடாமல் அவர்களைப் பாதுகாத்து ரட்சிப்பது பெரிது.

இன்னும் தனது ராஜ்ஜியத்திலன்று, தனக்குச் சேராத வேறு எந்த ராஜ்யத்திலாயினும் சரியே, துஷ்டர்கள் மிகுந்து சாதுக்களுக்குக் கஷ்டம்பெருகி, துஷ்டர்கள் மிகுந்துள்ள அந்த ராஜ்யத்து அரசன் அந்தத்துஷ்டர்களை சிட்சிப்பதற்கு யோசனை

செய்வானாயினும், அவ்வரசனால் முடியாமற்போயினும், தர்மத்தை ரட்சிப்பதற்காகச் செங்கோல் செலுத்தும் நியாயதுரந்தரனாகிய அரசன், அந்தத் துஷ்டர்களைச் சிட்சித்துச் சாதுக்களை ரட்சிக்க வேண்டியது. இதனால் துஷ்டர்கள் மிகுந்துள்ள ராஜ்யத்து அரசனுடன் போர்புரிய வேண்டிவரினும் அப்போர் நியாயமானதே. துஷ்டநிக்கிர சிஷ்டபரிபாலனமே ராஜலட்சணம். இந்த லட்சணமில்லாதவன் ராஜன் எனப்பட மாட்டான். உஷ்ணம் நீங்கிய வெறுங்கரிக்கட்டையை ஜனங்கள் கரிக்கட்டை யென்று இகழ்ந்து விடுவார்கள். ஆனால் கரிக்கட்டையில் உஷ்ணமிருக்குமாயின், அக்கரிக்கட்டையினிடத்தில் ஜாக்கிரதையா யிருப்பார்கள். அக்கரிக்கட்டையை அலட்சியமாய்த் தொட்டுவிட்டால், அது சுட்டுவிடும். ஆனால் அந்த நெருப்புத் தணலினால் பற்பலவித நன்மைகளும் உண்டாகலாம். அது போலவே, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனமாகிய இலட்சணம்-உஷ்ணத்தன்மை - இன்றிய ராஜன் ஜனங்களால் மதிக்கப்படமாட்டான். இந்த லட்சணம் வாயந்துள்ள ராஜனை அலட்சியம் பண்ணும் விஷயத்தில், அவனுடைய கோபம் அலட்சியம் பண்ணுபவர்கட்கு உடனே தீங்கை உண்டாக்கிவிடும். ஆதலால் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டு ராஜ்யபாரத்தை வகித்து யுத்தம் நேரிடும் பொழுது யுத்தம் செய்தலே அரசர்க்கு நியாயமாகும்.

## நமது வாசகர்கட்கு ஓர் அறிவிப்பு.

நாம் சென்ற ஆடிமாதத்துப் பத்திரிகையிலும் ஆவணி மாதத்துப் பத்திரிகையிலும் ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் எழுதியுள்ள "கிழக்கும் மேற்கும்" என்ற வியாசத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மொழி பெயர்த்துப் பிரசுரித்தோம். அந்த வியாசமானது கீழ்நாட்டினருடைய நடைஉடை பாவனைகட்கும் மேல் நாட்டினருடைய நடைஉடை பாவனைகட்கும் உள்ள வித்தியாசங்களைப் பற்றி விவரிக்கின்றது. இப்பொழுது மேல்நாட்டில் ஏற்பட்டுள்ள பெருங் குழப்பச் சந்தர்ப்பத்தில் அவற்றைப் பற்றி விவரித்துக் கொண்டிருப்பது தகுதியன்றென்று கருதி மேற் கூறிய வியாசத்தை இம்மாதமுதல் நமது பத்திரிகையில் வெளியிடாது நிறுத்தி யிருக்கின்றோம்.

பத்திராதிபர்.



## நவராத்திரி.

(ஸ்ரீ ஆர். எஸ். கங்கா ஜடேச சர்மா அவர்களெழுதியது.)

அன்பும், அருளும் நிறைந்த நம் பெரியோர்களால் உலக நன்மையைக் கருதித் தகுந்த ஆராய்ச்சியுடன் நம் நாட்டில் ஏற்படுத்தப் பட்டு, யாதொரு இடையூறுமின்றி, நாளது வரையில் நம்மவரால் கையாளப்பட்டு வருகிற (கோயில்களில்) திருவிழாக் (உத்ஸவங்) களும், (வீடுகளில்) நோன்பு (வ்ருதங்) களும், அளவற்றன. அவைகளிற் பெரும்பாலன கன்யாகுமரிமுதல், இமயமலை வரை, எல்லா விடங்களிலுமுள்ள இந்துக்களாலுங் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆனால் சிற்சில நாட்டிற்கென்றே சில திருவிழாக்களும் நோன்புகளும் ஏற்பட்டு அவ்விடங்களில் மட்டும் வழங்கிவருவது முண்டு. தமிழ்நாட்டில் வழங்கும் சிலவிழாக்களும், நோன்புகளும், மலையாள (கேரள)த்தி லில்லை. அங்குள்ளன சில தெலுங்கு (ஆந்திர)நாட்டி லில்லை. இன்னும் இவ்விதமே தென்னாட்டிலுள்ளன சில வடநாட்டிலில்லை. அவ்விடங்களிலுள்ளவை சில இத்தென்னாட்டி லில்லை. ஒரு நாட்டிலேயே, ஒரு ஜாதியிலேயே ஒருவர் மேலானதாய்க் கொண்டாடுவதை மற்றொருவர் கைக்கொள்ளவதே யில்லை, உதாரணமாக "விநாயக சதுர்த்தி" என்பது சைவர்கட்கு உயர்ந்த தாயிருப்பினும், வைஷ்ணவர்கட்குளில்லை. வரலக்ஷ்மிநோன்பென்பது பெண்களுக்குரிய ஓர் நோன்பு. இதனை ஒரேஜாதி ஒரேமதத்திலுள்ள ஒருவர்கைக் கொள்வதும், மற்றொருவர் அனுஷ்டிக்காததையும் காணலாம். ஏகாதசி வ்ருதத்தை சில ஸமயம் ஸ்மார்த்தர்கள் ஒரு தினத்திலும், வைஷ்ணவர்கள் மற்றோர் நாளிலும் அனுஸரிப்பதை அனைவருமறிவர். இவ்விதம் பல உதாரணங்களுண்டு. நிற்க.

என்னாட்டிலும் எல்லோராலும் வழங்கப்பட்டுவரும் திருவிழாக்களும், நோன்புகளும் சில உள்ளன. அவற்றில் முதன்மையானதே, நாம் கூறவந்த "நவராத்ரி" என்பது. இதனை (க்கோயிற்களிலும், வீடுகளிலும், கைக்கொள்வதால்) திருவிழாவென்றும், நோன்பென்றும், கூறலாகும். இதனைச் சைவர், வைஷ்ணவர், மாத்வர் என்ற வேற்றுமையின்றி, எக்கொள்கையினரும், அன்பு மிகுந்து ஒரேமனத்தராய் ஆசரிக்கின்றனர். இது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தென்னாட்டிலும் மற்றென்னாட்டிலும், வழங்கி வருகின்றது.

"நவராத்ரி" என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள்படும். எனின், எல்லாம் வல்ல இறைவியைப் போற்றும் ஒன்பது நாட்களெனவுங் கொள்ளல்வேண்டும். சரத் காலத்தில் வருவதால் இது "சாரத நவராத்ரி" யெனப்படும். சிலர் இதனை யறியாது "சாரதா நவராத்ரி" யென்பர். சரத்ருதுவில் "சாரத நவராத்ரி" யென்றும் வஸந்தருதுவில் "வாஸந்த நவராத்ரி" யென்றும் வருஷத்தில் இரண்டு நவராத்ரிகளுள வெனினும் ஜகத் ப்ரஸித்தமான சாரத நவராத்திரியைப் பற்றி மட்டும் இப்பொழுது கூறுவோம்.

அவ்வளவு அருமைவாய்ந்த நவராத்ரி யென்பது ஒவ்வொரு வருஷமும் புரட்டாசி மாஸத்து அமாவாஸ்யை கழிந்த ப்ரதமையிலிருந்து நவமி முடிவாயுள்ள ஒன்பது நாட்களே. மறுநாளாகிய தசமியன்று "விஜயதசமி" யெனப்படும். ஒன்பது நாட்களிலும், மிகுந்த பயபக்தியுடன் வ்ருதநியமங்களை முறைவழுவாது ஒவ்வொருவரும் அனுஷ்டித்துப் பத்தாவது நாளாகிய விஜயதசமி யன்று விசேஷ பூஜாதிகளைச் செய்து வ்ருதத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமென்பது பெரியோர் கொள்கை.

இப்புண்ய காலத்தின் அருமையைப்பற்றி "தேவீபாகவதம்" "ஸ்காந்தம்" என்ற மஹாபுராணங்களில் பரக்கக்காணலாம். ப்ரஸ்தாப நாட்களில், ஒவ்வொருவரும் தம்வீடுகளில், தத்தம் சக்திக்கியன்றவாறு சுத்தமான இடத்தில் ஓர் பூஜா மண்டபம் தூண்களுடனும், மேற்கட்டுகளுடனும், மாவிலை, கூந்தல், தோரணம் முதலியவற்றாலும் அணிபெறச்செய்து நடுவில் உயர்ந்தமணையிட்டு, வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் உள்ளும் புறமும், தூய்மையாயிருந்து கொண்டு, பீடத்தின்மேல் "ஸிம்ஹவாஹினி" யான ஸ்ரீபராசக்தி விக்ரஹத்தை யாவது, அன்றேல் கடஸ்தாபனஞ் செய்து ஸ்ரீயந்த்ரத்தை யாவது ஸ்தாபித்து அவற்றில் ஸ்ரீபராசக்தியை ஆவாஹனஞ் செய்து, வேதாகமங்களிற் கூறியுள்ளவாறு பதினாறுவிதமான உபசாரங்களையுஞ் செய்து, பூஜையும், ஜபமும், பாராயணமும், ஹோமமும், தர்ப்பணமும், நடத்தவேண்டியது.

ஸ்ரீருத்ரன், விஷ்ணு, ப்ரஹ்மா என்னும் மும்மூர்த்திகளின் சக்திகளான ஸ்ரீதுர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி என்ற முச்சக்திகளாக விளங்குவது, "சண்டிகா" என்ற ஒரே பெயரோடு கூடி



"உலகத்தை ஆக்கவும், காக்கவும், போக்கவும், வல்ல" பராசக்தியேயாகும். இச்சக்திக்கு மூலமான நவாக்ஷரீ என்னும் மஹாமந்த்ரமும், இறைவியை வழிபடுவதற்கு இன்றியமையாததும், மந்த்ரரூபமாக வுள்ளதுமான ஸ்தோத்திரம் ஸ்ரீமார்க்கண்டேய மஹாபுராணத்திலுள்ள "தேவி மாஹாத்ம்யம்" என்னும் "துர்க்காஸப்தசதீ" அல்லது "சண்டீஸப்தசதீ" என்பதே.

ஸப்த சதீ என்றால் எழுநூறு என்று பொருள்படும்; அதனால் இதில் எழுநூறு "ஸ்லோக"ங்கள் அடங்கி யிருப்பதாகச் சிலர் கருதக்கூடும். ஆனால் இதில் அடங்கியுள்ளது "ஐந்நூற்றெழுபத்தெட்டு" ஸ்லோகங்களே. எனினும் இதனுள் "எழுநூறு மந்த்ரங்கள்" அடங்கியிருப்பதைக் காணலாம். இதனாலேயே இந்நூற்கு ஸப்தசதீ என்றபெயர் வந்தது.

பூஜைபாராயணங்கள் முடிந்ததும், எதிரில் முக்கோணமான அக்னிகுண்டத்தில் தீவளர்த்து, முன்ஜபத்தில் உபயோகித்த மந்த்ரங்களைக் கொண்டே, ஸமித்தினாலும், பசுவின் நெய்யினாலும், ஸ்ரீபராசக்தி ப்ரீதியின் பொருட்டு ஹோமம் செய்து, ஒன்பது வயதுக்குமேற்படாத ஒன்பது ப்ராஹ்மணகன்னிகைகளை, ஸ்ரீபராசக்தி ரூபமாகநினைத்துப், பின் வேதசாஸ்த்ர ஸம்பன்னரான, ப்ராஹ்மணோத் தமர்களையும், போஜனம் தக்ஷிணை தாம்பூலாதிகளாற் களிப்பித்துப் போற்றல் வேண்டும்.

"அறிவார் பராசக்தி யானந்த மென்ப
ரறிவா ரறிவுரு வாமவ ளென்ப
ரறிவார் கருமை மவளிச்சை யென்ப
ரறிவார் பரானு மவளிடந் தானே."

(திருமந்திரம்.)

ஆடவர்களிவ்விதஞ் செய்யப் பெண்டிரும், மேற்கூறியவற்றிற்குத் தாமும் உதவியாயிருந்து, செய்யவேண்டியவனைத்துஞ் செய்து வருவதன்றிப் பரம்பொருள் உருவமான ஸ்ரீமஹாகணபதி, ஸ்ரீபார்வதி பரமசிவன், ஸ்ரீஸீதாராமன், ஸ்ரீராதாக்ருஷ்ணன் முதலிய மூர்த்திகளைக் கொலுவீற்றிருக்கச்செய்து, சுற்றிலும் பலவிநோதமான பதுமைகளையும், படங்களையும், இன்னும் பலவேடிக்கையான பொருள்களையும் வைத்து, சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், விசித்திரமான கோலங்கள், பக்திரஸமான ஸ்தோத்ரங்கள், இனிய கீர்த்தனங்கள், ஸங்கீத வாத்யங்களின் கோஷங்

கள், பல பொருள் தானங்கள் முதலியவற்றால் ஒவ்வொருவீட்டையும் அலங்கரித்து, பல இன்சுவைச் சிற்றுண்டிகளையும், அம்பிகைக்கு நிவேதித்து, ஆலத்தி (ஹாரதி) சுற்றி மங்களம்பாடி அங்குவந்துள்ள சிறுவர் சிறுமிகட்கும், ஸுமங்கலிகளுக்கும், சந்தனம், குங்குமம், புஷ்பம், வெற்றிலை பாக்கு, சிற்றுண்டி முதலியவை வழங்கிப்பலரும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு வீடுகட்குஞ்சென்று, ஸ்ரீபராசக்தியின் புகழைப்பாடி மெய்மறந்து களித்திருப்பார்கள்.

சுருங்கக் கூறில், இவ்வொன்பது நாட்களிலும் ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு காட்சி சாலையாகவே யிருக்குமென்பதற்கையமில்லை.

மேலும் ஒவ்வொரு ஆலயங்களிலும் மூர்த்திகளைக் கொலு மண்டபத்தில் அலங்கரித்து, அனேக வேத, கீத, வாத்தியகோஷங்களுடனும், அபிஷேக அலங்கார, ஆராதனாதிகளும், மிகுந்த விமர்சையாய் நடந்துவரும். ஒவ்வொரு ஆலயங்களிலும், வேடிக்கையின் பொருட்டுப் பலவினோதமான பதுமைகளையும், அலங்காரமாய் அமைத்து "தேவேந்த்ரஸபை" யென்ன ஜோடித்திருப்பது சிலபெரிய ஆலயங்களிற் செல்வோர் "தேவலோகமென்பது இதுதானோ" என்றையுறும் வண்ணம், கண்டோர்மனதைக் கவருமாறு விளங்கும். ஒவ்வொரு ஸ்த்ரீ புருஷர்களும், சிறுவர் சிறுமியர்களும் இவ்வேடிக்கையைக்கண்டு களிக்கும்பொருட்டேனும், கோயில்களுக்குச் செல்லாமலிரார்.

பேயாடுவதும், கரணம் போடுவதும், குஸ்திசெய்வதும், நீர் விடுலதும், ஓடுவதும், ஆடுவதுமாயுள்ள ஸூத்ரங்களமைத்த பொம்மைக் கூத்தைக்காணக்கருதிக் கோயில்கட்குச் செல்லும் பாமரர்கள் கூடக் கர்ப்பக்ருஹத்திலும், கொலுமண்டபத்திலும், கம்பீரமாய் வீற்றிருக்கும் மூர்த்திகட்கு நடக்கும் கற்பூரதீபாராதனையை தரிசித்து ஒருநொடியேனும் மெய்மறந்து மயிர்சிலிர்த்து ஆநந்த முறாதிரார் எனின், "நாமும் ஒரு திறப்பாவையே, நம்மை யாட்டிவைக்கும் ஸூத்ரதாரன் இறைவனே" யென்றறிந்து தெளிந்த உண்மை அன்பர் (பக்தர்)கள் அவனது புகழைப்பாடியாடிக்களித்து இணையில்லா ஆநந்தத்தை யடைவார்களென்று கூறவும் வேண்டுமோ? நிற்க.

ஒன்பதாவது நாளாகிய மஹாநவமி தினத்தை ப்ராஹ்மணர்கள் "ஸரஸ்வதிபூஜை" என்றும், மற்றையோர் "ஆயுதபூஜை



யென்றும் கூறுவார்கள். இன்று ப்ராஹ்மணர்கள் தமது வீட்டிலுள்ள வேதாகம சாஸ்த்ர புராண இதிகாஸம் முதலிய புஸ்தகங்களையும் எழுதுகருவிகளையும், துர்க்கைக்குரிய ஆயுதங்கள், லக்ஷ்மிக்குரிய ரத்நங்கள், பெட்டிபேழை முதலியவைகள் ஸரஸ்வதிக்குரிய நூல்கள் (புஸ்தகங்கள்) இவற்றை முதல் நாளே மிகுந்த பக்திச்ரத்தையுடன் எடுத்துவைத்து (அஷ்டமியன்று ஸரஸ்வதி ஆவாஹனம்) ஆவாஹனஞ்செய்து பூஜித்து மஹாநவமி (ஸரஸ்வதி பூஜை) யன்று விசேஷமாய்ச் சந்தனம் குங்குமம் புஷ்பம் பழங்கள் தாம்பூலம் முதலியவைகளாலும் இனியமனோஹரமான நைவேத்தியங்களாலும் ஸரஸ்வதியைப் பூஜிப்பார்கள். இதரஜாதியார்களும் அன்றையதினம் தத்தம் தொழிற்கருவிகளைச்சுத்தமாய் வைத்துப் பயபக்தியுடன் வழிபடுவார்கள். இதனாலேயே அவர்கள் அதனை ஆயுதபூஜையென்பது.

இன்றையதினம் ஸ்கூல் (பாடசாலை) களிலும், கோர்ட் நியாயஸ்தலங்) களிலும் ஒவ்வொருகைத்தொழிற் சாலைகளிலும் கொண்டாடப்படுவதால் இன்று எங்கும் விடுமுறையே.

மைஸூர், திருவாங்கூர், புதுக்கோட்டை முதலிய ராஜாங்கங்களிலும் இவ்வொன்பது நாட்களும் அரண்மனையில் பூஜைமுதலியவைகளும், அளவற்ற தானதர்மங்களும் நடந்துவருகின்றன. வேதசாஸ்த்ர ஸம்பந்நர்களான விப்ரர்கட்கும், ஸங்கீதவித்வான்களுக்கும், இன்னும் பலபண்டிதர்கட்கும், அவரவர் திறமையைப் பரீக்ஷித்துத் தகுந்த ஸன்மானம் (பரிசளிப்பு) முதலியன நடத்தி வருகிறார்கள்.

வீடுகளில் மேற்கூறிய ஒன்பது நாட்களுடன் இன்னோன்பு மங்களகரமாக முடிவெய்தும். ஆனால் மறுநாளாகிய பத்தாவது நாள் "விஜயதசமி" யன்று, அரண்மனைகளில் தர்பாரும்வேட்டையும், ஆலயங்களில் மூர்த்திகளை வாஹனங்களில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய் அம்புபோடுதல் என்ற உத்ஸவமும் நடக்கும். இத்துடன் நவராத்ரி என்றபுண்ய காலம் பூர்த்தியாகின்றது.

அம்புபோடுவது வன்னிமரத்தில். வன்னிமரம் உறைந்து கொண்டாற்கூட அதனின்றும் தீ கிளம்பி விடுமென்றும், அதனால் அதில் தீ மிகுந்திருக்கிறதென்றும் சொல்கிறார்கள். அம்மரத்தில் அம்புபோட்டவுடன் அம்புபாய்ந்த வேகத்தால் தீப்பட்டுத் தானே அம்மரம் எரிந்து விடுமென்று நினைக்கலாம். ஆதலால் அது

வேட்டையாடுவோருக்கு எளிதில் ஜயத்தையளிப்பதாயிருக்கிறது. அன்று ஓர்கொடிய அரக்கன் அழிந்து தேவர்கள் வெற்றியுற்ற நாளாகையால் அத்தினத்திற்கு "விஜயதசமி" என்றபெயர் வழங்கிவருகிறது.

இதன் உட்கருத்துயாதெனின் நெருப்பை உள்ளடக்கிய வன்னிமரமானது ஆத்மாவோடு கூடிய உடலாகவும், பகவானை ஸத்குருவாகவும், அம்பெய்வதை உபதேசமாகவும், மரம் எரிந்து விழுவதை சர்மஸம்பந்தமானவைகளை ஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்குவதாகவும் தெளியலாம்.

"பூரணி புராதனி ஸுமங்கலை ஸ்வதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி ஸஹஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தியென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ!
வாரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
வகிலாண்ட கோடியீன்ற
வன்னையே!பின்னையுங் கன்னியென மறைபேசு
மானந்த ரூபமயிலே!
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெ ணுமையே!"

(ஸ்ரீதாயுமானவர்)

நவராத்ரி ஒன்பது தினங்களிலும், ஸமஷ்டி சக்திரூபமான ப்ரதான தேவதைக்கே யுரியது. எனினும், முதல்மூன்றுநாட்கள் துர்க்கைக்கும், இடைமூன்று நாட்கள் லக்ஷ்மிக்கும், கடைமூன்று நாட்கள் ஸரஸ்வதிக்கும் முக்கியமான நாட்கள்.

மற்ற நாட்களிற் றவறினும் "மஹாநவமி" யன்று ஒவ்வொருவரும் பூஜித்தே தீருவார்கள். காரணம் ஸரஸ்வதிதேவி அனைவருக்கும் பொதுத்தெய்வமாதலாலும், கடை மூன்று நாட்களும் ஸரஸ்வதி தேவியினுடைய தாதலாலும், அதிலும் நவமி கடைசிநாளாதலா லு மென்க.



தவிரவும் மிகக்கொடியவனும், மஹா பலசாலியும், இலகுவில் ஸாமான்யர்களால் அழிவின்மையாகிய வரத்தைப் பெற்றோனுமாகிய மஹிஷாஸுர னென்போன் தேவர்கட்குப் பல இடுக்கண்கள் விளைவித்ததை ஸஹியாது முறையிட்ட தேவர்கட்கிரங்கிய ஸ்ரீபராசக்தியானவள் ஸ்ரீபரமேச்வரனைக் நோக்கித்தவமிருக்க, தவத்திற்கிரங்கி அருள்சுரந்து பரமசிவன் எதிரேதோன்ற அவரளித்த சக்தியை அம்பிகை பெற்று, "மஹாநவமி யன்று மஹிஷாஸுரனை" வென்று, அவனது சுற்றத்துடன் வேரறுத்து ஸம்ஹரித்து வெற்றிமாலைசூடி எல்லாத் தேவர்களுடைய மனத்தையுங் குளிரச்செய்த தின மாதலால் அன்றையதினமேனும் எல்லாம்வல்ல இறைவியை வழிபடுதல் இன்றியமையாதது. இதனாலேயே அம்பிகைக்கு "மஹிஷாஸுரமர்த்தினீ" என்ற சிறப்புப்பெயரும் உண்டாயிற்று.

"மதன மதன மோஹினீ!
மர்த்தித மஹிஷாஸுரே!!"

என்ற "நாமாவளி"யைக் கேட்டு மயிர்ச்சிலிர்ப் பெய்தாஹிருதயத்தையுடைய ஹிந்துவும் உண்டோ?

"வென்றிடலாகும் விதி வழிதன்னையும்
வென்றிடலாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிடலாகும் விழைபுலன் றன்னையும்
வென்றிடு மங்கை தன் மெய்புணர்வோர்க்கே"

(திருமந்திரம்)

ஸ்ரீமஹாலக்ஷ்மி இவ்வுலகில் அலர்மேல்மங்கையாக அவதரித்து நவராத்ரி காலத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவை நோக்கித் தவமிருக்க ஸ்ரீமஹாவிஷ்ணு வெங்கடாசலபதியாக எழுந்தருளி தேவியினது விருப்பப்படி விவாஹ மஹோற்சவங் கொண்டருளிய காலமாதலால், மதபேதமின்றி வைஷ்ணவரும் மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் கொண்டாடுகிறார்கள். (திருப்பதியில் இதேகாலத்தில் தான் ப்ரஹ்மோத்ஸவம் நடக்கிறது.)

இதே காலத்தில் ஸ்ரீஸரஸ்வதி தேவியும், தவமிருந்து ப்ரஹ்மதேவரை நாயகனு யடையப்பெற்று மகிழ்ந்த காலமாதலின் பத்தாவது நாளாகிய "விஜயதசமி" யன்று யாதொருநாள் நக்ஷத்ரமும் பார்க்காமல் சிறுவர்கட்குக் கல்வியயிற்றத் தொடங்குவதற்கு இணையற்ற நல்லநாளாகக் கருதப்பட்டு வருகின்றது.

"அசக்தோ நியதம்பூஜாம் கர்த்துஞ்சேன் நவராத்ரகே,
அஷ்டம்யாஞ்ச விசேஷேண கர்த்தவ்யம்பூஜனம் ஸதா;
ஸப்தம்யாஞ்ச ததாஷ்டம்யாம் நவம்யாம் பக்திபாவத:,
த்ருராத்ர கரணாத ஸர்வம்பலம் பவதி பூஜனாத்.

(ஸ்ரீதேவீபாகவதம்.)

என்ற ச்லோகத்தினால், "ஒன்பது நாட்களும், முறைப்படி வழிபட ஆற்றலற்றவர்கள், எட்டாவது நாளேனும், எப்பொழுதும் முறைப்படி வழிபடவின்றியமையாதது. (மேலும்) ஏழாவதுநாள் எட்டாவதுநாள், ஒன்பதாம்நாள் இம்மூன்றிரவிலும் அன்புடன் இயற்றும் வழிபாட்டினால், எல்லாப்பயனையும் அடையப்பெறுவார்கள்" என்பது விளங்குகிறது.

இவ்வாறு த்யானம், ஆவாஹனம், முதலிய பதினாறு உபசாரங்களோடு கூடிய பூஜை, ஜபம், ஹோமம், தர்ப்பணம், கன்னிகைகளைப் பூஜித்தல், ப்ராஹ்மண போஜனம் செய்வித்தல், முதலியவைகளால் நவராத்ரி நிறைவேறுகிறது.

நவராத்ரியைப்போல் எம்மதஸ்தரும் கொண்டாடுவதும், குதூஹலமானதும், எங்கும் அனுஷ்டானத்திலுள்ளதுமான திருநாளாவது, நோன்பாவது ஒன்றுமில்லை. எந்த நோன்பும் நவராத்திரிக்கீடானதல்ல வென்பது பெரியோரபிப்பிராயம்.

இதனை வீடுகளிலும் கொண்டாடுவதன்றி ஆலயங்களுக்குச் சென்று கடவுளை வணங்கவேண்டியதும், இன்றியமையாததே. "ஆலயந் தொழுவது சாலவுநன்று" என்பது ஔவையார் வாக்கன்றோ! (ஆலயம் என்னுஞ் சொல் வடமொழியாயினும் இத்தென்மொழியிலும் ஆ+லயம்=ஆலயம், ஆ=பசு. லயம்=கூடுமிடம், ஆகவே பசுக்கள் கூடுமிடமென்றாயிற்று. எனின் ஜீவர்களாகிய பசுக்கள், இறைவனாகிய பதியைப்போற்றி நற்கதியடைவதற்கின்றியமையாததாயுள்ள இடமென விளங்குகிறதன்றோ? அதிலும் இந்நவராத்திரிகாலத்தில் சென்று வணங்குதல் (அறம்பொருளின்பமாகிய) தனதான்ய, ஸுகஸந்தோஷ, புத்ரபௌத்ர களத்ராதி செல்வங்களையும், நீண்ட ஆயுளையும் பெற்று மறுமையில் மோக்ஷமென்னும் பேரின்பவீடெய்துவதற்கு ஹேதுவாயுள்ளது.

ப்ரஹ்மா, ருத்ரன், என்னும் திருமூர்த்திகளும், அஷ்டதிக்பாலகர்களும், மற்றும் பலரும் ஸ்ரீபராசக்தியைப் பூஜித்துத் தம்



இஷ்ட ஸித்தி யடைந்துள்ளாரெனிற் கேவலம், "சின்னாட்பல் பிணிச் சிற்றுயிர்களாகிய மனிதர்கள்" அம்மஹா சக்தியை வணங்கிடில் விரும்பிய பொருள் கைகூடுமென்று கூறவும் வேண்டுமோ?

நவராத்ரி புண்யகாலத்தில் "இச்சாசக்தி, க்ரியாசக்தி, ஞானசக்தி ஸ்வரூபிணி" யான ஸ்ரீ ஜகன்மாதாவைப் போற்றிய மாத்திரத்தில், எல்லாத் தேவர்களும் தம்மைப் பூஜித்ததாக மகிழ்ந்து அருள்புரிவார்களென்பதும், ப்ரஹ்மஹத்தி முதலிய மஹாபாதகங்களும், ஊழித் தீயிடைப்பட்ட பஞ்சுபோலா மென்பதும் திண்ணமே.

" மூவருக்கு முதற்பிறப்புநின் முக்குணக்கடலென்றுமுன்
சேவடிக்க ணிருப்பர்சென்னி குவித்தசெங்கை விரிக்கிலார்
பூவெடுத்தவர் சென்னிவைத்திடு போதமுற்றவ ரம்மைநின்
காவலர்ப்பொதி தாளில்வைக்கவும் மூவர்சென்னி களிக்குமே"

(பொருள்.) தாயே! அயன், ஹரி, ஹரன் என்னும் மூவர்க்கும், முதற்பிறப்பை யுடையகாரணம், நினது முக்குணமாகிய கடல், என்று உனக்கு எதிரில் உனது சேவடியின்கீழ் முடிமேற் குவித்த சிவந்த கைகளைப் பிரியாதவர்களாயிருப்பர். ஆதலாற் பூவினை யெடுத்துத் தனித்தனி மூவர் முடிமேற்பூஜிக்கும் அறிவுடையோரானவர் அதனைவிட்டு, பாரிஜாத வனத்திலுள்ள அலரினாற்பொதியப்பட்ட நினதுதாளிணைகளில் மலர்களைத் தூவி அர்ச்சனை செய்தார்களாயின், அம்மூவர் முடியும், இன்பத்தையடையும் என்பதாம்.

இதனால் ஸ்ரீபராசக்தியைப் பூஜித்தலினாலேயே மூவரது அருளையும் வரத்தையும், பெறலாமென்று நிச்சயமாயிற்று. முக்குணமென்பது "இராஜஸம், தாமஸம், ஸாத்விகம்" என்பனவாம்: ராஜஸம், சிவப்பு, அதனால் ஸ்ருஷ்டிகர்த்தா ப்ரஹ்மாவும், ஸாத்விகம் வெளுப்பு, அதினின்று ஸ்திதி கர்த்தாவிஷ்ணுவும், தாமஸம், கறுப்பு, அதனின்று ஸம்ஹார கர்த்தாவாகிய ருத்ரனும் தோன்றியவர்கள். மாணிக்க மயமாய் விளங்கும் தேவியினது கட்டிலின் மேல் ஜாம்புநதமென்னும் பொன்னாற்செய்த பீடத்தை மும்மூர்த்திகளும், மூன்று கால்களாகத் தாங்க அந்தப் பீடத்தின்மேல் ஸ்ரீபராசக்தியானவள் கொலுவீற்றிருத்தலினால், மூவரும் உன் சேவடிக்கணிருப்பர் என்றார்.

“காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனு மாயனுங்
காணுந் தலைவிநற் காரணி காணே”

(திருமந்திரம்)

இவ்வளவருமைவாய்ந்த ஸ்ரீபராசக்தி பூஜையை நவராத்ரி காலங்களில்செய்து யார்யாரென்னென்ன பயனடைந்துளாரென்பதைச் சுருக்கமாய்ச் சிறிது கூறுவோம். வ்ருத்ராசுரனை வதைக்கும்பொருட்டு இந்திரனும், த்ரிபுரர்களைத் தீய்க்கும்பொருட்டு ருத்ரராலும், மதனென்பவனை வெல்லும்பொருட்டு விஷ்ணுவினாலும், ஸ்ரீபராசக்தி பூஜிக்கப்பட்டிருக்கிறாள். அன்றியும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவதாரமாகிய ஸ்ரீராமர் தம் தர்மபத்னியாகிய ஸீதையைக் காணாமல் வருந்திக்காட்டில் கவலையுற்றுப் புலம்பித் திரிந்த தருணத்தில் ஸ்ரீநாரத மகாரிஷியினது உபதேசப்படி, ரிச்யமூகபர்வதத்தில் இவ்விணையில்லா நவராத்ரி வ்ருதத்தைக் கைக்கொண்டு புரட்டாசிமாதத்து சுக்லபக்ஷ ப்ரதமையிலிருந்து ஸ்ரீபராசக்தியை உபாஸித்துவரவே, அஷ்டமியன்றிரவில் ஸ்ரீபராசக்தி ராமருக்கு முன்பாகத்தோன்றி ஸீதையை அபகரித்த ராவணனை ஸம்ஹரித்து வெற்றிபெற்று ஸீதையுடன் சுகமாய் அயோத்யைக்குச்சென்று மகுடஞ்சூடி மனமகிழ்ந்திருக்குமாறு அருள்புரிந்து மறைந்ததாயும், அவ்வாறே ராமர் அனைத்திலும், வெற்றிபெற்று அயோத்தியை அடைந்து முடிசூடியபின்னும், ஸ்ரீராமர் ஒவ்வொருவருஷத்திலும் ஸ்ரீ நவராத்ரி விருதத்தை அவரும், மற்றும் அவராஜ்ஞைப்படிக் குடிகளும் கைகொண்டு எல்லாச்செல்வங்களையும்பெற்று, இணையில்லாப் பேரின்ப முற்றுவரவே தொன்றுதொட்டு இன்னோன்பானது, எங்கும்பரவி எல்லோராலும் கைகொள்ளப்பட்டு விட்டதென்றும், ஸ்ரீதேவி பாகவதத்தில் அறியலாம்.

அன்றியும் க்ருதயுகத்தில் நீதி நெறிவழுவாது அரசாண்டுவந்த ஸுகேது என்னுமரசன் விதிவசத்தால் தனது ராஜ்யத்தையிழந்து, கற்பிற்சிறந்த “ஸுவேதி” என்னும் மனைவியுடன் காடுகளிற் றிரிந்து ஊணுறக்க மின்மையாற் பல நோய்களாற் பீடிக்கப்பட்டவதியுறுங்கால் அவனைத்தோளில் சாத்திக்கொண்டு



செல்லும் ஸுவேதிக்கெதிரில் கடவுள் கருணையால் அங்குத்தோன்றிய “அங்கிரஸ்” என்ற மஹரிஷி இவர்கள்மேல் அருள்புரிந்து அவர்களைப் பஞ்சவடி தீரத்திற்கழைத்துச் சென்று நவராத்ரியில் ஸ்ரீபராசக்தியை அங்கிருந்து கொண்டு ஆராதிக்கும்படி உபதேசித்தருள, அவருபதேசப்படிக் கைக்கொண்டு ஸுகேதுவின் நோய் நீங்கிச்சிறிது காலத்தில் “அங்கிரஸ் ஸூர்ய ப்ரதாபன்’ என்ற ஓர் மஹாபல பராக்ரமசாலியான புதல்வனையும் பெற்றெடுத்து அவனால் தாமிழந்த ராஜ்யத்தையும் திரும்பப்பெற்று ஸுகமாய் வாழ்ந்து ஸ்ரீபராசக்தியைக் கனவிலும் மறவாதிருந்து வந்தனரென்று ஸ்ரீஸ்காந்த புராணம் கூறுகின்றது.

மஹா மஹிமைதங்கிய இந்நவராத்ரி காலத்தில் வடமொழிப் பயிற்சியுள்ள ஒவ்வொருவரும், “ஸ்ரீதேவி பாகவதம்’ அல்லது “சண்டீச ஸப்தசதி” இவற்றில் தம்மாலியன்றதைப் பூஜித்துப் பாராயணம் செய்யவேண்டியது இன்றியமையாதது. இவ்வாறு நம்மனதிற்கெட்டாத காலம் முதலாக நடைபெற்றுவரும் இப்பெரும் புண்யகாலத்தை ஒவ்வொருவரும் தம்மாலியன்ற விதத்திற் கைக்கொண்டு இருமையினு மின்புற்றுய்வார்களாக.

“ஆதிவிதமிகுந் தண்டந்த மால்தங்கை
நீதிமலரின் மே நேரிந்த நாமத்தைப்
பாதியில் வைத்தும் பல்காற் பயில்விரேற்
சோதி மிகுத்து முக் காலமுந் தோன்றுமே”

(திருமந்திரம்.)

இறைவியி னருளைப்பெற்று,
இஹபர சுகமாய் வாழ்க! சுபம். ஓம்.

# புத்தக விமர்ஸனம்.

## மெய்யறம்

ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்களால் வெளியிடப்பட்ட மூன்றாவது புஸ்தகம் இது. ஆனால் அவர்முன் வெளிப்படுத்திய "அகமேபுறம்" "மனம்போல வாழ்வு" ஆகிய இரண்டு புஸ்தகங்களும் ஆங்கில பாஷையினின்றும் மொழி பெயர்க்கப்பட்டவை. மெய்யறம் என்ற பெயர்கொண்ட இப்புஸ்தகம் திருக்குறளைப்பெருப்பான்மையும் அஸ்திவாரமாகக்கொண்டு இவர் ஸ்வயமே எழுதிய புஸ்தகம். மாணவஇயல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணஇயல், மெய்யியல் என்று ஐந்து இயல்களில் பற்பல விஷயங்களைப்பற்றியும் ஒவ்வோரதிகாரத்திலும் பத்து ஓரடிச்சூத்திரங்களுடன் 125 அதிகாரங்களாகப் பிரித்து ஸ்ரீமான் பிள்ளையவர்கள் எழுதியிருக்கின்றனர். இப்புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ள நீதிகள் எல்லாம் மிகவும் அருமையானவை யென்றும், ஜனங்கள் ஆழ்ந்து ஆலோசிக்கும்படியான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன வென்றும் நினைக்கிறோம். திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் தர்மார்த்த காம மோட்சமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் உலகினருக்குத் திருக்குறளின் வாயிலாக விளக்கிக் காட்டவெண்ணி தர்மம், அர்த்தம், காமம் என்னும் மூன்றையும் பற்றித் தெளிவாகக் கூறி, மோட்சம் என்பது உரைத்தற்கரிய நிலையாகையாலும் அநுபவத்திலன்றி அறிந்துணர்தற்குக்கூடாதாகையாலும் மோட்சத்தைப்பற்றிப் பிரத்தியேகமாக யாதொன்றும் கூறாது விட்டுவிட்டார். மெய்யறத்தில் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் மாணவ இயல் என்று ஆரம்பித்திருப்பதால் பிரம்ஹசர்யம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் சதுர்வித ஆஸ்ரமங்களின் விதிகளை விளக்குகின்றாரென்று முதலில் நினைத்தோம். அப்படியே இரண்டாவது இயலும் இல்வாழ்வியலாயிருந்தது. ஆனால் மூன்றாவது அரசியலும் அதன்பின்னர் அந்தண இயலும் எழுதப்பட்டிருக்கின்றன. முதலிரண்டு இயல்களும் இரண்டு ஆச்ரம தர்மங்களைக் குறித்தனவாயும் அவற்றின்பின் இரண்டு இயல்கள் ஜாதி தர்மங்களைக் குறித்தனவாயும் ஈற்றியலா



கிய மெய்யியல் ஜாதிபேதமின்றிச்சகலருக்கும் பொதுவாகவுள்ள சத்திய வஸ்துவைப்பற்றிக் கூறுவதாகவும் இருக்கின்றன. வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் இரண்டு ஆஸ்ரமங்களின் தர்மங்களும் வைசியர், சூத்திரர், என்னும் இரண்டு ஜாதியாரின் தர்மங்களும் இப்புஸ்தகத்தில் பிரத்தியேகமாக கூறப்படவில்லை. ஆதலால், இப்புஸ்தகம்பொதுப்பட மனுஷ்யவர்க்கத்திற்கே நீதிகளைப் போதிக்கும் தன்மையதாயினும் உலகிலுள்ள ஒவ்வொரு ஜனசமுகமும் முன்னேற்றத்தில் வரவேண்டுமென்ற நோக்கத்துடன் ஆசிரியர் இப்புஸ்தகத்தை எழுதியுள்ளதாக நாம் நினைக்கிறோம். ஆனால் வானப்பிரஸ்த சந்நியாச தர்மங்களை அந்தணவியலிலும் வைசிய சூத்திர தர்மங்களை மாணவஇயலிலும் ஆசிரியர் சூசிப்பித்திருக்கிறார். ஒருநாடு உலகில் மேன்மையடைந்து பிரகாசிக்க வேண்டுமானால், அந்த நாட்டிலுள்ள மாணவர்களும் கிரகஸ்தர்களும் அரசர்களும் அந்தணர்களுமே அவரவர்கட்கு சிருஷ்டி நியதியில் விதிக்கப்பட்டுள்ள தர்மங்களைக் கைவிடாது சன்மார்க்கத்தில் ஒழுகவேண்டும். ஆதலால் தான் ஆசிரியர் மேற்படி நான்கு வகையினரைப்பற்றிக் கூறி, பின்னர் மனுஷ்ய ஜன்மப் பிரயோசனமாகிய மெய்ப்பொருளைப்பற்றியும் கூறியுள்ளார்.

இந்நூலினுட்புகுந்து சிலவற்றை ஆராய்வோம். மாணவ இயலில் முதலாவது அதிகாரத்தில் மாணவரது கடமைகளுள் ஒன்று "ஒழுக்கமுங் கல்வியு மொருங்கு கைக் கொளல்" என்று கூறப்பட்டிருக்கிறது. இது மிகவும் உண்மையன்றோ? இந்த சூத்திரத்தை மாணவர் கடமைகளுள் ஒன்றாகக்கூறாது, இதுவே மாணவர் கடமை என்று கூறினும் மிகநன்றாயிருக்கும். கல்வி, கல்வியென்று தற்காலத்தில் கதறப்படுகின்றன வெல்லாம் எழுதப் படிக்கக் கற்றலேயாகும்; இத்தகைய கல்வியால் மனிதன் நிர்மலனாகின்றதில்லை. தீய சிந்தைகளையும் செயல்களையும் விடுவதில்லை; வீழ்ந்த பள்ளத்திலேயே வீழ்ந்து கிடக்கின்றான்; மேலேற வழி அறிகின்றானில்லை. எதோ சிலகாலத்திற்கு இக்கல்வியால் சுகமடைகின்றதாகப் பாவித்துக் கொண்டிருந்த போதிலும், இக்கல்வி மாத்திரத்தால் பயனில்லை யென்று ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளும் காலம் கூடிய சீக்கிரம்வந்துவிடும். கல்வி மூளையைப் பலப்படுத்திக் கூர்மைப்படுத்துவது; ஒழுக்கம் ஹிரு

தயத்தைச் சுத்தஞ்செய்வது. பரமேஸ்வரனாகிய யோகீஸ்வரன் ஹிருதயகுகையில் வாசம் செய்கிறாரேயொழிய, மூளையின் முரட்டுக் குதர்க்கங்களிலும் யுக்திகளிலும் வாசம் செய்வதில்லை. நாம் ஈஸ்வரனை யடையவேண்டுமானால், ஈஸ்வரன் நம்மிடத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருக்க வேண்டுமென்று விரும்புவோமானால், ஹிருதயவாசலை அடைத்துக் கொண்டிருக்கும் குப்பைக் குவியல்களை யெல்லாம் நன்றாய் அகற்றிவிட்டு, நிஷ்களங்கமாக்கிக் கண்ணாடிபோலச் சுத்தமாய் வைத்திருந்தால் போதும். நாம் ஈஸ்வரனை வருந்தியழைக்க வேண்டியதில்லை. தனக்கு உகந்த இடம் ஏற்பட்டு விட்டவுடன், அவர் தானே அந்த ஹிருதயத்திற்குள் புகுந்து கொள்வார். கல்வி துச்சமாகிய இகலோக சுகத்தைக்கொடுக்கும்; ஒழுக்கம் என்றென்றும் அழியாத இன்பநிலையை அளிக்கும். கல்வியும் ஒழுக்கமும் ஒருவனிடத்தே ஒன்று சேருமாயின், அவன் இகத்திலும் பரத்திலும் சுகமுறுவானென்பதற்குச் சந்தேகம் என்ன?

ஆசிரியரது கடமைகளுள் "சொல்லிய செய்பவும் வல்லுநராக்குதல்" ஒன்று என்றார். தற்காலத்துக் கல்வியாளர்கட்குச் சொல்லிய செய்யும் தன்மை எல்வளவு உள்ளது? சொல்லியவற்றை அறிந்திருக்கின்றனரே யொழியச் செய்யும் சாமர்த்தியம் இல்லையே; வீண் புஸ்தகப்பூச்சிகளா யிருக்கின்றனரே யொழிய, அநுபவஞானம் சிறிதும் இல்லையே!

"உடம்பை வளர்த்தல்" என்னும் அதிகாரத்தில் "நினைந்தபடி யுடல் வளர்ந்திட வளர்க்க" என்றார். நினைந்தபடி யுடல்வளர்ந்தாலன்றோ தான் அறிந்துள்ள அறிவை அநுபவத்தில் கொண்டுவரலாம். காலையில் எட்டுமணிக்குப் பின் படுக்கையினின்று எழுந்து வயிறு வீங்கத்தின்று கொழுத்து எப்பொழுதும் சாய்ந்து கிடப்பதற்குச்சாய்வு நாற்காலிகளைத்தேடியலையும்பிரபுக்களன்றோ இக்காலத்தில் பெருகி வருகின்றனர்? உடல்வளைத்து வேலைசெய்பவர் நமதுநாட்டில் எத்தனைபேர்உளர்? உடல்வளர்ந்தாலன்றோஉலகமும் வளையும்? நமதுநாடு க்ஷேமமடையவேண்டுமாயின், உலகத்திற்கு ஓர் அன்னைபோன்று எத்தேசத்தவருக்கும் இடங்கொடுத்து எல்லாரையும் ரட்சித்துவரும் பாரதமாதா மேன்மையடைய வேண்டுவாயின், நமது ஜனங்கள் நினைந்தபடி யுடல் வளர்ந்திட வளர்க்கவேண்டு மன்றோ?



இல்வாழ்வியலில், உயிர்த்துணை கோள்ளல் என்னும் அதிகாரத்தில் "துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்" என்று பிள்ளையவர்கள் எழுதியிருக்கின்றனர். இதனால் இவர் விதவாவிவாகம் செய்யலாம் என்ற கொள்கையைப் பின்பற்றுபவர் என்று தெரிகிறது. விதவா விவாகம் செய்யலாம் என்று மாத்திரம் அன்று: புண்ணியமென்றும் கூறி யிருக்கின்றனர். ஆதலால் நமது தேச நன்மைக்கு விதவாவிவாகம் அவசியம் என்று இவர் கருத்துப்போலும்! நாம் இவ்வபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறுபடுகின்றோம்.

இங்ஙனமே நாம் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து செல்வோமாயின் விரியுமென்றஞ்சி நமது அபிப்பிராயத்தைச் சுருக்குகின்றோம்.

"அரசியல்" ராஜாங்க வியவகாரங்களில் மனத்தைச்செலுத்துகின்ற ஒவ்வொருவரும் பார்த்து மனனம்பண்ணத்தக்கது. நாம் பிள்ளையவர்களுடன் நெடுநாளாக நெருங்கிப்பழகி யிருக்கின்றோமாயினும் அவருக்கு ராஜ தர்மத்தில் இவ்வளவு அறிவிருக்குமென்று நாம் நினைக்கவில்லை. "அரசியல்" படிக்கப்படிக்க ஆநந்தத்தைத் தருகின்றது; அறிவைப் பெருக்குகின்றது.

அந்தணவியலில் அந்தணரியல்பு கூறுமிடத்து "அரசர் நல்லுயிரெலா மளிக்குந் திறத்தினர்". "அனைத்துயிர்தம்மையு மளிப்பவரந்தணர்;" என்று அரசருக்கும் அந்தணருக்கும் உள்ள வித்தியாசத்தை யெடுத்துக்காட்டினார், "மானங்காத்தல்" என்னும் அதிகாரத்தில் "மானொரு மயிரற மாயுமவ் விடத்தே" என்றார்.

சுருங்கச்சொல்லின் இப்புத்தகம் மிகச்சிறந்தது என்பதிலும் அனைவரும் படிக்கவேண்டியது என்பதிலும் சந்தேகம் இல்லை. பள்ளிக்கூடங்களில் மாணவர்கட்கு இந்நூல் பாடப்புத்தகமாக வைக்கப்படுதல் நன்று.

(இப்புத்தகத்தின் விலை அணா எட்டு, தபாற்கூலி பிரத்தியேகம்; நமது ஆபீசில் கிடைக்கும்.)

## சமாச்சாரக் குறிப்புகள்.

நமது இந்தியப்படைகள் முதன் முதலாக இப்பொழுதுதான் ஐரோப்பாவுக்கு யுத்தத்துக்குச் சென்றிருக்கின்றன. இதுகாறும் ஐரோப்பிய ஜாதியாருடன் எதிர்ப்பதற்கு இந்தியப்படைகளைக் கொண்டு போகலாகாது என்று கவர்மெண்டார் கருதியிருந்தனர். இப்பொழுது அந்த எண்ணம் தவறென்றுகருதி ஆங்கிலேயர் இந்தியப்படைகளை ஐரோப்பிய யுத்தகளத்திற்கு இட்டுச் சென்றமை இந்தியாவில் இருப்பதாகச் சிலரால் கூறப்படும் அதிருப்திக்கு இடமேயில்லையென்று ருசுப்படுத்துகிறது.

*　　　*　　　*

மைசூர் மகாராஜா இங்கிருந்து ஐரோப்பாவுக்குப் போயிருக்கும் இந்தியப்படைகளின் செலவுக்காக ஐம்பது லட்சம் ரூபா கொடுத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம்.


# ஞானபாநு

VOL - 2. தொகுதி - 2. | October 1914. ஆனந்தஷ ஐப்பசிமீ | No. 7. பகுதி - 7.


OFFICE OF THE REGISTRAR OF B… 3-NOV 1914

## பக்தியே முக்திக்கு மார்க்கம்.

" ஞாலவாழ்க்கையை நம்பிநின் றுழலு நாய்களுக்கெலா நாயக
னேன், சிலமொன்றிலேன் நினைக்கின்றேன்சிவனே செய்வ
தென்னைநான் சிறியருட்சிறியேன், ஏலநின்னருள் நீதியேயுய்வே
னில்லையேயெனக் கில்லையுந் திறமே, போலவென்றுரை
யாவொற்றியரசே போற்றும்யாவர்க்கும் பொதுவினின்றவனே."

என்று அருட்பா ஆசிரியராகிய ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள் எம்பெருமானை நோக்கிக் கதறினார். உலக வாழ்க்கையை நம்பி நின்றுழலுபவர்களை நாய்கள் என்று கூறினார். சந்தேகமென்ன? எல்லோராலும் இகழ்ந்து ஒதுக்கப்படுகின்ற மலத்தையே தின்று தின்றுழலுகின்ற நாய்களைப்போல, அறிவுள்ளோரால் துச்சமாய், நிகிருஷ்டமாய், வெகு அற்பமாய்க் கருதப்பட்டுத் தியஜிக்கப்படுகின்ற உலகபோக போக்கியங்களை மேன்மேலும் அநுபவிக்க விரும்புபவர்கள் மிகச் சிறியோர், புத்தியீனர், அற்ப சந்தோஷிகள். நாயானது சாம்பர் மேட்டிற்படுத்திருக்கும் பொழுது அதற்குப்பூர்வஞானம் உதயமாகுமாம். அப்பொழுது தனது தற்காலத்திய கிருத்தியங்களை நினைத்துக்கொண்டு, தனது அறிவின்மைக்கு மிக வருந்தி, இனிமேல் மலம் தின்னக்கூடாது என்று நிச்சயித்துக்கொள்ளுமாம். ஆனால் அந்தச் சாம்பர்மேட்டைவிட்டு வெளியே கிளம்பின மாத்திரத்தில், அது முதலாவதாகச் செய்யும் தொழில் மலமிருக்கும் இடந்தேடிச் சென்று அதைத்தின்பதுதான். ஆகவே சாம்பர்மேட்டு நிச்சயமும் சாம்பராய்ப் போய்விட்டது எதற்கும் வாசனாபலமேபலம். அதுபோலவே மானிடர்கள் தங்கட்கு மிக நெருங்கிய உற்றார் உறவினர் எவரேனும் மாண்டகாலத்திலாவது, அல்லது அவர்கட்கு ஏதேனும் சகிக்க முடியாத ஆபத்து வந்தகாலத்திலாவது, தங்கட்கு மிகப் பிரியமாயிருந்த மண், பெண், பொன், முதலியவற்றிற்கு நஷ்டம்வந்த காலத்திலாவது, அல்லது சாதுக்களுடைய சங்கத்தில் சேர்ந்திருக்கும்படிநேரிட்டகாலத்திலாவது, இவ்வுலகவாழ்க்கையை இகழ்ந்து

"ஜகன்மித்தியா பிரமைவசத்தியம்" என்றபெரிய பெரிய வேதாந்தங்களெல்லாம் பேசுவர். ஆனால் தமது உற்றாருக்கோ, தமக்கோ நேரிட்ட கஷ்டங்கள் மனத்தினில் மறைந்துவிட்டவுடனும் சாதுக்களுடைய சங்கத்தைவிட்டுப் பிரிந்தவுடனும் அநந்தகோடி ஜன்மங்களாய்த் தான் பழகிவந்த பழக்க ஸ்வபாவத்தினால், அதாவது வாசனாபலத்தினால், பழயபடி தேகமே ஆத்மா, போகமே மோட்சம் என்னும் கொள்கையுடையோராகி லௌகிக வியவகாரங்களிலேயே எப்பொழுதும் முட்டி மோதிக்கொண்டு மடிகின்றனர்.

* * *

நித்திய பரம்பொருளாகிய ஜகதீஸ்வரனை ஒருபொழுதும் நினைப்பதேயில்லை. அநித்தியப் பொருள்களாய சிற்றின்ப வஸ்துக்களிடத்தில் ஆவல் மிகுந்து அவதியுற்று அழிகின்றனர். மாந்தர் பிரத்தியட்சத்தில் இப்பொருள்கள் அழிவுறுவதைப் பார்த்திருந்தும், தேசகாலங்கட்குத் தக்க பிரகாரம் ஒவ்வொரு பொருளும் நாமரூபங்களில் அடிக்கடி மாறுதலடைவதைக் கண்கூடாகக் கண்டிருந்தும், இவ்வுலகப் பொருட்களை நித்தியமென நினைத்து மதிமயங்கி அவற்றினிடத்தில் அளவற்ற பிரியம் வைத்து அவை ஸ்வபாவக் கிரமத்தில் அழிந்துபோக, துக்கம் பெருகித் துயருறுகின்றனர். அத்துயரினின்றும் விடுபடுவதற்குச் சில குணங்கள் நல்லனவாக அமையவேண்டும். அதற்கு ஹிருதயம் சுத்தமாக வைக்கப்படவேண்டும். ஹிருதயம் சுத்தமாய்விட்டால் ஈஸ்வரன் தானே புகுந்துகொள்வார். ஒருவரும் அவரை வருந்தியழைக்க வேண்டுவதில்லை. அவர் வலியவே வந்துவிடுவார்.

* * *

நாம் கிஞ்சிக்ஞர்கள், எல்லாருக்கும் இறைவனாயிருக்கப்பட்ட ஈஸ்வரன் ஒருவனே சர்வக்ஞன் என்ற எண்ணமானது எல்லோருடைய ஹிருதயங்களிலும் நன்றாய் உறைந்து பதியவேண்டும். அகந்தை மிகுந்து ஆணவம் அதிகரித்து நாம் சர்வ சக்தர்கள் என்று நாம் நினைத்துக்கொண்டிருந்தபோதிலும், நாம் நினைக்குமாறெல்லாம் செய்கையில் நடத்தமுடியாதவிதத்தில் மாயை, கர்மம், விதி, ஈஸ்வரன் எனப் பல பரியாய நாமங்களால் அழைக்கப்படுகின்ற ஏதோ ஒரு சக்தி முன்னின்று, இந்த அண்டபிண்ட சராசரங்களையெல்லாம் பம்பரம்போல் ஆட்டிவைக்கிறது. பக்திப் பிரேமாதிக்கத்தினாலாவது, ஞானானுபூதியினாலாவது பிரபஞ்சப் ரக்ஞையை அறவே மறந்து காலதேச வித்தியாசம் அறியாது



நித்திய நிலையை அடைந்திருக்கும் மகாத்மாக்களைத் தவிர, மற்றோர் எவராயினும் சரியே, அவர் அத்வைத ஞானத்தை எவ்வளவுதான் சிரவண மனனங்களினால் அறிந்திருந்தபோதிலும், எவ்வளவுதான் அவரது ஹிருதயத்தில் "அஹம்பிரம்ஹாஸ்மி" என்ற வாக்கியமானது உறைந்திருந்தபோதிலும், அவர்கள் பெரும்பான்மையும் துக்கம் அநுபவிக்கும்படி நேரிடும்பொழுது, அவர்களுடைய அத்வைத வேதாந்தமெல்லாம் ஆகாசத்தில் பறந்துவிடுகின்றது. அப்பொழுது அவர்கள் தங்களுடைய கிஞ்சிக்ஞத் தன்மையையுணர்ந்து தங்களினும் மேலானவன் ஒருவன் இருக்கின்றானென்னும் நினைப்புவந்து, "ஈஸ்வரா", "ராமா", "கிருஷ்ணா" என்று கதறுகிறார்கள். இது நம் எல்லோருக்கும் பிரத்தியட்சம்.

* * *

ஈஸ்வரனே கிருபை பாலித்து குருமூர்த்தமாக வெழுந்தருளித் தடுத்தாண்டு ரட்சித்தாலொழிய, ஜீவராசிகளுக்கு மோட்சமடைவதற்கு வேறு வழி யேது? இக்கருத்தையே தாயுமானவரும்,

" பொய்யினேன் புலையினேன் கொலையினே னின்னருள்
    புலப்பட வறிந்து நிலையாப்
புன்மையேன் கல்லாத வன்மையே னன்மைபோற்
    பொருளலாப் பொருளைநாடும்
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன்
    வினையினே னென்றென்னைநீ
விட்டுவிட நினைவையேற் றட்டழிவ தல்லாது
    வேறுகதி யேதுபுகலாய்."

என்ற பாட்டில் வெளியிட்டார். ஆதலால் அவனுடைய கிருபையாலன்றி ஜீவராசிகள் கடைத்தேறுவதற்கு வேறு வழியில்லையென்பது நிச்சயம்.

* * *

ஈஸ்வரன் ஒப்புவமைகட்கு மீறியவர். ஈஸ்வரனைப்போலவே இன்னும் ஒரு ஈஸ்வரன் இருந்தால், சாவக்ஞத்துவம் என்ற லட்சணம் ஈஸ்வரனுக்கில்லாதுபோய், ஈஸவரனும் கிஞ்சிக்ஞனாய்விடுவன். ஆதலால் சர்வக்ஞத்துவாதி சகல லட்சணங்களுடனும் கூடிய ஈஸ்வரன் ஒருவன் இருக்கவேண்டுமென்பது பெரியோர்களின் நிச்சயமும் வேதசாஸ்திரங்களின் துணிபுமாம். செய்கையைக்

கண்டு, அதனைச் செய்பவன் ஒருவன் இருக்கவேண்டும் என்று நாம் நிச்சயிப்பதுபோல, இப்பெரிய பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணகர்த்தா ஒருவன் இருக்கத்தான் வேண்டும். நாம் எப்பொழுதும் நாமரூபங்களிலேயே பழகிவருதலினால், அவனையும் நாமரூபத்தில் கட்டுப்படுத்தி நம்மைப்போலவே பற்பல லட்சணங்களையும் அவனுக்கு அமைத்துப் பூஜிக்கிறோம்.

* * *

அநித்தியப் பொருள்களினிடத்தில் ஆவல் வைத்து அதன் பயனாகத் துக்கம் அடையாது, நித்தியப்பொருளினிடத்தில் பக்தி செலுத்தி, அதாவது பரமப் பிரேமை மிகுந்து, எப்பொழுதும் தியானம் செய்துவருதலினால் எப்பொழுது சாஸ்வதமாயுள்ள இன்பப் பெருக்கை என்றென்றும் அநுபவிக்கலாம். பக்தி யென்பது பரமப் பிரீதியாகும். பிரீதியிருக்குமிடத்தில் பயத்திற்கு இடமேயில்லை. பகவானிடத்தில் பக்தி செலுத்துவதென்றால், அவரைக்கண்டு பயந்து நடுங்குவதன்று. பகவானது மனத்திற்கு எங்கே வருத்தம் உண்டாய்விடுமோ, அவரது மனம் எங்கே நொந்து விடுமோ என்ற எண்ணத்தில், பக்தியினிடத்தில் சிறிது பயமும் அடங்கியுள்ளதாக நாம் அறியவேண்டியிருக்கிறது. பகவான் நம்மைத் தண்டித்துவிடுவார் என்ற பயத்தினால் நாம் பக்தி செலுத்துவது பக்தியாகாது. பக்தி யென்பது மர்க்கடப்பிடிப்பு போன்றதாம். குரங்கு சிறிதேனும் தவறாமல் கிளைக்குக்கிளை தாவும். அப்படித் தாவும்பொழுது மறுகிளையைப் பிடிக்காது தவறிக் கீழே விழுந்துவிட்டால், தனது ஜாதியினின்றும் நீக்கப்பட்டுப் பற்பல துன்பங்களை யடையவேண்டி நேரிடும். ஆதலால் அது கீழே விழுந்துவிட்டாலும் தான் தாவிப்பிடிக்கும் மறுகிளையின் ஒருதுண்டை ஒடித்துக்கொண்டு கீழே விழுமேயன்றி, வெறுங்கையுடன் விழாது. அதுபோலவே, ஈஸ்வரனைப் பஜிக்க விரும்புகிறவன் எவ்வாற்றானும் அவனைத் தவறாது கட்டிப் பிடித்துக்கொண்டு, தான் ஸம்ஸார சாகரத்தில் தத்தளிக்கும்படி நேரிட்டகாலத்தும் அவனையும் இழுத்துக்கொண்டே செல்லல் வேண்டும், அதாவது, அவனை விட்டுவிடலாகாது.

* * *

பக்தி செய்தால் அநுமாரைப்போலப் பக்தி செய்யவேண்டும். தான் அடிமையென்றும் ஈஸ்வரன் எஜமானன் என்றும் கருதியிருத்தல் வேண்டும். எஜமானனுக்கு ஊழியம் செய்தலை



தனது கடமையாகக் கொண்டு இரவும் பகலும் அதே கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும் ஆக்ஞையின்படி நடத்தலே தனது கடமையென்றும், ஆலோசனை சொல்வதன்றென்றும் அறிந்துகொள்ளல்வேண்டும். திரிலோகாதிபத்தியம் அளிப்பினும் எஜமானனுக்குமுன், ஈஸ்வரனுக்கு முன்பு, அது திரணமாம் என்று நினைத்தல்வேண்டும். ஸ்ரீ ராமர் ராவணசம்ஹாரம் செய்து தனது தேசத்திற்குத் திரும்பிவந்து பட்டாபிஷேகம் செய்துகொள்ளுங்காலத்தில், வசிஷ்டாதிப் பிரம்ஹரிஷிகளும் தனது மந்திரிகள், பிரதானிகள், உற்றார் உறவினர் முதலிய சமஸ்தமானவர்களும் கூடியிருந்த கொலுவில் வீற்றிருக்க, அப்பொழுது ஸ்ரீ ராமர் ஹநுமாருடைய பக்தியின் பெருமையை அனைவருக்கும் எடுத்துக்காட்ட நினைந்து தனது கழுத்திலிருந்த முத்தாரத்தை யெடுத்து சீதாதேவியின் கரத்திலளித்து இதனை உனக்குப் பிரியமான பணியாளன் எவனோ, அவனுக்குக் கொடுப்பாயென்று கூற, சீதாதேவியும் அம்முத்தாரத்தைத் தனது பின்பக்கத்தில் கைகட்டி வாய்பொத்தி அதிவிநயமாகக் காத்துநிற்கும் ஹநுமாரிடத்தில் கொடுத்தனர், தன்னை ராட்சஸேஸ்வரனாகிய ராவணனிடத்தினின்றும் படாதபாடெல்லாம் பட்டு மீட்டுக்கொண்டுவருதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் அவரன்றோ? அப்பொழுது ஹநுமார் சரேலென்று அம்மாலையிலுள்ள முத்துக்களை ஒவ்வொன்றாயுதிர்த்து தனது இருகைகளினாலும் பொடித்து வாயில் போட்டுமென்று கீழே தூ! வென்று துப்பிவிட்டார்; தனது ஜாதித் தொழிலைக் காட்டிவிட்டார். சபையினர் பிரமித்தனர். ஸ்ரீ ராமர் அதிகக் கோபத்துடன் சீதையைப் பார்த்தார். சீதை ஹநுமாரைநோக்கி இவ்வண்ணம் செய்தகாரணம் என்னவென்று கேட்க, அதற்கவர் "நான் எப்பொழுதும் 'ராம' என்ற நாமத்தை ஜபித்துக்கொண்டே அந்த ஜபத்தினால் உண்டாகும் அமிர்தத்தை பானம் செய்துகொண்டேயிருக்கிறேன். இந்த விலையுயர்ந்த முத்துமாலையும் அப்படி ருசிக்குமோ? என்று பார்த்தேன், சீச்சீ! இது வெகு அற்பம், துச்சம்," என்று கூறினர், எல்லோரும் சந்தோஷமடைந்தனர். ஆ! ஆ? இதுவன்றோ பக்தியெனப்படுவது. அவருடைய பக்திப் பிரதாபத்தினாலன்றோ அவர் இன்றும் நாளையும் எல்லோராலும் பூஜிக்கப்பட்டு வருகின்றார்.

பக்தி தர்க்கத்தை யறியாது; காரணகார்ய நியாய விசாரணை செய்யாது; மெய்யா பொய்யா என்றகேள்வியே கிடையாது. தண்ணீரில் மூழ்கித்தவிப்பவன் தனக்கு ஆதாரமாக யாது கிடைக்கினும் விசாரணை செய்வதற்குத் தாமசியாமல் சட்டென்று அதனை எப்படிக் கைப்பற்றுகின்றானோ அதேமாதிரி மனமானது எந்தவஸ்துவில் சட்டென்று சென்று கைப்பற்றுமோ, அந்த வஸ்துவே அம்மனத்திற்கு பக்தி செலுத்துவதற்குரியதாம். ஆதலால் இந்த வஸ்துதான் பக்திக்குரியது என்று ஒருவராலும் நிர்ப்பந்திக்கமுடியாது. அவரவரது இஷ்டத்தைப்பொறுத்தது அவரவர்வணங்கும் தெய்வம். இதுதான் ஹிந்துமதத்தின்சிரேஷ்டத்திற்குக்காரணம். ஒரு குடும்பத்தில் பிதாசூர்ய உபாஸகனும், மாதாசிவ உபாஸகியாயும், புத்திரன் சாக்தேயனும், மருமகள் காணபத்தியக் கொள்கையுடையவளாயும் இருப்பர். இதுவே ஹிந்து மதத்தின் பெருமைக்குக் காரணம். ஆகையால் மனம் எதில் ரமிக்கிறதோ, எதனிடத்தில் மனம் சென்ற காலத்து சரீரத்தில் மயிர்க்கூச்சல் உண்டாகின்றதோ, எதனிடத்தினின்றும் பிரிந்தகாலத்தில் மனம் பொறுக்கவொண்ணாத துன்பத்தை யடைகின்றதோ, அந்த வஸ்துவே அம்மனத்திற்கு ஈஸ்வரனாகும்.

* * *

நாமதேவர் சிறுகுழந்தையா யிருக்கும்பொழுது, தன் தகப்பன் பூஜித்துக்கொண்டிருந்த விக்கிரகத்தினிடத்தில் முரட்டு நம்பிக்கைகொண்டு கல்லினில் தனது தலையை மோதிக்கொள்ள யத்தனிக்கையில், பகவான் பிரசன்னமாயினர். இதுவும் பக்தியே. இக்காலத்தில் எவருக்கு நம்பிக்கை யிருக்கிறது? கண்ணப்ப நாயனார் எச்சிலை நிவேதனம் செய்து ஈஸ்வரனைக் களிப்பித்தனர். பக்தி யென்பது ஹிருதயத்தின் உருக்கமாகும். ஹிருதயம் கனிந்து கரைந்து கசியவேண்டும். கண்களில் ஆநந்தபாஷ்பம் தாரை தாரையாய் ஓடவேண்டும். ஐம்புலன்களும் அடங்கி, மெய்மறந்து ஆநந்த நிர்த்தனம் செய்யவேண்டும்; ஆடவேண்டும், பாடவேண்டும். இவை தாம் பக்தி பழுத்ததின லட்சணங்கள். எம்பெருமானுள்ளவரையில் எனக்கு யாதொரு குறைவும் இல்லை என்ற நிச்சயம் அநுபவத்தில் விளங்கவேண்டும்.

* * *

உண்மையான பக்தனுக்குப் பகவானவர் வேலை செய்யத் தயாரா யிருக்கிறார். ஹிருதயத்தில் உள்ளன்பு உண்டாமாகில்,



கூப்பிடுவதற்கு முன், பகவான் நமது சமீபத்திலேயே இட்ட வேலையைச் செய்வதற்குக் கைகட்டிக் காத்துக்கொண்டிருக்கிறார். "எல்லாம் விட்டவனுக்கு நான் இருக்கிறேன்" என்று எல்லாரிடத்தும் எப்பொழுதும் சொல்லிக்கொண்டே யிருக்கிறார். எல்லாவற்றையும் உதறினவனுக்கு ஈஸ்வரன் சகாயம் செய்வார். சிறிதேனும், கடுகளவேனும் பற்றுள்ளவனுக்கு ஈஸ்வரன் ஏனென்று கூடக் கேட்கமாட்டார். திரௌபதியானவள் துச்சாசனனால் துகிலுரியப்பட்ட காலத்தில், அவள் ஒருகையினால் தனது வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையை உயரத் தூக்கிக்கொண்டு "ஆ! ஆ! கிருஷ்ணா! ஆபத்பாந்தவா! அபயம், அபயம்" என்று அலறிய காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் சகாயத்திற்கு வரவில்லை. கடைசியில் அவள் வேறொரு வழியும் காணாளாகி ஏக்கமிகுந்து, ஈஸ்வரனைத் தவிர வேறு கதியில்லை யென்று நன்றாய் உணர்ந்து, வஸ்திரத்தைப் பிடித்திருந்த கையையும் உயரத்தூக்கி, தன்னுடைய பிடிப்பு யாதொன்றுமில்லாமல் ஈஸ்வரனைக் கூவிய பொழுதுதான் அவளுக்கு துகில் வளர்ந்துகொண்டே வந்தது; துஸ்சாதனனும் கைசலித்தான். ஆதலால் எல்லாப் பாரத்தையும் ஈஸ்வரனிடத்தில் திரிகரண சுத்திபாக ஒப்புவித்து விடுதலே பக்தியின் லட்சணமாகும்.

## யுத்த தர்மம்.

### II

"இந்திய ஜனசமூகச் சீர்திருத்தக்காரன்" என்ற பத்திரிகையில் ஒரு நிருபர் பின்வருபனவற்றை எழுதியுள்ளார்:— "மகா பாரதத்தில் பீஷ்மபர்வமானது மகா பாரதக் கதையைக் கூறிக்கொண்டு வந்த வைசம்பாயனரிடத்தில் ஜனமேஜய ராஜன் கேட்கும் கேள்வியிலிருந்து ஆரம்பிக்கின்றது. 'கௌரவர்களும் பாண்டவர்களும் சோமகர்களும் பற்பல தேசங்களிலிருந்து குருக்ஷேத்திர பூமிக்குவந்திருந்த சௌர்யவான்களான மற்ற அரசர்களும் எப்படி யுத்தம் செய்தார்கள்?' இதுதான் கேள்வி. அப்பெரும் யுத்தகளத்திற்கு அவர்கள் எல்லோரும் வந்தனரென்றும் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக யுத்தம் நடத்துவதற்குச் சில சட்டங்கள் ஏற்படுத்திக் கொண்டனரென்றும் வைசம்பாயனர் கூறுகிறார். இன்னும் வைசம்பாயனர் கூறியதாவது:—

"யுத்தம் நிறுத்த முடியாததென்றும் அவர்கள் யுத்தம் செய்தே தீரவேண்டுமென்றும் ஒருவரோடொருவர் உரைத்துக்கொண்டனர்; ஆனால் அவர்கள் தாங்கள் ஆரியர்கள் என்பதை மறக்கக் கூடாது. அவர்களுடைய நடத்தை முடிவுவரையில் ஆண்மையுடனும் நியாயமாயும் இருக்கவேண்டும். ஆனால் தான் யுத்தம் முடிந்தபிறகு அவர்களுடைய ஹிருதயங்களில் தீய சிந்தை அணுவளவேனும் இருக்காது; ஒருவரிடத்தில் மற்றவருக்குள்ள மரியாதை, மதிப்பு ஆகிய இவற்றிற்கு ஒரு கெடுதலும் உண்டாகாது. சரிசமமானவர்களுக்குள்ளேயே யுத்தம் நடக்கவேண்டும். யுத்தமுகத்தினின்றும் திரும்புபவர்களை அடித்தல் கூடாதென்று அவர்கள் கூறினர். ரதத்திலிருக்கும் ஓர்வீரன் தன்னைப்போலவே ரதத்திலிருக்கும் ஒருவனுடன் யுத்தம் செய்யட்டும். யானைமீது ஏறியுள்ளவன் தன்னைப்போலவே யானைமீது உள்ளவனுடன் யுத்தம் செய்யட்டும். குதிரைவீரன் குதிரைவீரனுடன் யுத்தம் செய்யட்டும். காலாள் காலாளுடன் யுத்தம் செய்யட்டும். யுத்தம் ஆண்மை பொருந்தியதா யிருக்கவேண்டும். ஒருவன் யுத்தத்திற்கு அழைக்கப்பட்டு, பின் எச்சரிக்கப்பட்டு அதன்பின் அடிக்கப்படட்டும். களைத்துப்போனவனையும் காயப்பட்டவனையும் ஒருபொழுதும் அடித்தல் கூடாது. எதிரியின் அசந்தர்ப்பம் நோக்கி அவனைத் தாக்கலாகாது. ஒருவனுடன் யுத்தம் செய்யும் ஒருவனை மூன்றாமவன் அடிக்கலாகாது. பிரமித்தவன், புறங்காட்டியவன், கைகளை இழந்தவன், ஆயுதமிழந்தவன் இவர்களில் ஒருவரையும் தாக்கலாகாது. ஆயுதமுள்ளவனுடன் யுத்தம் செய்பவனே ஆர்யன்; ஆகையால் ரதசாரதி, யானை, ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டவன், பேரிகையடிப்பவன், கொம்பு ஊதுபவன் இவர்களையெல்லாம் ஒருபொழுதும் தாக்கலாகாது. கௌரவர்களும் பாண்டவர்களும் சோமகர்களும் சேர்ந்து இந்த விதிகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். அவர்களும் அவர்களுடைய சைந்நிய வீரர்களும் சந்தோஷம் கொண்டனர்."

இது மகாபாரதத்திலுள்ளதோர் நற்கருத்து: யுத்த கர்மம் ராஜதர்மத்தில் ஓர் பாகம்; முக்கியமான பாகமென்று கூடச்சொல்லலாம். யுத்த தர்மமே க்ஷத்திரிய தர்மம் எனப்படுவது. பிராம்ஹணர், வைசியர், சூத்திரர் ஆகியமூவகை ஜாதியாரையும் துஷ்டஜீவராசிகளின் கொடுமையினின்றும் ரட்சித்துத் தேசமெங்கும்



சத்தியத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துதலே க்ஷத்திரிய தர்மம்.

அரசர் தர்மசேவை செய்யும்பொழுது, தாம் எதிர்த்து யுத்தம் செய்ய நேரிடுபவன் தனது சொந்தச் சகோதரனாயினும் சரியே, பிதாவாயினும் சரியே, யாவராயினும் சரியே, அவனுடன் தர்மரட்சையின் பொருட்டு யுத்தம் செய்தே தீரவேண்டும். இரண்டு அரசர்களுக்குள் ஏதேனும் விவாதம் ஏற்பட்டு யுத்தத்தினாலன்றி அந்த விவாதம் தீர்வதற்கு வேறு வழியில்லையென்று தோன்றிவிட்டால் உடனே இரு அரசர்களும் தாம் தாமே ஒருவருக்கொருவர் நேரே எதிர்த்துப் போராடி ஜயத்தை நிச்சயித்துக் கொள்ளுதல் மேன்மையாகும். அரசர்களுடைய சொந்த அபிப்பிராயத்தை ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரும் பொருட்டோ, அல்லது அவர்களுடைய ஸ்வயநன்மையின் பொருட்டோ ஏற்படும் யுத்தங்களில் யாதொரு விதத்திலும் குற்றம் செய்யாத பல்லாயிரம் மானிடர்களை ரணகளத்திற்கு இட்டுச் சென்று பலி கொடுப்பதினும் எதிரிகளாயுள்ள அரசர்கள் தனித்தனியே ஒருவரோடொருவர் போராடி அவர்களுடைய ஜயாபஜயங்களை நிச்சயித்துக் கொள்ளுதல் உத்தமமல்லவா? ஆனால் ராஜன் நியாய துரந்தரனாயிருப்பான், தர்மிஷ்டனாயிருப்பான், சத்தியவந்தனாயிருப்பான் ஸ்தூலபலம் மிக்கவனாயிராவிடில் என் செய்வது என்றால், ராஜனாயினும் சரியே, மந்திரியாயினும் சரியே, அல்லது எளியவேலைக்காரனாயினும் சரியே, இருகட்சியிலும் பலவான்களாயும் பராக்கிரமசாலிகளாயும் யாவராலும் மதிக்கப்பட்டவர்கள் எவரோ, அவர்கள் ஒருவரோடொருவர் எதிர்த்து நின்று யுத்தம் செய்து அடையும் வெற்றி தோல்விகளினால் அரசர்களுடைய வெற்றி தோல்விகள் நிச்சயிக்கப்பட வேண்டும்.

சரிசமமான பலத்துடன் எதிர்க்காத ஒருவனை அவனுடைய பலத்திலும் அதிகபலத்துடன் தாக்கலாகாது. மகாபாரதப்போரில் அபிமன்னன் ஒருவனைக் கௌரவர்கள் சுற்றிலும் சூழ்ந்துகொண்டு நாலாபக்கங்களிலிருந்தும் அஸ்திரங்களை எய்துகொன்றதை அதர்மயுத்தம் என்றனர் பெரியோர். பதினெட்டாம் நாளன்று துர்யோதனனை அவன் ஜபிக்கப்போயிருந்த மடுவினின்றும் கிளப்பி, குருக்ஷேத்திர பூமிக்கருகே யுத்தத்தின் பொருட்டுக் கூட்டிக்கொண்டு வந்தவுடன், அவன் தன்னைச் சுற்றி நின்ற

பாண்டவர்களையும் ஸ்ரீ கிருஷ்ணனையும் நோக்கி, "நீங்கள் எல்லாருமாக என்னுடன் யுத்தம் செய்கின்றீர்களா? அல்லது ஒவ்வொருவராய் வருகின்றீர்களா?" என்று கேட்க, ஸ்ரீ கிருஷ்ணன் அப்பொழுது துரியோதனனிடத்தில் "அப்பா! நீங்கள் நூற்றுக்கணக்காய் நாலாபக்கங்களிலும் அபிமன்னனை வளைந்துகொண்டு அதர்ம யுத்தம் செய்து அவனைக் கொன்றதுபோல் நாங்கள் ஒருநாளும் செய்யமாட்டோம். உன்னுடன் சபதம் செய்திருப்பவன் இதோ நிற்கும் பீமசேனன் தான். இந்த பீமசேனன் மாத்திரம் தான் உன்னுடன் யுத்தம் செய்வான்" என்று கூறினார். ஆதலால் தர்ம யுத்தமே சிரேஷ்டம்.

யுத்தம் என்பது திடீரென்று ஆரம்பிக்கத்தக்கதன்று. அரசனானவன் சாமபேத தானதண்ட மென்னும் சதுர்வித உபாயங்களில், சாமம், தானம், பேதம் என்னும் மூவகை உபாயங்களும் தவறினகாலத்தே தான் தண்டம்என்னும் உபாயத்தை உபயோகிக்கலாம். எதிரி எவ்வளவு பலவீனனாயிருந்தபோதிலும், எவ்வளவு அக்கிரமஸ்தனாயிருந்தபோதிலும், அரசன் அவனுடன் எவ்விதத்திலாவது சமாதானமாய் அவனைத் தனவசப்படுத்தும் உபாயமே சாமம் எனப்படும். இந்த உபாயம் பலிக்காவிடிலோ, எதிரிக்கு ஆகாரபலமாயுள்ளவர்கள் எவர்களோ அவர்களைப் பலவித தந்திரங்கள் செய்து எதிரியின் கட்சியினின்றும் கலைத்துப் பிரித்துவிடுதலே பேதம் எனப்படும். இந்த உபாயமும் பலிக்காவிட்டாலோ, தனது பிரஜைகளின் க்ஷேமத்திற்கும் ஸ்வதந்திரங்கட்கும் யாதொருவித குறைவும் நேரிடாதபடி அந்த எதிரிக்கு யாதேனும் கொடுத்தாவது அவனை வசப்படுத்துதல் தானம் எனப்படும். இம்மூவகை உபாயங்களும் தவறியகாலத்தில் தான் தண்டோபாயத்தைக் கைக்கொண்டு அரசன் தனது எளிய பிரஜைகளின் ஸ்வதந்திரங்களைக் காக்கும்பொருட்டு யுத்தம் செய்யக்கடவன். பலவீனனாயுள்ள எதிரியுடனும் அக்கிரமஸ்தனாயுள்ள எதிரியுடனும் கூட ஏன் முதல் மூவகை உபாயங்களையும் உபயோகிக்க வேண்டும்? என்றால், யுத்தத்தினால் பிரஜைகளுக்குப் பற்பலவிதத் துன்பங்கள் நேரிடுமாகையால், அந்தத் துன்பங்கள் இல்லாது பிரஜைகளைக் காக்கும் பொருட்டேயாகும். அரசனுக்கு அவசரயுத்தியினால் அநேகமாயிரம் மனிதர்களின் கொலையின் பின்னர்க் கிடைக்



கும் கீர்த்தியைப் பார்க்கிலும் தனது குடிஜனங்களுக்குள் தர்மாஜன் எனப்பெறும் கீர்த்தியே பெரிது.

ஓரரசன் தனது எதிரியினுடைய கோட்டையை முற்றுகை போட்டு வளைந்துகொண்டால், அந்தக் கோட்டைக்குள் இருக்கும் குடிஜனங்களுக்கு யாதொருவித கஷ்டநஷ்டங்களும் உண்டாகாமலிருக்கும்படி தன்னாலானவரையில் முயற்சி செய்யவேண்டும். அதாவது, கோட்டைச் சுவர்களைத் தகர்த்து உள்ளே நுழைவதற்கு முயற்சி செய்யவேண்டியதேயொழிய, கோட்டையினுள்ளிருக்கும் ஜனங்களைக் கொல்லவேண்டுமென்ற எண்ணம் இருக்கலாகாது. கூடியமட்டிலும் மனச் சமாதானத்துடனும் நிதானமாயும் துவேஷமில்லாமலும் யுத்தம் செய்யவேண்டியது. வயதில் மூத்தோர், பந்துக்கள், ஆசார்யர், ஸ்நேகிதர்கள், கற்றோரெனக் காசினியெங்கும் புகழ்பெற்றோர், இவர்களுடன் காலகதியின் விசேஷத்தால் யுத்தம் செய்யும்படி நேரிட்டால் அவரவர்களுடன் யுத்தம் ஆரம்பிக்கும்பொழுது ஸ்நேககாலத்திலுள்ளவழக்கம் போல ஒருவருக்கொருவர் அவரவரது தராதரத்திற்குத் தக்கவாறு வந்தனவழிபாடுகள் செய்துகொள்ளவேண்டியது. ஆனால் யுத்தம் ஆரம்பித்த பின்னர், குருவே எதிரியாயிருப்பினும், பிதாவே எதிரியாயிருப்பினும், உறையினின்று உருவிய வாளொடிந்து கையொடிந்து சரீரம் துண்டுதுண்டாய்ப் போனாலும், வெற்றி பெறவோ அல்லது வீரஸ்வர்க்கம் அடையவோ செய்யும்வரையில் யுத்தம் செய்யவேண்டும்.

அரசனுக்குத் தனது ஜனங்களென்றும் பிறஜனங்களென்றும் பேதம் இல்லை. தம்மைத் தாமே ரட்சித்துக்கொள்வதற்குச் சக்தியற்றவர்கள் எவரோ, அவர்களெல்லாரையும் அரசன் காப்பாற்றக் கடமைப்பட்டவனே. ஆதலால் அவனுக்குத் தனது குடிஜனங்களும் எதிரியின் குடிஜனங்களும் ஒன்றேயாவர். பாசறையில் படுத்துறங்கிக்கொண்டிருந்த பாண்டவ சைந்நியத்தின் வீரர்களை, அஸ்வத்தாமன் அர்த்தராத்திரி சமயத்தில் வெட்டிக் கொன்றான். ஆதலால் அவன் அதர்ம யுத்தம் செய்தானென்றும் மகா பாபத்தைச் செய்தானென்றும் பாரதம் கூறுகின்றது. அவனால் கொல்லப்பட்டவர்கள் அப்பொழுது உறங்கிக்கொண்டிருந்தாலும்; யுத்தகளத்திற்குக் கச்சைகட்டி வந்தவர்கள். அப்

படி யிருந்தும், அஸ்வத்தாமன் பாபியெனப்பட்டான். யுத்தவீரர்கள் நித்திரை செய்யும்பொழுது, அவர்களைக் கொல்வது பாவமாயின், யுத்த நினைப்பேயில்லாத சாதாரண ஜனங்களை, எதிர்க்காத குடிஜனங்களைக் கொல்லுதல் மகா பாபமன்றோ?

## அகஸ்தீன் என்னும் மகாத்மாவின் விண்ணப்பம்.

**பிரம்மஸ்ரீ வ. வே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் மொழிபெயர்த்தது.**

### IV

ஆகினும், ஏ பிரபு! ஜகத்திலுள்ள சமஸ்த பொருள்களுக்கும் நீ சிருஷ்டி கர்த்தனே, (ஆனால் பாவத்திற்குக் கேவலம் விதாயகர்த்தன் பாத்திரம்தான் நீ) என் ஈசனே, நான் என் மாதா பிதா குருக்களின் நியமனங்களை மீறி நடந்தது குற்றமேயல்லால் வேறில்லை. ஏனெனில் அவர்கள் உத்தேசம் எதுவாக விருந்தாலும் அவர்கள் என்னைக் கற்கும்படி விரும்பிய கல்வியை பிற்காலத்தில் நான் பிரயோசனப்படுத்தலாகும் தவிர, நான் அவர்கள் வார்த்தையைத் தட்டினது வேறு அதைவிட உயர்ந்த காரியத்தைக் கருதி அல்ல. விளையாட்டை விரும்பினேன். விளையாட்டுகளில் வெல்வதையும் அதனால் வரும் சிறிய பெருமைகளையும் விரும்பினேன். எதனைக் கேட்டும் திருப்தியைக் கொடுக்காத பொய்க்கதைகளைக் கேட்க ஆசைகொண்டேன். எனக்கு மூத்தவர்கள் காமுற்றுச் செல்லும் ஆட்டபாட்டங்களை அனுபவிக்க ஆவல்கொண்டேன். ஆட்டபாட்டங்களில் நடித்துக்காட்டும் மனிதர்களுக்கு எல்லோரும் காட்டுகிற மரியாதையைப் பார்த்து அனேகமாய் எல்லாத்தந்தைமார்களும் என்னவோ தங்கள் குழந்தைகளும் அவர்கள் மாதிரி வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவைகளை அடிக்கடி பார்த்தால் தான் அவர்களுக்கு அவ்விதம் நடித்துக் காட்டுகிற சாமர்த்தியமும் வரும். ஆனால் கல்வியை விட்டு அவ்வாட்டங்களைப் பார்க்கப் பையன்கள் போனாலோ செம்மையாய்ப் புடைத்து விடுகிறார்கள். பிரபு, இதை யெல்லாம் பார்த்து அவர்கள்பேரில் இரக்கம் வை. நின்னை இன்று துதிக்கும் எங்களைக் காத்தல் செய். நின்னை ஸ்மரிக்காதவர்களையும் கூட, அவர்கள் உன்னை ஸ்மரிக்கும் பொருட்டும், பின் நீ அவர்களைக் காக்கும் பொருட்டும், விழிக்கச்செய்.



நான் சிறுவனாக விருக்கும்போதே, எம்மனோர் தருப்பத்தினால் செய்த துன்பங்கள் அனைத்தையும் எங்கள் ஆண்டவன் பொறுத்தானே, அந்த அளவிறந்த பொறுமையின் பயனாக, எங்களுக்கு மோக்ஷப்பேறு நின்னால் வாக்களிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேள்வியுற்றிருந்தேன். நின்னையே பெரிதும் நம்பிக் கொண்டிருந்த என் அன்னை நான் கருப்பத்திலிருந்த போதே என்னை அவனுடைய தொண்டுக்கென்றே சூலம் போட்டு விட்டாள். பிரபு, உனக்குத் தெரியும், பாலனாக விருக்கும்போதே எனக்குத் திடீரென வயிற்றுநோய் கண்டு பிராணனே போய் விடும்போ லிருக்கையில், என் அன்னையும் நினது சமாஜமும் எனக்கு ஊட்டிய அறிவினால் தூண்டப்பட்டு, என் ஈசனும் பிரபுவுமான கிறிஸ்து நியமித்திருக்கிற ஞான ஸ்நானத்தை எத்தனை சிரத்தை விசுவாசத்துடன் விரும்பினேன்! என்னை எந்தக்காலத்தும் இடைவிடாது ரக்ஷித்து வருகிற உனக்கு நீபார்க்காதது போல நான் அதைச் சொல்லவும் வேண்டுமோ? என் வியாதி உடனே சுவஸ்தமாகி யிராவிட்டால், நான் பாவத்தினீங்கி மோக்ஷத்துக்கு அருகனாகவேண்டுமென்று அன்புடன் இடைவிடாது விசாரப்பட்டுக்கொண்டிருந்த என் அன்னை, எனக்கு ஆத்ம சுத்தியைக் கொடுக்கும் படியான சமஸ்காரங்களைச் செய்வித்து தீக்ஷையையும் கொடுப்பித்து, என் பிரபுவான யேசுவினிடம் நான் சர்வசங்க பரித்தியாகத்துடன் சரண்புகும்படி மிகுந்த ஆவலுடன் ஏற்பாடுகள் செய்திருப்பாள். ஆனால் அந்த சமஸ்காரத்தைப் பெற்றபிறகு பாவங்கள் செய்தால் குற்றம் முன்னினும் அதிகமாகு மாகையால், எப்படியும் பிழைத்துக் கொண்டால் பாவம் செய்து தான் தீருவேன் என்று நினைத்து அதைப்பின்னடி பார்த்துக் கொள்ளலாம் என்று ஒதுக்கிவைத்து விட்டார்கள். அப்பொழுதே எனக்கு ஆஸ்திகத்தன்மை இருந்தது. என் அன்னையும், என் தந்தையைத் தவிர குடும்பத்திலுள்ள மற்றெல்லாரும் ஸத்தியத்தை நம்பினார்கள். தான் நம்பாததால் நானும் நம்பக்கூடாது என்றிராமல் என் தந்தை எனக்கு என் அன்னை சத்போதனை செய்யக் கூடாதென்று தடுக்கவில்லை. என் ஈசனான நீ தான் எனக்கு வாஸ்தவமான பிதாவாக இருக்கவேண்டும் என்பது அவளுடைய கோரிக்கை. இது நிறைவேறுவதற்கு அவனுடைய வார்த்தை என் தந்தைக்கு ஏற்கும்படி செய்தது நீயே.

ஆனால் குணத்தில் அவளைவிட நல்லவளாக விருந்தும் அவருடைய ஆணைக்குஅடங்கியே தானிருந்தாள். அன்னை அதுவும் உன்னுடைய ஆக்கினையே.

திருவுளமுளதேல் எனக்குச் சொல்லு, நின்னை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன், என்னுடைய ஞானஸ்நானத்தை எதற்காக அப்பொழுது ஒதுக்கிவைத்தார்கள்? இஷ்டப்படி பாவத்தைச் செய்யட்டும் என்று சொல்லிவிடுவதுபோல ஏன் என்னைக் கடிவாளமிடாமல் அவிழ்த்து விட்டுவிட்டார்கள்? அவிழ்த்துவிட்டார்கள் என்று சொல்லுவது தவறோ? அப்படித்தவறானால், "அவன்போன வழியில் போகட்டும், மனம்போனபடி நடக்கட்டும், அவனுக்கு இன்னும் ஞானஸ்நானம் ஆகவில்லை" என்று அவர்கள் சொன்னவார்த்தைகள் இப்பொழுது கூட என்காதில் கேட்பது போல விருக்கின்றனவே? ஆனால் சரீர சௌக்கிய விஷயத்தில் "அவனுக்கு இன்னும் புண் ஆறவில்லை. வேண்டிய மட்டில் வேறு காயம் பட்டுக்கொள்ளட்டும்" என்று ஒருவரும் சொல்லுவதில்லை. எனக்கு சம்ஸ்காரத்தைச் செய்திருந்தால் எதனை நன்மையாக இருந்திருக்கும்! அப்பொழுது என்னுடைய அந்தக்கரணத்தை நானும் எனது நண்பர்களும் சேர்ந்து முயன்று, மாசெய்தாமல் இடைவிடாது காத்து, அதுபரிசுத்தமாவதற்குக் காரணமான நின்வசமே அதை ஒப்புவித்திருப்போம். வாஸ்தவத்தில் அது நன்மையாக இருந்திருக்கும். ஆனால் எதனை பாவங்கள் பையற்பருவம் கடந்ததும்என்னை அமிழ்த்தக் கல்லோலங்கள் போலக் காத்திருந்தன! என் அன்னை இதை முன்னாடியே அறிந்துகொண்டு, உருவாகி அந்த அலைகள் அடிக்கும்படி விடுவது சரியல்ல, மண்ணாக இருக்கையிலேயே அந்த அலைகள் அடித்துவிட்டு போய்விடட்டும், பிறகு உருக்கொடுத்துக் கொள்ளலாம் என்று நிச்சயம் செய்து கொண்டாள்.

ஆனால் பையற்பருவத்திலேயும் (இளமைப்பருவத் தவ்வளவு தீயதாக இல்லையாகிலும்) கல்வியைக் கண்டால் எனக்கு வெறுப்பாக இருக்கும்; கற்கும்படி கட்டாயப்படுத்துகிறவர்களின் மீது துவேஷமுண்டாகும். ஆனால் கட்டாயமென்னவோ படுத்தப்படேன். நான்மாத்திரம் சரியாகப் படிப்பதில்லையானாலும் நான் கட்டாயப் படுத்தப்பட்டது நியாயமே; ஏனெனில் அவ்விதம்,



என்னை விரட்டியிராவிடில் கற்றேயிரேன். ஆனால் செய்வது நற்காரியமேயாயினும் மனதில்லாமல் செய்யும் காரியம் நன்றாகவே முடியாது. என்னை வலித்தவர்கள் செய்ததும் நன்றல்ல-நலமெல்லாம், என் ஈச, நின்னிட மிருந்துதான் வந்தது. உண்மையில் இவைபானாலும் செல்வம் போன்று உண்மையில் அகீர்த்தியேயானாலும் கீர்த்திபோன்றும் விளங்குகிற உலக சுகங்களைப் பெறவேண்டுமென்கிற திருப்தியாகாத பேராசையைத்திருப்தி செய்வதற்குத் தவிர, எந்த நற்காரியத்துக்காவது நான் கற்கும் கல்வியைப் பிரயோகப்படுத்துவேனோ அல்லது மாட்டேனோ என்னும் விஷயத்தில் அவர்களுக்கு யாதொரு சிந்தையும் இல்லை. ஆனால் தலையிலுள்ள ரோமங்களைக் கூட இத்தனை என்று கணக்கிட்டிருக்கிற நீ என்னைக்கற்கத்-தூண்டின சகலருடைய குற்றமும் எனக்கு நன்மையே தரும்படி செய்தாய்; எனது குற்றமும் எனக்கு கண்டனை பயக்கும்படி செய்வித்தாய். இதனை சிறுபையனுக்கு இவ்வளவு குறும்பிருக்கையில் அந்த தண்டனை அதிகமே இல்லை. தவறாக நடந்து கொண்டவர்கள் தவறை எனக்கு நல்லதாக்கினாய்; என்னுடையதவறுகளுக்குச் சரியான தண்டனை நியமித்தாய். ஏனெனில் அபரிமிதமான காமம் ஒவ்வொன்றிலும் அதன் தண்டனையும் சமவேதித்திருக்க வேண்டியது என்பது நின்கட்டளை. அனுபோகத்திலும் அது அப்படியேதானிருக்கிறது.

## ஜெர்மனியும் சென்னையும்

### எம்டன் குழப்பம்.

சென்றமாதம்10-ம்தேதிமுதல்சிலதினங்களாக நமதுவங்காளக் குடாக்கடலில் ஜெர்மானியருடைய சிறுகப்பல் ஒன்று அக்ரமித்து அதிகாரம் செலுத்திவந்தது. 10-ம் தேதிக்கு மேல் 14-ம்தேதிக்குள்ளாக ஐந்து ஆங்கிலேய வர்த்தகக்கப்பல்களை அது சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்டது. ஒரு ருஷியக்கப்பலும் அவ்வழி வந்ததாகவும் அந்த ருஷியக்கப்பல் போனவழி தெரியவில்லையென்றும் சொல்லப்பட்டது. இவற்றிற்குப் பின் இன்னொரு ஆங்கிலேய வர்த்தகக்கப்பலும் அதே ஜெர்மானியக் கப்பலால் சமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்டது. ஆனால் அமிழ்த்தப்பட்ட கப்பல்களிலிருந்த ஜனங்களையெல்லாம் ஜெர்மானியக் கப்பலினர் தப்புவித்து வேறு தேயத்துக் கப்பல்களிலேற்றிக் கரைக்கு அனுப்புவித்த

னர் என்று சொல்லப்பட்டது. ஆகலால் ஜனங்களைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் ஜெர்மானியக் கப்பலாகிய "எம்டன்" உத்தியோகஸ்தர்களுக்கு இல்லையென்று எண்ணுகின்றோம். ஜெர்மானிய வியாபாரத்தை ஆங்கிலேயர் தடைசெய்து விட்டபடியால். ஆங்கிலேயருடைய வியாபாரப் போக்குவரவை மாத்திரம் கெடுப்பதே "எம்டன்" என்னும் கப்பலின் எண்ணம் என்று நினைக்கிறோம். "க்ளான்மத்திஸன்" என்னும் ஆங்கிலக் கப்பலை அமிழ்த்தி அதிலிருந்த ஜனங்களைத் தப்புவித்துவேறு தேயத்துக் கப்பல் மூலமாக ரங்கூனுக்கு அனுப்பிவைத்த பொழுது, "க்ளான் மத்திசன்" என்னும் கப்பலைத் தலைவரிடத்தில் "எம்டன்" என்னும் ஜெர்மானியக்கப்பலின் தலைவர் "நல்லது; போய்வருகிறேன்; மறுபடியும் என்னைப் பற்றி நீங்கள் கேள்விப் படுவீர்கள்" என்று சொன்னாராம். ஆங்கிலக் கப்பல்களை அமிழ்த்திய சமாச்சாரம் தெரிந்தவுடனே, பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் அந்த ஜெர்மானியக் கப்பலைத்துரத்திக்கொண்டு புறப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டது. ஆனால் சென்ற மாதம் இருபத்திரண்டாம் தேதியன்று அஸ்தமித்து ஒன்பது மணியானவுடன் அந்த "எம்டன்"எப்படியோ எவருக்கும் தெரியாமல் சென்னையைத் தாக்கத் தொடங்கிற்று.

அன்று அப்பொழுது ஊரடங்கவில்லை, கூடிஜனங்கள் இராப்போசனம் உண்டு படுக்கப்போகும் தருணம்; நாம் தெருவில் ஸ்நேகிதர்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தோம். திடீரென்று கடலருகே வெடி நட்சத்திரத்தின் பிரகாசம்போல ஓர் பிரகாசம் தோன்றிற்று. சற்று நேரத்திற் கெல்லாம் குண்டு போடும் சப்தம் கேட்டது. ஒன்றன் பின் ஒன்றாக அநேக குண்டுகள் போடப்பட்டன. ஒன்று, இரண்டு குண்டுகள் போட்டவுடன், திடீரென்று பர்மாஎண்ணெய்க் கம்பெனியாரின் இரண்டு கிணறுகள் பற்றிக் கொண்டன. அங்கு பகலவனைது போன்ற ஒரேவெளிச்சம் தோன்றியது

"எம்டன்" என்னும் ஜெர்மானியக்கப்பல் திடீரென்று தனது இரண்டு சோதனைத்தீபங்களை ஏற்றிக்கொண்டு கடற்கரையிலுள்ள கட்டடங்களைக் குறிபார்த்துப் பீரங்கிக் குண்டுகளால் சுட ஆரம்பித்தது. நமது துறைமுகத்து பீரங்கிகள் அந்தக் கப்பலைத்தமது குண்டுகளால் எதிர்த்தன. நமது பீரங்கிகளிலிருந்து இரண்டு மூன்று குண்டுகள் வெளியே புறப்பட்ட வுடன் "எம்டன்" தனது சோதனைத்தீபங்களை அணைத்து விட்டு எங்கோ மறைந்து ஓடிவிட்



டது. தென் புறம் நோக்கிச் சென்றதென்று புதுச்சேரியார் பார்த்ததாகக் கூறினர். பின் அது அரபிக்கடலிலும்4 கப்பல்களைக் கடற்கிறைபாக்கிவிட்டது. அதைத் துரத்திச் சென்ற நமது போர்க்கப்பல்களின் சங்கதி ஒன்றும் தெரியவில்லை. சென்னையைத் தாக்கிய பின்னர், ராஜப் பிரதிநிதியவர்களிடத்திலிருந்து சென்னைக் கவர்னருக்கு மூன்று பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் துரத்திச் சென்றிருக்கின்றன என்று தந்தி வந்தது. கூடிய சீக்கிரத்தில் "எம்டன்" பிடிபட்டு விடுமென்று நம்புகிறோம்.

அன்றிரவு "எம்டன்" கப்பலிலிருந்து வீழ்ந்தகுண்டு பிரயோகத்தினால், சென்னை மாநகரம் பட்டபாட்டை என்னென்று சொல்வது? குழந்தை குட்டிகள், பெண்டு பிள்ளைகள், கிழடு கட்டைகள் எல்லாம் மூலைக்கொருவர் உயிருக்குத் தப்பி ஓட வாரம்பித்தனர். சில கட்டடங்களுக்குச் சொற்பச்சேதமுண்டாயிற்று. சுமார் பதினாறு பெயர்கள் வரையில் காயமடைந்தனரென்றும் மூவர் மரணமடைந்தனரென்றும் கேள்வி. ஓடும் ஜனங்கள் அன்றிரவு கையில் கிடைத்ததெல்லாம் எடுத்துக் கொண்டு எங்குபோவதென்று தெரியாமல் அங்கும் இங்கும் ஓடி அலைந்து திண்டாடினர்.

சுமார் 70000 ஜனங்கள் வரை சென்னையை விட்டுச்சென்று விட்டு இப்பொழுது அநேகமாய்த் திரும்பிவந்து விட்டனர். அநாவசியமான, அகாரணமான, பொய்யான வதந்திகள்பல உலாவின. நன்றாய்ப் படித்து உயர்பதவிகளில் இருப்போரும் ஒருவருக்கும் சொல்லாமல் ஊரைவிட்டு ஓடினர். இதுதான் ஆச்சர்யம்! கடலிலிருந்து கொண்டு அனைவரும் அயர்ந்திருக்கும் பொழுது, திடீரென்று சில குண்டுகளைப் போட்டு விட்டு எந்தக் கப்பலும் ஓடி விட முடியும். இப்பொழுது நமது கவர்ன்மெண்டார் விழித்துக் கொண்டு விட்டனர். இனிமேல் நமக்குப் பயமேயில்லை என்று நினைக்கிறோம்.

# ஜோடி மோதிரம்.

(முன் தொடர்ச்சி)

## VIII.

(பிர்ம்ஹஸ்ரீ இராமஸ்வாமி ஐயங்காரவர்கள் எழுதியது)

ஹிரண்மயி அரசனைப் பார்க்க ஆச்சரிய மடைந்தாள். ராஜா தீர்க்க ஆகிருதியுடைய புருஷர்-விரிந்த மார்பு, நீண்ட கைகள், நேர்த்தியான உருவம், படர்ந்த நெற்றி, விசாலமான கண்கள், சாந்த மூர்த்தி-இந்த மாதிரி அழகுவாய்ந்த புருஷர் அபூர்வமாய்த் தான் ஸ்திரீகள் கண்ணிலே படுவார்கள். ராஜா செட்டிப் பெண்ணைப் பார்த்து இப்படிப் பட்ட சுந்தரி அரண்மனையில் இருப்பது துர்லபம் என்று நினைத்துக் கொண்டார். ராஜா சொன்னார் "நீ தானா ஹிரண்மயி. ஹிரண்மயி - நான்தான் தங்கள் வேலைக்காரி. ராஜா"—நான் ஏன் உன்னைக் கூப்பிட்டேன் - அதைக் கேள்; உன் கலியாண ஸமாச்சாரம் ஞாபகம் இருக்கிறதா? ஹிரண்மயி - ஞாபகம் இருக்கிறது. ராஜா—அன்றையதினம் ஆனந்தஸ்வாமி உனக்கொரு மோதிரம்கொடுத்தாரே, அது உன்னிட மிருக்கிறதா? ஹிரண்மயி—மகாராஜா அந்த மோதிரம்இருக்கிறது. ஆனால்அது வெல்லாம் ரொம்பரஹஸ்ய விஷயமாயிற்றே. என்ன விதமாகத் தங்களுக்குத் தெரிந்தது? ராஜா அவளுக்கு யாதொரு ஜவாபும் கொடுக்காமல், சொன்னார்-"அந்த மோதிரம் எங்கே யிருக்கிறது. என்னிடம் காட்டு" ஹிரண்மயி—அதை வீட்டில் வைத்து விட்டு வந்திருக்கிறேன். ஐந்து வருஷம் பூர்த்தியாவதற்கு இன்னும் கொஞ்ச நாழிகையிருக்கிறது. மேலும் ஆனந்தஸ்வாமி இந்த ஐந்து வருஷத்திற்குள் அதைப் போட்டுக் கொள்ளக் கூடாது என்று தடுத்திருக்கிறார். ஆகையால் அந்த ஆக்ஷேபனை இப்பொழுது மிருக்கிறது. "ராஜா—நல்லது. ஆனால் அந்த மோதிரத்தைப் போலவே இன்னொரு மோதிரம் ஆனந்த ஸ்வாமி உன் புருஷனுக்குக் கொடுத்திருந்தார். நீ அதைப் பார்த்தால் கண்டு பிடிக்க முடியுமா" ஹிரண்மயி—இரண்டு மோதிரங்களும் ஒரேமாதிரி ஆகையால் பார்த்தால் தெரியக் கூடும்.

இப்பொழுது வேலைக்காரன் அரசன் கட்டளைப்படி ஒரு தங்கப் பெட்டி கொண்டு வந்தான். அரசன் அதற்குள்ளிருந்து ஒரு மோதிரத்தை எடுத்து 'இதோ பார் இந்த மோதிரம் யாருடையது' என்று கேட்டார்.



ஹிரண்மயி மோதிரத்தை விளக்குவெளிச்சத்தில் அப்படியும் இப்படியும் நாலாபக்கமும் பார்த்து விட்டுச் சொன்னாள்-"தேவா இது வாஸ்தவமாக என் புருஷன் மோதிரந்தான். ஆனால் தங்களுக்கு இது எப்படிக் கிடைத்தது? (பிறகு கொஞ்ச நேரம் யோசித்து) நான் விதவை யாய் விட்டேன் என்று இதிலிருந்து தெரிகிறது. வாரிஸ் இல்லாமல் செதத்வருடை சொத்து தங்களிடம் வந்து சேர்ந்திருக்கிறது. இல்லாவிடில் அவர் ஜீவித தசையிலேயே இதைக் கொடுத்திருப்பது மிகவும் அஸம்பாவிதம் என்று சொன்னாள்.

ராஜா சிரித்துக்கொண்டு, என் வார்த்தையை நம்பு. நீ விதவையாக வில்லை. என்றார். ஹிரண்மயி — அப்படியானால் என்னைவிட என் புருஷன ஏழை பணத்துக்காக இதை விற்றிருக்கிறார். ராஜா—உன்புருஷன் பெருத்த தனவான். ஹிரண்மயி—அப்படியானால் தாங்கள் பலத்தினாலேயோ வஞ்சகத்தினாலேயோ அவரிடமிருந்து இதை அபகரித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

ராஜா ஸகிக்கக் கூடாத இந்த வார்த்தையைக் கேட்டு ஆச்சரியமடைந்தார். சொன்னார் "உனக்கு ரொம்ப தைரியம். ராஜா மதன தேவன் திருடன், இதை வேறுயாரும் சொன்னதில்லையே". ஹிரண்மயி—இல்லாவிட்டால் இந்த மோதிரம் தங்களுக்கு எங்கே கிடைத்தது? ராஜா—உன் கலியாணத்தன்று ராத்திரி இதை என்விரலில் ஆனந்த ஸ்வாமி போட்டார்.

ஹிரண்மயி அப்பொழுது லச்சையினால் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டாள். உடனே சொன்னாள்—ஹே ஆர்ய புத்திரனே, என் அபராதத்தை மன்னித்து விடுங்கள் நான். அறியாப் பெண் தெரியாத் தனத்தால் தகாத வார்த்தைகளை சொல்லி விட்டேன்.

தான் ராஜமகிஷி என்றுகேட்க ஹிரண்மயிக்கு அத்தியந்த ஆச்சரியம் உண்டாயிற்று. கொஞ்சங்கூட சந்தோஷம் வரவில்லை. பதிலாக மிகவும்பயமடைந்தாள். யோசிக்க ஆரம்பித்தாள் "எனக்கு இவ்வளவு நாளாகப் புரந்தரன் கிடைக்கவில்லை என்பது வாஸ்தவமே. ஆனால் நான் அன்னியன் ஸ்திரீ என்ற வேதனை அனுபவித்ததே யில்லை. இது முதல் எனக்கந்த வேதனை யாரம்பித்துவிட்டது. என்னவிதமாக வேறொருவனை மனதில் எண்ணிக் கொண்டு இந்த மகாத்மா வீட்டில் களங்கம் உண்டாக்குவேன்".

ஹிரண்மயி இந்தமாதிரி யோசித்துக்கொண் டிருந்தாள். அந்த ஸமயத்தில் அரசன் சொன்னார். ஹிரண்மயி! நீ என் மகிஷி என்பது வாஸ்தவந்தான். ஆனால் உன்னை அங்கீகாரம் செய்துகொள்ளுவதற்குமுன், எனக்குச் சிலவார்த்தைகள் கேட்கவேண்டியதிருக்கிது. நீ வாடகையில்லாமல் புரந்தரன் வீட்டில் குடியிருந்தாயே, ஏன்?"

ஹிரண்மயி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டாள். ராஜா மறுபடியும் "உன்னுடைய வேலைக்காரி எப்போதும் புரந்தரன் வீட்டுக்குப்போய் வந்துகொண் டிருக்கிறாளே, ஏன்?" என்று கேட்டார்.

ஹிரண்மயி அதிக வெட்கத்தினால் கொஞ்சம் ஜாஸ்தியாக முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டாள். யோசித்தாள் "ராஜா மதனதேவர் ஸர்வக்ஞரா என்ன".

அப்பொழுது அரசன் "இன்னுமொருவார்த்தையிருக்கிறது. நீ அன்னியன் ஸ்திரீயாக விருந்தும், புரந்தரனிடமிருந்து இனமாக வைரமாலையைப் பெற்றுக்கொண்டாயே, ஏன்? என்றுகேட்டார். இந்தத்தடவை ஹிரண்மயி பேசினாள். சொன்னாள் "ஆரியபுத்திரனே, தாங்கள் ஸர்வக்ஞரில்லை என்று தெரிந்தது. மாலையை நான் திருப்பியனுப்பிவிட்டேன்". ராஜா—"நீ அந்த மாலையை என்னிடம் விற்றிருக்கிறாய். இதோபார் அந்த மாலையை".

இப்படிச் சொல்லிக்கொண்டு அரச பெட்டியிலிருந்து மாலையை எடுத்துக் காண்பித்தார். ஹிரண்மயி மாலையைத் தெரிந்துகொண்டு ஆச்சரிய மடைந்தாள். சொன்னாள் "ஆர்யபுத்திரனே! இந்தமாலையை நானே நேரில் வந்து தங்களிடம் விற்றேனா, என்ன?" ராஜா—"இல்லை உன்னுடைய வேலைக்காரியோ, தூதியோ—யார்—அமலாவந்து விற்றாள் அவளைக் கூப்பிடட்டுமா.

ஹிரண்மயி நொந்து கொண்டமுகத்தில் கொஞ்சம் சிரிப்புக் காண்பித்தாள். அவள் சொன்னாள்" ஆர்யபுத்திரனே அபராதத்தை மன்னியுங்கள். அமலாவைக் கூப்பிடவேண்டாம், நான் இதை விற்றதாக ஒப்புக் கொள்ளுகிறேன்.

இந்தத்தடவை ராஜா ஆச்சரியமடைந்தார். சொன்னார் "ஸ்திரீகளுடைய இயற்கை அறிவது மிகக்கடினம் நீ அன்னியன் ஸ்திரீ



யாக இருந்தும், புரந்தரனிடமிருந்து இந்தமாலையை ஏன் பெற்றுக்கொண்டாய்? ஹிரண்மயி..."காதலின் பரிசு என்று பெற்றுக் கொண்டேன்." அரசன் இன்னும் ஜாஸதியாக ஆச்சரியமடைந்தார் "அது என்னது? என்னவிதமாக நீ காதல் பரிசு பெற்றுக் கொள்ளலாம்" என்று கேட்டார். ஹிரண்மயி—"நான் வியபிசாரி, மகாராஜா? நான் தங்கள் ஆமனைக்குத் தகுந்தவளல்ல, நமஸ்காரம் செய்கிறேன் எனக்கு விடைகொடுங்கள் என்னோடு கலியாணத்தை மறந்து விடுங்கள்."

ஹிரண்மயி அரசனுக்கு நமஸ்கரித்துத் திரும்புகிற ஸமயத்திலிருந்தாள். இந்த ஸமயத்தில் அரசன் முகக்காந்தி மாறிற்று. ஆச்சரியம் குடிகொண்ட அவர் முகம் சந்தோஷத்தால் மலர்ச்சியடைந்தது. அவர் கெட்டியாகச் சிரித்துக்கொண்டு, எழுந்திருந்தார். ஹிரண்மயி திரும்பினாள். அரசன் சொன்னார் "ஹிரண்மயி! நீ ஜெயித்துவிட்டாய்; நான் தோற்றுப்போனேன் நீயும் வியபிசாரியல்ல, நானும்உன் புருஷனில்லை, போகாதே." ஹிரண்மயி-"மகாராஜா. அப்படியானால் இப்பொழுது நடந்ததெல்லாம் என்ன? எனக்கு விளங்கும்படி சொல்லுங்கள். நான் அதிஸாமான்யஸ்திரீ-என்னோடு, யொத்த கம்பீர சுபாவமுள்ள ராஜாதி ராஜன் கேலி வைத்துக்கொள்வதும் ரொம்ப அஸம்பாவிதம்." அரசன் சிரிப்பை யடக்காமல் சொன்னார் "என்னைப்போல அரசர்கள் இப்படிக்கேலி பண்ணுவது அஸம்பாவிதமல்ல ஆறு வருஷத்துக்கு முன் உனக்குப் பாதித்துண்டுக் கடிதம் ஒன்று நகைகளின் மத்தியிலிருந்து அகப்பட்டது. அது என்ன வாய்ப்போய்விட்டது?" ஹிரண்மயி—மகாராஜா, தாங்கள் வாஸ்தவமாக ஸர்வக்ஞர் தான். பாதித்துண்டு என் வீட்டில் இருக்கிறது." அரசன்—"நீ பல்லக்கில் ஏறிக்கொண்டு, மறுபடியும் வீட்டுக்குப்போய் அந்தத்துண்டைக்கொண்டுவா. நீ வந்தால் எல்லாவற்றையும் சொல்லுகிறேன்— (வரும்.)

## சமாச்சாரக் குறிப்புகள்.

மான்ஸ், காம்பெயின் என்ற இடங்களிலிருந்து பிரிட்டிஷ் படைகள் பின்வாங்கிய காலத்தில், ஜெர்மனியர் பிரிட்டிஷ் சேனாதிபதி யாகிய ஸர் ஜான் ப்ரென்ச் என்பவருடைய இருப்பிடத்தை அறிந்திருந்தார்கள் .டெக்காட்டோ, ஸெண்ட் க்வெண்டின் என்ற

இடங்களில் பிரிட்டிஷ் சேனாதிபதியும் அவரது உத்தியோகஸ்தர்களும் தங்கியிருந்த கட்டடங்களை ஜெர்மானியர் குண்டுகளினால் தாக்கினார்கள். சாமர்த்திய சாலியாகிய ஸர் ஜான் ப்ரெஞ்சுக்கு யாதொரு அபாயமும் நேரிடவில்லை.

* * *

ஐந்து ஜெர்மானியர் ஒரு மோட்டார் வண்டியில் உட்கார்ந்துகொண்டு அதை அதிவேகமாகச் செலுத்தி ஹாவெர் என்ற ஊருக்குள் அக்கிரமமாக நுழைந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் போர் வீரர்களுடைய உடை உடுத்திருந்தனர். அவ்வூர் வாயில் காப்போர் அவர்களை அநேகம் தடவை யாரென்று கேட்டுப் பின்னர் சுட ஆரம்பித்தனர். அப்படியிருந்தும் இந்த ஜெர்மானியர் ஊருக்குள் நுழைந்து விட்டனர். அப்பொழுது ஒரு வண்டிக்காரன் திடீரென்று தனது வண்டியை அந்தத் தெருவில் குறுக்கே நிறுத்திவிட, அதிவேகமாக வந்த அந்த மோட்டார் வண்டி உடைந்து சிதறிவிட்டது. அந்த மோட்டார் வண்டிக்குள் ஒரு பெரிய பீரங்கி இருந்தது. அந்த ஐந்து ஜெர்மானியரும் கைதி செய்யப்பட்டனர்.

* * *

அநேக இடங்களில் யுத்தகளத்தில் ஜெர்மனியர் பிரிட்டிஷ் கொம்பு ஒலிகளை உண்டாக்கியதினால் பிரிட்டிஷ் படைகட்குத் தொந்தரவுகள் நேரிட்டு விட்டன. ஆகஸ்டு மாதம் 28-ம் தேதியன்று ஒரு பிரிட்டிஷ் படை பிரிட்டிஷாருடைய இடது பக்கத்திலிருந்து பொய்யான கொம்பு ஓசையினால் வெகுதூரம் தனித்துப் போகும்படி நேரிட, ஜெர்மனியார் அதைத் திடீரென்று வளைந்துகொண்டனர். ஆகவே, அந்த தனித்த பிரிட்டிஷ்படை தப்பித்துக்கொள்வதற்குள் ஒரு பகுதிச் சேனையை இழந்துவிடும்படி நேர்ந்தது. ஓர் ஜெர்மன் ஆகாய விமானம் பிரிட்டிஷ்படைகளின் இருப்பிடத்திற்கு உயரப்பறந்து, ஜெர்மானியர்களுக்கு பிரிட்டிஷாரின் நிலைமையை அடையாளங்களினால் தெரிவித்தது. ஒரு நிமிஷத்திற்குள்ளாக ஒரு ப்ரென்சு ஆகாய ரதமும், ஒரு ஆங்கிலேய ஆகாயரதமும் உயரக்கிளம்பின. சற்று நேரத்திற்கெல்லாம் ஜெர்மானிய ஆகாயரதமும் ஆங்கிலேய ஆகாயரதமும் ஒன்றுடனொன்று போட்டி போட்டுக்கொண்டு உயரக்கிளம்பின. இவற்றின் நோக்கம் ஒன்று உயரக்கிளம்பி கீழே நிற்கும் மற்றதைச் சுட வேண்டு



மென்பதே. ஆனால் ஆங்கிலேய ஆகாயரதமே ஜெயித்து, ஜெர்மானிய ரதத்தைச் சுட்டது. உடனே ஜெர்மானியன் தனது ரதத்தைக் கீழே இறங்கும்படி திருப்பிவிட்டான். அந்தரதம் யாதொரு சேதமுமில்லாமல் கீழே இறங்கிற்று. ஆனால் அந்த ரதசாரதி உயிர் நீங்கிக்கிடந்தான்! மரணத்தறுவாயில் யந்திரத்தைக் கீழ் நோக்கும்படி செய்தான் போலும்! அவனுடைய கைகள் யந்திரத்தைப்பிடித்தவண்ணம் இருந்தன!

* * *

லோவெயின் என்னும் நகரத்தைக் கொளுத்திச்சாம்பலாக்கிய போது, இரண்டாயிரம் ஜர்மனியர் தாம் அவ்வூருக்குள் இருந்தனராம். அவர்கள் அவ்வூரை நெருப்புக்கிரையாக்கியபொழுது, சாராயங் குடித்து வெறிபிடித்திருக்கவில்லை; ஆனால் ரத்தம் குடித்து வெறி பிடித்து இருந்தனர் என்று அமெரிக்க நூலாசிரியராகிய வில்ஜர்வின் என்பவர் கூறுகின்றார்!

* * *

லிப்பி இளவரசராகிய வில்லியம் என்னும் பெயருடையவர் லீஜ் முற்றுகையில் பெல்ஜியர்களால் கொல்லப்பட்டனர் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது, அவரது சேனை இருட்டில் இன்னொரு ஜெர்மானியச் சேனையைத் தெரியாது எதிர்த்து அந்தச் சேனையை அழித்துவிட்டதென்றும், பொழுது விடிந்தவுடன் வில்லியம் இளவரசர் தனது தவறை அறிந்துகொண்டு ஜெர்மன் சக்ரவர்த்தியின் கோபத்திற்கு ஆளாவதைப் பார்க்கிலும் இறந்துபோதல் நலமென்று கருதித் தற்கொலைசெய்து கொண்டனரென்றும் தெரிகின்றன.

## யுத்தக் குறிப்புகள்.

இப்பொழுது நடக்கும் பெரிய யுத்தத்தில் இரண்டு கோடியே முப்பது லட்சம் போர்வீரர்கள் கைகலந்திருக்கின்றனர்.

* * *

லண்டனிலிருக்கும் ஜர்மானியரின் தொகை சாதாரணமாக ஏறக்குறைய அறுபத்து ஐயாயிரம்.

* * *

யுத்தக்களத்தில் ஜெர்மனி ஐம்பது லட்சம் மனிதர்களையும் பிரான்ஸ் நாற்பதுலட்சம் மனிதர்களையும் கொண்டுவந்து நிறுத்த முடியும்.

ஜெர்மானியப் படைக்கு சுமார் எழுநூறு,எண்ணூறு ஆகாய விமானங்கள் உண்டு. பிரான்ஸுக்கும் அத்தனை யுண்டு.

* * *

பிரான்ஸில் சாமான்கள் இப்பொழுதே பஞ்சவிலையில் விற்கின்றன. கலேய் என்ற நகரில் ஒரு சிறிய கறிரொட்டித் துண்டுக்கு ஒரு ஷில்லிங் விலையாயிருக்கிறது. மற்ற இடங்களில் உள்ளவர்கள் ரொட்டியை விற்க மறுக்கின்றனர்.

* * *

பிரான்ஸிலும் ருஷியாவிலும் பெரிய வீடுகளினின்றும் தொழிற்சாலைகளினின்றும் யுத்தத்திற்குச் சென்றிருக்கும் மனிதர்களுக்குப் பதிலாக ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் அந்தந்த வேலைகளில் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் டிராம் வண்டிகளில் கண்டக்டர் வேலையும் பார்க்கின்றனர்.

* * *

யுத்தகளத்தில் ஜெர்மன் படையைப் பின்தொடர்ந்து செல்லுகின்ற கல்லறை தோண்டுபவர்களுடைய முக்கிய பிரிவுப்பட்டாளமே எந்த ஐரோப்பியப் படையிலும் அதிகபயங்கரமான பட்டாளம்.

* * *

இராணுவச்சட்ட அறிக்கையென்றால் சாதாரண சட்டத்தை நிறுத்தி வைத்திருத்தலும் அதற்கு பதிலாக இராணுவ அதிகாரத்தை ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவருதலுமாம். அதாவது, குற்றம் செய்கிறவனை, சாதாரண நியாயஸ்தலங்களின் முன் விசாரியாமல், ஒரு இராணுவத்தலைவர் தண்டிக்கலாம்.

* * *

இரத்தப்பிரவாகத்தில் பிணக்குவை குவித்து வைத்த ஆகஸ்டு மாசமானது அநேக பெயர்பெற்ற யுத்தங்களை நினைவுக்குக் கொண்டுவருகிறது. 1759—ம் வருஷம் ஆகஸ்டுமாதம் முதல்தேதியன்று மின்டேன் என்னும் இடத்தில் யுத்தமும் 1808-ம் வருஷம் நீலந்தி யுத்தமும் நடந்தன. 1347-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் நான்காம் தேதியன்று கலேய் என்ற நகரம் பிடிபட்டது. 1704-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 13-ம் தேதியன்று ப்ளேன்ஹீம் என்ற நகரமும் 1346-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் இருபத்தாறுந்தேதி க்ரேஸ்ஸீ என்ற நகரமும் ஜயிக்கப்பட்டன.

28 JAN 1915

ஞானபாநு

VOL - 2. தொகுதி - 2. | November 1914. ஆனந்தவருஷ கார்த்திகைமீ | No - 8. பகுதி – 8.

## ஓம் சாந்திః.

மேல் நாட்டிலுள்ள பேரரசுகளும் சிற்றரசுகளும் அதிபயங்கரமான ஆயுதங்கள் கொண்டு ஒருவரை யொருவர் கொன்று இரத்தாவேசம் கொண்டு ஐரோப்பாவை ஒரு பெரிய அமர்க்களமாகமாற்றி, ஆயிரக்கணக்கான ஜீவராசிகளைத் தினந்தோறும் அந்தகனுலகுக்கு அனுப்பிக்கொண்டிருக்கும்இச்சமயத்தில், அமெரிக்கா ஐக்கியநாடுகளின் குடியரசுத் தலைவரான பிரெஸிடெண்டு வில்ஸன் என்பவர் பின்வருமாறு ஒரு பஹிரங்க அறிக்கை செய்தார்:—

"அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவரால்— ஒரு பஹிரங்க அறிக்கை.

"உலகிலுள்ள பெரிய ஜனசமுகங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாக ஆயுதங்களை யெடுத்திருக்கின்றன வாதலாலும், யுத்தமானது லட்சக்கணக்கான ஜனங்களை இப்பொழுதுயுத்தகளத்திற்கு இழுப்பதினாலும் ராஜவியவகார நிபுணர்களின் புத்திசாமர்த்தியமானது (இந்த ஜனங்களை) பயங்கரமான பலியினின்றும் ரட்சிப்பதற்குச் சக்தியற் றிருப்பதினாலும்;

"எல்லா விஷயங்களிலும் போல இவ்விஷயத்திலும் பரமேஸ்வரனுக்கு முன்பாகப் பணிந்து நின்று நமது பலவீனத்தையும் இவ்விஷயங்களுக்குச் சரியாக வேண்டிய அறிவு நமக்கு இல்லாதிருத்தலையும் ஒப்புக்கொண்டு பரமேஸ்வரனுடைய உதவியையும் புத்திமதியையும் நாடுவதே நமது பாத்தியதையும் கடமையும் ஆதலாலும்;

"பிரார்த்தனையிலும் புத்திமதியிலும் எல்லாஸ்நேகத்திலும் சமாதானத்திற்காக உழைப்பதே ஐக்கிய நாட்டு ஜனங்களுடைய முக்கியமான விருப்பமும நோக்கமுமாதலாலும்;

"அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவனாகிய உட்ரோ வில்ஸன் என்னும் யான், அக்டோபர் மாதம் 4 - ந் தேதி ஞாயிற்றுக் கிழமையாகிய தினத்தைப் பிரார்த்தனைக்கும் வேண்டுகோளுக்கு முரிய நாளாக நியமித்து, ஈஸ்வரபயமுள்ள எல்லா ஜனங்களும் அன்றையதினம் அவரவர்களுடைய தியானஸ்தலங்

களுக்குச் சென்று, ஈஸ்வரன் மனிதர்களுடைய புத்தியின் போக்கை அடக்கி, மனிதர் ஆளவும் மாற்றவும் முடியாத விஷயங்களை நேர்செய்து, இப்பொழுது யுத்தத்தில் இருக்கும் ஜனசமூகங்களிடத்தில் கிருபை புரிந்து அவருடைய கருணையினும் நன்மையினும் மனிதர்கள் பார்க்காத ஒரு வழியைக்காட்டித் தமது குழந்தைகளுக்குச்சமாதானத்தை யளித்து எந்த ஒற்றுமையில்லாவிட்டால் சுகம் இல்லையோ, உண்மையான ஸ்நேகம் இல்லையோ, வேலைக்கேற்ற நல்லபலனில்லையோ, இவ்வுலகத்தில் நினைப்பில்லையோ, அந்த ஒற்றுமையை மனிதர்களுக்குள்ளும் ஜனசமூகங்களுக்குள்ளும் நிலைநிறுத்துமாறும், நமது பாபங்களையும் அவரது பரிசுத்த சட்டத்தைப்பற்றி நமக்குள்ள அறியாமையையும் நமது முரட்டுத்தனத்தையும் அநேகதப்பிதங்களையும் மன்னிக்குமாறும் தர்சன ஸ்தலங்களுக்கும் வெளிப்பட்டு அறிவை உண்டாக்குகின்ற புத்தி சக்திகளுக்கும் நினைப்புகளுக்கும் கீழ்ப்படிதலாகிய மார்க்கங்களில் நம்மை யிட்டுச்செல்லுமாறும் பரமேஸ்வரனுக்கு அவர்களுடைய ஸ்தோத்திரங்களை ஏகோபித்துச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்."

உலகிலுள்ள வல்லரசுகளுள் அமெரிக்கா ஐக்கிய நாடும் ஒன்றாயிருந்தும் இப்பாரதப்போரில் கைகலவாது நிஷ்பட்சபாதமாக நின்றது மாத்திர மல்லாமல் அநியாயமாக யுத்தவெறி கொண்டு அநேகாயிரம் மானிடராசிகளைத் தினந்தோறும் அந்தகனுலகுக்கு அனுப்பிக்கொண்டிருக்கும் ஐரோப்பிய அரசுகள் சமாதானமடைந்து ஸ்நேகபாவத்துடன் அந்நியோந்நியம் வாழுமாறு பிரார்த்தனைசெய்தது. மற்றெல்லா அரசுகளும்—பொதுவாயிருப்பதாகச் சொல்லிக்கொண் டிருக்கும் அரசுகள் கூட, எவ்விதத்திலாவது, அதாவது நேராக, யுத்தகளத்தி லில்லாவிட்டாலும் வியாபார விஷயத்திலாவது, அபிப்பிராய விஷயத்திலாவது ராஜரீக நோக்கவிஷயத்திலாவது ஏதேனும் ஒருகட்சிக்கு அநுகூலமாகவேயிருக்கின்றன.

தனக்கு மிகப்பலமிருந்தும், தன்னை ஜெயிப்போர் மிகவும் அரிது என்ற தன் நம்பிக்கையும் திடசித்தமும் இருந்தும் அவ்விதமாகப் பிறர் அவனை மதித்தும் வரும்பொழுது, ஒருவன் மனஅமைதியுடன் சாந்தமாக வீற்றிருந்து சிறியோர் செய்யும் குட்டிக்கலகங்களையும் அக்கலகங்களினால் பெரியோரெனப்படுவோரும் தமது பெருந்தன்மையை மறந்து ஜனாபிமானம், ஜாதியபிமானம்,



தேசாபிமானம் எனப்படுகின்ற குறுகியகுணங்களினால் தூண்டப்பட்டு அக்குட்டிக் கலகங்களைப் பெரியனவாக்கி அறிவு விருத்தி செய்யப்பட்டவர்கள் என்போரையும் அறிவுவிருத்தி செய்யப்படாதவர்களையும் ஆபத்துக்கு இழுத்துவிடுகின்ற அமர்களையும் அலட்சியமாகப்பார்த்து அவர்களுடைய அறியாமைக்கு இரங்கி அனைத்தையும் படைத்து அளித்து அழிக்கும் அற்புத சக்திவாய்ந்துள்ள ஆநந்த ஸ்வரூபியினிடத்தில் அடிபணிந்து நின்று சகலருடைய க்ஷேமத்திற்கும் பிரார்த்தனை செய்வானாயின், அவன் எல்லாரிலும் பெரியவன் என்பதிற சந்தேகமென்ன? தன் பலத்தில் முழு நம்பிக்கையுடையவன் தலைதடுமாறி வருவார் போவாரிடத்தி லெல்லாம் வம்புவழக்குகட்குப் போவானா? மிருகேந்திரனாகிய ஸிம்ஹமானது எத்தனையோ மிருகங்களுக்குக் காட்டில் இருக்க இடம்கொடுத்துத் தானும் தனது பெருந்தன்மையினால் அவற்றால் அரசனெனமதிக்கப்பெற்று வாழ்கின்றது. ஆதலால் அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் அத்தியட்சருடைய வேண்டுகோளும் பிரார்த்தனையும் அது இந்த யுத்தத்தில் கைகலந்திருப்போர் விஷயத்தில் நடந்துவரும் நடத்தையும் அது நிஷ்பட்சபாதமாயிருக்கிறதென்பதையும் தன் நம்பிக்கை மிகுந்துள்ளது என்பதையும் நன்றாக எடுத்துக் காட்டுகின்றன.

* * *

நமது விஷயத்திற்கு வருவோம்; இப்பொழுது உலகமெல்லாம் ஈஸ்வரனை மறந்திருக்கின்றது. சமாதானம் என்ற நினைப்பே ஒருவரிடத்திலும் இல்லை. நமது நாட்டு ஸ்திரீகட்கு ஸ்வதந்திரம் இல்லை, கல்வியில்லை என்று இரவு பகலாக மாரடித்துக்கொண்டு ஏங்கி யழுகிற ஆசாரச்சீர்திருத்தக் காரர்களெல்லாம் ஆச்சரியப்படும்படியாக, நமது சமயலறைகளிலும் ஸ்திரீகளின் சம்பாஷணைகளிலும் யுத்தமானது முன் நிற்கிறது; எழுத்தறிவில்லா ஸ்திரீகட்கு இந்த சமாச்சாரம் எப்படி எட்டுகிறதோ? சாதாரண ஜனங்களுக்குக் கட்டாயப்படிப்புக் கொடுக்க வேண்டுமென்று கதறுகிற கனவான்களுடைய கவனத்திற்குட் படும்படியாக, நமது வீதிகளில் ரிக்ஷாவண்டி யிழுத்துப் பிழைப்போனும் இந்த யுத்தத்தைப்பற்றி தினந்தோறும் அறிந்துவருகிறான்; சிறுகுழந்தைகளும் யுத்தத்தைப்பற்றிக் கேட்கப் பிரியப்படுகிறார்கள்; ஆகவே, யுத்த நினைப்பானது எல்லோருடைய முன்னிலும் எப்பொழுதும் நின்று மனத்தை மாற்றிவருகிறது. "நீ எப்படி நினைக்கிறாயோ அப்படி

நீ யாவாய்" என்பது சிருஷ்டி நீதிகளில் முக்கியமான தொன்று. ஆதலால் மானிடவர்க்கமானது யுத்தநினைப்பேகொண்டு யுத்தகோலம்பூண்டு நிற்கின்றது போலத் தோன்றுகிறது. இந்த யுத்தமானது நீடித்து நிற்குமானால் இப்பொழுது யுத்த நினைப்பேயில்லாமல் இருக்கும் அரசுகளும் சேர்ந்து உலகம்முழுவதையும்பெல்ஜியமாக்கிவிடுமோ? என்ற பயம் நமக்கு உண்டாகிறது. ஆ! ஆ! இப்போதைய நாகரிகம் என்ன நாகரிகம்! இப்பொழுது உலகம் அடைந்திருக்கும் அபிவிருத்தி என்ன அபிவிருத்தி! பேச்சுக்களெல்லாம் பிரமாதம் தான்; புஸ்தகங்களிலெல்லாம் நாகரீகம் தான்; ஆனால் கார்யத்திலோ காட்டுமிராண்டித்தனம் என்று நாம் கொஞ்சமும் கூசாமல் கூறுகின்றோம்.

* * *

பெல்ஜியத்தில் இறந்துபோன லட்சக்கணக்கான ஜீவராசிகளத்தனைபேர் முற்காலயுத்தத்தில் எப்பொழுதாவது இறந்திருப்பார்களா? ஆ! ஆ! கொடூரம்! கொடூரம்! யுத்தகளத்தின் ஸ்திதியை நினைக்கும் பொழுது நமது சரீரம் நடுங்குகின்றது; மனம் உடைகின்றது. இன்னது சொல்வது என்று விளங்கவில்லை. அமெரிக்கா குடியரசுத்தலைவர் பிரார்த்தனை பண்ணுவதுபோல, நாமும் ஓம் சாந்தி: என்று உபசாந்தத்தையே வேண்டுகிறோம். அந்தர்முகப் பிரபஞ்சத்திலாயினும் சரியே, பஹிர்முகப் பிரபஞ்சத்திலாயினும்சரியே, உபசாந்தமே மனிதன் அடைதற்குரிய லட்சியம். உபசாந்தமே லட்சியமாக மனிதன் யுத்தம்செய்யட்டும், வியாபாரம் செய்யட்டும், தொழில் செய்யட்டும், ராஜ்ஜியபாரம் செய்யட்டும், வேதாந்தம் பேசட்டும். அப்பொழுது உபசாந்தமாகிய பலத்தின் பிரயோஜனமாக மானிடராசிகள் ஈடேறி விடுவார்கள்.

* * *

ஓம், சாந்தி:—இந்த வாக்கியமானது நமது ஜெனனபூமியாகிய இப்பாரதவர்ஷத்தில் உற்பத்தியானது. இந்த வாக்கியத்தை நாம் கடைப்பிடித்ததினாலேயே நமது இந்திய ஜனசமூகம் இப்பொழுது அடைந்திருப்பதாகச் சொல்லப்படுகின்ற தாழ்ந்த நிலைமைக்கு வந்து விட்டதென்று மேனாட்டு மேதாவிகளில் பலரும் நம்நாட்டுக் கற்றோர்களென மற்றோர்களால் மதிக்கப்படுவோரும் அபிப்பிராயப்படுகின்றார்கள். ஆனால் உண்மையான தேசாபிமானிகளும் உத்தம தவசிரேஷ்டர்களும் இவ்வாக்கியத்தினாலேயே இந்தியா



வானது இதுவரை உயிருள்ள ஜனசமூகமாக அந்நியநாட்டினர் அனைவராலும் மதிக்கப்பெற்று நிலைத்திருக்கின்றது என்று அபிப்பிராயப்படுகின்றனர். இதனாலேயே அஹிம்ஸா பரமோதர்ம: என்ற நீதியானது நமக்கு உயிர்நாடிபோல அமைந்துவிட்டது; ஆதலால் நமது ஜனசமூகத்தினர் உண்மையாகப் பாரத புத்திரர்களாயிருந்தால், அவர்களுடைய சரீரங்களில் ஆர்யசிரேஷ்டர்களுடைய ரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறதினால் இப்பொழுது சகலலோக நாயகனாகிய சாட்சாத் பரமேஸ்வரனை நோக்கிப் பிரார்த்தனைசெய்ய வேண்டும்.

பூவுலகுக்கெல்லாம் பொன்னாடெனவும் புண்ணிய பூமியெனவும் பெயர்விளங்குகின்ற பாரதபூமியிலுள்ள பற்பலஜாதியினரும் பலபல மதத்தினரும் பலவிதக்கொள்கையினரும் இப்போது எல்லோருக்கும் இறைவனாய் எங்கும் உள்ளவனாய் எப்பொழுதும் நிலைத்தவனாயுள்ள அகண்டசச்சிதானந்த ஸ்வரூபியினிடத்து ஐரோப்பிய அமர்க்களத்தை அடக்கி விரைவில் உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தி ஓம்! சாந்தி: என்ற பிரணவோபசாந்தத் தொனியானது சமஸ்த லோகங்களிலும் ஒலியும் எதிரொலியுமாகப் பரவி அண்டபிண்ட சராசரங்களிலெல்லாம் ஆநந்த ஊற்றை ஊறச்செய்து அனைவருக்கும் அகண்ட சாம்ராஜ்ஜியத்தை அளிக்குமாறு ஏகோபித்து ஒரேமனத்துடன் ஸ்தோத்திரஞ்செய்யவேண்டும்.

## சிவோபதேசங்கள்.

1. உள்ளும் வெளியும் ஒன்றேயுளது. சுகசரீரிகள் ஜன்னல்களைத்திறந்துவைத்துச்சுத்த ஆகாயத்தை உட்கொள்கின்றனரன்றோ? அதுபோன்றே நினது இந்திரியத் துவாரங்களை நன்றாய்த் திறந்து வைத்துக்கொள். ஈஸ்வர சிருஷ்டியாகிய இப்பிரபஞ்ச ரகஸ்யாலங்காரத்தை நினதுகண்களால் உற்றுப்பார். நினது செவிகளால் சப்த சமஷ்டியாகிய அட்சர கோஷத்தைக் கேள். நினது வாயால் பதார்த்தத்தைப் பறையறை. நினது மூக்கால் நித்திய மோட்சசுகந்தத்தைமுகர்ந்துபார். நினது கர சரணாதி அவயவங்களால் பிரபஞ்ச வியாபகமாயுள்ள பிரம ஸ்வரூபத்தைக் கட்டியணைந்துகொள்.

2. சுகம் நினது ஜனன ஸ்வதந்திரம். நின்னுடையதே. நீயே. அளவற்ற விலையுயர்ந்த திரவியத்தை இழந்தவன் அதே பித்துப் பிடித்து இரவும்பகலும் ஏங்கித் திரிவானன்றோ? அங்ஙனமே நினது சுகரூப திரவியத்தை இழந்து விட்டதினாலேயே நீ சுகப்பித்துப் பிடித்து அலைகின்றாய். சுகம் நினது அருமையான திரவியம். உன்னிடத்தினின்றும் வேறாய்ப்பிரிக்கமுடியாத திரவியம். நீ பிரிந்துவிட்டதாக நினைத்து அல்லும் பகலும் அதேகவலையாய் உழைக்கின்றாய் சுகத்தை விரும்பாதவர் எவர்?

3. மனோ சங்கற்பத்தின்படி மனிதன் ஆய்விடுகிறான். இது அநேகருடைய அனுபவ ரகஸ்யம்.

4. ஒரு காந்தகடத்திற் குள்ளிட்ட ஊசியானது எங்ஙனம் ஒரு பக்கமும் சாராது கீழும் விழாது கடத்தின் நடு மையத்தில் நிற்குமோ, அங்ஙனமே நினதுமனம் பிரபஞ்சத்தில் நடுநிலைமையிலிருக்கட்டும். பக்ஷச் சார்பே பந்தத்தை உண்டாக்குகின்றது.

5. காமம், லோபம், மதம் ஆகிய இம்மூன்று குணங்களும் லோகாயதன், பக்தன் என்ற இருவரிடத்திலும் இருக்கின்றன. லோகாயதன் காமாதிக்கத்தினால் ஸ்திரீகளையும், லோபத்தினால் திரவியத்தையும், மதத்தினால் அகங்காரத்தையும் எங்ஙனம் இச்சிக்கின்றானோ, அங்ஙனமே பக்தனும் காமத்தினால் சர்வலோக சரண்ணியனாகிய புருஷோத்தமனையும், லோபத்தினால் அகண்டாநந்த ஐஸ்வரியத்தையும் மதத்தினால் நிர்ப்பயத்தையும் இச்சிக்கின்றான்.

6. சேர்க்கையிலேயே இன்பம் ஜனிக்கிறது. பதிவிரதா ஸ்திரீ, பத்தினீ விரத புருஷன் இவர்களுடைய சேர்க்கை, ஸ்வய நலம் பாராட்டாத ஸ்நேகிதர்களின் சேர்க்கை, களங்கமற்ற குரு சிஷ்யர்களின் சேர்க்கை, வியஷ்டி சமஷ்டியாகிய ஜீவேஸ்வரர்களின் சேர்க்கை, இவைகளிலெல்லாம் அன்பும் ஆநந்தமும் உற்பவிக்கின்றன. மாமிசக் கூறுகளின் சேர்க்கை சேர்க்கையாகாது. ஏனெனின் மறுபடியும் பிரிந்து விடக்கூடும் யாண்டும் பிரிக்கக்கூடாத ஆத்மீக ஒற்றுமையே இங்குச் சேர்க்கையெனலாயிற்று. இதனையே வட நூலார் ஏகீபாவம் என்பர்.

7. ஒற்றுமை, வேற்றுமை என்று ஒன்றுக்கொன்று எதிரிடையாயிருக்கின்ற இவ்விரண்டு பதங்களும் ஒரே அர்த்தத்தைக் குறிப்பிடுகின்றன. ஆ! என்ன ஆச்சரியம்! அந்தர்முகத்தில் பிரதிபலிக்கின்ற ஆத்மவஸ்து ஒற்றுமையாயும், பகிர்முகத்தில் பிரதிபலிக்கின்ற ஆத்மவஸ்து வேற்றுமையாயும் இருந்து, அந்தர்முக திருஷ்டியுடையவர்களுக்கும் பகிர்முக திருஷ்டியுடையவர்களுக்கும் ஆநந்தத்தை அளிக்கின்றது.



8. நினது பிதாவோ சம்சார சந்நியாசி, நித்தியப் பிரமச்சாரி. நினது மாதாவே கற்பழியாக் கன்னிகை, நித்திய குமரி, புருஷன் முகம் பாராப் பூவை. ஆனால், நினது மாதாவின் கர்ப்பத்திலிருந்தே இவ்வண்ட பிண்ட புவன சராசரங்களெல்லாம் உற்பவித்தன. என்ன ஆச்சரியம்! இதுவே பரமரகஸ்யம்.

9. இன்மையே நினதுமாதா. உண்மையே நினது பிதா. இன்மையும் உண்மையும் சேர்ந்து, இன்மையிலும் உண்மையிலும் சேராத இப்பிரபஞ்சம் உண்டாயிற்று. ஆடும் புலியும் சேருமோ? இது கூடாத காரியமன்றோ? ஆயினும் இஃது உண்மையே. அதிவிநோதம்!

10. பிதா பீஜ மிட்டவர். மாதா கர்ப்பத்தில் இடங்கொடுத்து ஜனித்தது முதல் தனது சுகதுக்கங்களைக் கருதாது ரத்தமாகிய க்ஷீரத்தை ஊட்டி வெகுஜாக்கிரதையாய் வளர்த்துக்கொஞ்சி விளையாடி, தாலாட்டி, சீராட்டி, தனதுசரீரத்துடன் ஒன்றுபடுத்திக் கொண்டவள். ஆதலால் புத்திரர்களுக்குப் பிதாவினிடத்தில் பார்க்கிலும் மாதாவினிடத்தில் அன்பு மிகுதி. இது உலக ஸ்வபாவம். உலக ஸ்வபாவத்திற்கு நேர் எதிரிடையே மோட்சமார்க்கமென உபநிஷத்துக்களில் கோஷிக்கப்படுகின்றது. மாதாவைத் துறந்து பிதாவை யடையவேண்டும். இது வேதாந்த மர்மம். எது நீதி, எது அநீதி என்பதை யாவர் அறிந்துளார்?

## தட்சிண தேசத்தின் முற்கால நிலை.

முற்கால கட்டடங்களில் அடங்கிய கல்வெட்டுகளைச் சோதித்தறிவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஆர்க்கியலாஜிகல் அஸிஸ்டெண்ட் சூபரின்டென்டெண்டாகிய ராவ் சாகிப் கிருஷ்ணசாஸ்திரியார் சில கல்வெட்டு நகல்களை வெளிப்படுத்தியிருக்கிறார். பக்தியுள்ள ஜனங்கள் பலகோவில்களுக்குக் கொடுத்திருக்கும் வெகுமதிகளும் சாசனங்களும் அவற்றில் அடங்கியிருக்கின்றன.

நிலங்கள், கிராமங்கள், வீடுகள், கிஸ்திகள், குளங்கள், நந்தவனங்கள் முதலியவைகளும், நகைகள், பவுன், விசேஷகாலங்களுக்காக மண்டகப்படிகள் முதலியவைகளும் பல ஜனங்களால் கோவில்களுக்கு விடப்பட்டிருக்கின்றன. இவைகளின் மூலமாகச்சரித்திர ஆராய்ச்சி செய்யமுடியும். இந்தச்சிலாசாசனங்களில் அந்தந்தக்காலத்து ராஜாக்களின் பெயரும் வருஷமும் காணப்படுகின்றன.

பல்லவ ஆளுகை, மேற்கு கங்கர் ஆளுகை, சாளுக்கியர்கள், சோழ பாண்டியர்கள், விஜயநகரம், ஹாஸாலா, நொலம்பா, விஷ்ணுகுண்டின், ரஷ்டாகூடாகஜாதி, மகம்மதியர் முதலிய ஆளுகையைப்பற்றிய விஷயங்களும் அவர்களுடைய காலங்களும் தெரிகின்றன. அந்தக்காலங்களில் ஜனங்களின் நடையுடை பாவனைகளும் சட்டங்களும் ஜனசமூகலட்சணங்களும் நோக்கங்களும் எவ்விதமிருந்தனவென்று நன்றாகத்தெரியவருகின்றன. பல்லாரி ஜில்லாவில் ஹாவினகடகல்லி என்ற கிராமத்திலுள்ள கேசவசுவாமிகோவில் மேற்குக் கோபுரவாயிற்படிக்கருகில் ஒரு கற்சிலை கந்நடபாஷையில் எழுப்பட்டுச்சீர்குலைந்திருக்கிறது. அதைப்பார்க்கும்போது மேல் சாளுக்கிய ஆட்சியில் பிராமணர்கள் க்ஷத்திரியதர்மத்தை வகித்திருந்தார்கள் என்பது தெரிகிறது.

விக்கிரம சாளுக்கிய 15ம்வருஷத்தில் எழுதப்பட்ட அந்தக் கற்சிலையில் ரவி தண்டண்ணியர் என்ற பட்டாள உத்தியோகஸ்தராகிய பிராமணரைப்பற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். அந்த ஜில்லாவில் நீலகுண்டா என்ற ஊரில் முக்தேஸ்வரர் கோயில் முற்றத்தில் மற்றொருசிலை இருக்கிறது. சிர்குண்டாவைச்சேர்ந்த மூலிகா என்றவர் பானவாஸி நாட்டில் பசுக்களை மீட்பதற்காகச்செய்த போரில் உயிரிழந்தார் என்று அதில் காணப்பட்டிருக்கிறது. துரியோதனன் விராடநகரத்தில் பசுக்களைக்கவர்ந்த கதை ஞாபகத்துக்கு வருகிறது. பசுக்கள் தெய்வத்தன்மை கொண்டதென்று இந்திய ராஜாக்களால் நீண்டகாலம் கொண்டாடப்பட்டு வருகிற விஷயம் இதிலிருந்து தெரிகிறது. தட்சிணதேசத்தில் இவ்வளவு சமீபகாலத்தில் கூட பசுக்களை ரட்சிப்பது க்ஷத்ரிய தர்மமாகக்கருதப்பட்டதென்று தெரிகிறதல்லவா?

இறந்துபோன பந்துக்களுக்காக தானம் செய்வதும் அரசர்களுக்காக கிஸ்திவஜா செய்வதும் யுத்தங்களில் ஜெயமடைந்ததற்



காகச்செய்யப்படும் தானங்களும் சிலாசாசனங்களில் காணப்படுகின்றன. அவைகள் சிலவீரர்களுடைய காரியங்களைக்குறிக்கின்றன. யுத்தவீரர்கள் மதக்கோட்பாடுகளைப்பெரிதும் கொண்டாடியிருப்பது வெளிப்படுகிறது. முதலாவது பீம சாளுக்கிய அரசன் தன் குமாரன் யுத்தகளத்தில் இறந்ததற்காக சிராத்தகாலத்தில் பல கோத்ர சூத்ரங்களுடைய பிராமணர்களுக்குக் கிராமதானம் செய்திருக்கிறான். மாதவவர்மமகாராஜன் ராஜ்யம் ஜெயிப்பதற்காக கோதாவரியைத்தாண்டிக் கிழக்கே வரும்போது பூமியும் கிராமங்களும் தானம் செய்த பிறகு கிளம்பியதாகத்தெரிகிறது. இலங்கையில் இறந்துபோன தகப்பனுடைய ஆத்மாவுக்காக மற்றொரு பிரபு துலியூரில் உள்ள சிவன் கோவிலுக்கு ஒரு கருங்கற்சுவர் கட்டியதோடு சில வரும்படிகளையும் எழுதிக்கொடுத்திருக்கிறார். விஜயநகரத்து அச்சுத மகாராயனுடைய மகிமைக்காக பிராமணர் வரும்படிக்கும் கல்யாணங்களுக்கும் ஏற்பட்ட கிஸ்திகள் நீக்கிவிடப்பட்டன.

தென் இந்தியாவில் முற்காலங்களில் புலி அங்கம் என்பது பிரசித்தி பெற்றிருந்தது. ஆபத்தை விளைக்கக்கூடிய விளையாட்டுகளில் இதற்குச்சமமானது வேறொன்றும் இல்லை. இதற்காகப் பெயர்போன குஸ்திவீரர்களும் மல்லவீரர்களும் உண்டு. மேலசமுத்திரக்கரைகளில் இந்த விளையாட்டில் தேர்ந்தவர்கள் அதிகம். பிச்சிராஜாமுதலிய பலர்க்கும் இந்த விளையாட்டில் அதிக பிரீதி என்று தெரிகிறது. இரிவநொலம்பராஜன் காலத்தில் புங்கனூர் ஜமீனைச்சேர்ந்த நெலபல்லி கிராமத்தில் புலிவேட்டையில் இந்தப் பன் என்னும் பயில்வான் புலியைக்குத்தி அதோடு கூடத் இறந்ததாக ஒருகற்சிலையில் செதுக்கி எழுதப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் கிருஷ்ண சாஸ்திரியார் கண்டுவெளிப்படுத்திய தாமிரத் தகட்டுச் சாஸனங்களில் தென் இந்தியாவின் சரித்திரங்கள் தெளிவாக விளங்குகின்றன.

## ஜன சமூகக் கல்வி.

இப்பொழுது நமது ஜன சமூகம் இருக்கும் நிலைமையில், நமக்கு ஜன சமூகத்தை ஸ்திரப்படுத்தும் படியான கல்வி வேண்டியதா அல்லது ஜனசமூகத்தைச் சிருஷ்டிக்கும்படியான கல்வி

வேண்டியதா? என்று நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டுவது அவசியம். அந்நிய ஜன சமூகங்களின் ஆதாரவைநாடி அவர்களது கொள்கைகளையே பின் பற்றி, ஸ்வதேசம், ஸ்வஜனம் என்ற உணர்ச்சியே யில்லாமல் இருக்கும் எந்தத் தேசத்தாரும் பிரத்தியேகமான ஜனசமூகம் ஆகமாட்டார். தனித்தனி ஜன சமூகமாகாவிட்டால், அத்தேசத்திற்கு ஸ்வதந்திரப் பெருமையில்லை. ஸ்வாநுபூதி ஒருநாளும் உண்டாகாது. ஆகவே, அவர்களை என்றென்றும் துக்கமே பீடித்துக் கொண்டிருக்கும். ஆகலால் ஜன சமூக உணர்ச்சியை உண்டுபண்ணி நாம் இப்பொழுது ஒரு ஜன சமூகத்தை சிருஷ்டிக்க வேண்டியிருக்கிறது. இந்தியா தேசத்தில் பிறந்து, இந்தியக்காற்றை உட்கொண்டு, இந்தியர் என்ற பெபருடன் இருக்கும் ஒவ்வொருவரும் இப்பொழுதுசெய்ய வேண்டுவது இதுதான்.

ஜன சமூகத்தைச் சிருஷ்டி செய்வதற்கு, அதாவது, இந்தியாவிற் பிறந்த எல்லோரும் ஒரேதாயின் வயிற்றுமக்கள், ஒருவரைப் பீடிக்கும் துன்பம் எல்லோரையும் பீடிக்கும், இது நிச்சயம், என்ற எண்ணம் இந்தியாவில் பிறந்துள்ள கோடிக்கணக்கான ஜனங்களுடைய ஹிருதயத்தில் உறைந்து பதிவதற்கு ஏற்ற கல்வியை சிரேஷ்டர்கள் என்று வெகு ஜனங்களால் மதிக்கப்படுகின்றவர்கள் ஒருங்குகூடி யோசனைசெய்து தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஆதிகாலத்தில் ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களும் இப்படித்தான் ஏற்பட்டிருக்கின்றன. நமது ஆரியநாகரிகம் அழிந்துவிடும் என்று அனைவரும் நம்பியிருந்த காலத்தில்தான் ஆசாரங்கள் ஏற்பட்டன. ஜாதிக்கலப்பு உண்டாகி ஆசாரங்கள் அழிவையடைய ஆரம்பித்த காலத்தில்தான் விவாகத்தைப் பற்றிய சில நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன. இங்ஙனமே இப்பொழுதும் ஜனசமூக உணர்ச்சியை விரும்புகிற ஜனங்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஹிருதயமும் புத்தியும் விரிந்து விசாலமாகும்படியான கல்வியை அளிக்கவேண்டும்.

ஜனசமூக உணர்ச்சியென்பது பிறருடைய நன்மைக்காகப் பாடுபடுதல்தான். இதைத்தான் பொதுஜன ஊக்கம், என்று பொருள்படும்படி மேல்நாட்டினர் கூறுகின்றனர். ஜனசமூக உணர்ச்சி, பொதுஜன ஊக்கம், இவை யெல்லாம் ஸ்வயநலமற்றுவேலை செய்தல்தான். பெற்றோர்கள் எப்பொழுதும் தங்களுடைய தற்காலத்



திய அல்லது பிற்காலத்திய நன்மையைக் கருதாது தேச நன்மையையே கருதி ஸ்வயநலமற்று உழைத்தலே அவர்களுடைய குழந்தைகளுக்கு அநுபவ பூர்வமான பாடமாகும். ஒருவன் ஒரு காரியம் செய்ய எண்ணி, அக்காரியத்தினால் தனக்குஅளவற்ற நன்மையும் தாம் குடியிருக்கும் தெருவில் உள்ளார் அனைவருக்கும் கெடுதியும் உண்டாகுமென்று தெரிந்து, தன் நன்மையைக்கருதாது, பொதுஜன நன்மையைக் கருதி அக்காரியத்தைச் செய்யாது விட்டுவிட்டால், அது அவனுடைய குழந்தைக்கு ஒரு பாடமாகும். ஒருவன் தனது சகோதர ஜனங்களுடைய துன்பத்தைப் போக்குவதற்காக, சத்தியத்திற்காக, எதிர்ப்படும் எவ்வித ஆபத்துகளையும் லட்சியம் செய்யாது உழைத்தானாயின், அது அவனுடைய குழந்தைக்கு ஒரு பாடமாகும். நமது ஜனசமூகத்தைக் கட்டுவதற்கு இதுதான்வழி. நமது சந்ததியார் ஜனசமூகமாய் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமாயின், நாம் இப்பொழுதுஸ்வயநலமற்று உழைத்துக் காட்டவேண்டும். பிறரது நன்மைக்காகவே தியானம் செய்தல் மானிடவர்க்கத்தின் துக்கத்தைக்கண்டு சகியாது மனமுருகுதல், இவைதாம் ஜனசமூக சிருஷ்டிக்கு அடிவேர் போன்றவை. ஒவ்வொருவரும் ஜனசமூக சரீரத்தில் ஒரு அவயவம் என்று எண்ணும் பொழுதுதான், அப்பேர்ப்பட்ட அவயவங்களாகிய ஒவ்வொருதொழிலாளரும் நமது மதிப்புக்குப் பாத்திரமாகும் பொழுதுதான், ஜனசமூகத்தின்முன் நமது குடும்பம் என்று ஒன்று இல்லாமற்போகும் பொழுதுதான், நாம் ஒரு ஜனசமூகம் ஆவோம்.

நாம் நமது குழந்தைகளுக்கு நமது ஜனசமூகத்தின் பெருமையைப்பற்றியும் நமது தேசத்தின் மகிமைகளைப்பற்றியும் நமது முன்னோர்களின் சாமர்த்தியங்களைப் பற்றியுமே இடைவிடாது போதிக்க வேண்டும், குழந்தைகளுடைய கருத்துக்களெல்லாம் குடும்பத்திலில்லாது பொதுஜன நோக்கமாயிருக்கச் செய்யவேண்டும். குழந்தைகள் இந்தியாவின் நன்மையை உத்தேசித்து எதையும் தியஜிக்கும்படி செய்யவேண்டும்; குழந்தைகள் இந்தியாவிற்காகப் படிக்கிறார்களா? இந்தியாவினிடத்தில் பக்தி செலுத்துகின்றார்களா? என்று கவனிக்கவேண்டும்.

வேறொருபலனையும் கருதாது, நாமும் நமது குழந்தைகளும் இந்தியாவுக்காக இந்தியாவினிடத்தில் அன்பு செலுத்தவேண்

டும். இவ்வெண்ணமே நமது குழந்தைகளுக்கு ஆகாரமாயிருக்க வேண்டும். வீட்டிலும் வெளியிலும் அவர்கள் இந்தியாவைப்பற்றியே நினைக்கும்படி செய்யவேண்டும். இந்தியாவினிடத்தில் அளவற்ற அன்பு அவர்களுடைய ஹிருதயங்களினின்றும் பொங்கித் ததும்பி வழியவேண்டும். தான் அன்பு செலுத்துகிற வஸ்துவை ரட்சிப்பதற்காகத் தன் உயிரையும் திரணமாய் நினைத்து ஸ்வயநல மற்று வேலைசெய்தலே உண்மையான அன்பு எனப்படும். அத்தகைய அன்பை நமது குழந்தைகள் கற்றுக்கொள்ளட்டும்.

நமது ஜனங்களை நமது குழந்தைகள் பூரணமாக நம்பும்படி செய்யவேண்டும். நமது முன்னோர்கள் மகரிஷிகள்; நமது நாகரிகம் மிகப் பழமையானது; நமது தேசம் புண்ணிய தேசம்; வறுமையால் பீடிக்கப்பட்டும் ராஜகொடுமைகளால் துரத்தப்பட்டும் நமது ராஜ்யத்திற்கு ஓடிவந்த மற்றத் தேயத்தினர்களை நாம் அபயம்கொடுத்து ரட்சித்தோம், ஆதரித்தோம். நமது ஜனசமூகம் அழிவற்றது. பிரபஞ்சத்திற்கு நாம் ஞானகுருவாயிருக்கிறோம். இம்மாதிரியான, தன்னம்பிக்கையை உண்டாக்கத்தக்க எண்ணங்களை நமது குழந்தைகளுடைய ஹிருதயங்களில் குடிகொள்ள வேண்டும்.

வீரர்கள் பிறவியிலேயே வீரர்களாய்ப் பிறக்கின்றனர் என்பது தப்பு. வீரர்கள் தமது ஸ்வசக்திப் பிரகாசத்தினாலேயே வீரர்கள் ஆகின்றனர். தன்னம்பிக்கையே வீரர்களுக்குப் பிரதானம். தன் மறுப்பே வீரத்தன்மைக்குக் காரணம். உண்மையில் ஆய்ந்து பார்த்தால், எல்லாருடைய மனத்திலும் தன்மறுப்பு ஸ்வபாவமாயிருக்கிறது. ஆனால், வாசனாபலத்தால் அது மறைபட்டிருக்கிறது. அகங்காரமின்மையும் பிறரது நன்மையுமே சுத்த வீரனது லட்சணம். சாந்தகுண தீரத்துவமே அவனது ஸ்வபாவம். நமது குழந்தைகள் இத்தகைய சுத்த வீரர்களாகும் பொருட்டு, நாம் அவர்களுக்குத் தன்னம்பிக்கை, தன் மறுப்பு, பொறுக்குஞ்சக்தி, சாந்தகுணம், தீரத்துவம் இவற்றையெல்லாம் பயிற்றுவிக்கவேண்டும்.

நாம் இந்தியா ஒன்றேயென்று மனப்பூர்வமாய் நினைக்கும்பொழுது இந்தியா ஒன்றுதான்; இப்பொழுது இருக்கின்றனவாகச் சொல்லப்படும் வேறுபாடுகள் ஒழிந்துபோம். இப்பிரபஞ்சம் மனத்தின் சிருஷ்டி தான். ஆதலால், நாம் எல்லோரும் நமது வேற்றுமைகளையெல்லாம் மறந்து, இந்தியா ஒற்றுமையாய் இருக்கிறதென்று திடசித்தத்துடன் நம்புவோமானால், இந்தியா ஒற்றுமையாய் விடும். முப்பதுகோடி ஜனங்களும் ஒரேமனமாக நினைத்தால், அம்மனோ சக்தியின் வல்லமையைத் தடுப்பவர் யாவர்? அஃது எவரால் முடியும்? அச்சக்தி எல்லாம் செய்யும்.

சிவம்.

## ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளின்கடிதம்.

### I.

[பிரம்ஹ ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் மொழி பெயர்த்தது.]

ஐக்யநாடுகள், அமெரிக்கா. 1894.

அரிய !

ஒரு பழங்கதையைக் கேள். ஒரு கிழவன் தன் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது தெருவில் சுற்றித்திரியும் சோம்பேறிக்காலாடி யொருவன் அக்கிழவனருகில் வந்து ஒரு கிராமத்தின் பெயரைச்சொல்லி "அந்தக் கிராமம் எவ்வளவு தூரம் இருக்கிறது" என்று கேட்டான். அந்தக்கிழவன் ஒன்றும் பேசவில்லை. அந்தமனிதன் பலமுறை தான் கேட்ட கேள்வியைத் திருப்பித்திருப்பிக் கேட்டான். ஆயினும் பதிலேயில்லை. வழிப்போக்கன் வருத்தப்பட்டுக்கொண்டு, புறப்பட ஆரம்பித்தான். அந்தக் கிழவன் உடனே எழுந்து நின்று, "அந்த கிராமம் இங்கிருந்து ஒருமைல்தான் இருக்கிறது" என்றான். அப்பொழுது அந்த காலாடி "நான் உன்னை முன்னமே கேட்டபொழுது நீ ஏன் பேசவில்லை" என்று கேட்டான். கிழவன்பதில் சொன்னதாவது "ஏனென்றால், நீ புறப்படுவதைப்பற்றிக் கவலையில்லாதவன் போலவும் தாமதப்படுபவன் போலவும் காணப்பட்டாய்; ஆனால் இப்பொழுது நீ மிகுந்த ஆத்திரத்துடன் புறப்பட்டிருக்கிறதினால் நீ பதில்வாங்கிக்கொள்வதற்கு உனக்குப் பாத்தியதையுண்டு என்றான்.

எனது புத்திரனே! நீ இந்தக்கதையை ஞாபகப்படுத்திக் கொள்வாயா? வேலைசெய்யப்போ, மற்றவையெல்லாம் தானே வரும்; "எவனொருவன் என்னைத்தவிர வேறொன்றையும் நம்பாதவனாய் என்மீது பாரத்தைப்போட்டு விட்டு இருக்கிறானோ, அவனுக்கு வேண்டியவற்றையெல்லாம் நான் அளிக்கிறேன்" —கீதை. இது ஸ்வப்பனமன்று.

* * *

இப்பொழுது வேலையானது பிரசங்கம் செய்யும் மாதிரியிலும் ஊழியம் செய்யும் மாதிரியிலுமாகவேயிருக்கவேண்டும். ஒவ்வொருவாரத்திலும் நீங்கள் ஒன்று கூடி பஜனை செய்வதற்கும் உபநிஷத்துக்களை வியாக்கியானங்களுடன் வாசிப்பதற்கும் பொதுவான ஒரு இடத்தைத் தேடிக்கொள்ளுங்கள். இப்படியே கற்றுக்

கொண்டும் வேலைசெய்து கொண்டும் மெதுவாக நடவுங்கள். நீங்கள் சக்கரத்துக்கு உங்களுடைய தோள்களைக் கொடுத்தால் எல்லாம் உங்களிடத்திற்கு வரும்.

இப்பொழுது, வேலை செய்யப்போங்கள். டைய ஸ்வபாவம் ஹிருதய சம்பந்தப்பட்டது; உனக்கு நல்ல மூளையிருக்கிறது, ஆகலால் ஒன்று சேர்ந்து வேலை செய்யுங்கள்; இறங்கிவிடுங்கள்; இது ஆரம்பமாத்திரம் தான். ஒவ்வொரு ஜனசமுகமும் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டும்; ஹிந்து மதத்தைத் திரும்பவும் விருத்தி பண்ணுவதற்கு அமெரிக்காவிலிருந்து கிடைக்கும் நிதிகளின்மேல் நாம் சார்ந்திருக்கக்கூடாது; ஏனென்றால், அது ஒரு வீண் பிரமை. மத்தியஸ்தலமாக ஒன்றைவைத்துக் கொள்வது ஒரு பெரியகார்யம்; சென்னையைப்போன்ற ஒரு பெரிய பட்டணத்தில் அப்பேர்ப்பட்ட ஒரு இடத்தையடைய முயற்சி செய்யுங்கள்; எல்லாப்பக்கங்களிலும் உயிருள்ள ஒரு சக்தியைப்பரப்பிக் கொண்டுபோங்கள். மெதுவாய் ஆரம்பியுங்கள்; குடும்பத்திலேயே யிருந்துகொண்டு பரோபகாரம் செய்ய விரும்பும் சிலருடன் தொடங்குங்கள்; இந்த வேலைக்குத் தங்களுடைய ஜீவிதகாலம் முழுதையும் கொடுக்கும் ஜனங்கள் வரவர உண்டாவார்கள். பிறரையடக்கியாளவேண்டுமென்று முயற்சிசெய்யாதே. எவனொருவனால் நன்றாக வேலைசெய்ய முடியுமோ, அவனே நன்றாயாளுதற் கேற்றவன்; மரணம் வரினும் உண்மையாயிரு. நாம் விரும்புவது வேலையே. நாம் பணத்தையாவது, பெயரையாவது, கீர்த்தியையாவது தேடுகிறதில்லை. * * * *

தைர்யமாயிரு. இந்தக்கார்யத்திற்கு நிதிசேர்ப்பதற்கு சென்னை ஜனங்களிடத்தில் ஆத்திரத்தை யுண்டுபண்ண முயற்சிசெய்: பிறகு ஓர் ஆரம்பம் செய். * * * *

பூர்த்தியாக ஸ்வயநலமற்று இரு: நீ ஜெயிப்பது நிச்சயம்.

* * *

எனது குழந்தைகள் தங்களுடைய வேலையைச் செய்து முடிப்பதற்கு, அவசியமானால், நெருப்புக்குள் குதிக்கவும் தயாராயிருக்கவேண்டும்: இப்பொழுது வேலைசெய்யுங்கள், வேலைசெய்யுங்கள், வேலைசெய்யுங்கள். நாம் பிற்பாடு நின்று குறிப்புகளை ஒத்துப்பார்த்துக் கொள்ளலாம். பொறுமையுடனும், இடைவிடா முயற்சி செய்துகொண்டும், பரிசுத்தமாயும் இருங்கள்.



* * * நான் இப்பொழுது ஹிந்து மதத்தைப் பற்றிப்புஸ்தகம் ஒன்றும் எழுதிக்கொண்டிருக்கவில்லை. நான் எனது எண்ணங்களை யெல்லாம் குறித்து எழுதிக் கொண்டிருக்கிறேன். நான் அவற்றைப் பிரசுரிப்பேனா? என்பதை நான் அறியமாட்டேன். புஸ்தகங்களில் என்ன இருக்கின்றது? முன்னமேயே உலகமானது மூடவிஷயங்களால் நிறைந்திருக்கிறது. நீங்கள் வேதாந்த வழிகளில் ஒருபத்திரிகை ஆரம்பிக்கமுடியுமானால், அது நமது நோக்கத்தை நிறைவேற்றும். நீ சொல்வதைச்சொல்; பிறரைக்குற்றங் கூறாதே. உன்னுடைய சமாச்சாரத்தைச் சொல், நீ போதிக்க வேண்டியதைப் போதி, அம்மட்டோடு நில். மிகுதியை ஈஸ்வரன் அறிவார். பாதிரிகள் என்னைப்பற்றிக்கூறும் குற்றங்களை நான் கவனிக்கிறதில்லை யாகையால், சமாச்சாரப்பத்திரிகைகளை இனிமேல் அனுப்பாதே; இந்த என்னைப்பற்றிப் பொது ஜனமதிப்பு அந்த விஷயத்தில் அதிக நன்றாகவே யிருக்கிறது.

* * * உண்மையாகவே நீங்கள் எனது குழந்தைகளானால் நீங்கள் ஒன்றுக்கும் பயப்படமாட்டீர்கள், ஒன்றிலும் நிற்கமாட்டீர்கள். நீங்கள் ஸிம்ஹங்களைப்போல இருப்பீர்கள். நாம் இந்தியாவையும் உலகம் முழுதையும் எழுப்பிவிடவேண்டும். பயங்காளித் தனமில்லை, மாட்டேனென்று சொன்னால் நான் கேட்கமாட்டேன். உங்களுக்குத் தெரிகின்றதா? மரணம் வரினும் உண்மையாயிருங்கள். இதன் ரகஸ்யம் குருபக்திதான். மரணம்நேரிட்டாலும் குருவினிடத்தில் விஸ்வாஸம்; அது உங்களிடத்தில் இருக்கிறதா? உங்களிடத்தில் இருக்கிறதென்று நான் எனது பூர்ண ஹிருதயத்துடன் நம்புகிறேன்; உங்களிடத்தில் எனக்கு நம்பிக்கையிருக்கிறதென்று உங்களுக்குத்தெரியும் ஆகையால் வேலை செய்யப்போங்கள். நீங்கள் ஜெயிக்கவேண்டும், எனது பிரார்த்தனைகளும் ஆசிர்வாதங்களும் நீங்கள் எடுக்கிற ஒவ்வொரு அடியையும் தொடர்ந்து வருகின்றன. ஒத்து வேலைசெய்யுங்கள். ஒவ்வொருவருடனும் பொறுமையாயிருங்கள். ஒவ்வொருவரிடத்திலும் எனது அன்பு இருக்கிறது. நான் உங்களைக்கவனித்துக் கொண்டிருக்கிறேன். மேலே செல்லுங்கள்; மேலே செல்லுங்கள்; இப்பொழுதுதான் ஆரம்பம். இங்கு நான் செய்கிற சிறியவேலை இந்தியாவில் ஒரு பெரிய எதிரொலியை உண்டாக்கியிருக்கிறது, உங்களுக்குத்தெரியுமா? ஆகையால் நான் அவசரப்பட்டுக் கொ

ண்டு அங்கு திரும்பிவரமாட்டேன். எனது கருத்து இங்கு ஏதாவது நிலையுள்ளதாகச் செய்யவேண்டுமென்பதே; அந்த நோக்கத்துடன் நான் தினந்தோறும் வேலைசெய்து கொண்டிருக்கிறேன். நான் ஒவ்வொருநாளும் அமெரிக்கா ஜனங்களுடைய நம்பிக்கையை அடைந்து வருகிறேன்: * * * உலகம் விசாலமாயிருப்பதுபோல, உங்களுடைய ஹிருதயங்களையும் நம்பிக்கைகளையும் விசாலப்படுத்திக் கொள்ளுங்கள். ஸமஸ்கிருதபாஷையை, முக்கியமாக வேதாந்தத்தின் மேலுள்ள மூன்று பாஷியங்களையும் படியுங்கள். தயாராயிருங்கள், ஏனென்றால் நான் வருங்காலத்திற்கு அநேக யோசனைகளை வைத்திருக்கிறேன். ஜனங்களைத் தன்வசப்படுத்தும் சக்தியுள்ள பிரஸங்கியாவதற்கு முயற்சிசெய். உங்களுக்கு நம்பிக்கைமாத்திரம் இருந்தால் எல்லாம் உங்களிடத்திற்கு வரும். ஆகையால்—டத்தில் சொல், வாஸ்தவமாக எனது குழந்தைகளிடத்திலெல்லாம் சொல். சீக்கிரத்தில் உலகமானது ஆச்சர்யப்படும்படியாகப் பெரியகாரியங்களை அவர்கள் செய்வார்கள். தைர்யமாய்வேலைசெய்யுங்கள். உங்களால் என்னசெய்ய முடியுமென்பதைநான் பார்க்கட்டும். * * * நீங்கள் எடுத்திருக்கும் வேலையினிடத்து உண்மையாயிருங்கள். இவ்வளவும் நீங் செய்கிறது நன்றாயிருக்கிறது; ஆகையால் மேலே போங்கள், மேன்மேலும் நன்றாகச்செய்யுங்கள்.

* * * ஜனங்களுடன் சண்டைபோடாதீர்கள். ஒருவரையும் எதிர்க்காதீர்கள். ஜாக் என்பவனாவது ஜான் என்பவனாவது கிறிஸ்தவர்களானால், அதைப்பற்றி நாம் ஏன் லட்சியம் செய்யவேண்டும்? எந்தமதம் அவர்களுக்குத் தகுந்திருக்கிறதோ, அதை அவர்கள் பின்பற்றட்டும். வாக்குவாதங்களில் நீங்கள் ஏன் கலந்து கொள்கிறீர்கள்? எல்லாருடைய பற்பல அபிப்பிராயங்களுக்கும் இடங்கொடுங்கள். பொறுமையும், பரிசுத்தமும், இடைவிடா முயற்சியும் தாம் நிலைநிற்கும்.

உங்கள்

விவேகாநந்தர்.

## ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

பிரம்ஹஸ்ரீ ராமச்சந்திரசாஸ்திரிகள் மொழிபெயர்த்தது.

### II.

எனது தைரியமுள்ள, ஸ்வபநபமற்ற குழந்தைகளே, நீங்கள் எல்லோரும் நன்றாய் வேலைசெய்திருக்கிறீர்கள். உங்களைப்பற்றி நான் மிகவும் பெருமையடைகிறேன்.......நம்புங்கள்; ஏக்கமடையாதீர்கள். இவ்வளவும் ஆரம்பித்த பின்னர், நீ ஏக்கமடைவாயாயின், நீ ஒரு மூடனே. * * *

நமது பூமி இந்தியா: பிறர்மெச்சுதலினாலுண்டாகும் மதிப்பு இந்தியாவை எழுப்பி விடுவதில் தான் உள்ளது. அவ்வளவு தான். .........நமக்கு ஒருபலமான அஸ்திவாரம் இருக்கவேண்டும். அங்கிருந்து பரவவேண்டும். ஒரு விநாடி நேரமேனும் சோர்வடையாதே. எல்லாம் சரியாய்விடும். திடசித்தம் தான் உலகத்தை அசைப்பது.

எனது புத்திரனே, வாலிபர்கள் கிறிஸ்தவர்களாய் விடுகிறார்களென்று நீ விசனமடைய வேண்டாம். இப்பொழுதுள்ள ஜனசமுகபந்தங்களின்கீழே, அதுவும் சென்னையில், அவர்கள் வேறென்னவாகக்கூடும்? ஸ்வதந்திரமே வளர்ச்சியின் முதலாவது மார்க்கமாம். உனது முன்னோர்கள் ஜீவனுக்கு சகல ஸ்வதந்திரத்தையும் கொடுத்தனர், மதம் வளர்ந்தது. அவர்கள் சரீரத்தை எல்லா பந்தங்க்கட்கும் உட்படுத்தினர், ஜனசமுகம் வளரவில்லை. மேல் நாடுகளின்விஷயம் நேர் எதிரிடையானது; ஜனசமுகத்திற்கு சகல ஸ்வதந்திரமும் உண்டு; மதத்திற்கு ஒன்றுமில்லை. கீழ்நாட்டு ஜனசமுகத்தின் கால்களையும் மேல் நாட்டுமதத்தின் கால்களையும் கட்டியிருந்த கட்டுகள் இப்பொழுது தளர்வடைந்து வருகின்றன.

ஆனால் ஒவ்வொன்றும் அததற்கு உள்ளமாதிரியை உடைத்தாயிருக்கும். மதசம்பந்தமான, அல்லது அகமுகமான மாதிரி இந்தியாவிலும் சாஸ்திரீகமான அல்லது பகிர்முகமான மாதிரி மேல் நாடுகளிலும் இருக்கும். மேல் நாடுகள் ஜனசமுகாபிவிருத்தியின் மூலமாக ஆத்மீகத்துவத்தை யடையவிரும்புகின்றன: கீழ் நாடுகள் ஆத்மஞானத்தினால் ஜனசமுகாதிகாரத்தையடைய

விரும்புகின்றன. இவ்விதமாயிருந்ததினால் தற்காலத்திய சீர்திருத்தக்காரர்கள் சீர்திருத்துவதற்கு முதலில் இந்தியாவின் மதத்தை அடியுடன் அழித்துவிடுதலைத்தவிர வேறுவழி காணவில்லை. அவர்கள் முயற்சித்தனர், அவர்கள் தவறினர். ஏன்? ஏனென்றால் தங்களுடைய சொந்த மதத்தைப் படித்துள்ளவர்கள் மிகவும் சொற்பம். எல்லாமதங்களுடைய தாய்மதத்தை அறிவதற்கு ஆவசியகமாயுள்ள அப்பியாசத்தை ஒருவராவது எப்பொழுதாவது அடைந்து நிறைவேற்றியதுமில்லை. ஹிந்து ஜனசமுகத்தை விருத்தி பண்ணுவதற்கு மதத்தை அழித்தல் அவசியமன்றென்றும் ஜனசமுகத்தினுடைய இந்த நிலைமை மதத்தினால் ஏற்பட்டதன்றென்றும் ஆனால் மதமானது அப்பியசிக்கப் படவேண்டிய மாதிரி அப்பியசிக்கப் படாமையால் தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென்றும் நான் உறுதியாய்க் கூறுகிறேன். நமதுபழைய புத்தகங்களிலிருந்து இதைப்பதம் பதமாக ருசுப்படுத்த நான்தயாராயிருக்கிறேன். இதுதான் நான் உபதேசிப்பது. நமது ஜீவிதகாலம் முழுதும் அநுபவத்திற்கொண்டுவர நாம் பெருமுயற்சி செய்யவேண்டுமென்பதே. ஆனால் கற்றுணர்தற்கு வெகு நாட்கள்செல்லும். பொறுமைவகித்து வேலை செய்யுங்கள். உங்களாலேயே உங்களை ரட்சித்துக் கொள்ளுங்கள்.

உங்கள்

விவேகாநந்தர்.

குறிப்பு:—தற்கால ஹிந்துசமுகம் ஆத்மார்த்த சாதகர்கட்குமாத்திரமாய் அமைக்கப் பட்டுள்ளது; மற்றெல்லோரையும் பயங்கரமாய் நசுக்குகிறது. ஏன்? சொற்ப சந்தோஷத்தோடு கூடிய உலகத்திலும். கொஞ்சம் சுகம் அநுபவிக்கப் பிரியப்படுகிறவர்கள் எங்கேசெல்வர்? நமது மதம் ஒவ்வொருக்கும் இடங்கொடுப்பதுபோல நமது ஜனசமுகமும்எல்லோருக்கும் இடம் கொடுக்கவேண்டும். இதற்கு வேலை செய்யவேடிய மாதிரி எப்படியென்றால், நமது மதத்தின் உண்மையான கொள்கைகளையெல்லாம் முதலாவது அறிந்து கொள்ளுதல் வேண்டும், பின்னர் அவற்றை ஜனசமுகத்திற் செலுத்தவேண்டும், இதுதான் செய்யவேண்டிய வேலை; மெதுவாய் நிறைவேறுவது; ஆனால் நிச்சயமானது.

வி.

## வாலிபம்.

நமது வாழ்க்கையின் ஸந்தோஷமான பருவமும், சரீரவன்மையுடனும் சிறந்த அழகுடனும் பிரகாசிக்கும் பருவமும் ஆகிய இளமைப்பருவம் மிக முக்கியமானது. "வாலிபர்களின் புகழ் அவர்களது பலத்தில் தான் உள்ளது" என்று ஸாலமன் சொல்லியிருக்கிறார். மேல்நாட்டுப் புலவரொருவர் "புத்திமதி சொல்வதற்கு வயதில் முதிர்ந்த கிழவர்களும், அவர்கள் சொல்லும் வேலையை ஊக்கத்துடன் செய்ய வாலிபர்களும் ஒரு தேசத்தின் முற்போக்குக்குக் காரணஸ்தராவார்கள்" என்று உண்மையாகச் சொல்லுகிறார். இங்கிலாந்து தேசத்துச் சிறந்த ராஜதந்திரியாகிய எட்மண்ட் பர்க் (Edmund Burke) என்பவர் "ஒருதேசத்தின் வாலிபர்களின் அபிப்பிராயங்களை என்னிடம் சொல். நான் அத்தேசத்தின் எதிர்கால நிலைமையை வெகு ஸுலபமாய்ச் சொல்லிவிடுவேன்" என்றுகூறுகின்றார். ஆகவே, வாலிபர்களின் தன்மை வெகுசிறந்தது என்பது விளங்குகின்றது.

உலக சரிதத்தில் நற்கீர்த்திபெற்ற யாவரும் வாலிபரேயாவர். "சரித்திரங்கட்கெல்லாம் தகப்பன்" என்று சொல்லப்படும் ஹெரோட்டாஸ் (Herodatus) தாம் எழுதிய க்ரீஸ் தேசசரித்திரத்தைத் தமது 28 வது வயதுக்குள் முடித்தார். வாக்கு வன்மையுடன் பிரசங்கம் செய்வதில் அதிக நிபுணரான டெமஸ்தினீஸ் (Demosthenes) தமது முக்கிய பிரஸங்கங்களையெல்லாம் 17 வது வயது முதற்கொண்டு 25 வயது வரை செய்திருக்கிறார். தேசத்தின் முற்போக்குக்கும் தன் சொந்த க்ஷேமத்துக்கும் ஸாதனமாயுள்ள வாலிப்பருவத்தை ஒவ்வொருவனும் மிகுந்த ஜாக்ரதையுடன் கழித்தல் உத்தமம். வாலிபம் சோதனைகட்கும் கஷ்டங்கட்கும் உள்ளாகக்கூடியது அவைகளை மேற்கொள்ள, கல்வி அவசியம் என்பது நாம் சொல்லவேண்டியது அநாவசியம். கல்வி கற்றற்கு இளமைப் பருவமே சிறந்ததாம். ஸர் வில்லியம் டெம்பில் (Sir. W. Temple) வாலிபர்களுக்கு இவ்விதம் உபதேசம் செய்கிறார்:—சிறிது பேசுவதும், அதிகமாகக் கேட்பதும், ஓர் ஸத்ஸங்கத்தில் ஸம்பாஷணை முடிந்ததும் அதுபற்றிச் சிந்திப்பதும், தன்னைத்தான் புகழாமலிருப்பதும், பிறர் சொல்லும் நல்

வசனங்களைக்கேட்டு அவைகளின்படி நடப்பதும் ஓர் வாலிபன் தொழில்களாம்."

ஒவ்வொரு மனிதனும் தன் பதினேழாவது வயதிலேயே தன் கடமைகளின்னவை யென்றும், யார்யாருக்குத்தான் கடமைப்பட்டுள்ளான் என்றும் அறிதல் அவசியம். முக்கியமாகத் தேச பக்தியுடன், தேச க்ஷேமத்திற்கு அநுகூலமான செய்கைகளை இளமை முதல் கொண்டே செய்துவரவேண்டுமென்னும் அவா அவனுக்குத்தோன்ற வேண்டும். "இளமையிற் கல்;" கற்றலிற் கேட்டலே நன்று; ஸத்ஸஹவாஸமே உத்தமம்; தேச கைங்கர்யம் பரிசுத்த கடமை" என்பனபோன்ற உத்க்ருஷ்டமான மொழிகளின் சாராம்சங்களை அவன் உணரவேண்டும். கிழவனாகும்பொழுது சுகம் அநுபவித்தற்கு வேண்டிய ஸாதனங்களை இளமைப்பருவம் முதல் கொண்டே செய்துவரல் வேண்டும். வாலிபப் பருவம் கடந்து விட்டால் என்னதான் குட்டிக் கரணங்கள் போட்டாலும் அது திரும்பி வாராதென்பது திண்ணம் என்பதை மனத்திலிருத்தி அந்தப்பருவத்தில்செய்யவேண்டியவேலைகளைச்செய்து முடிக்கவேண்டும்.

பின் வரும் விஷயம் வாசிப்பதற்கு இனிதாயிருக்கும்:— ஒரு பால்யன் தன் 10 வது வயதில், தன் தகப்பனாருக்கு அநேக விஷயங்கள் தெரியுமென்று எண்ணுகின்றான்; ஆனால் தன் பதினைந்தாவது வயதிலோ தன் தகப்பனுக்குத் தெரிந்தவளவு தனக்கும் தெரியும் என்று எண்ணுகின்றான்; 20 வது வயதில் தகப்பனைக்காட்டிலும் இரண்டத்தனை தனக்குத் தெரியுமென்றும், 30 வது வயதில் மரியாதைக்காகிலும் தகப்பனாரின் புத்திமதியைக் கேட்கலாமென்றும், 50 வது வயதில் தன் தகப்பனுக்குக் கொஞ்சந்தான் தெரியுமென்றும் எண்ணுகின்றான். தன் தகப்பன் இறந்தபின்னர். தனது 60 வது வயதில் உலகத்தில் தன்னைக்காட்டிலும் மேலானவர்களில்லை யென்று திடமாய் நம்புகின்றான். இது உலக இயல்பு.

வேலூர், ஸ்ரீ M.S ஸ்ரீநிவாசசர்மா, சென்னை, லோகோபகாரிக்கெழுதியது.

## புஸ்தக விமர்ஸனம்.

ஸ்நேகலதா:—இப்பெயர் கொண்டதோர் புஸ்தகம் வரப்பெற்றோம். இது ப்ரஹ்மஸ்ரீ வரகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதியவர்கள் எழுதியது. இவ்வருஷத்தின் ஆரம்பத்தில் வங்காள நாட்டில் வரதட்சிணை கொடுக்கமுடியாது தவிக்கும் பிதாவினுடைய கஷ்டத்தைச் சகிக்கமுடியாமல் தன்னைத்தானே கொலை செய்துகொண்ட ஸ்நேஹலதா தேவியைப்பற்றி இப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகமானது தற்கால நாகரிகச் சீர்திருத்தங்களை யெல்லாம் இகழ்ந்து முற்கால ஆசாராநுஷ்டானங்களின் பெருமையை ஸ்தாபிக்கிறது. ஸ்நேஹலதா என்றபெயர் கொடுக்கப்பட்டிருந்தும், ஸ்நேஹலதாவினுடைய பிறப்பு வளர்ப்பு முதலியவற்றைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. வரதட்சிணையைக் கண்டிக்கும் பொருட்டு ஸ்நேஹலதா என்றபெயர் கொடுக்கப் பட்டிருக்கிறதென்றாலும், சமயோசிதமல்லாத, சந்தர்ப்பங்களுக் கொவ்வாத அநேகவிஷயங்கள் இப்புத்தகத்தில் புகுந்திருக்கின்றன. ஒருவர் தம்முடைய கொள்கைகளை நிலைநிறுத்தற்கு யுக்தி நியாயவாயிலாகவாதிக்கவேண்டுமே யொழிய, வாயில் வந்தவாறெல்லாம் கூறித் தமது கொள்கைகளுக்குமாறாக நடப்பவர்களை வைது திட்டுதல் அன்னோர் அறிவுடையராயிருத்தற்கழகன்று. இப்புத்தகம் முழுதிலும் ஆசிரியருடைய தேசாபிமானமும் முன்னோர்களாகிய ஆர்யசிரேஷ்டர்களின் அநாதிகாலக் கொள்கைகளை ஆதரிக்கும் தன்மையும் நம்மால் மிகவும் மெச்சத்தக்கது.

வரதட்சிணையே முன்நிற்கின்ற இக்காலத்தில் இப்புத்தகம் வரதட்சிணைப் பைத்தியம் பிடித்துத்திரிகின்ற பெற்றோர்களையும் பிள்ளைகளையும், அவர்களுடைய முகங்களில் அறைந்தது போலாகும். இப்புஸ்தகத்தின் விலை அணா ஐந்து. வேண்டியவர்கள் பால சுப்பிரமணியன் கம்பெனி 2/30 ஹைரோட், திருவல்லிக்கேணி என்ற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

* * *

ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்ஸரின் குணவைபவம்:—

இஃது சிவகெங்கை ஸ்ரீராமகிருஷ்ண விவேகாநந்த வேதாந்த சங்கத்தாரால் வெளியிடப்பட்ட புஸ்தகம்; வங்காளமாகாணத்தில்

ப்ரதாப சந்த்ர மஜூம்தாரவர்களால் ஆங்கிலபாஷையிலெழுதப் பட்டதோர் புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பு. பிரதி ஒன்றுக்கு விலை 9 பைசா. 50-பிரதிகளின் விலை-ரூபா இரண்டு.

என்குருநாதன்:— இப்புஸ்தகமும் மேற்படி சங்கத்தாராலேயே வெளியிடப்பட்டது. இது ஸ்ரீமத் விவேகாநந்தஸ்வாமிகள் அமெரிக்காவில் ஆங்கில பாஷையில் செய்த ஒரு பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு. இதன் விலை அணா 3. 50-பிரதிகள்—விலை ரூபா 7—8—0

இவ்விரண்டு புஸ்தகங்களும் நமது தமிழ் நாட்டுச் சகோதரர்களுக்கு இன்றியமையாததென்று நாம் அபிப்பிராயப்படுகின்றோம். ஆதிகாலத்தில் நமது பாரதநாடு ஒளி குன்றி மறைந்து விடுமோ என்று பயந்திருந்த பொழுதெல்லாம், அவதார புருஷர்கள் தோன்றி நமது நாட்டைக் காத்துரட்சித்தார்கள். அது போலவே சமீபகாலத்திலும் மேல் நாட்டு நாகரிகமானது இந்தியாவில் பரவி, ஈஸ்வரபக்தி, பெரியோர வணக்கம் பதிவிரதாதர்மம், ஆசாரங்கள், அநுஷ்டானங்கள் முதலியவற்றை அடியோடழித்து ஆத்மஞானதீரர்களாகிய ஆர்யர்களின் சந்ததியாரை ஜடத்துவத்தில் அமிழ்த்தி ஆர்ய நாட்டை அழிக்கத் தலைப்பட்டபொழுது வங்காள நாட்டில் அவதாரபுருஷராய், ஞானசமுத்திரமாய், பிரஹ்ம ஸ்வரூபியாய்த்தோன்றிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தமது ஜீவித காலத்திலும் இப்பூமியைப் புநிதம்பண்ணித் தமக்கேற்ற மாணவராக ஸ்ரீவிவேகாநந்த ஸ்வாமிகளைத் தெரிந்தெடுத்துத் தமது ஞானதனத்தை அவரிடத்தில் ஒப்புவித்துவிட்டுக்கைவல்ய பதவியடைந்தார். ஸ்ரீவிவேகாந்த ஸ்வாமிகளும் உலகமெங்கும் சென்று தமது குருவினுடைய மகிமையையும் வேதாந்த மதத்தின் பெருமையையும் பறையடித்தார். அதனால் கீழ்நாட்டினர் மாத்திரம் அன்று; மேல்நாட்டினரும் விழித்துக்கொண்டனர். இத்தகைய மகான்களின் சரித்திரங்களை நாம் படித்தறிந்து அம்மகான்களின் கொள்கைகளைப் பின்பற்றக் கடமைப் பட்டிருக்கிறோம். ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் குணவைபவம் என்னும் புஸ்தகம் மிகவும் சகாயவிலையில் கொடுக்கப்படுகிறதினால், தேசாபிமானிகளாயும் குருபக்தியில் சிறந்தோர்களாயுமுள்ளவர்கள் 50-பிரதிகளாவது மொத்தமாக வாங்கி ஏழைப்பிள்ளைகளுக்கு இனாமாகக் கொடுப்பார்களென்று நம்புகிறோம். "என் குருநாதன்" என்னும்



புஸ்தகமும் 3 அணா தான் விலைவைக்கப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகமானது பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் உபயோகமாயிருக்குமாதலால், தர்மசித்தமுடைய தனவான்கள் மொத்தமாக நூறு, ஐம்பது என்று வாங்கி எல்லோருக்கும் இனாமாக அளித்து வித்தியாதானம் செய்யலாம்.

இவ்விரண்டு புஸ்தகங்களும் வேண்டியவர்கள், கார்யதர்சி, ராமகிருஷ்ண விவேகாநந்த வேதாந்த சங்கம், சிவகெங்கை என்று எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

## சமாச்சாரக் குறிப்புகள்.

யுத்தம் பயங்கரமாக நடந்து வருகின்றது. ஜெர்மனியர்களுக்குத் தோல்விக்குமேல் தோல்வியென்றும் லட்சக்கணக்கான ஜனங்கள் ரணகளத்தில் விழுந்து விட்டார்களென்றும் நமக்குத்தந்திகள் வந்து கொண்டிருந்தபோதிலும், ஜெர்மனியர்கள் இன்னும் பெல்ஜியத்தைவிட்டு அகன்றபாடில்லை. மறுபடியும், மறுபடியும் "கலேய்;" "கலேய்;" என்று பைத்தியம்பிடித்து முன்விழுகின்றனர் ஜெர்மனியர். பிரான்சிலும் சிறிதுபாகத்தில் இன்னும் ஜெர்மனியர் இருக்கின்றனர். இன்னும் எவ்வளவுகாலம் இந்த யுத்தம் நடக்குமோ? தெரியவில்லை. ஜெர்மனியர்களின் ஆங்காரமும் ஆண்மையும் அடங்கும் பொழுதுதான், இந்தயுத்தமும் அடங்குமென்று நினைக்கிறோம்.

* * *

கடைசியாக "எம்டன்" பிடிபட்டுவிட்டது. இனிமேல் சென்னை ஜனங்கள் சுகமாக நித்திரை செய்வார்கள். செப்டம்பர்மீ 22-ந்தேதியன்று "எம்டன்" சென்னையைத்தாக்கிய பொழுது போட்டகுண்டுகள் சொற்பமேயாயினும், சென்னைமாநகரம்பட்ட அலங்கோலம் அளவிடற்கரிது. "எம்டன்" பிடிபட்டதென்றவுடன் பம்பாயிலுள்ள வியாபாரிகள் மிட்டாய் வழங்கினார்கள். இந்தியாவும் இங்கிலாந்தும் சந்தோஷம் கொண்டாடின. இத்தலிபோன்ற அந்நிய ராஜ்ஜியங்களும் இங்கிலாந்தின் கடற்படையின் வல்லமையைக்குறித்து ஸ்தோத்திரம் செய்தன. "எம்டன்" கப்பலின் தலைவரும் ஜெர்மன் சக்கரவர்த்தியின் ஒன்றுவிட்ட ஸகோதரரும்

காயப்படாமல் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். "எம்டன்" கப்பலின் தலைவரும் அவருடைய உத்தியோகஸ்தர்களும் எல்லாவித யுத்தகௌரவங்களுடனும் நடத்தப்படுகிறார்கள்; அவர்களிடத்தினின்றும் அவர்களுடைய வாள்கள் நீக்கப்படவில்லை. எதிரியினுடைய வீரச்செய்கைகளையும் பார்த்து மெச்சும் இக்குணம்தான் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு ஆணிவேர் போன்றது.

* * *

இந்த யுத்தத்தில் ஜெர்மனியின் தூண்டுதலினால் துருக்கியும் நேச அரசுகளுக்கு விரோதமாகப் போருக்கு ஆரம்பித்து விட்டது. சரீரங்களில் ரத்தக்கொதிப்புள்ள வாலிபக் கட்சியாருடைய செல்வாக்கு துருக்கியில் மிகுந்திருக்கிறது. நெடுநாட்களாக ஸ்நேகமாக இருந்து வந்த துருக்கியும் இங்கிலாந்தும் இப்பொழுது ஒன்றுடனொன்று போர்புரியும்படியாக நேர்ந்ததைப்பற்றி நாம் விசனிக்கிறோம். கூடிய சீக்கிரத்தில் இவ்விரண்டு தேசங்களுக்கும் ஒற்றுமையை ஏற்படுத்துமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

# ஞானபாநு

OFFICE OF THE REGISTRAR
7 - JAN 1915
MADRAS

VOL- 2. தொகுதி -2. | November 1914. மார்கழிமீ | No. 9. பகுதி - 9.

## உனது ஆத்மப் பிரயத்தனம்.

சகோதரா! நீ ஏன் தலை குனிந்து நிற்கின்றாய்? இவ்வுலகை ஏறிட்டுப் பார். ஈஸ்வர சிருஷ்டியின் விந்தையைப் பார். உன்னை ஒத்ததாகவாவது உன்னிலும் உயர்ந்ததாகவாவது ஏதேனும் ஒரு பொருள் இருக்கின்றதா? பிரஹ்ம சிருஷ்டிக்கு மறு சிருஷ்டியும் செய்ய வல்லவன் அல்லவா நீ? உன்னால் முடியாத காரியம் யாது உள்ளது? சர்வ சக்தி வாய்ந்திருக்கும் நீ ஏன் தலை குனிந்து மயங்கி யிருக்க வேண்டும்? சுற்றிலும் பார். ஆகாயம், வாயு, தேயு, ஜலம், பூமி என்ற பஞ்ச பூதங்களையும் இஷ்டப்படி யெல்லாம் கையாளுபவன் மனிதனல்லவா? மேலும் கீழும் உன்னைச் சுற்றி நாலா பக்கங்களிலும் மனிதன் செய்துகொண்டு வரும் விந்தைகளைப் பார். ஏ! ஆர்ய புத்ரா! ஸிந்து, கங்கை, பிரமபுத்திரா, கோதாவரி, காவேரி முதலிய பரிசுத்த நதிகளால் சூழப் பெற்று வீரர்கள் இளைப்பாறுதற்கும் வித்துவான்கள் தவம் செய்வதற்குமுரிய ஏராளமான தடாகங்களையும் ஆரண்யங்களையும் கொண்டு விருட்சாதி பசுக்களும் வேத கீதங்களையே நாதம் செய்து வருகின்றனவோ வென்று தோன்றும்படியாக எங்குப் பார்த்தாலும் வேத வேதாந்த வாசனை விளங்கப் பெற்று வைதிகர்களுக்குப் புண்ணிய பூமியாகியும் லௌகிகர்களுக்குப் பொன்னாடாகியும் பொலிவுற்று விளங்கும் பாரத வர்ஷத்தை உனக்கு ஜென்ம பூமியாகக் கொண்டும், நீ துக்கமடையக் காரணம் யாது? கவலையடையக் காரணம் யாது? உலகில் பழைமையானது உனது நாகரிகம். பாஷைகளிற் பழமையும் தலைமையும் வாய்ந்தது உனது ஸம்ஸ்கிருதபாஷை. உனது முன்னோர்களே உலகத்தாருக்கு உபதேசம் செய்து உய்யும் நெறி போதித்து வந்தவர்கள். இப்பொழுது நீ உனது முன்னோர்களின் அடிச் சுவடுகளில் நடவாது, வழியில் மாயையினால் ஆக்கப் பெற்ற ஏதோ ஒரு சாயையைக் கண்டு மயங்கி விட்டாய்; பிரமித்து விட்டாய். நீ கொண்டிருக்கும் பிராந்தியே உனது தலை

யிறக்கத்திற்குக் காரணம். ஆரியர்களின் வழி செல்லாது நீ ஆற்றலற்று அறிவழிந்து நிற்கும் நிலைமையே உனக்கு நேரிடும் துன்பங்களுக்கெல்லாம் காரணம்.

* * * *

இப்பொழுதாவது பார், மற்ற ஜன ஸமூகங்கள் உலகின் முன்னணியில் ஓடுவதைப் பார். நீ மாத்திரம் சுவர்போல, மரம்போல, ஏன் ஸ்தம்பித்திருக்க வேண்டும்? கைகளைப் பிசைந்து கொண்டு நன்றாகக் கண்களைத் திறந்து பார். நீ எந்த ஸ்திதியிலிருந்தவன்? பிறரால் எப்படிப் போற்றப்பட்டு வந்தவன்? இப்பொழுது எப்படியிருக்கிறாய்? பிறர் உன்னை எவ்விதமாகக் கருதியிருக்கின்றனர்? உனது நிஜ ஸ்வரூபத்தை நீ அடியோடு மறந்து விட்டாய். உனது உண்மை நிலையை உனக்கு ஒளிரச் செய்பவர் ஒருவரும் இல்லாது போயினர். ஆகவே, எல்லோருக்கும் மூத்தோனாகி முன்னின்று தலைமை வகித்து வந்த நீ உனது தாமச குணாதிக்கத்தினால் மயக்கம் மிகுந்து இவ்வுலகில் இளங் குழந்தைப் பிராயத்தில் இருக்கும் இதர ஜன ஸமூகங்களைப் பின் பற்றி அவர்களுடன் சேர்ந்து கூத்தாடுகின்றாய். உன்னிடத்தில் இப்பொழுது சுறுசுறுப்பு இல்லை, சோம்பல் மிகுந்து விட்டது. உயிரற்ற நடைப் பிணம்போல உலகில் பிறருடைய ஏமாற்றத்திற் குட்பட்டும் ஏவலின் பிரகாரமும் வியவகாரங்களைச் செய்து வருகின்றாய். உனது ஸ்வய ஞானத்தை மறந்து சுழலுகின்றாய். தன்னம்பிக்கை யென்பதே உன்னிடத்தில் இல்லாமற் போய்விட்டது. சகலமும் தான் என்ற உண்மையானது உன்னிடத்தினின்றும் அகன்று விட்டது. ஆனால் 'நான்' என்ற அகங்காரமானது உனக்கு அந்நியமாயிருந்தும் உன்னைக் கைவசப்படுத்திக் கொண்டது. ஆகவே, தானாயிருக்கும் ஸ்வதந்திரத்தை இழந்து 'நான்' என்ற அந்நியத்தினிடத்தில் அடிமையாய் விட்டாய்.

* * * *

சகோதரா! கண் விழித்துப் பார். உலக முழுதும் இயங்கிக்கொண்டிருக்கிறது. இவ்வியக்கத்தில் நீ மாத்திரம் அசையாமல் ஆடாமல் ஸ்தம்பம்போல இருப்பாயாயின், அல்லது இருக்க முயற்சிப்பாயாயின், அதிவேகத்துடன் சுழன்று கொண்டிருக்கும் அநிர்வசனீயமான மாயாசக்தியானது உன்னைக் கீழே தள்ளி



மிதித்துத் துவைத்து விடும். ஜாக்கிரதை! எழுந்திரு. கர்ம யோகம் செய்வதற்குக் கச்சை கட்டிக்கொள். மனம், வாக்கு, காயம் ஆகிய இம் மூன்றையும் ஒற்றுமைப் படுத்திக் கொள். ஐரோப்பிய ஜன சமூகங்கள் கால சக்தியை வியர்த்தமாக்காது கர்ம சக்தி யாக்கியதினாலல்லவோ கௌரவப்பட்டு விட்டன? ஒரு விநாடி நேரமேனும் வீண் பொழுதுபோக்காதே. பலருக்கும் உபகாரமாயிருக்கும் கார்யங்களில் பகலும் இரவும் பாடுபடு. 'நான்' என்ற அகங்காரத்தையும் அதனாலுண்டாகும் சுய நயக் கருத்தையும் உதறிவிடு. 'நான்' என்ற எண்ணமானது உன்னிடத்தினின்றும் நீங்கி விட்டால், உன்னிடத்தில் மிஞ்சியிருப்பவன் ஈஸ்வரனே; அப்பொழுது நீ செய்யும் காரியங்களெல்லாம் ஈஸ்வரனால் ஏவப்பட்டவை, ஈஸ்வரனாலேயே செய்யப்பட்டவை. ஏதேனும் ஒரு முயற்சியில் தலையிடுவதற்கு முன், அம்முயற்சி அவசியம் செய்யப்பட வேண்டியதுதானா? என்று தீர ஆர ஆலோசித்து அதனால் விளையும் நன்மை, தீமைகளையும் சீர்தூக்கிப் பார்த்து ஆழ்ந்து ஆலோசனை செய்துகொள். ஒரு கார்யத்தில் தலையிட்டுக் கொண்ட பின்னர், அக்கார்யத்தால் எத்தகைய துன்பங்கள் வந்து நேரிடினும் அவை எல்லாவற்றையும் எதிர்த்துப் போராடுவதற்குத் தயாராக நின்றுகொள். ஒரு தொழில் செய்து வருங்காலையில், ஹிமோத்கிரி பர்வதமே உனக்கு எதிரில் இடையூறாக வந்து நின்றாலும் அதை ஒரு பொருட்டாக எண்ண வேண்டாம். அத்தொழிலினிடத்தில் உனது மனத்தை ஏகாக்கிரத்துடன் செலுத்தி வேறு சிந்தையற்றுச் செய்கைபற்று உனது தொழிலையே தியானம் செய்து கொண்டு வந்தால் ஒரு முகப்படுத்தப்பட்ட, மகா மகிமையுள்ள மனோ சக்தியானது ஹிமோத்கிரி பர்வதம் போன்ற பதினாயிரம் பர்வதங்களையும் ஒரே விநாடியில் உடைத்துத் தூளாக்கி ஊதி யெறிந்து விடும். சுகமும் துக்கமும் காலதேச நிலைமைகளின் பேதா பேதங்களுக்குத் தக்கவாறு மாறுபட்டு நிற்கும் ஒரே தன்மையாம்என்று நன்றாக அறிந்துகொள். சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பார்த்து, உனது தொழிலிலேயே கண்ணும் கருத்துமாயிரு. நீ கலப்பையெடுத்து உழுதாலும் கடையிலுட்கார்ந்து வியாபாரம் செய்தாலும், கத்தி கேடயந் தாங்கிப் போர் செய்தாலும், கம்பீரமாக வேத வேதாந்த நீதிகளை ஓதிக்கொண்டிருந்தாலும், சிறப்புடன் சிம்மாஸன மேறி நீதி முறையினின்றும் வழுவாது நியாயம்

செலுத்திக் கொண்டிருந்தாலும், எத்தொழில் செய்துகொண்டிருந்தாலும் உழுதலையும், வியாபாரம் செய்தலையும், போர் செய்தலையும், வேதம் ஓதலையும், நியாயம் செலுத்துதலையும் எல்லாத் தொழில்களையும் அவ்வப்பொழுது ஈஶ்வர கைங்கர்யமாகவே பாவித்து அதே தியானமாக நின்று அதனிடத்திலேயே மனத்தைச் செலுத்து. உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் அத்தொழிலே உனது கவனத்திலிருக்கட்டும்.

*    *    *    *

கர்மமே கண்ணாயினவர்களுக்கு, கார்யமே லட்சியமாகக் கொண்டவர்களுக்கு, சுத்த புத்தியுடன் உறுதியும் வாய்ந்து ஒரு முயற்சியில் பிரவேசித்திருக்கும் உத்தமர்களுக்குச் சுகம் ஏது? துக்கமேது? சுகதுக்க விபவகாரங்களைப் பற்றி நினைப்பதற்குத்தான் சமயமேது? ஆகாராதிகளிலாவது ஆடையாபரணங்களிலாவது ஆசையை வையாதே. காய் கிழங்குகளைப் புசிக்கும்படி நேரிடினும் அறுசுவை யுண்டிகளுடன் கூடிய பாயஸாதி போஜனம் கிடைக்கினும் ஒன்றாகவே பாவித்துக்கொள். சாண் வயிற்றுக்குச்சம்பிரமமான ஊண் தேடுவதையே முக்கியத்தொழிலாகக் கொண்டு ஜகப் புரட்டுக்கள் செய்து சங்கடப் படாதே. கந்தையுடுத்துத் திரிந்தாலென்ன? கனக பூஷணங்கள் அணிந்துகொண்டாலென்ன? இவற்றினிடத்தி லெல்லாம் உனது மனத்தைச் செலுத்தாதே. சுகத்தையோ துக்கத்தையோ நீ அனுபவிப்பதற்கு இது சமயமன்று. உலகிலுள்ள மற்ற மனிதர்களைப் போல ஆத்மப் பிரயத்தனம் செய்வதற்குத்தான் இது சமயம்.

*    *    *    *

பொன்னானது மண்ணின் மறு ரூபமே யென்று நன்றாக உணர்ந்துகொள். எல்லோரிடத்தும் நன்மாதிரியுடன் நடந்துகொள்ளுதலே புருஷனுக்குச் சிறந்த ஆபரணமாகும். நீ வீரனாக நின்று எல்லோரையும் ஆண்டு கொண்டிருக்கும் பொழுது, நீ அணிய வேண்டிய பூஷணமாவது மிருது பாஷையேயாகும். நீ தத்துவஞான விஷயங்களைப் பற்றி ஆழ்ந்து அதே ஜீவிதமாக அமைந்து கொண்டிருக்கும் பொழுது, நிஷ்களங்க ஹிருதயமே உன்னில் பிரகாசிக்கத் தக்கது. நீ சர்வசங்க பரித்தியாகம் செய்து சந்நியாசியாகி விட்டால், கோப மின்மையாகிய குணத்தை நீ கைக்கொள்ள வேண்டும். நீ லட்சாதிப் பிரபுவாகி



விட்டால், தயாள சிந்தையுடன் தர்மம் செய்தலே நீ செய்யத் தக்கது. பலவானுக்கு ஆபரணமா யுள்ளது அவனிடத்துள்ள இரக்கச் சித்தமாகும். ஆதலால் உனக்கு ஆபரணாதிகளில் பிரியம் உண்டானால், மேற்சொன்ன ஆபரணாதிகளை யடைந்து அணிந்து கொள்.

*    *    *    *

ஸ்திரமற்ற வஸ்துக்களிலும் விஷயங்களிலும் சிந்தையைத் தியங்க விடாதே. மேனாட்டார் சொல்வதெல்லாம் வேத வாக்கியம் ஆகாது. நம்பு, ஈஶ்வர சக்தியினிடத்தில் நம்பிக்கை வை; உன் முன்னோர்களுடைய அகன்ற அறிவிலும் ஆழ்ந்த புத்தியிலும் நம்பிக்கைவை. உனது தேசத்தின் முற்கால மகிமைகளினால் அது பிற்காலத்தில் அடைய விருக்கும் பெருமையினிடத்தில் நம்பிக்கை வை. உனது தேசத்தின் ஆதிகாலத்துச் சரித்திரங்களாகிய கண்ணாடியின் நேரே நின்றுபார். உனது குலப் பெருமையும தேசப் பெருமையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல விளங்கும்.

## பாரத புத்திரர்களின் பராக்கிரமம்.

இப்பொழுது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் நமது சகோதரர்களாகிய பாரத புத்திரர்கள் எல்லோரும் ஆச்சரியப் படும்படியாகப் பல விதங்களிலும் பராக்கிரமத்தைக் காட்டி வருகிறார்களென்று நாம் கேள்விப்படுகிறோம். நமது சகோதரர்களுடைய சௌர்யங்கள் நம்மால் பெருமைப் படத்தக்கனவாயினும், நம்மால் கெர்விக்கத் தக்கனவாயினும் நம்மிடத்தில் அந்நியர்கள் மதிப்பைச் செலுத்துவதற்குக் காரணபூதமாயிருப்பனவாயினும், நமக்கு விசேஷ ஆச்சர்யத்தைக் கொடுக்கவில்லை. நாகரிகம் மிகுந்து யுத்தத் திறமையில் தேர்ந்த மேனாட்டு வீரர்களுடன் சமமாய் நின்று யுத்தம் செய்வதற்கு இந்தியர்கள் தகுந்தவர்களா என்று அந்நியர்கள் இதுவரை சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார்களாதலால், இப்பொழுது இந்தியர்கள் காட்டும் அசகாய சூரத்தனங்கள் அவர்களுக்கு ஆச்சர்யமா யிருக்கின்றன. நமது முன்னோர்களின் பராக்கிரமத்தைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கின்றோமாதலாலும் நமது சகோதரர்களின் சரீரங்களில் நமது முன்னோர்களின் பரிசுத்த ரத்தம் வீராவேசத்துடன் இன்னும்

ஆறுது அடங்காது ஓடிக்கொண்டிருக்கின்றதென்று நாம் நன்றாக அறிவோமாதலாலும், நமக்கு நமது சகோதரர்கள் ஐரோப்பாவில் காட்டும் சௌர்யங்கள் சர்வசாதாரணமான காரியங்களாகத் தோன்றுகின்றன. நமது புண்ணிய பூமியின் புராதன சரித்திரங்களையெடுத்துப் பார்ப்போமாயின், நமது முன்னோர்களைப்போலப் பராக்கிரமசாலிகள் வேறு எந்தத் தேசத்திலாவது எப்பொழுதாவது இருந்திருப்பார்களா? என்று நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

மகா ராஷ்டிரச் சக்கராதிபத்தியத்தின் ஸ்தாபகராகிய ஸிவாஜி மகாராஜா அவர்களுடைய சரித்திரப் பிரதாபங்களைப் பற்றிக் கேள்வியுறாதார் இந்தியர்களுக்குள் எவரும் இரார். அவரிடத்தில் அவருந்த அத்தியந்த நண்பராயும் ஒரு படைத் தலைவராயும் வீரரத்ன பாஜி ப்ரபு தேஷ் பாண்டே(தேசபந்து) என்னும் வீராதிவீரர் ஒருவர் இருந்தார். அவர் தமது அரசருடைய ஆக்ஞையை நிறைவேற்றும் பொருட்டும் தாம் கைக்கொண்டிருந்த தேச ஸேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டும் செய்த அசாதாரணமான பராக்கிரமச் செய்கையானது படிப்பவர் மனத்தைக் கரைத்துவிடுகின்றது; இந்தப் பூமியில் இவரைப் போன்ற அநேகர் தமது ரத்தத்தைச் சிந்தி தம்மைத் தாய் நாட்டின் பொருட்டுப் பலி கொடுத்ததினாலல்லவோ, இன்னும் நாம் ஆண் மக்கள் என்று அவனியில் வெளிப்படுகின்றோம்?

தட்சிண தேசத்திலே உச்சிவேளையில் வெயில் உக்கிரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. பன்னிரண்டு சூரியர்களும் ஏககாலத்தில் உதித்தாற் போலப் பகலவன் தனது எண்ணற்ற கிரணங்களை வீசி எதிர்ப்பட்ட எல்லாவற்றையும் எரித்துக்கொண்டிருந்தான். பயிர், பச்சைகளெல்லாம் வாடி வதங்கிக் கிடந்தன. பசு பட்சியாதிகளெல்லாம் நிழலாயிருக்கும் இடங்களில் சோர்ந்து விழுந்து கிடந்தன. தேசம் முழுதும் தண்ணீர், தண்ணீர் என்று தவித்துக் கொண்டிருந்தது. ஸம்ஹார மூர்த்தியாகிய மகா ருத்ரனே ஆதித்த ரூபமாக அவதரித்து விட்டார்போலத் தோன்றியது. இச்சமயத்தில் ஆயிரக் கணக்கான மொகலாயப் படைகள் வில், வேல், வாள், கேடயம் முதலியன ஏந்தி, தோட்களில் துப்பாக்கிகளும் தாங்கி அக்காலத்து முரட்டுப் பீரங்கிகளையும் இழுத்துக்கொண்டு முன்னும் பின்னும் பக்கங்களிலு



மாகப் பாய்ந்து மதமும் மாச்சர்யமும் மிகுந்து அதி வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. மொகலாயக் குதிரை வீரர்கள் தங்களுடைய குதிரைகளை நாலாபக்கங்களிலும் திருப்பி எதிர்ப்பட்டதையெல்லாம் ஹதம் செய்து எதிரி எங்கே எங்கே யென்று தேடியோடி வந்தார்கள். கடைசியாக மொகலாயர்கள் "யுத்தம் முடிந்தது; புலி தனது குகைக்குள் துரத்தப்பட்டு விட்டது. எண்ணற்ற எதிரிகள் இறந்தொழிந்தார்கள்" என்று ஜெய கோஷம் செய்தார்கள். கிடைத்த ஜெயத்தினால் மேலும் தூண்டப்பட்டவர்களாகி அவர்கள் உற்சாகம் மிகுந்து, தாங்கள் பட்ட காயங்களைப் பாராட்டாமல், எல்லாவற்றையும் எரித்துக் கொண்டிருக்கின்ற சூர்ய வெப்பத்தையும் லட்சியம் செய்யாமல், யுத்தத்தின் பயங்கரமான கொடுமைகளைச் சிறிதும் கவனியாமல் எதிரிகளைப் பின் தொடர்ந்து மேன் மேலும் சென்றுகொண்டே யிருந்தார்கள்.

எதிரிகளாகிய மகா ராஷ்டிரர்களோ ஆயிரக் கணக்கான மொகலாயர்களுக்கு முன் நிற்க இணங்காது பின் சென்றுகொண்டே தங்களுடைய தேசத்தின் பொருட்டும் ஜன சமூகத்தின் பொருட்டும் நாங்கள் உழைத்தது வீணாயிற்றோ? என்று ஏங்கித் தங்களுடைய இருப்பிடங்களாகிய மலைகளிலும் மரணமும் வெப்பமும் கைகோத்து நடனம் செய்வதைக் கண்டு இனிமேல் இவண் நிற்கலாகாது எனத் தீர்மானித்துத் தங்களுடைய பிரதான நகரமாகிய ராயகிரியை நோக்கிப் பின் நடந்தார்கள்.

சூர்யன் அஸ்தமனமாயிற்று; உலகெங்கும் காரிருள் சூழ்ந்துகொண்டது. மகா ராஷ்டிர வீரர்கள் மலைகளில் ஒளிந்துகொண்டார்கள். மொகலாயர்கள் மலைகளைக் கடந்து மகா ராஷ்டிரர்களைத் துரத்துவதற்கு அவ்விருட்டில் துணியவில்லை. உதய காலம் சமீபித்தது; கிழக்கு வெளுக்கும் சமயம்; சக்கரேஸ்வரராகிய ஸிவாஜி மகாராஜா அவர்கள் பிரமாண்டமானதோர் மலையின் மீதேறி கண்ணுக் கெட்டிய தேசங்களை யெல்லாம் ஒரு கைக்குள் பிடித்து அடக்க எண்ணினவர் போலச் சுற்றிலும் பார்த்தார்; வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் மொகலாயப் படைகள் சமுத்திரம் போலக் கோஷித்துத் திரண்டு வருகின்றன; எண்ணற்ற வாளாயுதங்கள் எங்கு பார்த்தாலும் மின் வெட்டுப் போலப் பிரகாசிக்கின்றன; நூற்றுக் கணக்கான பீரங்

கிகள் பேரிடிபோல முழங்குகின்றன; ஆயிரக்கணக்கான குதிரைகள் அந்தர மார்க்கத்தில் பறந்து வருவன போலத் தோன்றியன. ஸிவாஜி மகாராஜா அவர்கள் தமது படைகளை இன்னும் பின்னுக்குச் செல்லும்படி ஆக்ஞாபித்தார்; இவருடைய பின் பக்கப்படைகள் மாத்திரம் எதிரிகளுடன் எதிர்த்துக்கொண்டே பின் சென்றன. எங்கே யுத்தம் பயங்கரமாக நடந்ததோ, அங்கே யெல்லாம் பாஜி ப்ரபு தேஷ்பாண்டே என்னும் மகா வீரர் பிரசண்ட மாருதங்களுக் கெல்லாம் அசையாத மகா மேரு பர்வதம்போலக் காணப்பட்டார்.

கடைசியாக ராயகிரிக்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள மிகவும் நெருக்கமானதோர் சின்னஞ் சிறு கணவாயருகில் மகாராஷ்டிரப் படைகள் போய்ச் சேர்ந்தன. இவ்விடத்தில் இரண்டு மலைகளுக்கு இடையில் ஒரு சிறிய வழிதானுண்டு. இரு பக்கத்திலுமுள்ள மலைகளோ மிகவும் செங்குத்தானவை; ஒருவராலும் ஏறுவதற்கு முடியாதவை. இவ்விடத்திலே ஸிவாஜி மகாராஜா தமது கம்பீரமும் பயங்கரமும்பொருந்திய பார்வையால் மொகலாயப் படைகள் வரும் வேகத்தையும் தூரத்தையும் கவனித்தார்; பின்னர் இருபக்கத்திலுமுள்ள மலைகளை ஏறிட்டுப் பார்த்தார்; பின்னர் அச்சிறு கணவாயைப் பார்த்தார்; உடனே தமது பக்கத்தில் குதிரை மீது நிற்கும் அதி பராக்கிரமசாலியாகிய மால்ஷூர் என்னும் வாலிபரைப் பார்த்தார். பார்த்தது தான் தாமதம்; மால்ஷூர், ஸிவாஜி மகாராஜா அவர்களின் பக்கத்தில் வந்து நின்றார். "வாள்கள் புன்னகை புரிய, பீரங்கிகள் மிருதங்கம் வாசிக்க, மரணமானது பாட, மகாருத்ரன் தாண்டவமாட, இவ்வாறெல்லாம் பின் பக்கத்தில் நடந்து கொண்டிருக்கும் காட்சியை அநுபவிக்க நமக்கு கொடுத்து வைக்கவில்லையே" என்று விசனம் மிகுந்திருக்கும் மால்ஷூர் தம்மை மகாராஜா பின் பக்கத்துக்குத் தான் செல்லும்படி ஆக்ஞாபிக்கப் போகின்றார் என்று வெகு சந்தோஷத்துடன் மகாராஜா அவர்களின் பக்கத்தில் வந்து நின்றார். ஸிவாஜி மகாராஜா மால்ஷூரை (சூர்யாஜி மால்ஷூர் என்பது இவருடைய முழுப் பெயர்)ப் பார்த்து "இங்கிருந்து பின் பக்கத்திற்குச் சென்று ப்ரபுவை யழைத்துவா" என்று ஆக்ஞாபித்தார். சூர்யாஜியினுடைய குதிரையானது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பாஜி ப்ரபு அண்டையில் வந்து சேர்ந்தது. இதற்குள்ளாக, பின் பக்கப்



படையானது வெகு வேகமாக மலைபடி வாரத்தில் வந்து சேர்ந்தது. மால்ஷூர் படைத் தலைவராகிய பாஜி ப்ரபுவைப் பார்த்து "மகாராஜா தங்களை அழைத்து வர ஆக்ஞாபித்தார்" என்று சொன்னவுடனே, பாஜி ப்ரபு மறு வார்த்தை பேசாமல் விரைவாக மலையின் மீதேறி மகாராஜா அவர்களின் எதிரில் நின்றார். அப்பொழுது ஸிவாஜி மகாராஜா அவரை நோக்கி "ப்ரபு, எத்தனையோ யுத்தங்களில் எனக்கும் எதிரிக்கும் இடையில் விழுந்து நீ எனக்கு உதவி யிருக்கிறாய். இன்றைக்கு நீ ஒரு கார்யம் செய்யவேண்டி யிருக்கின்றது. என்னுடைய இந்த ஒரு ஜீவனைக் காப்பாற்றுவதற்காக வன்று, இது பெரிது மன்று. ஒரு ஜன சமூகத்தினுடைய கதியே உன்னுடைய ரட்சையைப் பொறுத்ததா யிருக்கிறது. இதோ, இந்தச் சிறு இடைவழியை நன்றாகப் பார். ஒரு பெரிய ஸிம்ஹத்தினுடைய தொண்டையைப் போல பயங்கரமாயும் ஆகாரம், ஆகாரம் என்று அலறிக்கொண்டிருப்பது போலவும் காணப்படுகிறது. ஏற்றமோ லகுவில் முடியாத கார்யம்; முட்செடிகளும் புதர்களும் நிறைந்திருக்கின்றன. இரண்டு மலைகளும் செங்குத்தா யிருக்கின்றன. இவ்விடை வழியில் ஸிம்ஹத்தினுடையது போன்ற பராக்கிரமத்தை வகித்த சில வீரர்கள் ஒரு பெரிய சைந்யத்தைத் தடுத்து நிறுத்தலாம். நான் ராயகிரிக்குச் சென்று இரண்டு மணி நேரத்திற்குள் துணைப் படைகளுடன் திரும்பி வருகின்றேன். இந்த கணவாய்க்குள் எதிரிகள் நுழையாதபடி காத்துக் கொள்வதற்கு உனக்கு எத்தனை படை வீரர்கள் தேவை? இப்பொழுது நம்முடைய பலம் இவ்வள வென்று உனக்கே தெரியும்" என்றார். பதில் கூறுவதற்கு பாஜி ப்ரபு சற்று யோசித்தார். அப்பொழுது மகாராஜா அவர்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த தானாஜி மால்ஷூர் என்னும் வீரர் ஸிவாஜி மகாராஜாவைப் பாத்து "இதற்கு பாஜி ப்ரபுவை ஏன் கூப்பிட வேண்டும்? எனக்கு ஐந்நூறு மனிதர்களைக் கொடுத்தால் போதும். தாங்கள் திரும்பிவரும்வரையில் நான் இந்தக்கணவாயைக்காத்துக் கொள்கிறேன்" என்றார். ஆயினும் ஸிவாஜி பாஜி ப்ரபுவின் முகத்தையே அமைதியோடு பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட தானாஜி மால்ஷூர் கோபம் மிகுந்து புருவங்களை நெரித்துக் கொண்டு "இவ்விஷயத்தில் வீரர்களாயுள்ளவர்கள் யோசிப்பதற்கு ஒன்றுமில்லையே; சுத்த வீரனுக்குப் படை வீரர்கள்

எதற்கு? தனிமையாகவே நின்று ராஜஸ்தானம், ஆக்ரா, காபூல் இந்த இடங்களை யெல்லாம் எதிர்த்து அடிக்க வல்லவனல்லவோ வீரன்!' என்று கூற, பாஜி ப்ரபு" வ, தானாஜி மால்ஷூர்! ஒரு மனிதனுடைய ஆண்மையானது எலும்பு, நரம்பு, மாம்ஸம் முதலியவற்றால் கட்டப்பட்ட இந்தக் கூட்டில் இல்லை; ஒரு மனிதனுடைய ஆண்மையானது சதா சலித்துக் கொண்டிருக்கும் மனத்தினிடத்திலும் இல்லை; நம் ஒவ்வொருவருக்குள்ளும் அந்தர்யாமியாய் இருக்கும் பரமாத்மாவே பௌருஷத்தை (ஆண்மையை) லட்சணமாக உடையவர், ஆகலால் தான் அவர் புருஷோத்தமன் எனப்படுகின்றார். பாஜி என்றாலும் மால்ஷூர் என்றாலும் வீணான பெயர் மாத்திரம் தான் வேறு; இருவருக்குள்ளும் இருப்பது ஒன்றே. மகா மாயியாகிய பவானி தேவியின் கிருபை யுண்டானால் ஜெயம் பெறுவதற்குச் சந்தேகமே யில்லை; வாட் படை வீரர்களாக ஐம்பது பேர் என்னுடன் இருந்தால் இந்த கணவாயை எதிரிகள் எறிட்டுக்கூடப் பார்க்க முடியாதபடி செய்வதற்கு பவானி தேவி என்னை அனுக்கிரகிப்பாள்" என்றார்.

(வரும்)

சிவம்.

ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

ஐக்கிய நாடுகள்,
அமெரிக்கா.
27—9—1894.

அரிய,

* * கல்கத்தாவில் பிரசுரிக்கப்பட்ட எனது பிரசங்கங்களும் வாக்கியங்களும் அடங்கிய புஸ்தகங்களில் ஒரு விஷயம் நான் பார்க்கிறேன். அவற்றில் சில ராஜரீக விஷயங்களைப் பற்றியுள்ள அபிப்பிராயங்கள் என்று தோன்றும்படியான மாதிரியில் வெளியிடப்பட்டிருக்கின்றன; ஆனால் நான் ராஜாங்க வியவகாரஸ்தனன்று, ராஜாங்கக் கலக்கக் காரனுமன்று. நான் சைதந்நியத்தை மாத்திரம் தான் கவனிக்கிறேன்—அது சரியாகும் பொழுது ஒவ்வொன்றும் தானாகவே சரிப்படுத்தப்பட்டு விடும் ................ஆகையால் எனது வியாஸங்களிலாவது விஷயங்களிலாவது எதற்கும் எப்பொழுதும் ராஜாங்க வியவகாரக் குறி



பொய்யாக இடப்படக் கூடாது என்று நீ கல்கத்தா ஜனங்களை எச்சரிக்கை செய்யவேண்டும். என்ன மூடத்தனம்...........கண்ணியதை பொருந்திய காளிச்சரண பனர்ஜி என்பர் கிறிஸ்தவப் பாதிரிகளுக்குச் செய்த ஒரு பிரசங்கத்தில் என்னை ஒரு ராஜாங்க வியவகாரப் பிரதிநிதி யென்று கூறினார் என்று கேள்விப்பட்டேன். அது பகிரங்கமாகச் சொல்லப் பட்டிருந்தால், கல்கத்தாப் பத்திரிகைகளில் ஏதாவது ஒன்றிற்கு எழுதி ருசுப்படுத்த வேண்டும் அல்லது அவருடைய முட்டாள்த்தனமான சொல்லை தப்பிதமென்று ஒத்துக்கொள்ளவேண்டும் என்று : அவரை நான் கேட்டதாகப் பஹிரங்கமாகக் கேள். இது அவர்களுடைய தந்திரம்! பொதுவாகக் கிறிஸ்தவ அரசாங்கங்களைப் பற்றியுள்ள உண்மையான குறைகளைக் கூறும்பொழுது சில கடுமையான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறேன்; ஆனால் அது நான் ராஜாங்க வியவகாரத்திலாவது அல்லது அம்மாதிரி விஷயத்திலாவது சிறிதேனும் சம்பந்தமுடையவனென்றாவது அல்லது கவலைப்படுகிறவனென்றாவது அர்த்தமன்று. எவர்கள் அந்தப் பிரசங்கங்களிலிருந்து சில பாகங்களை அச்சடிப்பது மிகவும் பெரிதென்று நினைத்து, நான் ஒரு ராஜரீக விஷயப் பிரசங்கி யென்று ருசுப்படுத்த விரும்புகிறார்களோ அவர்களுக்கு நான் சொல்வதாவது, "என்னை எனது ஸ்நேஹிதர்களிடத்திலிருந்து ரட்சியுங்கள்".

* * ஒரே மாதிரியாக மௌனமாயிருத்தலே என்னைப் பற்றிப் புறங் கூறுபவர்களுக்கு நான் சொல்லும் பதில் என்று ஸ்நேஹிதர்களிடத்தில் சொல். நான் அவர்களுக்குப் பதிலுக்குப் பதில் சொன்னால், அது நம்மை அவர்களுடன் சரிசமமான நிலைமைக்குக் கீழே கொண்டு வந்து விடும். உண்மையானது தன்னைப் பற்றியுள்ள கவலையைத் தானே யெடுத்துக் கொள்ளுமென்றும் அவர்கள் எனக்காக ஒருவருடனும் போர்புரிய வேண்டியதில்லை யென்றும் அவர்களிடத்தில் சொல். அவர்கள் இன்னும் அநேக விஷயங்களைக் கற்றறிந்து கொள்ளவேண்டியிருக்கிறது; அவர்கள் குழந்தைகளுக்குச் சமானமானவர்களே. அவர்கள் இன்னும் மூடத்தனமான அழகிய ஸ்வப்னங்கள் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள்—சிறு பையன்கள் தானே!

* * பொது ஜீவிதத்தில் இந்த முட்டாள்த்தனமும் பத்திரிகைகளில் பிரகாசித்தலும் எனக்கு முழு அருவருப்பை உண்டாக்கியிருக்கின்றன. ஹிமோத்கிரி பர்லதத்தில் அமைதியையடையும்பொருட்டுத் திரும்பவும் போவதற்கு நான் ஆவல் மிகுந்தவனாயிருக்கிறேன்.

உனது அன்பு நிறைந்த
விவேகாநந்தர்.

## நமது ஸ்திரீகளின் நிலைமை.

பிரஹ்ம ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் எழுதியது.

உலகின் பற்பலபாகங்களிலும் பஞ்சத்தினால் பீடிக்கப்பட்டுத் தவிப்பவர்கள், கொடுங்கோலரசர்களால் துன்புறுத்தப் பட்டுத் துரத்தப்படுபவர்கள், சிருஷ்டி நீதியைக் காப்பதற்காகச் சித்திரவதைக்குட் படுத்தப்படுவர்கள் ஆகிய எல்லோரும் அபயம், அபயம் என்று அலறி நமது தேசத்தைநாடி ஓடிவர, அவ்வனைவருக்கும் நாம் முற்காலத்தில் கைகொடுத்து ரட்சித்தோம், உலகின் பெரும்பான்மைச் செல்வமும் இந்தியாவைப் பொறுத்திருந்தது. இந்தியா தேசமானது இப்பொழுது இடைவிடாக் கொடிய பஞ்சத்தினால் பீடிக்கப்பட்டு, பிளேக், காலரா முதலிய தொத்து வியாதிகளுக்கு இருப்பிடமாகித் தனது வீரத்தன்மையையும் வித்துவத்தன்மையையும் இழந்து அறிந்தோரனைவரும் ஆ! வென்று ஆச்சர்யப்பட்டுப் பரிதபிக்கும்படியான நிலைமையிலிருக்கிறது; கைத்தொழில்களெல்லாம் நமது கைகளினின்றும் அகன்றுவிட்டன; தொழிலாளர்கள் படும்பாடு சொல்லிமுடியாது; வர்ணாஸ்ரம தர்மங்கள் நிலைகுலைந்து போலித் தருமங்கள் மிகுந்துவிட்டன; அகங்காரமும் பொறாமையுமே ஜாதி தர்மங்களாய்விட்டன: அடிமைத்தனம் என்பதையே அறியாத ஆர்யாவர்த்த தேசத்தில் தாழ்ந்தஜாதியைச் சேர்ந்தவர்களெனச் சிலர் அடிமைகளாகவே நடத்தப்படுகிறார்கள். நமக்கு நமதுமதத்தையும் போதிப்பதற்கு அந்நியர்களே வேண்டியிருக்கிறது. இவ்விதமாகப் பலவிதங்களிலும் தாழ்மையை யடைந்துவரும் இந்தியதேசத்தில் இப்பொழுது சில ஆசாரச்சீர்திருத்தக்காரர்கள் தோன்றி நமது ஜனஸமுகத்தைத் தலைகீழாக்க ஆரம்பித்திருக்கி



றார்கள். இவர்கள் ஆசாரங்களைச் சீர்திருத்தப்புகுந்து அநாசாரங்களைப்புகுத்தி ஆரியஜனசமூகத்தை அநியாயமாக அதோகதிக்கு இட்டுச்செல்ல ஆரம்பித்து விட்டார்களோ? என்று நாம் பயப்படுகிறோம்.

இச்சீர்திருத்தக் காரர்களுக்கு எப்பொழுதும் ஸ்திரீகளின் கவனமே முன்வந்து நிற்கிறது. “பால்யவிவாகம் தடுக்கப்படவேண்டும்; ருதுவானபின்னரே விவாகம் செய்யப்படவேண்டும்; விதவைகளெல்லோரும் விவாகம் செய்துகொள்ளவேண்டும்; புருஷர்களைப்போலவே ஸ்திரீகளும் சகலஸ்வதந்திரங்களையும் உடையவர்களாகிக் கண்டகண்ட இடங்களிலெல்லாம் காவலின்றித் திரிந்து நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் விட்டு எதிர்ப்பட்ட புருஷர்களுக்கெல்லாம் இன்பமாகக் கைலாகு கொடுத்துக்களித்து ஏனென்றுகேட்பார் இன்றி இருக்க வேண்டும்.” இவ்விதமாகவெல்லாம் ஸ்திரீகள் சீர்திருத்தமடைந்து விட்டால், இந்தியா முன்னுக்குவந்துவிடும்; அதாவது, இந்தியாவில் பஞ்சங்கள் நீங்கிவிடும், கைத்தொழில்கள் விருத்தியடையும், அகங்காரமும் பொறாமையும் அழிந்துவிடும், ஒரே நிமிஷத்தில் ஒற்றுமை ஏற்பட்டுவிடும் என்பதாகச் சீர்திருத்தக்காரர்கள் நினைக்கின்றார்கள் போலும்.

ஸ்திரீகளுக்குள் கல்வி பரவவில்லையாதலால் ஸ்திரீகள் அறியாமையில் அமிழ்ந்து அவஸ்தைப் படுகின்றார்கள் என்று ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் சொல்கின்றார்கள். கல்வியென்பது அட்சரங்களைக்கூட்டிக் கண்டதைக்கண்டபடி சொல்வதுதானென்றால், அக்கல்வி நமது ஸ்திரீகளுக்குள் பரவவில்லையென்பது வாஸ்தவம் தானென்றும் அத்தகைய கல்வி அவசியம் இல்லையென்றும் நாம் அபிப்பிராயப்படுகின்றோம். அறிவைவிருத்தி செய்து அநுபவத்தில் ஆராய்ந்துபார்ப்பது கல்வியென்றால் அக்கல்வி நமது ஸ்திரீகளுக்குள் வேண்டியமட்டும் இருக்கிறதென்றும் அதைப்பற்றிக் கொஞ்சங்கூட ஆசாரச்சீர்திருத்தக்காரர்கள் சிந்திக்கவேண்டியதில்லையென்றும் நாம் கூறுகின்றோம். இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாஸபுராணாதிகளிலுள்ள சரித்திரங்களை நமது ஸ்திரீகள் எவ்வளவு ஆச்சர்யமாக அறிந்திருக்கிறார்கள் என்பதை நவீனநாகரிகப்பித்துப் பிடித்து அலையும் நமது சகோதரர்களாகிய ஆசாரச்சீர்திருத்தக்காரர்கள் அறியார்கள்

போதும்! கல்வி, கேள்வி இவ்விரண்டினாலும் அறிவு விருத்தியாகும்; கல்வியினால் கிடைக்கும் அறிவைப் பார்க்கிலும் கேள்வியினால் கிடைக்கும் அறிவு மனத்தில் நன்றாகப்பதிந்துகொள்ளும். கல்வி கற்பதே தொழிலாகவும் நியமமாகவும் கொண்டவர்களுக்கே கல்விபிரயோசனப்படும்; கேள்வியோ பலவிதத் தொழில்களிலும் பாடுபடும் பலருக்கும் பயன்படுமாறு அறிவை விருத்தி செய்வதாம். ஸ்திரீகள்பலவித அகத்தொழிற்களிற் பாடுபடுபவர்களாதலால் அவர்களுக்குக் கல்வியைப்பார்க்கிலும் கேள்வியே இன்றியமையாததாகும். ஏன்? நமது முன்னோர்களாகிய ரிஷிகளின் பரம்பரைகளும் அக்காலத்தில் அச்சிடும் தொழில் இல்லாததினால் கேள்வியின் மூலமாகவேயன்றோ நமக்கு நமது வேத சாஸ்திரபுராண இதிகாசங்களையெல்லாம் கொடுத்திருக்கின்றார்கள். அறிவை விருத்திசெய்துகொண்டு அனைவருக்கும் உபதேசித்தலையே தொழிலாகக்கொண்ட பிராம்மணர்களும் அரசாட்சி செய்வதற்குப் பாத்தியதையுள்ள க்ஷத்திரியர்களும் ஜனஸமூகத்தைக் கோட்டைபோலப் பொருளால்பிடித்துப் பலமாகக் கட்டவல்ல வைஸ்யர்களும் தவிர, இரவும் பகலுமாகப் பாடுபடுகின்ற சூத்திரர்களும் ஸ்திரீகளும் கேள்வியினாலேயே, அறிவை விருத்திசெய்வதற்கு உரியவர்கள். இவ்விருவகையினரும் பலவித மனக்கவலை நிரம்பியவர்களாக எப்பொழுதும் இக்கின்றார்களாதலால், கல்வியைப்பார்க்கிலும் கேள்வியே இவர்களுக்கு ஆறுதலைக் கொடுத்து அறிவையும் விருத்திபண்ணும். சூத்திரர்களும் ஸ்திரீகளும் கல்வி கற்கலாகாதென்று ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருந்தால், அவர்கள் எப்பொழுதும் முழுமூடர்களாயிருந்துகொண்டிருக்கவேண்டுமென்று மகரிஷிகள் தீர்மானிக்கவில்லை. ஆனால் இவ்விருவகையினருக்கும் ஏற்கனவே ஏற்படக்கூடிய சரீரக்களைப்புடனும் மனக்கவலைகளுடனும் கல்விகற்கவேண்டுமென்னும் ஆசையாவது நிர்ப்பந்தமாவது சேர்ந்துகொண்டால், அவர்கள் வெகுசீக்கிரத்தில் பைத்தியம் பிடித்தவர்களாய்விடுவார்கள்; இவர்களுக்குக் கேள்வியே பெரும்பயனை யளிக்கத் தக்கது.

சென்றவருஷத்தில் இங்கிலாந்தில் மிஸஸ். எம். ஈ. பென்னி என்னும் ஓர் ஆங்கிலமாது ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்னும் கனவானின் அக்கிராசனத்தின்கீழ் "இந்தியாவிலுள்ள மகம்மதிய ஜாதியாரின் வழக்கங்கள்" என்னும் விஷயத்



தைப்பற்றி ஓர் பிரசங்கம்செய்தார். இந்தஸ்திரீ இந்தியாவுக்கு மோட்சத்தை இப்பொழுதே, இந்தநிமிஷமே கொடுத்துவிடுவதாகக்கூறிக் கொண்டுவருகின்ற கிறிஸ்தவப்பாதிரியார்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று நினைக்கிறோம். அவருடைய பிரசங்கத்தினின்றும் ஒருசிறுபாகத்தைக் கீழே பிரசுரிக்கின்றோம்:—

"மிகவும் இனிமையானதோர் பிரசங்கத்தினிடையில், செய்யப்படக்கூடியது யாது? என்று மிஸஸ் பென்னி கேட்டார். அதற்குப்பதில் (அவள் கூறியதாவது) கல்வி, அறிவை விருத்திசெய்தல் இவைதாம். ஆனால் மகம்மதியர்கள் முக்கியமாக ஸ்திரீகளுக்குக்கல்வி கூடாதென்று அபிப்பிராயப் படுகிறார்கள். அந்தப்புரத்தில் வேலைசெய்யும் சில நடைய சகவாசத்திலிருந்து தான் நேரிற்சொல்லக் கூடுமாதலால், இது பாதிரிகளுக்கு மிக பெரிய கஷ்டமானதோர் காரியம். நீங்கள் ஏன் உங்களுடைய ஸ்திரீகளுக்குக் கல்வியைக்கொடுத்து அவர்களுடைய அறிவின்மையினின்றும் அவர்களை மேலெழுப்புவதற்கு முயற்சிசெய்வதில்லை? என்று ஒரு ஆங்கிலஸ்திரீ கேட்டபொழுது முதியோராகிய ஷேக் ஒருவர் கொடுத்த பதிலினால் மகம்மதியர்களுக்குக் கல்வியைப்பற்றியுள்ள அபிப்பிராயமானது உதகரிக்கப்பட்டது. அந்த ஷேக் மிகுந்தமரியாதையுடன் "அம்மா, நீங்கள் கல்விகற்றிருக்கிறீர்கள். அந்தக் கல்வியின்பயனை நீங்கள் உங்களிடத்திலேயே பார்க்கிறீர்கள். நீங்கள் செய்திருக்கிறதென்ன? ! உங்களுடைய ஜனங்களிடத்திலிருந்தும் உங்களுடைய தேசத்திலிருந்தும் நீங்கள் ஓடிவந்துவிட்டீர்கள். எங்களுடைய ஸ்திரீகளை இழந்துவிடுவதற்கு எங்களுக்குப்பிரியம் இல்லை: ஆதலால் அவர்கள் எங்களைவிட்டுவிட்டு எங்களிடத்திலிருந்து ஓடிவிடும்படிசெய்யும் ஒருகல்வியை அவர்களுக்குக்கொடுக்கவேண்டுமென்ற எண்ணமும் எங்களுக்கு இல்லை" என்று பதில்சொன்னார்.

இவ்விஷயத்தைக்கூறி இந்த ஆங்கிலமாது அந்த ஷேக்கைப் பரிகசித்தார். ஆனால் அந்த ஷேக் சொன்னவார்த்தைகள் உண்மையேயாம். இல்லறவின்பமே விவாகத்தின் கருத்து. ஆனால் கற்றுத்தேர்ந்த பங்காளிகளுடன்கூடிய மேல்நாட்டினர்களைப்பார்க்கிலும் எழுத்துவாசனையேயில்லாத, மூடமனைவிகளுடன்கூடிய கீழ்நாட்டினர்களே மிகவும் மேம்பட்டவர்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. மேல்நாட்டினர்களுக்கு வாய்க்கும் மனைவிகளை

மனைவிகள் என்று கூறாது, பங்காளிகள், என்று நாம் கூறியதற்குக்காரணம், மேல்நாட்டில் இருவரில் ஒருவர் ஏதேனும் ஒருகாரணத்தைவிட்டு மற்றவரிடத்துத் தமக்குள்ள கட்டுப்பாடுகளினின்றும் லகுவாகப்பிரிந்து கொள்ளலாமாதலாலும் ஒன்றாயிருக்கும் பொழுது மாத்திரம் இப்பதன்பங்களைச் சமமாக ஏற்றுக்கொள்கின்றார்களாதலாலும் தான். கல்வியானது மனத்தை விசாலப்படுத்திக் கற்றோரைக் கைதூக்கிவிடுமென்பது உண்மையே. ஆனால் மேல்நாட்டினர்கள் பிரமாதமாக மதித்திருக்கின்ற கல்வியானது சிலநன்மைகளைப்பயனாக உடையதாயினும், பெரும் பான்மையும் தீமைகளையே விளைத்துவிடுகின்றது.

இந்தியஸ்திரீ எழுதவாவது பிரசங்கம் செய்யவாவது அறியாளாதலால் ஒரு பிரசங்கம் செய்வதற்கோ ஒரு சமாச்சாரப்பத்திரிகையை நடத்துவதற்கோ வல்லமைவாய்ந்த மேல்நாட்டு ஸ்திரீயைப்பார்க்கிலும் அறிவிற்குறைந்தவள் என்று சொல்வதெப்படி? விவேகாநந்த ஸ்வாமிகளின் சிஷ்யையும் இந்தியஸ்திரீகளுடன் நன்றாகப்பழகி அவர்களுடைய நடையுடைபாவனைகளை அநுபவத்தில் அறிந்தவளுமானசகோதரி நிவேதிதாவைப்பற்றி எல்லோரும் கேட்டிருக்கலாம். இந்தியாவில் ஸ்திரீகள் வேண்டுமென்றே அறிவின்மையில்வைக்கப்பட்டிருக்கிறார்களென்று கூறும் அபவாதத்திற்கு சகோதரி நிவேதிதா கூறுகின்றமறுமொழி பின்வருமாறு:—

"பிறரால் கூறப்பட்ட அறிவின்மையின் ரூபமானது எழுதத்தெரியாமல் இருப்பதேயென்று தெளிவாகின்றது. ஸ்திரீகள் வேண்டுமென்றே அப்படிவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையன்று. ஆனால் அவர்கள் அப்படிவைக்கப்பட்டிருப்பதாகவைத்துக்கொண்டாலும், அவர்களுக்கு வீட்டுவேலைகளைப்பற்றியும் சமையலைப் பற்றியுமுள்ள அறிவு விலையற்றதா? அவர்கள் அநுபவத்தினால் அடைந்துள்ள அறிவுமதிப்பற்றதா? இதிஹாஸபுராணங்களின் சகலமர்மங்களையும் நன்றாக அறிந்திருந்தபோதிலும், வாசிக்கவாவது எழுதவாவது தெரியாதுஎன்ற ஒருகாரணத்தினாலேயே ஒரு ஸ்திரீ அறிவிலியென்று அழைக்கப்படலாமா? வங்காளதேசத்தில் மிகவும் நன்றாக மேல்பார்க்கப்படுகிற பலபூசொத்துக்களும் விதவைகளின் கைவசமே இருக்கின்றனவென்று குறிப்பிடுவது விநோதமாயிருக்கிறது. அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு வக்கீல்களும் மதிப்புச்செலுத்துகின்றார்கள். அஹல்யாபாய் ராணி



மகாராஷ்டிரதேசத்தில் அதேமாதிரியான ஒரு திருஷ்டாந்தமாயிருந்தார்."

இது இந்தியர் எவரும் கூறியதன்று. அறிவில் தேர்ந்த ஒரு ஆங்கிலமாது கூறியதாகும். ஆதலால் இப்பொழுது ஸ்திரீகளின் நிலைமை நமது நாட்டில் நம்மால் சந்தோஷிக்கத்தக்க விதமாகவேயிருக்கிறது. ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் அவஸ்தைப் படுவது போல நமது ஸ்திரீகளும் வீட்டுத்தொழில்களையெல்லாம் விட்டுவிட்டு வெளியில் வந்து தங்களுடைய சேலைகளையும் தாவணிகளையும் இழுத்து வரிந்து கட்டிக் கொண்டு தமக்கும் சமஸ்வதந்திரம் வேண்டுமென்று வெடிக் குண்டெறிதல் முதலிய துஷ்டச் செய்கைகளைச் செய்யவேண்டுமென்று நாம் விரும்பவே மாட்டோம்.

## ருதுமதி விவாகச் சட்டமசோதா.

இப்பொழுது சென்றசென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் கௌரவ. ஸ்ரீ வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் ருதுமதிவிவாகத்தைச் சட்டசம்மதமாக்க வேண்டுமென்ற கருத்துடன் நூதனமாக ஒரு சட்டத்தைப் பிரேரேபித்தார். அப்பொழுது சட்டசபை அங்கத்தினர்களிற் பெரும்பான்மைபோரும் அவரை ஆமோதித்தார்கள்; கௌரவஸ்ரீ பி. வி. நரஸிம்ஹய்யரவர்கள் மாத்திரம் ருதுமதிவிவாகம் சட்டசம்மதமாக்கப் படவேண்டியது தமக்குச்சம்மதந்தானென்றும் ஆனால் தம்மைச்சார்ந்த ஜனங்களிற் பெரும்பான்மையோரும் இவ்விஷயத்தை மிகவெறுப்புடன் வெறுத்துப் பேசினார்களென்றும் கூறினார். இவர் இவ்வளவாவது செய்தார்; மற்றவர்கள் தயாராக இவ்விஷயம் பிரஸ்தாபிக்கப் பட்டவுடனே தாங்களும் சம்மதித்துவிட்டதாகத் தலையையாட்டிவிட்டார்கள். இவர்கள் இவர்களைச்சார்ந்த ஜனங்களைச் சபைகள்கூட்டி அவர்களுடைய பொது அபிப்பிராயத்தை அறிந்துகொண்டுதான் கௌரவஸ்ரீ வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரிகளுடைய பிரேரேபணையை ஆமோதித்தார்களா? என்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது. எப்படியிருந்தாலும் பொது ஜனப் பிரதிநிதிகளாகப் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டுப் பொதுஜன அபிப்பிராயத்திற்கு இணங்க, வேண்டிய நன்மைகளை அரசாங்கத்தார்செய்து கொடுக்கும்படியாகச் செய்யவேண்டியது

சட்டசபையில் ஜனப்பிரதிநிதிகளாயிருப்பவர்களின் கடமையாகு மேயொழிய, பொதுஜனங்கள் எவ்விதமான அபிப்பிராயங்களைக் கைக் கொண்டிருக்கிறார்கள் என்று அறியச் சிறிதும் இச்சையில்லாது தாங்கள் அடைந்துள்ள கல்வியும் அறிவுமே தங்களுக்கு அத்தாட்சியென்று திருப்திபடைந்து தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தைப் பொதுஜன அபிப்பிராயமாகக் கூறிவிடுவது அவ்வளவு அழகன்று.

விவாகமானது மேல்நாட்டாருக்குள் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள்போல, இந்துக்களாகிய நமக்கு ஒப்பந்தங்கள் அல்ல. கர்மவிதியை ஆதாரமாகக்கொண்டு அனந்தகோடி ஜன்மங்களாகப் புருஷன், மனைவியாகிய இருவரும் அந்தரங்க அன்பினால் கட்டப்பட்டவர்களாகி எக்காலத்திலும் வேற்றுமையென்பதே யின்றி ஒற்றுமையாக ஒருவரையொருவர் விடாதுபற்றி இருவருமாக எப்படியாவது இவ்வுலகப்பற்றுக் களினின்றும் நீங்கி இன்பாறுபூதியையடைந்து இருவரும் ஏகவஸ்துவாய் லயிப்பதற்கு அஸ்திவாரமாக இடும்விதியே விவாகம் எனப்படும். விவாகத்தினுடைய பரிசுத்தத்தன்மையையும் பதிவிரதாதர்மத்தின் மகிமையையும் நன்கு ஆராய்ந்து உணர்ந்தவர்கள் இந்துக்களுக்குள், அதிலும் பிராஹ்மணர்களுக்குள் நடக்கும் விவாகவிதிகளில் குற்றங் குறைகளைக்காண்பது அரிது. ஆதிகாலத்தில் பால்யவிவாகம் நமது தேசத்தில் நடைபெறவில்லையென்றும் இடைக்காலத்தில் இவ்வேற்பாடு வழக்கத்தில் கொண்டுவரப்பட்டு விட்டதென்றும் ருதுவான பின்னர் பெண்கள்தாமே புருஷர்களைத் தேடி யடைந்துகொண்டதாக நமது இதிகாசங்களிலும் புராணங்களிலும் திருஷ்டாந்தங்கள் இருக்கின்றனவென்றும் ஆசாரச்சீர்திருத்தக் காரர்கள் கூற ஆரம்பித்திருக்கிறார்கள். வர்ணாச்ரமதர்மங்கள் அந்த அந்த ஜாதிகளுக்கும் அந்த அந்த ஆஸ்ரமங்களுக்கும் தக்கவாறு வெவ்வேறாக விதிக்கப்பட்டிருக்கின்றன வென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அப்படி நாம் ஜாக்கிரதையாகக் கவனிக்கும்விஷயத்தில், ஆதிகாலத்தில் ருதுமதி விவாகமானது பிராம்ஹணர்களுக்குள் நடந்துள்ளது என்பது மிகவும் அபூர்வமாகக்காணப்படும். பிதாவானவன் தனது பெண்ணுக்குத் தகுந்தமாப்பிள்ளையைத்தேடி அவள் ருதுவாவதற்குள் விவாகம்செய்விக்கத் தவறிவிட்டாலும், இம்மாதிரியே 'ஏதேனும் அசந்தர்ப்பங்களால் பெண் ருதுவாவ



தற்குமுன்விவாகம் செய்விக்கப்படாவிட்டாலும், அப்பெண் ருதுவாகி மூன்றுவருஷங்களுக் குள்ளாகத்தானே தனக்குத்தகுந்த புருஷனைத்தேடியடைந்து கொள்ளலாமென்று சிலவிதிகள் ஸ்மிருதிகளில் காணப்படுகின்றன. இவை பொதுவிதிகளல்ல;அசாதாரணமாக அவசரசமயம் நேரிடும்பொழுது உபயோகிக்கத்தக்கவை. இவற்றை ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் பிரமாணங்களாகக் காட்டின ஆதிகாலத்தில் ருதுமதிவிவாகம்ஆர்யர்களுக்குள் நடைபெற்றுவந்தது என்று கைகொட்டிக் கத்துகிறார்கள்.

நம்முடைய பழைய இதிகாசங்களையே பார்ப்போமாயினும், ராமாயணத்தில் ராமருக்கும் சீதைக்கும் விவாகமானபொழுது ராமருக்குவயது 13 அல்லது 14 என்றும் சீதைக்குவயது ஆறு அல்லது ஏழு என்றும் ஆரண்யகாண்டத்தில் 47-வது சர்க்கம் 3-முதல் 10-வரையில் உள்ளஸ்லோகங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆதிகாண்டத்திலும் 19-வது சர்க்கமும் 20-வது சர்க்கமும் இவ்விஷயத்தை உறுதிப்படுத்துகின்றன. இன்னும் ராமருக்கும் ஸீதைக்கும் விவாகம் ஆனபொழுது அவ்விவாஹோத்சவசமயத்தில் தசரதச்சக்ரவர்த்தி, பிரஹ்மரிஷியாகிய வசிஷ்டர், விஸ்வாமித்திர மகரிஷி, ராஜரிஷியாகிய ஜனகர், வாமதேவரிஷி,ஜாபாலிரிஷி, காஸ்யபகாத்தியாயனரிஷி முதலிய மகரிஷிகளும் மற்றுமுள்ள மகான்களும் கூடியிருந்தார்களென்றும் அப்பொழுதே ராமருக்கு இளையவர்களான லட்சுமணர், பரதர், சத்துருக்கனர் இவர்களுக்கும் விவாகம்நடத்தப் பட்டதென்றும் ஆதிகாண்டத்தில் 68-வது சர்க்கம்முதல் 6-சர்க்கங்களில் கூறப்பட்டிருக்கிறது. அப்பொழுது ஒருவராவது பால்யவிவாகம் தீமையை விளைவிக்கத் தக்கது என்று எங்காவது கூறியுள்ளதாகக் காணப்படவில்லை. இன்னும், உஷஸ்திசக்ராயண ரிஷியென்பவர் ஸ்தனங்கள் பக்குவமடையாத குழந்தைமனைவியுடன் அதிகவறுமையில் வாழ்ந்து வந்தாரென்று சாந்தோக்கிய உபநிஷத்தில் முதலாவது அத்தியாயம் 10-வது காண்டத்தில் முதலாவது ஸ்லோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது. பால்யவிவாகமானது இடைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வழக்கமன்றென்று இத்தத்திருஷ்டாந்தங்களால் நன்குவிளங்குகின்றது. நாம் நமது மகரிஷிகளையும் ராஜரிஷிகளையும் பிரஹ்மரிஷிகளையும் தேசகாலங்கட்குத் தக்கபிரகாரம் சிருஷ்டி நீதிகளைவகுத்துரைத்திருக்கும் திரிகாலஞானிகளையும் நமது ஜீவித காலப்போக்குக்கு ஆதாரமாகக்கொண்டு நடப்பதா? அல்லது

மேல் நாட்டுப்பண்டிதர்களாலும் பண்டிதைகளாலும் தூண்டப்
பட்டு அவர்களைப் பின்பற்றத் தொடங்கும் ஆசாரச் சீர்திருத்தக்
காரர்களை ஆதாரமாகக் கொள்வதா? இஃது ஒரு பெருங்கேள்வி.

தவிர, உலகத்திலேயுள்ள ஜனங்கள் ஒருவரோடொருவர்
எப்படியாவது எவ்விதத்திலாவது பிணைக்கப்பட்டிருத்தலால்,
ஒருவர் செய்யும் நன்மைதீமைகளினால் பிறரும் பாதிக்கப்படுகின்
றனராதலால், உலகநன்மையை, அதாவது பொதுநன்மையைக்
கருதி ஒவ்வொருவரும் இன்னது செய்யலாம் இன்னது செய்யக்
கூடாதென்று விதிநிஷேதச்சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்
றன. ஜனசமூகத்தின் பொது நன்மைக்காக இந்த விதிநிஷேத
சட்டங்களை ஊர்ஜிதத்தில் கொண்டுவந்து நீதிமுறைசெலுத்துவ
தற்காக ஆதிகாலத்தில் ஜனசமூகப்பிரதிநிதியாக அரசன் நிய
மிக்கப்பட்டான். ஜனசமூகத்தின் உணர்ச்சிகளும் அபிப்பிராயங்
களும் இன்னின்னவையென்று அறிந்து அவற்றுடன் தமதுதீர்க்
காலோசனையையும் சேர்த்து நீதிநெறிசெலுத்துவதே அரசனு
டைய கடமையாகும். ஆதலால் ஜனசமுதாய விஷயத்தில் அரசன்
தனது சொந்த அபிப்பிராயத்தையாவது அல்லது தன்னிடத்தில்
அடிக்கடிகண்டு பழகக்கூடிய சிலருடைய அபிப்பிராயத்தையா
வது முன்னிட்டு ஒருகார்யமும் செய்யலாகாது. ஆனால், இப்பொ
ழுது நமக்கு முன்வந்திருக்கும் ருதுமதிவிவாகவிவாத விஷயத்
தில் நமது அரசாங்கத்தார்மீது குற்றம்சொல்வதற்கு நமக்குச்
சிறிதும் இடம்இல்லை. பொதுஜனப் பிரதிநிதிகளாகச் சட்டசபை
யில் வீற்றிருப்போர்களில் பெரும்பான்மையோரும் ஒருகார்யம்
செய்யவேண்டுமென்றால், பெரும்பான்மைச் சட்டசபையினரால்
ஆமோதிக்கப்படும் கார்யம் பொதுஜன நன்மைக்கு விரோதமா
யிராதென்றுகருதி அரசாங்கத்தார் அக்கார்யம் அநுகூலமாகும்
படி அநுமதி கொடுத்துவிடலாம். விவாகமே ஒற்றுமைக்குடும்ப
வாழ்க்கையையும் வர்ணாச்ரமதர்த்தையும் இதனால்ஜனசமூகத்தை
யும் ஒன்றாகக்கட்டி பலப்படுத்தி நீடூழிகாலம் வாழச்செய்வது.
ஆதலால் ஒருவன் இன்னாரைத்தான் விவாகம்செய்து கொள்ள
லாம்,இன்னசமயத்தில்தான் விவாகம்செய்துகொள்ளலாம் என்று
அவனைக் கட்டுப்படுத்துவதற்கும் அவன் அவ்விதிகளை மீறிநடப்
பானாயின் அவனை அதற்குத்தக்கபடி தண்டிப்பதற்கும் ஜனசமு
கத்திற்குப் பாத்தியதைகள் உண்டு;ஆதலால் அம்மாதிரிதண்டனை



களில் ஒன்றுதான் அவன்மீறிநடக்கும் செயல்கள் ராஜநீதிக்கும்
விரோதமாம்என்று கூறப்பட்டது; ஏனென்றால் ஜனசமூகத்தின்
ஒற்றுமையுணர்ச்சிகளும் ராஜநீதியும் ஒருபொழுதும் ஒன்றுக்
கொன்று முரண்படா. ஆகையால் இப்பொழுது சாஸ்திரிகளால்
கொண்டுவரப் பட்டிருக்கும் ருதுமதிவிவாகச் சட்டமசோதாவா
னது ஆங்கிலம்படித்த சில அறிஞர்களால் ஆமோதிக்கப்பட்டு விட
லாம்; முக்கியமாக முன்நிற்கும் ஆங்கிலப்பத்திரிகைகளும் அவற்
றைப்பின்பற்றித்திரியும் தேசபாஷைப் பத்திரிகைகளும் இச்சட்ட
மசோதாவைத்தாங்கிப் பேசலாம்; அடுத்தசட்டசபைக் கூட்டத்
தின்பொழுது அங்குகூடுகின்ற அங்கத்தினர்கள் அனைவரும்
ஆர்ப்பரித்து அதைச் சட்டமாக்கி விடலாம்; சாஸ்திரிகளும்
மனப் பூர்வமாகவேதாம் தமது நாட்டிற்குப்பெரிய உபகாரம்
செய்துவிட்டதாகமனம் மகிழ்ந்து பூரித்துக்கொள்ளலாம். ஆனால்
சட்டசபைகளின் மூலமாகவோ, அல்லது எவ்விதத்திலேனும்
பெரும்பான்மையராக ஒரேசமயத்தில் ஒரே இடத்தில்சேர்ந்துதங்
களுடைய உண்மையான உணர்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும்
அரசாங்கத்தாருக்கு அறிவிக்கமுடியாது தத்தளிக்கும் ஆயிரக்
கணக்கான ஆர்யர்கள் இச்சட்டமசோதா சென்னைச்சட்டசபையில்
அங்கீகரிக்கப்பட்டு விட்டதேயென்று என்றென்றும் மனம் நொ
ந்து ஏக்கமடைந்து கொண்டே யிருப்பார்களென்பது திண்ணம்.

கடைசியாக, ஒன்று கூறவிரும்புகின்றோம். பொதுஜனப்
பிரதிநிதிகளாகச் சட்டசபைக்கு ஜனங்களால் பொறுக்கியெடுக்
கப்பட்ட பிரபுக்கள் சட்டசபையில் தாம் எக்கார்யத்தையாவது
பிரேரேபிக்கவாவது, ஆமோதிக்கவாவது ஆதரிக்கவாவதுசெய்ய
விரும்பினால், அவர்கள் தங்களைச்சார்ந்த ஜனங்களிடத்தில் கல
ந்து ஆலோசனைசெய்து பின்னரே சட்டசபையில் தங்களுடைய
அபிப்பிராயத்தை வெளியிடவேணடியது அவர்களுடைய கட
மையாகும். தங்களுடைய சொந்த அபிப்பிராயங்கட்கும் ஜனங்க
ளுடைய பொது அபிப்பிராயங்கட்கும் வித்தியாசம் ஏற்பட்டுவிட்
டால், நரசிம்ஹய்யரவர்கள் செய்ததுபோலவே, இருவகை யபிப்
பிராயங்களையும் தெரிவித்து விடுதல்தான் நியாயமாகும். ஆதலால்
அடுத்தசட்டசபை கூடுவதற்குள்ளாக, சட்டசபை யங்கத்தினர்
கள் தங்களைச்சார்ந்த ஜனங்களைக் கூட்டங்கள்கூட்டி அவர்களு
டைய அபிப்பிராயத்தையும் அறிந்துகொள்ளுமாறு நாம் அவர்
களைவேண்டிக் கொள்கிறோம்.

## பத்திரிகை வரவு.

"நீதி":—இப்பெயர்கொண்ட வாரப்பத்திரிகையின் முதலாவது சஞ்சிகைவரப்பெற்றோம். இப்பத்திரிகையில் பிரதானநியாயஸ்தலங்களில் கொண்டுவரப்படும் வழக்குகளில் ஏற்படும் தீர்மானங்கள் எளியதமிழ் நடையில் எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. ஆங்கில பாஷையை அறியாது அற்பவியவகார விஷயங்களுக்கும் பிறருடைய உதவியைநாடிப் பெரும்பொருளை வீணாகச் செலவழிக்கும் நம் நாட்டினர் அநேகருக்கு இப்பத்திரிகை பயன்படுவதாகும்: நாளுக்குநாள் வழக்குகள் அதிகரித்துக்கொண்டே வரும் இக்காலத்தில் சாதாரணஜனங்களும் சட்டமுறைகளை அறிந்து கொள்வதற்கு இதைப்போன்றதோர் பத்திரிகை அவசியமாம். ஆனால் ஆங்கிலபாஷையிலுள்ள சட்டப்புத்தகங்களில் காணப்படுகிற சிலமுக்கியபதங்களுக்குத் தமிழ்ப்பாஷையிலும் தக்க பதங்களை உபயோகிக்கவேண்டும், அல்லது, தக்கபதங்கள் தமிழ்ப்பாஷையில் இல்லாவிட்டால், நூதனமாகவாவது ஆங்கிலவார்த்தைகளுக்குச் சரியாகப்பொருள் படும்படியான தமிழ்ச்சொற்களை உண்டுபண்ணிக் கொள்ளுதல் அவசியமாகுமே தவிர, ஆங்கிலப் பதங்களை அப்படியப்படியே தமிழ் எழுத்துக்களிலும் எழுதிவிடுவது ஸ்வபாஷையைக் கொலைசெய்தது போலாகும். இப்பத்திரிகையில் முதலாவது பக்கத்தில் Irrigation cess என்ற ஆங்கில வார்த்தைகளை நீர்வரி என்று அர்த்தப்படுத்தி, பக்கத்தில் ஆங்கில வார்த்தைகளும் எழுதப்பட்டிருந்தன. இம்மாதிரியே நூதனமாகத் தமிழ்ச்சொற்களை உபயோகிக்கும்பொழுது, தமிழைமறந்து ஆங்கிலமும் அறியாது சில ஆங்கிலச் சொற்களின் பிரயோகத்தில் மயங்கித்திரியும் ஜனங்களுக்குத் தெளிவாகத்தெரியும் பொருட்டு, ஆங்கிலவார்த்தைகளையும் பக்கத்தில் குறிப்பிட்டு விடுவது நன்று இப்படியே சிறிதுகாலஞ்சென்றால் நூதனத்தமிழ்ச் சொற்கள் வாசகர்களுக்குச் சாதாரணமாய்விடும்; பின்னர் ஆங்கிலச் சொற்களை அடுத்தாற்போல் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. இப்பத்திரிகையில் பலஇடங்களில் "இண்டர்ப்பிரிட்டர்," "ரெஸ்பாண்டெண்டு," "ஜுரிஸ்டிக்ஷன்," "புல்பெஞ்ச்" என்ற பல ஆங்கிலப்பதங்களும் அப்படியப்படியே உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. "நீதி"யின் பத்திராதிபர் தமிழ்ப்பாஷைக்கு நீதி செலுத்துமாறு நாம் வேண்டிக்கொள்கின்றோம். இதன் வருஷச்சந்தா:—



உள்நாடுகட்கு ரூபாய் ஆறு; வெளிநாடுகட்கு ரூபாய் எட்டு. வேண்டுவோர் "ஈஸ்டர்ன் ஏஜென்ஸி," ஜிபார்ஜ் டவுன், சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

"வித்தியாபாநு":—இப்பத்திரிகை மதுரையில் நமது நண்பர் ம ள ள ஸ்ரீ. மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களால்மாதப்பத்திரிகையாக வெகுகாலம் பிரசுரிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது கவிராயரவர்கள் இப்பத்திரிகையை வாரமிருமுறையாக மாற்றியிருக்கின்றார். இரண்டுகோடியே ஐம்பது லட்சத்துக்கு மேலாகத் தமிழ்ப்பாஷை பேசுவோர் இத்தென்னாட்டி லிருக்கிறார்களாதலால், ஆயிரம் பதினாயிரம் பத்திரிகைகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் தமிழ்நாட்டு ஜனங்கள் ஆதரிக்கச்சக்தியுள்ளவர்களே; தவிர, கடமைப்பட்டவர்கள். ஆகையால் "வித்தியாபாநு" கூடிய சீக்கிரம் தினசரிப்பத்திரிகையாகுமாறு இறைவன் அருள்புரிவாராக. கவிராயரவர்களுடைய தமிழ்ப்பாஷா பாண்டித்தியம் தமிழுலகினர் அறிந்ததே; ஆகலால் பத்திரிகை தெளிவான நடையில் நடைபெறும் என்பது நாம் கூறாமலே எல்லோருக்கும் விளங்கும், பல அரியபெரிய விஷயங்கள் இப்பத்திரிகையில் வெளியாகின்றன, ஆனால் ஆங்கிலச்சொற்கள் மிதமிஞ்சி வழக்கச்சொற்கள் போல எங்கும் உபயோகிக்கப்படுகின்றன என்று நாம் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. "ஸோல்ஜர்," "க்ரூஸர்," "ஸ்கீம்," "டாங்கி," "கூர்க்காஸ்," "டெஸ்ட்ராயர்ஸ்," "டிரெட்நாட்," "டார்ப்பிடோபோட்," முதலிய பலவார்த்தைகளும்வெகுதாராளமாக உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. இவ்விஷயத்தில் "நீதி" பத்திரிகையைப்பற்றி நாம் கூறிய அபிப்பிராயம் இங்கும் பொருத்தமாம்; தமிழ்ப்பாஷை தனிப்பாஷையென்று சண்டையிட்டு மண்டையுடைத்துக் கொள்ளும் பண்டிதர்களின் தர்க்கமெல்லாம் வீணாய்விடும்படி? இந்தியப்பாஷைகளின் பற்பலசொற்களால் ஏற்கனவே கலப்புற்றிருக்கிற தமிழ்ப்பாஷையை இன்னும் அந்நிய பாஷைகளிலுள்ள சொற்களையும் கலந்து அவலட்சணமாக்கி விடுவது தமிழ் மக்களாகிய நாம் செய்யக்கூடாததொருகார்யம். பாஷாபிமானமும் தேசாபிமானமும் மிக்க கவிராயரவர்களுக்கு நாம் சொல்லித் தெரியவேண்டுவது ஒன்றுமில்லை. ஆதலால் மேற்படி பத்திரிகையில் சீர்திருத்தப்படவேண்டிய விஷயங்களில் இனியும் கூடிய சீக்கிரத்தில் சீர்திருத்தப்பட்டு விடுமென்று நம்புகிறோம்.

வருடச்சந்தா.—உள் நாடுகளுக்கு ரூபா 6; வெளிநாடுகளுக்கு ரூபா 7½ வேண்டுவோர், பத்திராதிபர், "வித்தியாபாநு," மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிக்கொள்ளலாம்.

ஸர்மா அவர்களின் சித்திரப் படச்சஞ்சிகை:—

பிரஹ்மஸ்ரீ எம். எஸ். ஸர்மா அவர்கள் மேற்கூறப்பட்டுள்ளதொரு பெயர்கொண்ட மாதச்சஞ்சிகையை நடத்திவருகிறார். இதில் பலவிஷயங்களும் சித்திரீகபாவனையில் கற்பிக்கப்பட்டு, மனத்திற்குப் பூரிப்பையும் ஆநந்தத்தையும் கொடுக்கத்தக்கபிரகாரம்வரையப்படுகின்றன. அக்டோபர்மீ த்துச் சஞ்சிகையில் இந்தியாவும் ஐரோப்பிய யுத்தமும் என்றவிஷயமானது எட்டுப்படங்களால் விளக்கப்பட்டிருக்கிறது. இவற்றில், யுத்தம் ஆரம்பித்துவிட்டது என்று அறிந்தவுடனே வக்கீல்களும் வைத்தியவகுப்பினரும் தயாராக அணியுற நிற்பதும் பொறுமை, வீரத்தனம், ராஜபக்திமுதலிய குணங்களிற்சிறந்த சிற்றரசர்கள் யுத்தத்திற்குத் தயாராகவும், மைஸூர் மகாராஜா அவர்கள் 50 லட்சம் ரூபாயை ஒரேதடவையாகப் பீரங்கிவாயில் கொட்டி முதல்வேட்டுச் சுட்டுச் சத்துருக்களைத் திகிலடையும்படி செய்து விட்டார்என்று காட்டியிருப்பதும் ஜெர்மனி, ஆஸ்டிரியாவாகிய இரண்டு முரட்டுக் காட்டுப்பன்றிகளை ஐரோப்பிய அரசுகள் சேர்ந்து வேட்டையாடுவதும், ராஜனுடைய மேன்மையையும் ராஜ்ஜியத்தினுடைய நன்மையையும் கருதி இந்தியமாதா பிரார்த்தனை செய்வதும் மற்றும் வெகு அழகாயிருக்கின்றன. அக்டோபர்மீ த்துச் சஞ்சிகையில் மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களும் பூலோக சம்ரட்சணையும் என்றவிஷயமானது பத்துப்படங்களால் கண்டவர்கண்களைக் கவரும் வண்ணம் வரையப்பட்டிருக்கிறது. நவம்பர்மீ த்துச் சஞ்சிகையில் நான்குபடங்கள் புத்தி சாதுர்யத்துடன் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒன்று, இந்திய ஜனசமூக மகாசபையாகிய குதிரை வண்டியை மிதவாதி ஓட்டிக்கொண்டு செல்ல ஜனசமூகவாதி தானும் அவ்வண்டியில் இருக்கவெண்ணி பின்புறத்தே யோடிவந்து, வண்டிக்குப்பின் பக்கத்தைத் தொடவே, மிதவாதி தமது நிபந்தனையாகிய சவுக்கைப்பின்புறமும் முன்புறமும்வீசி ஜனசமூகவாதியைச் சேரவொட்டாமல் அடிப்பது. வெகுவிநோதமாயிருக்கிறது. இச்சஞ்சிகையை நமது நேயர்கள் அவசியம் ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். தனிப்பிரதியின் விலை அணா பத்து; வருஷச்சந்தா ரூபா ஆறு. வேண்டுவோர் எம்-எஸ்-ஸர்மா அவர்கள், 2. ஆபீஸ் வெங்கிடாசலமுதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை, என்ற விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம்.

## சமாச்சாரக் குறிப்புகள்.

இம்மாதம் 12-ந்தேதியன்று மாட்சிமை பொருந்திய 5-வது ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் மூன்றாவது வருஷத்திய இந்திய மகுடாபிஷேக உற்சவம் எங்கும் விமர்சையாக நடந்தேறியது. நமது சக்கரவர்த்தியவர்கள் பல்லாண்டு செங்கோல்செலுத்தி நீடூழிகாலம் வாழுமாறு எல்லாம்வல்ல இறைவனை நாம் பிரார்த்திக்கின்றோம்.

* * * *

இன்னும் யுத்தம் நடந்துகொண்டுதான் இருக்கிறது; சமீபத்தில் முடிந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் நேச அரசர்கள் நிச்சயமாக ஜெயித்து விடுவார்கள் என்று சொல்வதற்கு ஏற்ற நற்குறிகள் பல தோன்றிவிட்டன. ஜெர்மனியர்களுக்குள் பணப்பஞ்சம், ஆகாரப்பஞ்சம், தாமிரப்பஞ்சம் என்று பஞ்சங்கள் பல பரவிவிட்டன. இனிமேல் ஜெர்மனியர்களால் வெகு நாட்கள் தாங்கமுடியாது. எப்படியானாலும் வசந்தகாலம் வருவதற்குள் யுத்தம் மும்முரமாக நடைபெறுவதற்கு இடம்இல்லை. யுத்தகளப் பிரதேசத்தில் இப்பொழுது மூடுபனியும் மிகுதி. இத்தலி தேசமானது யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறது; எந்தக் கட்சியுடன் சேர்ந்து கொள்ளப்போகிறது என்றவிஷயம் மாத்திரம் இன்னும் அதிரகஸ்யமாயிருக்கிறது. நேச அரசுகளுடனேயே அது சேர்ந்துவிடும் என்று எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் ஜெர்மனியும் தன்னாலான சூழ்ச்சிகளெல்லாம் செய்து இத்தலியை வசப்படுத்தப் பார்க்கிறது. இப்பொழுது இத்தலியானது நேச அரசுகளுடன் சேரவேண்டுவதே நியாயமான காரியம்; ஏனென்றால் அப்பொழுதுதான் இந்தயுத்தம் சீக்கிரம் முடிவையடையும்; அப்பொழுது உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் சீக்கிரத்தில் முடிவடையும்.

* * * *

"எம்டன்" கப்பல் அமிழ்த்தப்பட்டதினால் இந்து சமுத்திரம் பயமற்று வியாபாரக்கப்பல்கள் செல்வதற்கு ஏற்றதாயிற்று. அமெரிக்காவில் அக்கிரமங்கள் செய்து கொண்டிருந்த ஜெர்மனியக்கப்பல்களில் நான்கு யுத்தக்கப்பல்கள் அமிழ்த்தப்பட்டு விட்டன. இனிமேல் ஒன்றிரண்டு சிறு யுத்தக்கப்பல்கள் எங்காவது ஒளிந்துகொண்டு உயிர் தப்பியிருக்கலாம். ஆனால்

அவை தைர்யமாக இனிமேல் வெளிவாரா என்பது நிச்சயம். நமது பிரிட்டிஷ் போர்க்கப்பல்களின் பராக்கிரமத்திற்கு இணையாக எத்தேசத்துப் போர்க்கப்பல்களும் இல்லை. இப்பொழுது ஜெர்மனியின் வெளியுலக வியாபாரம் அடியோடு ஒழிந்துவிட்டது; நமது வியாபாரம் தடைப்படாது உலகமெங்கும் ஓங்கி நடந்து வருகின்றது.

*　　*　　*　　*

அமெரிக்காவிலிருந்து "கோமகாட்டமாரு" என்றகப்பலின் மூலமாகக் கல்கத்தாவில் வந்து இறங்கிய பஞ்சாபியர்கள் பெருங்கலகஞ் செய்தார்களென்று, அநேகர் கைதி செய்யப்பட்டு விசாரணையில் வைக்கப்பட்டிருந்தார்கள். அரசும் குடிகளும் ஏகமனத்துடன் எதிரியை எதிர்த்து நிற்கும் இக்காலத்தில் இத்தகைய சம்பவம் நேர்ந்ததைப்பற்றி அறிவுள்ளோர் அனைவரும் மிகுந்த விசனமடைந்தனர். இவ்விஷயத்தைப்பற்றி ஆதியோடந்தமாக விசாரிப்பதற்காக சர்வ சாமர்த்தியசாலியாகிய நமது ராஜப்பிரதிநிதியவர்கள் சிலரை ஒரு கூட்டமாக நியமித்து, மேற்படி "கோமகாட்டமாரு" விஷயத்தைத் தீரவிசாரிக்கும்படி உத்தரவு செய்தனர். இதற்கிடையில் இந்தியர்களின்மீது துவேஷங் கொண்டுள்ள எவர்களோ சிலர் இக்கலகமும் கோமகாட்டமாரு விஷயமும் ஜெர்மனியின் தூண்டுதல்களின்மேல் நடைபெற்றன என்பதற்குக் கானடா அரசாங்கத்தாருக்குப் போதுமான சாட்சியங்கள் கிடைத்திருக்கின்றன என்று கட்டிவிட்டார்கள். இப்பொழுது அவ்விசாரணை முடிந்துவிட்டது; அதன்பயனாக, இதுவரையில் கைதி செய்யப்பட்டு விசாரணையில் வைக்கப்பட்டிருந்த 92 பஞ்சாபியர்கள் விடுதலை செய்யப்பெற்றுத் தமது ஸ்வதேசம் சென்றார்கள். அரசாங்கத்தாருடைய இச்செய்கையானது இந்தியா முழுமைக்கும் சந்தோஷத்தை யளித்துவிட்டது. ஹார்டிஞ்சு பிரபு அவர்கள் நமக்கு ராஜப்பிரதிநிதியாகக் கிடைக்கப்பெற்றபின்னர், அவர்செய்த எக்கார்யந் தான் நமக்குச் சந்தோஷத்தையளிக்காதது? இப்பொழுது குற்றவாளிகளெனக் கருதப்பட்டவர்கள் அனைவரும் விடுதலைசெய்யப்பட்டுவிட்டதினால், ஜெர்மனியர்களின் தூண்டுதலின்மேல் மேற்படிகலகம் நடைபெற்றதென்று விசாரணையில் தெளிவாகவில்லையென்று நினைக்கிறோம். தெளிவாயிருந்தால், இவர்களை அரசாங்கத்தார் விடுதலைசெய்திருக்க மாட்டார்கள்; இவர்களை விடுதலைசெய்தது தப்பிதமென்றே நாமும் சொல்லுவோம்.



*　　*　　*　　*

(காங்கிரஸ்) இந்திய ஜனசமூக மகாசபையானது நடைபெறப் போகின்றது. மிதவாதிகள், ஜனசமூகவாதிகளாகிய இருகட்சியாரும் இவ்வருஷத்திய மகாசபையில் ஒற்றுமைப்படுவார்களென்று நம்பியிருந்தோம். ஆனால் அந்த நம்பிக்கை வீணாய்விட்டதென்று நினைக்கிறோம். வழக்கம்போல இவ்வருஷமும் மகாசபைநடக்கும் மூன்று நாட்களிலும் பல அழகிய பிரசங்கங்களும் கரகோஷமும் மிகுந்திருக்கும். பின்னர் அடுத்த வருஷத்தில் இம்மாதத்தில் மூன்று நாட்களை எதிர்பார்த்திருக்கவேண்டும். வழக்கப்படி நடக்கின்றது தானே நடக்கும். பெரோஸ் ஷா மேட்டா, லாலா லஜபதிராய், கோகலே முதலிய பலகனவான்களும் இவ்வருஷத்திய சபைக்கு வரமாட்டார்களென்று கேள்விப்படுகிறோம். அக்கிராசனாதிபதியாகிய பூபேந்திரநாத வஸு அவர்கள் கட்டாயமாக வருவார்; சந்தேகமேயில்லை. அன்னிபெஸண்டு அம்மையாரும் டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணியய்யரவர்களும் மகாசபைப்பந்தலை அலங்கரிப்பது நிச்சயம். சுரேந்திரநாத பானர்ஜியவர்கள் சென்ற வருஷம் நடந்த சபைக்குச் செல்லவில்லை; இவ்வருஷமாவது அவர் இங்கு வருவாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மதனமோகன மாளவியா அவர்கள் அநேகமாய்வரலாம். வாச்சா அவர்கள வருவது சந்தேகம். எவர் வந்தாலும் வராவிட்டாலும், எவர் சேர்ந்தாலும் சேராவிட்டாலும், மாமூல் வழக்கம் நின்று போகுமா?

TO LET.

ஞானபாநு

VOL. 2. தொகுதி. 2 | January 1915. ஆநந்த ஹு தை மீ | No. 10. பகுதி. 10

## உனது தர்மம்.

ஏ! ஆர்ய புத்ர! நீ உனது தர்மம் இன்னதென்று அறிந்து கொண்டாயா?. உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தர்மம் பிரத்தியேகமாகச் சிருஷ்டி நீதியினால் விதிக்கப்பட்டிருக்கிறது. சதுர்வித வர்ணத்தாருக்கும் சதுர்வித ஆஸ்ரமங்களுக்கும் தர்மங்கள் வெவ்வேறாயிருப்பதுபோல, பற்பல ஜன சமுகங்கட்கும் தர்மங்கள் வெவ்வேறாயிருக்கின்றன. ஒரு குடும்பத்திலேயே பிதா செய்ய வேண்டிய தர்மம் வேறு, புத்திரன் செய்ய வேண்டிய தர்மம் வேறு, மாதா செய்யவேண்டிய தர்மம் வேறு, மருமகள் செய்யவேண்டிய தர்மம் வேறு என்று தர்மங்கள் வித்தியாசப்பட்டிருக்கவில்லையா? ஆதலால் உலகில், அதுவும் தற்கால விநோத நாகரிக மயக்கிற் சிக்கிப் பிரமித்திருக்கும் ஜன சமுகங்களினிடையில் நீ செய்யவேண்டிய தர்மம் யாது? என்பதைப்பற்றிச் சற்று நேரமேனும் சிந்தித்துப் பார்த்தாயா? ஆதி கால முதல் நீ செய்து வந்த தர்மம் யாது? என்று உனக்குத் தெரியுமா? பரமோத்தமமான தர்மத்தைச் செய்து இப்பாரினைத்தையும் அடிக்கடி பாவனம் பண்ணி வைத்தவன் நீ. பரிசுத்தமான செய்கைகளையே செய்வதாகக் கையில் கங்கணம் கட்டிக்கொண்டு அவற்றின் பொருட்டு சகல பற்றுக்களும் அற நின்றவன் நீ. கஷ்டங்களும் நஷ்டங்களும் ஆபத்துக்களும் உன்னைச் சூழ்ந்து கொள்ள, அப்பொழுதும் "கலங்காத நெஞ்சுடைய ஞானதீர"ராக நின்று அவற்றையெல்லாம் அற்பமாகவும் சொற்பமாகவும் கருதி அலட்சியம் செய்து புன்னகை புரிந்தவன் நீ. சத்தியத்தின் பொருட்டு, சத்தியத்தைத் தாரணியில் நிலை நிறுத்தும் பொருட்டு, பெண்டு பிள்ளைகளையும் விற்றுத் தானும் அடிமையாகிச் சுடலை காக்கச் சென்ற அரிச்சந்திர சக்கரவர்த்தி உனது முன்னோர்களில் ஒருவரே; வேறு எத்தேசச் சரித்திரத்தில், எந்த ஜன சமுகத்தின் சரித்திரத்தில் இத்தகைய திருஷ்டாந்தம் உள்ளது? சீதை, சாவித்திரி, தமயந்தி முதலியவர்க

னைப் போலப் பதிவிரதா சிரோமணிகளின் சரிதைகள் வேறு எத்தேயத்தில் உண்டு? அபய மடைந்த ஒரு புறுவை ரட்சிக்கும் நிமித்தம் தனது தொடையி னின்றும் மாம்சத்தை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும் உனது முன்னோனல்லவா? மகா புஜபல பராக்கிரம சாலிகளான சகோதரர்கள் நால்வரும் அடிபணிந்து கைகட்டிப் பக்கத்தில் நிற்க, மகா பதிவிரதையாகிய தமது மனைவி திரௌபதியை துஸ்வாசனன் கூந்தல் பிடித்திழுத்து வந்து ராஜசபையில் மான பங்கம் செய்து வஸ்திரத்தை உரிந்தபொழுது, பூமியினும் மிகுந்த பொறுமையுடன் பார்த்திருந்த தர்ம ராஜனைப்போல் வேறு எந்தத் தேசமாயினும் ஒரு தர்ம ராஜனை உண்டாக்கிய துண்டா? ஏ! ஆர்ய புத்திர! நீ புத்தியிற் சிறந்தவன், சக்தியில் மிகுந்தவன். உனது முன்னோர் அநுஷ்டித்து வந்த தர்மத்தை நீ கைவிட்டாய், நீ கெட்டாய். நீ இப்பொழுது பேய் விழி விழிக்கின்றாய். தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என்ன செய்வார்?

* * * *

உலகில் சகல ஜீவராசிகளும் துக்க நிவிர்த்தி யடைந்து உபசாந்தத்தைப்பெற்றுச் சாட்சாத்காராநுபூதியில் சதா வீற்றிருப்பதற்கு அநுகூலமாகச் செய்யப்படும் கார்யங்கள் எவையோ, அவை யெல்லாம் தர்மங்கள் எனப்படும். அப்பதவியை யடைவதற்குப் பிரதிகூலமான கார்யங்கள் எவையோ, அவை யெல்லாம் அதர்மங்கள் எனப்படும். ஆகலால் அதர்மங்களை விலக்கித் தர்மங்களை மாத்திரம் செய்ய வேண்டுவது புத்திமான்களின் கடமையாம். சகல பந்தங்களி னின்றும் விடுபட்டு முக்தி யடைவதே மனுஷ்ய ஜன்மப் பிரயோசனமாம்; மனுஷ்யனுடைய நோக்கமும் இதுவே. மனுஷ்யன் இரவும் பகலும் பாடுபடுவதும் இதற்காகவே. தெரிந்தோ, தெரியாமலோ, விரும்பியோ, விரும்பாமலோ, ஒவ்வொருவரும் இதன் பொருட்டுத் தான் கஷ்டப்படுகின்றார்கள். முக்தியும் இரண்டுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. நமது சாஸ்திரங்களில் அவை சத்யோ முக்தி, கிரமமுக்தி யென இருவகையாம். சத்யோ முக்தி யென்பது ஆகாயத்தில் பறக்கும் பட்சியானது தனக்குப் பசியெடுத்த மாத்திரத்தில் திடீரென்று தனக்கு வேண்டிய பலாதிகள் உள்ள விருட்சத்தைப் பார்த்துப் பறந்து பழுவர்க்கங்களைப் புசித்துத் திருப்தி யடைவது போல, அதி தீவிர வைராக்கியசாலியாகிய புருஷன் தனக்கு



முமுட்சுத்துவம் என்ற லட்சணம் உண்டான மாத்திரத்தில் திடீரென்று பற்றுக்களை யெல்லாம் உதறி விட்டுப் பறந்து பிரஹ்ம ஞானத்தைக் கைப்பற்றி பிரஹ்மாநுபூதியில் பேரின்ப நிலையினின்றும் பெயராமல் வீற்றிருக்கும் ஸ்திதியாகும். கிரம முக்தியென்பது ஒரு எறும்பானது மெல்ல மெல்ல ஒரு விருட்சத்தின் மீது ஊர்ந்து சென்று பழம் இருக்கும் இடம் தெரியாமல் அவ்விருட்சத்தின் எல்லாக் கொம்புகளிலும் கிளைகளிலும் சுற்றிக் கடைசியாகப் பழத்தைக் கண்டு பிடித்து உண்டு திருப்தி யடைவது போல,ஜீவராசிகள் இப்பிரபஞ்சமாகிற விருட்சத்தில் மெல்ல மெல்ல நானாவிதத் தொழில்களிலும் உழன்று கடைசியாக உண்மைப் பதத்தை யடைந்து ஒடுங்கி உபசாந்த நிலைமையைப் பெறுவதாம்.

* * * *

சத்யோ முக்தியானது லட்சத்தில் ஒருவரால் அடையமுயற்சித்தற்கு உரியது. எல்லாருக்கும் எளிதில் கைகூடுவதன்று. ஆதலால் மிக்கோரும் கிரம முக்தியையே யடைவர். கிரம முக்தியும் அதிகக் கஷ்டமின்றி யடையப்படும் பொருட்டு, ஜீவராசிகள் அநாவசியமான வழிகளில் வீணே அலைந்து திரியாது கூடிய மட்டிலும் சுலபத்தில் லட்சியத்தை நாடிச் செல்லும் பொருட்டு, விதி நிஷேத தர்மாநுஷ்டானங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. நிஷேதிக்கப்பட வேண்டிய அதர்மங்களை யெல்லாம் விலக்கி, விதிக்கப்பட்டுள்ள தர்மங்களை அநுஷ்டித்து வந்தால் ஜீவராசிகளில்ஒருவருடைய செயல்களுடன் மற்றொருவருடையசெயல்கள் முரண்படாது எல்லாம் ஒற்றுமையாகி இகத்தும் பரத்தும் இன்ப நிலை ஏற்பட்டுவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. இப்பொழுது ஒரு மனிதனைப் பற்றியோ, அல்லது ஒரு குடும்பத்தைப் பற்றியோ, அல்லது ஒரு ஜாதியைப் பற்றியோ அல்லது ஒரு மதத்தைப் பற்றியோ உள்ள தர்மங்களைப்பற்றி நாம் விசாரணை செய்ய வரவில்லை. முப்பத்திரண்டு கோடி ஜனங்களால் நிறையப்பட்டு, சகல தேயத்தினராலும் சகல மதத்தினராலும் வசிக்கப்பெற்று, சீரும் செல்வமும் நிறைந்து அந்நிய நாட்டினர்களின் கவனத்தை எப்பொழுதும் கவர்ந்துகொண் டிருக்கின்ற இப்பெரும் பாரதகண்டத்தில் பிறந்து வளர்ந்து பெருமையை யடைந்து விளங்கும் உனக்கு விதிக்கப்பட்டுள்ள தர்மம் யாது? இதுவே நமது கேள்வி.

*

உலகத்தில் ஞான வொளி மங்கியபொழுதெல்லாம், ஜனசமூகங்கள் அலங்கோலமடைந்து சீரழிந்த பொழுதெல்லாம், உலகத்திற்கு ஞானவொளிபரப்பி ஜனசமூகங்களைச் சீருறச்செய்திருக்கின்றாய். உனது புத்திசாமர்த்தியத்தினாலேயே நீ அநேகஜனசமூகங்களை அழிந்து போகாமல் ரட்சித்திருக்கிறாய். உனது விரிந்த ஹிருதயத்தில் சமஸ்தகோடி ஜீவராசிகளும் இருக்க இடம் கொடுத்திருக்கிறாய். உலகத்தில் எங்காவது ஒரு சிறுபான்மையோராவது ஜடத்துவத்தில் சிக்காமல் ஈஷணாத் திரயங்களினின்றும் விடுபட்டு "யான்," "எனது" என்ற அகங்கார மமகாரங்களற்றுச் சமஸ்தகோடி ஜீவராசிகளும் சுகமேவாழ்க என்ற நித்தியப் பிரார்த்தனையை உடையவர்களாயிருப்பார்களானால், அவர்கள் அப்படி இருப்பதும் உனது முன்னோர்களின் இடைவிடாத என்றும் குன்றாத ஆத்மஞானப் பிரகாசத்தின் சாயையினால் தான் என்று அறிந்துகொள். க்ஷணபங்குரமான, நிமிஷந்தோறும் மாறுதல் என்னும் நியதிக்குட்பட்ட இவ்வுலக விஷயங்களை ஆய்ந்து அறிந்து துச்சமென்றுதள்ளி, தேவேந்திரப்பட்டத்தையும் திரணமாகமதித்து எப்பொழுதும் மாறுபடாத இன்பாநுபூதி நிலையையடைவதையே லட்சியமாகக் கொண்டு, அவ்வின்பாநுபூதி நிலையை எளியோர், வலியோர் ஆகிய எல்லோரும் அநாவசியமான அதிகப் பிரயாசையின்றி அடையும்பொருட்டு அதற்குவேண்டிய மார்க்கங்களைச் செப்பனிட்டு அவற்றை ஸ்ருதி, ஸ்மிருதி, புராண, இதிகாசாதிரூபங்களாக உனது முன்னோர்கள்செய்து வைத்தனர். பிரபஞ்சத்தை அற்பமென்று அலட்சியமாகக் கருதினதினாலேயே நமது தேசமானது இத்தகைய தாழ்ந்த நிலைக்குவந்துவிட்டது என்றுசிலதேசாபிமானிகள் கருதுகின்றனர். பிரபஞ்சத்தை அற்பமெனக்கருதிப் பிரபஞ்சத்தினும் எவ்வளவோமடங்கு பெரிதான, "மகத்துக்கு மகத்தாயும் அணுவுக்கு அணுவாயும்" உள்ளவஸ்துவை அநுபவத்தில் அடைந்ததினாலேயே நமது ஆர்யஜனசமூகமானது என்றும் சிரஞ்சீவியாகி எல்லோராலும்கொண்டாடப்பெற்று இன்னும் நிலைத்திருக்கின்றது. ஆனால்நமது ஜனசமூகமானது அந்நியநாடுகளை ஜெயிக்கவில்லையே, அந்நியநாடுகளில்நமது வியாபாரத்தைப்பெருக்கி ஆதாயம் பெறவில்லையே, அந்நியநாடுகளில் நமது தொழில்களைப் பரப்பவில்லையே, நமது ஜனசமூகமே அந்நியர்களுக்கு அடங்கியிருக்கவேண்டியது வந்துவிட்டதே; இப்படியெல்லாம் இருக்க, நமது ஜனசமூகம் உயிருடனிருந்தென்ன, இல்லா



மற்போயென்ன? என்று சிலதேசாபிமானிகள் கருதுகின்றார்கள். அவர்கள் ஆத்மஞான பலத்தின் அருமை பெருமைகளை அறியாதவர்கள். இப்பொழுது இப்பூவுலகெங்கும் ஏகச்சக்ராதிபத்தியம் செலுத்திவரும் இங்கிலாந்து தேசத்தையும் அடக்கி எங்கும் தன்னரசுசெலுத்திவந்த ரோமராஜாங்கம் இப்பொழுது எங்கே? உலகமெங்கும் பிரக்கியாதிபெற்று நிகரில்லா ஆணைசெலுத்திவந்த க்ரேக்கர்களுடைய சக்ராதிபத்தியம் எங்கே? உலகெங்கும் கிடுகிடு என்று நடுங்கும்படி செய்துவந்த நவாப் தர்பார்கள் இப்பொழுது எங்கு எப்படிப் பறந்து விட்டன? இவற்றின் அழிவுக்குக் காரணம் ஸ்வதர்பங்களைக் கைவிட்டு ஜடர்களைப்போன்று அத்தேசத்தார் ஒழுகினமையினாலேயாமென்று நீ அறிவாயாக.

* * *

அந்நியநாடுகளை ஸ்தூலபலத்தால் ஜயிப்பதும் கைத்தொழில் வியாபாராதிகளை எங்கும் பரப்புவதுமே ஒரு ஜனசமூகத்திற்கு அழியாப்பதத்தை அளிக்கா. விருட்சம் தளிர்த்துப் பூத்துக்காய்த்துப் பண்டு பலாதிகள் உண்டாகவேண்டுமானால், அவ்விருட்சத்திற்கு அடியில் வேருக்கு நீர்வார்க்கவேண்டுமே யொழிய, மரத்தின் உச்சியில் நீர்வார்த்தால் யாதொருபயனும் உண்டாகாது. அதுபோலவே பிரபஞ்சத்திற்கு வித்தாயிருக்கப்பட்ட ஆத்மவஸ்துவைப்பற்றியுள்ள ஞானத்தையே பயிற்சிசெய்து வளர்த்து அந்த ஞானத்தை அஸ்திவாரமாகக் கொண்டு ஜனசமூகத்தை நிலை நிறுத்தினாலொழிய எந்த ஜனசமூகமும் நிலைத்திராது. அதனாலேயே ஆத்மஞானத்தை அஸ்திவாரமாகக் கொண்டுள்ள ஆர்ய ஜனசமூகம் என்றென்றும் நிலையாயிருக்கின்றது. ஜடரூபமான பிரபஞ்சத்தை உண்மையென்று மயங்கிச்சுழலும் ஜனசமூகங்கள் அடிக்கடி நிலைகுலைந்து அழிகின்றன. ஆதலால் உனது ஜனசமூகத்திற்கு ஆணிவேர்போன்றது ஆத்மஞானமாகும். ஆத்மஞானத்திலேயே பிறந்தவன் நீ, ஆத்மஞானத்திலேயே வளர்ந்தவன் நீ,— ஆத்மஞானமே உனதுசொரூபம். அந்தகாரம்நிறைந்த இவ்வுலகத்திற்கு நீ ஓர்ஞானதீபம்போன்றிருக்கிறாய். ஆகையால் நீசெய்யவேண்டியதர்மம் உலகிலுள்ள சமஸ்த ஜீவராசிகளுக்கும் ஞானதானமாம். இப்பொழுது நீயே பிரமித்து உன் ஸ்வய ஞானத்தையும் ஸ்வதர்மத்தையும் கைவிட்டு அந்நிய ஞானத்தையும் அந்நிய தர்மங்களையும் மேற்கொண்டாய். ஸ்ருதி, ஸ்மிருதிகளில் அடங்கிய மந்திரங்கள், தந்திரங்கள் இவற்றினுடைய ரஹஸ்யார்த்தங்களையும் பஹிரங்கபாவனைகளையும் ஆய்ந்து அறிவதற்குப் பொறுமையில்லாது போய்விட்டது. எங்காவது ஒருசில வெள்ளிக் காசுகளுக்கு

இரவும் பகலும் சேவகவிர்த்தி புரிந்து திண்டாடுவதையே லட்சியமாகக் கொண்டுவிட்டாய். இப்பொழுதாவது விழித்துக்கொள். சகல ஜனசமூகங்களும் தங்களுடைய க்ஷேமாபிவிருத்தியின் பொருட்டு உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பா, அமெரிக்காக் கண்டவாசிகள் உனது ஆத்மஞானவாரியைப் பருகி வற்றச்செய்ய அவாவுற்றவரா யிருக்கின்றனர். ஆனால் நீயோ ஜடனைப்போன்று ஒழுக முற்பட்டிருக்கின்றாய். இதனால் நீ உயர்வடையமாட்டாய். ஆகையால் உனது தர்மத்தை நீ மறவாது செய்யக் கடவாய். மனத்தைத்தெளிவு செய்து திடப்படுத்திக் கொள். ஆர்ய புத்ரனே! கண் விழித்துப் பார்.

## பாரத புத்திரர்களின் பராக்கிரமம்

(முன் தொடர்ச்சி.)

வீராதி வீரராகிய பாஜிப்ரபு ஐம்பது வாட்படை வீரர்களைத் தன்னுடன் இருக்க உத்தரவு செய்யும்படி ஸிவாஜியைக் கேட்டவுடனே, தானாஜி மால்ஷுரே "ஏ- பாஜி! நன்கு உரைத்தாய். இந்த ஆயிரக்கணக்கான மொகலாயப் படைகளை நீ இச்சிறு சைனியத்துடன் எதிர்த்து நின்று போர் புரிந்து வீரஸ்வர்க்கம் அடைவாயாகில், நாங்கள் திரும்பி வந்தவுடன், ஆகாயமளாவ அக்கினி வளர்த்து அந்த அக்கினியில் உனது சரீரத்தைநான் தகிப்பேன். தட்சிணதேசம் முழுதும் அந்த அக்கினியின் பிரகாசத்தைப்பார்த்து "இதோ நமது வீராதி வீரர், தேசபக்த சிரேஷ்டர், தேச உத்தாரணத்தின் நிமித்தம் தம்மைத் தியாகம் செய்து கொண்டதீரர், பாஜிப்ரபு பிரகாசிக்கிறார்" என்று ஓர் சப்தமாகும்படி, அந்தச்சப்தமானது உலகுள்ளளவும் ஒலியும் எதிரொலியுமாகி முழங்கச் செய்கிறேன்" என்றான். பாஜிப்ரபு புன்னகை புரிந்துகொண்டே "என்னை நீ தகிக்க வேண்டாம். இந்த நாற்றச் சரீரமானது அக்கினியால் தகிக்கப்பட்டு ஈற்றில் ஒரு பிடிசாம்பலுக்குக் கூட வகையில்லாமற் போனாலென்ன? அல்லது இச்சரீரத்தை நாய் நரிகள், காகம் கழுகுகள் பிடுங்கித்தின்று கொழுத்துத் திரிந்தாலென்ன? இவ்விஷயத்தைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. சாட்சாத் ஜகதீஸ்வரியின் பணிவிடைகளைச் சிரமேற்கொண்டு நடப்பதே எனது கடமை" எனலும், ஸிவாஜி மகாராஜா அவர்கள் அடங்கிய மனத்துடன், அமைதியும் அன்பும் நிறைந்த முகத்துடன் பாஜிப்ரபுவைப் பார்த்து "பாஜி! நாம் இப்பொழுது பிரிகின்றோம். ஆனால் நாம் மறுபடியும் சந்திப்பது நிச்சயம் நித்தியமும் நிச்சயமுமில்லாத இவ்வுலகில் சந்திக்காவிட்டாலும், நாம் நமது வேலைகளினின்றும் விடுபட்ட பொழுது



நமது மாதாவின், மடியிலேயே விளையாடச் செல்வோம். ஆதலால் அங்கு நாம் சந்திப்பது நிச்சயம்" என்று கூறி நவரத்தினங்கள் பதித்த தனது தலைப்பாகையை எடுத்துப் பாஜியின் தலையில் வைத்து "மகா சக்தி அநுக்கிரகிப்பாள்" என்று ஆசீர்வதித்து விட்டுத் தனது பெருஞ் சைநியங்களுடனே மலைக்குப் பின் மலையாகத் தாண்டி நடந்தார். மொகலாயப்படைகள் "தீன்," "தீன்" என்று திக்குகளெல்லாம் திடுக்கிடக் கூவிக்கொண்டு பாஜியும் அவரது சிறுபடையும் காவல் இருக்கும் கணவாயை நோக்கி வந்து விட்டன. சமுத்திரமானது பயங்கரமாகக் கொந்தளித்துக் கோஷிக்கும் காலங்களில் அடிக்கும் பிரமாண்டமான அலையைப்போல மொகலாயப்படைகள் கணவாயைத் தாக்கின. மகாராஷ்டிர வீரர்களுக்குள் "ஹர, ஹர, மகாதேவ!" என்ற ஒரு கூச்சல் ஒவென்று கிளம்பிற்று. அவர்களுடைய கைகளிலிருந்த துப்பாக்கிகளும் கூச்சல் இட்டன. மொகலாயப் படைகள் புறமுதுகிட்டோடின. கணவாய் முனையில் படுகாயப்பட்டவர்களும் பிரேதங்களும் குவியலாகக் குவிந்து கிடப்பதைத் தவிர, போர் முகத்தில் நிற்பதற்கு மொகலாயப்படைகளைக் காணவில்லை. ஆனால் வெகுசீக்கிரத்தில் மொகலாயப்படைகளின் பின்னணியிலிருந்து ரஜபுத்திரர்கள், மொகலாயர்கள், தார்த்தாரிகள், பட்டாணியர்கள் முதலிய சகல வகுப்பினரும் ஏகமாகத்திரண்டு ஆவென வாயைத்திறந்து கொண்டு நெருப்பையும் புகையையும் இடை விடாமல் கக்கி எதிரியெங்கேயெங்கே என்று ஆரவாரிப்பது போலத்திக்குகளெல்லாம் செவிடுபடும்படி முழங்குகின்ற பீரங்கிகளை இழுத்துக்கொண்டு அச்சிறு கணவாயின் மீது பாய்ந்தார்கள். மகாராஷ்டிர வீரர்கள் இருக்கும் இடம் தென்படவில்லை. மொகலாயப்படைகளோ தங்களுடைய பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் மலைப்பாறைகளின் மீது வீணே செலுத்தி அலுத்தார்கள்; கணவாயை நெருங்கினார்கள்; எதிர்ப்பதற்கு எவரும் இல்லையென்று குதூகலித்தார்கள்; எதிரிகள் ஓடிவிட்டார்களென்று களித்தார்கள். கணவாயினுள் நுழைந்தார்கள்; திடீரென்று இருபுறங்களினின்றும் ஏகமாகத் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. மகாராஷ்டிர வீரர்கள் அக்கணவாயின் இருபுறங்களிலுமுள்ள விருட்சங்களுக்குப் பின்னும் பாறையிடுக்குக்களிலும் சந்தடி செய்யாமல் ஒளிந்து கொண்டு மொகலாயப்படைகளைச் சமீபத்தில் வரவிட்டார்கள். கணவாய் மிகவும் சிறியதாகையால், மொகலாயர்கள் எதிரிகள் இருக்கும்

இடம் இன்னதென்றறியாது திக்குமுக்காடி மூலைக்கு ஒருவராகச் சிதறினார்கள். மொகலாயப்படையில் பிணங்கள் குவிந்துவிட்டன. கலக்கமுற்ற சில மொகலாயர்கள் பின்னுக்கு ஓடினார்கள்; கோபமுற்ற சிலர் முன்னுக்குச் சென்றார்கள். பின் செல்வதா? முன் செல்வதா? என்று அறியாது திண்டாடி ஸ்திரமற்று இருக்கும் இச்சமயத்தில் மகா ராஷ்டிரக் குண்டுகள் மொகலாயர்களை மறு உலகம் சேர்த்துக் கொண்டிருந்தன. முன் சென்ற மொகலாயத் தலைவர்கள் ஒவ்வொருவராக அடிபட்டு வீழ்ந்து மடிந்தார்கள். முன் சென்றவர்கள் வீழ்ந்து பிணக்குவியலாயிருப்பதைக் கண்டு பின்நின்றவர்கள் புறமுதுகிட்டோடினார்கள்.

மொகலாயப் படைகள் ஒன்றுசேர்ந்து யோசனை செய்தன! சைந்நியாதிகள் ஒருவரோடொருவர் கலந்து ஆலோசனை செய்தார்கள்; சைந்நியமானது ஒழுங்காக அணிவகுக்கப்பட்டது. முதலாவது திடச்சித்தமும் தைர்யமும் மிகுந்த ஒருகாலாட்படையானது ஒழுங்காயும் மௌனமாயும் நடந்து முன் சென்றது; இதற்குப் பின் உயர்ந்த தடியர்களாயுள்ள பட்டாணியர்களாய காலாட் படைபொன்று புறப்பட்டது; இதற்குப் பின்னால் பலத்த சரீரக் கட்டுடைய ரஜபுத்திரப்படையொன்று; இதற்கும்பின்னால் ஆக்ராவின் சைந்நியம்; இங்ஙனமாக மொகலாயப்படைகள் கணவாயை நோக்கிப் புறப்பட்டன.

இவற்றையெல்லாம் கணவாயில் ஒருமறைவிலிருந்து பார்த்துக் கவனித்துக் கொண்டிருந்த பாஜிப்ரபு தனது படையைநோக்கி, "சகோதரர்களே! நாம் முன் எதிர்த்தது பெரிதன்று; பவானி தேவியின் வாளாயுதங்களுக்கு இன்று நல்ல இரைகிடைக்கும். நாம் இறப்பது நிச்சயம்; நமது தேசமானது மகம்மதியக்கொடுங்கோன்மையினின்றும் விடுபட்டு ஸ்வதந்திரமாயிருக்கவிரும்புகிறது என்பதற்கு அத்தாட்சியாக நாம்மரிக்கக்கடவோம்" என்று சொல்லி வாய்மூடுவதற்குள்ளாக, மொகலாயப்படைகள் அந்தப் பயங்கரமான கணவாய்க்குள் வெகுஜாக்கிரதையுடன் பிரவேசித்தன. அவர்கள் ஜாக்கிரதையாயிருந்தும் பிரயோசனமில்லாது போயிற்று; கணவாய்க்குள் நுழைந்தவர்கள் எல்லோரும் கீழே விழுந்தார்கள். பின் நின்றவர்களும் விடாமுயற்சியுடன் முன்னேறினார்கள்; அவர்களும் கணவாய்க்குள் நுழைந்தார்கள்; அவர்களும் விழுந்தார்கள். பழைய பிணங்களின்மேல் புதிய பிணங்கள் விழுந்தன.

(தொடரும்)

சிவம்.



## ஓர் உத்தம புருஷரின் உபதேசம்.

ஏ, தற்கால நாகரிகமே! நீ பெரியோர்களுடைய உபதேசங்களிலும் செய்கைகளிலும் உண்மையை ஆராய்ந்து அநுபவத்தில் அறிய வேண்டும். ஒரேகாலத்தில் ஈஸ்வரனையும் உலகத்தையும் உன்னால் சேவிக்க முடியாதென்று இதோ வேதாந்தமானது உறத்த பாஷையில் கூறிக்கொண்டிருக்கின்றது; உலக சம்பந்தங்கள், உலகப்பற்றுக்கள், உலகக்கட்டுக்கள், உலகச்சொத்துக்கள், உலக ஆசைகள், உலக ஆவஸ்யகங்கள் ஆகிய இவற்றைப்பற்றியுண்டாகும் எல்லா நினைப்புகளும் எப்பொழுது ஈஸ்வரனிடத்தில் உருகி விடுகின்றனவோ, அந்தக்காலமே ஆத்மாநுபவ காலமாம்.

* * *

உலக ஜனங்களே! உண்மையாதெனில், ஈஸ்வரனையும் உலகத்தையும் ஸேவிக்க உங்களால் முடியாது; இரண்டு எஜமானர்களுக்கு உங்களால் ஒரேகாலத்தில் ஊழியம் செய்ய முடியாது; உலகச் சிற்றின்பங்களிலுழன்று கொண்டே, உங்களால் சத்தியாநுபவத்தையும் அடைய முடியாது. இது உண்மை, உண்மை, உண்மை.

* * *

கீழே விழுந்து கால்களில் காயமடைந்த ஒருவன் முகத்தைச் சிடுசிடுத்துக்கொண்டு, "என்ன கொடிய, ஈவிரக்கமற்ற ஆகருஷண சக்தியிது? என்னைக் கீழே விழத்தட்டி விட்டது" என்று ஆகருஷண சக்தியைக் குறை கூறினான். ஆகருஷண சக்தி அழிந்து போவதைவிட லட்சக்கணக்கான ஜனங்கள் கீழே விழுந்து கால்களை யொடித்துக் கொள்ளுதல் நலம். ஆகருஷண சக்தியுடன் போர்புரியாதே. நீ ஜாக்கிரதையாக நடந்தால், நீ கீழே விழமாட்டாய். உனது வீழ்ச்சிகள் எல்லாம், உனது காயங்கள் எல்லாம், உனது துன்பங்கள் எல்லாம், உனது கவலைகள், கஷ்டங்கள் எல்லாம், உனக்குள்ளிருக்கிற ஏதோ பலயீனத்தாலேயே உண்டாயவை. அதை யகற்றி விடு. சந்தர்ப்பங்களுடன் சண்டையிடாதே. உன் சகோதரரைக் குற்றங் கூறாதே. பிறர்மீது குற்றத்தைச் சுமத்தாதே. ஆனால் உனது சொந்தப் பலயீனத்தை யகற்றி விடு. நீ எப்பொழுதெல்லாம் விழுகிறாயோ, துன்பப்படுகிறாயோ, கஷ்டப்படுகிறாயோ, அப்பொழுதெல்லாம் உன்னுள் உள்ள ஏதோ

பலயீனத்தினாலேயே அவை நேரிடுகின்றன என்று நன்றாய் அறிந்து கொள்.

*　　　*　　　*

உள்ளேயுள்ள இந்தப்பலயீனமாவது யாது? சரீரமும் இந்திரியங்களுமே நீ என்று உன்னை நினைத்துக் கொள்ளும்படி செய்கிற அந்தகாரமயமாகிய அஞ்ஞானமே அந்தப் பலயீனமாம். அதை அகற்றி விடு, அதைக்துரத்தி விடு; அப்பொழுது சக்தியே நீயாய் விடுகிறாய். உனது குடலைப்பற்றியாவது ஈரலைப்பற்றியாவது எப்பொழுது உனக்கு நினைப்பு உண்டாகின்றது? அவற்றினிடத்தில் வியாதி ஏற்பட்டபொழுது தானே அவற்றைப்பற்றியுள்ள நினைப்பு உண்டாகின்றது உனதுசரீரம் சரியாயிருக்கும்பொழுது நீ அதைப்பற்றி நினைக்கிறதில்லை.

*　　　•　　　*

அது போலவே, உனக்குச் சரீர உணர்ச்சியுண்டாகும் பொழுது, அதனாலேயே தெரிகின்றது யாதெனில், எங்கோ ஏதோ வியாதி உண்டாயிருக்கிறது. நீ ஆரோக்கிய திடகாத்திரத்துடன் இருக்கும்பொழுது, நீ தைர்யமும் பலமுமுள்ளவனாகத் தோன்றுகிறாய்; அப்பொழுது உன்னிடத்தில் சரீர உணர்ச்சியில்லை. உனக்கு இவ்வுலக முழுதும் உனது சரீரமாய் விடும். நீ அந்த நிலைமையை யடைந்து விட்டால், அப்பொழுது ஆநந்தம் உன்னுடையதே. பின்னர் இதாவது அல்லது அதாவது வேண்டுமென்று நீ ஒருபொழுதும் ஆசையுறமாட்டாய். உனக்குள் இருக்கிற இந்தப்பலயீனம் தான் அடிக்கடி உன்னை நிலை கலங்கச் செய்கிறது; இந்த அஞ்ஞானம் தான் உனக்குச் சரீர உணர்ச்சியை உண்டாக்கி விடுகிறது.

## ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

(பிரஹ்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் மொழிபெயர்த்தது).

அரிய—

நினது கடிதம் இப்பொழுது தான் கிடைத்தது. மற்ற மதங்களைப் பார்க்கிலும் கிறிஸ்தவ மதமே சிறந்ததென்று ருசுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் மதங்களின் மகா சபை ஏற்பாடு செய்யப்பட்டது; ஆனால், அவ்வித எண்ணத்துடன் சபை கூட்டப்பட்ட போதிலும், ஹிந்து மதமாகிய தத்துவஞான மதமானது தனது நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்குச் சக்தியுள்ளதாயிருந்தது. டாக்டர் பா—அவர்களும் அவரைப் போன்ற மற்ற மனிதர்களும் வைதீகப் பிடிவாதம் மிகுந்தவர்கள்; உதவிக்கு நான் அவர்களை எதிர்பார்ப்பதில்லை.................. ஈஸ்வரன் எனக்கு இந்தத் தேசத்தில் அநேக ஸ்நேகிதர்களை அனுப்பியிருக்கிறார்; அவர்கள் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே வருகின்றார்கள்.........ஈஸ்வரன் அவர்களை ஆசிர்வதிப்பாராக............இந்தத் தேசத்தின் இரண்டு பிரதான நகரங்களாகிய போஸ்டனுக்கு நியூயார்க்குக்குமாக நான் அலைந்து கொண்டிருக்கிறேன்; இவ்விரண்டு நகரங்களில் போஸ்டனை இந்தத் தேசத்திற்குப் புத்தி சக்தி என்று சொல்லலாம்; ந்யூயார்க்கைப் பணப்பை என்று சொல்லலம். இவ்விரண்டு நகரங்களிலும் யான் அடைந்துள்ள ஜயம் மிகுதியே. சமாச்சாரப் பத்திரிகைகள் கூறுவனவற்றைப் பற்றி நான் கவனிப்பதேயில்லை. அச்சமாச்சாரப் பத்திரிகைகளில் எதையாவது நான் உனக்கு அனுப்புவேன் என்று நீ எதிர்பார்க்க வேண்டாம். வேலை ஆரம்பிப்பதற்குச் சிறிது சத்தம் அவசியமாயிருந்தது. அளவுக்கு மிகுதியாகவே நாம் சத்தம் செய்து விட்டோம்.



நான்—ருக்கு எழுதியிருக்கிறேன்; முன்னமேயே உனக்கும் இன்னின்னவாறு செய்யவேண்டுமென்று தெரியப்படுத்தியிருக்கிறேன். இப்பொழுது உன்னால் என்ன செய்ய முடியும் என்பதை எனக்குக் காட்டு. இப்பொழுது மூடப் பேச்சு உதவாது; உண்மையான வேலை தான் தேவை; ஹிந்துக்கள் தங்களுடைய பேச்சை உண்மையான வேலையினால் ருசுப்படுத்த வேண்டும். அவர்களால் முடியா விட்டால், ஒன்றையும் அடைவதற்கு அவர்கள் தகுதியுடைவர்கள் அல்ல; அவ்வளவுதான்... .........நானே உண்மையைப் போதிக்க விரும்புகிறேன்; இங்காயினும் சரியே, வேறெங்காயினும் சரியே அதைப்பற்றி எனக்கு விசாரம் இல்லை.

இனிமேல், ஜனங்கள் உன்னைப் பற்றியாவது என்னைப்பற்றியாவது அநுகூலமாகவேனும் பிரதிகூலமாகவேனும் சொல்வதைப் பற்றிச் சிறிதும் கவனிக்காதே. மேன் மேலும் வேலை செய், ஸிம்ஹங்களாயிருங்கள்; ஈஸ்வரன் உங்களை ஆசிர்வதிப்பார். நான் மரிக்கும் வரையில் இடைவிடாது வேலை செய்வேன்;

மரணத்திற்குப் பின்னும் கூட உலக நன்மைக்காக நான் வேலை செய்வேன். உண்மையானது பொய்யைப் பார்க்கிலும் எண்ணற்ற எத்தனையோ மடங்கு கனம் மிகுந்தது; அப்படியே நன்மையும். உன்னிடத்தில் இவை இருக்குமானால், அவை தமது ஸ்வய சக்தியினாலேயே தமது வழியை உண்டாக்கிக் கொள்ளும்.

* * * சிறந்தோர்களில் ஆயிரக் கணக்கானவர்கள் என்னைப்பற்றி கவலை யெடுத்துக்கொண் டிருக்கிறார்கள்; உனக்கும் இது தெரியும்; ஆகையால் ஈஸ்வரனிடத்தில் நம்பிக்கை வை. என்னைப்பற்றி பத்திரிகாப் பிரகாசத்தினால செய்யக் கூடிய மதிப்பைவிட மிகப் பெரிய ஒரு மதிப்பை இந்தப் பூமியில் நான் மெல்ல உண்டாக்கிக் கொண்டு வருகிறேன். * * *

ஒழுக்கம், பரிசுத்தம், உண்மை—புருஷத்துவம் இவற்றின் சக்திதான் பெரிது. இவ்விஷயங்கள் என்னிடம் இருக்கும் வரையில், நீ அமைதியா யிருக்கலாம்; எனது தலையிலுள்ள ஒரு ரோமத்தைக் கூட அசைக்க ஒருவராலும் இயலாது. அவர்கள் முயன்றாலும் அவர்கள் தவறிவிடுவார்கள் என்று ஈஸ்வரன் கூறுகின்றார்..........புஸ்தகங்களும் கோட்பாடுகளும் போதும். ஜனங்களின் ஹிருதயங்களைக் கலக்குவதற்கு ஒரே வழியும் மிக்க உயர்ந்ததுமாயுள்ளது ஜீவிதம் தான்; அதுதான் பௌருஷ சக்தியைக் கொண்டு செல்கிறது......ஒவ்வொரு நாளும் ஈஸ்வரன் எனக்கு ஆழ்ந்த அறிவை மேன் மேலும் அளித்துக் கொண்டு வருகிறார். வேலை செய், வேலை செய், வேலை செய்.............. மூடப் பேச்சுக்களை நிறுத்திவிடு; ஈஸ்வரனைப் பற்றியே பேசு. ஜீவித காலம் மிகவும் சொற்பந்தான்; வஞ்சகங்களைப் பற்றியும் மோசங்களைப் பற்றியுமே பேசிச் செலவழிக்கக் கூடாது.

ஒவ்வொரு ஜன சமூகமும் தன்னைத் தானே ரட்சித்துக் கொள்ள வேண்டும் என்பதை நீ எப்பொழுதும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்; அப்படியே ஒவ்வொரு மனிதனும்; உதவிக்கு மற்றவர்களை எதிர்பாராதே; நான் இங்குக் கடினமாக வேலை செய்து உனது வேலைக்கு அடிக்கடி சிறிது பணம் அனுப்புவதற்குச் சக்தியுள்ளவனா யிருப்பேன்; ஆனால் அவ்வளவுதான். நீ அதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாயின், வேலையை நிறுத்திவிடுதல் நலம். எனது எண்ணங்களுக்கு இது ஒருபெரிய பூமி



யென்றும் ஹிந்துக்களாயினும் சரியே, மகம்மதியர்களாயினும் சரியே, கிறிஸ்தவர்களாயினும் சரியே, அதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை யென்றும் ஆனால் ஈஸ்வரனை நேசிக்கிறவர்கள் எப்பொழுதும் எனது ஊழியத்தை ஏற்றுக்கொள்ளப் பாத்திரர்களே யென்றும் அறிந்துகொள்.

* * * நான் அமைதியாயும் மௌனமாயும் வேலை செய்யப் பிரியப்படுகிறேன்; ஈஸ்வரன் எப்பொழுதும் என்னுடன் இருக்கிறார். உன்னால் முடியுமானால், அதிக ஆத்திரத்துடனும் சிறிதும் ஸ்வய நலமற்றும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பரிபூரண பரிசுத்தமாயும் இருந்துகொண்டு என்னைப் பின் தொடர்ந்து வா. என் ஆசீர்வாதங்கள் உன்மீது இருக்கின்றன. இந்தக் குறுகிய ஜீவிதத்தில், ஒருவருக் கொருவர் ஸ்தோத்திரம் செய்து கொள்வதற்கு நேரம் இல்லை. யுத்தம் முடிந்தபிறகு, நாம் நமது ஹிருதயங்கள் திருப்தி யுறும்படியாக ஒப்புவமையிட்டு ஒருவரோடொருவர் ஸ்தோத்திரம் செய்து கொள்ளலாம். இப்பொழுது பேசாதே; வேலை செய், வேலை செய், வேலை செய்! இந்தியாவில் என்றென்றும் நிலையாயிருக்கும்படி ஒன்றையும் நீங்கள் செய்திருப்பதை நான் பார்க்கவில்லை—நீங்கள் ஏற்படுத்தியுள்ள மத்திய ஸ்தலத்தை நான் பார்க்கவில்லை—நீங்கள் கட்டியிருக்கிற ஒரு சோலையாவது பொதுக் கட்டடத்தையாவது நான் பார்க்கவில்லை—உங்களுடன் சேர்ந்து வேலை செய்வதற்கு ஒருவரையும் நான் பார்க்கவிலலை. அளவுக்கு மிஞ்சிய பேச்சுத்தான்! வீண் பேச்சு! பேச்சு! நாம் பெரியவர்கள், நாம் பெரியவர்கள்! மூடத்தனம்! நாம் பைத்தியக்காரர்கள். நாம் அப்படித் தான் இருக்கிறோம். பெயர், கீர்த்தி, மற்ற எல்லா ஏமாற்றங்கள் இவற்றைப் பின்பற்றிச் செல்லும் இந்த முயற்சி—எனக்கு அவை எதற்கு? அவற்றைப்பற்றி நான் ஏன் லட்சியம் செப்ப வேண்டும்? நூற்றுக் கணக்கானவர்கள் ஈஸ்வரனிடத்திற்கு வருவதைப் பார்க்கப் பிரியப்படுகிறேன்! அவர்கள் எங்கே? அவர்களை நான் விரும்புகிறேன், அவர்களைப் பார்க்க நான் விரும்புகிறேன். நீங்கள் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். எனக்கு நீங்கள் பெயரும் கீர்த்தியும் தானே கொடுக்கிறீர்கள். பெயரையும் கீர்த்தியையும் விட்டொழித்து விடுங்கள்; எனது தைரியமுள்ள மனிதர்களே, வேலை செய்யப் போங்கள்; வேலைசெய்யப் போங்கள். இன்னும் நீங்கள் என்னிடத்துள்ள அக்கினியை (ஆத்திரத்தை)

அடையவில்லை—நீங்கள் என்னை அறியவில்லை! ஸோம்பேரித்தனம், சுகாநுபவம் ஆகிய பழையமார்க்கங்களில் நீங்கள் ஓடுகிறீர்கள். சோம்பேரித்தனத்தைத் தொலைத்துவிடுங்கள், இங்காவது இனிமேலாவது அடையவிருக்கும் எல்லாச்சுகாநுபவங்களையும் தொலைத்துவிடுங்கள். அக்கினிக்குள் அமிழ்ந்து, ஜனங்களை ஈஸ்வரனிடத்திற்குக் கொண்டு வாருங்கள்.

நீங்கள் எனது அக்கினியை (ஆத்திரத்தை) அடையவேண்டு மென்பதும் நீங்கள் மிகுந்த உண்மை யுள்ளவர்களாயிருக்கவேண்டு மென்பதும் நீங்கள் யுத்த களத்தில் வீரர்களுடைய மரணத்தை யடையவேண்டு மென்பதுமே விவேகானந்தரது இடைவிடாத பிரார்த்தனை.

## சமாச்சாரக்குறிப்புகள்.

1914-ம் வருஷம் சென்றுவிட்டது. இந்த வருஷமானது உலகிற்பெரியதோர் யுத்தத்தைக்கிளப்பி விட்டது. லட்சக்கணக்கான மானிடர்களைக் கொள்ளைகொண்டது. இவ்வருடம் எப்பொழுது நீங்கி, சமஸ்த ஜனசமூகங்கட்கும் சாந்தத்தையும் சமாதானத்தையும் அளிக்கும்படியான புதியவருஷம் எப்பொழுது பிறக்குமோ? என்று ஆவலுடன் எதிர்பார்த்தோம். அப்படியே 1915-ம் வருஷம் பிறந்து விட்டது. இவ்வருடமாவது ஐரோப்பாவில் பிடித்தெரியும் பெருநெருப்பை சீக்கிரத்தில் அணைத்துவிடாதா? எல்லாம்வல்ல இறைவன் அருள் எப்படியோ?

* * *

கிறிஸ்து சென்ற வருடத்திலும் டிசம்பர் மீ 25-ம் தேதியன்று பிறந்துவிட்டார். ஆனால் அவருடன் பிறந்தசமாதானமோ பறந்து விட்டது. ரோம் நகரிலுள்ள, கத்தோலிக் கிறிஸ்தவர்களுடைய உலககுருவாகிய போப் என்பவர் கிறிஸ்துவின் ஜனனதினக்கொண்டாட்டச் சமயத்திலாவது யுத்தத்தைநிறுத்திவைக்கவேண்டுமென்று ஐரோப்பிய அரசர்களைக் கேட்டுக்கொண்டார். ஆனால் அவருடைய வேண்டுகோள் செவிடன்காதில் ஊதியசங்குபோலாயிற்று. கிறிஸ்துவின் ஜனனதினத் தன்றும் யுத்தம் நடந்தது. முன்னொருதரம் கிறிஸ்து மூன்றுநாள் கழித்து உயிர்த்தெழுந்து உலகில் தோன்றியதுபோல, இப்பொழுது 1915 - வருஷங்களுக்குப்பின் உயிர்த்தெழுந்து திடீரென்று ஐரோப்பிய



யுத்தகளத்தில் தோன்றுவாராயின், அதுவும் அன்றிரவுதோன்றியிருப்பாராயின், தமது சிஷ்யர்கள் என்றுசொல்லிக்கொண்டு திரியும் கிறிஸ்தவஅரசர்கள்செய்யும் தேசாபிமானக் கொலைகளை எப்படிச் சகித்திருப்பார்? ஆயினும், இந்தக்கிறிஸ்தவர்கள் யேசுகிறிஸ்துவின் ஜனனதினத்தை மறப்பதில்லையாம்! குடித்து வெறிபிடித்து ஆணும் பெண்ணும் அலங்கோலமாகி இஷ்டப்படி குதுகலிப்பதற்கோ?

* * * *

இந்திய ஜனசமூக மகாசபை (காங்கிரெஸ்) யென்று போலிப்பெயர்கொண்டு சென்ற ஏழு வருஷங்களாக நடைபெற்றுவரும் சபையானது சென்ற வருஷமும் நடைபெற்று விட்டது. அச்சபையின் அக்கிராசனாதிபதி யவர்களின் பிரசங்கம் மற்றவர்களுடைய பிரசங்கங்களினும் மேம்பட்டதே. பிரபலமான ஜனசமூகப்பிரதிநிதிகளில் இரண்டொருவரே வந்திருந்தனர். வழக்கம் போலவே பம்பாயிலுள்ள சூத்திரதாரர்கள் இவ்வருஷத்திலும் இச்சபையைத்தங்களுடைய இஷ்டம்போல ஆட்டிவைத்து வேடிக்கை செய்தார்கள். ஜனசமூகவாதிகளையும் இச்சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திய ஜனசமூக அபிப்பிராயமானது நிராகரிக்கப்பட்டது. சில அநாமதேயப்பேர் வழிகள் இவ்வபிப்பிராயத்தை எதிர்க்கவே, நிஷ்பட்சபாத தேசாபிமானிகள் எனப்பட்ட பூபேந்திரநாதவஸு, சுரேந்திரநாதபானர்ஜி முதலியவர்களும் வாய்பேசாது அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். ஆகவே, ஜனசமூகவாதிகளையும் இம்மகாசபையில் சேர்த்துக் கொள்வதற்குச் செய்த முயற்சி தவறிவிட்டது. எவர்காலிலாவது எப்பொழுதும் எதற்கும்விழுந்தேதீரவேண்டும் என்ற கொள்கையையுடைய மிதவாதிகள் தன்மதிப்பைக் காப்பாற்றுவதினாலும் தன் முயற்சியினாலுமே முன்னணியில் வரவேண்டும் என்ற கொள்கையையுடைய ஜனசமூகவாதிகளுக்கு இச்சபையில் இனிமேல் இடங்கொடுக்க ஒருபொழுதும்இசையவே மாட்டார்கள் என்பது நிச்சயம்.

* * * *

ஆசாரச்சீர்திருத்தச்சபையும் அடுத்தாற்போலவே நடந்தது. வழக்கம்போலவே, ஐரோப்பியமாதிரியில் அநேக ஆசாரங்களை ஆர்யஜனசமூகத்திற்குள் புகுத்த வேண்டுமென்று தீர்மானங்கள் பல செய்யப்பட்டன. இச்சபையில் கௌரவ ஸ்ரீ ஸ்ரீனிவாச

சாஸ்திரிகளுடைய ருதுமதி விவாகச்சட்ட மசோதாவும் ஆமோதிக்கப்பட்டது. இவ்விஷயம் பிரஸ்தாபித்தவுடன், ஒருவர் இம்மசோதாவைப்பற்றியுள்ள தீர்மானத்தைச்சிறிது ஆட்சேபித்துப் பேச எழுந்திருந்து இரண்டு வார்த்தைகள் பேசுவதற்குள், ஆசாரச்சீர்திருத்த வீரர்கள் ஆ! வென்றும் ஊ! வென்றும் ஆர்ப்பரித்து அவரையடக்கி விட்டார்கள். கட்சிப்பிரதிகட்சிகளைக் கேட்காது, தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதிக்கும் இவர்கள் தாம் நம்மையெல்லாம் கடைத்தேற்றுவிக்கக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் ஜீவகாருண்ணியஸ்வரூபிகள்.

*　　*　　*　　*

சென்ற வருஷத்திய இந்திய ஜனசமூக மகா சபையில் ஒருதினம் நமது சென்னைக்கவர்னரவர்கள் விஜயஞ் செய்தார். அவர் விஜயம் செய்தவுடன் இந்தியர்களுடைய ராஜபக்தியைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு அனைவராலும் ஆமோதிக்கப்பட்டது. இந்தியர்கள் உண்மையாகவே ராஜபக்தியுள்ளவர்களா? அல்லது சில இந்தியத்துரோகிகள் அடிக்கடி கூறியதுபோல ராஜபக்தியில்லாதவர்களா? என்ற விஷயமானது இப்பொழுது நடக்கும் யுத்தத்தினால் தெளிவு பெற்றுவிட்டது. இன்னும் இந்த யுத்தம் முடிவதற்குள்ளாக ஐரோப்பியர்கள் இந்தியர்களுடைய தன்மையை நன்கு அறிந்து கொள்வார்கள். ராஜபக்தியில் சிறந்தவர்கள் இந்தியர்களே என்று இந்திய மந்திரி முதல் பல ஆங்கிலேயர்களும் அத்தாட்சி கூறிவிட்டார்கள். இப்படியெல்லாம் செய்கையிலேயே இந்தியர்கள் தங்களுடைய ராஜபக்தியை வெளிப்படுத்திக் கொண்டிருக்க, சென்னை கவர்னரவர்களின் முன்னிலையில் ராஜபக்தியைக் குறித்து மாத்திரம் பேசவேண்டிய அவசியமில்லை. சென்னைக்கவர்னரவர்கள் அச்சபையில் விஜயம் செய்திராவிட்டாலும், நிச்சயமாக ராஜபக்தி அச்சபையில் இயற்கையாகவே விளங்கிக் கொண்டிருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் பொதுஜனங்களுடைய க்ஷேமத்தைக் கருதிய ஏதாவதொரு முக்கிய விஷயத்தைக்குறித்து கவர்னரவர்களுடைய முன்னிலையில் தெளிவாக எடுத்துரைத்திருந்தால் மிகவும் மேன்மையாக இருந்திருக்கும். ராஜாங்க அதிகாரிகள் பலரும் அரசாங்க தலைவராகிய கவர்னரவர்களும் விஜயம் செய்தது இச்சபையில் நூதனசம்பவங்களாகும். இவ்விதமாக ராஜாங்க அதிகாரிகள் இச்சபையை ஆதரிக்க முன்வந்திருப்பது ஜனசமூக



க்ஷேமத்திற்கு ஓர் அறிகுறியேயென்று பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். இத்தகைய ஆதரவுடன் இச்சபை செய்யும் காரியங்கள் தேச நன்மைக்குக் காரணமாகுமா? என்பதை நாம் இனிமேல் அநுபவத்தில் பார்க்க வேண்டும்.

*　　*　　*

நகர நிர்மாண விஷயத்தில் நிபுணராகிய கெட்டிஸ் என்னும் ஐரோப்பியபண்டிதர் இப்பொழுது சென்னையரசாங்கத்தாருடைய வேண்டுகோளுக்கிணங்கி சென்னைமாநகரில் ஒரு அடுக்குப் பிரசங்கங்கள் செய்து வருகின்றார். இவர் ஆதிகாலத்து இந்தியக் கொள்கைகளையும் இந்தியபுத்திசாதுர்யத்தையும் மிகவும் ஏற்றமாகப்பேசுவது சிலாகிக்கத்தக்கது. மதுரை, ஸ்ரீரங்கம் முதலிய நகரங்களின் அமைப்பைப் பற்றியும் இந்நகரங்களிலுள்ள க்ஷேத்திரங்களிளின் சித்திர, சிற்ப வேலைகளின் மேன்மையைப்பற்றியும் மிகவும் புகழ்கின்றார். ஐரோப்பியர் வாக்கே வேதவாக்கென்று நம்பி அவர்களைப்பின் பற்றித்திரியும் நாகரிகர்கள் இந்த ஐரோப்பியர் என்ன சொல்கிறாரென்று ஆய்ந்து அறிவார்களா?

*　　*　　*　　*

ருதுமதி விவாகச்சட்ட மசோதாவைப்பற்றி நமக்குள்ள அபிப்பிராயத்தை நாம் நமது சென்ற மாதச் சஞ்சிகையிலேயே தெரிவித்து விட்டோம். இப்பொழுது ஆங்காங்கு இம்மசோதா சட்டமாக்கப்படவேண்டும் என்றும் கூடாதென்றும் கூட்டங்கள் கூடிவிட்டன. அரசாங்கத்தார் செய்கையையே நாம் இனிமேல் கவனிக்கவேண்டும். ஆனால் இம்முறையும் நாம் வற்புறுத்திப் பகிரங்கமாயுரைப்பதொன்றுண்டு; அஃதாவது, அசாஸ்திரீயமாயும் ஆர்யாசாராநுஷ்டானங்கட்கு விரோதமாயும் உள்ள இந்த மசோதாவை அரசாங்கத்தார் சட்டமாக்குவார்களாயின், சாதுக்களாயுள்ள பல்லாயிரம் பிராஹ்மணர்களின் ஹிருதய உணர்ச்சியை அவமதித்தவர்களாவார்கள். அரை குறையாக ஆங்கிலம் படித்து ஸ்வயபாஷையை மறந்துவிட்டு இந்திய ஜனசமூகத்தைத் தாங்களே தாங்கிக் கொண்டிருப்பவர்களெனப் பல்லோர் முன்னிலையிலும் நடித்துக்கொண்டு திரியும் ஒரு சில நவீன நாகரிகர்கள் இந்திய ஜனசமூகமாகார்கள்.

*　　*　　*　　*

யுத்தம் நடந்து கொண்டேயிருக்கிறது; எப்பொழுதுதான் ஓயுமோ ஈஸ்வரனுக்கே வெளிச்சம். கூடிய சீக்கிரத்தில் இந்த

யுத்தத்தில் இன்னும் இரண்டு மூன்று அரசுகள் கலக்கும் போலத் தோன்றுகிறது. இந்த யுத்தம் ஆரம்பித்தது முதலே இந்த அரசுகள் கலக்கத்தயாராகிக் கொண்டிருக்கின்றன; ஆனால் இதுவரை சகுனம் சரிப்படவில்லையோ ? என்னவோ ? நடக்கின்றதெல்லாம் நடக்கட்டும், பார்ப்போம்.

## ஒரு நேர்த்தியான கடிதம்.

(இக்கடிதம் நமது நண்பர் ஒருவருடைய சகோதரரின் புத்திரி காலகதியால் தனது புருஷனை அதிபால்யத்தில் இழந்து விடும்படி நேரிட்ட பொழுது அப்பெண்மணி இவருக்கு வரைந்து விடுத்த கடிதத்திற்குப்பதிலாக இவர் எழுதிய விடையாகும். இக்கடிதம் அரிய விஷயங்களை அடக்கிக்கொண்டிருத்தலினாலும் விதவா விவாக வீரர்கள் பெருகிக்கொண்டு வருகின்ற இக்காலத்தில் ஜனசமுகத்திற்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும் என்று நாம் நினைத்தலினாலும் நமது நண்பருடைய அநுமதியின் பேரில் இதனைப் பிரசுரிக்கின்றோம்.

பத்திராதிபர்)

சென்னை,
7-10-1911.

குழந்தை—— ——க்கு.

உனது நீண்ட கடிதம் கிடைத்தது. இத்தனை நாட்களும் எனக்குப் பதில் எழுதச் சௌகர்யப்படவில்லை. இதனால் நான் உன்னை மறந்து விட்டதாக நினைக்காதே.....................................

இனி நீ கேட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதுகிறேன்.

ஸ்திரீகளுக்குப் புருஷனே தெய்வம்; புருஷனைத் தவிர, வேறு தெய்வம் இல்லையென்று நமது சாஸ்திரங்களெல்லாம் சாற்றுகின்றன. அப்பேர்ப்பட்ட அருமை வாய்ந்த புருஷனைக் காலகதியால் இழந்து விடும்படி நேர்ந்தால், ஸ்திரீகள் உயிர் வைத்திருக்கலாமா ? நமது புராணங்களிலும் தேசசரித்திரங்களிலும் அநேக ஸ்திரீகள் உடன் கட்டையேறி மரித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறதே, என்பது உனது முதற்கேள்வி. உண்மைதான். ஆனால் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் அப்படி உடன் கட்டையேறி மரித்தவர்கள் எல்லாரும் க்ஷத்திரிய ஸ்திரீகளாகக் காணப்படுகிறார்கள். பிராஹ்மணஸ்திரீகள் அங்ஙனம் செய்து கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. பிராஹ்மணர்களுக்கு ஸ்திரீகளா



னாலும் சரியே, புருஷர்களானாலும் சரியே-அஹிம்சையே உத்தமமான தர்மமாகும். அவரவர்கள் முன் ஜந்மங்களில் செய்துள்ள கர்மங்களினால் ஜனனமரண நியதிக்குட்பட்டிருக்கிறார்கள். நாமாக ஒரு கார்யத்தைச் செய்வோமாயின், அது இன்னும் அநேக கோடி ஜன்மங்களுக்குக் காரணமான கர்மங்களை விதைத்தது போலாகுமன்றோ ? தவிர, நாமாக ஒரு கார்யத்தைச் செய்ய முடிகின்றதா ? நாம் ஒன்று நினைத்தால், நடப்பது வேறொன்றாக வன்றோ முடிகின்றது. ? கர்ம நியதி யென்பது ஈஸ்வரனுடைய இச்சையே; அது நியாயமாகத்தான் இருக்கும். ஆதலால் கர்ம நியதியின்படியே ஒவ்வொன்றும் நடக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. இதைப்பற்றி நாம் அடிக்கடி நினைத்து வருந்துவது பிரயோஜனமில்லாத கார்யமாகும்.

ஜெயதேவ ஸ்வாமிகள் என்று மகாத்மா ஒருவர் இருந்தார். அவருடைய சரித்திரத்தை இங்கு விஸ்தாரமாக எழுத இடம் இல்லை. சுருக்கமாகச் சொல்கிறேன். அவர் ஒரு ராஜனிடத்தில் ஆசார்ய ஸ்தானத்தை வகித்துத் தமது மனைவியுடன் வசித்து வந்த காலத்தில், ஜெயதேவ ஸ்வாமிகளும் அவ்வரசனும் ஒரு காட்டுக்குப் போக நேர்ந்த சமயத்தில், அவ்வரசனது மனைவி ஸ்வாமிகளுடைய மனைவியாகிய பத்மாவதி யென்னும் பதிவிரதையின் பதிவிரதா தர்மத்தின் மீது பொறாமை கொண்டு அவளைப் பரிசோதிக்க எண்ணித் தனது தாதிகளில் ஒருத்தியிடத்தில் முன்னமே சொல்லி வைத்திருந்த பிரகாரம், ராஜனது மனைவியும் ஸ்வாமிகளது மனைவியும் ஒன்றாயுட்கார்ந்திருக்கும் பொழுது தாதி ஓடி வந்து “ஆ! அம்மா! காட்டுக்குப் போயிருந்த சமயத்தில் ஸ்வாமிகளைப் புலியடித்துக் கொன்று விட்டதாம். அரசன் அழுது கொண்டே திரும்பி வருகிறாராம்.” என்றாள். உடனே பத்மாவதி ஆ! வென்றலறி அப்பொழுதே கீழே விழுந்து விட்டாள், உயிர் நீங்கி விட்டது. அதுவும் கர்மநியதிதான். அவ்விதமாக, புருஷன் இறந்தவுடன், ஸ்திரீயானவள் புருஷனது பிரிவை பொறாது தன்னுடைய முயற்சியில்லாமலே மரணத்தையடைந்து விட்டால், அது சிலாக்கியம்தான். அதைப்பற்றி ராஜாங்கத்தாரும் ஒன்றும் செய்ய முடியாது; உற்றார் உறவினரும் உத்தரவாதிகளாகார். அந்த ஸ்திரீக்கும் யாதொரு பாபமும் இல்லை- ஆனால் ஈஸ்வரனுடைய இச்சை வேறு விதமாக இருந்து,

புருஷன் இறந்த பிறகு ஸ்திரீ உயிருடன் இருந்தால், தானாக முயற்சி செய்து அந்தஸ்திரீ தன்னைத்தானே கொலை செய்து கொள்ளக்கூடாது. அப்படிச்செய்து கொள்வாளாயின், அவள் ஈஸ்வரசங்கற்பத்திற்கு விரோதமாக நடக்கிறபடியால், மகாபாபத்தைச் செய்தவளாகிறாள்; அவளைத் தற்கொலையும் சுற்றும்.

ஒரு ஜீவனைக் காப்பாற்றுவதற்காகச் சில நாட்கள் இருந்துவிட்டுப் பின்னர் ஏன் மரிக்கக்கூடாது? என்று கேட்கிறாய். ஆண் குழந்தைகளாயின் பதினாறுவயது வரையிலும், பெண் குழந்தைகளாயில் பன்னிரண்டு வயது வரையிலும் அல்லது ருதுவாகும் வரையிலும், அவர்கள் குழந்தைகளேயாவர். குழந்தைப் பருவத்தில் பெற்ற தாயினுடைய ரட்சையும் பராமரிப்பும் இல்லாவிட்டால், அக்குழந்தைகள் ஒரு நாளும் நல்ல ஸ்திதியில் வரா. குழந்தைகளைப் பெறுவது பெரியகார்ய மன்று; பெற்ற குழந்தைகளைச் சீராக வளர்த்து உலகத்தில் பெயரும் கீர்த்தியும் பெறுமாறும் சமஸ்த கோடி ஜீவராசிகளுக்கும் ஹிதத்தையே செய்யுமாறும் பயிற்றுவித்து, அக்குழந்தைகள் இகபர சுகத்தை யடைவதற்குக் காரணமா யிருப்பவள் தாயேயாகும். "தாயைப் போலப்பிள்ளை" என்ற வசனத்தை நீ கேட்டதில்லையா? தவிர, சிசுவை விட்டு விட்டு ஸ்திரீ தற்கொலைசெய்து கொள்வாளாயின், தற்கொலையாகிய ஸ்திரீஹத்தி யொன்று, சிசுமரிக்காமற் போனாலும் சிசுவுக்குமரணவேதனைக்குச் சமானமான துன்பங்கள் உண்டாவதினால் சிசுஹத்தி இனனொன்று, ஆக இரண்டு கொலைகளுக்கும் அவளே உத்தரவாதியாக வேண்டியது வரும். இது நிச்சயம். ஆதலால் பதினாறு வயது நிரம்பாத குழந்தைகளைத் தாயார் கைவிடலாகாது. துளசிதாசர் சரித்திரத்தில் துளசிதாசருக்குப் பதினாறு வயது நிறையுமுன், அவருடைய பிதா தவத்தின் பொருட்டுக் காட்டுக்குச்செல்ல, அப்பொழுது துளசிதாசருடைய தாயாரும் தன் புருஷனுடைய பிரிவையாற்றாமல் அவருடன் கூடப் புறப்பட, அப்பொழுது அவர் தமது மனைவியைப்பார்த்து "நீ வரலாகாது; பையனுக்கு வயது இன்னும் பதினாறு நிரம்பவில்லை. இப்பொழுது நீயாவது நானாவது பையனுடன் இருந்தே தீரவேண்டும்; பையனை விட்டுப் பிரிந்து போய் விட்டோமாயின், நமக்கு மகாபாபம் சம்பவிக்கும்" என்றுகூறித் தமது மனைவியை நிறுத்திவிட்டு அவர்மாத்திரம் தவத்திற்குச் சென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் நீ எழுதியது நியாயமன்று.



சுகசந்தோஷங்களை யநுபவிப்பதற்கா இந்தச் சரீரம் இருக்கவேண்டியது? என்று கேட்கிறாய். சுகம் என்றால் என்ன? சந்தோஷம் என்றால் என்ன? இவை யெல்லாம் மனத்தினுடைய வெவ்வேறு தன்மைகள். சுகமோ நாற்றச் சரீரத்தைப் போஷிப்பதும் அலங்கரிப்பதும் அதினால் போதைந்து, நாய்கூடச் சில சமயங்களில் வெறுக்கின்ற சிற்றின்பமும் ஆகிய இவைதான் சுகமோ? இவைதான் சந்தோஷமோ? சுகம் என்பது மனத்திற்கு வெளியிலுள்ள தன்று. மனத்தினின்றே சுகம் உற்பத்தியாகின்றது. நாமே வெளியிலுள்ள சில விஷயங்களைச் சிருஷ்டித்துக் கொண்டு அவற்றினிடத்தில் நாம் சுகம் அடைவதாகப் பிரமித்து, மனத்தினுள்ளிருந்து உண்டாகும் சுகத்தையே அநுபவிக்கிறோம். இது ஒரு பெரிய விஷயம்.

நிற்க, அவரவர்களுடைய கர்மங்களை ஒவ்வொருவரும் எப்போவது அநுபவித்துத் தானே தீரவேண்டும். பயனில்லாத வார்த்தை வீணே பேசுவதில் என்ன பிரயோசனம்? எப்பேர்ப்பட்ட மகரிஷிகளாயினும், ஈஸ்வராதிகளாயினும், பிராரப்த கர்மத்தை யநுபவித்தே தீரவேண்டும். ஆகையால், என்ன நேரிட்டாலும், கொஞ்சமும் மனம் கலங்காமல் எல்லாம் ஈசன் செயல் என்று மனச்சமாதானத்துடன் இருக்க வேண்டியது. பிறக்கும்பொழுது முதல் ஈஸ்வர சிருஷ்டியால் வளர்கின்ற மயிரை எடுத்து விட வேண்டு மென்று ஜனங்கள் ஏன் சொல்கிறார்கள்? என்றால், ஸ்திரீகளுக்குக் கூந்தல் மேன்மேலும் அழகை விருத்தி செய்கின்ற தல்லவா? ஸ்திரீகள் எவ்வளவு உத்தமிகளாயிருந்த போதிலும், அவர்களுடைய யௌவனம் ஆடையாபரணங்கள் முதலியவை யெல்லாம் ஆடவர்கட்கு மயக்கத்தைத்தந்து ஆடவர்களை மூடத்தனமான விஷயங்களிலும் முரட்டுத் தனமான விஷயங்களிலும் பிரவர்த்திக்கச் செய்து விடுகின்றன; இதனால் ஸ்திரீகளுடைய கற்பிற்குப்பங்கம் நேரிடுகின்றது; துன்பமும் துக்கமும் உண்டாகின்றன. ஆதலால்தான் விதவைகள் மயிரை யெடுத்து விட வேண்டுமென்றும் விலையுயர்ந்த ஆடைகளும் ஆபரணங்களும் அணியலாகாதென்றும் நமது ஜனங்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஆகாரமே சரீரத்திற்கு வலுவைத்தந்து காம க்ரோதாதிகளைக்கிளப்புவதற்குக் காரணமாயிருக்கிறபடியால், ஒரு வேளைதான் விதவைகள் ஆகாரம் செய்யவேண்டு மென்ற நியமமும் ஏற்பட்

டிருக்கின்றது. அக்கினி சாட்சியாகத் தன்னை மணந்த பர்த்தா கர்ம வசத்தால் மரிக்கும்படி நேரிட்டு விட்ட பொழுது, தான் ஆடையாபரணுதிக ளணிந்து மகிழ்ச் செய்விக்க வேண்டிய புருஷன் இல்லாத பொழுது, எதற்காக இவற்றை யெல்லாம் விரும்ப வேண்டும்? தனது உயிர் நிலையாகிய புருஷனை போய் விட்ட பொழுது, இவற்றை யெல்லாம் எதற்காக இச்சிக்கவேண்டும்?

உடன்கட்டையேறி மரித்தலோ அல்லது தற்கொலை செய்து கொள்ளுதலோ அரசாங்கத்தாரின் அபிப்பிராயத்தில் குற்றமாகும். ஈஸ்வர நியதிக்கு விரோதமாகச் செய்யப்படும் கார்யங்களை ஜன சமுகமும் வெறுக்கும்.

இப்பிரபஞ்சத்தில் இருக்க இஷ்டமில்லாதவர்களை ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்? என்று கேட்கிறுய். இப்பொழுது மரித்தாலும் மறுபடியும் ஜன்மம் எடுத்துத்தானே தீரவேண்டும் கர்மாநுபவத்தின் பொருட்டு. பிரபஞ்சத்தை விட்டுவிட்டு எங்குச்செல்வது? ஆகையால் எல்லாம் ஈஸ்வரியின் செயல் என்று மனச்சமாதானத்துடன் காலத்தைக்கழிப்பதே நீ செய்ய வேண்டிய கருமம். மிகுதியை இன்னொரு முறை எழுதுகின்றேன்.

உனது அன்பு நிறைந்த
சிறிய தகப்பனுர்.

## நமது சந்தாதாரர்கட்கு.

சென்ற இரண்டு மாதகாலமாக நமக்குச் சரீர சௌக்கியம் இல்லாமல் கடும்பத்திய மிருந்து ஔஷதம் சாப்பிட்டு வருவதினுலும் "பட்டகாலிலேயே படும்" என்னும் பழமொழிக்கிணங்க இன்னும் நமக்கு நேரிட்டுள்ள பற்பல அசௌகர்யங்களாலும் நமது பத்திரிகை சிறிது காலதாமதப்பட்டு வெளியாகும்படி நேர்ந்திருக்கிறதைப்பற்றி நாம் மிகவும் விசனிக்கின்றோம் நமதுபத்திரிகை யாரம்பமானது முதல் இது வரையில் குறித்த காலம் தவறுது வெளிவந்திருக்கிற தென்ற விஷயத்தை அனைவரும் அறிவர். ஆதலால் இப்பொழுது எதிர்பாராத சில இடையூறுகளால் பத்திரிகை தாமதித்து வெளிப்பட்டதற்கு நம்மை மன்னிக்குமாறு நமது சந்தாதாரர்களை நாம் வேண்டிக் கொள்கிறோம். அடுத்த மாதம் முதல் பத்திரிகை காலம் தவறுது வெளிப்படுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக!



## நமது வெளிநாட்டுச் சந்தாதாரர்கட்கு.

தென்னுப்பிரிக்கா, பிறுங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளிலுள்ள நமது பத்திரிகையின் சந்தாதாரர்களில் இரண்டொருவரே இவ்வருஷத்திய சந்தாத்தொகையை அனுப்பிக் கொடுத்துள்ளார்கள். இந்த வெளி நாடுகளுக்கு வி. பி. ஏற்பாடும் இல்லை. நமக்குச் சந்தாத்தொகையை யனுப்பத் தயைபுரியாத வெளி நாட்டு நண்பர்களுக்கு நாம் இருமுறை கடிதங்களும் எழுதினேம். அவற்றிற்கும் பதில் இல்லை. நமது பத்திரிகைக்கு இரண்டாவது வருடம் ஆரம்பித்து இப்பொழுது பத்துமாதங்கள் ஆய்விட்டன. ஆதலால் இப்பொழுதாவது நமது வெளிநாட்டுச் சந்தா நண்பர்கள் அவர்களது சந்தாத்தொகையை அனுப்பிக் கொடுத்துப் பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம்.

## புத்தக விமர்ஸனம்.

### (1) வியாசதாத்பர்ய நிர்ணயம்.

இதன் முதனூல்சம்ஸ்கிருதத்தில்அப்பய்ய தீட்சிதரென்னும் பெரியாரால் வசன வடிவமாக எழுதப்பட்டுள்ளது. இதில்இரண்டு பரிச்சேதங்களுள. முதல் பரிச்சேதத்தில் சர்வ வாதிகளையும் பட்ச பாதமின்றி வாதிப் பிரதிவாதி மத்தியஸ்த பூர்வகம் கண்டித்து வியாசரது தாத்பர்யம் அத்வைதமே யென்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. இரண்டாம் பரிச்சேதத்தில் பிரஹ்மப் பிராப்தி அமூர்த்தரூப சகுணப்பிரஹ்மத் தானேயே ஆகும் என்றுமற்றையோர்களைக் கண்டித்து நன்கு ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றது. இந்நூல் வேதாந்திகட்கு மிகுதியும் உபயோகமாவது கருதி, கோவிலூர் ஸ்ரீ காசிகானந்த சுவாமிகளால் தமிழில் வசனவடிவமாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது. வேதாந்தவிசார முள்ளோர்க்கு இதன் அருமையும் பெருமையும் நன்கு விளங்குவனவாம். இது உயர்ந்த கிளேஸ் கடிதத்தில்,கிரௌன் சைசில் சென்னை, சச்சிதானந்தம்பிரஸில் நேர்த்தியாக அச்சியற்றப் பெற்றிருக்கின்றது. விலை அணு எட்டு.

### (2) வேதாந்த டிண்டிமம்.

இது வேதாந்தப் பேரிகை என்னும் பிரசித்திபெற்று விளங்குகின்றது; வேதாந்தின் உட்கருத்துக்களை யாவர்க்கும் தெள்ளிதின் உணர்த்தக்கூடியது; சம்ஸ்கிருதத்திலிருந்து கோவிலூர் ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகளால், மூலம் செய்யுள் வடிவமாகவும், அதனை விளக்கத் தெளிவான உரையு மியற்றப்பட்டிருக்கின்றது; வேதா

ந்த அப்பியாசிகளிடத்து அத்தியாவசியமாக இருக்கவேண்டிய நூலாகும். இந்நூல் வேதாந்தார்த்தங்களைப் பறை சாற்றுவது போல் சாற்றுகின்றமையின், "வேதாந்தப்பேரிகை" என்று இதற்குப் பெயரமைந்திருப்பது பொருத்தமாம். இது புல்ஸ்காப் (பாக்கெட்) சைசில் சச்சிதானந்தம் அச்சுக்கூடத்தாரால் உயர்ந்த கடிதத்தில் மிக அழகாக அச்சிடப் பட்டிருக்கிறது. விலை அணா நான்கு.

### (3) பிரஹ்மானந்த லஹரி.

இதன் முதனூல் ஸ்ரீசங்கரபூஜ்யபகவத்பாதாசாரிய சுவாமிகளா லியற்றப்பட்டுள்ளது; இதில்ஞானிகளின் மகிமை நன்கு விளக்கப் பட்டிருக்கின்றது இது தமிழ்மக்கட்குபயோகமாமாறு,மூல சுலோகம் கிரந்தத்திலும், பதச்சேதம், பதார்த்தம், பொழிப்புரைகளுடன் கோவிலூர் ஸ்ரீ ராமகிருஷ்ண சுவாமிகளவர்களாலியற்றப் பட்டுள்ளது. விலை அணா ஒன்றே.

### (4) பாகவதத்திரட்டு.

இது கோவிலூர்மடாதிபதியா யெழுந்தருளியிருந்த கருணாநிதி என்று வழங்கும் ஸ்ரீ சிதம்பரஞான தேசிகரவர்களால், ஸ்ரீ மகா பாகவதம் பாராயணத்திற் குபயோகமாமாறு 718-பாடலாகத்திரட்டப்பட்டிருக்கின்றது. இது மகநஞ்செய்வோர்க்கு மிகுதியும் பயன் தருவதாம். விலை அணா ஆறே.

### (5) வியாச போதினி.

இதில் 17 வியாசங்க ளடங்கி யிருக்கின்றன. இந்து மதத்தின் மேன்மையை யறிய விரும்புவோர்க்கும், வியாசமெழுதுவோர்க்கும் மிகவும் உபயோகமான நூலாம். இது லோகோபகாரி பத்திராதிபர் - ஸ்ரீமத்-கோ-வடிவேலு செட்டியா ரவர்களா லியற்றப்பட்டிருக்கின்றது; கிரௌன் சைசில் சச்சிதானந்த அச்சியந்திரசாலையில் நேர்த்தியாக அச்சிடப்பட் டிருக்கின்றது. விலை அணா ஐந்தே.

மேற் குறிப்பிட்டுள்ள ஐந்து புத்தகங்களும் கீழ்க்கண்ட விலாசங்களுக் கெழுதினால் கிடைக்கும்.

(1) லோகோபகாரி ஆபீசு,
கோமளேசுவரன் பேட்டை,
சென்னை.

(2) லோகோபகாரி புக்டிப்போ,
558 பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 APR 1915
MADRAS

ஞானபாநு.

VOL. 2. தொகுதி. 2 | February 1915. ஆநந்த ௵ மாசி ௴ | No. 11 பகுதி .11

## ஆநந்தாமிர்தம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமா
யாநந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாம்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளியதாகவும்
கருதியஞ் சலிசெய்கு வாம்.

என்று ஸ்ரீ தாயுமானவர் பிரஹ்ம வஸ்துவை வர்ணித்துத் தமது கர்மேந்திரிய ஞானேந்திரியங்களையும் பிராணாதி வாயுக்களையும் மனத்தையும் அடக்கி ஒடுக்கி ஆத்ம வஸ்துவாக அமர்ந்து நின்றார். பிரம்ஹ வஸ்துவை இன்னதென்றும் இத்தன்மையதென்றும் எவரேனும் கூற முயற்சிப்பாராயின், ஈண்டு இவர் கூறியதினும் மேம்பட்டுக் கூறுதல் முடியாதென்பது திண்ணம். வஸ்துவானது 'அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமா' யுள்ளது என்றார். இதனால் சத்லட்சணமும் சித்லட்சணமும் உரைக்கப்பட்டது. பின்னால் 'ஆநந்த பூர்த்தியாகி' என்றதனால் ஆநந்த லட்சணமும் சித்தித்தது. சத், சித், ஆநந்தம் இம்மூன்று லட்சணங்களையும் நம் முன்னோர் வாக்கின் முடிவுரையாகக் கூறினர். இம்மூன்று லட்சணங்களிலும் மகத்துக்கு

மகத்தாயும் அணுவுக்கு அணுவாயும் இருக்கப்பட்ட பிரஹ்ம வஸ்து பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. சத் என்றால் உள்ளது என்று அர்த்தம். சத் என்ற பதத்தில் காலத்தையாவது இடத்தையாவது குறிப்பிடும்படியாக ஒன்றும் இல்லை. யாண்டும் எக்காலத்தும் உள்ளது என்று நாமாகக் காலத்தையும் அப்பதத்தின் மீது ஏற்றி அர்த்தம் பண்ணிக் கொண்டோமே யொழிய, அப்பதத்திற்குச் சரியான பொருள் 'உள்ளது' என்பதுதான். ஒரு காலத்தில் உள்ளது மற்றொரு காலத்தில் இல்லாததாகாது. ஓரிடத்தில் உள்ளது மற்றோரிடத்தில் இல்லாததாகாது. ஸ்ரீபகவத் கீதையில் இரண்டாவது அத்தியாயம் 16-வது சுலோகத்தில் "இல்லாதது உள்ளது ஆகாது, உள்ளது இல்லாததாகாது" என்று பகவான் கூறிய காலையில் உண்மையாயுள்ள பொருளுக்கு ஒரு பொழுதும் ஓரிடத்தும் அழிவில்லை யென்றே உபதேசித்துள்ளார். உற்பத்திக்கு முன்னும் நாசத்திற்குப் பின்னும் எந்த வஸ்து இல்லாமற் போகிறதோ, அந்த வஸ்து மத்திய காலத்திலும் இல்லாததேயாகும். ஆதலால் காணப்படுகின்ற பொருள்கள் அனைத்தும் இப்பொழுதும் இல்லாதனவாகும், மித்தையாகும். ஏனென்றால் இப்பொருள்கள் இவற்றின் உற்பத்திக்கு முன்னும் நாசத்திற்குப் பின்னும் இவ்வடிவங்களை உடைத்தாயிருக்கின்றதில்லை. ஆகையால் உலகினருக்குத் தெளிவுபடக் கூறும் பொருட்டு வியாக்கியான கர்த்தாக்கள் 'சத்' என்ற பதத்தை முக்காலத்திலும் உள்ளது என்று பொருள் படுத்தியுள்ளார்கள்.

* * * *

ஓரிடத்திலுள்ள பொருள் மற்றெல்லா விடங்களிலும் இல்லாவிட்டால் அப்பொருள் "உள்ளது" என்று சொல்வதற்குரிய தாகாது. ஒரு பொருள் எக்காலத்தும் உள்ளதாயிருக்கலாம்? ஆனால் இதனால் அப்பொருள் எல்லா விடத்தும் இருக்க வேண்டுமென்று நியாயம் ஏற்படவில்லை; திருஷ்டாந்தமாக, ஒரு அறையில் ஒரு தீபம் எக்காலத்தும் எரிந்துகொண்டிருக்கலாம்; ஆனால் அந்தத் தீபத்தினுடைய வியாபகம் அந்த அறையைத் தவிர வேறு ஓரிடத்திலும் கிடையாது; அப்படிப்போல ஏதாவது ஒரு பொருள் முக்காலத்திலும் உள்ளதாய் எல்லா விடங்களிலும் இல்லாததாய் ஏன் இருக்கக்கூடாது? என்று சிலர் ஆட்சேபிக்கலாம்.



இவ்விதமாக ஆட்சேபிப்பவர்கள் தீபத்தினுடைய இருப்பிற்கு ஆதாரமாயிருக்கப்பட்ட அறை நித்தியமாயுள்ளதா? அல்லது அழிந்து போகப்பட்டதா? என்னும் விஷயத்தைப் பற்றிச் சிறிதும் சிந்திப்பதேயில்லை. ஞானேந்திரியங்கட்கும் கர்மேந்திரியங்கட்கும் விஷயங்களாயுள்ள வஸ்துக்கள் அழிவுறுகின்றதில்லையென்று கூற எவரும் துணியார். ஆதலால் அறையும் அவ்வறையில் இருக்கப்பட்ட தீபமும் கர்மேந்திரிய ஞானேந்திரியங்கட்கு விஷயங்களே யாதலால், அழிவுறுவனவாம். நாமரூபங்களுக்குட்பட்ட எந்த வஸ்துவும் நிமிஷந்தோறும் மாறுதல்கட்குட்பட்டதாம். அறையும் அதனுள்ளிருந்த தீபமும் எப்பொழுதாவது ஒரு காலத்தில் அழிந்தே தீரவேண்டும், அல்லது மாறுதல்கட்குட்பட்டே தீரவேண்டும்; அப்பொழுது அது முக்காலத்திலும் உள்ளதாகாது. தவிர, நாம் இப்பொழுது நாமரூபங்கட்கதீதமாகிய பரம்பொருளைப் பற்றிப் பேசுகின்றோமென்றும் அழிவேயின்றிய பொருளை அழிவுறும்படியான ஜடவஸ்துக்களுடன் ஒப்பிடுதல் தகாதென்றும் ஞாபகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். ஆகையால் எப்பொழுதும் உள்ள பொருள் ஒன்று உண்டாமாயின், அப் பொருள் எங்கும் இருந்தே தீரவேண்டும் என்பது நிச்சயம். காணப்படுகின்ற பொருள்களினின்றும் அவ்வவற்றின் நாமரூபங்களைக் களைந்து பார்த்தால், அழிந்து போகுபடியான நாமரூபங்களுக்காதாரமாய் அழிவற்ற பொருள் ஒன்று எங்கும் எக்காலத்தும் ஏகமாயிருக்கிறது என்று அறியலாம். திருஷ்டாந்தமாக, பசு, பட்சி என்ற இரண்டு வஸ்துக்களை எடுத்துக் கொள்வோம். பசு என்ற வஸ்துவினிடத்திருந்து நான்குகால்கள், ஒருவால் முதலியவற்றாலாகிய அதன் ரூபத்தையும் இந்த ரூபத்திற்கு ஏற்ற 'பசு' என்ற அதன் நாமத்தையும் வேறாகப் பிரித்துவிட்டு, இதுபோலவே பட்கியென்ற வஸ்துவினிடத்திருந்தும் இரண்டு சிறிய கால்கள், சிறகுகள் கூரிய மூக்கு முதலியவற்றாலாகிய அதன் ரூபத்தையும் இந்த ரூபத்திற்கு ஏற்ற 'பட்கி' யென்ற அதன்நாமத்தையும் வேறாகப் பிரித்துவிட்டுப் பார்த்தால், இவ்விரண்டு நாமரூபங்களிலும் பொதுவான வஸ்து ஏதோ ஒன்று, இன்னதென்று உரைக்கமுடியாதது, சர்வசாதாரணமாய் மிஞ்சி நிற்கிறது என்று புலப்படும். ஆதலால் சகல உலக வஸ்துக்களினின்றும் அவ்வவற்றின் நாமரூபங்களைக் களைந்துவிட்டால், மிஞ்சி நிற்கும்வஸ்து ஒன்றேயாகும்.

எவ்விடத்தும் ஏகமாய் விளங்கும் வஸ்து ஒன்றேயென்பதும் எக் காலத்தும் உள்ளவஸ்து இதுவே யென்பதும் நன்கு விளங்கும்.

* * * *

பகவத்கீதை இரண்டாவது அத்தியாயம் 12-வது சுலோகத் தில் பகவான் அர்ச்சுனனிடத்தில் "நான் ஒரு காலத்திலாவது இல்லாம லிருக்கவே யில்லை; நீயும் இல்லாமலிருக்க வில்லை; இந்த அரசர்களும் இல்லாம லிருந்ததில்லை, நாம் எல்லோரும் தேகம் அழிந்தபின்பும் இருப்பதில்லை யென்பதில்லை" என்று கூறினர். கிருஷ்ணனும் அர்ச்சுனனும் மற்ற அரசர்களும் நம்மைப்போல வே மானிடர்களா யிருந்தார்க ளென்றும் அவர்கள் பிறந்தது முதலாய சகல விஷயங்களும் இதிகாச புராணாதிகளில் இருக்கின் றன வென்றும் நாம் அறிவோம். அப்படியிருக்க, ஸ்ரீகிருஷ் ணன் எல்லாரும் முக்காலத்திலும் உள்ளவர்கள்தாம் என்று கூறியது ஆச்சர்யமல்லவா? நாம ரூபாதிகளினால் கட்டப்பட்டு உற்பத்தி, ஸ்திதி, நாச விதிகட்கு உட்படுகின்ற சரீரங்களைக் குறித்து ஸ்ரீகிருஷ்ணன் பேசவில்லை; எல்லாவற்றிற்கும் அந்தர்க் கதமாய், ஆதாரமா யிரா நின்ற ஆத்ம வஸ்து அழியாதது என் பதையே குறிப்பிட்டார். வெவ்வேறு இடங்களில் நின்றுகொண் டிருந்த ஸ்ரீகிருஷ்ணனும் அர்ச்சுனனும் அரசர்களும் முக்காலத் தும் இருப்பவர்கள் என்றதனால் இவர்கள் எல்லோரும் ஒரே ஸ்வரூபத்தின் சாயைகள் என விளங்குகின்றது. சந்திரன் ஒன் றே உண்மையா யிருந்தபோதிலும், சாக்கடைத் தண்ணீரிலும், சிறு ஓடையிலும், நதியிலும், குளத்திலும் காணப்படுகின்ற பிரதி பிம்ப சந்திரர்கள் அநேகமா யிருக்கின்றன வல்லவா? ஆனால் உண்மையில் உள்ள சந்திரன் ஒன்று தானே. அது போலவே பற் பல இடங்களிலும் பற் பல ரூபங்களில் வெவ்வேறாகக் காணப் பட்டுப் பற் பல நாமங்களுடன் விளங்குகின்றன வெல்லாம் ஆதி மத்தியாந்த ரகிதமாய ஆத்ம வஸ்துவின் சாயாமாத்திரங்களாம். ஆத்ம வஸ்து வொன்றே உண்மையா யுள்ளது.

* * * *

ஒரு வீட்டிற்குள் ஒருகுடம் வைக்கப்பட் டிருக்கிறது; அக் குடத்திற்குள் உள்ள ஆகாசம் கடாகாசம் எனப்படும். அவ்வீட்டிற் குள் உள்ள ஆகாசம் மடாகாசம் எனப்படும். அவ்வீட்டிற்குப் புறம் பே எங்கும் உள்ள ஆகாசம் மகாகாசம் எனப்படும். கடத்தினுள்



இருக்கும்ஆகாசமும் புறம்பேயிருக்கும் ஆகாசமும் ஒன்றுதானா? அல்லது வெவ்வேறா? கடம் உடைந்த மாத்திரத்தில் அதனுள் ளிருந்த ஆகாசத்திற்கும் மடாகாசத்திற்கும் வேற்றுமை தோன் றுவதில்லை. மடம் இடிந்த மாத்திரத்தில் அதனுள்ளிருந்த ஆகா சத்திற்கும் மகாகாசத்திற்கும் வேற்றுமை தோன்றுவதில்லை. ஆகவே, அழிந்து போகப்பட்ட நாமரூபங்களில் ஆகாசமானது வெவ்வேறு யிருப்பதுபோலத் தோன்றிற்றே யொழிய, உண்மை யில் உள்ள ஆகாசம் ஒன்றுதானே. அதுபோலவே எங்கும் ஏக மாய் இருக்கும் வஸ்து ஒன்றேதான்.

* * * *

"ஏகமே வாத்விதீயம் ப்ரஹ்மம்" என்று சுருதிகள் கோஷிக் கின்றன. "இரண்டற்ற ஒன்றே ப்ரஹ்மம்." ஏகம் என்ற சமஸ்கிருத பதத்திற்கு ஒன்று என்று பொருள். ஆனால் 'ஒன்று' என்று சொல்லும்பொழுது 'இரண்டு' என்ற எண்ணும் அதற்கு மேற்பட்ட எண்களும் சித்தித்து விடும். ஆதலால் ஏகம் என் றால் ஒன்று, அஃதாவது ஸஜாதீய விஜாதீய சுவகத பேத ரகித மானது என்று பொருள். ஸஜாதீயம் என்றால் ஒரே இனத்தைக் குறிப்பிடுவது, அதாவது மனிதனுக்கு மனிதன் ஸஜாதீயம். பிரஹ்மவஸ்துவைப்போல மற்றோர் பிரஹ்மவஸ்து இல்லை யென் பதைக் குறிப்பிடும் பொருட்டே, பிரஹ்மவஸ்து ஸஜாதீய ரகித மாவது என்று சொல்லப்பட்டது. விஜாதீயம் என்றால் வேற்றி னத்தைக் குறிப்பிடுவது; அதாவது மனிதனுக்கு மிருகம் விஜா தீயம். பிரஹ்மவஸ்துவைத் தவிர, வேறு வஸ்துக்களே யில்லை யென்பதைக் குறிப்பிடும் பொருட்டே பிரஹ்மவஸ்து விஜாதீய ரகிதமானது என்று சொல்லப்பட்டது. சுவகதம் என்றால் தன் னுடைய வெவ்வேறு அங்கங்களையே குறிப்பிடுவது, அதாவது ஒரு விருட்சத்திற்கு அதன் கிளைகள் சுவகதம். பிரஹ்மவஸ்து விற்கு அங்க அவயவாதிகள் கிடையா வென்பதைக் குறிப்பிடும் பொருட்டே, பிரஹ்மவஸ்து சுவகத ரகிதமானது என்று சொல் லப்பட்டது. இவ்வாற்றால் பிரஹ்மவஸ்து வானது காலத்தினாலோ இடத்தினாலோ கட்டுப்பட்டதன்று என்று தெளிவாக விளங்கு கின்றது. இதனால் தான் தாயுமானவர் பிரஹ்மவஸ்துவை வர் ணிக்கும் பொழுது "அங்கிங் கெனாதபடி யெங்கும்" உள்ளது என்றார்.

## ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

அரிய நண்பர்களே! சிக்காகோ. 24—1—1894.

உங்களுடைய கடிதங்கள் எனக்கு வந்து சேர்ந்தன. ...... ......அமெரிக்க ஜனங்களும் வைதீகக்கட்சியில் அநேகரும் என்னிடத்தில் உபசாரணை மிகுந்தவர்களா யிருக்கின்றார்கள். அவர்களுடைய பழைபகட்டடமானது அஸ்திவாரம்முதல் அசைந்து ஆட்டம் கொடுத்திருக்கிறது; அவர்கள் எவ்வளவுதான் இழுத்துக் கொண்டு கூக்குரல் இட்டபோதிலும் அது கீழே விழுந்து விடத்தான் வேண்டும். இங்கு கீழ்நாட்டு மதங்களின் அபிவிருத்தியால் இந்தியாவில் அவர்கள் நேர்த்தியாக ஜீவிதகாலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும்படி யாகவுள்ள வழிகள் கெடுதல் அடையுமானால் நான் அவர்களுக்கு இரங்குகிறேன். ஆனால் அவர்களுடைய பாதிரிகளில் ஒருவரேனும் எப்பொழுதும் எனக்கு விரோதமாக இல்லை. நல்லது, நான் குளத்தில் இருக்கும் பொழுது, நான் பூர்த்தியாக ஸ்நாநம் செய்யவேண்டும்.

எனது பிரசங்கங்களில் மிக்கவையும் அவ்வப்பொழுது பேசினவையே. எனக்கு இந்தியாவிலிருந்து எவ்வித உதவியும் வேண்டியதில்லை; இங்கு எனக்கு ஏராளமாக இருக்கின்றன. நான் இங்கு நமது மதத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதி வாசித்தேன்; அதன் சுருக்கமடங்கிய ஒரு பத்திரிகைத் துண்டை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். உங்களிடத்திலிருக்கும் பணத்தை இச்சிறிய பிரசங்கத்தை அச்சடித்துப் பிரசுரிப்பதிலும் தேசபாஷைகளில் மொழி பெயர்ப்பதிலும் உபயோகப் படுத்துங்கள்; அதை எங்கும் பரப்புங்கள். அது ஜனசமூகத்தின் மனத்தை நம்மீது திருப்பும். இதற்குள், ஒரு மத்திய கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற நமது ஆலோசனையை மறந்து விடாதீர்கள். அதிலிருந்து இந்தியாவின் எல்லாப் பக்கங்களிலும் ஆரம்பிக்க வேண்டும். கடினமாக வேலை செய்யுங்கள். ... ...

அமெரிக்காவின் ஸ்திரீகளைப் பற்றிக் கூறும்பொழுது, அவர்களுடைய அன்பின் அளவுக்கு ஏற்றவாறு எனது நன்றியறிதலை என்னால் வெளியிட முடியவில்லை. ஈஸ்வரன் அவர்களை ஆசீர்வதிப்பாராக! இந்தத் தேசத்தில் ஸ்திரீகளே ஒவ்வொரு காரியத்திற்கும் ஜீவநாடியா யிருக்கிறார்கள்? இவர்களே ஜனசமூகத்தின் அறிவுக்கு ஆஸ்தானமா யிருப்பவர்கள்? ஏனென்றால் புருஷர்கள் தாங்கள் மேன்மேலும் கல்வியை விருத்திசெய்ய முடியாதபடி அவ்வளவு சுறுப்பு மிகுந்தவர்களா யிருக்கிறார்கள்.



நான்—டைய கடிதங்கள் கிடைக்கப் பெற்றேன். ஜாதிவித்தியாசம் நீங்கி விடவேண்டுமா? அல்லது இருக்கத்தான் வேண்டுமா? என்ற கேள்வியைப் பற்றி எனக்கு ஒரு சம்பந்தமுமில்லை. இந்தியாவின் உள்ளும் புறம்பும் மானிட வர்க்கமானது விருத்தி செய்திருக்கிற சிறந்த எண்ணங்களை யெல்லாம் மிகமிகத் தாழ்ந்தவர்கள், மிகமிக எளியவர்கள் இவர்களுடைய வாசல்கட்குக் கொண்டுசென்று கொடுத்து அவர்களைத் தாங்களே ஆலோசித்துக் கொள்ளும்படியாக விடவேண்டு மென்பதே எனது அபிப்பிராயம். ஜாதிபேதமானது இருக்க வேண்டுமா? வேண்டாமா? என்ற விஷயங்களைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. "நினைவிலும் செய்கையிலும் ஸ்வதந்திரமே ஜீவிதகாலத்திற்கும் வளர்ச்சிக்கும் சுகவாழ்விற்கும் ஒரே லட்சணமாகும்"; அது எங்கு இல்லையோ அங்கு மனிதன், ஜாதி, ஜனசமூகம் எல்லாம் கீழேபோகத்தான் வேண்டும்.

ஜாதியிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; வகுப்பு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; ஒருவனுடைய ஸ்வதந்திர நினைப்பின் சக்தியும் செய்கையும் பிறருக்கு இம்சையுண்டாக்காமல் இருக்கும் வரையில், அவற்றைத் தடுப்பதற்கு எந்தமனிதனாவது, வகுப்பாவது, ஜாதியாவது, ஜனசமூகமாவது, ஏற்பாடாவது முயற்சித்தால், அப்படித் தடுப்பவர்கள் பேய்க்குணமுள்ளவர்களா யிருக்கின்றார்கள்: அவர்கள் கீழே செல்லத்தான் வேண்டும்.

ஒவ்வொருவருடைய வாசலுக்கும் சிறந்த அபிப்பிராயங்களைக் கொண்டுவரும்படியான ஒரு யந்திரத்தைச் சலனப்படுத்தி விடவேண்டு மென்பதே, ஜீவிதகாலத்தில் எனது பேராசை; பின்னர் புருஷர்களும் ஸ்திரீகளும் அவரவர்களுடைய விதியைத் தீர்மானித்துக் கொள்ளட்டும். ஜீவிதகாலத்தின் மிகமிகப் பிரதானமான கேள்விகளைப்பற்றி நமது முன்னோர்களும் மற்ற ஜனசமூகங்களும் நினைத்துள்ளவற்றை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். அவர்கள் முக்கியமாக இப்பொழுது மற்றவர்கள் என்னசெய்து கொண்டிருக்கிறார்களென்று பார்த்துப்பின்னர் தீர்மானிக்கட்டும். நாம் ரசாயனங்களை யொன்று சேர்க்கவேண்டும்; இயற்கையின் விதிகளின் பிரகாரம் இயற்கையால் தானே கட்டித்தன்மை யுண்டாகும். கடினமாகவேலை செய்யுங்கள்; உறுதியா யிருங்கள்; ஈஸ்

வரனிடத்தில் விஸ்வாசம் வையுங்கள். வேலைசெய்யத் தொடங்குங்கள்; நான் கூடிய சீக்கிரம் வருகிறேன். மதத்திற்குக் கெடுதி செய்யாமல் பொது ஜனங்களை உயர்த்த வேண்டும்; இக்கொள்கையை உங்களுக்கு முன்னால் வைத்துக் கொள்ளுங்கள்.

ஜன சமூகமானது குடிசையில் வசிக்கிறதென்று ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் அந்தோ! ஒருவரும் அவர்களுக்கு ஒரு பொழுதும் ஒன்றும் செய்ததில்லையே. நமது தற்காலத்திய சீர்திருத்தக்காரர்கள் விதவைகளின் புனர் விவாகத்தைப் பற்றி மிகவும் சுறுசுறுப்பாயிருக்கிறார்கள். நான் ஒவ்வொரு சீர் திருத்தத்திலும் பிரியப்படுகிறவன் தான்; ஆனால் ஒரு ஜன சமூகத்தின் கதியானது அந்த ஜனசமூகத்திலுள்ள விதவைகளுக்குக் கிடைக்கும் புருஷர்களின் தொகையைச் சார்ந்திருக்கவில்லை; ஆனால் பொது ஜனங்களின் ஸ்திதியையே சார்ந்திருக்கிறது. உங்களால் அவர்களை உயர்த்த முடியுமா? அவர்களுக்குள்ளிருக்கும் ஆத்மீக ஸ்வபாவத்தை அவர்கள் இழந்து விடாமல் இருக்கும்படி செய்துகொண்டே அவர்கள் இழந்திருக்கும் ஸ்வதந்திரத்தை அவர்களுக்குத் திரும்பவும் உங்களால் கொடுக்க முடியுமா? மத விஷயத்திலுள்ள அறிவிலும் உணர்ச்சிகளிலும் ஹிந்துவாயிருந்துகொண்டே சமபாவனை, ஸ்வதந்திரம், தொழில், சக்தி இவற்றில் மேல் நாட்டார்களிலும் மேல்நாட்டானாக உன்னால் முடியுமா? இதுதான் செய்யப்பட வேண்டியது; நாம் செய்வது நிச்சயம். நீங்கள் எல்லாரும் அப்படிச் செய்வதற்கே பிறந்தீர்கள். உங்களுக்கு உங்களிடத்தில் நம்பிக்கையிருக்கட்டும்; பெருந் தீர்மானங்களே பெருஞ் செய்கைகளுக்குப் பெற்றோராகின்றன. எப்பொழுதும் மேலே செல்லுங்கள். மரணம் நேரிடும் பொழுதும் எளியவர்களிடத்தும் துன்புறுபவர்களிடத்தும் இரக்கம்—இதுவே நமது கொள்கை.

தீர வாலிபர்களே! மேலே செல்லுங்கள்.

உங்கள் பிரியமிகுந்த
விவேகாநந்தர்

பிற் குறிப்பு:— ஒரு மத்தியக் கல்லூரியின் மூலமாகப் பொது ஜனங்களை உயாத்த வேண்டுமென்றும் இந்தக்கல்லூரியில் பயிற்றுவிக்கப்படும் பிரசங்கிகளின் மூலமாக எளியவர்களின் வாசல்கட்கு மதத்தையும் கல்வியையும் கொண்டுவர வேண்டுமென்றும் உள்ள எண்ணத்தை எல்லோருக்கும் பிரசங்கியுங்கள். ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள்.

வி.

## பாரத புத்திரர்களின் பராக்கிரமம்.

(தொடர்ச்சி.)

ஆயினும் மெல்லமெல்ல மிகுந்த சிரமத்துடன் மொகலாயப் படைகள் முன்னேறின; மகாராஷ்டிரக் குண்டுகளோ ஈவிரக்கமென்பதை யறியாது முன்னேறி வந்த மொகலாயப் படை வீரர்களைச் சித்திரவதை செய்து சின்னாப் பின்னப் படுத்தின. கணவாயானது பிணக் குவியலினால் நிரம்பி யிருந்தது. ஆயினும் மொகலாயர்கள் விடுவதாயில்லை. உயிரைத் துரும்பென மதித்துப் படைமேற் படையாக மொகலாயர்கள் முன்னே விழுந்தனர். எப்படியாவது மகாராஷ்டிரர்களை யடித்துப் புறமுதுகிட்டோடச் செய்து அவர்களை விடாது துரத்தி அவர்களுடைய கொட்டத்தை யடக்கிவிடவேண்டுமென்று மொகலாயர்கள் தீர்மானித்தனர். காடு மலைகளை கதியாகித் தகுந்த யுத்ததளவாடங்களை யில்லாது அலைந்து திரியும் இந்த மகாராஷ்டிர நாடோடிகள் தகுந்த யுத்தப் பயிற்சி பெற்று வேண்டிய யுத்ததளவாடங்களுடன் கூடிய மொகலாயப் படைகளை எதிர்ப்பதா? என்ற ஆவேசத்துடன் மொகலாயர்கள் போர் புரிந்தார்கள். மகாராஷ்டிரர்களோ தங்களைப் பற்றியுண்டாகும் சொந்த எண்ணங்களையும் ஞாபகங்களையும் துறந்து விட்டு தேசாபிமானத்தினால் தூண்டப்பட்டு ஆழ்ந்த ஆலோசனையுடனும் மனச்சமாதானத்துடனும் தீரத்துடனும் போர் புரிந்தார்கள்.

இன்னும் மொகலாயர்கள் ஒரு அங்குலம் கூட முன்னேற முடியவில்லை. மொகலாயப் பிணங்களே முன்னேறிக்கிடந்தன. தேன் கூட்டைக் கலைத்த மாத்திரத்தில், ஆயிரக்கணக்கான தேனீக்கள் ஒரே சமயத்தில் ரீங்காரம் செய்து கொண்டு, கலைத்தவனை நாலாபக்கங்களிலிருந்தும் கொட்டுவது போல, மகாராஷ்டிரக் குண்டுகள் ஒரே நிமிஷத்தில் நூறு, ஆயிரம் என்று சொல்லும்படியாக அமோகமாய் வந்து விழுந்து அதம் செய்து கொண்டிருந்தன. மொகலாயப்படைகளின் மத்தியில் அணி வகுக்கப்பட்டிருந்த ரஜபுத்திரப்படைகள் ஆங்காரம் மிகுந்து அதிவேகமாக முன்சென்று அம்மலையின் மீது வெகுதூரம் ஏறி விட்டன. பூர்வகாலத்தில் நமது ஜன்ம பூமியில் ராஜஸ்தானமானது சர்வ சம்ஹார மூர்த்தியாகிய சாம்ப சிவனுடைய வாசஸ்தலமாகும், எமதர்மராஜனுடைய கேளீ விலாச பூமியாகும், மகா சக்திக்கு உறை விட

மாகும், தார்க்காதேவியின் நடன பூமியாகும். அங்கு வசித்த ரஜபுத்திரர்கள் பயமென்பதை யறியார்; மரணத்திலேயே விளையாடுபவர்கள்: யுத்தமே அவர்களுடைய ஸ்வபாவம். இத்தகைய வீரத்தன்மை பொருந்திய ரஜபுத்திரர்கள் இப்பொழுது மகாராஷ்டரர்களை எதிர்க்க நினைத்து விட்டார்களென்றால், கேட்க வேண்டுமா?

ஆயிரக்கணக்கான ரஜபுத்திரர்கள் கொம்புகளாலும் பேரிகளினாலும் கோஷம் செய்துகொண்டு பிரளயகால வெள்ளத்தைப் போல மேன்மேலும் பெருகிக் கொந்தளித்து மலையின்மேல் மோதி ஏறினார்கள். மகாராஷ்டிரர்கள் உச்சியிலிருந்து கொண்டு சுட்டவண்ணமா யிருந்தார்கள்; எதிர்த்து இப்பொழுது வருபவர்கள் ஹிந்துக்கள் தாமோ? என்று கூடப் பார்ப்பதற்கு நிற்கவேயில்லை; துப்பாக்கிகள் குண்டுகளை ஒருவிநாடி நேரமேனும் இடைவிடாது கக்கிக்கொண்டே யிருந்தன. ரஜபுத்திரப்படை வீரர்கள் மலையின்மேலேற ஏற, மேனுலகுக்கும் ஏகிக்கொண்டே யிருந்தார்கள். ஆயினும் ரஜபுத்திரர்கள் பின்வாங்குவதாயில்லை: பெருகிக் கொண்டிருக்கின்ற பிணக்குவைகளின் மீது குதித்துக் கொண்டும் அவற்றைத் தாண்டிக் கொண்டும் மதோன்மத்தக் கூச்சலிட்டுக் கொண்டும் மலையிற் பாதிதூரம் ஏறிவிட்டார்கள். அப்புறம் செல்ல முடியவில்லை. திக்குகள் திடுக்கிடும் படியாக ஒரு சத்தம் கேட்டது. இவ்வளவுதான்; முன்னேறிச் சென்ற ரஜபுத்திரப் படையானது உடைந்து மடமடவென்று கீழேவிழுந்தது. பின்புறத்தில் மலையின்மீது ஏறிக்கொண்டிருந்த ரஜபுத்திரப்படை பிரமித்து விட்டது. ரஜபுத்திரர்கள் வீரர்கள்தாம். அவர்களுடைய ரத்தம் கொதிப் புள்ளதுதான். அவர்களுக்கு யுத்தமென்பது ஒரு லீலாவினோதம் தான். ஆயினும் என்றைக்கு கன்னியாகுப்ஜ தேசத்து அரசனாகிய ஜயசந்திரன் என்பவன் அந்நியனாகிய மகம்மது கோரியினிடத்தில் தன்னுடைய இனத்தானாகிய பிருதிவி ராஜனைக்காட்டிக் கொடுத்தானோ, என்றைக்கு ரஜபுத்திரர்களுக்குள் அசூயையும் பொறாமையு முண்டாயிற்றோ அன்று முதல் அவர்களுடைய சௌர்யம் பங்க மடைந்து மங்க ஆரம்பித்து விட்டது.

இப்பொழுது முன்னேற முடியாமல், ரஜபுத்திரர்கள் விழிக்கலானார்கள். பின்னுக்குத் திரும்பிப் புறமுதுகிட்டோடுவது என்



றால்அவமானம் நேர்ந்து விடும் என்பது ஒரு பக்கம், எண்ணற்ற ரஜபுத்திரர்கள் ரணகளத்தில் மடிந்து விடுவார்கள் என்பது ஒரு பக்கம் ஆக இவ்விரண்டுவித யோசனைகளிலும் கலங்கிக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு ரஜபுத்திரவீரன் தனது குதிரையை முன்னே செலுத்தி, ரஜபுத்திரப்படைகளை ஊக்கமூட்டி யுற்சாகப்படுத்தவே அண்டாண்ட கோளங்களெல்லாம் அதிர்ந்து நடுங்கும் படியாக ஒரே கூச்சல் கேட்டது. ரஜ புத்திரப்படைகள் பதுங்கி விட்டுப் பாயும்புலிகளைப்போலப் பார்த்தார்கள். மேலே கூறப்பட்ட ரஜபுத்திரத்தலைவன் தனதுபடைகளுக்கெல்லாம் முன்னே நின்று கொண்டிருந்தபோதிலும், அவன் மீது மகாராஷ்டிரக் குண்டுகள் ஒன்றாவது விழவில்லை. இவனுடைய சாமர்த்தியத்தினாலாவது அல்லது மகாராஷ்டிரர்களுடைய குண்டுகளின் குறி தப்பி விடுவதினாலாவது இவன் தப்பித்துக் கொண்டிருக்கவில்லை. இவனுக்கு இன்னும் கொஞ்சநேரம் உயிர் இருக்க வேண்டியிருந்தது. அவரவர்கள் வந்த கார்யம் முடிந்த பின்னல்லவோ ஒவ்வொருவரும் செல்லல் வேண்டும். முன் சென்ற ரஜ புத்திரவீரர்கள் அடிபட்டு மலையின் உச்சியிலிருந்து உருண்டு புரண்டு தங்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த படைகளின் மீது விழுவார்கள். இவர்கள் அப்பிணங்களை இன்னும் கீழே உருட்டி எறிந்து விட்டு, மேலே செல்லுவார்கள். இவ்விதமாக, இடைவிடா முயற்சியாலும் ஆச்சர்ய பராக்கிரமத்தாலும் ரஜ புத்திரப்படைகள் மலையுச்சிக்குச்சென்று கைகளில் கத்திகளை யுருவிக்கொண்டு புறப்பட்டன. பக்கங்களிலுள்ள பாறைகளிலும் புதர்களிலும் ஒளித்திருந்த மகாராஷ்டிர வீரர்கள் ஐம்பதுபெயர்களும் கைகளில் கத்திகேடயங்கள் தாங்கி ரஜ புத்திரப் படைகளின் மீது குதித்தார்கள். பாஜீப்ரபு எருமைக்கடாவின் மீதேறிவரும் எமனைப்போல எதிரில் நின்றார். ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம் ரஜபுத்திரர்கள் புறமுதுகிட்டோடி விட்டுத் திரும்பவும் வந்தனர். இப்பொழுது, நாம் மேலே கூறியுள்ள ரஜபுத்திரத்தலைவன் பாஜிப்ரபுவின் மீது பாய்ந்தான். பின்னே வந்து கொண்டிருந்த ரஜபுத்திரப்படைகள் முன்னே யிருந்தவர்களைப் பின் செல்லாத படி தடுத்தன. வாளொடு வாள் அடிபடுகின்ற சப்தமும், இருதிறத்தாருடைய மதோன்மத்தக் கூச்சலும், பீரங்கிகளின் பெருஞ்சத்தமும், துப்பாக்கிகளின் சிறுசப்தமும் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு எங்கும் ஏகமுழக்கமா யிருந்தன.

ரஜபுத்திரத்தலைவன் அவனது படைகளுக்கு முன்னே நின்றுகொண்டு அவற்றை ஊக்கிவிடுவதையும் இப்பொழுது தம்மீது பாய்ந்து வருவதையும் கண்ட பாஜிப்ரபு வானவர் தமது குதிரையை ஒருதட்டுத் தட்டினார்; ரணகளத்தினுள்ளே அது பாய்ந்தது. சமுத்திரமானது இரு பிளவாகப் பிளந்தால் எவ்வளவு ஆச்சர்யமோ, அவ்வளவு ஆச்சர்யமாக யுத்தகளமானது இருபிளவாகப் பிளந்து கொடுத்து இவருக்கு வழி விட்டது. மதயானையின் மீது மகா கெம்பீரத்துடன் பாயும் மிருகேந்திரனைப்போல, பாஜி ப்ரபு ரஜபுத்திரத் தலைவன் மீது பாய்ந்தார். அவன் தனது வாளையோங்கி பாஜி ப்ரபுவின் வாள் வீச்சைத் தடுத்தான்; அவனுடைய வாள் இருதுண்டாக அவனுடைய கையினின்றும் சிதறிக் கீழேவிழுந்தது. பின்பு அவன் தனது கையினால் தடுத்தான். பாஜி ப்ரபுவுக்கு அவனைச் சித்திரவதை செய்யப் பிரியமில்லை. ஆதலால் அவனது கையின்மீது அடிக்காமல், அதைவிலக்கி விட்டார். ஒருகுத்து; பாஜி ப்ரபுவின் வாளாயுதமானது ரஜபுத்திர தலைவனுடைய தொண்டையில் ஊடுருவிப் பாய்ந்தது. அடியற்ற பனைமரம்போல, அவன் ஆ! வென்று அலறிக்கொண்டு வீழ்ந்து இறந்தான். இவ்வளவுதான்; ரஜபுத்திரப் படைகள் சின்னா பின்னமாக உடைந்து புறமுதுகிட்டோடின.

பின்னுக்கு நின்ற பட்டாணியப் படைகள் பார்த்தன; "தீன் தீன்" என்று கூச்சலிட்டுக் கொண்டு இவை மலைமீது ஏறின; இவற்றின் சைந்நியாதிபதிகளும் "இதுதான் சமயம்; மகாராஷ்டிரர்கள இப்பொழுது களைத்திருப்பார்கள; ஆதலால் இதுவே சமயம்" என்று தங்களுடைய சைந்நியங்களை அதிவேகமாக நடத்திக்கொண்டு முன்னே சென்றார்கள். மகாராஷ்டிரர்கள் பாறைகளுக்குப் பின் புறங்களிலும் புதர்களிலும் உருத் தெரியாதபடி மறைந்து கொண்டிருந்தார்கள். பட்டாணியர்கள் வெகுவேகமாக முன்னே ஓடியோடி வந்தார்கள். இவர்கள் சமீபத்தில் வரும் வரையில் மகாராஷ்டிரர்கள் மௌனமாயிருந்தார்கள். பட்டாணியர்கள் சமீபத்தில் வந்ததும், மகாராஷ்டிரர்களுடைய மௌனமானது மகா பயங்கரமான கோஷமாய் விட்டது. முன்னும் பின்னும் இருபக்கங்களிலுமாக ஸ்மசான ருத்திரர் நர்த்தனம் செய்து கொண்டிருந்தார். பிரசண்ட மாருதத்திலகப்பட்ட விருட்சங்களைப்போல, வீரர்கள் விழுந்துகொண்டேயிருந்தார்கள். மகம்மதியப் படைகள் கலங்கிவிட்டன: நாலாப்பக்கங்களிலும் சிதறியோட ஆரம்பித்தன. (தொடரும்.)

சிவம்.

# எனது கனவு.

நான் ஒரு ஏழைப் பிராஹ்மணன்; தற்காலத்து ராஜாங்க பாஷை யெனப்படும் ஆங்கில பாஷையும் சிறிது அறிவேன். ஆங்கிலம் படித்த ஸ்நேஹிதர்கள் எனக்கு அநேகர் உண்டு. நான் என் ஸ்நேகிதர்களிடத்தில் பேசுவது ஆங்கில பாஷையிலேயே. நான் படிக்கும் புஸ்தகங்களெல்லாம் ஆங்கில பாஷாப் புத்தகங்களே; பத்திரிகைகளும் ஆங்கில பாஷாப் பத்திரிகைகளே. நான் எழுதுவதும் ஆங்கிலபாஷையிலேயே. ஆங்கிலம் அறியாத நண்பர்களுக்குக் கூட நான் எழுதும் கடிதங்கள் ஆங்கில பாஷையிலேயேதாம் இருக்கும். வீட்டில் எனது மனைவி, மக்களுடன் வசனிக்கும் பொழுதும், ஆங்கில பாஷாச்சொற்களின் கலப்பின்றி என்னால் சம்பாஷிக்க முடியாது. இவ்விதமாக ஆபத்து நிலைமையில் அகப்பட்டுக் கொண்ட எனக்கு ஆங்கில பாஷையில் சம்பாஷிப்பது அந்தஸ்து என்று தோன்றியது எனது பாஷாபிமானமும் பாஷாஞானமும் இம்மட்டில் இருந்தன. நான் இனிமேல் கூறப்போகும் விஷயத்தில் இவ்வளவு பீடிகை போட வேண்டி வந்தது.

முன்னோர்களுடைய முதறிவெல்லாம் அதன் ஸ்வய பாஷையிலேயே அடங்கிக் கிடக்குமென்னும் நீண்டதோர் வியாசம் பெயர்பெற்ற நிபுணர் ஒருவரால் வரையப்பட்டிருந்ததைக் கண்டேன். அந்த வியாசம் எழுதியவரிடத்தில் எனக்கு அபிமானமும் அன்பும் மிகுதியுமுண்டு; அளவற்ற மதிப்பும் மரியாதையும் உண்டு. உலகினருக்கோர் வழிகாட்டி யென்று நான் அவரை நினைத்திருந்தேன். இவர் இப்பொழுது ஸ்வபாஷைகளை ஆதரிக்க வேண்டுமென்று மிகப் பலமாக வற்புறுத்தியிருந்ததைப் பார்த்த எனக்கு வெகு ஆச்சர்யமாயிருந்தது. ஆனால் இவருடைய வியாசமானது என்னை ஆழ்ந்த ஆலோசனையில் ஆழ்த்திவிட்டது. நமது நாட்டுப் பாஷைகள் உண்மையில் மேம்பட்டவைதாமா? என்ற ஒரு சந்தேகமானது எனது உள்ளத்தில் தோன்றி என்னைக் கலக்கி விட்டது. அன்று முழுவதும் இதே யோசனையாயிருந்து சூரியன் அஸ்தமித்ததும் காலதாமதம் செய்யாமல் சீக்கிரத்தில் இராப்போசனம் செய்துவிட்டு எனது படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டேன். ஆயினும் நித்திரை வரவில்லை. ஸ்வய பாஷை

களைப்பற்றியுள்ள யோசனை என் மனத்தினின்றும் அகலவில்லை; நெடுநேரம் விழித்திருந்து விட்டுப் பின் உறங்கினேன்.

அன்றிரவு ஒரு கனவு கண்டேன். அக்கனவு எனது ஹிருதயத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது; எனது மனோ நிலைமையை மாற்றி விட்டது; எனது உள்ளுணர்ச்சியைக் கிளப்பிவிட்டது. அக்கனவு பின்வருமாறு:—

பகவத்கீதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது ஒரு சந்நியாசி தலைகுனிந்து அந்தத் தெருவழியே போய்க்கொண்டிருந்தவர், சட்டென்று என்னை நிமிர்ந்து பார்த்து, எனதருகில் வந்து "அப்பனே, உன்னைத்தேடிக் கொண்டு எங்கெல்லாம் அலைவது? நீ செய்த பூஜாபலனோ அல்லது நான்செய்த பூஜாபலனோ? அல்லது ஈஸ்வரன் கட்டாயமாகச் செய்யவேண்டிய தர்ம கைங்கர்யமோ? ஏதாயினும் சரியே, இப்பொழுது இவற்றில் ஒன்று நம்மிருவரையும் ஒருவரோடொருவர் சந்திக்கும்படி செய்துவிட்டது. உனது முன்னோர்களுடைய சொத்துக்கள் அனைத்தும் என்வசம் இருக்கின்றன. உனது முன்னோர்கள் பூஜித்த இஷ்ட தேவதாவிக்கிரகங்களும் அவற்றிற்காகச் சமர்ப்பணம் செய்த க்ஷேத்திரங்களும் தர்மஸ்தாபனங்களும் மடங்களும் மண்டபங்களும் என்வசம் இருக்கின்றன. உனது முன்னோர்களுடைய மாட மாளிகைகளும் அரண்மனைகளும் என்வசம் இருக்கின்றன. உனது முன்னோர்களில் லௌகீகர்களானவர்களுக்குச் சிருஷ்டியின் விசித்திரானந்தத்தையும் சிற்றின்பப் பெருக்கையும் அளிக்கும்படியான உத்தியானவனங்களும் வைதீகர்களுக்குச் சிருஷ்டி ஜால உண்மையையும் சிவபோகத்தையும் நல்கும்படியான தபோவனங்களும் என்வசம் இருக்கின்றன. உனது முன்னோர்களுடைய சாஸ்திரசாலை என் வசமேயிருக்கின்றது. உனது முன்னோர்களுடைய தோட்டம் துறவுகளெல்லாம், நன்செய் புன்செய்களெல்லாம் என் வசமே இருக்கின்றன. இவற்றையெல்லாம் உன்னிடம் கொடுத்து உன்னுடைய ஆட்சிக்குட் படுத்துவதற்காகவே நான் உன்னைத் தேடியலைந்தேன். ஆதலால் நீ என்னுடன் வருவாயாயின், உனக்கு இச்சொத்துக்களை அநுபவிப்பதற்குப் பிரியமிருக்குமாயின், உனக்கு நான் இந்தநிமிஷத்திலேயே அவற்றையெல்லாம் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்றார்.



இந்தச் சந்நியாசி என்னைப்பார்த்த பொழுது நான் எப்படியிருந்தேனென்றால், நான் உடுத்தியிருந்த ஆடை அழுக்கடைந்து ஆயிரங்கந்தலாக லாவி லாவியாகத் தொங்கிக்கொண்டிருந்தது. அந்த ஆடையைத் தண்ணீரில் இட்டால் அது நனையாது; அவ்வளவு அழுக்கும் எண்ணெய்ச் சிக்கும் அடைந்திருந்தது. அந்த ஆடையை நெருப்பில் இட்டால், அது எரியாது; காற்றும் உலர்த்தாது; ஆயுதங்களும் வெட்டா. பகவத்கீதையில் இரண்டாவது அத்தியாயத்தில் ஆத்ம வஸ்துவின் லட்சணத்தைக் குறிப்பிடுகின்ற 23-வது ச்லோகத்தைப் பகவான் எனது ஆடையைக் குறித்துத்தான் சொன்னாரோ என்று சந்தேகிக்கும்படியிருந்தது. நான் ஆத்ம வஸ்துவைப் பார்த்ததில்லை; ஒருவருமே பார்த்ததில்லை. ஆதலால் கண்களுக்கு நேராகக் காணப்படுகின்ற ஆடையின் லட்சணம் ஆத்ம லட்சணத்தை யொத்திருந்ததால், ஆடைதான், அதுவும், நான் அப்பொழுது அணிந்திருந்த ஆடைதான் உண்மையெனத்தோன்றிற்று. சிரசில் எண்ணெ யிட்டுச் சிலவருஷங்களாய் விட்டன. சிரோ ரோமங்கள் காற்றில் பறந்துகொண்டிருந்தன. ஆகார விஷயத்திலே, எனக்கு அந்த வியவகாரம் மிகவும் சொற்பம். ஏகாதசி உபவாசம் இருப்பது புண்ணியமென்று எவரேனும் கூறுவராயின் ஏகாதசி உபவாசம் இருப்பவர்கள் துவாதசியன்றும் கட்டாயமாக உபவாசமிருக்கவேண்டுமென்றும், இல்லாவிட்டால் ஏகாதசி விரதபலன் கிட்டாதென்றும் நான் போதிப்பேன். ஒரு வியாதியஸ்தன் மூன்று நாட்களுக்குப் பத்தியமிருந்து ஔஷதம் சாப்பிட்டால், அவன் முதல் மூன்று நாட்கள் மட்டும் பத்தியமிருந்தது போதாதென்றும் மறு பத்தியமாக இன்னும் மூன்று நாட்களுக்கும் பத்தியமாகவே யிருந்துதீர வேண்டுமென்றும் அப்படி யிராவிட்டால் ஔஷதம் சாப்பிட்டதன் பலன் கிட்டாதென்றும் வைத்திய சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். அதுபோலவே ஒருநாள் உபவாசமிருந்தால் மறுநாளும் உபவாசம் இருந்தேதீர வேண்டும் என்பது எனது துணிபு. இக்கொள்கையை எனது ஜீவிதகாலத்தில் அநுபவத்தில் கொண்டுவந்தேன். உண்பதற்கு உணவு இருந்தால், உபவாசம் இருத்தல் முடியாத கார்யம்தான். திராட்சைப்பழம் புளிக்கும் என்றதைப் போலவே எனது உபவாசமும். கண்களின் ஒளிமழுங்கிக் கன்னங்களில் குழிவிழுந்து, சரீரமானது வாடி வதங்கி வற்றி எலும்பும் தோலுமாகித் தரித்திர தேவதையின் பூரண கடாட்சம் பெற்

றிருந்த என்னிடம் இந்தச் சந்நியாசி யானவர் "நீ மிக்க செல்வ
வான்; உனது செல்வங்க ளெல்லாம் என்னிடம் இருக்கின்றன"
என்று கூறியபொழுது, என்னால் நம்ப முடியவில்லை. ஆதலால்
நான் அவரைநோக்கி "ஸ்வாமி, தாங்கள்யார்? தங்களுடைய நாம
தேயம்யாது? எனது பூர்வீக சொத்துக்கள் எப்பொழுது எப்படி
எனக்குக் கிட்டாமல் தங்கள் வசத்தில் வந்துசேர்ந்தன. தயை
செய்து சொல்லியருளுக" என்று கேட்டதும் அவர் "அப்பனே,
எனது பெயர் சத்தியானந்தப் பரதேசியென்பார்கள். நான் வெகு
காலத்து மனுஷ்யன். பற்பல ஜனங்களும் என்னை "சாந்தாநந்
தன்" என்றும் "சதாநந்தன்" என்றும் "சச்சிதாநந்தன்" என்
றும் பற்பல விதங்களாக அழைப்பதுண்டு. உலகில் அவரவர்களு
டைய உரிமையை அவரவர்களைத் தேடிக்கண்டுபிடித்து அவரவர்
களிடம் ஒப்பு விப்பதே எனது தொழில்; இத்தொழிலினின்றும்
நான் நீங்குவேனாயின், எனது உரிமைகளும் என்னிடத்தினின்
றும் நீங்கிவிடும். உனது குழந்தைப் பருவத்தில் உனது பெற்றோர்
இறந்தனர். உனக்குச் சிறிது சித்தப்பிரமை யுண்டாகி, நீ மூடர்
களுடனும் மூர்க்கர்களுடனும் உறவாடிக் கொண்டு அடங்
காப்பிடாரியாகி உனது சொத்துக்களை யெல்லாம் துர்
விநியோகம் செய்தாய். உனது பெற்றோர் எனக்கு மிக வேண்
டியவர்கள். உனது மாதா எனக்கு ஒரு முறையில் சகோதரி
யாகவேண்டும். ஆதலால் உனது நடத்தைகளைக் குறித்து
நான் மிகக் கவலை கொண்டிருக்கையில் நீ உனது நண்பர்களுடன்
எங்கோ தூரதேசம் சென்றுவிட்டாய். உனது சொத்துக்கள்
அநியாயமாக அந்நியர்வசத்தில் அகப்பட்டு அழிந்து போகுமே
என்று நினைத்து அவற்றை என் வசப்படுத்திக் கொண்டேன்.
எத்தனை வருஷங்கள் ஆய்விட்டன? ஆ! ஆ! இப்பொழுது உன்
னைக் கண்டேன்; எழுந்திருந்து கூடவந்து அவற்றையெல்லாம்
ஏற்றுக்கொள்" என்றார் நான் அவரிடத்தில், "ஸ்வாமி! தங்களு
டைய ஸ்வதேசம் இஃதன்றோ? நான் பழுத்த ஸ்வதேசி; ஆக
லால் எனக்குப் பரதேசிகளிடத்தில் சிறிதும் நம்பிக்கை கிடை
யாது. எனக்குப் இப்பொழுது ஆசைவார்த்தை கூறி ஏதோ ஒரு
விதத்தில் என்னை ஏமாற்றுவதற்காக இட்டுச் செல்வதற்கு யோ
சித் திருக்கிறீர்கள் போலும்" என்றேன். அவர் புன்னகைபுரிந்து
"பைத்தியக்காரா, உன்னை ஏமாற்றி எனக்கு ஆகவேண்டிய தெ
ன்ன? நான் பரதேசி என்பதனால் இவ்வுலக இன்பங்களை நீக்கிப்,



பரலோக வின்பத்தை யநுபவிப்பவன் என்று கூறினேன். நீ
உன்னை "ஸ்வதேசி" யென்று சொல்லிக் கொள்வது மிக்க கௌ
ரவமென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். உனது முன்னோர்
கள் "ஆர்யர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள். ஆர்யனாயிருப்
பதினும் ஸ்வதேசியா யிருப்பது மேம்பட்டதன்று. என்றைபத்
தினம் உனக்கு ஆர்யன் என்ற அரியபெயர் நீங்கித் தேசத்தின் எல்
லையைக் குறிப்பிடும் படியான "ஹிந்து" என்ற பெயர் ஏற்பட்ட
தோ, அன்றுமுதல் உனக்குப் பைத்தியம் பலமாய்விட்டது. இப்
பொழுதோ, "ஹிந்து" என்ற பதமும் தேச எல்லையைக் குறிப்
பிடுவதற்குப் போதுமான தன்றென்றும் இப்பதம் ஒருமதத்தை
யே குறிப்பிடுகின்றதென்றும் ஆதலால் "இந்தியன்" என்ற
பெயர்உனக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் நீ நினைக்க ஆரம்பித்
திருக்கிறாய்; எப் பெயராயினும் சரியே "ஆர்யன்" என்ற பெய
ருக்கு ஈடாகாது. ஆதலால் உன்னை ஆர்யனாக்குவதற்கும் உனது
பரம்பரையான ஆர்ய உரிமைகளை உனக்குக் கொடுத்தற்குமே
நான் இப்பொழுது வந்தேன்." என்றார்

அவரது பிரசன்ன முகமும் இன்ப வசனங்களும் ஹிருதய
விலாசமும் என்னை அவர் சொற்படி நடக்கும்படி செய்துவிட்
டன. நான் எழுந்திருந்து அவரைப்பார்த்துத் திண்ணையில் ஒரு
நிமிஷம் வீற்றிருக்கும் படி கேட்டுக் கொண்டு, எனது வீட்டினுள்
சென்று எப்பொழுதாவது வெளியில் செல்லும்பொழுது அணி
ந்து கொள்வதற்கென்று நான் பத்திரமாக வைத்திருந்த உடை
களை அணிந்து கொண்டேன். இவ்வுடைகளும் நீர்க்காவி பிடித்
திருக்கும். ஆயினும் எனது ஆக்ம லட்சணக் கந்தையைவிட
இவைகள் உயர்ந்த உடைகள் என்று நான் நினைத்திருந்
தேன். சந்நியாசி ஜன்னலின் வழியாக நான் உடைமாற்றிக்
கொள்வதைப் பார்த்துவிட்டு "அடே! அடே! நீ என்ன காரியம்
செய்கிறாய்? உள்ளும்வெளியும் ஒரேமாதிரியாக இருத்தல் அல்ல
வோ உண்மையான யோக்கியதைக்கு அடையாளமாகும்? இந்தப்
பித்தலாட்டங்களை யெல்லாம் நீ இன்னும் விடவில்லையா? சரி,
நீ உன் இஷ்டப்பிரகாரம் மெல்லப்புறப்படு; நான்போய் விட்டு,
வருங்காலத்தில் வருகிறேன்" என்று எழுந்திருந்து நடந்தார்.
நான் உடனே வெளியே ஓடிவந்து அவர் கையைப் பிடித்துக்
கொண்டு அவர் இஷ்டம்போல் நடப்பதாக உறுதிமொழி கூறி
னேன். உடனே அவர் என்னை நான் முன்னிருந்த சாதாரண

மான கந்தையுடையையே மறுபடியும்உடுத்திக்கொண்டு வரும்படி ஆக்ஞைசெய்தார். அப்படியே செய்துகொண்டு அவரைப்பின் தொடர்ந்தேன். அவ்வூரில் பார்ப்பன அக்கிரகாரம் முதல் பறைச்சேரி வரையிலுள்ள எல்லாத் தெருக்களையும் சுற்றிக்கொண்டு அவ்வூருக்கு வெளியேசென்று வெட்டவெளியாயிருந்த ஒரு மணல் காட்டுக்குள் நுழைந்தோம். உச்சிவேளை உக்கிரமாகச் சூரியன் காய்ந்து கொண்டிருந்தான். கீழுள்ள மணல் பொரிந்து கொண்டிருந்தது. என்னால் அம்மணலில் நடக்க முடியவில்லை. பாதங்கள் இரண்டும் கொப்பளித்துப் புண்ணாய்விட்டது. கொதித்துக் கொண்டிருந்த ஒருமணல்திட்டில் நான் களைத்துத் தள்ளாடி விழுந்து விட்டேன். கூடவந்த சந்நியாசி சிறிதும் களைக்கவில்லை; அவருடைய பாதங்கள் இரும்பினாலாக்கப்பெற்றிருப்பினும், இரும்பும் அப்பொழுது உருகியிருக்கும்; அவ்வளவு வெயில் அடித்துக் கொண்டிருந்தது. அவருடைய பாதங்களைப்பற்றி ஏதோ ரகஸ்யம் உண்டுபோலத் தோன்றியது. அப்படியே அவருடைய சிரசைப் பற்றியும். எனது தலைசுற்றி விட்டது. எனது மண்டை பிளந்து விடும் போலிருந்தது. எனது கண்கள் செக்கச் சிவக்கக் காய்ந்து எரிந்து கொண்டிருந்தன.

அப்பொழுது அந்தச் சந்நியாசி என்மீது இரக்கமுற்று என்னை அவருடைய அழகிய கைகளினால் அன்புடன் தடவிக் கொடுத்தார். ஆ! ஆ! அவருடைய கைகளின் ஸ்பர்சத்தாலுண்டாய ஆநந்தத்தைப்போல எப்பொழுதும் எவர்க்கும், ஆநந்தம் உண்டாயிருக்கமாட்டாது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். சிற்றின்பத்தின்மீது இச்சைகொண்டு சிறுமையை நாடி வரும் ஸ்திரீ லோலர்களே! கர்மேந்திரியப் போக்குகட்கு உட்பட்டுக் கடைத்தேற வழியுணராது கலங்கித்திரியும் கபவர்களே! ஞானேந்திரிய வசத்தர்களாய் நன்மையையே செய்வதாக நினைத்துக் கொண்டு சதா தீமையையே புரிந்து வரும் திருடர்களே! மனத்திற்கு அடிமையாகி மாயையில் உழன்று திரியும் மடையர்களே! குரு சிஷ்யன்மீதுகருணைமிகுந்துஅஸ்த மஸ்தக சையோகம்செய்வதனாலுண்டாகும் ஆநந்தத்தை அளவிட்டுக்கூற உங்களால் முடியுமோ? என்மீது சத்தியாநந்தப் பரதேசியின் கரங்கள் பட்டவுடன், ஜில்லென்று பன்னீர் தெளித்தது போன்றிருந்தது. எனது சரீரமோ பொன்மயமாகப் பிரகாசித்தது. நான் நன்றாக உட்கார்ந்து கொண்டு சுற்றிலும் பார்த்தேன். எனதருகில் என்கூட



வேயிருந்த சந்நியாசியைக் காணவில்லை. ஆகாயத்தில் சூரியனுக்குப் பதிலாகச் சந்திரன் பட்டப்பகல் போல நிலவுகாய்ந்து கொண்டிருந்தது. வெட்டவெளியாயிருந்த மணற்காடு இப்பொழுது எல்லாப்பக்கங்களிலும் நீரோடைகளால் சூழப்பெற்று அதிமனோரம்மியமான வசந்த காலத்து உத்தியான வனங்களும் பளிங்குமா மண்டபங்களும் ஆய்விட்டது. ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்! சந்நியாசி எங்கு எப்படி மறைந்து கொண்டார்? இப்பொழுது உண்டாய அழகியமாறுபாடுகளுக் காரணம் அவர்தாமா?

(தொடரும்.)

ஸ்வப்பனசுகி.

## கௌரவ ஸ்ரீமான் கோகுலர் அவர்கள்.

கௌரவ ஸ்ரீமான் கோகுலர் அவர்களின் மரணத்தினால் இப்பொழுது இந்துதேசமானது ஆருத்துயரத்தை யடைந்திருக்கின்றது; பாரத புத்திரர்கள் பரதவிக்கின்றார்கள்; ஆர்யாவர்த்தத்தின் அழகு குன்றிவிட்டது. ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகுலரவர்கள் இந்தியா தேசத்தின் மேன்மையின் பொருட்டுத் தம்மைத் தியாகம் செய்து கொண்டவர்; ஸ்வதேசத்தின் முன்னேற்றமே கண்ணும் கருத்துமாகக்கொண்டு இராப்பகலறியாது எந்நாளும் உழைத்து வந்தவர். இவரது பிறப்பிடம் கோலாப்பூர் என்ற மகாராஷ்டிர நகரம். இவர் 1866-வது வருஷத்தில் பிறந்தவர். இவர் தமது வித்தியாப்பியாச காலத்திலேயே தமது புத்தி நுட்பத்தையும் அதி கூர்மையான ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் பிறாறிய விளக்கியுள்ளார். 1884-வது வருஷத்தில் இவர் பீ. ஏ. பரீட்சையில் தேறி, தட்சிண வித்தியா சபையில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்து பேர்குஸன் கல்லூரியில் ஒரு உபாத்தியாயர் வேலையில் அமர்ந்தார். இவர் அக்கல்லூரியின் தலைமை உபாத்தியாயரா யில்லாவிடினும் அதில் இவரது செல்வாக்கே மிகுந்து நின்றது. இக்காலத்தில் இவர் பம்பாய் ஐக்கோர்ட் ஜட்ஜி, ஸ்ரீமான் மகாதேவ கோவிந்த ரானடே அவர்களின் சிஷ்யராகி, அவரிடத்தினின்றும் ஜனசமூக நீதிகள், ராஜீய விஷயங்கள் முதலியவற்றை ஐயந்திரி பறக் கற்றுக்கொண்டார். 1887-வது வருஷத்தில், அதாவது இவருடைய இருபத்

தோராவது வயதில், இவர் புனா நகரத்து சர்வ ஜனசபையில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்து அதற்குக் கார்யதர்சியாக நியமிக்கப்பட்டதுமன்றி அச்சபையார் நடத்தி வந்ததொரு சஞ்சிகையையும் வெகுதிறமையுடன் நடத்தி வந்தார். மேற்படி சர்வஜன சபையில் அபிப்பிராய பேதங்களினால் கட்சிப் பிரதிகட்சிகள் ஏற்பட்டு, ஸ்ரீமான் கோகுலர் அவர்களும் வேறு சிலருமாக தட்சணசபை யென்ற ஒரு சபையை ஸ்தாபித்தார்கள். அதிலும் ஸ்ரீமான் கோகுலரவர்களே கார்யதர்சியா யிருந்தார். "சுதாரகை" யென்ற பெயருடன் ஆங்கில பாஷையிலும் மகாராஷ்டிர பாஷையிலுமாக நடந்து வந்த வாரப்பத்திரிகை யொன்றிற்கு இவர் பத்திராதிபராகவும் இருந்தார். 1895-வது வருஷத்தில் இவர் காங்கிரஸ் என்னும் இந்திய ஜனசமூக மகாசபைக்குக் கார்யதர்சியா யிருந்தார். 1897-வது வருஷத்தில் இந்தியாவின் வரவு செலவு விஷயத்தைப்பற்றி விசாரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட வெல்பிக் கமிஷன் என்னும் ராஜ விசாரணைச் சபையின் முன்பு சாட்சியம் கொடுப்பதற்காக இவர் இங்கிலாந்து சென்றார்.

இவர் இங்கிலாந்தில் இருந்த சமயத்தில் பம்பாயிலிருந்த இவருடைய சில ஸ்நேகிதர்கள் பம்பாய் அரசாங்கத்தார் பிளேக் வியாதியைப் பற்றியுள்ள சட்டங்களை ஊர்ஜிதத்தில் கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் குடி ஜனங்களை மிகவும் துன்புறுத்துகின்றார்கள் என்று இவருக்குப் பற்பல கடிதங்கள் எழுதித் தெரியப்படுத்தினார்கள். இவர் அவ்விஷயத்தை ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு எழுதி இங்கிலாந்து தேசத்தில் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணினார். இவர் திரும்பி இந்தியாவுக்கு வந்தபொழுது, பம்பாய் ராஜாங்கத்தார் இவர் இங்கிலாந்து தேசத்தில் எழுதிப் பிரசுரித்தவற்றை ருசுப்படுத்தும்படி இவரை வற்புறுத்தினர். இவர் தம்மால் ருசுப்படுத்த இயலாமல், அரசாங்கத்தாரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

1900-வது வருஷத்தில் பம்பாய்ச் சட்ட நிரூபண சபையில் இவர் ஒரு அங்கத்தினராகப் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1902-வது வருஷத்தில் இந்திய ராஜாங்கச் சட்ட நிரூபண சபையில் இவருக்கு ஒரு ஸ்தானம் கிடைத்தது. இவர் பேர்குஸன் கல்லூரியில் தாம் வகித்திருந்த உபாத்தியாயர்த்தொழிலினின்றும் விலகிக் கொண்டார். அக்கல்லூரியில் மாதமொன்



றுக்கு ரூ-75 சம்பளம் வாங்கிவந்தார். இவர் விலகிக் கொண்டபின் இவருடைய ஆயுட்காலமுழுதும் மாதம் ஒன்றுக்கு ரூ-30 இவருக்கு உபகாரச் சம்பளமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. பின்னர் இவர் தமது காலம் முழுதையும் தேசசேவையின் பொருட்டே கழித்தார். 1905ம் வருஷத்தில் காசிமாநகரில் நடந்த இந்திய (காங்கிரஸ்) ஜனசமூக மகா சபைக்கு இவர் அக்கிராசனாதிபதியாக நியமிக்கப்பட்டார். பின் இத்தேசத்தில் கட்சிப்பிரதிகட்சிகளும் குழப்பங்களும் மிகுந்தன. இக்குழப்பச் சந்தர்ப்பத்தில் இவர் நடந்து கொண்டமாதிரி பொது ஜனங்களுக்குள் இவரைப்பற்றி அபிப்பிராய பேதங்கட்கு இடங் கொடுத்தது. 1905-வது வருஷத்தில் இவர் இந்திய ஊழியச்சங்கம் என்ற ஒரு சபையை ஸ்தாபித்தார். இவர் பற்பல தடவைகளிலும் இங்கிலாந்து சென்று இந்திய விஷயங்களைப் பற்றி மிகப்பலமாக மன்றாடியிருக்கிறார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் துன்புற்றுக் கலங்கிக் கொண்டிருந்த பொழுது இவர் தாம் நேரே அங்கு சென்று அவர்களுக்கு ஆறுதல்கூறித் திரும்பினார். சமீபத்தில் நியமிக்கப்பட்டு இன்னும் பூர்த்தியடையாமல் இருக்கின்ற பொது உத்தியோக விசாரணைச் சபையில் இவரும் ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டு தமது ஜென்ம பூமியின் முன்னேற்றத்திற்காக மிகப் பாடுபட்டார். கடைசியில் இவர் தமது ஸ்வதேசம் திரும்பி வந்து சிரம பரிகாரம் செய்து கொள்ளும் பொருட்டுப் புனா நகரத்தில் வசித்து வந்தார். இவருடைய சரீரம் வெகு நாட்களாக நோயினால் அடிக்கடி பீடிக்கப்பட்டு வந்த போதிலும், இவ்வளவு சீக்கிரத்தில் இவர் நம்மைவிட்டு நீங்குவாரென்று நாம் கனவிலும் கருதவில்லை. சென்ற வருஷத்தில் நடந்த இந்திய ஜனசமூக (காங்கிரஸ்) மகா சபையில் இரண்டு கட்சிகளையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்று முயற்சிகள் செய்யப்பட்டன; ஆனால் பலிக்கவில்லை. அப்பொது ஸ்ரீமான் கோகுலரவர்களே ஒற்றுமையின் குறுக்கே நின்றார் என்று ஒருபலமான வதந்தி யுண்டாயிற்று. இவர் பத்திரிகைக்கு நீண்ட தோர்கடிதம் எழுதி ஸ்ரீமான் திலகருடைய ஸ்வபாவீக பிடிவாதத்தினாலேயே இரண்டு கட்சிகளுக்கும் ஒற்றுமை ஏற்படாது போயிற்று என்று வெளியிட்டார். ஸ்ரீமான் திலகரும் மறுமொழி எழுதினார். இப்படி நடந்து கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீமான் கோகுலாவர்கள் பரலோகம்

சென்றாரென்று பாரதபுத்திரர்கள் கேட்டார்கள்; பரிதவித்தார்கள்.

இவர் மரிக்கும்பொழுது இவருக்கு வயது 49; இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பெயர்பெற்றார்; இரவும் பகலும் இடைவிடா உழைப்பையே ஸ்வபாவமாகக் கொண்டவர்; அதிருஷ்ட தேவதைக்கு அந்தரங்க அன்பர்; அரசாங்கத்திற்கும் நண்பர். கால நியதியானது தர்மசக்கரத்திற்கு அநுசரணையாக அவ்வப்பொழுது அவசியமல்லாதனவற்றை யழித்தும் அவசியம் உள்ளனவற்றை யாக்கியும் அற்புத லீலைகள் புரிந்து வருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் இவருடைய மரணமானது நம்மாலும் நமது அரசாங்கத்தாராலும் மிகவும் துக்கித்தற் குரியதேயாயினும், நம் மெல்லோரையும் தனது இச்சையின் பிரகாரம் ஆட்டிவைத்துக் கர்மசக்தி யென்றும் காலசக்தி யென்றும் பற்பல பெயர்களைப்பூண்டு தன்னரசு செலுத்தி வருகின்ற மகாசக்தியின் மனோ தர்மங்கள் நம்மால் அறியப்படுவனவோ? ஆயினும், யாது நேரிடினும், எல்லாம் நமது நன்மைக்கே யென்னும் கொள்கை யுடையோம் யாம். ஆதலின், ஸ்ரீமான் கோகுலர் அவர்களின் மரணத்தைப் பற்றி நாம் தேறுதலடைந்து ராஜ ராஜேஸ்வரியின் திருவருளைச் சிந்திப்போமாக!

ஸ்ரீமான் கோகுலர் அவர்களின் சர்வ சமர்த்து இன்னொருவருக்கு வாய்க்குமோ? என்று நாம் சந்தேகிக்கின்றோம். இவருடைய அபிப்பிராயங்களில் சிலவற்றிற்கு நாம் இணங்கோமாயினும், இவர் தாம் கொண்ட கொள்கைகளை தேச க்ஷேமத்திற்கு ஏற்றவை யென்றே கருதிக் களங்கமற்ற ஹிருதயத்துடன் வேலை செய்தா ரென்றும் திரிகரண சுத்தியாகத் தமது தேசத்தினிடத்தில் பக்தி செலுத்தினா ரென்றும் நாம் திடமாகச் சொல்வோம். சட்ட நிரூபண சபைகளிலும் மற்றச் சந்தர்ப்பங்களிலும் இவர் செய்துள்ள சாமாரியான பிரசங்கங்கள் இன்றும் இவருடைய உண்மையான உள்ளத்திற்கு ஓர் அறி குறியா யிருக்கின்றன.

சாட்சாத் பரமேஸ்வரன் ஒருவனே பரிபூர்ணத்துவத்தை லட்சணமாக உடையவனாதலால், குற்றங்குறைகளில்லாத ஜீவராசிகள் உலகில் கிடையா. ஆதலால் ஸ்ரீமான் கோகுலரவர்களிடத்திலும் குற்றங்குறைகள் இருந்தன வென்றே சொல்லவேண்டும். எதிர்க் கட்சியாரின் அபிப்பிராயங்களைப் பெருந்தன்மை யுடனும்



பொறுமை யுடனும் செவிகொடுத்துக் கேட்கும் ஸ்வபாவம் இவருக்கு இருந்த போதிலும், அக்கட்சியாருடன் இணங்கிப்போக வேண்டுமென்ற எண்ணமாவது, அல்லது அவர்களை - அவர்கள் தப்புவழியில் செல்பவர்கள் என்று தமக்குத் தோற்றினால் தம் வசப்படுத்திச் சீர் திருத்தவேண்டு மென்ற எண்ணமாவது, அபிப்பிராயங்களில் வித்யாசப்பட்டாலும் அவர்களும் தமது சகோதரர்களே என்று நினைக்கும் ஸ்வபாவமாவது இவருக்கு இருந்ததாக நாம் அறிய முடியவில்லை. தமது பால்ய காலத்திலேயே இவர் புனா சர்வ ஜன சபையினின்றும் பிரிந்து தட்சிணசபை ஸ்தாபித்த பொழுதே இவருடைய பிரிந்து நிற்கும் ஸ்வபாவம் வெளிப்பட்டு விட்டது. 1907-ம் வருஷத்து இந்திய (காங்கிரஸ்) ஜனசமூக மகாசபை இரண்டு கட்சியாகப் பிரிவுபட்டதற்கு மூலகாரணமாயிருந்த கட்சியில் இவரும் ஒரு பிரதான தலைவராயிருந்தார். பிற்பாடு இரண்டு கட்சிகளையும் ஒற்றுமைப் படுத்துவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் பலனடையாமற் போனமைக்குக் காரணம் இவருடைய மனமின்மையே என்று சொல்லப்பட்டது. சென்ற வருஷத்திலும் இவரே தடையாயிருந்தார். ஆகவே, தம்மிடத்தினின்றும் வேற்றபிப்பிராயங்களுடையவர்களையும் கௌரவித்துத் தம்முடன் சேர்த்துக்கொண்டு உழைக்கும் தன்மை இவருக்கு இல்லையென்று நாம் கூறத் துணிகின்றோம். இவருடைய மரணத்தைக் குறித்து அநுதாப வியாசங்கள் பிரசுரித்த பத்திரிகைகளில் ஒன்றாவது இவருடைய குறைகளைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை. நாம் கூறத்துணிந்ததைப் பற்றி நமது வாசகர்கள் நம்மை மன்னிப்பார்களென்று நம்புகிறோம்.

இன்னும் ஒன்று. இவர் இங்கிலாந்திலிருந்து முதன் முதலில் திரும்பி வந்தவுடன், பம்பாய் அரசாங்கத்தாரை மன்னிப்புக் கேட்டுக்கொண்டார் என்று முன்னரே கூறியிருக்கின்றோம். இவருடைய இச்செய்கை ஒப்பத்தக்கதா? என்பது கேள்வி. இவர் பம்பாய் அரசாங்கத்தார்மீது இங்கிலாந்தில் சுமத்திய குற்றங்கள் உண்மையாக நடந்திருந்து அவற்றை ரூபப்படுத்துவதற்குச் சாட்சியங்கள் இல்லாமையினால் அக்குற்றங்கள் நடந்தது உண்மையென்று இவர் மனப்பூர்வமாக நம்பி யிருந்து—இவர் மன்னிப்புக் கேட்டிருந்தால், இவருடைய இச்செய்கைக்குக் காரணம் பயம் ஒன்றே தவிர, வேறில்லையென்று நினைக்கவேண்டியதிருக்கிறது. இது பெருந்தன்மையாக மாட்டாது; அரிச்சந்திர சந்ததியாராகிய

ஆர்ய புத்திரர்கட்கு அவமானத்தை விளைவிக்கத் தக்கதாம். ஆனால் இவர் கூறிய குற்றங்கள் உண்மையாக நடந்திராமல், பொய்யான வதந்திகளா யிருந்திருக்கும் பட்சத்தில், இவர் அக்குற்றங்கள் உண்மையில் நடந்தனவல்லவென்று அறிந்தவுடன் எவர் மீது குற்றம் சுமத்தினாரோ அவரை மன்னிப்புக் கேட்டுக்கொள்வது ஆர்ய லட்சணமாகும்; பெருந்தன்மையுமாகும். எப்பொழுதும் சத்தியத்தை நிலை நிறுத்தற்காக உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே தியாகம் செய்து விடுதலே உத்தமமான தர்மமாகும். இன்னும் இம்மாதிரியே பற்பல சில்லரைக் குற்றங்களும் இவரிடத்தில் இருந்தன.

இவருடைய மரணத்தினால் இந்திய தேசமானது என்றும் அடையாத் துயரத்தை யடைந்துவிட்டது. இந்திய ஜனசமூகமானது ஏக்கமடைந்து நிற்கின்றது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" என்ற விதியின்படி கால நியதியினால் கோகுலவர்கள் நம்மைவிட்டு நீங்கினார்; நமது தேசத்தின் க்ஷேமத்தைக் கருதி உழைப்பதற்கு இனியொருவரை எதிர்பார்க்கின்றோம். ஸ்ரீமான் கோகுல ரவர்களுக்கு எல்லாம்வல்ல எம் இறைவன் உத்தமோத்தமமான உபசாந்த பதவியை யருள் புரிவாராக!

## சமாசாரக் குறிப்பு.

இப்பொழுது வங்காளத்தில் கவர்னராயிருக்கும் கார்மிக்கேல் பிரபு அவர்கள் டாக்கா நகரத்தில் ஒரு சபையில் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கும்படி நேரிட்ட பொழுது வங்காளி பாஷையில் பேசினாராம். இவர் நமது ராஜதானியில் கவர்னராயிருந்த பொழுது, ஒரு சமயத்தில் தமிழ் பாஷையில் பேசினரென்று கேள்விப்பட்டோம். இவர் இப்பாஷைகளில் எவ்வளவு விற்பத்தியடைந்திருக்கிறார் என்று நமக்குத் தெரியாது. ஆயினும் இவர் இத்தேசவாசிகளிடத்தில் இத்தேச பாஷைகளில் பேசமுயலுவது இத்தேச ஜனங்களிடத்தில் இவருக்குள்ள அன்பை விளக்குகின்றது. தேசபாஷைகளை மறந்து ஆங்கில பாஷையில் மயங்கித்திரியும் பிரபுக்கள் கார்மிக்கேல் பிரபுவின் செயலைக் கவனிப்பார்களாக.

* * * *

THE REGISTRAR OF ... 18 MAY 1915 ... MADRAS

ஞானபாநு.

VOL 2. தொகுதி. 2. | March 1915. ஆநந்த ௵ பங்குனி ௴ | No. 12 பகுதி 12

## சாது சங்க மகிமை.

சமதமாதி லட்சணங்கள் வாய்ந்தவர்களாய், சமஸ்தப் பொருள்களையும் சமமாகக்கருதி சாட்சாத் நித்திய வஸ்துவினிடத்தி லிருந்து உண்டாகும் நிர்மலாநந்தத்தையே லட்சியமாகக் கொண்டவர்களாய் "பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையா யொன்றும் பாரா" தவர்களாய் எக்காலத்தும் எங்கும் எல்லாப் பொருள்களிடத்தும் இன்பமுற்று இருப்பவர்களே சாதுக்கள் எனப்படுவார்கள். இவர்களுக்கு இப்பிரபஞ்சத்தில் துக்கமேயில்லை; துன்பம் என்பதேயில்லை. இவர்களுடைய ஹிருதயமானது எல்லையற்று விரிந்து அண்ட பிண்ட சராசரப் பொருள்களனைத்தையும் தன்னகத்துள் ஏற்றுக்கொள்கின்றது. இவர்களுடைய அறிவாகிய ஆதித்தனிடத்திலிருந்து அன்பாகிய கிரணங்கள் நாலாபக்கங்களிலும் வீச, ஜீவராசிகள் இவ்வெளிச்சத்தை யாதாரமாகக்கொண்டு சம்சாரசாகரத்தில் தத்தளித்துத் திண்டாடாமல் கரையேறுகின்றன. இவர்களே இப்பிரபஞ்சத்திற்கு எஜமானர்கள். இவர்களுடைய ஆக்ஞைகளைத் திரிமூர்த்திகளும் கூட நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள். இவர்களுடைய மனமானது பிரமஸ்வரூபத்தை உள்ளது உள்ளபடியே பிரதிபலித்துக் காட்டும் இயற்கை வாய்ந்தது. இவர்களே திரிகால ஞானிகளாகி, ஜனசமூகக்ஷேமத்தை நாடிக் காலதேச சந்தர்ப்பங்கட்கேற்றவாறு ஸ்மிருதிகளை உண்டாக்கி மானிடவர்க்கத்திற்கு வழி காட்டுபவர்கள். இவர்களே அன்பாகாரமாகி, அனைத்தும் தாமாயிருப்பவர்கள். இவர்களுக்கு விருப்பும் வெறுப்பும் கிடையாது.

சமஸ்த லோகங்களுக்கும் சுகமுண்டாகக்கடவது என்பதே இவர்கள் எப்பொழுதும் செய்யும் பிரார்த்தனை. இவர்களிடத்தில் எல்லோரையும் ஆகருஷிக்கப்பட்ட ஏதோ ஒரு சக்தி, இன்னதென்றும் இத்தன்மையதென்றும் எவராலும் அறிய முடியாத ஒரு சக்தி, பக்குவமடைந்த முமுட்சுக்களாலேயே அநுபவத்

தில் அறியப்படும் ஒரு சக்தி பிரகாசிக்கின்றது. இந்தச் சக்தியே தேஜஸ் எனப்படும். இதுவே பிரஹ்மசக்தி. இதுவே மகாசக்தி, இச்சக்தியையுடையோர் எல்லாம்வல்லவ ராவார்கள். இச்சக்தி மகாத்மியத்தில் கல்லானை கரும்பு தின்னும்; சிங்கம், புலி, கரடிகளெல்லாம் ஆட்டுக்குட்டிகளைப் போல அடங்கி, இட்டபணியைத் தட்டாமல் செய்யும். இச்சக்தி விசேஷத்தால், திரிமூர்த்திகளையும் அவரவர்களுடைய ஸ்தானங்களிலிருந்து மாற்றிவிடலாம். இதுவே ஜெகத்சக்தி, சித்சக்தி, வித்தியாசக்தி யென்றும் அவித்தியா சக்தியென்றும் ஒன்றுக்கொன்று நேர்மாறுபாடான பெயர்களைக்கொண்டு அதிவிநோத வேடிக்கைகளை யெல்லாம் ஆக்கிவருகின்ற மகாமாயாசக்தியும் இதுவே யாகும். இச்சக்தியை யடைந்தோர் ஈஸ்வரனென்பதில் தடை யென்ன.?

இப்பேர்ப்பட்ட சக்தியை யடையப்பெற்றும், சாதுக்கள் துன்புறுவானேன்? சாதாரணமாகப் பிரபஞ்சத்தில் சாதுக்கள் அளவுக்கு மிஞ்சிய கஷ்டங்களை யநுபவிக்கும்படி நேரிடுவதும், துஷ்டர்கள் சுகமாகக் காலம் கழித்து வருவதும் நாம் தினந்தோறும் கண்கூடாகக் கண்டு வரும் காட்சியல்லவா? இதற்குக் காரணம் என்ன? யாதுவரினும் அவற்றைப் பொருட்படுத்தாது, அகங்கார மமகாரங்களற்று எல்லோர்க்கும் தம்மாலியன்ற உதவி புரிந்து வரும் சாதுக்களுக்கு இந்த அவலட்சணமான சரீரத்தைச் சம்பந்தித்து உண்டாகும் கவலைகளையும் கஷ்டங்களையும் பற்றிக் கவனிப்பதற்கு நேரமெங்கே? எல்லாம் வல்ல ஈசனாயினும் பிராரப்த கர்மத்தை யநுபவித்தே தீரவேண்டும். ஆதலால் சாதுக்கள் சஞ்சலமற்றுப் பிராரப்த போகத்தைப் புசிப்பார்கள், இன்னும், அவர்கள் துன்பங்களிலாழ்ந்தித் துக்கமுறுபவர்களாகப் பிறருடைய கண்களுக்குத் தோற்றிய போதிலும், அவர்கள் எப்பொழுதும் சந்துஷ்டர்களாயச் சமாதானசித்தத்துடன் சாந்த பதவியிலிருப்பார்கள்.

அவந்தி யென்றொரு நகரம் இருந்தது. அந்நகரத்து ஜனங்கள் அனைவரும் மூட சிரோன்மணிகள்; அறிவென்பது அணுவளவு கூட இல்லாதவர்கள். அறிவு விஷயத்தில்தான் குறைந்தவர்கள் என்றால், பண விஷயத்திலும் அப்படியே. அவர்கள் மிகவும் எளியவர்கள்; தினந்தோறும் கால்கஞ்சி, அரைக்கஞ்சி குடித்துக்காலம் கழிப்பவர்கள்; அன்பென்றால் இன்னதென்று அறியாதவர்கள்.



ஒருநாள் எம்பெருமானாகிய ஈஸ்வரன் "மடமையில் மிகுந்த இவர்களுக்குச் சிறிது தனத்தைக் கொடுத்து, அதன் பின்னர் இவர்களுடைய குணத்தைப் பார்ப்போம்" என்று திருவுளம் கொண்டார். அன்று மாலையில் அவ்வூர் மந்தையில் மாடுமேய்த்துக்கொண்டிருந்த ஒரு மாட்டுக்காரன் யதேச்சையாக ஓரிடத்தில் மூத்திரம் பெய்து "இடையனுக்குப் புத்தி பிடரியிலே" யென்னும் பழமொழிக்கிணங்கத் தன்கையிலிருந்த கோலால் தான் மூத்திரம் பெய்த இடத்தைக் கிண்டிக்கிளறினான். அவ்விடத்து மண் பொன்னாக மாறி யிருந்தது. இடையன் ஆச்சர்ய மடைந்தான்; இன்னும் நன்றாகக் கிண்டினான். அடியில் ஒரு சிறு சிவலிங்கம் தென்பட்டது. பேச்சு மூச்சற்றுப் பிரமித்து நின்றான். உடனே களித்தான். அந்தப் பொன் மணலை யெல்லாம் எடுத்து மடியில் கட்டிக்கொண்டு அச்சிவலிங்கத்தின் மீது வேறு மண்ணைத் தூவி மூடி அஃதிருந்த இடத்தில் அடையாளம் வைத்துவிட்டு அவ்விடையன் தனது வீடு சென்றான்.

மறுநாட் காலையிலும் அவ்விடையன் அச்சிவலிங்கம் இருந்த இடத்திற்குச் சென்று அங்கு மூத்திரம் பெய்யவே, அப்பொழுதும் மண்ணானது பொன்னாக மாறியது. ஆ! ஆ! அவ்விடையனுக்குண்டான சந்தோஷத்திற்கோர் அளவு முண்டோ? சிவலிங்கத்தின் மீது மண்ணையோ, கல்லையோ தூவி, அதன் மீது மூத்திரம் பெய்தால், அது பொன்னாகமாறி விடுகின்றது என்று அந்த இடையன் நிச்சயமாகத் தெரிந்து கொண்டு, ஒருவரிடத்திலும் இப் பரமரகஸ்யத்தைச் சொல்லாமல் தினந்தோறும் இவனுக்கு மூத்திரம் வரும் பொழுதெல்லாம் மேற்படி சிவலிங்கத்தினிடத்தில்வருவதும் மூத்திரம்பெய்வதும் பொன்னெடுப்பதுமே தொழிலாகக் கொண்டான். இந்தரகஸ்யத்தை இவன் தனது மனைவியிடத்தும் கூறவில்லை. இப்பொழுது இவன் மாடு மேய்க்கும் தொழிலை விட்டு விட்டான் ஆனால் தினந்தோறும் எங்கிருந்தோ எப்படியோ சம்பாதித்துக்கொண்டு வருகிறான். மெல்ல மெல்ல மேடை வீடு கட்டி விட்டான்; கன்று காலிகள், தோட்டம் துறவுகள் வாங்கி விட்டான். இவனுக்கோ கர்வம் தலைக்கு மிஞ்சி விட்டது. இவனுடைய மனைவி யொரு நாள் இவனைப் பார்த்து "இப்பொழுது மாடுமேய்க்கக் கூடச் செல்வதில்லையே; எப்படிச் சம்பாதிக்கின்றீர்கள்" என்று கேட்க இவன் "கிணற்றுத்தவளைக்கு நாட்டு

வளப்பமேன்? நான் கொண்டு வந்து போட்டால் உனக்கென்ன என்று வாயடி அடித்து விட்டான். இந்தப் பரம ரகஸ்யத்தைத் தனது மனைவியிடத்துக் கூடச் சொல்லக்கூடாது என்பது இவனது எண்ணம்.

ஆனால் மனைவி யறியாமல் மர்மம் ஒன்று இருக்க முடியுமா? கணவன், அதிலும் சிற்றின்பத்தையே பிரதானமாகக் கொண்ட அறிவிலி-காமவயத்தனாய்க் காதல் மிகுந்து மனைவியின் சரீரத்தையே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் சமயத்தில், மனைவி யொன்று கேட்க, அதை மறுப்பதற்கு தைரியம் உண்டாகுமா? இவ்விடையனது மனைவியும் தனது புருஷனுடன் கூடிக்குலாவிக்கொஞ்சி அவனை மதிமயங்கச் செய்து அவனுக்கு இவ்வளவு சம்பத்தும் எவ்வாறு உண்டாயிற்று என்று கேட்க, அவனும் அவளுடைய சரசசல்லாப மோகத்தில் ஆழ்ந்து உண்மையை யுரைத்து இவ்வுண்மையை வேறெவர்க்கும் எச்சந்தர்ப்பத்தை முன்னிட்டும் சொல்லலாகாது என்றும் உத்தரவு செய்தான். ஆனால் சில நாட்களில் இவள் "வீட்டுக்கு விலக்கம்" ஆயினாள். இவ்வாறே இவளுடைய அண்டை வீட்டுக்காரியும் "வீட்டுக்கு விலக்கம்" ஆயினாள். இவர்கள் இவருவருக்கும் அந்நியோந்நியம் அந்தரங்கம் மிகுதி. ஆயினும் இடையன் மனைவி இதுவரை தனது புருஷனுடைய சம்பாத்திய விதத்தைப் பற்றித் தனது ஸ்நேகிதி எத்தனையோ தரம் கேட்டும், உரைத்தவளன்று. இப்பொழுது இருவரும் ஒரே காலத்தில் "வீட்டுக்கு விலக்கம்" ஆகி வெளித்திண்ணையில் உட்காரும்படி நேரிட, இருவருக்கும் பொழுது போகவில்லை. ஊர்வம்பு வேண்டியது பேசினார்கள். அப்பொழுது பேச்சுடன் பேச்சாய் அண்டை வீட்டுக்காரி இடையன் மனைவியிடத்தில் இடையனுடைய சம்பாத்திய விதத்தைப் பற்றிக் கேட்க, இடையனுடைய மனைவியும் அந்த ரகஸ்யத்தை மெல்லக்கூறி விட்டாள்.

உடனே அண்டைவீட்டுக்காரனுக்கும் தெரிந்து விட்டது. அவனும் அச்சிவலிங்கம் இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதன்மீது "மூத்திராபிஷேகம்" செய்து பொன்பெற்றுத் திரும்பினான். இடையனும் அண்டைவீட்டுக்காரனும் ஒருவரையொருவர் அறியாமல் பொன்சம்பாதித்துக் கொண்டிருக்க, இந்த ரகஸ்யமானது அவ்வூரில் ஒருவர், இருவர்என்று எல்லோருக்கும்



தெரிந்து விட்டது. உடனே அவ்வூர் ஜனங்கள் அனைவரும் ஒருவர்மேல் ஒருவர் அடித்து விழுந்து கொண்டு பாபம்! பாபம்! மகாபாபம்! அந்தச் சிவலிங்கத்தின்மீது மூத்திராபிஷேகம் செய்து தனவந்தர்களானார்கள். அவ்வூரரசனும் அச்சிவலிங்கத்தைச் சுற்றி மதில்கள்கட்டி அதனுள் சென்று பொன்னெடுத்து வருவோர் அரசனுக்குப் பகுதி தரவேண்டுமென்று ஆக்ஞை செய்து காவலாளிகளை நியமித்துத் தனம்சம்பாதித்தான். அவ்வூர் ஜனங்களோ அதிகம் மூத்திரம் பெய்யவேண்டுமென்ற கருத்துடன்மூன்றுவேளையும் கஞ்சியையே குடிக்கத்தொடங்கினார்கள். இதுவும் போதாதென்று பக்கத்துக் கிராமங்களில் சென்று மூத்திரத்தை இரந்து சம்பாதிக்கவும் தொடங்கினார்கள்! இப்பெரிய பிசாசாசையுடன் அந்த ஜனங்கள் பஞ்சமகாபாதகங்களையும் செய்யத்தொடங்கினார்கள்; காட்டுமிருகங்கள் போலச் சிறிதும் லஜ்ஜையின்றி இங்கு எழுதொணாத பற்பல அக்கிரமங்களையும் செய்து வந்தார்கள். பணக்கொழுப்பினால் அவர்கள் பாபரூபிகளானார்கள்.

இத்தகைய சண்டாள ஜனங்களுக்குள் ஒருபக்தர் இருந்தார். அவர் உள்ளன்பு மிகுந்தவர்; எப்பொழுதும் ஈஶ்வரத்தியானத்தில் இருப்பவர்; ஈஶ்வர நாம மகிமையால் இரந்துண்பதையே தொழிலாகக் கொண்டவர். இவர் மாத்திரம் மூத்திராபிஷேகம் புரிந்து தனவந்தனாவதற்கு இச்சிக்கவில்லை. இவர் செப்பு எடுத்துக்கொண்டுஉஞ்சவிருத்திக்குப் புறப்பட்டால்,மூத்திராபிஷேகப் பிரியர்களாகிய அவ்வூர் மூடர்கள் இவரை "நீயும் ஏன் மூத்திராபிஷேகம் செய்து சுகஜீவனம் செய்யக்கூடாது?" என்று அவரையடித்து இம்சித்துத் துரத்துவார்கள். ஆதலால் அவர் அவ்வூரில் இரப்பதை நிறுத்திவிட்டு பக்கத்துக் கிராமங்கட்குச் சென்று உஞ்சவிருத்தி யெடுத்துவருவார். இவ்விதமாக இவர் அவ்வூர் ஜனங்களுக்குள் ஒருவராகத் தனித்துநின்றார். அவ்வூரிலோ அக்கிரமங்கள் அதிகரித்துவிட்டன. பஞ்சமகாபாதகங்கள் அங்கு குடிகொண்டு விளையாடிக் கொண்டிருந்தன.

ஒருநாள் இரவு மேற்படி பக்தருடைய ஸ்வப்பனத்தில் சாட்சாத் ஈஶ்வரன்தோன்றி மறுநாள் இரவு அவ்வூர் அடியோடு அழிந்து விடுமென்றும் ஆதலால் அவர் உடனே அவ்வூரைவிட்டு

அகன்றுவிடவேண்டுமென்றும் சொல்லியருளினார். பக்தர் உடனே கண்விழித்துக் கொண்டு, அவ்வூர் ஜனங்களின்மீது பச்சாத்தாபமும் இரக்கமும் மிகுந்தவராகி அப்பொழுதே ஒவ்வொரு வீடாகச் சென்று தாம்கண்ட கனவைக்கூறி எல்லோரையும் அவ்வூரைவிட்டு நீங்கும்படி கெஞ்சிக்கேட்டுக்கொண்டார். ஆனால் எல்லோரும் அவரைநோக்கி "அடா, போக்கிரிப்பயலே! எங்கள்மீது பொறாமைகொண்டு நீ எங்களைப் பயமுறுத்துகின்றாயோ?" என்று கூறி அவரை யடித்து உதைத்துத் தள்ளினார்கள். ஆயினும் அவர் ஒரு வீடுதவறாமல் எல்லோரிடத்திலும் சொல்லிவிட்டுக் கடைசியாகத் தனது மனைவியையும் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு அவ்வூரை விட்டகன்றார். மறுநாள் சூர்யன் அஸ்தமித்தான். பன்னிரண்டு சூர்யர்களும் ஏககாலத்தில் உதித்தாற்போல, ஏகமாயெங்குமொரு ஜோதிதோன்றியது. பிரளய காலாக்கினியைப் போன்ற உக்கிரம் மிகுந்த அந்தஜோதியானது மண்மட்டை, மரம்முதல் மானிடவர்க்கம் ஈறாகச் சகலவற்றையும் எரித்துப் பஸ்மீகாரம் பண்ணிவிட்டது. பஞ்சமகாபாதகர்களெல்லாரும் பஸ்மமாய்ப்போய் விட்டார்கள். அவர்கள் மிதித்த பூமிகூடச் சாம்பராய் விட்டது. உடனே சப்தமேகங்களும் ஏககாலத்தில் சேர்ந்தாற்போல, ஜோவென்று சண்டப்பிரசண்டமாக மழை பொழிந்து, அந்தமகாபாபிகளுடைய சாம்பரும் பூமியில் இருக்கத்தகாதென்பது போல, அச்சாம்பரையெல்லாம் சமுத்திரத்திற்கு அடித்துக்கொண்டு போய்விட்டது.

அன்றிரவு அடுத்தவூர் அரசனுடைய கனவில் பகவான் தோன்றி "எனது பக்த சிரேஷ்டர் ஒருவர் தமது குடும்பசகிதமாக இவ்வூர்நோக்கி வருகின்றார். நீ அவரை யெதிர் கொண்டழைத்து வரக் கடவாய்" என்று ஆக்ஞையிடவும், அவ்வரசன் திடுக்கிட்டெழுந்திருந்து தனது மந்திரி பிரதானிகளை விளித்து அப்பக்த சிரேஷ்டரை யெதிர்கொண்டழைத்து வரும்படி உத்தரவிட்டான். அங்ஙனமே அவர்கள் சென்று குசேலப்பிராமணனைப் போன்று குடும்பசகிதமாய் நடந்துவரும் பக்தரை ராஜோபசாரம் செய்து பல்லக்கிலேற்றி மேளதாள வாத்திய கோஷத்துடன் இட்டுக்கொண்டு வரவே, அரசன் அப்பக்தரை வணங்கிநிற்க, அவர் அரசனைநோக்கி, "ராஜனே, இப்பொழுது நீ என்னை யுபசாரம் செய்து இட்டுவந்தது பெரிதன்று; யான் இருந்த ஊரிலுள்ள ஜனங்



கள் அநியாயமாக இன்று அழிந்துபோயிருப்பார்கள்; இன்று இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் அழிந்துபோவது நிச்சயம். அவர்களுடைய அரசனும் மதிமருண்டிருக்கிறான். ஆதலால் நீயாவது—நீயும் ஒரு அரசனாதலால்—சற்று என்னுடன் அவ்வூருக்கு வந்து அவ்வரசனுள்படக் குடிகளனைவரையும் அவ்வூரைவிட்டு வெளியே செல்லும்படி புத்திகூறுமாறு வேண்டுகிறேன்" என்றார். அப்படியே அரசனும் இசைந்து, அந்தப் பக்தரையும் மந்திரி பிரதானிகளையும் கூட்டிக்கொண்டு, அழிந்துபோன ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

அவ்வூர் இருந்த இடத்திற்கு இவர்கள் வந்து, அழிந்து வெட்டவெளியாயிருக்கப்பட்ட பூமியைச்சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்பொழுது, அங்கு ஒரேயொருகுடிசை, குட்டிச்சுவர்களின் மீது இற்றுப்போன தென்னோலைக் கீற்றுக்களால் கட்டப்பட்டது, தென்பட்டது. இவர்கள் அக்குடிசையண்டையிற் சென்று, அழிக்கப்பட்டுப் பாலைவனமாகிக் கிடக்கின்ற அப்பூமியில் இக்குடிசை மாத்திரம் தனித்துத் தப்பி நின்றதைப்பற்றி ஆச்சர்யம் மிகுந்து அதனுள் நுழைந்து பார்த்தார்கள். அங்கு எட்டுக்கால் பூச்சிகளுடைய நூல்கூடுகள்கூடச் சிறிதும் கலையாமல் இருந்தன. அவற்றுள் எட்டுக்கால் பூச்சிகளும் உயிருடனிருந்தன—என்ன ஆச்சரியம்! பார்த்தார்கள் அரசன், மந்திரி, பிரதானி முதலியோர்கள். ஆ! ஆ! சாதுக்களுக்கு ஒருக்காலும் குறைவு வாராதென்பதும் முதலில் சிறிது கஷ்டப்படுவதுபோலக் காணப்பட்டாலும் ஈற்றில் அவர்களுக்கு இகபரசுகங்கள் கிடைப்பது நிச்சயம் என்பதும் துஷ்டர்களுக்குச் சிலகாலம் செல்காலம்போலத் தோன்றினாலும் ஈற்றில் அழிந்து அதோகதியை யடைவார்களென்பது திண்ணமென்பதும் இதனால் புலப்பட்டதல்லவா? சாது குடியிருந்த குடிசையை அழிக்கவல்லவர் எவர்? சாதுவின் குடிசையில் அபயமடைந்திருந்த எட்டுக்கால் பூச்சிகளும் சுகமாகத் தப்பித்துக் கொண்டன; அவற்றின் பின்னல்வலைக் கூடுகளும் அப்படியப்படியே யிருந்தமை ஆச்சரியமல்லவா? சாது சங்கமஹிமை இத்தன்மையது என்று இக்கதையினால் விளக்குகிறதல்லவா? ஆதலால் எப்பொழுதும் சாதுக்களையே அடுத்துச் சகவாசம் செய்தலும் அவர்கள் சொற்படி நடத்தலுமே நாம் இப்பொழுதும் எப்பொழுதும் செய்யவேண்டிய தர்மமாகும்.

## நமது பின்னோக்கம்.

பன்னிரண்டாவது பகுதியாகிய இம்மாதத்துச் சஞ்சிகையுடன் நமது இரண்டாவது தொகுதி முடிவுறுகின்றது. இப்பொழுது நாம் இந்த ஒரு வருஷகாலமாக நடந்துவந்த மார்க்கத்தைச் சிறிது திரும்பிப் பார்ப்போம். நமது "பாநு" வின் இவ்வருஷத்திய சரித்திரத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். நமது "ஞான பாநு" தமிழ் உலகில் உதித்தது முதல் இன்றுவரை மெல்ல மெல்ல மேன்மேலும் பிரகாசம் மிகுந்து வளர்ந்துவருகின்றது. முதலாவது வருடத்திலும் இவ்விரண்டாவது வருடத்தில் நமக்குச் சந்தாதாரர்கள் அதிகரித்தனர் என்பதில் சந்தேகமில்லை. நமது பத்திரிகையின் அபிவிருத்தியைக் கோறி நாம் தமிழ் நாட்டில் சில சுற்றுப் பிரயாணங்கள் செய்தோம். மத்திய வகுப்பு ஜனங்களிற் பலரும் நமக்குச் சந்தாதாரர்களாயினர். ஏற்கனவே நமக்கு என்றென்றும் போஷகர்களாயேற்பட்டுள்ள திருமயிலை டாக்டர் எம். ஸி. நஞ்சுண்டராவ் அவர்களையும் கௌரவ ஸ்ரீமான் ராவ்பகதூர் பி. கேசவப்பிள்ளையவர்களையும் தவிர, இவ்வருடத்தில் வேறுசில நண்பர்கள் நமது பத்திரிகைக்கு ஆதரவு புரிந்தார்கள். ஆகையால் நமதுபத்திரிகை ஆரம்ப வருடத்திலிருந்த ஸ்திதியைவிடப் பின்னர் அபிவிருத்தி யடைந்தே வந்திருக்கிறது. ஆனால் உலக முழுதையும் — சம்பந்தப்பட்ட தேசங்களையும் சம்பந்தப்படாத தேசங்களையும் — தலைகீழாக்கிப் பொறுக்கமுடியாத கஷ்டங்களையும் தரித்திரத்தையும் விருத்தி செய்வதற்குக் காரணமாயேற்பட்டு இப்பொழுது ஐரோப்பாக் கண்டத்தில் அதிபயங்கரமாக நடந்துவரும் யுத்தமானது நம்மையும் திக்குமுக்காடச் செய்துவிட்டது. இது மாத்திரம் அன்று; நமக்குச் சரீரபாதையும் ஏற்பட்டு நாம் வெகு கஷ்டப்பட்டோம். இன்னும் நாம் நிர்ப்பயமாகப் பட்சபாதமின்றி எவ்விஷயத்தைப் பற்றியும் நமது மனச்சாட்சிக்குத் தோன்றிய அபிப் பிராயங்களைப் பிறருடைய விருப்பு வெறுப்பை லட்சியம் செய்யாது எழுதுகின்றோமாதலால் நமது பத்திரிகை அதிக ஆதரவுபெறுகின்றதில்லை. விவாகாதி சுப சந்தர்ப்பங்களில் வாழ்த்துப் பாக்களும் மரணாதி அசுப சந்தர்ப்பங்களில் இரங்கற் பாக்களும் பாடிப் பத்திரிகையின் பக்கங்களையெல்லாம் நிரப்பி, ஸ்வய நன்மையையே பெரிதாகக் கொண்டு உண்மையும் உள்ளன்பும் இல்லாது பணங்



காத்த பூதங்களைப் போலிருக்கும் தனவந்தர்களுடைய கடின ஹிருதயத்தை முகஸ்துதியினால் நெகிழ்வுறச் செய்து அவர்களிடத்திலிருந்து ஏதேனும் சொற்பப்பணம்சம்பாதித்து அற்பசந்தோஷமடைவதினும், பொது ஜனங்களுடைய ஸ்வதந்திரம், தேசபக்தி, மானிட வர்க்கத்தின் லட்சியம் இவற்றையெல்லாம் எடுத்து விளக்கித் தர்மஸேவை செய்வதே பத்திராதிபர்களின் கடமையாகும். சர்வ சங்க பரித்தியாகம் செய்து விருப்பு வெறுப்பற்று, ஏகச்சக்ராதிபதியேயாயினும் லட்சியம் செய்யாது எல்லோரையும் சமமாகப் பாவித்து எல்லோருடைய தர்மங்களையும் இனிது விளக்கி ஏகாந்தத்தில் இன்பம் அநுபவிப்பதே சந்நியாசிகளின் தர்மமாகும். அது போலவே, பத்திராதிபர்களும் தாங்கள் பொது ஜனப் பிரதிநிதிகள் என்று திட நிச்சயங்கொண்டு வானமே இடிந்து விழுந்தாலும் அலட்சியம் செய்து நின்று எளியோர், அநியாயங்களுக்குட் படுத்தப் பட்டோர், அறிவீனர், பலயீனர் ஆகிய இவர்களையாதரித்து உலகில் உண்மையை நிலைநிறுத்தி அரசர்களுக்கும் குடிகளுக்கும் அவரவர்களுடைய தர்மங்களை அடிக்கடி யெடுத்தோதி தர்மத்தையும் சத்யத்தையும் சாந்தத்தையும் சமாதானத்தையும் ஸ்தாபிக்கக் கடமைப் பட்டவர்கள் ஆவார்கள். என் முதுகில் அரிப்பெடுக்கிறது, கொஞ்சம் சொறிந்து விடு; உனக்கு அரிப்பெடுக்கும் பொழுது நான் சொறிந்துவிடுகிறேன்" என்பதுபோல, ஒருவரை யொருவர் புகழ்ந்து கைகோர்த்துக் கூத்தாடுவதையே தொழிலாகக் கொண்டு நடப்பது பத்திராதிபர்கள் செய்யத்தகாததொரு கார்யம்என்று நாம் நினைக்கிறோம்.

ஆனால் உண்மையிற் பொதுக்கார்யங்களை முன்னிட்டு ஒருவரைப் புகழ்ந்து வாழ்த்துவதும் ஒருவரை இகழ்ந்து குற்றங்கூறுவதும்குற்றமாகாது. அகங்கார மகன்றவர்களே பத்திராதிபர் ஸ்தானத்துக்குரியவர்கள். நாம் அகங்கார மகன்றவர்களென்றும் மற்றெல்லோரும் பின்பற்றற்குரிய மாதிரிப் பத்திராதிபர் நாமேயென்றும்கூறத் துணியோம். ஆயினும் நாம் மெல்லமெல்ல மேற்குறித்துள்ள லட்சணங்களை அடைய ஆசித்து முயலுகிறோம். ஆதலால் நமக்குச் சாதாரண ஜனங்களுடைய ஆதரவே அவசியமாயிருக்கின்றது. நாம் அதிகமாகக் கஷ்ட நஷ்டங்கட் குட்படவேண்டியிருக்கின்றது. இக்காரணங்களால் சென்ற இரண்டுமாத காலமாக நமது பத்திரிகை வெளியாவதற்குச் சிறிது தாமதப்பட்டு விட்

டது. நம்மிடத்து என்றும் மாறாத அன்புள்ள நமது வாசகர்கள், நம்மை மன்னிப் பார்களென்று நம்புகிறோம். இவ்வருஷத்தில் நமக்குப் பொருள்தானம், விஷயதானம் முதலியன செய்து நம்மை ஆதரித்த பல தனவான்களுக்கும் கனவான் களுக்கும் நாம் நன்றி செலுத்துகிறோம். நமது சந்தாதாரர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவன் அன்பையும் அறிவையும் பெருக்கி என்றும் மாறா இன்பநிலையை யளிக்குமாறு நாம் திருவருளைச் சிந்திக்கின்றோம். பத்திரிகைக்கு உத்தரவு செய்துவிட்டு, தபால்மார்க்கமாக வி. பி. யில் பத்திரிகை யனுப்பப்பட்ட பொழுது வேண்டாமென்று கூறி மறுத்துவிட்ட சில புண்ணிய சீலர்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

பத்திராதிபர்.

## சந்தாநேயர்களுக்கு அறிக்கை.

இப்பகுதியுடன் நமது "ஞானபாநு" வுக்கு வயது இரண்டு நிறைந்துவிட்டது. அடுத்த மாதத்திய சஞ்சிகை தொகுதி 3, பகுதி-1 ஆகவெளிவரும். அதற்குள், சந்தாதீர்ந்துவிட்ட சந்தாதாரர்கள் தங்களுடைய மறுவருடத்திய சந்தாத்தொகையை மணியார்டர் செய்து அனுப்பும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். அப்படி மணியார்டர் செய்யத்தவறிவிடுகிற அல்லது மறந்துவிடுகிற சநேகாதரர்கட்கு அடுத்தமாதத்துச் சஞ்சிகை வி. பி. மூலமாயனுப்பப்படும் சந்தாதாரர்கள் தயைசெய்து வி. பி. யைப்பெற்றுக்கொண்டு முன்போலவே பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம். ஞானபாநு வின் க்ஷேமத்தை நாடி யிருக்கும் சந்தாதாரர்களுக்கும் சந்தாதாரர்களின் க்ஷேமத்தை நாடியுழைக்கும் ஞானபாநு வுக்கும் எல்லாம்வல்ல எம்பெருமான் கிருபைபாலிப்பாராக.



## எனது கனவு.

(முன்தொடர்ச்சி)

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இது என்ன ஜால வித்தை! என்றால் என் கண்களை நம்பமுடியவில்லை. உண்மையாகவே எனக்கு எதிரிற் றோன்றிய காட்சி மாறுபட் டிருந்ததா? அல்லது நானே எனது சித்தப்பிரமையினால் மயங்கி நின்றேனா? என்ன ஆச்சரியம்! அருகில் சென்றுகொண் டிருந்த ஒரு நீரோடையில் நான் என்கண்களை நன்றாகக் கழுவித் துடைத்துக் கொண்டு மறுபடியும் என்னைச்சுற்றிப் பார்த்தேன். அக்காட்சியின் வனப்பு இரட்டித்தது. நான் ஆநந்தம், ஆநந்தமென்று ஆநந்தலகிரிகொண்டு ஆடினேன்; பாடினேன். அங்கு ஜிலு ஜிலு என்று வீசிய தென்றற்காற்று தேவலோகத்திலும் கிட்டுமோ? திரிலோகாதிபதியாகிய தேவேந்திரனேயாயினும் நான் அநுபவித்த சுகத்திற்குப் பாத்திரனாவனோ? இவ்விதமாக நான் ஆநந்த நிர்த்தனம் செய்துகொண்டு அதிகம்பீரமாக விருந்தபொழுது, பளிச்சென்று ஒரு ஜோதிதோன்றிற்று. ஆகாயமும் ஜோதி, பூமியும் ஜோதி, நாலாபக்கங்களிலும் ஜோதி, யானும்ஜோதி, என் எதிரேயிருந்த எண்ணற்ற காட்சிகளும் ஜோதி, எங்கும் ஒரே ஜோதியா யிருந்தது. ஒரு நிமிஷந்தான்; எனக்கென்று ஒரு வேற்றுருவம் இருப்பதாக எனக்கு நினைப்பேயில்லை. நினைப்பற்றேன். நிர்மலமாய் நின்றேன். எங்கும் ஏகமாக விளங்கும் ஜோதியோ உருவற்று ஒன்றாகவே நின்றது. அநேகாயிரம் ஆதித்தர்களை ஒன்றாயிட்டு உருக்கிவிட்டால், எத்தகைய ஜ்வலிதம் உண்டாகுமோ, அத்தகைய ஜ்வலிதமே அக்காட்சியாயிருந்தது. காயத்திரி மகாமந்திரத்தின் மகிமையும் உண்மைப்பொருளும் இக்காட்சியை நேரில் தர்சித்தவர்களுக்கே விளங்கும். இந்த ஜோதியினிடத்து இன்னொருவிசேஷம். பிரகாசத்தன்மையானது உஷ்ணத்தன்மையினின்றும் வேறு படாத தல்லவா? ஆனால் ஈண்டு இச்சோதியினிடத்து சீதளத்தன்மை லட்சணமா யிருந்தது. குளிர்ச்சி மிகுந்திருந்தது. சரீரத்திற்கு மாத்திரமன்று, சகல இந்திரியங்களும் மனத்திற்கும் சர்வசுகத்தையும் கொடுத்தது. இன்னும் ஒரு விசேஷம் இதனிடத்தில். இச்சோதிக்கு மூலகாரணப் பொருளாக ஒன்றையும் காணவில்லை. நாமரூபத்துடன் கூடிய எவ்வுருவத்தினின்றும் இச்சோதி யுண்டாகவில்லை யென்பது திண்ணம். இத்தகைய அற்புதலட்சணங்கள் வாய்ந்த அப்

பரஞ்சோதி சட்டென்று மறைந்தது. யான் அதை உணர்ந்து
என்னை மறந்து எல்லாவற்றையும் மறந்து இன்பாகாரமாக விளங்
கியது எல்லாம் ஒரு நிமிஷம்தான். ஆ! ஆ! இவ்வொரு நிமிஷத்
திற்குள் நான்கண்ட காட்சியையும் கொண்ட குதூகலத்தையும்
எத்தனை நாட்கள் எடுத்துரைப்பினும் என்நா திருப்தியுறாது;
எனது எழுதுகோல் ஆசையறாது.

அக்காட்சி மறையவும், என்முன்னே நான் முன்னர் கண்டு
கொண்டிருந்த விசித்திர விநோதங்களும் மறைந்துவிட்டன.
ஆனால் இப்பொழுது இன்னும் அதன்வனப்பெல்லாம் சேர்ந்து
ஓர் உருக் கொண்டதோ வென்று எவரும் திகைக்கும்படியான ஒரு
காட்சி தென்பட்டது. இக்காட்சியை எழுத்துக்களால் எங்ஙனம்
வர்ணிப்பது? "இச்சாமாத்திரம் பிரபோத் சிருஷ்டி" என்ற ஆப்த
வாக்கியத்தின்படி இச்சைமாத்திரத்தினாலே இவ்வீரேழு பதி
னான்கு உலகங்களையும் ஏக நாடியில் சிருஷ்டித்து அடுக்கடுக்
காக அண்டங்களை அமைத்து அநந்தங்கோடி ஜீவராசிகளுக்கும்
ஆச்சர்யத்தையும் ஆநந்தத்தையும் அளித்துவருகின்ற பிரஹ்ம
தேவனாலும் அத்தகைய காட்சியைச் சிருஷ்டிக்க முடியாது. பிர
ஹ்மசிருஷ்டிக்கு மறு சிருஷ்டி செய்வதாகக் கங்கணங் கட்டிக்
கொண்டு புறப்பட்ட மகரிஷியினாலும் இக்காட்சி காணப்படாதது.
இக்காட்சியைக் கண்டவர் விண்டிலர்; ஏனென்றால் வாக்குக்கும்
அதீதமானது; ஒப்புவமையற்றது; இத்தன்மையதென்று எவரா
லும் உரைத்தற்கரியது. ஆயினும் உரைக்க முயல்கின்றேன்; உரைப்
பேனாயின், கோடியிலொருபங்கு கூடக் கூறியவனாகேன்.

ஒரு க்ஷேத்திரம். ஆயிரமாற்றுப் பொன்னாலாக்கப் பெற்றது.
ஆகாயமளாவி நிற்கும் அழகிய கோபுரங்கள். அக்கோபுரங்களில்
சித்திரீகரிக்கப்பட்ட திவ்விய உருக்களெல்லாம் தேவ தேவன்,
ஜகந்நாதன், திவ்யஸ்வரூபன் சாட்சாத் பரமேஸ்வரனுடைய
ஞாபகத்தை சதாமூட்டிக்கொண்டே யிருக்கும் சாதுர்யம் மிகுந்
தன. அக்கோபுரங்களில் ஊசிமுனையளவு சிறிய ரத்தினங்கள்,
விலைமதிப்பிட முடியாதவை, ஈஸ்வரனேயன்றி வேறெவராலும்
வைத்துக்கொள்ளத் தகாதவை, ஆங்காங்கு கண்ணுக்குக்கண்
ஒவ்வொன்று பதிப்பிக்கப்பட் டிருந்தனபோலும்! இவைகளே
இரவில் அந்தக் கோபுரங்களில் தீபங்களாயிருந்தன. எதனிடத்தி
லிருந்து ஒளியுண்டாகின்றதென்று எவரும் அறியார். இன்னும்



ஆங்காங்கு நவரத்தினங்களா லாக்கப்பெற்ற ஸ்தூபிகளும் அழகா
யமைக்கப்பட்டிருந்தன. கோபுரவாசல்களின் மேல்வாரங்கள் ஆணி
முத்துக்களா லாக்கப்பெற்று, தளமானது தங்கத்தகடுகளிடப்
பட்டு சுற்றுப்புறங்கள் சொகுசான வைடூர்யங்களா லிழைக்கப்
பட்டு அனைவருக்குள்ளும் உள்ள ஆத்ம சுகத்தை யதிகரித்தன.
உள்ளே சென்றாலோ, சுற்றிலும் ஒரு வீதியுண்டு. அவ்வீதியின்
தளமானது தாமிரத்தகட்டினாலாக்கப்பட்டது. இதற்கு மேல்வாரங்
கள் கிடையா; வெட்டவெளியா யிருந்தது; ஸ்தூலவியாதி
களைச் சொஸ்தப்படுத்தி சூட்சும விசாரணைக்கு ஒரு வழி காட்டி
யாயிருந்தது. இந்த வீதியில் அங்கப் பிரதட்சிணம் செய்வோரும்
அடிப்பிரதட்சிணம் செய்வோருமாக ஆயிரக்கணக்கான ஜனங்கள்
சென்றுகொண் டிருந்தார்கள். இவர்களைச்சுற்றிலும் எண்ணற்ற
பஜனை கோஷ்டிகள் ஏகமுழக்கமாக ஈஸ்வரநாமத்தைப் பஜித்துக்
கொண்டு ஆநந்தத்திலாழ்ந் திருந்தார்கள். இவ்வீதியைக்கடந்து
உட்பிராகாரத்திற்குச் சென்றால், அங்கு மனோதுக்கங்களை யெல்
லாம் மாற்றிக்கொள்ளும் பொருட்டு வந்திருந்த திரள்திரளான
ஜனங்கள் சதாசர்வதா காலமும் ஈஸ்வர ஸ்மரணம் செய்துகொ
ண்டு இன்பம் ஓங்கியிருந்தார்கள். பார்த்தவிடமெல்லாம் பளிச்சுப்
பளிச்சென்று மின் வெட்டுப்போல, மரகதமாணிக்கங்களெல்லாம்
ஒளி வீசிக்கொண் டிருந்தன. இதையும்கடந்து உள்ளே சென்
றேன்; மூலஸ்தானம் அணுகினேன். மூலஸ்தானக்ஷேத்திர மானது
கீழும்மேலும் சுற்றிலும் நாகரத்தினங்களால் ஆக்கப் பெற்றிருந்
தது. அவ்வறைக்குள் வேறெவ்வித ரத்தினமாவது வேறெவ்வித
லோகமாவது கிடையவே கிடையாது. எங்கும் நாகரத்தினங்களே.
லோகசம்பந்தமில்லாமல், ரத்தினங்கள் ஓரிடத்தில் பதிப்பிக்
கப்பெறுவது அசாத்தியமான காரியம் அன்றோ? ஆயினும் இங்கு
லோக சம்பந்தமில்லாமலே ரத்தினங்கள் நெருக்கமாகப் பதிப்பிக்
கப்பட்டிருந்தன. நன்றாகப் பக்குவமடைந்து பழுத்து விலைமதிப்
பிடமுடியாது ஆகருஷண சக்தி அதிகரிக்கப்பெற்றுள்ள ரத்தி
னங்கள் அந்நியோந்நியம் பந்தித்துக்கொண்டு அழகுற அமைந்து
நிற்கும் என்பது நிச்சயமே. இவ்வழகிய மூலஸ்தானத்தில் நின்ற
தொரு திவ்விய விக்ரஹம்; கண்டேன் கண்டேன் கண்கொள்ளாக்
காட்சியை. இன்ன விக்ரஹமென்று நான் அதைப்பகுத்துணர்வ
தற்குள், என்முன்னின்றதொரு தேஜோமயமான உருவம், ஸ்திரீ

வடிவம்; அழகிய பட்டாடையுடுத்து அபயங்கொடுப்பதற்கென்று உயரத்தூக்கிய ஒருகையுடனும் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தம் பலவித ஆயுதங்களையும் ஒருருவாக்கி வைத்துள்ள திரிசூலத்தைத் தாங்கிய மறுகையுடனும் பிரசன்ன வதனத்தில் புன்னகைதவழ உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை சர்வாபரணாலங்கிருத பூஷிதையாய் காருண்ணியமும் காம்பீர்யமும்பொருந்திய கண்ணோட்டமுடையவளாய் ஜெகன்மாதா தோன்றினாள்.

திரிசூலந் தாங்கிய திவ்யாஸ்தத்தைக்கண்டு திடுக்கிட்டு நடுங்கினேன்; ஆயினும் "அஞ்சேல்" என்று குறிப்பாலுணர்த்தி நின்ற அபயாஸ்தமும் பிரசன்னவதனமும் பேரன்பை விளக்கி நின்ற பெருங்கண்களும் எனக்கு ஆறுதலைக்கொடுத்தன. பணிந்தேன் சாஷ்டாங்கமாக; எழுந்தேன். ஸ்தம்பம்போலப் பிரமித்து நின்று கைகட்டி வாய்பொத்திக் கண்ணீர் பெருக்கினேன். இப்பொழுது கண்ணீர் உண்டாயதற்குக்காரணம் எனக்கே தெரியவில்லை. அம்பிகையைக் கண்டபயந்தோ, அல்லது அவளுடைய தர்சனத்தில் ஆனந்தம் மிகுந்தோ, எக்காரணத்தினாலோ அறியேன் ஆனால் நான் கண்ணீர்பெருக்கினேன் என்பது மாத்திரம் நிச்சயம். வரவரத்தேம்பித்தேம்பி யழ ஆரம்பித்தேன். என் முன் நின்ற உருவம் என்னை "ஏன் அழுகின்றாய்" என்று கேட்கவில்லை. பிறகு கீழேவிழுந்து புரண்டு உருண்டு அழுதேன். அதற்கும் அவ்வுருவம் அசையவில்லை. என்னுடைய ஹிருதயம் இரண்டாகவெடித்துப் புலம்பினாலும் ஏனென்று கேளாத அவ்வுருவத்தை நான் ஏறிட்டுப்பார்த்து "நீ, என்ன? கல்லா? இரும்பா? கடினவயிரமா? காது செவிடோ? கண்கள் குருடோ? யான் அழுவது நின்செவியில் கேட்கவில்லையோ? நின் கண்கள் பார்க்கவில்லையோ? உயிரற்ற பிணங்களும் இப்பொழுது என்னைக்கண்டிரங்குமே" என்றேன். அதற்கும் அவ்வுருவம் கல்லுப்பிள்ளையார்போன்றிருந்தது. பின் நான் எனது கண்களை மூடிக்கொண்டு விசனப்பெருக்கத்தால் வியர்த்து நின்றேன். இரண்டொரு நிமிஷத்தில்கண்களைத்திறந்து பார்க்க, எதிரில் நின்றுகொண்டிருந்த உருவம் மெல்லமெல்ல நகர்ந்தது. எங்கு அது ஓடிமறைந்துவிடுமோ வெனக்கருதி நான் வெகுவேகமாக அதனருகிற் சென்று அதன்பின்புறத்தில் கீழே விழுந்துபுரண்டுகொண்டிருந்த ஆடையின் நுனியைஅழுத்தமாகப் பிடித்துக்கொண்டு அதை நிறுத்தினேன்.

(வரும்).

ஸ்வப்னசுகி.



## பாப்பா பாட்டு.

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா.
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா. (1)

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு - நீ
மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா. (2)

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்
கிரக்கப் படவேணும் பாப்பா. (3)

பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரு நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா. (4)

வண்டி யிழுக்கு நல்ல குதிரை - ஊர்
வயலி லுழுதுவரு மாடு
அண்டிப் பிழைக்கு நம்மை யாடு - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா. (5)

காலை யெழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கு நல்ல பாட்டு.
மாலை முழுதும் விளை யாட்டு - என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா. (6)

பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா
தெய்வ நமக்குத் துணை பாப்பா - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா. (7)

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா.
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தி லுமிழ்ந்து விடு பாப்பா. (8)

துன்ப நெருங்கி வந்த போதும் - நாம்
சோர்ந்து விட லாகாது பாப்பா
அன்புமிகுந்த தெய்வ முண்டு - துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா. (9)

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா - தாய்
சொன்னசொல்லைத் தட்டாதே பாப்பா.
தேம்பி யழுங்குழந்தை நொண்டி - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா. (10)

தமிழத் திருநாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தி லினியதடி பாப்பா - எங்கள்
ஆரிய தேசமடி பாப்பா. (11)

சொல்லி லினிதுதமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா.
செல்வ நிறைந்த ஹிந்து ஸ்தானம் - அதைத்
தெய்வ மென்று கொண்டாடு பாப்பா. (12)

சாதி பெருமை யில்லை பாப்பா - அதில்
தாழ்ச்சி யுயர்ச்சி செய்தல் பாவம்.
நீதி, தெளிந்த மதி, அன்பு - இவை
நிறைய வுடையவர்கள் மேலோர். (13)

உயிர்க ளிடத்திலன்பு வேணும் - தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிர முடையநெஞ்சு வேணும் - இது
வாழு முறைமையடி பாப்பா. (14)

புதுவை. சி. சுப்பிரமணிய பாரதி.

## பாரத புத்திரர்களின் பராக்கிரமம்.

(முன் தொடர்ச்சி.)

பட்டாணியப் படைகளின் சிற்சில பகுதிகள் முறியடிக்கப்பட்டுத் தாம் வந்த வழியைப்பார்த்துக் கொண்டு ஓட ஆரம்பிக்கவே, சில பகுதிகள் மதோன்மத்தம் மிகுந்து மேலும் மேலும் மகாராஷ்டிரர்களுக்கு முன்னே விழுந்து எமனுலகு ஏகின. தப்பியோட எத்தனித்தவர்களிற் கூடப் பெரும் பான்மையோரும் ஓடும்பொழுதே குண்டுபட்டு இறந்தார்கள். எதிர்த்தாலும் மரணம், இருந்தாலும் மரணம், ஏகினும் மரணம் என்று எங்கும் மரணமே மொகலாயப்படைகளின் முன் நிற்பதைக் கண்ட மொகலாயச் சேனைத்தலைவர்கள் விசனமும் வெட்கமும் மிகுந்தவர்களாகி, கனவாயைக்கைப்பற்றும் முயற்சியை இன்னும் விடாது தொடர்வதா அல்லது விட்டு விடுவதா? என்று யோசனை செய்தார்கள்.

மொகலாயர்கள் இவ்விதமாகக் கலங்கிக் கொண்டிருக்கையில் மகாராஷ்டிரச்சிறு படையின் ஒரு உபதலைவன் பாஜிப்ரபு வினருகில் வந்து "ஏ, பாஜி! நம்மிடத்தில் இருந்த தோட்டாக்களும் வெடி மருந்தும் ஆய்விட்டனவே, நாம் நமது ஆவேசத்தில் மட்டும் மிதமின்றித் தோட்டாக்களை யெல்லாம் செலவழித்து விட்டோமே" எனலும், பாஜிப்ரபு யுத்தகளத்தை ஏறிட்டுப் பார்த்தார். அங்கு உயிர் நீத்து விழ்ந்து கிடந்த வீரர்களின் உடைகளினாலும் தலைகளினாலும் அவர்கள் எதிரிகளின் படையினர்களென்றறிந்தவராகித், தம்மைச் சுற்றிலும் நின்ற தமது வீரவர்க்கத்தையும் திரும்பிப்பார்த்தார். தமது படையில் சேதமாயினவரின் தொகை மிகவும் சொற்பமே யென்று தெரிந்து கொண்டு, அப்பர்வதத்தின் அடிவாரத்தில் குழறிக்கோஷித்துக்கொண்டிருக்கும் மொகலாய சேனா சமுத்திரத்தை நோக்கினார். கோபமும் பெருந்தன்மையும் ஆண்மையும் பொலியும் படியானதொரு புன்னகை புரிந்தார். அதியுக்ரகத்துடன் எரிந்து கொண்டிருந்த ஆதித்தன் அஸ்தமனமடைவதற்கு ஆபத்தமாவதைக்கண்டு பாரத தேச பந்துவாகிய பாஜிப்ரபு தமது பரிவாரங்களைப் பார்த்து "மகாசக்திபாகிய ஸ்ரீ பவானிதேவியை மனமாறப்பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். மகாராஷ்டிர தேசத்தின் மகிமையெல்லாம் இப்பொழுது நம்மிடத்

தில் ஒப்புவிக்கப் பட்டிருக்கின்றன. நமது சக்கரேஸ்வரனாகிய ஸிவாஜி மகாராஜா அவர்கள் ஜெயலட்சுமியை இட்டுக்கொண்டு நம்மிடத்திற்குத் திரும்பிவரும்வரையில் இக்கணவாய் நமதுஉயிர் நிலையாயிருக்கட்டும். பவானிதேவி நமக்குவேண்டிய பராக்கிரம சக்தியையும் பலத்தையும் அருள்புரிவாளென்பது நிச்சயம். நீங்கள் அனைவரும் ஏகமனத்தராய், உங்களுடைய வாட்களை உருவி வல்லமையைக் காட்டுங்கள்." என்று அவர்களை ஊக்கி விடவும் அவர்கள் முன்போலவே பேச்சுமூச்சில்லாமல் பற்பல இடங்களிலும் பதுங்கிக்கொண்டு, எதிரிகளின்வரவை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தார்கள்; அவர்களுடைய வாளாயுதங்களும் காத்துக்கொண்டிருந்தன. கீழே விழுந்துகிடக்கும் பிணக்குவியல்களையும் பற்பல வித சிருஷ்டி ஜாலத்துடன் விளங்கிய பர்வதத்தையும் தவிர, அந்த வேறொன்றும் காணப்படவில்லை. சலனமுமில்லை; சப்தமுமில்லை. அடிபட்டுவிழுந்து இறக்குந் தறுவாயிலிருக்கும் சிலருடைய ஈனஸ்வரம் மாத்திரம் கேட்டுக் கொண்டிருந்தது. பாஜிப்ரபுவானவர் அஸ்தனமமாகிக் கொண்டிருக்கும் ஆதித்தனை அடிக்கடி பார்த்துக்கொண்டார்; பல்லைக்கடித்தார்; சீற்றம் மிகுந்து பெருமூச்சுவிட்டார். அவருடைய படையினரோ அவரையே கவனித்தவர்களாய்க் காத்திருந்தனர். சிறிதுநேரம் மகாராஷ்டிரர்களுக்குப் பொறுமையுடன் சென்றது; மொகலாயர்களுக்குப் பொறுமையுடன் சென்றது. சூரியனும் தனது கிரணங்களையெல்லாம் உள்ளிழுத்துக்கொண்டு மேற்குத்திசையில் மறைந்தான்.

அச்சமயத்தில் வெகுதூரத்தில் கலகலப்பு சப்தம்கேட்டது. மகாராஷ்டிரர்கள் தங்கள் தங்கள் வாட்களை உருவிக்கொண்டு தயாரானார்கள். இம்முறை மகாராஷ்டிரர்களை எதிர்த்து வந்தவர்கள் முறியடிக்கப்பட்டுச் சிதறிப்போன பட்டாணியவீரர்களன்று; முன் விழுந்தும் பின் வாங்கிப் போராது ஓடிப்போன ராஜபுத்திரவீரர்களன்று. மொகலாயர்களுடைய மூலபலப்படைகளே ஆக்குரோஷம் மிகுந்து இம்முறை இரண்டிலொன்று நிச்சயமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற தீர்மானத்துடன் புற்றிலிருந்து ஈசல்கள் புறப்படுவனபோல எங்கும் எல்லையற்று ஏகமனுஷசமுத்திரமாகிக் கொந்தளித்துப் பொங்கிக் குதூகலத்துடன் குதித்தோடி வந்தன. எதிர்ப்பாரைக் காணவில்லை; மேன்மேலும்



ஏறிவந்தன. எங்கேனும் மகாராஷ்டிரர்கள் ஒளிந்து கொண்டிருப்பார்களோ என்ற எண்ணமும் இம்முறையாவது அவர்களை ஜெயித்து விடவேண்டுமேயென்ற ஏக்கமும் மிகுந்தவர்களாய்ச் சுற்றிலும் நன்றாகப் பார்த்துக்கொண்டும் யோசித்துக்கொண்டும் மலைமீது ஏறின. இதற்கு முன் அநேகதடவைகளில் இவர்களுக்கு அபஜெயத்தையே கொடுத்துள்ள அச்சிறு கணவாய் வரையில் வந்து விட்டன. இலைமறைவிலிருந்தும் புதர் மறைவிலிருந்தும் பாறைகளின் இடுக்குகளிலிருந்தும் வேல்களும் வாள்களும் மொகலாய வீரர்களை வெட்டியும் குத்தியும் எறிந்தன. ஆனால் கரைபுரண்டு வெள்ளம் பெருகுவதுபோல, முன்னே அடிபட்டு வீழ்கின்ற வீரர்களின் பிணக்குவியல்களையும் ஒரே தாண்டுதலில் தாண்டிக்கொண்டு மொகலாய வீரர்கள் முட்டிக்கொண்டும் மோதிக்கொண்டும் முன்னேறினர். இப்பொழுது நடந்த யுத்தத்தை எங்ஙனம் வர்ணிப்பது? ஆ! ஆ! பயங்கரம்! பயங்கரம்! கொலை! கொலை! கொலை! எங்குபார்த்தாலும் கொலையே! ஆயிரக்கணக்கான அடங்காப்பிடாரிகளாகிய மொகலாயர்களை ஐம்பதிலும் இப்பொழுது குறைந்துள்ள வீரர்கள் எதிர்த்தார்கள்; அதுவும், தூரத்தில் நின்றுகொண்டு துப்பாக்கிகளாலும் பீரங்கிகளாலும் எதிர்க்கவில்லை. கைகலந்து கத்தியினால் யுத்தம் செய்தார்கள். மகாராஷ்டிரவீரர்கள் மலைவாசிகளல்லவா? சர்வஸ்வதந்திரத்துடன் சந்தோஷமாகத் திரியும் மலைவாசிகளின் முன் சட்டதிட்டங்களுக் குட்பட்டு சதா துக்காக் கிராந்தர்களாயிருக்கும் நகரவாசிகள் எதிர்த்து நிற்றல் முடியுமோ?

திடீரென்று பாஜிப்ரபுவின் முகத்தில் ஒருதிவ்விய ஒளி வீசியது; அவர் ரௌத்திராகாரமாக விளங்கினார். அவருடைய ஸ்ரீ பவானிதேவியாகிய பராசக்தி அவரிடத்தில் ஆவிர்ப்பாவித்தது போலத்தோன்றியது. அநேக நாட்களாகப் பசித்துக்கிடக்கும் ஒரு சிங்கமானது கர்ச்சிக்குமாப்போல, அவர் பயங்கரமானதோர் கூச்சல்இட்டுக்கொண்டே எதிரிகளை வெல்லால் எமனுலகுக்கு அனுப்புவதில் இடைவிடாது ஏமாறாது ஜாக்கிரதையாயிருந்தார். மேகக்கூட்டங்களினிடையே வீசுகின்ற மின்னல் ஒளிபோல, அவருடைய வாளாயுதமானது முன்னும் பின்னும் இருபக்கங்களிலுமாகச் சுழன்றுகொண்டிருந்தது; பிணங்கள் குவிந்து கொண்டிருந்தன. கரங்களற்றவர்களும் கால்களற்றவர்களும், குத்துண்

டவர்களும் வெட்டுண்டவர்களுமாக எண்ணிலா மொகலாயர்கள் பூமியில் விழுந்து புரண்டுகொண்டிருந்தார்கள். பாஜிப்ரபுவின் வீரர்களும் அவருக்கு இருபக்கத்திலுமாக நின்றுகொண்டு, முன்னேறிவந்த மொகலாயர்களும் புறமுதுகிட்டோடினார்கள். யுத்தம் முடிந்துவிட்டது என்று தோன்றிற்று. ஆனால் சிறிதுநேரத்திற்குள் மொகலாயர்களுடைய மூலபலசைந்யமானது முன்னிலும் பதின்மடங்கு ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் மறுபடியும் ஜெயகோஷம் செய்துகொண்டே, கணவாய் வரையில் சென்றார்கள்.

இப்பொழுது பாஜிப்ரபு இந்தயுத்தத்தை முடிவுசெய்துவிடவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்; மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு ஒருநிமிஷத்திற்கு முன் உறையில் இட்டவாளை மறுபடியும் உருவி, பவானிதேவியைப் பிரார்த்தனைசெய்துகொண்டார். ஆனால் இம்முறை அவருக்கு என்றும் தோன்றாத ஒருவித அமைதிஉண்டாயிற்று; பராசக்தியினது போன்ற பராக்கிரமமெல்லாம் அவரிடத்தினின்றும் அகன்றுவிட்டது போலத் தோன்றிற்று. ஆகாயத்திற்கும் பூமிக்குமாக அண்டகோளகைகளெல்லாம் நடுங்கும்படியான பயங்கர உருவமொன்று, மஞ்சள் உடைதரித்து காரினும்கரிய தனது கூந்தலை அவிழ்த்துப் புரளவிட்டுக்கொண்டு தனது நான்கு திருக்கைகளில் இரண்டில் வாளாயுதத்தையும் இப்பொழுது தான் வெட்டித்தள்ளி இரத்தம் சிந்துகின்ற சிரத்தையும் கையிலேந்தி, மற்றிருகைகளில் ஒன்று புஷ்பத்தைத்தாங்கி நிற்க மற்றொன்று அடியார்களுக்கு அபயாஸ்தம் கொடுத்து ஆதரிக்க, இத்தகைய வடிவத்துடன் பாஜிப்ரபுவின் சரீரத்தினின்றும் வெளிப்பட்டுச் சென்றது; பவானிதேவியின் அருட்சக்தி யகன்றுவிட்டது. பாஜிப்ரபு இதைப்பார்த்தார்; ஆயினும் சிறிதும் மனம்கலங்கவில்லை. பாரததேசத்தைப் பாதுகாப்பது பராசக்தியின் கடமையென்றும் ஆதலால் அவள் ஒருநாளும் கைவிடாள் என்றும் அவருக்கு நன்றாகத்தெரியும். அவருடைய ஆத்ம சக்தி அகன்ற அந்தநிமிஷமே, அவருடைய புஜத்தில் ஒரு வாள்வெட்டு விழுந்தது; புஜத்திற்குக்கீழே ஒரு வேலாயுதம் பாய்ந்தது. அவரைச்சுற்றியிருந்த அவரது படைவீரர்கள் மிகுந்த கோபாவேசர்களாகி அவரை இன்னும் நெருங்கிச் சூழ்ந்துகொண்டு அவர்மீது விழவேண்டிய வெட்டுக்களையும் குத்துக்களையும் தாங்கள் ஏற்றுக்கொண்டு கடும்போர் புரிந்தார்கள்.



பாஜிப்ரபுவானவர் தமதருகில் நின்ற ஒருவரைநோக்கி “ஏ, மோரோதேசபந்து! கணவாயின் அப்புறத்திற் சென்றுபார். மேற்குத்திசையினின்றும் எவரேனும் வருகின்றனரா? பார் ராயகிரி ஜயபேரிகைகள் முழங்குகின்றனவா? பார். எனக்கு அந்திய காலம் கிட்டிவிட்டது. எனது அரசனுடைய ஆக்ஞையை நிறைவேற்றிவிட்டேனா? ராஜாதி ராஜனாகிய ராயகிரி மகாராஜனிடத்தில் இந்தக்கணவாயை அவர் என்னிடத்தில் ஒப்புவித்தபடியே ஒப்புவித்தபொழுது தான் எனக்குமனம் சமாதானமடையும். எனது மாதாவுக்கு ஏற்றமகனாவேன்” என்றார். இங்ஙனம் உரைத்துவிட்டு இவர் தமது மனுஷ்ய சக்தியினால் எதிரிகளை விரட்டியடிக்க முயன்றார். இவரைச் சுற்றிலும் மகாராஷ்டிரர்களும் மொகலாயர்களுமாக விழுந்துகொண்டேயிருந்தார்கள். இவருடைய சரீரமும் ஒரேசிவப்பு உருவமாயிருந்தது. இவருடைய சரீரத்தில் எல்லாவிடங்களிலும் இரத்தம் பீறிட்டு ஊற்றுப்போல் ஒழுகிற்று. எண்ணற்றவாளாயுதங்கள் இவருடைய இரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சிப் பானம் செய்தன. ஆயினும் இவர் ரணக்களருத்திரனைப்போல எதிர்ப்பட்டோர் எவரையும் விடாது எமனுலகு ஏற்றிக்கொண்டேயிருந்தனர். கணவாயின் மறுபக்கத்தில் பார்க்கச் சென்ற மோரோதேசபந்து பாஜிப்பிரபுவின் அருகில் வந்து நின்று “ஏ! பாஜி! ராயகிரி வீரர்கள் வந்துவிட்டார்கள். நமது ஜெயபேரிகைகள் முழங்குகின்றன” என்று சொல்லிக்கொண்டே கீழேவிழுந்தான்; இறந்தான். பாஜிப்ரவின் கண்களினின்றும் இரத்தம் பெருகிற்று. அவர் அந்தாரத்தத்தைத் துடைத்துக் கொண்டு தம்மைச்சுற்றிலும் ஒரு கெம்பீரபார்வை பார்த்தார். ஆரம்பத்தில் அவருடன் இருந்த ஐம்பது பெயர்களில் பதினைந்துபெயர்கள் மாத்திரமே மிஞ்சியிருந்தார்கள். இவர்களுக்கு முன்னும் பின்னும் பக்கங்களிலுமாக மொகலாயர்கள் சூழ்ந்திருந்தார்கள். பாஜிப்ரபு மதயானைபோலத் திரும்பித் தமக்குப்பின் பக்கத்திலுள்ள மொகலாயப்படையை எதிர்த்தார். அவருடைய வீரர்களும் அங்ஙனமே எதிரிகளைக் கைவேறு கால்வேறாகக் கண்டதுண்டம் பண்ணினார்கள். இவர்களுக்குப்பின் பக்கத்திலிருக்க மொகலாயப்படை பிளவுபட்டது; பாஜிப்ரபுவும் மற்றத்தேச பக்தர்களும் எதிரிகளின் சூழ்ச்சியிலிருந்து விடுபட்டு கணவாயின் நெருக்கமான பாகத்தில் வந்து நின்றுகொண்டு, மொகலாயப்படைகளை எதிர்த்தார்கள். அக்கணவாயின் அப்

பாகத்தில் வரிசையாக மூன்று பெயர்கள்தான் நிற்க முடியும். இவர்கள் இப்பொழுது மிஞ்சியிருந்தவர் எண்மர்தாம். இவ்வெண்மரும் படுகாயமடைந்திருந்தனர்; ஆயினும் ஹிருதயம் கலங்காது வீரம்விடாது, ராட்சதர்களைப்போல நின்று யுத்தம் செய்தனர். இப்பொழுது பாஜிப்ரபு கணவாயின் மறுபக்கத்தினூடே பார்த்தார்; வெகுதூரத்தில் குதிரைப்படையின் கூட்டம் ஒன்று திரண்டு வருவதைக்கண்டார். இக்கூட்டத்தின் முன்னணியாக, அறுபது குதிரைவீரர்களும் அவர்களை நடத்திக்கொண்டு நவரத்தினகிரீடம் தாங்கிய ஒருவரும் வருவதைக்கண்டார்; இன்னும் விஸ்தாரமாக விரிந்திருக்கின்ற அப்பிரதேசத்தினூடே மகாராஷ்டிரர்களுக்கு மாதர்ஸ்தானமாக விளங்கும்ராயகிரிக்கோட்டையையும் பார்த்தார்; திரும்பினார் மறுபடியும் போர்முகம்நோக்கி. மகாராஷ்டிரர்கள் ஒருவர் பின்னொருவராக விழுந்து வீரஸ்வர்க்கம் சென்றார்கள். திடீரென்று பாஜிப்ரபுவும் கீழேவிழுந்தார்; உயிர் நீங்கிவிட்டது. மொகலாயர்கள் கைகொட்டினார்கள். ஜெயபேரிகை யடித்தார்கள்; தங்களுடைய பெருமையைத் தாங்களே கொண்டாடிக் கூத்தாடினார்கள். ஆயினும் தனிக்காட்டுச் சிங்கம்போல பாஜிப்ரபு விழுந்தும் அக்கணவாயானது இன்னும் எதிரிகளின் கைவசப்படவில்லை. பாஜிப்ரபுவின் ரத்தத்தினால் பரிசுத்தம் செய்யப்பெற்ற அக்கணவாய் எப்படி எதிரிகளின் கைவசமாகும்?

பாஜிப்ரபு உயிரற்று விழுந்ததும் மொகலாயர்கள் களித்ததும் ஒரே நிமிஷத்தில் நடந்தன. அதே நிமிஷத்தில் சிவாஜி மகாராஜாவினுடைய சேனாசமுத்திரமானது பொங்கிவந்து விட்டது. "ஹர, ஹர, மகாதேவ!". ஒரேகூச்சல் மொகலாயர்களுடைய கொண்டாட்டமெல்லாம் திண்டாட்டமாய் முடிந்தது. ஓடு ஓட்டம். ஒருவர் போனபக்கம் ஒருவர் போகாமல் ஆயிரக்கணக்கான மொகலாயவீரர்கள் அழிந்து சிதறியோடினர். "ஹர, ஹர, மகாதேவ." இதுவே யுத்தகோஷம். இதுவே ஜெயகோஷம். இதுவே ஹிந்துஜனசமூக ஜீவகோஷம். சூர்யாஜி மால்ஷூர் மொகலாயர்களைத் துரத்தித்துரத்தி யடித்தார். ஆனால் வீரப்பிரதாபராகிய சிவாஜி மகாராஜா பாஜிப்ரபுவின் பிணத்தண்டை நின்றுகொண்டு, அப்பிணத்தை உற்று உற்றுப்பார்த்தார்; கண்களில் நீர் துளிதுளியாகத் ததும்பியது. அப்பொழுது அவருடைய உணர்ச்சியும் விசனமும் இத்தன்மையதென்று எழுது



கோலினால் எழுதுதல் முடியாது. தானாஜி மால்ஷூர் "ஆ! பாஜிப்ரபுவே! பாரததேச பந்துவே! மகாராஷ்டிரஸிம்ஹமே! நீ வீரஸ்வர்க்கம் அடைந்தாய். உன்னைப்போலவே யானும் எனது தேச அரசருக்குப் பாடுபட்டு, இந்த ஆர்யாவர்த்தத்தை அதர்மங்கள் அணுகாவாறு ரட்சிப்பேனாக! மரிக்க நேரிடுங்கால், உன்னைப்போலவே ஒருவனாக நின்றுயுத்தம் செய்து மரிப்பேனாக!" என்று கூறினான். பாஜிப்ரபு பாரததேவியின் பலி பீடத்தில் தம்மைத் தாமே பலியிட்டுக்கொண்ட பக்தசிரேஷ்டர்களில் ஒருவர். இவர் இன்றும் ஹிந்து ஜனசமூக ஹிருதயத்தில் வெகு ஆழமாகப் பதிந்து புகழ்பெற்றுப் பூவுலகிலும் பொன்னுலகிலும் பொலிவுற்று விளங்குகின்றார்.

சிவம்

## புத்தக வரவு.

பெற்றோர் பெருமை:—இஃது பிரஹ்ம ஸ்ரீ வாகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதியவர்களால் இயற்றப்பட்டதொரு சிறிய புத்தகம். இதன் விலை அணா ஒன்று. பெற்றோர் பெருமை வாய்ந்தவர்கள் என்பது இதில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் சிறு குழந்தைகளுக்குப் பாடப்புத்தகமாக வைக்கப்படலாம். வேண்டுவோர் திருவல்லிக்கேணி, ஹைரோட் - 230 நம்பர், ஸ்ரீ பால சுப்பிரமணியன் கம்பனிக்கு எழுதிப் பெற்றுக் கொள்க.

விவேகபாநு:— இப்பெயருடன் ஒரு வாரப்பத்திரிகை தென்னாப்பிரிக்காவில் நமது நண்பர் ஸ்ரீமான் விருத்தாசலம் பிள்ளையவர்களால் சென்ற சிலமாதங்களாக நடத்தப்பட்டு வருகின்றது. ஸ்ரீமான் விருத்தாசலம் பிள்ளையவர்கள் இயற்கையிலேயே தேசாபிமானமும் பரோபகார சிந்தையும் மிகுந்தவரென்று நாம் அறிவோம். ஆதலால் அவர் பிரசுரித்துவரும் "விவேகபாநு" தேசாபிமானமும் தெய்வசிந்தனைகளும் திகழ்ந்து விளக்குகின்றது என்று நாம் சொல்வது ஆச்சர்யமாகாது. ஆயிரக்கணக்காகத் தமிழர்கள் தென்னாப்பிரிக்காவில் வசித்து வருவதால் அவர்களுக்கு இதைப்போன்ற ஒரு பத்திரிகை அவசியமாகும். தென்னாப்பிரிக்காவிலுள்ள நமது சகோதரர்களுடைய சங்கதிகளையும்

மற்றுமுள்ள விஷயங்களையும் உண்மையாக அறிந்து கொள்வதற்கு நமக்கும் இதுபோன்ற ஒருபத்திரிகை அவசியமாகும். ஆகலால் அங்குள்ளவர்களும் இங்குள்ளவர்களும் இதைப்படிக்க வேண்டிய தவசியம். வேண்டியவர்கள் ஸ்ரீமான் சொ. விருத்தாசலம் பிள்ளையவர்கள், பத்திராதிபர், "விவேகபாநு" ஆபீஸ், 171, க்ரேதெரு, டர்பன், தென்னாப்பிரிக்கா என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

## சமாச்சாரக் குறிப்புகள்.

யுத்தம் ஓய்ந்தபாடில்லை. ஜெர்மனியர்களுடைய சீற்றமும் அடங்கினபாடில்லை. மத்யஸ்த நிலைமை வாய்ந்திருக்கும் சில தேசங்கள் இந்தயுத்தத்தில் ஏதேனும் ஒரு கட்சியைச் சேர்ந்து விடுமென்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இதுவரை ஒன்றும் சேரவில்லை. சில தேசங்கள் எல்லைப் புறங்களைப் பந்தோபஸ்து செய்து கொண்டு படைகளைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றனவென்று கேள்விப்பட்டோம். ஆனால் சமீபத்தில் எந்தப் பொதுவான தேசமும் இந்த யுத்தத்தில் தலையிடும் என்று நம்புவதற்கில்லை. டார்டனெல்ஸ் ஜலசந்தியின் இருபுறமுள்ள கோட்டைகள் நமது ஆங்கிலப்போர்க் கப்பல்களாலும் பிரெஞ்சுப் போர்க் கப்பல்களாலும் பாஸ்பரஸ் ஜலசந்தியின் இருபுறமுமுள்ள கோட்டைகள் ருஷியப் போர்க் கப்பல்களாலும் தகர்க்கப்படுகின்றன. துருக்கிப்படைகளும் ஜெர்மன் உத்தியோகஸ்தர்களின் தலைமையின் கீழ் வெகு தைரியத்துடன் மேற்படி கோட்டைகளைப் பாதுகாத்து வருகின்றன. கடைசியில் நமது ஆங்கிலப்படைகள் மேற்படி கோட்டைகளைத் தகர்த்துப் பிடித்து விடுவது நிச்சயமேயானாலும், சீக்கிரத்தில் இக்கோட்டைகள் விழுந்து விடும் என்று நம்புவதற்கிடமில்லை; ஏனென்றால் இயற்கையிலேயே இவை நன்கு கட்டப்பட்டுள்ளன. மேல் யுத்தகளத்திலோ, ஜெர்மனியர்களுடைய முன்னேற்றம் தடைபட்டு அவர்கள் விழிக்கிறார்கள். கீழ்யுத்தகளத்திலோ ருஷியர்கள் ஆஸ்ட்ரியர்களின் மீது வெற்றியடைந்து வருகின்றார்கள். யுத்தம் சீக்கிரம் முடிவடைவதற்கேதுவான குறிகள் ஒன்றும் இப்பொழுதுதோன்றவில்லை.

162440